# தாய்வீடு

THAIVEEDU | OCTOBER | 2024 தாய்வீடு | ஒக்ரோபர் | 2024



**தேசிய மக்கள் சக்தியின் வெற்றியும் சவால்களும்**
- என். சரவணன்

**மாயை**
- குகன் சங்கரப்பிள்ளை

**அறுபதுகளின் பின்னரான மலையக நாடகத்துறை முன்னெடுப்புகள்**
- அ. லெட்சுமணன்

**இலக்கியத்தில் சகோதரியர் உறவு: ஆர். சூடாமணியின் 'அந்நியர்கள்'**
- மைதிலி தயாநிதி

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Selling
Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905 209 8000
Dir 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடமானங்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Galaxy


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent
416-939-8789
647-347-8790
thevenk1.tk@gmail.com
theven.kankesu@mtgarc.ca
50 New Delhi Dr, Unit 113,
Markham, ON L3S 0B5


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
சர்வேசன்,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,

**மொன்றியால்:**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## எதிர்காலந்தான் பதில் சொல்லும்!

இலங்கையின் அரசுத் தலைவர் தேர்தல் முடிவு ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்டது போலவும், எதிர்வுகூறப்பட்டது போலவுமே அமைந்திருக்கிறது. இருந்தபோதும், அந்த முடிவுகள் இலங்கையிலும் புலம்பெயர் தேசங்களிலும் பல அதிர்வுகளையும் தோற்றுவித்துள்ளன. அநுர குமார திசாநாயக்கவின் தேர்தலின் பின்னான பேச்சுகளும் நடவடிக்கைகளும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு, அவை வெளிப்படுத்தும் சமிக்ஞைகள் பற்றி விலாவாரியாக விவாதிக்கப்படுகிறது. இந்த சமிக்ஞைகளுள் சில, நாட்டின் எதிர்காலம் பற்றி நம்பிக்கை கொள்ளத்தூண்டுகின்றன என்பதும் உண்மையே.

இருந்தபோதும், தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில், கடந்தகாலக் கசப்புகளை அத்துணை இலகுவில் கடந்துவிடமுடியாது. தேர்தலில் வெற்றிபெற்ற தேசிய மக்கள் சக்தியின் பிரதான அங்கமான மக்கள் விடுதலை முன்னணி, அதன் ஆரம்பம் முதல் அண்மைக்காலம் வரை, அதன் வெவ்வேறு தலைவர்கள் ஊடாக, இனவாதப்போக்கையே வெளிப்படுத்தி வந்திருக்கிறது. அதற்கு அநுர குமார திசாநாயக்கவும் விதிவிலக்கல்லர் என்பது கசப்பானது. 1994-இல் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டபோதும், இன்று நிலவுவது போன்றதொரு நன்னம்பிக்கையும் எதிர்பார்ப்பும் நிலவியது. அது சொற்ப ஆயுளுடன் மறைந்துபோனது வரலாறு. அத்தோடு, சந்திரிகா தலைமையில் நடைபெற்ற தமிழருக்குச் சாதகமானவை எனக் கருதப்பட்ட முன்னெடுப்புகளை, அரசுக் கூட்டணியில் அமைச்சராக இருந்துகொண்டே மூர்க்கமாக எதிர்த்தவர் அநுர குமார.

ஆனால், போருக்குப் பின்னான நாட்டின் பொருளாதாரச் சூழல், தென்னிலங்கை மக்களின் மனநிலையிலும் புரிதலிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை 'அரகலய' போராட்டத்தின்போது காணக்கூடியதாக இருந்தது. அத்தகைய மனமாற்றத்துக்கு உள்ளானவர்களுள் அநுர குமாரவும் ஒருவர் என்பதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன.

தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலே, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பேர்கர், மலாயர் என்ற பாகுபாடின்றிப் பன்முகத்தன்மையுள்ள நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும், அதுவரை நாடு தோல்வியடைந்த நாடாகவே இருக்கும் என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார் அநுர குமார. இந்த உரை 1959-இலே லீ குவான் யூ, சிங்கப்பூரின் தோற்றத்தின்போது ஆற்றிய உரையை நினைவுபடுத்துவதாக இருக்கிறது. ஆனால், 1959-இன் சிங்கப்பூருக்கும் 2024-இன் இலங்கைக்குமிடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. இந்த இடைப்பட்ட ஆண்டுகளிலே நடந்தேறிய இன அழிப்பை, 'மறப்போம் மன்னிப்போம்' எனக் கடந்துவிடமுடியாது. அதற்கான பொறுப்புக்கூறலோ நீதிவழங்கலோ இன்றி, அடுத்த கட்டத்துக்குத் தாவிவிட முடியாது. ஆகவே, அநுர குமாரவுக்கு முன்னிருக்கும் பணி, 1994-இலே நெல்சன் மண்டேலாவுக்கு முன்னிருந்ததைப் போன்றது. உண்மைகளைக் கண்டறியவும் மீளிணக்கத்தை ஏற்படுத்தவும் அநுர குமார இதயசுத்தியுடன் முயன்றாலும், இதுவரை காலமும் அதற்கு முட்டுக்கட்டையாக இருந்த இனவாத, மதவாத சக்திகள், அவரை முயற்சியில் வெற்றியடைய அனுமதிக்குமா என்பதற்குக் காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.

அரசுத் தலைவராக வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு அவர் உரையாற்றியபோது, இன்றைய தனது வெற்றிக்காக, பலர் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் இருக்கிறார்கள் என, தனது ஜே.வி.பி. தோழர்களை நினைவுகூருகிறார். நாட்டின் 76 ஆண்டுகால வரலாற்றில் தலைவர்கள், கூட்டணிகள், கட்சிப்பெயர்கள் மாறினாலும், மாறிமாறி ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுமே ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கின்றன. அதிலிருந்து மாறுபட்டு, ஒரு மூன்றாவது கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் நிலை தோன்றியதற்கு, கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களும் முக்கிய காரணம். ‘அவர்களையும் சேர்த்துத்தான் அநுர குமார நினைவுகூர்ந்தாரா?’ என்பதற்குக் காலந்தான் பதில் சொல்ல வேண்டும்.

அதே உரையிலே, எல்லா மக்களுமே தனக்கு வாக்களித்துவிடவில்லை என்பதை அங்கீகரித்து, தனக்கு வாக்களிக்காத மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க உழைக்கப்போவதாகக் கூறியிருக்கிறார். அவருக்கு வாக்களிக்காத மக்களிலே கணிசமானவர்கள் தமிழ்பேசும் மக்கள் என்பதை அவர் அறியாதவரல்லர். தமிழ் மக்களின் நம்பிக்கையை அவர் பெற்றுக்கொள்வாரா? எங்ஙனம் பெற்றுக்கொள்வார்? என்ற கேள்விகளுக்குக் காலந்தான் பதில் சொல்லவேண்டும்.

இதேவேளை, தேர்தலின்பின் சுமுகமாக நடைபெற்ற அதிகார மாற்றம், இலங்கையில் மக்களாட்சிப் பண்புகள் இன்னமும் முற்றாக மறைந்துவிடவில்லை என்பதைப் பறைசாற்றியிருக்கிறது. இந்நிலையில், இந்த வரலாற்று மாற்றத்தை, தமிழ் மக்கள், மதில்மேற் பூனைகளாக இருந்து வெறுமனே அவதானிக்காமல், தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டுமென்பதே காலத்தின் கட்டாயம்.

எமது தலைமைகள் திசைக்கொன்றாகவும் திக்கற்றும் பிளவுபட்டிருக்கும் நிலையில், இந்த வாய்ப்பை நாம் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப்போகிறோம் என்பதற்கும் காலந்தான் பதில் சொல்லவேண்டும்.

**எதிர்காலந்தான் பதில் சொல்லும்!** 3

**தேசிய மக்கள் சக்தியின் வெற்றியும் சவால்களும்** 5
- என். சரவணன்

**அமெரிக்கத் தேர்தல் - ஒரு வரலாற்றுப் பார்வை** 12
- ரதன்

**புகலிடம் கோரும் அகதிகளை நாடுகடத்துகின்ற ஐரோப்பா! இத்தாலிய-அல்பேனிய, பிரித்தானிய-ருவாண்டா உடன்படிக்கைகள் மீதான நோக்கு!** 20
- ரூபன் சிவராஜா

**வன்னிப் பகுதியில் மலையக மக்கள்** 27
- நெல்லை ஜெயசிங்

**எதிர்காலத்தைப் பொறுப்பேற்க இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல்** 31
- தேவப்பிரியா

**ஹசன் நஸ்ரல்லாவின் கொலை** 38
- ரதன்

**செகராசசேகரம் சர்ப்ப சாஸ்திரம்** 41
- பால. சிவகடாட்சம்

**மாதவிடாய் - ஒரு மனித உரிமை சார்ந்த விடயம்** 44
- ஷகீதா பாலச்சந்திரன்

**உலக ஆசிரியர் நாள்** 46
- சி. நற்குணலிங்கம்

**பிள்ளைகள் ஏன் கற்றலை வெறுக்கின்றனர்?** 48
- அகமட் பிஸ்தாமி

**பாடசாலைகளில் தொழினுட்பச் சாதனங்கள் - வகுப்பறைகளில் செல்லிடப்பேசிகள்** 50
- த. சிவபாலு

**தொழினுட்ப வளர்ச்சியும் தொலைபேசியும்** 53
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - 2024** 56

**இலையுதிர்கால வீட்டுப் பராமரிப்பு** 59
- வேலா சுப்ரமணியம்

**ஒன்ராறியோவில் வாகனக் காப்புறுதி கட்டண உயர்வு** 62
- செந்தூரன் புனிதவேல்

**அஞ்சலிக் கூட்டங்களும் பரிமாணங்களும்** 64
- வேதநாயகம் தபேந்திரன்

**பாரிஸ் நகரின் சாக்லெட்டும் சாக்கடையும்** 66
- குரு அரவிந்தன்

**ஜமா - அர்ஜுன ராஜன் வந்தேனே...** 69
- ஓவியர் ஜீவா

**கிழக்கிலங்கையின் சிறுகதை முன்னோடி வ.அ. இராசரத்தினம்** 72
- வே. விவேகானந்தன்

**மலையக இலக்கியத்தில் பேசப்படாத பெண் ஆளுமை!** 74
- மு. நித்தியானந்தன்

**மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி கோட்டைச்சந்தியும் கோடிப்பக்கமும்** 78
- மல்லியப்புசந்தி திலகர்

**கடைசிக் கட்டில் - வாழ்வு நாடகத்தின் தொடக்கமும் முடிவுமான பக்கங்கள்!** 81
- ரூபன் சிவராஜா

**ஈழ இலக்கியத்தில் முற்போக்கு நீர்வை பொன்னையன் கதைகளை முன்வைத்து** 85
- ஜிஃப்ரி ஹாசன்

**இலக்கியத்தில் சகோதரியர் உறவு: ஆர். சூடாமணியின் 'அந்நியர்கள்'** 90
- மைதிலி தயாநிதி

**தமிழ் எழுத்தில் எழுதப்படாத முதல் தமிழ் நாவல்** 96
- ச. சத்யதேவன்

**ஒரு நூலின் உருவாக்கம்: ஆசிரிய - வெளியீட்டாளருக்கான கைந்நூல்** 100
- என். செல்வராஜா

**கி.ரா. விருது விழா 2024** 104
- அரவிந்த் வடசேரி

**பயங்கரவாதப் பிரிவினைவாதம்! மகிந்த காலம் (2005 - 2010)** 106
தமிழில்: என். சரவணன்

**கலையின் இருவழிப் பாதை** 124
- கருணாகரன்

**கோ. நடேசய்யரின் 'இலங்கை இந்தியத் தொழிலாளர் நிலைமை: தோட்டத் தொழிலாளர் சம்பள உயர்வுக்கான குரல்'** 127
- எம்.எம். ஜெயசீலன்

**ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில் பெண்நிலைவாதம்** 132
- சி. ரமேஷ்

**அறுபதுகளின் பின்னரான மலையக நாடகத்துறை முன்னெடுப்புகள்** 137
- அ. லெட்சுமணன்

**மாயை** 143
- குகன் சங்கரப்பிள்ளை

**மார்க்சியமும் சமூக விஞ்ஞான முறையியலும்** 148
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

**பாபநாசம்** 152
- த. ஜீவராஜ்

**வீழ்ந்தது சோழம்! ஈழமும் சோழமும்** 155
- வி. துலாஞ்சனன்

**இனப்படுகொலையின் அரசியல்- இனப்படுகொலை: தத்துவார்த்தக் கேள்விகள்** 158
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**வே.மு. பொதியவெற்பனின் விமர்சனப் பார்வை** 163
- சு. வேணுகோபால்

**ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்** 170
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**'மௌனமே சொல்லாக'** 172
- கிருங்கை சேதுபதி

**கம்பனின் கருவூலம் திறந்து...** 176
- சி. சண்முகராஜா

**வாழ்வுரிமை** 180
- மா. சித்திவினாயகம்

**மாற்றம் ஒன்றே மாறாதது!** 183
- உஷாதீபன்

**காதலோ காதல்** 189
- அ. கந்தசாமி

**காலை உணவு** 193
- அம்பாறோ டிவிலா
தமிழில்: என்.கே. மகாலிங்கம்




'ஐரோப்பாவில் மட்டுமல்ல உலகின் அத்தனை உடமை வர்க்கங்களும் தங்களின் ஒரு பொது எதிரியை வீழ்த்த துடிக்கின்றன. அப்போது எதிரிக்கு அவர்கள் இட்ட பெயர் கம்யூனிச பூதம்.'

இவ்வாறு கார்ல் மாக்ஸ் எங்கெல்ஸ் எழுதிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையில் தற்போதைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக தேசிய மக்கள் சக்தியை (தே.ம.ச) சேர்ந்த அனுர குமார திசாநாயக்கவின் வெற்றியை உலகம் முழுவதும் காண்கின்றனர். ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியை ஒரு முழுமையான கொம்யூனிஸ்ட் கட்சியாக நாம் காண இயலாத போதும் இலங்கையில் பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் அனைத்தும் சிதைந்து அழிந்துவிட்ட நிலையில் எஞ்சியிருக்கும் ஒரு சில கட்சிகளில் பலமான இடதுசாரிக் கட்சியாக ஜே.வி.பி. இருக்கிறது.

'கொம்யூனிச பூதக் கதைகளை பிரச்சாரம் செய்தே' ஏகாதிபத்திய, முதலாளித்துவ சக்திகள் சிதறடித்து விடுவார்கள் என்கிற அச்சமானது ஒரு உலக அச்சமே. எனவே உலகளாவிய ரீதியில் கொம்யூனிச பெயர்களைத் தாங்கிய கட்சிகள் அரிதாகி விட்டன. அதற்குப் பதிலாக வெகுஜன ஜனநாயக மக்கள் இயக்கங்களாக மக்கள் மத்தியில் அரசியல் பணியாற்றுவதை காணமுடியும். அந்த வகையில் தேசிய மக்கள் கட்சியும், அதன் வேலைத்திட்டங்களும், வியூகமும் சிறந்த மூலோபாய, தந்திரோபாய உள்ளடக்கங்களைக் கொண்டது எனக் கொள்ளலாம்.

தற்போதைய தே.ம.க.வின் மீது எந்தளவு நம்பிக்கை கொள்வது என்பதே தேர்தலுக்கு முன்னரும் தேர்தலுக்குப் பின்னரும் அதனை ஆதரிக்காத பலரிடமும் பரவலாக இருக்கிற கேள்வி.

## மக்களுக்கு இருந்த தெரிவு:

ஏலவே முடிவு செய்யப்பட்டிருப்பவர்களில் இருந்து தான் நமக்கான தெரிவை செய்ய முடியும். வெற்றி சாத்தியப்படக் கூடியவர்களில் யாருக்கு வாக்களிக்கலாம் என்பதே மக்களுக்கு இருந்த தெரிவு. ஆக மொத்தத்தில் இந்தத் தேர்தலில் நம்மை மீட்க தேவதைகள் நிறுத்தப்படவில்லை. நிறுத்தப்பட்டிருக்கின்ற வேட்பாளப் பிசாசுகளில் குறைந்த அளவு ஆபத்தை விளைவிக்க கூடிய பிசாசு ஒன்றை தெரிவு செய்வதே நமக்கு மிஞ்சி இருந்த ஒரே தெரிவு.

இவர்களில் இதற்கு முன்னர் அதிக இழப்பை ஏற்படுத்தியவர்கள், அல்லது அதிக இழப்புக்கு காரணமாக இருந்தவர்கள்,



அதிக இழப்பை செய்யக் கூடியவர்கள் என்போரை கணித்து அவர்களை தோற்கடிப்பதும் வாக்காளர்களுக்கு கிடைத்த ஜனநாயக வாய்ப்பு. எப்போதும் புதிய பரிசோதனைகளுக்கு ஒரு விலை உண்டு. அது முன்னைய வரலாற்று அனுபவங்களை விட மோசமானது அல்லவே என்றே தோன்றியது.

இவர்கள் செய்வார்களா? நாட்டை ஆளக்கூடிய அனுபவம் உண்டா? போன்ற கேள்விகள் தொடக்கம் அவர்கள் ஆட்சிக்கு வந்தால் வயதானவர்களைக் கொன்று விடுவார்களே. அதனால் தான் நாங்கள் அவர்களுக்கு வாக்களிக்கவில்லை என்கிற பாமரத்தனமான விளக்கங்களைக் கொண்டிருந்த



பலரைக் கண்டேன்.

வாக்கை தெரிந்த பிசாசுகளுக்கு கொடுப்பதற்கு பதிலாக... தெரியாதது பிசாசு தானா என்று அடையாளம் காண்பதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வாக்காளர்களுக்கு கிடைத்த வரலாற்று வாய்ப்பென்றே கூற முடியும்.

இந்த அளவுகோலின்படி அனுர குமார திசாநாயக்க ஏனைய போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில் ஊழலற்ற, இலங்கை பற்றிய அதிக விபரங்கள் அறிந்த, தர்க்க வல்லமை உள்ள, கோட்பாட்டு ரீதியில் சிக்கல்களை அணுகுகிற, பாமர மக்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் நிலைமையை விளக்கத் தெரிந்த ஒருவராக இருந்தார். இதெல்லாவற்றையும் விட அவர் ஒருவரே வரலாற்றில் கிராமப்புறத்தில் இருந்தும் அடிமட்ட வர்க்கத்தில் இருந்தும் இலங்கையின் உயர் அரசியல் அதிகாரப் பதவியான நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக்கு வந்தவர் எனலாம்.

இந்தத் தேர்தலில் செல்வாக்கு செலுத்திய அரசியல் சுலோகங்களில் முக்கியமானது பொருளாதாரம் பற்றியது. ஈராண்டுகளுக்கு முன்னர் வரலாறு காணாத நிதி நெருக்கடிக்குள் சிக்கி, விலை அதிகம் கொடுத்தாலும் வீதிகளில் அத்தியாவசியத் தேவைகளைப் பெற முடியாமல் நீண்ட வரிசைகளில் மக்கள் பட்ட திண்டாட்டங்கள் உலகமறிந்தது. இறுதியில் மக்கள் இன, மத, மொழி, சாதி, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து ‘அரகலய’ போராட்டத்தை நடத்தி கோட்டபாய தலைமையிலான ஆட்சியை கவிழ்த்தார்கள்.

எனவே நாட்டு மக்களின் மையப் பிரச்சினையாக பொருளாதாரப் பிரச்சினை மாறி இருந்தது. எந்தவொரு நாட்டின் பிரச்சினைகளையும் வரிசைப்படுத்தினால் அந்த வரிசையில் முன்னிலை வகித்த சிக்கல்கள் காலத்துக்கு காலம் மாறும். இது பொது விதி. மையப் பிரச்சினை என்று வெகுஜன அர்த்தத்தில் புரிந்துகொள்ளப்படுகிற பிரச்சினையானது படிநிலை வரிசையில் இடம் மாறிக்கொண்டிருக்கும்.

இலங்கையில் இனப் பிரச்சினையானது மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ‘தேசியப் பிரச்சினை’ என்றே அழைக்கப்பட்டு வந்ததை எவரும் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால் யுத்தத்திற்குப் பின்னர் படிப்படியாக அதன் சாரமிழக்கப்பட்டு தேசியப் பிரச்சினை என்கிற நிலையில் இருந்து கீழிறக்கப்பட்டுவிட்டிருக்கிறது. குறிப்பாக நாடு தழுவிய பொருளாதார நெருக்கடி இதற்கு முக்கிய காரணியாக அமைந்தது.

வரலாற்றில் முதற் தடவையாக பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இனப்பிரச்சினைக்கு முக்கியத்துவமளிக்கப்படாத தேர்தலாக வந்தமைந்தது இதன் நீட்சியாகத்தான். போதாதற்கு தமிழ் மக்களின் தரப்பில் பேரம் பேசும் ஆற்றலை குறைக்கிற நிலைமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்ததும் முக்கியமான காரணி எனலாம். பல தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்தும் பொது வேட்பாளராக அரியநேந்திரனை இறக்கி வடக்கு கிழக்கில் தமது செல்வாக்கை 13.91% வீதத்தால் மட்டுமே உறுதி செய்துகொள்ள முடிந்தது. இது தென்னிலங்கைக்கு தமிழ் மக்களின் பலத்தை மோசமாக சித்திரித்து விட்டிருக்கிற நிலைமையாகவே காண வேண்டியிருக்கிறது. தமிழ்த் தேசியத்தின் எதிரிகளாகக் கருதுகிறவர்களுக்கே ஏனைய அதிகப்படியான வாக்குகளை தமிழ் மக்கள் அள்ளி வழங்கியிருக்கிறார்கள் என்பதை குறிப்பாகக் கவனிக்க வேண்டும்.

இத்தகைய சூழலில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாடளாவிய ரீதியில் வெறும் 3.16 வீதத்தை மட்டுமே பெற்ற தேசிய மக்கள் கட்சி இம்முறை 42.31% வீதைத்தை பெற்று வெற்றியீட்டியிருப்பது பெரும் பாய்ச்சல் என்றே வர்ணிக்க முடியும். இது தேசிய மக்கள் கட்சியின் வெற்றி என்பதை விட பாரம்பரியக் கட்சிகளின் தோல்வியென்றே இனங்காண முடியும். பாரம்பரிய கட்சிகளுக்கு விடைகொடுக்க ஆரம்பித்துவிட்டார்கள் என்றே இன்னொரு வகையில் கூற முடியும். இந்தக் கட்சிகளின் மீதான வெறுப்பை கடந்த பாராளுமன்றத் தேர்தலிலேயே காண முடிந்தது. இலங்கையின் பாரம்பரிய பழமையான தேசியக் கட்சிகளாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் சாவு மணி அடித்திருந்தார்கள். புதிய வகையிலான கட்சிகளை மக்கள் எதிர்பார்த்து இருக்கிறார்கள் என்பதும் அந்த இடைவெளியை நிரப்பும் சக்தியாக தே.ம.க வை பார்க்கத் தலைப்பட்டிருக்கிறார்கள் என்பதையே முடிவுகள் பறைசாற்றுகின்றன.

ஆனால் தமிழ் பிரதேசங்களில் சற்று விதிவிலக்கு. அவர்கள்

சஜித் பிரேமதாசாவுக்கு வழங்கிய வாக்குகள் சஜித்தை ஆத ரிப்பதற்காக வழங்கிய வாக்குகளா அல்லது அனுர குமார திசாநாயக்கவை தோற்கடிக்க வழங்கிய வாக்குகளா என்கிற விவாதங்கள் இன்னமும் தொடர்கின்றன. எவ்வாறிருந்த போதும் தமிழ் மக்கள் மத்தியில் தேசிய மக்கள் சக்தி போதிய அளவு தமது அரசியலை முன்னெடுக்காததே அவர் கள் அங்கே அடைந்த தோல்விகளுக்கு காரணம் என்று கூற லாம்.

தே.ம.க. ஜனாதிபதித் தேர்தலில் மற்றவர்களை விட பெரும் பான்மை பெற்றிருக்கிற போதும் நாடளாவிய ரீதியில் பெரும் பான்மை வாக்காளர்களின் வாக்குகளை சுவீகரித்துக் கொள்ள முடியவில்லை என்பது மறு புறத்தில் உண்மையே. இன்னும் விளக்கமாக சொல்லப்போனால் தே.ம.க.வுக்கு எதி ராக மிஞ்சிய 58% சதவீத மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்கிற உண்மையையும் நாம் கடந்து விட முடியாது. அதா வது பெரும்பான்மை மக்களின் விருப்பற்ற தெரிவாக இது இருக்கிறது என்பதே மறுபுற உண்மை.

## தேசிய மக்கள் சக்தியின் தோற்றம்:

2019-ம் ஆண்டு பல்வேறு அரசியல் கட்சிகள், இளைஞர் அமைப்புகள், பெண்கள் குழுக்கள், தொழிற்சங்கங்கள் மற் றும் சிவில் சமூக அமைப்புகள் உட்பட 21 வெவ்வேறு அரசி யல் கட்சிகளையும் குழுக்களையும் கலைஞர்கள் அறிஞர்க ளையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது தேசிய மக்கள் சக்தி (NPP).

இலங்கையின் இடதுசாரிக் கட்சிப் பாரம்பரியத்துக்கு சுமார் 85 ஆண்டு கால வரலாற்று நீட்சியுண்டு. 1935-ம் ஆண்டு இலங்கையின் முதலாவது பதிவு செய்யப்பட்ட கட்சியும், முத லாவது இடதுசாரிக் கட்சியுமான லங்கா சமாஜக் கட்சி தொடங்கப்பட்டது. அதன் பின்னர் அதிலிருந்து பிரிந்து கொம்யூனிஸ்ட் கட்சி உருவானது அதனைத் தொடர்ந்து பிள வுக்கு மேல் பிளவென பல தடவைகள் பிரிந்து பல இடதுசா ரிக் கட்சிகள் தோற்றம் பெற்றுள்ளன.

காலத்துக்கு காலம் அத்தகைய இடதுசாரிக் கட்சிகளை ஒன் றிணைப்பதற்கான பல முயற்சிகளும் வரலாற்றில் நிகழ்ந்துள் ளன. அவ்வாறான ஐக்கிய முன்னணிகள் கட்டப்பட்டுள்ளன. பின்னர் அவையும் பிரிந்து சுக்குநூறாகி சுருங்கின. இது இலங்கைக்கே உரித்தான பண்பல்ல. உலகம் முழுவதும் இத் தகைய ஒன்றிணைவையும், உடைவுகளையும் காணமுடியும். வேகமாக பிளவடையும் பண்புகள் இடதுசாரி இயக்கங்க ளுக்கே உரிய தனித்துவமான பண்போ என எண்ணத் தோன் றும். இன்னும் உண்மையைச் சொல்லப்போனால் பூர்ஷுவாக் கட்சிகள் கூட எண்ணிக்கையில் இந்த அளவு பிளவுகளைக் கண்டிருக்காது.

இதன் நீட்சியாகவே இன்றைய தே.ம.ச. வைப் பார்க்க வேண் டும். ஆனால் இந்தக் கூட்டானது வரலாற்றில் புதிய வடிவ மென்றே கூறவேண்டும்.

ஜே.வி.பி-யை விரும்புகிற பல தனி நபர்களும், அமைப்புக ளும் நெடுங்காலமாக அதனுடன் எவ்வாறு சேர்ந்து இயங்கு வது என்கிற கேள்வி இருந்து கொண்டே இருந்தன. கட்சி விதி களுக்கு உட்பட்டு கட்சியின் அங்கத்தினர் ஆகாமலே கட் சிக்கு வெளியில் இருந்து ஆதரவு தர முடியாதா? கட்சியுடன் நேரடியாக தொடர்பில் இருந்து கொண்டு அதன் பணிகளில் பங்கெடுக்க முடியாதா? விரும்பிய போது சினேகபூர்வமா கவே விலகும் வாய்ப்பு இல்லையா? என்கிற கேள்விகள் பல ருக்கும் நெடுங்காலமாக இருந்தன. இதற்கான பொறிமுறை யின் அவசியத்தை ஜே.வி.பி.-யும் உணர்ந்திருந்தது. அதன் விளைவே தேசிய மக்கள் சக்தி (தே.ம.ச).

மிகவும் முற்போக்கான இலங்கையை உருவாக்குவதற்காக கூட்டுசேரும் நோக்கத்தை தே.ம.ச நெறிப்படுத்தியது. ஆரோக்கியமான அரசியல் கலாசாரத்தை உருவாக்குதல், உற்பத்திப் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், பொறுப்புக்கூ றல் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துதல், வளங்களை சமமாகப் பகிர்ந்தளித்தல், பொருளாதார ஜனநா யகத்தை உறுதிப்படுத்துதல், சமூகப் பாதுகாப்பை வலுப்ப டுத்துதல் போன்ற நோக்கங்களை உள்ளடக்கிய ஜனநாயக இலங்கையர் என்ற அடையாளத்தை உருவாக்குவதே அதன் நோக்கம் என அதனை ஆரம்பிக்கும் போது தே.ம.ச அறிவித் தது.

## இனப்பிரச்சினையின் மீதான அணுகுமுறைகள்:

தற்போதைய தே.ம.ச.-வின் பிரதான தலைமைக் கட்சியான ஜே.வி.பி-யின் கடந்த காலங்களில் இனப்பிரச்சினை குறித்த அணுகுமுறைகளை தமிழ் பேசும் மக்கள் மறந்துவிட வில்லை.

1983-ம் ஆண்டு ஜே.ஆர் அரசு மக்கள் விடுதலை முன்ன ணியை (ஜே.வி.பி) தடை செய்வதற்காக வசதியாக போட்ட பழி '83 கலவரங்களுக்கு ஜே.வி,.பி.யே பொறுப்பு' என்பது தான். அக்கலவரத்தில் ஜே.வி.பிக்கு கிஞ்சித்தும் பொறுப்பு இல்லை என்பதை அனைவரும் அறிந்த போதும் ஜே.வி. பி.யின் மீது குற்றம் சாட்டினால் அது எடுபடும் என்று ஏன் ஜே.ஆர். உறுதியாக நம்பினார். அன்றைய நிலையில் ஒரு தமிழர் விரோத சக்தியாக குற்றம் சுமத்த இலகுவாக இருந்த ஒரு கட்சியாக ஜே.வி.பி. இருந்திருக்கிறது என்பதை நம்மால் உணர முடியும். மேலும் கூடவே கொம்யூனிஸ்ட் கட்சியையும், நவ சம சமாஜக் கட்சியையும் சேர்த்தே ஜே.ஆர். தடை செய் தார்.

ஜே.வி.பியின் மீது அத்தகைய பழியைப் போடுவதற்கு உட னடி, நேரடி ஆதாரங்கள் எதுவும் அரசாங்கத்துக்கு இருக்க வில்லை என்பது உண்மை. ஆனால் ஜே.வி.பி மீது அந்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு சாதகமான சித்தாந்தப் பின்னணியை ஜே.வி.பி கொண்டிருந்தது என்பது உண்மை.

இன்றைய ஜே.வி.பி தலைமையின் போக்கில் நிறைய மாற்றங் கள் தெரிகிற போதும், அம்மாற்றங்கள் அடிமட்டத் தொண்டர் கள் வரை கொண்டுசெல்லப்பட்டிருக்கிறதா என்கிற சந்தே கம் இருக்கவே செய்யும். இதுவரை ஜே.வி.பி இனப்பிரச்சினை தொடர்பில் தமது கடந்தகால நிலைப்பாடு பற்றிய சுயவிமர்ச னம் பகிரங்கமாக வெளியிட்டதில்லை.

சண்முகதாசன் தலைமையிலான சீன கொம்யூனிஸ்ட் கட்சி யில் இருந்து விஜேவீர நீக்கப்பட்டதற்கான காரணங்களில் ஒன்று விஜேவீரவின் இனவாதப் போக்கு என்பதைக் குறிப்பிட் டாக வேண்டும். 1966-ல் டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தத்தை



எதிர்த்து சிங்கள இனவாத அணியினர் பெரும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது விஜேவீரவும் சகாக்களைக் கூட்டிக்கொண்டு அவ்வொப்பந்தத்துக்கு எதிராக ஊர்வலம் சென்றது குறித்து கட்சி விசாரணை நடத்தி அவரை வெளியேற்றியது.

ஜே.வி.பி 1971 கிளர்ச்சியைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்த போது ஜே.வி.பியில் இணைந்தவர்களுக்கு இரகசியமாக நடத்தப்பட்ட பிரதான ஐந்து வகுப்புகளில் ஒன்று இந்திய விஸ்தரிப்பு வாதம் பற்றியது. அதில் மலையகத் தொழிலாளர்களை சக பாட்டாளி வர்க்கமாக இனங்கண்டு போராட்டத்தில் இணைத்துக்கொள்வதற்குப் பதிலாக சிங்களத் தொழிலாள வர்க்கத்திடமிருந்து பிரித்து அவர்களை எதிரிகளாக சித்திரித்தது ஜே.வி.பி.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும், இனப்பிரச்சினைக்கான குறைந்தபட்ச தீர்வான 13-ம் திருத்தச் சட்டத்தையும், மாகாண சபை முறைமையையும் எதிர்த்தது, வடக்கு கிழக்கை நீதிமன்ற வழக்குக்கு ஊடாக நிரந்தரமாக பிரித்தது, சுனாமி பொதுக் கட்டமைப்புக்கு தடை விதிக்க வைத்தது, சமாதானப் பேச்சுவார்த்தையை இனவாத சக்திகளுடன் கூட்டு சேர்ந்து குழப்பி எதிர்த்துக்கொண்டே இருந்தது, யுத்தத்தில் மகிந்த அரசுடன் கைகோர்த்தது, இராணுவ ஆட்சேர்ப்பில் பங்கெடுத்தது, அவசரகால சட்டத்துக்கு தொடர் ஆதரவை வழங்கியது என தமிழ் மக்களுக்கு எதிராக பல வகைகளிலும் தமது நிலைப்பாட்டை வெளிக்காட்டி வந்திருக்கிறது ஜே.வி.பி.

ஜே.வி.பியில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றம் கடந்த சில வருடங்களுக்கு முன் ஏற்பட்ட பாரிய கட்சிப் பிளவின் பின் உருவானது. கட்சியில் இருந்து வெளியேறி முன்னிலை சோசலிசக் கட்சியை உருவாக்கிய தோழர்கள் குறைபாடுகளுடன் என்றாலும் ஒரு விரிவான சுயவிமர்சனத்தை வெளியிட்டார்கள். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதாகவும், கடந்த காலங்களில் தமது நிலைப்பாடு தவறு என்பதையும் ஏற்றுக்கொண்டார்கள். பல்வேறு தளங்களிலும் தத்துவார்த்த விவாதங்களை முன்னெடுத்தார்கள். அவர்களின் அந்த விவாதத்தின் தாக்கம் ஜே.வி.பியை சற்று சுயசுத்தம் செய்யத் தள்ளியிருந்தது என்பதை மறுக்க முடியாது.

எவ்வாறிருந்த போதும் ஜே.வி.பி. இனவாத அணிகளுடன் இப்போது இல்லை. இனவாதக் கருத்துக்களையும் அது வெளிப்படுத்துவதில்லை. கூடவே இன ஐக்கியம், இனப்பிரச்சினைத் தீர்வு என்பவற்றில் தமது அக்கறையையும் வெளிக்காட்டி வருகின்றனர். இனப்பிரச்சினை மீதான தமது கொள்கை மாற்றத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தினால் அது பெரும்பான்மை வாக்குகளை கிடைக்காமல் செய்து விடுமோ, அதுவே தமது வெற்றியை பாதித்து விடுமோ என்கிற பீதி அவர்களிடம் உண்டு.

தே.ம.ச வை இம்முறை வெல்ல வைக்க விரும்பும் பல தமிழ், முஸ்லிம் மக்களும் மேற்படி காரணிகளால் அவர்கள் தற்போதைக்கு வெளிப்படையாக இனப்பிரச்சினை பற்றிய அவர்களின் கொள்கையையும், வேலைத் திட்டத்தையும் பகிரங்கப்படுத்தத் தேவையில்லை என்றும், அதிகாரம் கைக்கு வரும் வரை பொறுத்திருப்போம் என்றும் விட்டுக்கொடுத்து இயங்குவதைக் காணமுடிகிறது.

குறிப்பாக நவம்பரில் பாராளுமன்ற பொதுத் தேர்தலும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அது நடந்து முடியும் வரையாவது இனப்பிரச்சினை குறித்த அழுத்தங்களை கொடுக்காது இருப்போம் என்று உரையாடுவதை கவனிக்க முடிகிறது.

தமிழ் மக்கள் மத்தியில் வெகுஜன அரசியலை முன்னெடுக்க வேண்டும். அதற்கு முன்னர் முன்னர் ஜே.வி.பி வெளிப்படையாக தமது சுயவிமர்சனத்தை வெளிப்படுத்தியாக வேண்டும். சிங்களச் சூழலில் மாத்திரமல்ல வடக்கு கிழக்கிலும் மலையகத்திலும் தான். முக்கியமாக தமிழ் மொழியிலும் இதனை

மேற்கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் இலங்கையில் எந்த கட்ட மைப்பு மாற்றத்தையும் ஏற்படுத்திவிட முடியாது என்பதை தேசிய மக்கள் சக்தி உணர வேண்டும். அல்லது நாம் உணர்த்த வேண்டும்.

## புதிய மாற்றங்களால் கதி கலங்கிப் போயிருப்பவர்கள் யார்?

தற்போது புதிய 'ஜனாதிபதி அரசாங்கம்' பதவி ஏற்ற நாளிலி ருந்து வேகமாக பல நல்ல மாற்றங்களை மேற்கொண்டு வரு வது மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தி வருகி றது. குறிப்பாக அனுரவை எதிர்த்தவர்கள் கூட வியப்புடன் வரவேற்பதைக் காண முடிகிறது.

அமைச்சரவை மாற்றங்கள், ஆளுநர் மாற்றங்கள், பொலிசா ருக்கு அரசியல் தலையீடு இருக்காது என்கிற உத்தரவாதம், ஊழல் லஞ்சம் பற்றிய விசாரணைகளை தொடக்கியிருப்பது, அத்தியாவசியப் பொருட்களின் மீதான விலைகளை உடனடி யாக குறைத்து, மின்சாரம், எரிபொருள் போன்றவற்றின் விலைக்குறைப்பு, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந் தத்தை பேச்சுவார்த்தைகளின் மூலம் மீள் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள், தே.ம.ச. மீதான சர்வ தேச நாடுகள் கொண்டிருந்த சந்தேகங்களை நீக்கும் வகை யில் அவர்களுடன் நல்லெண்ண நடவடிக்கைகளை முன்னெ டுத்தல் உள்ளிட்ட பல மாற்றங்கள் அதி வேகமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போதைய நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையின் எல் லைக்குள் மாற்றக் கூடியவற்றையே அனுர திசாநாயக்க அர சாங்கம் செய்ய முடியும். கட்டமைப்பு மாற்றம் என்பது அவ்வ ளவு சுலபமாக ஏற்படுத்தக் கூடியதல்ல. அதற்கு உரிய கால அவகாசத்தை கொடுத்தாக வேண்டும்.

தற்போதைய அரசாங்கமானது வரலாற்றில் முதல் பரிசோ தனை. இந்த அரசாங்கத்தை ஆதரிக்காதவர்கள் மட்டுமன்றி ஆதரித்தவர்கள் கூட மாற்றம் எப்படி இருக்கும் என்பதை அறிய பேராவலுடன் காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

முதலில் அரச துறைகளில் காணப்படும், கால விரயம், அரச சொத்து விரயம், இழுபறி, லஞ்சம், ஊழல், பொறுப்பின்மை என்பவற்றை நீக்கினாலே நாட்டின் முதுகெலும்பை கணிச மான அளவு நிமிர்த்தி விடலாம். அரச ஊழியர்கள் துஷ்பிர யோகங்களுக்கு பழக்கப்பட்டிருப்பது இன்று நேற்று உருவா னதல்ல. அதற்கு ஒரு நீட்சி இருக்கிறது. துஷ்பிரயோகம் செய் வதை தமது உரிமையாகவும், கடமையாகவும் கருதுகிறார் களோ என்று எண்ணத் தோன்றுமளவுக்கு துஷ்பிரயோகம் நிறுவனமயப்பட்டிருக்கிறது. சிவில் நிர்வாகத் துறைகளில் உள்ள அரச ஊழியர்களை மேலிருந்து கீழ் வரை அறவொ ழுக்கத்துக்கு கொண்டு வந்து விட்டால் போதும். புதிதாக அரச துறைகளுக்கான ஆட்சேர்ப்பு சில காலத்துக்கு செய் யவே வேண்டியதில்லை.

அரச துறைகளில் இருந்து தான் இவற்றைத் தொடங்க வேண் டும். கட்டமைப்பு மாற்றம் என்பது அங்கிருந்து தான் தொடங் கும்.

அடிப்படை, அத்தியாவசிய தேவைகளின் மீதான நெருக்குவா ரங்களை தளர்த்துவதை மக்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார் கள். இந்த அரசாங்கத்தை நிறுவியவர்கள் பெரும் தனவந்தர் கள் அல்லர். சாமானியர்கள் என்பதை நினைவிற் கொள் வோம்.

இதுவரை காலமும் அரசியல்வாதிகளின் தயவில் சாமானிய மக்களுக்கு சேர வேண்டிய அரச கஜானாக்களை தமது தனிப்பட்ட பைகளுக்குள் சுருட்டிக்கொண்டிருந்த தனவந்தர் களுக்கும், வரி ஏய்ப்பு செய்தவர்களுக்கும் இந்த அரசாங்கத் தில் அதை செய்ய முடியாது என்பதை, அரசாங்கத்தை நிறு விய வாக்காளர்கள் நம்புகிறார்கள்.

இதுவரை வரி ஏய்ப்பு செய்தவர்களிடம் இருந்து சட்ட ரீதியில் வலுக்கட்டாயமாக குறுகிய காலத்தில் பணத்தை மீட்டெடுத் தாலே தற்போதைய கடனில் பெரும்பங்கை சரி செய்து விட முடியும். அதை முதலில் செய்ய வேண்டும்.

மொத்தத்தில் கட்டமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவ தற்கு ஊடாக மக்களையும் பிரக்ஞைக்கும், பொறுப்புக்கும், அறத்துக்கும் பழக்கி எடுத்து விடலாம். இத்தகைய மாற்றங்க ளுக்கு ஊடாக ஒரு பண்பாட்டு மாற்றத்தையே படிப்படியாக ஏற்படுத்திவிட முடியும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தே.ம.ச. பெரும்பான்மை பலத் துடன் ஆட்சி அமைக்கும் என்பதை பலரும் நம்புகிறார்கள். அதனை தடுத்து நிறுத்த சகல தே.ம.ச. வுக்கு வெளியில் இருக்கும் பாரம்பரியக் கட்சிகளும், இனவாரிக் கட்சிகளும் அணி திரள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதை காண முடிகிறது.

தே.ம.ச.வின் வெற்றியானது பல பாரம்பரிய கட்சி பிரமுகர் களை அரசியலில் இருந்து ஓய்வு பெற வைத்திருக்கிறது. இனி தமது அடுத்த ஆட்சியொன்று அமைவதற்கான காலம் அருகில் இல்லை என்பதை பலர் நம்புகிறார்கள். இவர்களில் பலர் எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அமைச்சுப் பத வியை சுவீகரித்து விடுபவர்கள். அவர்கள் எல்லோருக்கும் ஒரே தடவையில் தமது அதிகாரங்களையும், சுகபோகங்க ளையும், அதன் சுவையையும் இழந்து விட்டிருக்கின்றனர். ஒரு வகையில் அவர்களுக்கு இதுவோர் அதிர்ச்சி மட்டுமன்றி, விரக்தியின் உச்சமும் கூட.

இவ்வாட்சியை எந்த விலை கொடுத்தேனும் கவிழ்க்காவிட் டால் தமது எதிர்காலம் முடிந்துவிடும் என்று நம்புகிறார்கள். போதாததற்கு இவர்களில் பலர் ஊழல், லஞ்சம், பதவி துஷ் பிரயோகம் என்பவற்றுடன் தொடர்புடையவர்கள். கடந்த அர சாங்கங்களில் பேரம் பேசி சமாளித்ததைப் போல தற்போது செய்ய முடியாது என்கிற புதிய நிலை. அது மேலும் அவர்க ளுக்கு கலக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

எனவே ஒரு புறம் மோசடிமிக்க வெளிநாட்டு முதலீட்டாளர் கள், வெளிநாட்டு சக்திகள், மறுபுறம் உள்நாட்டில் காலை வாருவதற்குத் தயாராகிவரும் சக்திகள் என பல்முனை எதிர்ப்புகளையும் மீறி இவ்வாட்சி தாக்கு பிடிக்குமா என்பதே பலருக்கும் இருக்கிற அடிப்படைக் கேள்வி.

# யார் இந்த அநுர குமார திசாநாயக்க

திசாநாயக்க முதியன்சேலாகே அநுர குமார திசாநாயக்க, நில அளவை உதவியாளர் ஒருவரான திசாநாயக்க முதியன் சேலாகே ரன்பண்டா மற்றும் திசாநாயக்க முதியன்சேலாகே சீலவதீ தம்பதியினருக்கு மாத்தளை தேவஹுவ கிராமத்தில் 1968 நவம்பர் மாதம் 24-ம் திகதி அக் குடும்பத்தின் இரண்டா வது பிள்ளையாகவே பிறந்தார்.

தம்புத்தேகம ஆரம்ப வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல் வியை பயின்ற அநுர குமார திசாநாயக்க அதன் பின்னர் தம் புத்தேகம மத்திய மகா வித்தியாலயத்தில் சேர்ந்து கல்வி பொதுத் தராதர பத்திர உயர்தர பரீட்சைக்காக விஞ்ஞான - கணிதப் பிரிவில் தோற்றினார். பல்கலைக்கழக கல்விக்கான தகைமை பெறுகின்ற அவர் 1992-ம் ஆண்டில் களணி பல்க லைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்திற்கு தெரிவு செய்யப்படுகி றார். அதன் பின்னர் பல்கலைக்கழக பௌத்த சங்கத்தின் தலைமை பதவி உள்ளிட்ட பல்கலைக்கழகத்தில் சமூக மற் றும் அரசியல் நடவடிக்கைகளில் ஒரு செயற்பாட்டாளராக மாறிய அநுர குமார திசாநாயக்க கல்வி செயற்பாடுகளை நிறைவு செய்த பின்னர் 1995-ம் ஆண்டில் விஞ்ஞானமாணி பட்டத்தை பெற்றுக்கொண்டார்.

அநுர குமார திசாநாயக்க அன்று தொட்டு இற்றைவரை இந் நாட்டு அரசியலில் உருவாகிய வலிமைமிக்க மற்றும் முனைப் பாக தெரிகின்ற அரசியல் தலைவராக பெரும்பாலானோர் கருதுவதற்கான காரணம் மரபு ரீதியான அரசியல் பிரபுக்கள் குடும்பத்தை சேர்ந்தவராக இராமல் முற்போக்கானதும் மக் கள் நேயமுள்ளதுமான அரசியல் பெரும்போக்கில் பல வித மான சிரமங்களை தாங்கிக் கொண்டு முன்னேறிவந்த ஒருவ ராக அமைவதாலேயே ஆகும். அவருடைய அரசியல் பய ணப் பாதை அவர் பாடசாலை மாணவராக இருந்த காலத்தி லேயே ஆரம்பிக்கிறது. 1987-ம் ஆண்டில் அப்போது நிலவிய அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை உடன்படிக்கைக்கு எதிராக நாடாளாவிய ரீதியில் தோன்றிய பாரிய மக்கள் எதிர்ப்புகளின் போது ஒரு மாணவர் செயற்பாட் டாளர் என்ற வகையில் பங்களிப்பினை செய்து அவர் சோச லிச மாணவர் சங்கத்தின் செயற்பாட்டாளராக மாறினார்.

பிரமாண்டமான அரச அடக்குமுறைக்கு இலக்காகி மக்கள் விடுதலை முன்னணியின் மீள்வருகை இடம்பெற்ற காலப்பகு திக்குப் பின்னர் மீண்டும் முனைப்பான அரசியலில் பிரவேசிக் கின்ற அவர் பல்கலைக்கழக பருவத்தில் முனைப்பாக தெரி கின்ற மாணவர் செயற்பாட்டாளராக மாறினார். மக்கள் விடு தலை முன்னணியுடன் இணைந்த சோசலிச மாணவர் சங் கத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக விடா முயற்சியுடன் செயலாற்றிய அவர் அப்போதைய அனைத்து பல்கலைக் கழக மாணவர் அமைப்பில் அரவிந்த எனும் பெயரில் இயங்கி னார். இந்த மாணவர் அரசியல் செயற்பாட்டின் வருகையை குறிக்குமுகமாக 1997-ம் ஆண்டு சோசலிச மாணவர் சங்கத் தின் தேசிய அமைப்பாளர் பதவியின் பொறுப்பு அவருக்கு ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் அநுர குமார திசாநாயக் கவின் அரசியல் பயணப் பாதையில் தீர்மானகரமான திருப்பு முனையாக 1997-ம் ஆண்டிலேயே அவர் மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய செயற்குழுவிற்காக தெரிவு செய்யப் பட்டார். அத்துடன் அவர் 1998-ம் ஆண்டில் மக்கள் விடு தலை முன்னணியின் அரசியல் குழுவில் சேர்த்துக் கொள் ளப்பட்டார்.



1999-ம் ஆண்டில் நடைபெற்ற மாகாண சபை தேர்தலில் மக் கள் விடுதலை முன்னணியின் முதலமைச்சர் வேட்பாளராக மத்திய மாகாண சபைக்காக அவர் போட்டியிட்டு முதல் தட வையாக வெகுசன அரசியலில் பிரவேசித்தார். 2000-ம் ஆண் டில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தேசிய பட்டியலில் இடம்பிடித்த அநுர குமார திசாநாயக்க முதல் தடவையாக பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அதன் பின்னர் 2001-ம் ஆண்டில் பலவீனமடைந்திருந்த அரசாங் கத்தை நன்னடத்தை வேலைத்திட்டமொன்றை முன்வைத்து அரசாங்கத்துடன் இணைந்து, 17-வது அரசியலமைப்பு திருத் தத்தை நிறைவேற்றிக் கொள்ளல், விவசாயக் கடன்களை அகற்றுவது போன்றவற்றில் பெரும் பங்கை வகித்தார். மீண் டும் 2004-ம் ஆண்டில் அவர் மிகவும் அதிகமான எண் ணிக்கை கொண்ட விருப்பு வாக்குகளை பெற்றவராக குரு ணாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்து பாராளுமன் றத்திற்கு தெரிவு செய்யப்படுகிறார். 2004-ம் ஆண்டில் நிறு வப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத் தில் கமத்தொழில், காணி, நீர்ப்பாசன மற்றும் கால்நடைவள அமைச்சர் பதவி வகித்தார்.

2008-ம் ஆண்டில் அநுர குமார திசாநாயக்க மக்கள் விடு தலை முன்னணி பாராளுமன்ற குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். மீண்டும் 2010-ம் ஆண்டில் மக்கள் விடு தலை முன்னணியையும் உள்ளடக்கிய சனநாயக தேசிய கூட் டமைப்பினை பிரதிநிதித்துவம் செய்து தேசிய பட்டியல் உறுப்பினராக அவர் மீண்டும் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார்.

அநுர குமார திசாநாயக்கவின் அரசியல் பயணத்தின் மிகவும் தீர்மானகரமான திருப்புமுனை 2014-ம் ஆண்டின் பெப்ரவரி

மாதம் 02-ம் திகதி நடைபெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் 07-வது தேசிய சம்மேளனத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைத்துவத்திற்கு தெரிவு செய்யப்பட்டதன் மூலம் மாறுகிறது. அவருடைய தலைமையின் கீழ் மக்கள் விடுதலை முன்னணியின் மக்கள் மயமாக்கலுக்கான அரசியல் பணிகள் ஆரம்பமாகின. மீண்டும் 2015-ல் நடத்தப்பட்ட பாராளுமன்ற பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்திலிருந்து போட்டியிட்ட அவர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். 2019-ம் ஆண்டில் ஆகஸ்ட் மாதத்தில் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மற்றும் பல அரசியல் செயற்பாட்டாளர்களை ஒன்று சேர்த்து தேசிய மக்கள் சக்தி எனப்படுகின்ற புத்தம் புதிய அரசியல் இயக்கம் உருவாக்கப்பட்டது. மரபு ரீதியான அரசியல் கட்சிகளால் சோர்ந்து போயிருந்த மக்கள் வேகமாக அதனைச் சுற்றி ஒருங்கிணையத் தொடங்கினார்கள்.

2019-ம் ஆண்டு சனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வேட்பாளராக போட்டியிட்ட அநுர குமார திசாநாயக்க கடுமையான போட்டியின் மத்தியில் 418,553 வாக்குகளின் மூலம் 3.16% வீத வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். 2020-ம் ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத் தேர்தலில் மீண்டும் அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவானார்.

வர்த்தகர்கள், கல்விமான்கள், தொழில் முனைவோர், கலைஞர்கள், கமக்காரர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் போன்ற பல்வேறு தொழில்வாண்மையாளர்களை கொண்ட மிகப்பெரிய மக்கள் இயக்கமாக தேசிய மக்கள் சக்தியை ஆக்கிக்கொண்டார். 2021-ம் ஆண்டின் டிசெம்பர் மாதம் 20-ம் திகதி நடத்தப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் முதலாவது தேசிய மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் தலைமை பதவிக்கு நியமிக்கப்பட்ட அநுர குமார திசாநாயக்க முற்போக்கான மக்கள் ஒன்றுசேர்ந்து செயலாற்றக்கூடிய மிகப்பெரிய மக்கள் இயக்கமாக தேசிய மக்கள் சக்தியை மாற்றுவதற்கான பணிகளை முன்னெடுத்தார். 2024 சனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளராக இத்தகைய பின்னணியிலேயே அநுர குமார திசாநாயக்க முன்வந்தார். பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பாதிக்கப்பட்ட நாட்டுக்கும் மக்களுக்கும் புதிய மறுமலர்ச்சிக்கான பாதையை காட்டிய அவர் நாட்டுக்கு புதிய அரசியல் கலாசாரமொன்றை கொண்டுவருவதாக தேர்தலின்போது மக்களுக்கு வாக்களித்தார். அவர் கொண்டுள்ள சரியான அரசியல் நோக்கு, சரியான தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல், ஆளுமை, மனங்கவரத்தக்க தொடர்பாடல் திறன்கள் மற்றும் பேச்சாற்றல், ஒத்துணர்வு, முன்மாதிரியான தன்மை, மாறிவருகின்ற நிலைமைக்கேற்ப தன்னை மாற்றிக்கொள்கின்ற ஆற்றல் போன்ற தலைமைத்துவ பண்புகளை அவரிடம் காண முடிகிறது.



sarawanan.n@thaiveedu.com

தாய்வீடு





# அமெரிக்கத் தேர்தல் : ஒரு வரலாற்றுப் பார்வை

– ரதன்

2024 நவம்பர் ஐந்தாந் திகதி அமெரிக்க அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. உலகின் தலைவருக்கான தேர்வு என சர்வதேச ஊடகங்கள் கருத்துத் தெரிவுக்குமளவிற்கு முக்கியமான அமெரிக்கத் தேர்தல் கடந்த பல தசாப்தங்களாக உலகம் அனைத்தும் உற்று நோக்கும் ஒரு தேர்தலாக உள்ளது.




கனடாவைப் பொறுத்தவரை அமெரிக்காவின் அதிகாரப்பீடம் முக்கியமானது. அமெரிக்காவிற்கும் கனடாவிற்குமிடையில் வணிக பரிமாற்றங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன. அது மட்டுமல்லாமல் பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கைகளிலும் அமெரிக்கா கனடாவில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இக்கட்டுரையானது அமெரிக்கத் தேர்தல்முறை, கட்சிகள், மக்களின் தேர்வுகள் பற்றிய பார்வையை முன்வைக்கின்றது. இது ஒரு ஆய்வுக் கட்டுரையல்ல.

அமெரிக்கத் தேர்தலில் மக்களின் வாக்குகள் கணக்கிலெடுக்கப்படும் முறையானது வித்தியாசமானது. ஒரு வேட்பாளர் அமெரிக்க மக்களின் அதிக வாக்குகளைப் பெற்றிருந்தாலும் அவர் வெற்றி பெற்றவர் என உறுதிப்படுத்த முடியாது. அமெரிக்காவின் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒரு குறிப்பிட்ட வாக்குகள் உள்ளன. இதனை Electoral Votes என்பார்கள். இந்த வாக்குகளில் அதிக வாக்குகளைப் பெறுபவர் ஜனாதிபதியாக வெற்றி பெறுவார்.

அண்மைக் காலத் தேர்தல்களில் 2000-ம் ஆண்டு அப்போதைய உதவி ஜனாதிபதியும் குடியரசுக்கட்சி வேட்பாளருமான அல் கோர் (Albert Arnold Gore Jr) 50,999,897 (48.38%) வாக்குகளை பெற்றிருந்தார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜோர்ஜ் டபிள்யு புஷ் (George Walker Bush) 50,456,002 votes (47.87%) பெற்றார். பொதுவாக அல் கோரே வெற்றி பெறப் போபவராக இருந்தார். ஆனால் அமெரிக்கத் தேர்தல் முறையின்படி இவர்களில் வெற்றி பெற்றவர் யார் என்பதனை அறிவிப்பதில் பல வாரங்களாகச் சிக்கல் ஏற்பட்டது. புளோரிடா மாநில 25 Electoral Votesனை யார் பெறுகின்றார்களோ அவர்களே வெற்றி பெற்றவாராவர் என்ற நிலை ஏற்பட்டது. தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணிய பின்னர் நியு மெக்சிக்கோ போன்ற மாநிலங்களில் மிகக் குறைந்த வாக்குகள் வித்தியாசமே இருந்தது. எனினும் அல் கோர் 266 Electoral Votes-ஐ பெற்றிருந்தார். ஜோர்ஸ் டபிள்யு புஷ் 245 Electoral Votes-ஐ பெற்றிருந்தார். இறுதியாக ஒரு மாநிலத்தின் முடிவுகளுக்காக அமெரிக்கா காத்திருந்தது. அது புளோரிடா மாநிலம். அங்கு 0.1 வீதமான வாக்குகளே இரு வேட்பாளர்களுக்கும் வித்தியாசமாகவிருந்தது. இறுதியாக அமெரிக்க சுப்ரீம் நீதி மன்றம் புளோரிடாவின் 25 Electoral Votes-ஐயும் புஷ்க்கு வழங்கியது. ஈற்றில் புஷ் ஜனாதிபதியாக தேர்வானார். ஆனால் புஷ்ஷினை விட அல் கோர் 543,895 வாக்குகளை அதிகம் பெற்றிருந்தார். (Bush v. Gore, legal case, decided on December 12, 2000, in which the Supreme Court of the United States reversed an order by the Florida Supreme Court for a selective manual recount of that state's U.S. presidential election ballots. The 5-4 per curiam (unsigned) decision effectively awarded Florida's 25 Electoral College votes to Republican candidate George W. Bush, thereby ensuring his victory over Democratic candidate Al Gore.) https://www.britannica.com/event/Bush-v-Gore

2016-ம் ஆண்டு தற்போது மீண்டும் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ரம்ப் குடியரசுக் கட்சி வேட்பாளர் ஹிலரி கிளின்டனுக்கு எதிராகப் போட்டியிட்டார். ஹிலரி கிளின்டன், டொனால்ட் ரம்ப்பை விட 3.1 வீத வாக்குகளை அதிகமாக பெற்றிருந்தார். அதாவது 2,868,686 வாக்குகள் அதிகம் பெற்றிருந்தார். ஆனால் டொனால்ட் ரம்ப் வெற்றி

பெற்றார். ஏனெனில் டொனால்ட் ரம்ப் 304 Electoral Votes-ஐயும், ஹிலரி கிளின்டன் 227 Electoral Votes-ஐயும் பெற்றனர். அதன் அடிப்படையில் டொனால்ட் ரம்ப் வெற்றி பெற்றார்.

மொத்தமான Electoral Votes 538. இதில் 270-ஐ பெறுபவர்கள் வெற்றி பெறுவார்கள். அமெரிக்காவின் ஒவ்வொரு மாநிலத்துக்குமான Electoral Votes இவை.

| மாநிலம் | வாக்கு | மாநிலம் | வாக்கு |
|---|---|---|---|
| Alabama | - 9 | Montana | - 4 |
| Alaska | - 3 | Nebraska | - 5 |
| Arizona | - 11 | Nevada | - 6 |
| Arkansas | - 6 | New Hampshire | - 4 |
| California | - 54 | New Jersey | - 14 |
| Colorado | - 10 | New Mexico | - 5 |
| Connecticut | - 7 | New York | - 28 |
| Delaware | - 3 | North Carolina | - 16 |
| District of Columbia | - 3 | North Dakota | - 3 |
| Florida | - 30 | Ohio | - 17 |
| Georgia | - 16 | Oklahoma | - 7 |
| Hawaii | - 4 | Oregon | - 8 |
| Idaho | - 4 | Pennsylvania | - 19 |
| Illinois | - 19 | Rhode Island | - 4 |
| Indiana | - 11 | South Carolina | - 9 |
| Iowa | - 6 | South Dakota | - 3 |
| Kansas | - 6 | Tennessee | - 11 |
| Kentucky | - 8 | Texas | - 40 |
| Louisiana | - 8 | Utah | - 6 |
| Maine | - 4 | Vermont | - 3 |
| Maryland | - 10 | Virginia | - 13 |
| Massachusetts | - 11 | Washington | - 12 |
| Michigan | - 15 | West Virginia | - 4 |
| Minnesota | - 10 | Wisconsin | - 10 |
| Mississippi | - 6 | Wyoming | - 3 |
| Missouri | - 10 | | |

Electoral Votes சென்சசின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். Electoral votes are allocated among the States based on the Census. Every State is allocated a number of votes equal to the number of Senators and Representatives in its U.S. Congressional delegation—two votes for its Senators in the U.S. Senate plus a number of votes equal to the number of its Congressional districts. https://www.archives.gov/electoral-college/allocation

## ஊசலாடும் மாநிலங்கள்:

ஒவ்வொரு தேர்தலின் போதும் இந்த மாநிலங்கள் மாறுபட்டாலும், பெரும்பாலும் ஒரே மாநிலங்களே ஊசலாடும் மாநிலங்களாகவிருக்கும். இந்த மாநில மக்கள் எந்தக் கட்சியைத் தேர்வு செய்வார்கள் என்பது இறுதிவரை தெரியாது. இந்த மாநிலங்களுக்கான வாக்குகள் குறைவாக இருப்பினும் இறுதி வரை தேர்தல் முடிவுகளை நீடித்துச் செல்பவை இந்த மாநிலங்களாகவே அமையும். ஜோர்ஜியா என்ற பெயர் கடந்த 2020 தேர்தலில் உலகெங்கும் பேசப்பட்டது. அரிசோனா, மிச்சிக்கன், நிவேடா, வட-கரோலினா, பென்சலவேனியா, விஸ்கொன்சின் ஆகிய மாநிலங்கள் 2024 தேர்தலில் ஊசலாடும் மாநிலங்களாகவிருக்கும் எனக் கருதப்படுகின்றது.

1824-க்குப் பின்னர் நடைபெற்ற 49 தேர்தல்களில் 18 தேர்தல்களில் வெற்றி பெற்ற வேட்பாளர் வாக்களிக்கப்பட்ட வாக்குகளில் ஐம்பது வீதமான வாக்குகளைப் பெற்றிருக்கவில்லை. ஐம்பது வீதம் என்பது நாட்டின் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் ஆதரவு வழங்குவதனையே குறிக்கும். அமெரிக்காவின் சரித்திரத்தில் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவர்களில் 18 ஜனாதிபதிகள் நாட்டின் அரைவாசிக்கு மேற்பட்டவர்களின் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை.

1980-ம் ஆண்டுத் தேர்தலில் ஜிம்மி காட்டர் 41 வீதமான வாக்குகளைப் பெற்றார். அச்சமயம் அவர் பெற்ற Electoral Votes 49. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ரீகன் பெற்ற வாக்குகள் 50.4 வீதம். அவர் பெற்ற Electoral Votes 489. இவை சில உதாரணங்கள். வாக்குகளுக்கும் Electoral Votes க்குமிடையில் பெரும் வேறுபாடுகள் உள்ளதை சுட்டிக்காட்டுகின்றன. எனினும் அமெரிக்கச் சட்டமூலம் மாநிலங்களுக்கு அளித்த வாக்குகளின் அடிப்படையிலேயே ஜனாதிபதி தேர்வு நடைபெறுகின்றது.

| 1968 | | | | |
|---|---|---|---|---|
| Richard M. Nixon | Republican | 301 | 31,710,470 | 43.4 |
| Hubert H. Humphrey | Democratic | 191 | 30,898,055 | 42.7 |

இங்கு வாக்கு வித்தியாசம் 0.7 வீதம். ஆனால் Electoral Votes 110-ஆல் வேறுபடுகின்றது.

| 1960 | | | | |
|---|---|---|---|---|
| John F. Kennedy | Democratic | 303 | 34,227,096 | 49.7 |
| Richard M. Nixon | Republican | 219 | 34,107,646 | 49.5 |

1856-ம் ஆண்டுத் தேர்தலிருந்து இரு கட்சிகள் அமெரிக்கத் தேர்தலில் ஆதிக்கம் செலுத்தின. அது இன்று வரை தொடர்கின்றது. அவ்வப்போது சில கட்சிகள் புதிதாகத் தோன்றி போட்டியிடுவார்கள். பின்னர் காணமல் போய்விடுவார்கள். Federalist, Democratic-Republican, Antifederalist, Independent-Federalist, Fusion, National Republican, Anti-Masonic, Nullifiers, Whig, Anti-Jackson, Liberty, Free Soil, Southern Democratic, Constitutional Union, Independent-Democratic, People's (Populist), Socialist, Progressive (Bull Moose), States' Rights Democratic (Dixiecrat), American

Independent, Independent, Reform, Green ஆகிய கட்சிகள் போட்டியிட்டுள்ளன. இவற்றை விட வேறு பல கட்சிகளும் தங்களது வேட்பாளர்களை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட வைக்கின்றன. Whig, and Free-Soil கட்சிகளும் இணைந்தே குடியரசுக் (Republic) கட்சி உருவானது.

**அமெரிக்க அதிபராவதற்கு வேண்டிய தகுதிகள்:**

- அமெரிக்காவில் பிறந்திருக்க வேண்டும்.
- 35 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
- குற்றஞ்செய்து தண்டனை பெறாதவராக இருக்க வேண்டும்.
- ஆகக் குறைந்தது 14 வருடங்கள் அமெரிக்காவில் வசித்திருக்க வேண்டும்.

ஜோன் எப் கென்னடியே குறைந்த வயதில் தேர்வு செய்யப்பட்ட அமெரிக்க அதிபர். அதிபராக தேர்வானபோது அவரது வயது 43.

அமெரிக்க அரசானது மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டது.

## சட்டமியற்றகம் (Legislative):

சட்டமியற்றகம் எனப்படும் காங்கிரஸ் இரு பிரதான சபைகளைக் கொண்டது. ஒன்று செனட், மற்றையது பிரதிநிதிகள் அகம்.

**செனட்:** ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் இருவர் செனட்டர்களாகத் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்களது பதவிக்காலம் ஆறு வருடங்கள். இவர்கள் எத்தனை தடவையும் பதவி வகிக்கலாம்.

**பிரதிநிதிகள் அகம்:** இச்சபைக்கு 435 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவார்கள். 50 மாநிலங்களிலிருந்தும் மாநில சனத்தொகையின் அடிப்படையில் பிரதிநிதிகளின் எண்ணிக்கையடங்கும். இவர்களது பதவிக்காலம் இரு வருடங்கள். இவர்களும் எத்தனை தடவையும் பதவி வகிக்கலாம்.

அமெரிக்க அதிபருக்கு அடிக்கடித் தலையிடி கொடுப்பவர்கள் இவர்களாகத்தானிருப்பார்கள். அமெரிக்க அதிபரின் கட்சிக்கு எதிரான கட்சியினர் அதிகம் காங்கிரசில் அங்கம் வகித்தால், அமெரிக்க அதிபர் அறிமுகப்படுத்தும் சட்டங்கள், வரவு செலவுத் திட்டங்கள் அனைத்தையும் அமுல்படுத்த முடியாத நிலை ஏற்படும். இவர்கள் திருப்திக்காகப் பல மாற்றங்களை அதிபர் செய்ய வேண்டிவரும். ஒபமா கேயர் இன்னமும் முறையாக நடைமுறைப்படுத்த முடியாமலிருப்பதற்கும் இவர்கள் தான் காரணம். அதிக துப்பாக்கிகள் அமெரிக்க மக்கள் கையில் இருப்பதற்கும் இவர்களே காரணம். ஒபாமா ஜன நாயகக் கட்சியைச் சேர்ந்த அதிபர். செனட்டில் இவரது கட்சியைச் சேர்ந்த 44 செனட்டர்களே உள்ளனர். குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 54 செனட்டர்கள் உள்ளனர். இவ்விரு கட்சியினரும் சுயாதீனமானவர்கள். பிரதிநிதிகள் அகத்தில் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த 234 பிரதிநிதிகளும், ஜனநாயக் கட்சியைச் சேர்ந்த 201 பிரதிநிதிகளும் உள்ளனர். இரு சபைகளிலும் குடியரசுக் கட்சியின் பெரும்பான்மையுள்ளது. இதனை எந்த அமெரிக்க அதிபரும் விரும்பமாட்டார்கள்.

## நிறைவேற்றம்:

இங்குதான் அமெரிக்க அதிபர், துணை அதிபர் மற்றும் அமைச்சர்கள் அங்கம் வகிப்பார்கள். சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் இவ்வகத்திற்கு உண்டு. அதே சமயம் இயற்றப்படும் சட்டங்களைத் தனது வீட்டோ அதிகாரத்தைக் கொண்டு நிராகரிக்கும் உரிமையும் அமெரிக்க அதிபருக்கு உண்டு. 1947-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 21-வது திருத்தச் சட்டப்படி ஒருவர் இரு பருவங்கள் மட்டுமே அமெரிக்க அதிபராக இருக்க முடியும்.

## நீதி மன்றம்:

இயற்றப்படும் சட்டங்கள் முறையானவையா, நீதியானவையா என நிலை நிறுத்தும் சபை உச்ச நீதிமன்றம் ஆகும். மற்றும் மத்திய நீதிமன்றங்கள் சட்டங்களை நிலை நிறுத்துகின்றன. உச்ச நீதிமன்றம் அமெரிக்காவின் அதி உயர் நீதிமன்றம். உச்ச நீதிபதியை அமெரிக்க அதிபர் நியமிப்பார். செனட்டில் 51 செனட்டர்கள் அதிபரின் நியமனத்துக்காக ஆதரவளிக்க வேண்டும். தற்சமயம் 9 உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உள்ளனர். இவர்களது பதவிக்காலம் எல்லையற்றது. அதாவது அவர்களாக ஓய்வு பெறும் வரை பதவியில் தொடரலாம். உச்ச நீதிபதிகளின் எண்ணிக்கையை காங்கிரசே தீர்மானிக்கும்.

ஜனநாயகக் கட்சி 1828-ல் ஆரம்பிக்கப்பட்டது. உலகின் பழமைவாய்ந்த கட்சிகளுள் ஒன்று. ஒபாமா உட்பட 15 அதிபர்கள் இக்கட்சியில் இருந்தே தெரிவு செய்யப்பட்டார்கள். கென்னடி, கார்ட்டர் போன்றோர் இக்கட்சியைச் சேர்ந்த அதிபர்கள்.

குடியரசுக் கட்சி 1854-ல் அமெரிக்க உள்நாட்டு யுத்தக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கட்சியின் வேட்பாளருக்காகப் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாநிலத்திலும் போட்டியிடுவார்கள். இதனை primary elections என்பார்கள். சில சமயங்களில் சில மாநிலங்கள் ஒரே நாளில் தேர்தல்களை நடத்தும். செவ்வாய்க் கிழமையில் இவ்வாறான தேர்தல் நடைபெற்றால் அதனை Super Tuesday என்பார்கள். குறிப்பாக மார்ச் மாதச் செவ்வாய்க் கிழமை முக்கியமானது. அன்று இரு பிரதான கட்சிகளினதும் தேர்தல்கள் பல மாநிலங்களில் நடைபெறும். தேர்தல் ஆண்டுக்கு முதல் ஆண்டே ஒவ்வொரு கட்சியிலும் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது விருப்பத்தைத் தெரிவித்து அதற்கான ஆயத்தங்களில் ஈடுபடுவார்கள். போட்டியிடும் வேட்பாளர்களிடையே விவாதங்களும் இடம்பெறும். இறுதியாக கட்சி மாநாட்டில் கட்சிக்கான ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் உறுதி செய்யப்படுவார். பொதுவா

கவே கட்சி மாநாட்டுக்கு முன்னரே வேட்பாளர் யார் என்பது தெரிந்திருக்கும். கட்சி மாநாடு என்பது ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதியாகப் போட்டியிடும் வேட்பாளரும், அவரினால் தெரிவு செய்யப்படும் உதவி ஜனாதிபதி வேட்பாளரும் தங்களை அமெரிக்க மக்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒரு நிகழ்வாகவேயிருக்கும்.

ஜனநாயக் கட்சி 4765 பேராளர்களுள் 2383 பேராளர்களின் வாக்குகளைப் பெறும் வேட்பாளர்கள் கட்சியின் வேட்பாளர்கள் ஆவார்.

குடியரசுக் கட்சி 2472 பேராளர்களுள் 1237 பேராளர்களின் வாக்குகளைப் பெறும் வேட்பாளர்கள் கட்சியின் வேட்பாளர்கள் ஆவார்.

தற்போது பல அரசியல் விமர்சகர்கள் அமெரிக்கா இரண்டாக உடைந்துள்ளது என விமர்சிக்கின்றார்கள். அவர்களது விமர்சனத்தின் பிரதான காரணம் இரு கட்சிகளின் ஆக்கிரமிப்பாகும். அமெரிக்க மக்கள் ஒன்றில் குடியரசுக் கட்சி ஆதரவாளர்களாக இருப்பார்கள், இல்லையேல் ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்களாக இருப்பார்கள். பல சமயங்களில் இவர்களை Traditional Republicans / Traditional Democratic என விளிப்பார்கள். இது தனி நபர்களுக்கு மாத்திரமல்லாமல், மாநிலங்களுக்கும் உரியதாகின்றது. Wyoming, Utah, Oklahoma, North Dakota, Kansas, Alaska போன்றன தொடர்ச்சியாகவே குடியரசுக் - Republic கட்சி ஆதரவு மாநிலங்களாகவுள்ளன. District of Columbia, Massachusetts, கலிபோர்னியா, நியு-யோர்க், மேரிலான்ட் போன்றன Democratic - ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவான மாநிலங்களாகவுள்ளன.

1980 ஏப்ரல் மாதம் 20-ம் நாள் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜிம்மிக் ஹாட்டர், ஈரானில் உள்ள 52 அமெரிக்கப் பணயக் கைதிகளை மீட்பதற்காக Operation Eagle Claw நடவடிக்கையை மேற்கொண்டார். அந்நடவடிக்கை தோல்வியடைந்தமையால் அதே ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜிம்மி காட்டர் தோல்வியடைந்தார். அப்போது ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவாக இருந்த மாநிலங்கள் பல காட்டருக்கு எதிராகப் போட்டியிட்ட றீகனுக்கு வாக்களித்தன. தற்போது குடியரசுக் கட்சி முக்கியஸ்தர்கள் பலர் டொனால்ட் ரம்ப்க்கு எதிராக, கமலா ஹரிசுக்கு வாக்களிக்கப் போவதாக கூறியுள்ளனர். முன்னாள் உதவி ஜனாதிபதி டிக் செனி இவர்களில் முக்கியமானவர்.

ஆனாலும் இந்த ஜனநாயக-குடியரசுக் கட்சி பிளவானது ஒரு தேசியமாகவே மாறியுள்ளது. ஆதரவாளர்களில் பெரும்பாலானோர் வேட்பாளர் முன்வைக்கும் திட்டங்களைப் பற்றி கவனமெடுக்காமலேயே ஆதரவு தெரிவிக்கின்றனர். நியுயோர்க் ரைம்ஸ் பத்திரிகை கடந்த ஆண்டு குடியரசுக் கட்சி ஆதரவாளர்களைப் பின்வருமாறு பிரிக்கின்றது.

- The Moderate Establishment (14%) மிதமான ஆதரவாளர்கள்
- The Traditional Conservatives (26%) பாரம்பரியமான பழமைவாதிகள்
- The Right Wing (26%) வலதுசாரிகள்
- The Blue Collar Populists (12%) உயர் ஜனரஞ்சகவாதிகள்
- The Libertarian Conservatives (14%) சுதந்திரவாதி பழமைவாதிகள்
- The Newcomers (8%) புதிய குடிவரவாளர்கள்

https://www.nytimes.com/interactive/2023/08/17/upshot/six-kinds-of-republican-voters.html

Domenico Montanaro-வின் ஆய்வு ஒன்று குடியரசுக் கட்சி ஆதரவாளர்களை மேலும் விரிவுபடுத்தியது.

- Faith and Flag Conservatives (10% of the public) நம்பிக்கையான பழமைவாதிகள்
- Committed Conservatives (7%) உறுதியான பழமைவாதிகள்
- Populist Right (11%) ஜனரஞ்சகவாத வலதுசாரிகள்
- Ambivalent Right (12%) தெளிவற்ற வலதுசாரிகள்
- Stressed Sideliners (15%) அழுத்தமான ஓரங்கட்டப்பட்டவர்கள்
- Outsider Left (10%) வெளி வலதுசாரிகள்
- Democratic Mainstays (16%) ஜனநாயக அடிப்படைவாதிகள்
- Establishment Liberals (13%) நிறுவயமான தாராளவாதிகள்
- Progressive Left (6%) முற்போக்கான இடதுசாரிகள்

இதே போன்று ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்களையும் பிரிக்கின்றார்.

- Progressive Left (12%) முற்போக்கான இடதுசாரிகள்
- Establishment Liberals (23%) நிறுவயமான தாராளவாதிகள்
- Democratic Mainstays(28%) ஜனநாயக அடிப்படைவாதிகள்
- Outsider Left (16%) வெளி வலதுசாரிகள்

https://www.npr.org/2021/11/09/1053929419/feel-like-you-dont-fit-in-either-political-party-heres-why

Perry Bacon Jr. என்ற அரசியல் ஆய்வாளர் ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்களைப் பின்வருமாறு கருதுகின்றார்.

- The Super Progressives அதியுயர் முற்போக்காளர்கள்
- The Very Progressives தீவிர முற்போக்காளர்கள்
- The Progressive New Guard முற்போக்கு பாதுகாவலர்கள்
- The Progressive Old Guard முற்போக்கு பழைய பாதுகாவலர்கள்
- The Moderates மிதவாதிகள்
- Conservative Democrats பழமைவாத ஜனநாயகவாதிகள்

https://fivethirtyeight.com/features/the-six-wings-of-the-democratic-party/

Lee Drutman பழைமைவாத ஜனநாயகவாதிகள் 1980-களில் குடியரசுக் கட்சி ஆதரவாளர்களாக மாறியுள்ளனர் எனக் குறிப்பிடுகின்றார். அதே போல் தாராளவாத வடகிழக்கு குடியரசுக் கட்சி ஆதரவாளர்கள் ஜனநாயகக் கட்சி ஆதரவாளராகியுள்ளனர் எனக் குறிப்பிடுகின்றார்.

குடியரசு-ஜனநாயக கட்சிகளுக்கான ஆதரவுத் தளங்கள் வாழ் நிலங்கள் சார்ந்தும், வர்க்கம் சார்ந்தும் மாறுபடுகின்றன. அதே சமயம் இரு கட்சிகளின் கொள்கைகளும் மாறுபட்டுள்ளன. Eric Plutzer and Michael Berkman ஆய்வாளர்கள் குடியரசுக் கட்சியின் ஆதரவாளர்களால் ஜனநாயகக் கட்சியை விளங்கிக்கொள்ளமுடியாது என வாதிடுகின்றனர். ஜனநாயகக் கட்சியினர் குடியரசுக் கட்சியினர் நேர்மையான தேசியவாதிகள் எனவும் இவர் கருதுகின்றார். (Democrats think many Republicans sincere, and point to policy) https://democracy.psu.edu/poll-report-archive/americans-not-only-divided-but-baffled-by-what-motivates-their-opponents/

Zoltan Hajnal (University of California) என்பவர் ஜனநாயகக் கட்சியினருக்கும், குடியரசுக் கட்சியினருக்குமான ஒற்றுமையின்மைக்கு பல காரணங்கள் உள்ளதாகத் தெரிவிக்கின்றார். இவர் மதம், பொருளாதாரம், கல்வி, வயது போன்ற காரணிகளுக்கு அப்பால், நிறத்தையும் ஒரு காரணியாக குறிப்பிடுகின்றார். இவரது கருத்தை ஒத்த கருத்து ஒன்றை Johns Hopkins University ஐச் சேர்ந்த Lilliana Mason குறிப்பிடுகின்றார். குடியரசுக் கட்சியினர் பாரம்பரியமான வெள்ளை மற்றும் கிறிஸ்தவ மதத்தினர். (Republican Party to represent the interests of 'traditional' white, Christian America). மாறாக ஜனநாயகக் கட்சியினர் சமூக ஏற்றத்தாழ்வுகளை, வர்க்க ஏற்றத்தாழ்வுகளை ஏற்றுக் கொள்ளாத அதே சமயம் அதனை குறைக்க முற்படுபவர்களாகவுள்ளனர் (representing those who were still struggling to overturn centuries of social inequality. This type of divide is not easily corrected). இதற்கு சான்றாக 2016-இல் டொனால்ட் ரம்ப் 58 வீதமான வெள்ளையினத்தவரின் வாக்குகளையும், 8 வீத ஆபிரிக்க அமெரிக்க இனத்தவரின் வாக்குகளையும் பெற்றுக் கொண்டதையும் சுட்டிக்காட்டலாம் (Hispanic -28%). அதேசமயம் ஹிலரி கிளின்ரனுக்கு 37 வீதமான வெள்ளை இனத்தவரின் வாக்குகளும், 89 வீதமான ஆபிரிக்க அமெரிக்கர்களின் வாக்குகளும் கிடைத்திருந்தமையும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. https://ropercenter.cornell.edu/how-groups-voted-2016. 2008, 2012, 2016 தேர்தல்களில் குடியரசுக்கட்சி வேட்பாளர்களுக்கே அதிகளவு வெள்ளையினத்தவர் வாக்களித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் 16-வது ஜனாதிபதியான ஆபிரகாம் லிங்கன் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி. ஆபிரிக்க அமெரிக்கர்களுக்காகப் பல மாற்றங்களைச் செய்தவர். இவரது காலத்திலேயே அமெரிக்க சிவில் யுத்தம் நடைபெற்றது. பின்னர் 1865-ல் சுட்டுக் கொல்லப்பட்டார். 1852-1862 காலப்பகுதியில் மார்க்ஸ்-எங்கல்ஸ்ல் நியு யோர்க் டெய்லி றிவ்வியுனர் பத்திரிகைக்கு எழுதப்பட்ட 487 கட்டுரைகளையும் லிங்கன் விரும்பிப் படிப்பதாக மத்தியு ஸ்ருவேட் தனது நூலான AN Emancipation of the Mind ல் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இன்றும் குடியரசுக் கட்சி இடது சார்பான கட்சியாகவும், ஜனநாயகக் கட்சி இடது சார்பான கட்சியாகவுமே குறிக்கப்படுகின்றது.

இவ்விரு கட்சிகளும் தங்களது கொள்கைகளாக குறிப்பிடும் முக்கிய அம்சங்கள் முக்கியமானவை. இவ்விரு கட்சிகளும் தங்களது கட்சி ஆரம்பிக்கப்பட்ட நாட்களிலிருந்து இன்று மாறுபட்டேயுள்ளன. இன்றைய கொள்கைகள் முக்கியமானவை. சுதந்திரம் குடியரசுக் கட்சியினர் இதற்கு கொடுக்கும் அழுத்தம், செயலில் இல்லை. அதேபோல் ஜனநாயகக் கட்சியினர் மக்களின் சுதந்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும் நடைமுறையில் இல்லை. குடியரசுக் கட்சியினர் அரசு செயற்படும் முறையில் மாறுபட்டுள்ளது. பல அரச நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்துகின்றது. ஜனநாயகக் கட்சியினர் இதில் மாறுபடுகின்றனர். (The GOP traditionally has stood for limitations on what the government can and should do). தேசிய பாதுகாப்பில் குடியரசுக் கட்சியினர் அதிக கவனம் செலுத்துகின்றனர். அண்மைக் காலங்களில் ஏற்பட்ட பல போர்கள் ஜனநாயகக் கட்சியினராலேயே ஏற்படுத்தப்பட்டது என்ற விமர்சனம் உண்டு. பொதுவாகவே அமெரிக்க திட்டமானது இரு கட்சி ஆட்சியின் போதும் நாட்டைப் பாதுகாக்கும். வெளிநாடுகளில் உபரிக் குழுக்களுக்கு ஆயுதம் வழங்குவது, ஆங்காங்கே போரை ஏற்படுத்துவது என்பது இரு கட்சி ஆட்சியின் போதும் நடைபெற்று வருகின்றது.

சர்வதேச வணிகக் கொள்கைகளில் இரு கட்சியினருக்குமிடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. இன்று உலக வணிகத்தை கட்டுப்படுத்தும் சீனாவுடனான உறவில் குடியரசுக் கட்சி ஆட்சியின் போதும், ஜனநாயகக் கட்சி ஆட்சியின் போதும் மாறுபட்ட நிலையே இருந்து வருகின்றது.

மிக முக்கியமான வேறுபாடு Balance Budget. குடியரசுக் கட்சி இதனை வலியுறுத்தி வருகின்றது. குறைந்த வரி என்பதும் இவர்களது சுலோகமாகவுள்ளது. வரவு செலவுத் திட்டம் சமநிலைப்படுத்தப்படும் பொழுது மக்களுக்கான வரி அரசின் சேவைகளில் குறைக்கப்படும். வரிக்குறைப்பால் குறையும் வருமானமும் இதற்கான மற்றொரு காரணம். இந்த வரவு செலவு சமநிலை என்பது பொதுவாகவே சாதாரண மக்களுக்கு எதிரானது. வரிக்குறைப்பால் பெருமளவு இலாபமடைபவர்கள் செல்வந்தர்களும், பெரும் நிறுவனங்களுமாகும். பொதுவாகவே பழமைவாதக் கட்சியினரின் ஆட்சிகளில் தனியார்மயமாக்கல் அதிகரித்தேயுள்ளது. குடியரசுக் கட்சி சுற்றுச் சூழல் பாதுகாப்பை வலியுறுத்த தயங்குகின்றது என்ற விமர்சனம் உண்டு. தொழிற்சாலைகளில் வெளியேற்றும் கார்பனின் அளவு கட்டுப்படுத்தப்பட்டால் தொழிற்சாலைகளின் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது என்ற எதிர் விமர்சனமும் முன்வைக்கப்படுகின்றது. (இது ஒரு தனியான கட்டுரையாக எழுதப்படவேண்டும்).

குடியரசுக் கட்சியினர் முதலாளித்துவத்தை வளர்ப்பதாகவும் குற்றஞ்சாட்டப்படுகின்றது (Encouraging capitalism: Republicans traditionally have believed in policies and programs that encourage capitalism as the best method to create

wealth, a higher standard of living, competition and individual and group success. However, they also have believed in sensible limits that keep capitalism fair and controlled.) வெளிநாட்டுக் கொள்கைகளிலும் இவ்விரு கட்சியினருக்குமிடையில் வேறுபாடுகள் உள்ளன. எனினும் கடந்த காலங்களில் டொனால் ட்ரம்ப் நடவடிக்கைகளை மையப்படுத்தி இதனைக் கூறமுடியாது. ரம்ப்க்கு முன்னர் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் இரு கட்சியினருக்குமிடையில் பாரிய வேறுபாடுகள் இருக்கவில்லை. சுகாதாரக் கொள்கையில் அதாவது மருத்துவ வசதிகளில் குடியரசுக் கட்சியினர் தனியார்மயப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஜனநாயகக் கட்சியினரின் ஒபாமா கேயர் சகல அமெரிக்கர்களுக்குமான மருத்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இதனை குடியரசுக் கட்சியினர் ஏற்கவில்லை. குடிவரவாளர்கள் பற்றிய கருத்து நிலையிலும் இரு கட்சியினருக்குமிடையில் வேறுபட்ட கருத்துநிலையுள்ளது - a path to citizenship for 11 million undocumented immigrants. டொனால்ட் ரம்ப்பின் காலத்தில் அமெரிக்காவின் தெற்கு எல்லையில் மதில் கட்டும் முயற்சி நடைபெற்றது. இதற்கு பெரும்பாலான குடியரசுக் கட்சியினர் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பெரும்பாலான குடியரசுக் கட்சியினரின் ஆதரவுடனேயே டொனால்ட் ரம்ப் மீண்டும் தேர்தலில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வைவிட குடியரசுக் கட்சியினர் கருக்கலைப்பை எதிர்க்கின்றனர். SAME-SEX MARRIAGE ஐயும் எதிர்க்கின்றனர் ('Five unelected lawyers robbed 320 million Americans of their legitimate constitutional authority to define marriage as the union of one man and one woman') https://www.nj.com/politics/2016/07/dnc_2016_10_big_ways_the_democratic_platform_diffe.html

2024-ம் ஆண்டு அமெரிக்கத் தேர்தல் நவம்பர் ஐந்தில் நடைபெறவுள்ளது. குடியரசுக் கட்சி வேட்பாளராக டொனால்ட் ரம்ப் தேர்வாகியுள்ளார். ஜனநாயகக் கட்சி வேட்பாளராக கமாலா-தேவி ஹரிஸ் தேர்வாகியுள்ளார். டொனால்ட் ரம்ப் முறையாக கட்சி வேட்பாளர் போட்டி மற்றும் விவாதங்களில் கலந்து கொண்ட பின்னரே தேர்வானார். கமலா ஹரிஸ் தேர்வு வித்தியாசமானது. வழமையான கட்சித் தேர்வு போல் இல்லாமலேயே தேர்வானார். ஜோ பைடனுக்கும் டொனாலட் ரம்ப்க்கும் விவாதத்தில் ஜோ பைடன் சிறப்பாகச் செயற்படவில்லை. தடுமாற்றங்களுடனேயே வாதிட்டார். பல தடவைகள் மறதியால் அவதிப்பட்டார். இந்த விவாதத்தின் பின்னர் டொனால்ட் ரம்ப்க்கான மக்கள் ஆதரவு அதிகமானது. ஜனநாயகக் கட்சியினர் ஜோ பைடனை போட்டியிலிருந்து விலகுமாறு வற்புறுத்தினர். பல கட்சி முக்கியஸ்தர்கள் பைடன் போட்டியிடுவதற்கு எதிராக குரல் கொடுத்தனர். விளைவு பைடன் தான் போட்டியிடுவதில்லை என அறிவித்தார். சொற்ப காலங்களே தேர்தலுக்கு இருப்பதனால் பைடனின்உதவி ஜனாதிபதி கமலா ஹரிசை ஜனநாயகக் கட்சியினர் வேட்பாளராக அறிவித்தனர். ஜனநாயகக் கட்சியின் மாநாடு நடைபெறுவதற்கு முன்பு ஜோ பைடன் போட்டியிலிருந்து விலகியமையால் அவர்களது பெரும் மாநாடு நடைபெற்ற ஒகஸ்ட் 19-22-ல் கமலா ஹரிஸ் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இவரது உதவி ஜனாதிபதி வேட்பாளராக Tim Walz-உம் அறிவிக்கப்பட்டார்.

செப்ரம்பர் 10 அன்று கமலா ஹரிசுக்கும், டொனால்ட் ரம்ப்க்குமிடையில் விவாதம் நடைபெற்றது. இதன் பின்னர் ஊடகங்களின் கணிப்பின் பிரகாரம் கமலா ஹரிஸ் சிறப்பாகச் செயற்பட்டார். உதவி ஜனாதிபதி வேட்பாளர்களுக்கிடையிலான விவாதம் ஒக்ரோபர் முதலாம் நாள் நடைபெறும். இதற்கிடையில் இரு தடவைகள் டொனால்ட் ரம்ப்பைச் சுட்டுக் கொல்ல முயற்சிக்கப்பட்டது. யூலை 13 மாலை 6.11-க்கு ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது. எனினும் இவருக்கு ஒரு சிறிய காயமே ஏற்பட்டது. செப்ரம்பர் 16 அன்று இவர் கோல்ப் விளையாடச் செல்லும் மைதானத்தின் வெளியே ஒருவர் துப்பாக்கியுடன் பல மணி நேரம் காத்திருந்ததாக அறியப்படுகின்றது. இவ்விரு நிகழ்வுகளும் டொனால்ட் ரம்ப்பின் ஆதரவு நிலையில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.

### ஏன் டொனால்ட் ரம்ப்?

டொனால்ட் ரம்ப் ஒரு செல்வந்த குடும்பத்தின் மைந்தன். இவரது தந்தையின் வம்சாவளியினர் ஜேர்மனியிலிருந்து அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தவர்கள். தாயின் வம்சாவளியினர் ஸ்கொட்லன்ட்டிலிருந்து குடிபெயர்ந்தவர்கள். இவரது மாம



னார் பிரபல்ய எம்.ஐ.ரி (Massachusetts Institute of Technology (MIT)) பல்கலைக்கழக நிறுவனத்தில் பேராசிரியராக இருந்தார். இவர் பின்னாட்களில் எக்-ஸ்-ரே கருவியில் பல புதிய மாற்றங்கள் கொண்டு வர காரணமாகவிருந்தார். தந்தையார் நியு யோர்க் நகரத்தில் மிகப் பெரிய ஆதார அபிவிருத்தி, விற்பனை நிறுவனத்தினை நடத்தி வந்தார். டொனால்ட் ரம்ப் பாடசாலையில் படித்த காலங்களில் சக மாணவர்க

ளைக் கேலிவதை செய்ததையடுத்து அங்கிருந்து வெளியேறி நியு யோர்க் இராணுவ பாடசாலையில் எட்டாம் வகுப்பை முடித்தார். பின்னர் பொருளாதாரப் பட்டதாரியானர். பல்கலைக்கழகத்தில இவர் ஆதனத்துறையையும் கற்றார். பல்கலைக்கழகக் கல்வியை முடித்து விட்டு தந்தையின் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

தனது 23-வது வயதிலேயே பல ஆதனச் சொத்துக்களை வெற்றிகரமாக அபிவிருத்தி செய்து விற்பனை செய்தார். நியு யோர்க் நகரின் இவருக்குச் சொந்தமாக பல அதி உயர் கட்டடங்கள் உள்ளன. கோல்ப் விளையாட்டகங்கள் பலவற்றையும் நடத்தி வருகின்றார். சர்வதேச அழகிப் போட்டிகள் நடத்தும் நிறுவனத்திலும் இவருக்கு அதிக பங்குகள் உண்டு. லாஸ் வெகாஸ் நகரிலும் இவரது நிறுவனங்கள் உள்ளன.

இவர் தனது மூன்றாவது மனைவியுடன் தற்சமயம் வாழ்ந்து வருகின்றார். முதல் இரு மனைவிகளை விவாகரத்து செய்து விட்ட போதிலும் அவர்களுடன் நட்பை பேணி வருகின்றார். ஆறு தடவைகள் வங்குரோத்து நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

இவருக்கு எதிராகப் பல அவதூறுகள் உண்டு. வருமானத் துறை தொடர்ந்து இவரது வரவு செலவுகளைப் பரிசீலிக்கின்றது. இவர் தனது வருமானப் பத்திரங்களை மக்கள் முன் வைக்கவில்லை. பொதுவாகவே அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் தங்களது வருமான பத்திரங்களை மக்கள் முன் சமர்ப்பிப்பது வழமை. இதனை ரம்ப் முறியடித்துவிட்டார். ரம்பிற்கு இத் தேர்தல் முதல் தேர்தலல்ல. 2000-ம் ஆண்டு றிபோம் கட்சியின் வேட்பாளாராகப் போட்டியிட்டுப் பிரச்சாரங்களையும் மேற்கொண்டுவிட்டு பின்னர் போட்டியிலிருந்து விலகிவிட்டார். இவர் ஜனநாயகக் கட்சி உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

2016-2020 காலப்பகுதியில் டொனால்ட் ரம்ப் அதிபராகவிருந்தபோது செயற்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக ஜோ பைடனின் ஆட்சிக் காலத்தில் இவர் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டன. இவற்றில் சில இவரது தனிப்பட்ட நடவடிக்கைகளுக்கும் எதிராகத் தனியாரால் தொடுக்கப்பட்டன. சுமார் 90 குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டு வழக்குகள் நடைபெற்று வருகின்றன. டொனால்ட் ரம்ப் - ஜோ பைடன் தேர்தலின்போது பைடனின் வெற்றியை ஏற்றுக்கொள்ளாமல் காங்கிரசை முடக்க முயற்சித்தாகவும் கூறப்படுகின்றது. The New York State ‘Hush Money’ Case, The Federal Classified Documents Case, The Federal Election Interference Case, The Georgia Election Interference Case ஆகிய வழக்குகளை ரம்ப் சந்தித்து வருகின்றார். இதில் அமைதிப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட நிதி வழக்குக்குரிய (Hush Money) தண்டனை அறிவிக்கப்படும் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கமலா ஹரிஸ் வெற்றி பெற்றால் இவர் மீதான இவ் வழக்குகள் இவருக்கு சாதகமாக அமையாது. இதற்காக இவர் நிச்சயம் தனது வெற்றிக்கான சகல முயற்சிகளையும் செய்வார்.

## 2024 தேர்தலில் டொனால்ட் ரம்ப் அளித்துள்ள உறுதிகள்:

- அனுமதிப் பத்திரமற்ற குடிவரவாளர்களை உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றுவேன் (சுமார் 11 மில்லியன்). 2016 தேர்தலிலும் இவர் இந்த வாக்குறுதியை வழங்கியிருந்தார்.
- பைடன் - ஹரிசினால் உறுதிப்படுத்தப்பட்ட ஒவ்வொரு எல்லைத் திட்டங்களையும் நீக்குவேன் (open border policy)
- ‘We will drill, baby, drill.’ கருக்கலைப்புக்கு எதிரான சட்ட மூலங்களைக் கொண்டு வருவேன்.
- பண வீக்கத்தை இல்லாமல் செய்து, அமெரிக்க மக்களுக்கு ஏதுவாக அதனை மாற்றுவேன் (We will end inflation and make America affordable again.’)
- பசுமைத் திட்டச் சட்டத்தை நீக்குவேன். கட்டாய மின்சார வாகன சட்டத்தை நீக்குவேன். (‘I will terminate the Green New Scam,’ and end the electric vehicle mandate.)
- உபரி (Tips); பணத்துக்கான வரியை நீக்குவேன். பாரிய வரிக் குறைப்பை அமுல்படுத்துவேன்
- 2001-ல் குடியரசுக் கட்சி ஜனாதிபதி புஷ்ஷினால் சீனாவிற்கு வழங்கப்பட்ட சிறப்பு அங்கீகாரத்தை நீக்குவேன் ‘I will revoke China’s most favored nation status.’
- Trump Reciprocal Trade Act, ஏதாவது ஒரு நாடு எங்களுக்கு எதிராக சுங்க வரி விதித்தால், அமெரிக்காவும் அதே வீத சுங்க வரியை அவர்கள் ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு எதிராக விதிக்கும்.
- உக்ரேன்-ரஷ்யப் போரை விரைவாக நிறுத்துவேன்
- மூன்றாம் உலக யுத்தம் ஏற்படாமல் பாதுகாப்பேன்
- எங்களது பலத்தின் மூலம் உலக அமைதியை ஏற்படுத்துவேன்
- In my next term, we will build a great Iron Dome missile defense shield over our country, a dome the likes of which no one has ever seen before, and it will be entirely made in the USA.’ அமெரிக்காவினால் உருவாக்கப்பட்ட அமெரிக்காவை பாதுகாக்க இரும்பு குவிமாட ஏவுகணையை உருவாக்குவேன்.
- சமூகக் கொடுப்பனவு, மருத்துவ கொடுப்பனவுகளைக் குறைக்கமாட்டேன். அதே சமயம் ஓய்விற்கான வயதெல்லையை அதிகரிக்கமாட்டேன்
- எங்கள் நகரங்களை மீள பாதுகாப்பான நகரங்களாகக் கட்டியமைப்போம்.
- கல்வி நிறுவனங்கள் இனவாத, பாலியல் வேறுபாடுகள் போன்றவற்றிற்குச் சார்பாகச் செயற்பட்டால் அவற்றிற்குரிய மத்திய அரசு நிதி நிறுத்தப்படும்
- ‘I will fully uphold our Second Amendment.’ துப்பாக்கி வைத்திருப்பதற்கான கட்டுப்பாடுகளை அமுலாக்குவேன்.

https://www.pbs.org/newshour/politics/24-things-donald-trump-is-promising-to-do

## ஏன் கமலா ஹரிஸ்

கமலா ஹரிஸின் வாக்குறுதிகள் வித்தியசாமானவை.

- முதல் தடவை வீடு வழங்குபவர்களுக்கான மாற்றங்கள் ஏற்படுத்தப்படும்.

- Opportunity economy ஐ உருவாக்வேன். இதன் மூலம் சக லருக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.
- எல்லை பாதுகாப்பை அதிகரிப்பேன்.
- அதே சமயம் வடக்கு நோக்கி நகரும் குடிவரவாளர்களின் நகர்வுக்கான மூல காரணத்தை ஆய்வு செய்து அந்தந்த



நாடுகளுக்கு உதவி செய்வேன். (உண்மையில் இதனை அமெரிக்கா செய்யுமாயின் அது அந்த நாடுகளுக்கு நன் மையளிக்கும். அவர்களது வளங்களைச் சுரண்டாமல் செயற்பட்டாலே அந்த நாடுகளுக்கு நல்லது).

- கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்குவேன்.
- ரஷ்ய விரிவாக்கத்துக்கு எதிராக செயற்படுவேன். America - not China - wins the competition for the 21st Century and
  to shoulder the responsibility of US leadership.
- பாலஸ்தீன-இஸ்ரேல் போரில் two state solutionனைச் செயற்படுத்த முயற்சிப்போம்.
- 100 மில்லியன் அமெரிக்க மத்திய வர்க்கத்தினருக்குச் சார் பாக வரிக்குறைப்பை ஏற்படுத்துவேன்.
- பெரும் நிறுவனங்களுக்கான வரி அதிகரிப்பை ஏற்படுத்து வேன். பைடனின் அரசு அதனைச் செய்துள்ளது.
- மற்றவை வழமைபோல் மருத்துவ வசதிகள், பசுமைத் திட் டம் போன்றவை.
- துப்பாக்கிகள் வைத்திருப்பவர்களைக் கட்டுப்படுத்தும் சட் டங்களைக் கொண்டு வருவேன்.
- பைடனின் அரசு அமுல் படுத்தியவைகளையும் தொடர் வேன்.

## யாருக்கு வாக்கு?

கமலா ஹரிஸ் இரு வேறு நாட்டின் குடிவரவாளர்களுக்குப் பிறந்தவர். தந்தை ஜமெய்க்காவைச் சேர்ந்தவர். தாய் இந் திய-தமிழ் நாட்டைச் சேர்ந்தவர். ஒரு வழக்கறிஞர். கலிபோர் னியா மாநிலத் தலைமை வழக்கறிஞராக இருந்துள்ளார். கடந்த நான்கு வருடங்களாக உதவி ஜனாதிபதியாக உள் ளார். மக்கள் நலனில் அக்கறை கொண்டவராகத் தெரிகின் றார். இவரது வெற்றி குடி வரவாளர்களுக்கு நம்பிக்கையளிக் கும். இதுவரை அமெரிக்காவில் ஒரு பெண் ஜனாதிபதியாக வில்லை. கமலா ஹரிஸ் அதனை மாற்ற வேண்டும்.

டொனால்ட் ரம்ப்பின் வெளியுறவுக் கொள்கைகளின் பின் னால் ஒரு சுயநலன் தெரிகின்றது. டொனால்ட் ரம்ப் கடந்த காலத்தில் ஜெருசலேத்தை இஸ்ரேலின் தலைநகராக்கி இஸ் ரேலை வலுப்படுத்தியவர். டொனால்ட் ரம்ப். இன்றைய புட்டி-னின் மீள் எழுச்சிக்கு மூல காரணமும் இவர் என பல அரசி யல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். வட-கொரியா உலக அரங்கில் இவரது காலத்திலேயே தலைகாட்டியது. புட் டின், சீனா போன்றவற்றின் வளர்ச்சி இன்று உலகில் பல வல் லரசுகளுக்கான ஒரு தளத்தை உருவாக்கியுள்ளது. அமெ ரிக்கா சர்வதேசத்தில் தனக்குரிய இடத்தை தக்கவைக்க தடு மாறிவருகின்றது. (நல்ல விடயங்கள்)

ரம்பன் ஆட்சியின் போது பெரும் நிறுவனங்கள் அதிக இலா பத்தை பெற்றன. அவர்களே ரம்ப்பின் ஆட்சியை நிர்வகித்து வந்தார்கள். ஓகஸ்ட் 20, 2024 நியுஸ்வீக் சஞ்சிகைக்கு Bernie Sanders அளித்த செவ்வி முக்கியமானது. 'But when you come to Washington, what you find is that you are surrounded by lobbyists representing the insurance companies, the drug companies and corporate America, and then these guys make huge campaign contributions.' என இதனை வெகு தெளிவாகப் பேனி சான்டேர்ஸ் குறிப்பிடுகின் றார் பெரும் நிறுவனங்களின் நிதியிலேயே இத்தேர்தல் நடை பெறுகின்றது. அவர்களே வெற்றியாளர்கள். கமலா ஹரிஸ் தன்னை வேட்பாளராக அறிவித்த முதல் நாள் (உத்தியோக பூர்வ அறிவித்தல் வர முன்னர்) எவ்வளவு தேர்தல் நிதி சேர்க் கப்பட்டுள்ளது என ஊடகங்கள் கேள்வி எழுப்பின. இது தனி நபர்களினதல்ல. பெரும் நிறுவனங்களினது நிதி.

கொரோனா கண்டுபிடிப்பின் பின்னர் நாங்கள் அனைவரும் பெற்ற தடுப்பூசிகளை உற்பத்தி செய்த நிறுவனங்கள் பெற்ற இலாபம் சொல்லில் அடங்காது. இந்த நிறுவனங்கள் உள்ள வைத்தியர்கள் கொரோனாவிற்கான தடுப்பூசியைக் கண்டுபி டிக்கவும் நிதி பெற்றுள்ளார்கள். உங்களது இரத்தத்தில் என்ன ஓடுகின்றது என இவர்களுக்குத்தான் தெரியும். விஞ் ஞானத்தில் நம்பிக்கை வலுவாகவேயுள்ளது. எனவே இதனை யும் கடந்து செல்வோம். ஆனால் பெரும் நிறுவனங்களை கடந்து செல்ல முடியாது. யார் ஆண்டாலும் பெரும் நிறுவ னங்களே ஆட்சி செய்வார்கள்.

https://www.nhbr.com/traditional-republican-values/



rathan@thaiveedu.com




**புகலிடக் கோரிக்கையாளர்களை வெளிவாரிப்படுத்தும் (Outsourcing of asylum process) செயல்முறை தொடர்பான விவாதங்கள் ஐரோப்பாவில் அண்மைய ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. இத்தாலியும் பிரித்தானியாவும் அது விடயத்தில் சமகாலத்தில் அதிகம் பேசப்படும் நாடுகளாக உள்ளன. இக்கட்டுரை இவ்விரண்டு நாடுகளின் புகலிட வெளிவாரிப்படுத்தலை விரிவாக நோக்குவதோடு அதன் மோசமான விளைவுகளையும் பதிவுசெய்கின்றது. அத்தோடு அவுஸ்திரேலியா, இஸ்ரேல், டென்மார்க் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இதனையொத்த நடவடிக்கைகள் மீதும் பார்வையைச் செலுத்த விழைகின்றது.**

இத்திட்டத்திற்குப் பலமட்டங்களில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. 'இத்தாலியின் குவான்ரனாமோ - Italy's 'Guantanamo' என்றுகூட ஊடகங்கள் இதனைச் சித்தரிக்கின்றன. சர்வதேச புகலிட அமைப்பியலின் (International asylum system) சட்டரீதியான கொள்கைசார் அடிநாதத்தையே இவ்வகைத் திட்டம் மீறுவதாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

புகலிடக் கோரிக்கையாளர்களை வெளிவாரிப்படுத்தும் (Outsourcing of asylum process) செயல்முறை தொடர்பான விவாதங்கள் ஐரோப்பாவில் அண்மைய ஆண்டுகளில் அதிகரித்துள்ளன. இத்தாலியும் பிரித்தானியாவும் அது விடயத்தில் சமகாலத்தில் அதிகம் பேசப்படும் நாடுகளாக உள்ளன. இக்கட்டுரை இவ்விரண்டு நாடுகளின் புகலிட வெளிவாரிப்படுத்தலை விரிவாக நோக்குவதோடு அதன் மோசமான விளைவுகளையும் பதிவுசெய்கின்றது. அத்தோடு அவுஸ்திரேலியா, இஸ்ரேல், டென்மார்க் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இதனையொத்த நடவடிக்கைகள் மீதும் பார்வையைச் செலுத்த விழைகின்றது.

## முழுமூச்சாகச் செயலில் இத்தாலி:

இது விடயத்தில் இத்தாலி முழுமூச்சாகச் செயலில் இறங்கியுள்ளது. பிரித்தானியா கடந்த 2022-ல் செயலில் இறங்கிச் சட்ட ரீதியான சிக்கல்களுக்கு முகம் கொடுத்தது. இந்த ஆண்டு பதவிக்கு வந்த புதிய தொழிற்கட்சி அரசாங்கம் அதனை மீளப்பெற்றுள்ளது. இந்த வெளிவாரிப்படுத்தல் என்பது தம் நாட்டுக்கு அகதிகளாக வருபவர்களையும் புகலிட தஞ்சம் கோருவோரையும், குறிப்பாக கப்பல் அகதிகளாக (கடல்வழிப் பயணங்கள்) வருவோரை, இன்னொரு நாட்டுக்கு அனுப்பி, சிறப்பு அகதி முகாம்களில் தங்கவைத்து அவர்களின் புகலிடக் கோரிக்கைகளைப் பரிசீலிப்பதும் கையாள்வதும் முடிவுகளை எடுப்பதுமே இந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் மீதான வெளிவாரிப்படுத்தலாகும்.

இத்தாலியப் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி (Giorgia Meloni) தலைமையிலான அரசாங்கம் அந்நாட்டின் புகலிட அரசியலில் இறுக்கமான போக்கினைக் கடைப்பிடித்து வருகின்றது. 2022-ல் அவர் ஆட்சிக்கு வந்த கையோடு, துனிசியா மற்றும் லிபியா ஆகிய நாடுகளுடன் எல்லைக் கண்காணிப்புத் தீவிரப்படுத்தல் தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். ஆட்கடத்தல் வலையமைப்பு மூலம் (Human smugling) அகதிகளை இத்தாலிக்குள் அழைத்துச் செல்வோருக்கான தண்டனைகளையும் தீவிரப்படுத்தியது இத்தாலிய அரசாங்கம். மீட்புப் பணிகளில் ஈடுபடும் அரசுசாரா கப்பல் நிறுவனங்கள் மீதும் அரசாங்கம் சிக்கலான விதிகளைப் பிரயோகித்து வருகின்றது. தொலைவுகளிலுள்ள துறைமுகங்களில் அகதிகளை தரையிறக்குமாறு அவற்றுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளன.

இத்தாலி அல்பேனியாவுடன் தற்போது ஒரு உடன்படிக்கையினைச் செய்துள்ளது. பிரித்தானியா ருவாண்டாவுடன் உடன்படிக்கையினைச் செய்திருந்தது. வட அல்பேனிய துறைமுக நகரான செங்ஜின் இல் (Shengjin) இத்தாலியுடனான உடன்படிக்கைக்கு அமைய அகதிகளைத் தங்கவைப்பதற்கான மையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. ஐந்தாண்டுத் திட்ட உடன்படிக்கைக்கான செலவு 670 மில்லியன் யூரோக்களாகும்.

கடல்வழிப் பயணம் மூலம் இத்தாலியை வந்தடையும் அகதிகள் அந்நாட்டின் கரையோரப் பாதுகாப்புப் படையினரால் கையேற்கப்பட்டு ருவண்டாவிற்கு அனுப்பிவைக்கப்படுவர். இதில் கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள் மற்றும் தீவிர நோயாளர்கள் விதிவிலக்கு எனப்படுகின்றது. அதாவது அத்தகையவர்கள் ருவண்டாவிற்கு அனுப்பப்படமாட்டார்கள். அல்பேனிய முகாம்களில் புகலிடக் கோரிக்கை விவகாரங்களைக் கையாள்வதில் இத்தாலியச் சட்டங்களே நடைமுறைப்படுத்தப்படும் என்ற தகவலும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ளது.



## ‘இத்தாலியின் குவான்ரனாமோ’:

அல்பேனியா, அல்ஜீரியா, வங்கதேசம், போஸ்னியா, கமரூன், கொலம்பியா, கம்பியா, ஜோர்ஜியா, கானா, எகிப்த், கொசவோ, நைஜீரியா, வட மக்கடோனியா, பெரு, மொன்ரநீக்ரோ, மொறக்கோ, செனகல், சேர்பியா, இலங்கை, துனிசியா ஆகிய நாடுகளிலிருந்து இத்தாலிக்குக் கடல்வழி பயணப்படும் அகதிகள் மீதான நடவடிக்கை இது. மாதாந்தம் 3000 பேர் என்ற கணக்கில் வருடத்தில் 36 000 புகலிடக் கோரிக்கையாளர்கள் அல்பேனியாவிற்கு அனுப்பப்பட்டு அவர்களின் அகதி விண்ணப்பங்கள் கையாளப்படும் என இத்திட்டம் தொடர்பாக வெளிவந்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன.

அல்பேனியாவிற்கு அனுப்பிவைக்கப்படும் அகதிகள் அங்கு முகாமில் தங்கவைக்கப்படும் காலத்தில் அவர்களின் புகலிடக் கோரிக்கை விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் அவர்கள் இத்தாலிக்கு அழைத்துச் செல்லப்படுவர். நிராகரிக்கப்பட்டால் அவர்கள் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவர். அப்பொறுப்பு அல்பேனியாவின் கைகளில் விடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்குப் பல மட்டங்களில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. ‘இத்தாலியின் குவான்ரனாமோ - Italy’s ‘Guantanamo’ என்றுகூட ஊடகங்கள் இதனைச் சித்தரிக்கின்றன. சர்வதேச புகலிட அமைப்பியலின் (International asylum system) சட்ட ரீதியான கொள்கைசார் அடிநாதத்தையே இவ்வகைத் திட்டம் மீறுவதாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

கடந்த பல ஆண்டுகளாக லிபியா ஊடாக இத்தாலிக்கு அகதிகள் நுழைவதைத் தடுப்பதற்காக லிபியாவிற்கு இத்தாலி நிதி வழங்கியுள்ளது. லிபிய அகதி முகாம்களில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களுக்கு இத்தாலிக்கும் கூட்டுப்பொறுப்பு உள்ளதென்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுவந்துள்ளது. இத்தாலி-அல்பேனிய விவகாரத்தை விமர்சிக்கையில், பப்புவா நியூகினியா நாட்டில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அகதிகள் நடவடிக்கைகளுக்கான வெளிவாரித்திட்டம் ஏற்படுத்திய பேரழிவுகளை சர்வதேச மன்னிப்புச் சபையின் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான புகலிட விவகாரக் கிளையின் இணைப்பாளர் டியெஸ் (Diez) நினைவுபடுத்தியுள்ளார்.

## இத்தாலியின் திட்டத்தைப் புகழும் ஐரோப்பிய நாடுகள்:

இங்கு மற்றுமொரு அதிர்ச்சிக்குரிய விடயம் இத்தாலியின் அல்பேனியாவுடனான இந்த வெளிவாரிப்படுத்தற் திட்டத்தினை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பல வரவேற்றுள்ளன என்பதாகும். இத்தாலியப் பிரதமர் மெலோனி சட்டகத்திற்கு வெளியிற் சிந்திப்பதாக ஐரோப்பிய ஒன்றிய ஆணையத்தின் ஜனாதிபதி உர்சுலா வொன் டெர் லெயென் (Ursula von der Leyen) புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்த ஆண்டு (2024) நடுப்பகுதியில் டென்மார்க் தலைமையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 15 உறுப்பு நாடுகள் ஐரோப்பிய ஆணையத்திற்கு திறந்த மடல் ஒன்றினை அனுப்பியுள்ளனர். புகலிடக் கோரிக்கையாளர்களை வெளிவாரிப்படுத்தும் திட்டங்களிற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவு வழங்க வேண்டுமென அம்மடலில் கூட்டாக இந்நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. இந்தக் கோரிக்கைக்கான உந்துதல் இத்தாலிய-அல்பேனிய உடன்படிக்கை என்பது குறிப்பிடப்படவேண்டியது. தாமும் வெளிவாரிப்படுத்தலுக்குரிய சிந்தனையைக் கொண்டிருப்பதாகவும் இத்தாலியின் திட்டத்தினை ஆர்வத்துடன் அவதானித்து வருவதாகப் பிரித்தானியப் பிரதமர் கீய்ர் ஸ்டார்மர் (Keir Starmer) கூறியுள்ளார்.

## வலதுசாரி அரசாங்கம் – வெளிநாட்டவர்கள் வருகையைத் தடுக்கும் திட்டம்:

வெளிநாட்டவர் அதிகரிப்பினை நாட்டிற் கட்டுப்படுத்துவது இத்தாலியப் பிரதமர் மெலோனியின் தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக 2022-ல் இருந்தது. அல்பேனிய உடன்படிக்கை அத்தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் முக்கிய திறவுகோல்களில் ஒன்றாகவும் வர்ணிக்கப்படுகின்றது. அரசியல் ரீதியாகத் தற்போதைய அரசு வெற்றியை அறுவடை செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. 2024 ஓகஸ்ட் வரையான தரவுகளின்படி இத்தாலியில் புகலிடம் கோருவோர் எண்ணிக்கை இந்நடவடிக்கையின் விளைவாக 62 வீதத்தாற் குறைவடைந்துள்ளது. இத்தாலியில் 2023-ல் 113000 பேர் புக

லிட தஞ்சம் கோரியுள்ளனர். 2024-ல் 40 000 பேர் மட்டுமே என சர்வதேச புகலிட விவகார நிறுவனத்தின் (International Organization for Migration - IOM) தரவுகள் கூறுகின்றன. ஆனால் மத்தியதரைக் கடலில் உயிர்ப்பலியாவோர் தொகை இந்த விகிதாசாரக் கணக்கில் குறைவடையவில்லை என்று சர்வதேச புகலிட விவகார நிறுவனத்தின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அப்பேனிய முகாம்களுக்கு பெண்கள் மற்றும் 16 வயதிற்கு உட்பட்டவர்கள் அல்லாமல் ஆண்கள் மட்டுமே அனுப்பப்படுகின்றனர். இது பெண்கள், சிறார் நலன்கள், உரிமைகளைக் கருத்திலெடுக்கும் அணுகுமுறையாகச் சித்தரிக்கப்படுகின்றது. ஆனால் குடும்பமாக புகலிடம் கோருவேரைப் பொறுத்த மட்டில் உறவுகளைப் பிரித்துச் சிதைக்கின்ற விளைவினைக் கொண்டிருக்கின்றது என்பதை மறுக்க முடியாது. புகலிடக் கோரிக்கையாளர்களிற் குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்குச் சிறைத் தண்டனை வழங்கப்படும் என்பதும் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## பிரித்தானிய – ருவண்டா உடன்படிக்கை:

ஏப்ரல் 2022-ல் பிரித்தானிய அரசாங்கம் ருவண்டாவுடன் அகதிகள் நடவடிக்கைகளை வெளிவாரிப்படுத்தும் (அனுப்பும்) உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. ஆனால் அந்த உடன்படிக்கை தொடர்ச்சியாகப் பல சட்டரீதியான சவால்களை எதிர்கொள்ள நேர்ந்தது. நவம்பர் 2023-ல் பிரித்தானிய உச்ச நீதிமன்றம் பிரித்தானிய-ருவண்டா உடன்படிக்கைக்கு எதிரான தீர்ப்பினை வழங்கியது. புகலிடக் கோரிக்கையாளர்களை அனுப்புவதற்குரிய பாதுகாப்பான ஒரு நாடு அல்ல ருவண்டா என்பது தீர்ப்பின் மையம். ருவாண்டாவிற்கு புகலிடக் கோரிக்கையாளர்களை அனுப்புவதற்கான முதல் விமானம் ஜூன் 14, 2022 அன்று திட்டமிடப்பட்டது. மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு காரணமாக இந்த விமானம் இரத்து செய்யப்பட்டது.

புலப்பெயர்வு மற்றும் பொருளாதார அபிவிருத்திக் கூட்டாண்மை (Migration and economic development partnership) என்பது இந்த உடன்படிக்கைக்குச் சூட்டப்பட்ட பெயர். இந்த ஏற்பாடு ‘முன்னோட்டத் திட்டம்’ அல்லது ‘பரீட்சார்த்தத் திட்டம்’ என்றே விபரிக்கப்பட்டது. உடன்படிக்கையின்படி ஐந்தாண்டுத் திட்டமாக 2027 வரை முதற்கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும். அதற்கு மேலும் நீட்டித்திருக்கக்கூடிய வாய்ப்பும் இருந்தது.

அகதிகளை ருவண்டாவிற்கு அனுப்புவதற்கு மூன்று நிபந்தனைகளைப் பிரித்தானியா வகுத்துக் கொண்டது. முதலாவது, முன்னர் வேறு ஒரு நாட்டில் இருந்தவர்களாகவோ அன்றி புகலிட தஞ்சம் கோரியவர்கள் - இரண்டாவது, பிரித்தானியாவிற்கான தமது பயணம் ஆபத்தான வழிமுறையில் அமைந்தது என்று விபரிப்பவர்கள் - மூன்றாவது, 31.12.2021-ற்குப் பின் பிரித்தானியாவிற்குள் நுழைந்தவர்கள். அங்கு அனுப்பப்படுபவர்களின் எதிர்காலம் தொடர்பான முடிவினை ருவண்டா அரசாங்கமே தீர்மானிக்கும். கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால் ருவண்டாவிலேயே புகலிடத் தஞ்சம் வழங்கப்படும் - பிரித்தானியாவில் அல்ல.

புகலிடக் கோரிக்கையாளர்களை அனுப்பக்கூடிய பாதுகாப்பான நாடாக ருவாண்டா இல்லை என்று தீர்மானித்த பிரித்தானிய உச்ச நீதிமன்றம் ருவாண்டா திட்டம் சட்டவிரோதமானது என்று 15 நவம்பர் 2023 அறிவித்தது. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு பதிலளிக்கும் விதமாக, பிரித்தானிய அரசாங்கம், ருவாண்டாவுடன் ஒரு புதிய ஒப்பந்தத்தை வெளியிட்டது. புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு ருவாண்டா பாதுகாப்பான நாடு என்று நிறுவும் பிரயத்தனத்துடனான புதிய ஒப்பந்தம் அது. 25 ஏப்ரல் 2024 அன்று, ருவாண்டாவுடனான புதிய உடன்படிக்கை அங்கீகரிக்கப்பட்டது. 2024 ஜுலை இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைத்திருக்கும் தொழிற்கட்சி அரசாங்கம் ருவாண்டா திட்டத்தை இரத்து செய்தது. இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியை புதிய எல்லைக் கண்காணிப்புத் திட்டத்திற்கு மாற்றவுள்ளதாக அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் எவரும் வலுக்கட்டாயமாக ருவாண்டாவிற்கு அனுப்பப்படவில்லை. எதிர்காலத்தில் எவரும் அனுப்பப்படும் வாய்ப்பும் இல்லை. தனிப்பட்ட விருப்பின் பேரில் இதுவரை நான்கு பேர் ருவாண்டாவிற்குச் சென்றதாக உள்துறைச் செயலாளர் யவெட் கூப்பர் (Yvette Cooper) தெரிவித்திருந்தார். ‘ஏற்கனவே பாதுகாப்பான மூன்றாம் நாடுகள் ஊடாக ஏற்கனவே பயணம் செய்து பிரித்தானியாவிற் தஞ்சம் கோருவதற்காக குற்றவியல் கடத்தல்காரர்களின் வழிநடத்தலில் ஆபத்தான பயணங்களைச் செய்வதிலிருந்து மக்களைத் தடுப்பதே’ தமது நோக்கமென இந்த ருவாண்டாத் திட்டத்தினை கென்சர்வேற்றிவ் அரசாங்கம் நியாயப்படுத்தியது. சிறிய படகுகளில் ஆங்கிலக் கால்வாயைக் கடக்கும் அகதிகள்தான் ருவாண்டா திட்டத்தின் முக்கிய இலக்கு என்பதை முன்னைய அரசாங்கம் வலியுறுத்தி வந்துள்ளது.



## ‘ருவாண்டா’ திட்டத்திற்கு எதிரான உச்சநீதிமன்றத் தீர்ப்பு:

ருவாண்டா திட்டம் சட்டவிரோதமானது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தமைக்கான முதன்மைக் காரணம், அந்நாடு புகலிடக் கோரிக்கையாளர்களைக் கையாள்வதற்குரிய- வெளியேற்றக்கூடிய பாதுகாப்பான சூழல் அங்கில்லை என்பதோடு, அதன் புகலிட அமைப்பில் உள்ள போதாமைகளும்




காரணமாகும். ருவாண்டாவால் புகலிடக் கோரிக்கைகளை முறையாகக் கையாளவும் செயற்படுத்தவும் முடியாவிட்டால், உண்மையான அகதிகளை அடையாளம் காண முடியாவிட்டால், அங்கு பிரித்தானியாவால் அனுப்பப்படும் அகதிகள் அவர்கள் எங்கிருந்து பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாகத் தப்பி வந்தார்களோ, அந்நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்படும் அபாயம் உள்ளது என்பதையும் உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது.

உச்ச நீதிமன்றம் மூன்று முக்கிய பிரச்சினைகளை எழுப்பியது: ஒன்று ருவாண்டாவின் மோசமான மனித உரிமைசார் நிலைமை, இரண்டு அதன் புகலிட விவகாரக் கையாளுகை மற்றும் செயலாற்றுகையில் நிலவும் தீவிர அமைப்புசார் குறைபாடுகள், மூன்றாவது இஸ்ரேலுடனான இதேபோன்ற உடன்படிக்கையின் கீழ், ருவாண்டா புகலிடக் கோரிக்கையாளர்களை அவர்களின் பூர்வீக நாடுகளுக்குத் திருப்பி அனுப்பியது. இது மறுபரிசீலனை நீக்கக் கொள்கையை (non-refoulement principle) மீறுகின்ற செயல். மறுபரிசீலனை நீக்கக் கொள்கை என்பது ஒரு புகலிடக் கோரிக்கையாளர் தனது பூர்வீக தேசத்தில் துன்புறுத்தப்படும் அபாயம் நிலவுமாயின், அவரை எக்காரணம் கொண்டும் எவரும் சொந்த நாட்டிற்கு திருப்பி அனுப்ப முடியாது. இந்த கொள்கை ஐ.நா அகதிகள் சாசனத்தில் இடம்பெற்றுள்ளதோடு, உலகின் பெரும்பாலான நாடுகள் இதனைக் கடைப்பிடிக்க வேண்டியதாகவும் உள்ளது.

ருவாண்டாவின் மோசமான மனித உரிமை நிலைமைகள் சார்ந்த ஆதாரங்களைப் பிரித்தானிய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு மேற்கோள் காட்டியது. சமீபத்தில் அரசாங்கத்தை விமர்சிக்கும் நபர்கள் மீதான ருவாண்டாவின் கொலை முயற்சிகளையும் உச்ச நீதிமன்றம் ஆதாரத்தில் உள்ளடக்கியிருந்தது. ஜனநாயக, அரசியல் மற்றும் ஊடக சுதந்திரத்தின் மீதான கட்டுப்பாடுகள் குறித்த கவலைகளையும் நீதிமன்றம் மேற்கோள் காட்டியது. உணவுப் பங்கீட்டில் வெட்டுக்களுக்கு (குறைப்புகளுக்கு) எதிர்ப்புத் தெரிவித்த அகதிகள் மீது 2018-ம் ஆண்டு ருவாண்டா காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பன்னிரண்டு பேர்வரை கொல்லப்பட்ட சம்பவத்தையும் நீதிமன்றத் தீர்ப்பு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. பல சர்வதேச மனித உரிமைசார் சாசனங்களுக்கு ருவாண்டா ஒப்புதல் அளித்துள்ள போதும், மேற்குறிப்பிட்ட அதன் மீறல்கள் ‘சர்வதேச கடப்பாடுகளுக்குக் கட்டுப்படுதல்’ குறித்த கடுமையான கேள்விகளை எழுப்பியிருப்பதாகவும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியிருந்தது. ருவாண்டா திட்டத்தை நிறுத்துவதன் விளைவான நிதித் தாக்கங்கள் குறித்து இன்னும் அறியப்படவில்லை. குறைந்தபட்சம் 318 மில்லியன் பவுண்கள் நிதி செலவிடப்பட்டதாக ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ருவாண்டாவிற்கு அனுப்பப்பட்டவர்களுள் ஈழத்தமிழர்கள் – பிபிசி சந்திப்பு:

2023-ல் பிரித்தானிய ஆள்புலப் பிரதேசம் ஒன்றிலிருந்து புகலிடக் கோரிக்கையாளர்களை உள்ளடக்கிய ஒரு குழுவினைத் தனியான உடன்படிக்கையின் கீழ் பிரித்தானிய அரசாங்கம் ருவாண்டாவிற்கு அனுப்பியமை தொடர்பான ஒரு கட்டுரையினை பி.பி.சி (BBC, 07.06.2024) வெளியிட்டிருந்தது. அப்படி அனுப்பப்பட்டிருந்தவர்களில் ஈழத் தமிழர்கள் நால்வரை பி.பி.சி ஊடகவியலாளர்கள் குழு ஒன்று ருவாண்டாவிற்குச் சென்று சந்தித்து அவர்களின் அனுபவங்களைப் பதிவு



செய்திருக்கின்றது. அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டதும் பாதுகாப்பற்றதுமான சூழலை உணர்வதாகவும் ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையாக ருவண்டாவினை விபரித்துள்ளனர்.

போர்க்கால பாலியல் வன்புணர்வு, சித்திரவதைகளின் விளைவாக விசேட மருத்துவத் தேவைகள் தமக்கு உள்ளன என்றும் ருவண்டாவில் அவை சரிவரக் கிடைப்பதில்லை என்றும் கூறியிருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் உணவு மற்றும் பிற அத்தியாவசியப் பொருட்களுக்கென வாரத்திற்கு 50

டொலர்கள் பெறுகின்றனர். ஆனால் பிரித்தானிய - ருவாண்டா அரசாங்கங்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டதே அவர்களின் வாழ்வும் நடமாட்டமும். அங்கு அவர் கள் வேலை செய்ய அனுமதிக்கப்படவில்லை.

தெருக்களில் துன்புறுத்தல் மற்றும் தேவையற்ற பாலியல் அணுகல்களை எதிர்கொண்டதாக நால்வரும் கூறியுள்ளனர். தாம் வெளியே செல்ல மிகவும் அச்சப்பட்டு உண்மையில் ஒருவகைச் 'சுய சிறையடைப்பு' மனநிலையில் வாழ நிர்ப்பந் திக்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர். தமது எதிர்காலத் திற்கு உகந்த நிரந்தர வதிவிடத்தை எங்காவது கண்டடைந்து பிரித்தானியா தமக்கு வழங்கும் என்ற எதிர்பார்ப்புடன் அவர் கள் காத்திருக்கிறார்கள். இவர்கள் நால்வரும் தற்கொலை முயற்சிகளுக்குப் பின், அவசர மருத்துவ சிகிச்சைக்காக ருவாண்டாவுக்கு மாற்றப்பட்டனர். அங்கு இராணுவ மருத்துவ மனையிற் சிகிச்சை பெற்று, வெளியேறி தலைநகர் கிகாலி யின் (Kigali) புறநகர் ஒன்றில் அமைந்துள்ள இரண்டு அடுக் குமாடிக் குடியிருப்பு ஒன்றில் வசிக்கின்றனர்.

நால்வரில் எவரும் பிரித்தானியாவிற்குள் நுழைய முயற்சிக்க வில்லை. மாறாக அவர்கள் டியாகோ கார்சியா (Diego Garcia) தீவிலேயே தஞ்சம் கோரினர். இது பிரித்தானிய-அமெ ரிக்க கட்டுப்பாட்டில் ஒரு இரகசிய இராணுவத்தளமாக பயன் படுத்தப்படுகிறது. டியாகோ கார்சியா என்பது இந்துமா கட லில் பிரித்தானிய ஆள்புலத்தில் அமைந்துள்ள ஒரு தீவு. இது பிரித்தானியாவின் சர்ச்சைக்குரிய கடல் கடந்த பிரதே சம். இதனை மொரீஷியசும் (Mauritius) உரிமை கோருகின் றது. 2021 ஒக்ரோபரில் இத்தீவினைச் சென்றடைந்த நூற்றுக் கணக்கானவர்களில் இந்த நான்கு ஈழத் தமிழர்களும் உள்ள டக்கம். இவர்கள் கடல்வழி கனடாவுக்குப் புகலிடம் கோர முயற்சிப்பதாகக் கூறியிருந்தனர். ருவாண்டாவில் பி.பிசி சந் தித்த நால்வரும் தங்கள் சொந்த நாட்டில் சித்திரவதை மற் றும் பாலியல் வன்முறைக்கு ஆளானதாகக் கூறியுள்ளனர்.

## ஏனைய நாடுகளும் அகதிகளை அனுப்பும் திட்டங்களும்:

மேலும் சில நாடுகள் இதே போன்ற புகலிடக் கொள்கைத் திட்டங்களைப் பின்பற்றியுள்ளன. அவுஸ்திரேலியா, இஸ்ரேல் மற்றும் டென்மார்க் இத்திட்டத்திற்கு முன்னோடிகள். இவை புகலிடக் கோரிக்கையாளர்களைக் கையாளும் பொறுப்பை வேறு நாடுகளிடம் ஒப்படைக்கும் திட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளன. ஐரோப்பிய ஒன்றியமும் துருக்கியுடன் இதனை ஓரளவு ஒத்த நோக்கங்களைக் கொண்ட உடன்படிக் கைகளைக் கொண்டிக்கின்றது. அத்தோடு அகதிகளை 'அவர்களின் ஒப்புதலுடன்' லிபியாவிலிருந்து ருவாண்டா விற்கு அனுப்புகின்ற ஐ.நா முன்னெடுக்கும் ஒரு திட்டத்திற்கு நிதியளித்துள்ளது.

## அவுஸ்திரேலியா – நவ்ரூ மற்றும் பப்புவா நியூகினியா:

சட்ட விரோதமாக படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவிற்குச் செல்லும் வெளிநாட்டு அகதிகளை ஒக்டோபர் 2001-ல், அவுஸ்திரேலிய அரசாங்கம் 'பசிபிக் தீர்வு - Pacific Solution' என்ற கொள்கைத் திட்டத்தின் கீழ் நவ்ரூ மற்றும் பப்புவா நியூ கினியாவிற்கு (Nauru and Papua New Guinea) அனுப்பத் தொடங்கியது. 2008-ல் இத்திட்டத்தை நிறுத்திய அவுஸ்திரே லியா, மீண்டும் 2012-ல் அனுப்பத் தொடங்கியது.

2012-ம் ஆண்டிலிருந்து அங்கிருந்தவாறு அவுஸ்திரேலியா வில் புகலிடம் கோரும் நடவடிக்கையை முன்னெடுக்கக்கூடி யதாக இருந்தது. கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் கள் அவுஸ்திரேலியாவில் புகலிட அனுமதி பெற்றனர். 2013-ஆம் ஆண்டிலிருந்து புகலிடக் கோரிக்கையின் பின்னணிக ளைப் பொருட்படுத்தாமல் படகில் ஒழுங்கற்ற முறையில் பய ணம் செய்யும் எவரையும் குடியேற்ற மறுத்தது.

செப்டம்பர் 2013-லிருந்து ஆஸ்திரேலியாவும் 'நடவடிக்கை இறையாண்மை எல்லைகள் - Operation Sovereign Borders' திட்டத்தினைச் செயற்படுத்தியது, இது 'ஆட்கடத்தலுக்கு எதிர்வினையாகவும் அவுஸ்திரேலிய எல்லைகளைப் பாது காப்பதற்குமான' இராணுவ நடவடிக்கையாக விபரிக்கப்பட் டது. இது 'takebakcs' மற்றும் 'Boat turnback' திட்டமெனவும் விளிக்கப்பட்டது. 'Turnback' என்பது கடலிற் படகுகளை இடைமறித்து, அவை பயணத்தைத் தொடங்கிய நாட்டின் பிராந்தியக் கடல்களுக்குத் திருப்புவதும், பின்னர் அக்கப் பல்களை அந்த நாட்டிற்குள் அழைத்துச் செல்லப்படுவதுமா கும். 'Takebakcs' என்பது அகதிகளை கடல் அல்லது விமா னங்களின் ஊடாக அகதிகள் பூர்வீக நாட்டிற்குத் திரும்பச் செய்வதை உட்படுத்துகிறது. இந்த இரண்டு கொள்கைகளுக் கும் புறப்பாட்டு நாடுகளின் ஒத்துழைப்பு அவசியம். இந்தோ னேசியாவுடன் படகு மீளத் திருப்பல் நடவடிக்கையிலும், இலங்கை மற்றும் வியட்நாம் ஆகியவற்றுடன் திரும்பப் பெறு தல் நடவடிக்கையிலும் அவுஸ்ரேலியா ஒத்துழைப்பு உடன்ப டிக்கைகளைக் கொண்டிருக்கின்றது.

2013-ம் ஆண்டு ஏறத்தாழ 20600 வரையான அகதிகள் படகு மூலம் அவுஸ்திரேலியாவை அடைய முயற்சித்ததாக அந் நாட்டின் அகதிகள் மையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அடுத்த ஆண்டு ஐந்நூறாகக் குறைந்ததோடு, இறுதிக் காலங்களில் மேலும் குறைந்துள்ளது.

டிசம்பர் 2021 அவுஸ்திரேலியா பப்புவா நியூ கினியாவுடனான உடன்படிக்கையை முடித்துக்கொண்டது, நவ்ரூவை அதன் ஒரே கடல்வழி வெளிவாரிப்படுத்தல் தளமாகப் பேணி வரு கின்றது. அவுஸ்திரேலியாவின் அகதிகள் நடவடிக்கைகள் சார்ந்த வெளிவாரிப்படுத்தற் கொள்கை மீதான விமர்சனங் கள் மனிதாபிமான விளைவுகள் மற்றும் அதற்கான நிதிச் செலவீனம் சார்ந்தும் முன்வைக்கப்பட்டன. கடல் கடந்த அக திகள் மையங்களில் உள்ளவர்களின் மோசமான நிலைமை கள் மற்றும் அவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள் பற்றிய ஆதாரங்களை அவுஸ்திரேலிய அகதிகள் கவுன்சிலால் தொகுக்கப்பட்ட பல அறிக்கைகள் வெளிப்படுத்தியிருந்தன.

## இஸ்ரேல் – ருவாண்டா:

2013-2018 காலப்பகுதியில் இஸ்ரேலில் தஞ்சம் கோரிய எரித்-ரிய மற்றும் சூடான் நாட்டவர்களை இஸ்ரேல் ருவாண்டாவிற்கு அனுப்பத் தொடங்கியது. தஞ்சம் கோரியோருக்கு மூன்று தெரிவுகள் கொடுக்கப்பட்டன. இஸ்ரேலுக்குள் தடுத்துவைக் கப்படுதல், சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுதல், ருவாண்டாவிற்கு அனுப்பப்பட்டு அங்கு புகலிடம் கோருவ

தற்கு அவர்களுக்குரிய ஒரு தேர்வு வழங்கப்பட்டது. இக்காலப் பகுதியில் 4000 வரையான எரித்திரிய மற்றும் சூடான் நாட்டவர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் ருவாண்டாவிற்கு அனுப்பப்பட்டனர்.

ஜேர்மனி மற்றும் நெதர்லாந்தில் புகலிடம் கோரிய சிலரின் பின்னணிகளை வைத்து 2018-ல் இனால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில், ருவாண்டாவில் புகலிட தஞ்சம் கோருவதற்குப் பலர் அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர்கள் ஐரோப்பாவிற்கு புகலிடக் கோரிக்கையைத் தொடர்ந்தனர் என்றும் தெரிவிக்கிறது. மேல்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையத்தின் (United Nations High Commissioner for Refugees – UNHCR) ஆய்வும் இதனையொத்த தரவுகளையே உள்ளடக்கியிருந்தது. இஸ்ரேல்-ருவாண்டா திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்த இத்தாலியில் உள்ள 80 சூடான் மற்றும் எரித்ரியன் புகலிடக் கோரிக்கையாளர்களிடம் 'UNHCR-ஆய்வு'க்காக நேர்காணல் நடத்தப்பட்டது.

இஸ்ரேல்-ருவாண்டா ஏற்பாட்டின் கீழ் ருவாண்டாவிற்கு அனுப்பப்பட்ட அவர்கள் வேறு தெரிவுகள் அற்ற நிலையில் மீண்டும் தமது உயிர்களைப் பணயம் வைத்து ஐரோப்பிய நாடுகளுக்கான பயணங்களை மேற்கொள்கின்றனர். அத்தோடு உச்சநீதிமன்றம் அதன் தீர்ப்பில், இஸ்ரேல்-ருவாண்டா ஏற்பாட்டின் கீழ் ருவாண்டாவிற்கு வந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் 'கிரமமாக உகாண்டாவிற்கு இரகசியமாக நகர்த்தப்பட்டனர்' என்றும் UNHCR ஆதாரங்களை வழங்கியுள்ளது. 2015-2016 காலப்பகுதியில் நூற்றுக்கணக்கான எரித்திரிய மற்றும் சூடான் நாட்டவர்கள் ருவாண்டாவிற்கு அனுப்பப்பட்டு, பின்னர் உகாண்டா எல்லைக்கு அழைத்துச்சென்று விடப்பட்டனர் அல்லது உகாண்டாவிற்கு விமானங்களில் அனுப்பப்பட்டனர் என்றும் ஆதாரங்களை முன்வைத்திருந்தது.

## ஐரோப்பிய ஒன்றியம்:

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையத்தினால் முன்னெடுக்கப்படும் ஒரு திட்டத்திற்கு செப்டம்பர் 2019-லிருந்து ஐரோப்பிய ஒன்றியம் நிதியளித்து வருகின்றது. இது பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள அகதிகளை லிபியாவிலிருந்து ருவாண்டாவிற்கு நகர்த்தும் திட்டமாகும். அவசர இடைநகர்த்தற் பொறிமுறை (Emergency Transit Mechanism - ETM) என அறியப்படும் இத்திட்டத்தின் நோக்கம், 'லிபியாவில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய புகலிடக் கோரிக்கையாளர்கள் மற்றும் அகதிகளுக்கு பாதுகாப்பு வெளியையும் நிலைகொள் தீர்வுகளையும் வழங்குவது' எனச் சொல்லப்படுகின்றது.

'அவசர இடைநகர்த்தற் பொறிமுறை' பல முக்கிய விடயங்களில் பிரித்தானிய-ருவாண்டா ஒப்பந்தத்திலிருந்து இருந்து வேறுபடுவதாகச் சுட்டப்படுகின்றது. பிரித்தானியாவிலிருந்து ருவாண்டாவிற்கு அனுப்பப்படும் திட்டம் புகலிடக் கோரிக்கையாளர்களின் சுயவிருப்புத் தெரிவுகளுக்கு இடமற்ற கட்டாயப்படுத்தலைச் சேர்ந்தது. அதேசமயம் ETM சுயவிருப்பின் அடிப்படையிலானது. பிரித்தானிய-ருவாண்டா திட்டத்தின் கீழ் இடம்பெயர்ந்தவர்களின் எதிர்காலம் ருவாண்டா அரசாங்கத்திடம் கையளிக்கப்படுகின்றது.

ETM திட்டத்தின் இன் கீழ் மாற்றப்பட்டவர்களின் கோரிக்கை UNHCR இனால் கையாளப்படுகின்றது. ETM ஆனது லிபியாவில் உள்ள நெருக்கடிச் சூழ்நிலையில் இருந்து மக்களை மீட்பதற்கானது. அதாவது லிபிய அகதிகளுக்குரிய பாதுகாப்பினை வழங்குவதற்கான UNHCR இன் அதிகாரம் மட்டுப்ப



டுத்தப்பட்டது. பிரித்தானிய-ருவண்டா திட்டமானது சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுக்கும் இலக்கினை முதன்மையாகக் கொண்டு, பிரித்தானியாவின் பாதுகாப்பிலிருந்து புகலிடக் கோரிக்கையாளர்களை அனுப்புவதை (கைகழுவுவதை) நோக்கமாகக் கொண்டுள்ளது.

## டென்மார்க் – ருவாண்டா:

புகலிடக் கோரிக்கையாளர்களை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு வெளியே உள்ள நாடுகளுக்கு அனுப்புவதற்கு அனுமதிக்கும் சட்டத்தை ஜூன் 2021 டென்மார்க் நிறைவேற்றியது. ருவாண்டாவுடன் புகலிடக் கோரிக்கை மற்றும் புலம்பெயர்வு விவகாரங்கள் (Cooperation Regarding Asylum and Migration Issues) தொடர்பான ஒத்துழைப்புச் செயற்பாட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. 2022-ம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, டென்மார்க் ஐரோப்பிய ஒன்றியத்துடனான ஒப்பந்தத்திற்கு அமைய ருவாண்டாவுடன் செய்துகொண்டிருந்த இருதரப்பு ஒப்பந்தத்திலிருந்து விலகியுள்ளதாக அறிய முடிகின்றது.

## ஐரோப்பிய ஒன்றியம் துருக்கியுடன் ஒப்பந்தம்:

2015-ல் ஒரு மில்லியனுக்கும் அதிகமான புகலிடக் கோரிக்கையாளர்கள் ஐரோப்பாவிற்கு வந்ததைத் தொடர்ந்து பெரும் நெருக்கடிக்கு முகம்கொடுத்த ஐரோப்பிய ஒன்றியம் துருக்கியுடன் ஒரு உடன்படிக்கையினைச் செய்துகொண்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, கிரீஸை அடைய முயற்சிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்கள் துருக்கிக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். அவர்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை அடைவதை துருக்கி தடுத்தது. இதற்குப் பதிலீடாக துருக்கியிலிருந்து அல்லது துருக்கி ஊடாக பயணித்த சிரியா நாட்டு அகதிகளைக் ஏற்றுக்கொள்ள ஐரோப்பிய ஒன்றியம் ஒப்புக்கொண்டது. கிரீஸிலிருந்து துருக்கி ஏற்றுக்கொண்ட அகதிகளைக்

கையாள்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆறு பில்லியன் டொலரினைத் துருக்கிக்கு வழங்கியதோடு, அதனை ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைப்பதற்கான பேச்சுவார்த்தைகளையும் துரிதப்படுத்தியது. பிரித்தானிய- ருவாண்டா ஒப்பந்தத்தைப் போல, இதுவும் தஞ்சம் கோருவோர் ஆபத்தான கடற் பயணங்களை மேற்கொள்வதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டதாக விபரிக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றிய-துருக்கி ஒப்பந்தம் கலவையான முடிவுகளைக் கொண்டிருந்ததாகத் தரவுகள் கூறுகின்றன. இந்த ஒப்பந்தம் புகலிடம் கோரி ஐரோப்பாவிற்குப் படையெடுத்தவர்களின் எண்ணிக்கையிற் கணிசமான சரிவை ஏற்படுத்தியது. 2015-ம் ஆண்டில், 861,000-க்கும் மேற்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் கிரீஸைச் சென்றடைந்தனர். ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட ஆண்டிற்குப் பிறகு அந்த எண்ணிக்கை 36,000 ஆகக் குறைந்துள்ளது. இருப்பினும் இந்தச் சரிவுக்கு முழுமையான காரணம் இந்த ஒப்பந்தம் அல்ல என்றும் வாதிடப்பட்டது. மறுபுறம், மனிதாபிமான அடிப்படையில் இந்தத் திட்டம் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இத்திட்டம் பல்லாயிரக்கணக்கான மக்கள் கிரேக்கத் தீவுகளில் தங்கியிருக்கும் போது அல்லது துருக்கிக்கு அனுப்பப்பட்ட நிலையில் மோசமானதும் ஆபத்தானதுமான சூழல்களுக்குள் வாழ நிர்ப்பந்தித்திருக்கின்றது என சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டியிருந்தது.

## ஏன் ருவாண்டா?

ஏன் ருவாண்டாவைப் பல நாடுகள் தேர்வு செய்தன என்ற கேள்வி இயல்பாக எழக்கூடிய ஒன்று. கிழக்கு ஆபிரிக்க நாடான அதன் அமைவிடம் முதன்மைக் காரணம். அது கடலால் சூழப்படாத நாடு. பெரிய ஆறுகள், கால்வாய்களும் கிடையாது. அதன் புவியியல் அமைவிடம் அங்கிருந்து மனிதர்கள் (அகதிகள்) ஐரோப்பாவுக்குத் திரும்பிச் செல்வதை கடினமாக்குகிறது. 1990-களின் முற்பகுதியில் இடம்பெற்ற இன அழிப்புகளுக்குப் பின்னர், நூறாயிரம் பேர் வரை சிறைகளில் அடைக்கப்பட்டனர். தற்போதைய சூழலில் அவர்களிற் பலர் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். அதனால் பல்லாயிரக்கணக்கான சிறைச்சாலைகள் பயன்பாடற்று உள்ளன, அதாவது பயன்படுத்தக்கூடிய சிறை இடங்கள் உள்ளன.

அதேவேளை புகலிடக் கோரிக்கையாளர்களை ருவாண்டாவுக்கு அனுப்புவது நியாயமானதல்ல, பாதுகாப்பானதல்ல என்ற குரல்களும் வலுவாக ஒலித்து வருகின்றன. அரசியல் கைதுகள் மற்றும் வலிந்த காணாமற் போதல்களும் அதிகம் நிகழும் நாடுகளில் அதுவும் ஒன்று. கடுமையான மனித உரிமை மீறல்கள் நடைபெறும் நாடு என ருவண்டாவை உலகின் முதன்மையான மனித உரிமை அமைப்புகள் விமர்சிக்கின்றன.

## மோசமான,
## எதிர் விளைவுகளைக்கொண்ட திட் டம்:

அதீத நிதிச்செலவுகொண்ட, மோசமான, எதிர் விளைவுகளைக் கொண்ட திட்டம் என விமர்சித்திருக்கின்றார் சர்வதேச மீட்புக் குழுவின் இத்தாலி நாட்டு இணைப்பாளர் (International Rescue Committee) சுசான்னா ஷான்பிறின (Sunanna Zanfrine). சொந்த நாட்டுச் சூழலில் வெவ்வேறு பாதுகாப்பு அச்சுறுத்தற் காரணங்களினால் இன்னொரு நாட்டுக்கு அடைக்கலம் தேடிப் புலம்பெயரும் மக்களை மேலும் அச்சுறுத்தலுக்கும் அபாயங்களுக்கும் உட்படுத்தும் செயல் இது. அவரது கணிப்பில் இந்த முகாம்கள் சிறைகளை ஒத்த வசதிகளையே கொண்டிருக்கின்றன. வசதிகள் மாத்திரமல்ல, மனிதர்கள் நடத்தப்படும் முறைகளும் அத்தகையவையே. ஏலவே மன உளைச்சல்கள், அலைந்துளைவுகளாற் பாதிக்கப்பட்டுப் பாதுகாப்புத் தேடும் மனிதர்களை இது மேலும் மோசமான நிலைக்குட் தள்ளும் நடவடிக்கை என்று அவர் கண்டித்திருக்கின்றார்.

இன்னுமொரு அம்சமும் இதில் குறிப்பிடப்படவேண்டியது. புகலிடக் கோரிக்கை தொடர்பான சட்ட உதவிக்காக சட்டவாளர்களை நாடுவதுகூட சிக்கலானது. தொலைதூர நாடொன்றில் அடைத்துவைக்கப்பட்டிருக்கும் சூழலில் இத்தாலியிலுள்ள சட்டவாளர்களோடு தொடர்பாடல்களை மேற்கொள்வது சுலபமல்ல. எனவே தமது சட்ட உரிமையை உரிய வகையிற் பிரயோகிப்பதற்குரிய வெளி இல்லாமற் செய்யப்படுகின்றது. புகலிடக் கோரிக்கையாளர்கள் தமது உண்மையான கதைகளையும் பின்னணிகளையும் முன்வைப்பதற்கான வாய்ப்பும் பறிக்கப்படுகின்றது. சட்டப் பிரதிநிதித்துவத்தினையும் இந்தத் திட்டம் வலுவிழக்கவைக்கின்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு வெளியில், அதாவது மூன்றாம் நாடுகளில் புகலிடக் கோரிக்கையாளர்களை அனுப்பும் ஐரோப்பிய நாடுகளின் முன்னெடுப்புகள் புதியவை அல்ல என்று கூறும் சர்வதேச மன்னிப்புச் சபை, அந்த முன்னெடுப்புகள் மனித உரிமை மீறல்கள் சார்ந்த மிகத் தெளிவான காரணங்களுக்காகக் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளன அல்லது தடுக்கப்பட்டுமுள்ளன. அகதிகள் முகாம் வளாகத்தைத் தாண்டி வெளியிற் செல்ல முடியாது. அவர்களுடைய புகலிட விண்ணப்ப முடிவுகள் எவ்வளவு காலம் எடுக்கும் என்பதற்கும் எந்த உத்தரவாதமும் இல்லை. ஆகவே இது மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டுவது போல சிறைச்சாலையை ஒத்த சூழல்தான்.


**உசாத்துணை:**

- The UK's former policy to send asylum seekers to Rwanda [The Migration Observatory | https://migrationobservatory.ox.ac.uk/, July 2024]
- What is the UK's plan to send asylum seekers to Rwanda [Reuters, 13.06.2024]
- Italy plans to send thousands of asylum seekers to Albania [Klassekampen, 11.09.2024]
- Asylum seekers will be treated with the same rights as in Italy [Klassekampen, 13.09.2024]
- The British are allowed to send asylum seekers to Rwanda [NRK, 19.12.2022]
- Refugees sent to Rwanda from Remote UK Island speak to BBC [ 07.06.2024]
- Joint Statement: The future EU must uphold the right to asylum in Europe [Amnesty, 09.06.*2024]*




rooban.s@thaiveedu.com




## இனவாத அரசியல்:

இலங்கை தேசமானது சிங்களச் சமூகத்தைப் பெரும்பான் மையாகவும், தமிழர், இஸ்லாமியர்கள் ஆகிய சமூகங்களைச் சிறுபான்மையாகவும் கொண்ட ஒரு சிறிய நாடாகும். சிங்கள மக்கள் அதி பெரும்பான்மையினராக இருப்பதால் இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் அவர்களின் தலைமையிலான ஆட்சியே நடைபெற்று வருகிறது. ஆட்சி நிர்வாகமானது தேர் தல் முறையை அடிப்படையாகக் கொண்டு இருப்பதால், கட் சிகள் வாக்கு வங்கியை மையமாகக் கொண்டு இயங்கி வரு கின்றன. இதன் காரணமாக தேர்தலில் வாக்குகளைப் பெறும் நோக்கத்துடன் பெரும்பான்மைச் சமூகம் சார்ந்த கட்சிகள், குறுகிய இனவாத கண்ணோட்டத்துடன் தங்களின் செயற்பா டுகளைத் திட்டமிடுகின்றன. அதனால் சிறுபான்மைச் சமூகங் கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகின்றன. குறிப்பாக இலங் கைத் தமிழ் மக்களும், மலையகத் தமிழ் மக்களும் காலத் துக்கு காலம் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். சுதந்திரம் பெற்ற உடனேயே இனவாத அரசியல்வாதிகளால், தேர்தலில் ஆதாயம் பெறும் நோக்கத்துடன் 1948 ம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ம் திகதி பிரஜா உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டு 10 லட்சம் மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப் பட்டது. குடியுரிமை பறிக்கப்பட்டதோடு அவர்களை இந்தியா விற்கு நாடு கடத்தும் ஏற்பாடுகளும் தொடங்கலாயின. 200 வருடகால மலையக மக்களின் வரலாற்றில், பாதிப்புக்கு உள் ளாகும் ஒவ்வொரு முறையும் அதிலிருந்து விடுபடுவதற்கு, இடம் பெயர்தல் அவர்களின் முதன்மைத் தெரிவாக இருப்ப தைக் காண முடிகிறது. இதில் குறிப்பிடத்தக்க இட நகர்வாக இலங்கையின் வடக்குப் பகுதியைக் குறிப்பிடலாம்.

மலையக வரலாற்றில் ஏற்பட்ட விரும்பத்தகாத நிகழ்வுகள் காரணமாக மலையக மக்கள் பல கட்டங்களாக வடக்கு நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர். 1958 முதல் 1983 வரை பல் வேறு கட்டங்களில் சிங்கள, தமிழ் இனக் கலவரங்கள் நடை பெறலாயின. தற்செயல் என்பதைத் தாண்டி திட்டமிட்டு நடத் தப்பட்ட கலவரம் காரணமாக மலையகத் தமிழர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகினர். அப்பாவித் தோட்டத் தொழிலாளர் கள் பாதிக்கப்பட்டனர். 1956-ம் ஆண்டு S.W.R.D பண்டாரநா யக்கா அவர்கள் கொண்டு வந்த தனிச் சிங்களச் சட்டத்தை தொடர்ந்து உருவான ஸ்ரீ எழுத்து, அழிப்பு போராட்டத்துடன் உருவான இனக் கலவரத்தால் மலையக மக்களும் பாதிக்கப் பட்டனர். தொடர்ந்து 1958, 1977, 1981, 1983-ம் ஆண்டுகளில் தென்னிலங்கையில், இம்மக்களை இலக்காகக் கொண்டு தோன்றிய கலவரங்கள், அவர்கள் வட இலங்கையில் அகதிக ளாகத் தஞ்சம் அடைவதற்கு வழிவகுத்தன. சிங்களக் காடை யர்களால் உயிரும் உடமையும் தாக்குதலுக்கு உள்ளான போது, உயிர் பாதுகாப்புத் தேடி வடக்கு நோக்கிய நகர்வு அச்சூழ்நிலையில் அவசியமான ஒன்றாக இருந்தது. இவை மட்டுமல்லாமல் அடர்ந்த காடுகளை அழித்து தாங்கள் இரத் தமும் வியர்வையும் சிந்தி உருவாக்கிய தோட்டங்களை அரசு டமையாக்கி, அவற்றைச் சிங்கள பெரும் பான்மை சமூகத் திற்கு பிரித்து வழங்க மேற்கொள்ளப்பட்ட இனவாத அரசின் நடவடிக்கைகள், மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக் குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வரலாயிற்று. தாங்கள் உருவாக்கிய தோட்டங்களில் தொடர்ந்து வாழ்வதற்கு, மக் கள் கடுமையான போராட்டங்களை நடத்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் பல தலைமுறைக ளாக தோட்டங்களில் வேலை செய்து வந்தவர்கள் வேலை இழந்த நிலையில், வாழ வேண்டும் என்பதற்காக வடக்கே நிரந்தரமாக குடியேற விரும்பினர்.

## மலையக மக்களின் இடப் பெயர்வு:

இந்நிலையில் மூன்று வகையில் மலையகத்தில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் வடக்கு நோக்கிச் செல்லத் தொடங்கினர். தாமாக விருப்பத்தின் பேரில் குடும்பம் குடும் பமாகச் சென்றவர்கள். வட இலங்கைத் தமிழ் அரசியல்த் தலைவர்கள், எதிர்கால அரசியல் நலன் கருதி அழைத்ததன் பேரில் சென்றவர்கள். 1977 இனப் படுகொலைக்குப் பின்னர், காந்திய இயக்கத்தால் அழைத்துச் செல்லப்பட்டு வன்னிப் பகுதியில் குடியேறியவர்கள். இவ்வாறு மலையகத்தில் இருந்து வடக்கே குடியேறிய பகுதியானது இலங்கைத் தமிழர் களின் பாரம்பரிய தாயக நிலப்பரப்பாகும். வன்னி நிலப்பரப்பு என அழைக்கப்படும் இப்பகுதியில் மன்னார், வவுனியா, கிளி நொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் உள்ளடங்கி இருந்தன. இவை 7650 கிலோமீட்டர் நிலப்பரப்பை கொண்டிருந்தன. எழு பதாம் எண்பதாம் ஆண்டுகளில் மலையகத் தொழிலாளர் கள், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிக ளில் பெருமளவில் குடியேறியதாகக் குறிப்பிடப்படுகிறது. இவர்களில் பெரும்பாலானோர் காலி, களுத்துறை, மாத் தளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலைப் பகுதிக

ளைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

வடக்கே வன்னிப் பகுதியில் குடியேறச் சென்ற மலையக மக்களின் ஆரம்பகால வாழ்க்கை சுகமானதாக அமைந்து விடவில்லை. இந்தியாவில் பல துன்பங்களை அனுபவித்த சூழ்நிலையில், இலங்கை மத்திய மலைநாட்டில் வாழ்வதற்கு பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்ததைப் போன்று, மலையக மக்கள் வன்னிப் பகுதியிலும் புதிய ஒரு வாழ்க்கையைத் தொடர போராட வேண்டியிருந்தது. 200 வருடங்களுக்கு முன்னர் தென் இந்தியாவில் இருந்து மத்திய மலை நாட்டிற்கு வந்து காடுகளை வெட்டி, உயிரைப் பணயம் வைத்து பெருந் தோட்டங்களை உருவாக்கிட காட்டிய அதே சிரமத்தை வன்னிக் காடுகளிலும் விதைத்து, வியர்வை சிந்தி, உதிரம் கொட்டி இன்றைய நிலைக்கு வந்துள்ளதைக் காண முடிகிறது. உழைப்பு ஒன்றே அவர்களின் மூலதனம். அது வன்னிப் பகுதியில் விதைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் தமிழ் தேசியவாதிகள், இடம் பெயர்ந்து வந்த மலையக மக்களின் உரிமைகளைக் கவனத்தில் கொள்ளவில்லை. தமிழ் மொழி பேசுகின்றவர்களைச் சிங்களத் தேசிய வாதம் ஒடுக்கியததைப் போன்று, குடிவந்த இம்மக்களைத் தமிழ் தேசிய வாதமும் ஒடுக்கியது எனக் கூறப்படுகிறது. தமிழ் தேசியவாதத் தலைமைகள் அவர்களது உரிமைகள் குறித்தோ, அவர்களை ஒன்றிணைப்பது குறித்தோ கவலைப் படவில்லை. அதேநேரம் இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கு கண்ணியமான வாழ்க்கையை வழங்கியதில் மிகச் சில தேசிய வாதிகளின் பங்கு முக்கியமானது என்பதையும் மறுப்பதற்கில்லை. குறிப்பாக காந்திய அமைப்பு, சர்வோதய அமைப்பு ஆகியவற்றின் பணிகள் பாராட்டத்தக்கன என்று கூறப்படுகிறது.

## எதிர் கொண்ட சவால்கள்:

வன்னிப் பகுதியில் குடியேறச் சென்ற மலையக மக்கள் அங்கு இருந்த நில உடமையாளர்களின் நிலங்களில் கூலித் தொழிலாளர்களாக வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இம்மக்களின் மலிவான கூலி உழைப்பு நிலச்சுவாந்தர்களுக்கு பெரிதும் இலாபகரமானதாக அமைந்தது. அவர்களின் நெற் செய்கைக்கு கொத்தடிமைகளாக இவர்கள் பயன்படுத்தப்பட்டனர் என்ற குற்றச்சாட்டும் கூறப்பட்டு வருகிறது. இவர்கள் உள்ளூர் நிலச்சுவாந்தர்களின் காணிகளில் தினக் கூலிகளாக வேலை செய்து வந்ததுடன் மட்டுமல்லாமல், புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் நில உரிமையாளர்களின் காணிகளிலும் வேலை செய்து அதன் பாதுகாவலர்களாக இருந்து வந்துள்ளனர்.

மலையகத்தில் காடுகளை அழித்து பெருந்தோட்டங்களை உருவாக்கியமை போன்று வன்னிக் காடுகளை அழித்து கடின உழைப்பால் அவற்றைக் களனிகளாக மாற்றினார்கள். இவர்களின் இப்புதிய வாழ்க்கைச் சுகமானதாக, சுலபமானதாக அமைந்து விடவில்லை. அங்கும் மிகுந்த வலியோடு தான் வாழ்க்கையைப் புதிதாக தொடங்கவேண்டி இருந்தது. பெருமளவில் நன்செய் நிலங்கள், வயல் காணிகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. நீர்ப்பாசன வசதி குறைந்த, அல்லது இல்லாத, வானம் பார்த்த நிலத்தில் பயிர் செய்து பசியாற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். மறுபுறம் விவசாய நிலம் இல்லாத பெரும் பகுதியினர், பெரு நில உரிமையாளர்களின் காணிகளில் விவசாயக் கூலிகளாக வாழ்ந்து வரலாயினர். மேலும் இவர்களால் காடழித்து உருவாக்கப்பட்ட விவசாய பண்ணைகள் இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கும் உள்ளாகி வரும் நிலையில், வலி மிகுந்த துயரங்களையும் எதிர்நோக்கி வாழ்ந்து வருகின்றனர். வடக்கே வந்து குடியேறுங்கள் என இரு கரம் நீட்டி, தமிழ் அரசியல் வாதிகள் அழைப்பு விடுத்திருந்தனர். ஆனால் அவர்களுக்கான வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொடுப்பதில் சில பொதுநல அமைப்புகள் காட்டிய அக்கறையை, இந்த அரசியல்வாதி




கள் செய்யத் தவறிவிட்டனர் என்றே கூற வேண்டும். அரசாங்க அதிகாரிகளும் இம்மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் தயக்கம் காட்டியதாகவும் கூறப்படுகிறது.

மலையகத்தில் குடியமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் முதல் ஒரு நூற்றாண்டு காலம் அடிமை வாழ்க்கை வாழ்ந்த நிலை பின்னர் படிப்படியாக மாறத் தொடங்கியது. தொழிற்சங்கங்களின் தோற்றம், நீண்ட போராட்டங்கள், அரசியல் இயக்கங்களின் பிரவேசம், கல்வி வளர்ச்சி, எழுத்தாளர் வருகை எனப் பல வழிகளில் எழுச்சி ஏற்பட்டதைப் போன்ற ஒரு எழுச்சி, வன்னிப் பகுதியில் குடியேறிய மலையக மக்கள் இடையே உருவாகவில்லை. அவர்களின் துயர வாழ்க்கை மௌனிக்கப் பட்டதாகவேஇருந்தது.

வடக்கு நோக்கி நகர்ந்தவர்கள் அங்கு தாங்கள் மிகவும் பாது

காப்பாக வாழலாம் என்ற நம்பிக்கையுடனேயே இடம் பெயர்ந்தனர். அங்கு சக தமிழ் மக்களின் பாதுகாப்பான வளையத்திற்குள் வாழ்ந்து விடலாம் என்ற நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் இவர்கள் போரின் வன்முறையை எதிர்கொள்ளும் வகையில் கிராமங்களின் எல்லையோரப் பகுதிகளில் பெருமளவு குடியமர்த்தப்பட்டனர். உள்நாட்டு யுத்தம் நடந்து வந்த காலகட்டத்தில் தடுப்பு அரணாக இவர்கள் பயன்படுத்தப்பட்டதாக குறை கூறப்படுகிறது. இவர்களில் இளம் வயதினர் வலுக்கட்டாயமாகத் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். இதனால் உள்நாட்டு யுத்தங்களின்போது இவர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகினர் என அறியப்படுகிறது. இப்போது அப்பெருவலியினைக் கடந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் முழுவதுமாக அவ்வலியில் இருந்து விடுபடவில்லை. முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் இயக்கத்தில் இணைந்து உயிர்நீத்த மலையக இளைஞர்கள் மாவீரர்களாக இப்போதும் நினைவு கூரப்படுகிறார்கள்.

வன்னிப் பகுதிக்கு ஆரம்ப காலத்தில் இடம் பெயர்ந்தவர்கள் நிலக் கூலிகளாக மட்டுமல்லாமல் சிறு நிறுவனங்களிலும் பணி செய்து வரலாயினர். உள்நாட்டு யுத்த காலத்தில் புதைக்கப்பட்ட கண்ணி வெடிகளை அகற்றுவதற்கும் இத்தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

1983 கலவரத்தின் போது பாதிப்புக்கு உள்ளான தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் வவுனியாவில் வாழ்ந்து வந்த இலங்கைத் தமிழர்களில் ஒரு பகுதியினர், தமிழகம் நோக்கி அகதிகளாக சென்றபோது வன்னிப் பகுதி மலையகத் தமிழர்களும் உயிர் பயத்தில் படகுகள் வழியாக தமிழகம் சென்றனர். தமிழகத்திற்குச் சென்ற மலையகத் தமிழர்களில் ஒரு பகுதியினர் தமிழகத்தில் தங்கி விட்டனர். அவ்வாறு நிரந்தரப் புகலிடம் தேடித், தமிழக முகாம்களில் தங்கிவிட்டவர்கள் சுமார் 30000 பேர் எனவும் கூறப்படுகிறது. மற்றவர்கள் தாயகம் திரும்பி, விட்டுச் சென்ற வன நிலங்களில் வீடுகள் அமைத்து வன்னிப் பகுதியிலேயே வாழத் தொடங்கிவிட்டனர்.

ஆரம்ப காலகட்டங்களில் வன்னிப் பகுதியில் குடியேறிய மக்களுக்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையே சுமுகமான உறவு இருக்கவில்லை என்றும், அரசின் உயர் அதிகாரிகள் பாரபட்சமாக நடந்து கொண்டதாகவும் கூறப்படுகிறது. அவர்களுக்கு வயல் நிலங்களை வழங்கிட முன்வராததுடன், போதிய நீர்ப்பாசன வசதிகளும் செய்து கொடுக்கப்படவில்லை என்றும் அறியப்படுகிறது.

## இன்றைய நிலைமை:

வன்னிப் பகுதியில் குடியேறிய மலையக மக்கள் 50 வருடங்களைக் கடந்துவிட்ட நிலையில் தற்போது அப்பகுதியிலேயே நிலை கொண்டு விட்டனர். பாரதிபுரம், கணேசபுரம், சிவபுரம், கற்பகபுரம், சமயபுரம், மணிபுரம் என ஏராளமான மலையக குடியேற்றங்கள் வன்னிப் பகுதியில் உருவாகி உள்ளன. மலையகத்தில் காணி உரிமை இல்லாமல் 10 அடி லயன் வீடுகளில் போதிய வசதிகள் இல்லாமல் வாழ்ந்து வந்த ஒரு சமூகத்தில் குறிப்பிடக்கூடிய அளவினர் இரண்டு ஏக்கர் காணிகளைப் பெற்று சொந்த வீடுகளில் வசித்து வரும் நிலை, வன்னிப் பகுதியில் உருவாகி இருப்பது மலையக மக்களின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். அண்மையில் இலங்கைக்குச் சென்றிருந்தபோது இக்குடியிருப்புகளை நேரில் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். காணி உரிமை, சொந்த வீடு என்பன மலையக மக்களின் வரலாற்றுக் கனவாகும். இன்றைய மலையகத்தில் அவை பேசு பொருளாக இருந்து வரும் நிலையில், வன்னிப் பகுதியில் கொஞ்சம் கொஞ்சமாக அம்மக்கள் அதனை அடைந்து வருவது பெருமைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான குடியேற்றங்களில் காணி உரிமை உள்ளது எனக் கூறப்பட்ட போதும் அவை பூரணமாக அம்மக்களின் உடமையாக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. இவ்வாறு மலையக மக்கள் பெற்றுள்ள காணிகள் ‘அனுமதிக் காணி’ என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரசு ஆவணங்களிலும் ‘Permit Land’ என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. உரிமைக் காணி என்று வழங்கப்பட்டால் மட்டுமே அவர்கள் சட்ட பூர்வமான, பூரண உரிமையாளர்களாகக் கருதப்படுவர். உரிமைக் காணி என்ற சான்றிதழை மிகச் சிலர் மட்டுமே பெற்றுள்ளனர். பெரும்பாலானோர் அனுமதிக் காணி என்ற சான்றிதழ் பெற்றவர்களாக உள்ளனர். இந்நிலையில் அனைவரும் உரிமைக் காணி சான்றிதழ் பெற விரைந்து நடவடிக்கை எடுக்க, அரசும் அரசு அதிகாரிகளும் முன்வரவேண்டும்.

இவ்வாறு காணி, வீடு என உரிமையுடன் இம்மக்கள் வாழ்ந்த போதும் அவர்கள் போதுமான வருமானம் இன்றி பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். அவர்கள் இருக்கும் நிலத்தில் போதிய வருமானம் கிடைப்பதில்லை. இதனால் வெளியில் கூலி வேலைக்குச் சென்று வருகின்றனர். அதிலும் போதிய வருமானம் கிடைப்பதில்லை. சில வீட்டுப் பெண்கள், ஆடை தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வருகின்றனர். அரசாங்கத்தின் இனவாத அணுகுமுறை காரணமாக இப்பகுதியில் தொழிற்சாலை வசதிகளோ, பொருளாதாரத் திட்டங்களோ ஏற்படவில்லை. மேலும் போதிய வருமானம் இன்மையால் குழந்தைகளைப் படிக்க வைப்பதில் சிரமங்களை அனுபவிக்கின்றனர். குறிப்பாக மாணவர்களுக்குத் தேவையான படிப்பு உபகரணங்கள் வாங்க வழி இன்றி சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் மதுவுக்கு அடிமையாகி இருப்பது போன்ற ஒரு அவல நிலை வன்னிப் பகுதி குடியேற்றங்களிலும் காணப்படுகிறது. இப்பகுதி ஆண்கள் மதுவுக்கு அடிமையாகி இருப்பதால் குடும்ப வருமானம் வீணடிக்கப்படுகிறது. அதன் விளைவாக குழந்தைகளின் படிப்பும் பாதிக்கப்படுகிறது. குடும்பப் பெண்களும் பெரும் இன்னல்களுக்கு ஆளாகின்றனர். மது அருந்துதல் சமூகச் சீரழிவுக்கு காரணமாகிவிடும் என்பதால் இதனைத் தடுத்து நிறுத்த வழி காண வேண்டியது மிகவும் அவசியமாகும்.

வடக்கில் குடியேறிய மலையக மக்களின் பேச்சு, மொழி, நடை, உடை, பாவனை, கலை, கலாசாரம் என்பன இலங்கைத் தமிழர்களில் இருந்து முற்றிலும் மாறுபட்டு இருப்பதால் இவர்கள் சமமாக, சமத்துவமாக நடத்தப்படவில்லை என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது. இதன் தொடர்ச்சியாக வன்னிப் பகுதி, மலையக மக்கள் ஒரு குழப்பமான அடையாளத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். அதாவது சற்று கூர்ந்து கவனித்தால் பிறக்கும் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ் போன்ற ஆவணங்களில் இலங்கைத் தமிழர் என்றே குறிப்பிட

விரும்பி, அதனை நடைமுறைப்படுத்தியும் வருகின்றனர். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் அவர்கள் மலையகத் தமிழர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். இந்தியத் தமிழர் என்ற அடையாளத்தை விட இலங்கைத் தமிழர் என்ற அடையாளம் தங்களுக்குப் பாதுகாப்புத் தரும் என்ற நம்பிக்கை இதற்கு காரணமாக இருக்கலாம்.

வன்னிப் பகுதி மலையக மக்களுக்கும், வன்னிப் பகுதி இலங்கைத் தமிழ் மக்களுக்குமான முரண் இன்றைய காலகட்டத்தில் சற்று குறைவாகவே காணப்படுகிறது. அதனால் அதனடிப்படையில் இரு சமூகமும் ஒன்றாகிவிட்டது என்று கூறுவதற்கில்லை. இரண்டு பகுதியினருக்குமான இடைவெளி இருந்துகொண்டேதான் இருக்கிறது. வன்னிப் பகுதியில் மலையக மக்களின் குடியிருப்புகள் தனியாக அடையாளப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இரு சமூகமும் ஒரே மதத்தைப் பின்பற்றி ஒரே மொழியைப் பேசி வந்த போதும் திருமண உறவில் இவர்களுக்கிடையே இணைந்த உறவைக் காண இயலாது. விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் காதல் திருமணம் இரு சமூகங்களுக்கு இடையே நடந்த போதும், தமிழர் என்ற நேர்கோட்டில் திருமண பந்தங்கள் நடைபெறுவதில்லை. வன்னியில் மலையகச் சமூக மக்கள் தனியொரு இனமாகவே வாழ்ந்து வருகின்றனர்.

வன்னிப் பகுதி மலையக மக்கள் முன்பு மலையகப் பகுதிகளில் வாழ்ந்த போது ஆட்சி நிர்வாகத்தில் குறிப்பாக உள்ளூராட்சி நிர்வாகங்களில் எந்த விதமான உரிமையையும் பெற்றிருக்கவில்லை. அவர்களின் குடியுரிமையைப் பறித்த இனவாத அரசு, அவர்கள் நிர்வாகத்தில் பங்கு பெறுவதை தடுத்தே வந்துள்ளது. இந்நிலையில் வன்னிப் பகுதியில் மலையக மக்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து காணப்படுவதால், உள்ளூர் கிராம நிர்வாகங்களிலும் பங்கு கொள்ளத் தொடங்கிவிட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்வதிலும் இவர்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அனைத்து துறைகளிலும் கொஞ்சம் கொஞ்சமாகக் கால் பதித்து வருகின்றனர். தோட்ட தொழிலாளர்களாக மலையகத்தில் வாழ்க்கையைத் தொடங்கியவர்களில் சிலர் தற்போது வன்னிப் பகுதியில் சிறு தொழில் அதிபர்களாகவும், சிறு வணிக நிறுவன உரிமையாளர்களாகவும் வளர்ந்து வருவதைக் காண முடிகிறது. சிலர் அரசு ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் இருந்து வருகின்றனர். எனினும் அரசு பதவிகளில் போதிய இடத்தைப் பெறாதிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

வன்னிப் பகுதியில் மிகவும் சிரமமான வாழ்க்கையைத் தொடங்கிய மலையக மக்கள் இன்று ஓரளவு பாதுகாப்பான வாழ்க்கையை நோக்கி பயணிப்பதைக் காண முடிகிறது. இவர்களின் வாழ்க்கை மேலும் மேம்பட, அரசும், அரசாங்க அதிகாரிகளும் பாரபட்சம் பாராது செயற்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.



jeyasingh@thaiveedu.com





# எதிர்காலத்தைப் பொறுப்பேற்க இளைஞர்களுக்கு அதிகாரம் அளித்தல் 2

- தேவப்பிரியா

கடந்த செப்டம்பர் 21 அன்று இலங்கை ஜனநாயக சோச லிசக் குடியரசின் ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலில் இறைமையுள்ள இலங்கை மக்கள் வாக்களித்தார் கள். இதன்போது முதன்முறையாக ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தவர்களின் தொகையானது கருத்தில் கொள்ளப் பட வேண்டிய ஒரு தொகையாக இருந்தமை குறிப்பிடத் ததக்கது. இந்தத் தேர்தலில் மட்டுமல்லாமல் ஒவ்வொரு தேர்தலிலும் புதிதாக வாக்களிக்கத் தகுதி பெற்றவர்களின் தொகை குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகின்றது வழமை யானதுடன் தவிர்க்க முடியாததாகவும் அமைந்திருக்கும். தேர்தலின் முடிவுகளில் அதன் செல்வாக்கு சிறிதளவாவது இருக்கும் என்பதை நாம் எளிதில் புறக்கணிக்க முடியாது. இதில் கருத்திலெடுக்கப்படாத விடயம் எதுவெனில் முதன் முதலில் வாக்களிப்புக்குத் தகுதிபெற்று வாக்களிப்பவர்கள் (கடந்த தேர்தலின் பின்னர் 18 வயது நிரம்பியவர்கள்) தமது இறைமை மற்றும் வாக்களிப்பதன் முக்கியத்துவம் எதையும் அறிந்துகொள்ளாமலேயே வாக்களிக்கும் வாக்காளர்களாக மாறுகின்றார்கள் என்பதுதான். இவர்களில் பெரும்பான்மை யானவர்கள் முதல் அனுபவத்தின் நுகர்வின்பத்திற்காக தவறாமல் வாக்களிக்கிறார்கள் என்பதையும் சேர்த்தே இவ் விடயத்தை அணுக வேண்டியுள்ளது.

அதுவரை காலமும் பாடசாலை மற்றும் தனியார் வகுப்பு களின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் சமூக ஊடக பொழுது போக்குகள், களியாட்டங்கள் தவிர அரசியல் மற்றும் தேர்தல் தொடர்பில் பெரிதும் தெரியாத, தெரிந்துகொள்ள அனும திக்காத வாழ்க்கைச் சூழலில் வாழ நேர்ந்தவர்கள், திடீரென நாட்டின் ஆளுகை அதிகாரம் கொண்டவர்களைத் தேர்ந் தெடுக்கும் இறைமையைப் பிரயோகிக்கும் கடமையை ஆற்ற வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்படுகிறார்கள். இந்த சூழ்நிலை இளைஞர்களுக்கு, குறிப்பாக மாணவர்களுக்கு ஏற்படுகிறது. பிரதிநிதித்துவ ஜனநாயக அமைப்பு மற்றும் ஜனநாயக ஆட்சி முறையின் விழுமியங்கள், அதன் பொறுப்பு மற்றும் வகைகூறல், வாக்களிப்பதன் முக்கியத்துவம் எதை யும் அறிந்துகொள்ளாமலேயே அவர்களின் தேர்தல் மற்றும் வாக்களிப்பு அனுபவத்தை ஆரம்பிக்கின்றார்கள்.

பல பத்தாண்டுகளாக நிலவிய இந்நிலமையை மாற்றிய மைப்பதற்கான முன்னெடுப்புக்கள் 2008-ஆம் ஆண்டு வாக்கில் இலங்கையின் கல்வி நிர்வாகத்தில் கருக்கொள்ளத் தொடங்குகிறது. ஜனநாயக அமைப்பு மற்றும் ஜனநாயக ஆட்சி முறை, அதன் விழுமியங்கள் என்பவற்றுக்கு வாக்கு களைப் பயன்படுத்துதல் என்பதன் நடைமுறை அனுபவத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்கான திட்டத்தை பள்ளி அமைப்பில் அறிமுகப்படுத்த இலங்கை கல்வி அமைச்சு மேற்கொண்ட முயற்சியாக 'மாணவர் பாராளுமன்றம்' எனும் கருத்திட்டம் உருவாகியது.

பாடசாலை, வலயம், மாகாணம் மற்றும் தேசிய மட்டத்தில் உருவாக்கப்படுகின்ற இந்த மாணவர் பாரளுமன்ற திட்டத்தின் மூலம் சனநாயகம், அதன் பொறுப்புகளும் வகைகூறலும் என்பன பற்றியும் சட்டத்தின் ஆதிபத்தியம், வாக்கு, வாக் களித்தல் ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றியும் நடமுறை அறிவைப் பெறுவதற்குரிய வழிகளைத் திறந்து, உரையாடல், இணக்கப்பாடு, ஏனையோரின் கருத்துகளுக்குச் செவிமடுத் தல் மற்றும் பெரும்பாலோரின் இணக்கப்பாட்டை ஏற்றுக் கொள்ளல் போன்ற திறமைகளையும் மனப்பாங்குகளையும் வழங்கி சனநாயக பெறுமதிகள் மற்றும் பெறுமானங்கள் தொடர்பான அனுபவங்களைப் பெற்று சனநாயக ஆட்சி முறைமை என்பதனை அனுபவங்களுக்கூடாக தெளிவுபடுத் திக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பாடசாலை மாணவ மாணவியருக்கு பெற்றுக்கொடுப்பது அடிப்படை நோக்கமாக கொள்ளப்பட்டது.

இலங்கைத் தேர்தல்கள் ஆணைக்குழு இடைநிலை பாடசா லைகளில் கல்வி பயிலும் மாணவ மாணவியர்களை சனநாயகம் மற்றும் சர்வசன வாக்குரிமை ஆகிய விடயங்கள் தொடர்பாக அறிவுறுத்துவது காலத்தின் தேவைப்பாடு என்ப தைக் கருத்தில்கொண்டு அதன் மூலோபாயத் திட்டத்தில் 'மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித் திட்டத்திற்கு' பங்களிப்பு வழங்க நடவடிக்கையெடுத்துள்ளது.

இவ் வேலைத்திட்டத்தின் வாயிலாக பாடசாலை மாணவர்கள் பல்வேறான அனுபவங்களை பெற்றுக்கொள்வதோடு அவர் கள் பிரதேச மற்றும் தேசிய மட்டத்தில் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார பிரச்சினைகளைக் கலந்துரையாடி அதற்கான பல்வேறு தீர்வுகளை முன்வைத்து இணக்கப் பாட்டுக்கு வருவதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்படுகின்றது. இனங்காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, பாட



சாலை மாணவர் என்ற வகையில் ஒற்றுமையாக இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை ஒழுங்கமைத்து நடைமுறைப் படுத்துவதற்கும், அவர்களால் தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சினைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளின் கவனத்தை ஈர்க்க வைப்பதற்கும் மாணவர் பாராளுமன்றம் சந்தர்ப்பங் களை உருவாக்குகின்றது.

இளம் மாணவர் சமூகம் என்ற வகையில் அவர்களது சுய அபிமானம் மற்றும் கௌரவத்தை மதித்து, தேசியத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான நேர் மனப்பாங்குகளை உருவாக்கி அதற்குத் தேவையான வழிகாட்டலில் தேசிய ரீதி யிலான பங்களிப்பை வழங்குவதற்கு மாணவர்களுக்கு மாண வர் பாராளுமன்ற வேலைத்திட்டம் உதவியாக அமைகின்றது.

அதுபோலவே, பிரதேச மற்றும் தேசிய மட்டங்களில் மாண வர்கள் இனங்காணும் பிரச்சினைகளை அவை தொடர்பாக தேசிய மட்டத்தில் புத்திஜீவிகள் மற்றும் அதிகாரிகளுடன் திறந்த கலந்துரையாடல்களை மேற்கொள்ளவும் தேசிய, மாகாண மற்றும் பிரதேச மட்ட அபிவிருத்தி வேலைத்திட்ட ஒழுங்கமைப்பு மற்றும் கொள்கை விளக்கம் மேலும் அவ் வாறான வேலைத்திட்டம், கொள்கைத் திட்டமிடல் தொடர் பாக அக்கொள்கையை உருவாக்கியோர் மற்றும் ஒழுங்க மைத்தோர் அனைவருடனும் திறந்த உரையாடலை மேற் கொள்ளவும் மாணவர் பாராளுமன்றம் சந்தர்ப்பம் வழங்கு கின்றது என மாணவர் பாராளுமன்றம் தொடர்பில் வெளிந்த அரச சுற்றுநிருபம் தெரிவிக்கின்றது.

மாணவர் அரசியல் தொடர்பான உரையாடல்கள், செயற்பாடு களிலிருந்து விலத்தி வைக்கப்பட வேண்டும் என்பதே கட்டாயமானதாக மாறியுள்ள இன்றைய சூழ்நிலையில் பெற்றோரும் ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் மிகக் கவனமாக அரசியல் நீக்கம் செய்யப்பட்ட மாணவ மரபை உருவாக்குவதில் சிரத்தையுடன் செயற்படுகின்றனர். இந் நிலையில் காலத்தின் தேவை கருதி தொலைநோக்குடன் செயற்படுத்தப்படுகின்ற 'மாணவர் பாராளுமன்றம்' செயற் திட்டம் தொடர்பில் கல்வியல் சார்ந்த உரையாடல்களோ, கட்டுரைகளோ, நூல்களோ தமிழில் இன்னும் உருவாக வில்லை. ஆகையினால் முக்கியமான ஜனநாயக அரசியல் செயற்பாடுகளின் அடிப்படையான பாடசாலை மட்ட செயற் திட்டங்கள் தொடர்பில் அறிந்து கொள்வது அவசியமானது என்பதனால் அது தொடர்பில் சற்று விரிவாக உத்தியோக பூர்வ வழிகாட்டல் கையேட்டை அடிப்படையாக் கொண்டு விபரிக்கப்படுகிறது.

மாணவர் பாராளுமன்றம் என்பது தற்போது நடைமுறையில் உள்ள முறைமையான பாராளுமன்றத்தின் ஒரு பிரதியுரு அல்ல, மாறாக இது மாணவர் பாராளுமன்ற வேலைத்திட் டத்தின் நோக்கங்களைப் பரந்துபட்ட வகையில் அடைவதற் கும் செயல்ரீதியான அனுபவங்களை வளர்த்துக்கொள்வதற் கும் எடுக்கப்படும் ஒரு முயற்சியாகும்.

மாணவர் பாராளுமன்றங்களைத் தாபித்தல், நடைமுறைப் படுத்தல், வலய மாணவர் பாராளுமன்றத்துக்காக மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல் ஆகிய பொறுப்புக்கள் வலய மற்றும் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களின் நேரடி வழிகாட்டலின் கீழ் அதிபர்களைச்சாரும். மாகாண / வலய மாணவர் பாராளுமன்றத்தைத் தாபித்தல், நடைமுறைப் படுத்துதல், தேசிய பாராளுமன்றத்துக்கு மாணவர் பிரதிநிதி களைத் தெரிவு செய்தல் ஆகிய பொறுப்புக்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்களைச் சாரும். இவ்வனைத்து பணிகளும் மாகாண கல்விப் பணிப்பாளரின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பின் கீழ் நடைபெறும்.

## மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டத்தின் குறிக்கோள்களாவன:

- சனநாயகத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு தொடர்பான பரந்த புரிந்துணர்வை வழங்குதல்.
- தேசிய கல்வி பொது நோக்கங்கள் மற்றும் பொது தேர்ச்சிகளை அடைந்து கொள்வதற்கு தொழிற்பாட்டுச் சந்தர்ப்பங்களை வகுத்தல்.
- கற்றறிந்த பாடங்கள் மற்றும் மறுசீரமைப்பு ஆணைக்குழு வில் அறிக்கை பரிந்துரைகளுக்கமைய அமைதி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய நிகழ்சித் திட்டமொன்றைப் பாடசாலை கட்டமைப்பினுள் நடை முறைப்படுத்தல்.
- வெவ்வேறு மக்களினங்களுக்கும் சமயக் குழுவினருக்கும்

இடையே கூட்டுணர்வு, சகவாழ்வு, சகோதரத்துவம், புரிந்துணர்வு ஆகியவற்றை விருத்தி செய்து சமூக ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்கும் முரண்பாடு தீர்த்தலுக்கும் வழி கோலல்.

- பிரதேச மற்றும் தேசிய அபிவிருத்தி நோக்கங்களை மையமாகக் கொண்டு தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிகளுக்கு மாணவர்களை நேரடியாக பங்குகொள்ளச் செய்தல்.
- பாடசாலை மாணவரின் தலைமைத்துவத் திறன்களை விருத்தி செய்தல்.
- குடியுரிமைக் கல்வி விடயத்தின் மூலம் நியாயமாகவும் செயன்முறை அடிப்படையிலும் பாடசாலை சமூகத்தினுள் விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தேர்ச்சிகளை மிகவும் பயனுள்ளதாகவும், தொழிற்பாட்டு ரீதியாகவும் மேற்கொள்ளல்.

இங்கு சனநயாகத்தின் அடிப்படை எண்ணக்கருக்கள் அவற்றின் பயன்பாடு தொடர்பாக கீழே காட்டப்பட்டுள்ள பணிகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவின் ஒத்துழைப்பு கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டது.

- சனநயாகம் மற்றும் சர்வஜன வாக்குரிமை தொடர்பாக அறிவுறுத்துதல்.
- பாடசாலை மாணவர் பாராளுமன்றத்திற்கு மாணவ பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தல் பின்வருமாறு மேற்கொள்ளப்படும்
  - வேட்புமனுக் கோரல்
  - வாக்கெடுப்பை நடாத்துதல்
  - வாக்குகளை எண்ணலும், மாணவ பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தலும்

### மாணவர் பாராளுமன்றம்:

- மாணவர் பாராளுமன்றம் நான்கு மட்டங்களைக் கொண்டது.
- பாடசாலை மட்டத்தில் தாபிக்கப்படும் 'பாடசாலை மாணவர் பாராளுமன்றம்
- வலயக் கல்வி மட்டத்தில் தாபிக்கப்படும் 'வலய மாணவர் பாராளுமன்றம்'
- மாகாண மட்டத்தில் தாபிக்கப்படும் 'மாகாண மாணவர் பாராளுமன்றம்
- தேசிய மட்டத்தில் தாபிக்கப்படும் 'தேசிய மாணவர் பாராளுமன்றம்.

### பாடசாலை மாணவர் பாராளுமன்றம்:

- 1.1. ஒவ்வொரு பாடசாலை மாணவர் பாராளுமன்றமும் குறித்த பாடசாலையின் பெயரினால் அழைக்கப்படும். நாட்டின் சகல வாசகரு 1AB, 1C மற்றும் வகை 2 பாடசாலைகளின் 6 – 13-ஆந் தர மாணவர்களில் இருந்து தெரிவு செய்யப்படும் மாணவ பிரதிநிதிகளைக் கொண்டு, பாடசாலை மாணவர் பாராளுமன்றம் தாபிக்கப்படும்.
- 1.2. பாடசாலை கல்வி ஆண்டின் முதலாம் தவணைக்குள் பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தைத் தாபித்து முடித்தல் வேண்டும்.
- 1.3. பாடசாலை மாணவர் பாராளுமன்ற அமர்வுகள் குறைந்த பட்சம் ஒரு மாதத்தில் ஒரு தடவையேனும் நடத்தப்படல் வேண்டும்.
- 1.4. ஒவ்வொரு மாதத்திலும் அமைச்சரவை, பிரதமரின் தலைமையிலும், ஆலோசனைச் செயற்குழு குறித்த அமைச்சரின் தலைமையிலும் கூடுதல் வேண்டும்.
- 1.5. பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம் பதவி பாடசாலை அதிபரைச் சாரும். பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி) பதவிக்காக, பாடசாலையில் குடியியற்கல்விப் பாடத்திற்குப் பொறுப்பான ஆசிரியரும் பிரதிச் செயலாளர் நாயகம் (நிர்வாகம்) பதவிக்காக, சமூக ஒருமைப்பாட்டு மற்றும் சமாதானக் கல்வி இணைப்பாக்க ஆசிரியரும் அதிபரால் நியமிக்கப்படல் வேண்டும். பிரதிச் செயலாளர் நாயகம் (ஒழுக்கக் கட்டுப்பாடு) பதவிக்குப் பொருத்தமான ஓர் ஆசிரியர் அதிபரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.
- 1.6. பாடசாலை மாணவர் பாராளுமன்றத்துக்காக பிரதிநிதிகளைத் தெரிவு செய்து நியமிக்கும்போது, அந்தந்தப் பாடசாலையில் 6-13 தரங்களைச் சேர்ந்த மாணவர் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்டு தாபிக்கப்படும். அது கீழே அட்டவணையில் குறித்துள்ளவாறு அமையும்.

| தரம் 6–13 வரையிலான மாணவர் தொகை | தேர்தல் மூலம் தெரிவு செய்துகொள்ள வேண்டிய வாசகர் தொகை | | |
|---|---|---|---|
| | தரம் 6 – 9 | தரம் 10 – 13 | மொத்தம் |
| 2500 இற்கு மேல் | 60 | 90 | 150 |
| 1501 - 2500 | 40 | 80 | 120 |
| 501 - 1500 | 30 | 65 | 95 |
| 151 - 500 | 20 | 40 | 60 |
| 150 இற்கு குறைய | 15 | 30 | 45 |
| மொத்த மாணவர் தொகை 45-இலும் குறைவான பாடசாலைகளில் உள்ள மாணவர்கள் அனைவரும் பாடசாலை மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆவதோடு பிரதான பதவிகளுக்காக வேட்புமனு கோரி, தேர்தல் நடத்தி அதிகப்படியான வாக்கு பெற்றோரைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும். | | | |

- 1.7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் மாணவர்களின் எண்ணிக்கை இல்லாத பாடசாலைகளில், அந்த மாணவரிடத்தே தெரிவு செய்யப்படுகின்ற விகிதாசாரத்தினை மாற்றிக் கொள்வதற்கு வாய்ப்பு உள்ளது. அதாவது 6 - 9 தெரிவு செய்கின்ற மாணவர் எண்ணிக்கையை 10 - 13 தரங்களிலிருந்தும் 10 - 13 தரங்களிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற மாணவர் எண்ணிக்கையை 6 - 9 தரங்களிலிருந்தும் தெரிவுசெய்ய முடியும். அவ்வாறு செய்கின்ற போது 10 - 13 அல்லது 10 - 11 மாணவர்களுக்கு கூடுதல் வாய்ப்பு கிடைக்கப்பெறும் வகையில் தயாரித்துக் கொள்வது மிகவும் அவசியம்.
- 1.8. இந்த மாணவர் எண்ணிக்கையில் வேட்புமனு கோருகையிலும் தேர்தலில் போட்டியிடுகின்ற போதும் அந்தந்த

மாணவர்களது தரக் குழுக்களில் வேறுபாடுகள் காணப் படினும் பாராளுமன்றத்திற்குத்ளு தெரிவு செய்யப்படு கின்ற மொத்த பிரதிநிதிகளது எண்ணிக்கை (அந்தந்த பாடசாலை மாணவர்களது எண்ணிக்கையின் படி) எந்த வகையிலும் மாற்றப்படக் கூடாது.

- 1.9. மாணவர் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி கிடையாது. ஒட்டுமொத்த பிரதிநிதிகளும் சமமாகப் பகிரப்படும் வகை யில் ஒருவருக்கொருவர் முகம் நோக்கியவாறு அமர்வதற் கும் ஏற்றவாறு ஆசனங்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.
- 1.10. இது முற்றுமுழுதாக ஒரு கற்றல் கருமமாதலால், சபை அமர்வுகளின்போது, கல்வித் துறைக்கு அப்பாற்பட் டோரை அதிதிகளாக அழைப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.

### பாடசாலை மாணவர் மன்றத்தின் கட்டமைப்பு:

- 2.1. நிறைவேற்றுச்சபை
  - செயலாளர் நாயகம் (அதிபர்)
  - பிரதிச் செயலாளர் நாயகம் (அபிவிருத்தி)
  - பிரதிச் செயலாளர் நாயம் (நிர்வாகம்)
  - பிரதிச் செயலாளர் நாயகம் (ஒழுக்கம்)

- 2.2. பாடசாலை மாணவர் பாராளுமன்ற அமைப்பு
  - சபாநாயகர்
  - பிரதமர்
  - சபை முதல்வர்
  - பிரதிச் சபாநாயகர்
  - பிரதிக் குழுக்களின் தலைவர்
  - அமைச்சர்கள் 10 பேர்
  - பிரதி அமைச்சர்கள் 10 பேர்
  - ஆலோசனைக் குழுக்கள் பத்து

### பாடசாலை மாணவர் பாராளுமன்ற அமைச்சுக்கள்:

- 3.1. பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தின் அமைச்சுக் கள் பத்து ஆகும்.
  - மாணவர் ஒழுக்க மேம்பாடு மற்றும் மாணவர் நலன்புரி அமைச்சு
  - மாணவர் திறன்கள் மற்றும் புத்தாக்க அலுவல்கள் அமைச்சு
  - பாடசாலைகளுக்கிடையே நட்புறவைக் கட்டியெழுப்பும் மற்றும் விருத்தி செய்யும் அமைச்சு
  - கல்வி, மனிதவள அபிவிருத்தி மற்றும் தகவல் தொடர் பாடல் அமைச்சு
  - பண்பாட்டு, சமய அலுவல்கள் மற்றும் விழுமிய மேம்பாட்டு அமைச்சு
  - சமூக நல்லிணக்கம் மற்றும் மாணவர் பாதுகாப்பு நடவ டிக்கைகள் அமைச்சு
  - சமுதாயத் தொடர்பு அபிவிருத்தி மற்றும் சமுதாய சேவை கள் அமைச்சு
  - சுகாதாரம், போஷாக்கு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு
  - விவசாய மற்றும் சூழல் அபிவிருத்தி அமைச்சு
  - பௌதிக வள அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத் துவ அமைச்சு
- 3.2. பாடசாலையின் தேவைக்கேற்ப அமைச்சுகளை ஒன்றிணைத்து அமைத்துக்கொள்ளலாம்
- 3.3. இந்த பத்து மாணவர் அமைச்சிற்கு மேலதிகமாக ஜனநாயகம் மற்றும் நல்லாட்சி அலுவல்கள் அமைச்சு, மாணவர் பாராளுமன்றத்தின் பிரதமருக்கு உத்தியோக பூர்வமாக ஒப்படைக்கப்படும்.
- 3.4. அந்த அமைச்சுப் பதவிக்கு மேலதிகமாக மாணவர் பாராளுமன்றத்தின் பிரதமர் அப்பாராளுமன்றத்தின் நிதிச் சபையின் செயலாளராகவும் கடமைகளை ஆற்றுவார்.

### ஆலோசனைச் செயற்குழு:

- 4.1. பத்து அமைச்சுக்களின் பெயரிலேயே 10 ஆலோச னைச் செயற்குழுக்கள் செயற்படும்.
- 4.2. பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தில் பதவிகளை வகிக்காத ஏனைய உறுப்பினர்கள் அவர்களது திறமை களை அடிப்படையாகக் கொண்டு, அந்தந்த ஆலோச னைச் செயற்குழுக்களுக்கு அதிபரை முதன்மையாகக் கொண்ட ஒரு குழுவினாலேயே நியமிக்கப்பட வேண்டும்.

### பாடசாலையின் ஏனைய மாணவர்களின் செயல்ரீதியான பங்களிப்பு:

- 5.1. அமைச்சுக்களின் செயலூக்கமுள்ள செயற்பாட்டுக் காக பாடசாலை மாணவ மாணவியரை அவர்களது விருப் பின் பேரில் அல்லது பாடசாலையின் விருப்பப்படி, பொருத்தமான முறைகளைக் கையாண்டு, குறித்த பத்து வேலைத் திட்டங்களுக்காகப் பிரித்து வேறாக்குதல் வேண்டும்.
- 5.2. மாணவர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பிரேரணைகளையும் மற்றும் அந்தந்த அமைச்சுக்களிடம் ஒப்படைக்கப்படும் பணிகளையும் முறையாகச் செயற் படுத்தும் பொறுப்பு அந்தந்த திட்டங்களுக்குரிய குழு வைச் சாரும்.
- 5.3. பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முறைமையான வகையில் பாடசாலையில் நடைமுறைப் படுத்தவெனப் பிரேரிக்கும் வேலைத்திட்டங்களை, அந்தந்த அமைச்சின்பால் வழிப்படுத்திச் செயலுருப்படுத்த வேண்டும்.

### பாடசாலையின் சகல ஆசிரியர்களதும் செயல்ரீதியான பங்களிப்பு:

- 6.1. பாடசாலை ஆசிரியர் குழுமத்தின் ஒவ்வொரு உறுப் பினருக்கும் தாம் கற்பிக்கும் பாடம், தமது சிறப்பாற்றல் கள், திறன்கள், விசேட துறைகள், பாடசாலையில் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புக்கள் ஆகியவற்றிற்கு அமைய தமது விருப்பின் பேரில் இவ்வொவ்வொரு அமைச்சுக்க



ளுக்கான வேலைத்திட்டங்களைப் பிரித்துப் பொறுப்பு களை ஒப்படைத்தல் வேண்டும்.

- 6.2. அவ்வாசிரியர் குழுவினர் குறித்த வேலைத்திட்டங் களின் ஆலோசனைக் குழுவாகச் செயற்படுவர். அவர்கள் தமது ஆசிரியர் செயலடைவுப் பத்திரத்தில் இணை விடயப் பரப்பின் கீழ் தமது பங்களிப்பைக் குறிப்பிடுதல் வேண்டும்.

## பாடசாலை மாணவர் பாராளுமன்றத்திற்கு, மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தல்:

- சம்பிரதாய தலைமைத்துவத்திற்கு புறம்பாக திறமைகளை வெளிக்காட்டுகின்ற மாணவர்களையும் உள்ளீர்க்கும் வகையிலான பொருத்தமான நியமங்களை உள்ளடக்கி யதாக வேட்புமனு பட்டியலினைப் பாடசாலையின் விருப் பின் பேரில் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். அதற்க மைய பாடசாலை மாணவர் பாராளுமன்றத்துக்காக மாணவர் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வதற்காக 6 – 13-ஆந் தர மாணவ மாணவியரிடமிருந்து வேட்பு மனு கோரல் விளம்பரத்தினைப் பாடசாலை விளம்பரப் பல கையில் காட்சிப்படுத்த வேண்டும். வேட்புமனுப் பத்திரங் கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியையும் நேரத் தையும் அதில் அறிவித்தல் வேண்டும்.
- பாடசாலை விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தியதன் பின்னர் வேட்புமனு தாக்கல் செய்வதற்காக முன்வரும் மாணவர்கள் அந்த வேட்புமனு பத்திரத்தை தமது கையெழுத்தினால் பிரதிசெய்து பூரணப்படுத்தி சமர்ப்பித் தல் வேண்டும்.
- தாக்கல் செய்யப்படும் வேட்புமனுப்பத்திரங்களைப் பொறுப் பேற்பதற்காக, ஐந்து பேரடங்கிய வேட்புமனுக் குழு வொன்றினை அதிபர் பின்வருமாறு பெயரிடுதல் வேண்டும்.
  - அதிபர் அல்லது சிரேஷ்ட பிரதி அதிபர்
  - பிரதி அதிபர் ஒருவர்
  - மாணவர் பாராளுமன்ற, பிரதிச் செயலாளர்களாக வர விருக்கும் மூன்று ஆசிரியர்கள்
- வேட்பு மனுப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் குறித்த நாளின் குறித்த நேரத்தின் பின்னர் எந்த வேட்புமனுப் பத்திரங்களையும் ஏற்றுக் கொள்ளலாகாது.
- மாணவர் வேட்பாளர்கள் தாக்கல் செய்த வேட்புமனுக் களைப் பரிசீலனை செய்து பாடசாலை மாணவர் பாராளு மன்றத்திற்கு உரித்தான வேட்புமனுக்களின் எண்ணிக்கை யினைத் தெரிவு செய்வது வேட்புமனுச் சபையின் கடமை யாகும்.
- வேட்புமனு குழுவினால் தெரிவு செய்யப்படும் தேர்தல் வேட்பாளர்களின் பெயர் பட்டியலை அகர வரிசைப்படி தயாரித்து தகுதியுடைய அனைத்து வேட்பாளர்களும் தேர்தல் நடவடிக்கைகளின்போது மற்றும் வேறு சந்தர்ப்பங் களின்போது செயற்படும் விதம் மற்றும் பின்பற்றவேண்டிய நெறிமுறைகள் தொடர்பாக நெறிமுறை விதிகளைத் தயாரித்து அது குறித்து அனைத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளல் வேண்டும்.
- வேட்பு மனுப்பத்திரக் கோரலை அறிவித்து ஒரு வார காலத்தினுள் வேட்பு மனுப்பத்திரங்களை ஏற்றுக்கொள் வதை நிறைவு செய்தல் வேண்டும்.
- வேட்புமனுப் பத்திரச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட, தேர்தல் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியலை அகர வரிசைப்படி ஒழுங்குபடுத்தி, இலக்கமிட்டு பாடசாலையில் காட்சிப்படுத்த வேண்டும்.
- வேட்புமனுப் பத்திரங்களை ஏற்றுக்கொண்ட பின்னர், இரண்டு வாரங்களுக்குள் பாடசாலை நடைபெறும் ஒரு தினத்தில் தேர்தலை நடத்த வேண்டும்.

## தேர்தல் பிரசார நடவடிக்கைகள்:

- பாடசாலையில் சில அறிவித்தல் பலகைகளை அமைத்து, அதில் தம்மைப் பற்றிய சுருக்க விபரங்களை காட்சிப் படுத்துவதற்கு வேட்பாளர்களாகிய மாணவர்களுக்குச்

சந்தர்ப்பம் வழங்க வேண்டும். அவ்விபரங்களைக் காட்சிப் படுத்த முன்னர், அதிபரால் நியமிக்கப்படும் பிரதிநிதி ஒருவரிடம் அவற்றைக் காட்டி, அனுமதியைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும்.

- வாக்குக் கோருவதற்கான விளம்பர உத்திகளாக, சுவ-ரொட்டிகளைக் காட்சிப்படுத்தல், துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல் போன்ற உத்திகள் பாடசாலை வளாகத் தில் மட்டுமே கையாள வேண்டுமென்பதுடன் எவ்வகை யிலும் அவை அச்சிடப்படாதவையாக இருத்தல் வேண்டும். அவ்விபரங்களைக் காட்சிப்படுத்த முன்னர், அதிபரினால் அல்லது அதிபரால் நியமிக்கப்படும் பிரதி செயலாளர் நயகத்திடம் அனுமதியைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். சுற்று நிருபத்திற்கு முரணான அல்லது கட்டுக்கடங்காத வகையில் செயற்படும் ஒவ்வெறு சந்தர்ப்பங்ளின் போதும் மாணவர் பாராளுமன்ற பிரதி செயலாளர் நயகம் (ஒழுக்கம்) தலைமையில் ஒழுக்காற்று குழுவினை முகங்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கை யினை மேற்கொள்வதற்கான பொறுப்பு மாணவர் பாராளு மன்ற செயலாளர் நயகத்தினைச் சாரும். இறுதியாக வேட்புமனுவினை இரத்து செய்யக்கூடிய நடவடிக்கை யினை மேற்கொள்ளலாம்.
- மாணவர் பாராளுமன்றித்தின் அனைத்து நடவடிக்கை களும் பாடசாலையின் பொது சட்டதிட்டங்கள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு உட்படுவதோடு பாராளுமன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும் மிக ஒழுக்கமான முறையில் மற்றும் பண்புடன் பேணுவது தொடர்பாக தேவையான சட்ட விதிமுறைகள் மாணவர் பாராளுமன்ற செயற்பாடு களுடன் இணைந்து நன்நடத்தை நெறிமுறைகளின் கீழ் பராமரிக்கப்படும் பொறுப்பு அதிபர் முதற்கொண்டு நிறைவேற்றுக்குழுவிடம் ஒப்படைக்கப்படும்.
- வேட்புமனுப் பத்திரங்களை ஒப்படைத்த பின்னர், பாட சாலையில் மாணவர் பாராளுமன்றத்துக்காக வாக்குகள் கோரும் சகல அபேட்சகர்களும் காலைக் கூட்டத்தில் அல்லது ஊடக அலகைப் பயன்படுத்தி தம்மை அறிமுகஞ் செய்து, மாணவர்களை விளிக்கச் சந்தர்ப்பம் அளிக்க லாம். இதற்காக முறையான ஒரு வேலைத்திட்டத்தை அதிபரின் விருப்பின்படி தயாரித்துக் கொள்ளலாம்.
- தேர்தல் பிரச்சாரங்களின்போது போஸ்ட்டர், துண்டு பிரசுரங்கள் போன்றவை அச்சிடுவது அல்லது அச்சிட்டு பகிர்ந்தளிப்பது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், பரிசுகளை வழங்குதல், வாக்குறுதி வழங்கலை மேற் கொள்ளக்கூடாதென்பதுடன், அவ்வாறான செயல்களில் ஈடுபடுவது வேட்புமனு நிறுத்தப்படுவது வரையிலான தண்டனைக்குரிய குற்றமாகும்
- தமது புகைப்படத்தை காட்சிப்படுத்தும் சந்தரப்பங்களு டன் கூடிய மாணவ பிரதிநிதிகள் தமது புகைப்படத்தை பாடசாலை படைப்பாற்றல் திறன் கொண்ட மாணவர்கள் மூலமாக வடிவமைக்கப்பட்டு காட்சிப்படுத்த முடியும். அந்த படைப்புகளை பாடசாலைக்கு வெளியே தனிப்பட்ட நபர்களைக் கொண்டு படைப்பதை முற்றிலும் தவிர்க் கப்பட வேண்டும். வாக்குகளைக் கோரி பகிர்ந்தளிக்கப் படும் துண்டு பிரசுரங்கள் தமது கையால் எழுதப்பட்ட பிரசுரங்களாக இருப்பதுடன் அவை எந்தவிதத்திலும் அச்சிடப்பட்டவையாக இருத்தல் கூடாது.
- தேர்தல் அறிவிக்கப்பட்டதுடன் மாணவர் பிரதிநிதிகள் தொடர்பாக பாடசாலைக்கு உரித்தான நெறிமுறை யொன்று தயாரித்துக்கொள்ளப்படும்.

## வாக்கெடுப்பு:

- தேர்தல் பற்றி அறிவிப்புச் செய்த தினத்திலிருந்து அதிபரே உத்தியோபூர்வமாக தேர்தல் ஆணையாளர் ஆவார். ஆசிரியர் குழாத்திலிருந்து தேர்தல் பணியாளர்களை நியமித்துக் கொள்வது அதிபரின் பொறுப்பாகும்.
- மாணவர் பாராளுமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக தேர்தல் ஆணைக்குழுவின் உதவியினை பெற்றுக்கொள்ள முடியும். அதற்காகப் பாடசாலை அமைந்துள்ள மாவட் டத்தின் பிரதி / உதவி தேர்தல் ஆணையாளரினை தொடர்பு கொண்டு தேவையான உதவிகளினை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.
- இலங்கையின் பொதுவான தேர்தல் பாரம்பரியத்தின்படி பாடசாலையில் பொதுவான ஓர் இடத்தில் அல்லது சில இடங்களில் தேர்தலை நடத்த வேண்டும்.
- வாக்களிப்பதற்காக ஒன்றையொன்று ஒத்த வாக்குச் சீட்டுக் களையே வாக்காளர் மாணவ மாணவியருக்கு வழங்க வேண்டும். அவ்வாக்குச் சீட்டின் இடது புறத்தே அதிபரின் பதவி முத்திரையுடன் அதிபரின் அல்லது அவரால் அனுமதி அளிக்கப்பட்ட ஓர் ஆசிரியரின் கையொப்பமும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.
- வாக்களிக்கும் இடத்தில் வேட்பாளர்களின் பெயரையும் அவர்களுக்கு உரிய இலக்கங்களையும் காட்சிப்படுத் துதல் வேண்டும்.
- பாடசாலையில் தரம் 6-க்கு மேற்பட்ட (தரம் 6 உள்ள டங்களாக) அனைத்து மாணவர்களும் வாக்களிப்பதற்கு தகுதி பெறுவதோடு பாடசாலையில் 6-13 தரங்களில் அனைத்து மாணவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமை யுண்டு.
- ஒரு மாணவருக்கு இரண்டு விருப்புகள் உரித்தாகும். இந்த இரண்டு விருப்புகளில் ஒன்று 6-9 தரங்களில் தேர்தலை போட்டியிடும் வேட்பாளருக்கும், அடுத்த விருப்பை 10-13 தரத் தொகுதியில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவருக்கும் வழங்க வேண்டும்.
- இரண்டு விருப்பு வாக்குகளும் பயன்படுத்த வேண்டியது டன் அந்த இரண்டு விருப்பு வாக்குகளும் 6-9 தரங்கள் மற்றும் 10-13 தரங்கள் இரண்டு தொகுதிகளில் இரு வேட்பாளர்களுக்கும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஒரே தொகுதிக்கு இரண்டு விருப்புகளை வழங்குதல் அல்லது ஒரு விருப்பு வாக்கை மாத்திரம் வழங்கினால் வாக்கு இரத்துச் செய்யப்படும்.

வாக்குகளை எண்ணுவதற்காக, பொதுவாக தேர்தலில் வாக்குகளை எண்ணும் முறையைப் பின்பற்றுதல் வேண்டும். வாக்களிப்பு முடிவடைந்து இறுதி முடிவு தொடர்பான அறிக்கை அதிபருக்கு சமர்பிக்கப்படவேண்டும். அறிக்கை கிடைத்தவுடன் அவரால் மாணவர் பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் பிரதிநிதிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டு காட்சிப்படுத்தப்படும்.

பாராளுமன்றத்துக்குப் பிரதான பதவிகளுக்குப் பொருத்தமான பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம், மாணவர் பாராளுமன்றத்துக்குத் தெரிவாகிய பிரதிநிதிகளுக்கு உரித்தாகும். அப்பதவிகளின் கடமைகள், பொறுப்புக்கள் பற்றிய பூரணமான அறிவூட்டல் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் செய்யப்பட வேண்டும். அந்த அறிவுறுத்தலுக்குப் பின்னர் முதலாவது பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் செயலமர்வு ஒன்றை நடத்தி பொருத்தமானவர்களைப் பெயரிட்டுக் கொள்வதற்கு மாணவர் பிரதிநிதிகளுக்கு கட்டாயமாக சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

பிரதி சபாநாயகர், பிரதமர், சபைத் தலைவர், பிரதி செயற்குழு தலைவர் போன்ற முக்கிய நான்கு பதவிகளும் மாணவர் பிரதிநிதிகளின் முன்மொழிவு வழிமொழிவுடன் தெரிவுசெய்து நியமிக்க வேண்டும்.

பிரதான பதவிகளுக்குப் பொருத்தமான பிரதிநிதிகளை முன்மொழிவு - வழிமொழிவு மூலம் நியமித்துக்கொள்ளும் சந்தர்ப்பத்தை மாணவர் பிரதிநிதிகளுக்கு முதலாவது பாராளுமன்ற அமர்வின்போது வழங்குதல் வேண்டும். யாதேனும் பதவிக்கு ஒருவருக்கு மேற்பட்டவர்களது பெயர்கள் பிரேரிக்கப்பட்டு வழிமொழியப்படுமாயின் இரகசிய வாக்கெடுப்பு நடத்தி, அவர்களுள் ஒருவரைத் தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். முதன்முதலாக சபாநாயகர் ஒருவரைத் தெரிவு செய்தல் வேண்டும். அவர் பாராளுமன்றப் பொதுச் செயலாளர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டும். சபாநாயகர் முன்னிலையில் ஏனைய உறுப்பினர்கள் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளல் வேண்டும். மற்றைய நான்கு பிரதான பதவிகளுக்குத் தெரிவாகும் பிரதிநிதிகள் அதன் பின்னர் சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டும்.

தெரிவாகிய அமைச்சர்களதும் பிரதி அமைச்சர்களதும் சத்தியப் பிரமாணம், பாடசாலைப் பிரதான கூட்டமொன்றின்போது பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் முன்னிலையில் இடம்பெறுதல் வேண்டும்.

மாணவர் பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின்போது சகல உறுபபினர்களுக்கும் ஆசனங்களை ஒதுக்கி வழங்கும் வரை சபை எல்லைக்குட்பட்ட எந்தவொரு ஆசனத்திலும் மாணவர் பாராளுமன்ற உறுப்பினர் அமரலாம். சபாநாயகரினால் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஆசனம் ஒதுக்கித் தரப்படல் வேண்டும். மாணவர் பாராளுமன்றத்தில் எதிர் கட்சி இல்லாததுடன் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒவ்வொரு உறுப்பினரும் சமமாக பிரிக்கும் வகையில் ஒருவருக்கொருவர் முகம் கொடுத்து அமரும் வகையில் இருக்கைகள் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும்.

மாதத்திற்கு ஒரு தடவை பாராளுமன்ற அமர்வுகளை நடத்துதல் வேண்டும். அவ்வாறு நடத்த முடியாத சந்தர்ப்பங்களில் தவணைக்கு ஒரு அமர்வு வீதமேனும் நடத்துதல் வேண்டும். அமர்வுக்குரிய நிறைவெண் மாணவர் பிரதிநிதிகளுள் மூன்றில் இரண்டு பகுதியினராவர்.

பாடசாலையின் எந்தவொரு மாணவனும் மாணவியும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஊடாக, மாணவர் பாராளுமன்றத்தில் கலந்துரையாடிச் செயலுருப்படுத்தத் தக்க பிரேரணைகளை எழுத்து மூலம் செயலாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கலாம். நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படும் பிரேரணைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைக்கும் சந்தர்ப்பமும் அதே பாராளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு முன்வைக்கப்படும் முன்மொழிவுகளை கருத்திற் கொண்டு குறிப்பிட்ட அமர்வின்போது கலந்துரையாடலுக்கு எடுக்கப்படும்.

சபை அமர்வின்போது முன்வைக்கப்படும் பிரேரணைகளை விவாதத்திற்கு உட்படுத்தி, திருத்தங்கள் இருப்பின் அவற்றையும் உள்ளடக்கி, நிறைவேற்றப்படும் தீர்மானங்களைச் செயலுருப்படுத்துவதற்காகக் குறித்த விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு சந்தர்ப்பம் அளித்தல் வேண்டும். அப்பிரேரணையைக், குறித்த அமைச்சின் அமைச்சர், ஆலோசனைக் குழுவினர், வேலைத்திட்டத்தின் உறுப்பினர்கள் ஆகியோரின் பங்குபற்றலுடன் செயற்படுத்தல் திட்டமொன்றினை உள்ளடக்கி, வேலைத்திட்டத்தைத் தயாரித்துப் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்து, அனுமதியைப் பெற்ற பின்னர் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தை ஒழுக்கம் மிக்கதாக நடத்திச் செல்வதற்காக, பிரதிநிதிகளுக்கு விசேட பயிற்சியையும் அனுபவங்களையும் வழங்கி ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த பாடசாலை மாணவர் பாராளுமன்ற வேலைத்திட்டத்தைப் பாடசாலையினதும் மாணவரதும் ஒட்டுமொத்த அபிவிருத்திக்காக நேர்மனப்பாங்குடன் சாத்தியமான முறையில் பயன்படுத்த முனைதல் வேண்டும்.

அவ்வகையில் இலங்கையின் மாணவர் பாராளுமன்றமானது, மாணவர்களின் கல்வி நிறுவனங்கள் மற்றும் பரந்த சமூகத்தின் நிர்வாகம் மற்றும் மேம்பாடு ஆகியவற்றில் குரல் கொடுப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு தனித்துவமான மற்றும் செல்வாக்குமிக்க அமைப்பாகும். இளைஞர்களிடையே தலைமைத்துவம், குடிமைப் பொறுப்பு மற்றும் செயலூக்கமான பங்கேற்பு ஆகியவற்றை வளர்க்கும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட மாணவர் பாராளுமன்றம், இளைஞர்கள் ஜனநாயக செயல்முறைகளில் ஈடுபடுவதற்கு ஒரு தளமாக செயற்படுகிறது.

மேலும் இதுவொரு முன்னோடி முன்முயற்சியாகும், இது ஆளுகை மற்றும் சமூக வளர்ச்சியில் இளைஞர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. அதன் பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் திட்டங்கள் மூலம், இது மாணவர்களுக்கு அதிகாரத்தை பொறுப்புடன் கையாளவும் பங்கேற்கவும் வாய்ப்பளித்து, எதிர்கால தலைவர்களை வளர்க்கிறது. அத்துடன் இச்செயற்பாடானது ஜனநாயக சமுதாயத்தை உருவாக்கப் பங்களிப்பதுடன் அது தொடர்ந்து விரிவடைந்து, இலங்கையின் இளைஞர்களின் திறனை வளர்ப்பதற்கும் தேசத்தின் எதிர்கால நல்லாட்சிக்கான முதலீட்டை உருவாக்கவும் உதவுகிறது.

thevapiriya@thaiveedu.com




ஹிஸ்புல்லாவின் தலைவர் ஹசான் நஸ்ரல்லாவைச் செப்ரெம்பர் 27 அன்று வான்தாக்குதல் மூலம் இஸ்ரேல் கொன்றுள்ளது. ஒக்ரோபர் 7, 2023-இல் ஹமாசின் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேல் தனது அட்டுழியத்தை தொடங்கியது. காசாப் பகுதியைச் சின்னாபின்னமாக்கியுள்ளது. பாடசாலைகள், வைத்தியசாலைகள், வீடுகள், தொடர்மாடிகளை



மட்டுமல்ல, மனிதர்கள், விலங்குகள், பறவைகள் அனைத்தையும் இஸ்ரேலியர் கொன்று குவித்தனர். அவற்றோடு அவர்கள் வெறியடங்கவில்லை. காசாவின் தாக்குதலை எதிர்த்தவர்களையெல்லாம் தாக்கினர். காசா மக்களுக்கு ஆதரவு கொடுத்தோர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. மேற்குகரைப் பகுதியிலிருந்து செய்திகளை வழங்கிய அல்-ஜீசிரா ஊடக நிறுவனம் 15 நிமிடங்களில் மூடப்பட்டது.

ஒக்ரோபர் 7, 2023-இன் தொடர்ச்சியாக தீவிரவாத அமைப்பின் தலைவர்கள் பலரை இஸ்ரேலியர் குறிவைத்து கொன்றனர். ஒரு நாடு ஒரு தலைவரைக் கொல்வதற்கும், ஒரு தீவிரவாத அமைப்பு ஒரு தலைவரைக் கொல்வதற்கும் வித்தியாசம் உள்ளது. அல்-கைடா அமைப்பு பலவீனமாகவிருந்தபோது அதன் தலைவர் பின்-லாடனைப் பாகிஸ்தானில் வைத்து அமெரிக்கா கொன்றது. பின்-லாடன் இறந்த பின்னரே பாகிஸ்தானுக்குத் தன் மண்ணில் இவ்வாறு ஒரு நிகழ்வு நடந்துள்ளது என்று தெரியவந்தது. தீவிரவாத அமைப்பு ஒரு தலைவரைக் கொன்றால் சர்வதேச நீதி மன்றம், விசாரணை என பல நடவடிக்கைகள் ஏற்படும். இன்று வரை இஸ்ரேலின் நடவடிக்கைகள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எடுக்கவும் முடியாத சூழல் உள்ளது. சகல மேற்கு நாடுகளும் இஸ்ரேலை ஆதரிக்கின்றன. யூத நிறுவனங்களின் ஆதரவுகளுடனயே மேற்கு நாடுகளின் அரசுகளின் கட்சிகள் இயங்குகின்றன.

1956 யூலை 11-இல் எகிப்திய இராணுவ கொமாண்டர் முஸ்ரபா ஹபீசைக் பார்சல் குண்டு வைத்து கொன்றதன் மூலம் இஸ்ரேல் தனது கணக்கை ஆரம்பித்தது. எகிப்திய அரசுக்கு மிசைல் திட்டத்துக்கு உதவி புரிந்தமைக்காக மேற்கு ஜேர்மனி விஞ்ஞானி Heinz Krug ஐ Operation Damocles நடவடிக்கை மூலமாக இஸரேல் ஜேர்மனியில் வைத்து கொலை செய்தது. இவரது உடல் இற்றைவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அதே திட்டத்தின் கீழ் எகிப்திய ரொக்கெட் உற்பத்தியகத்தில் வேலை பார்த்த ஐந்து தொழிலாளர்களையும் கடிதக் குண்டுகள் மூலம் கொன்ற இஸ்ரேல் 1988-இல் பாலஸ்தீனிய விடுதலை இயக்க துணைத் தலைவர் அபு ஜிகாட்டை ரியுனிசியாவில் வைத்து அவரது குடும்பத்தினர் முன்னிலையில் சுட்டுக் கொன்றது. அத்தோடு Gerald Bull கனடிய பொறியியலாளர் பெல்ஜியத்தில் வைத்து சதாம் குசெயின் அரசுக்கு உதவி செய்தமைக்காகக் கொல்லப்பட்டார். Fathi Shaqaqi (பாலஸ்தீனிய ஜிகாத் அமைப்பு தலைவர்) உட்பட பலரையும் இஸ்லேயர் கொன்றுள்ளனர். கடந்த வருடம் ஹெலி விபத்தில் இறந்த ஈரானிய ஜனாதிபதி, அமைச்சர் ஆகியோரின் மரணத்தின் பின்னாலும் இஸ்ரேலின்

கை இருந்துள்ளது என்ற சந்தேகம் இற்றை வரை நிலவுகிறது.

## ஹிஸ்புல்லா:

ஹிஸ்புல்லா லெபனானைத் தளமாகக் கொண்ட ஒரு சியா முஸ்லீம் தீவிரவாத அமைப்பு. இவ்வமைப்பானது அரசியல், மற்றும் ஆயுத அமைப்பாகவுள்ளது. இதன் ஆயுத அமைப்பை ஜிகாட் கவுன்சில் என அழைப்பார்கள். ஹிஸ்புல்லா அமைப்பு 1982-இல் இஸ்ரேலின் லெபனான் மீதான படையெடுப்பை எதிர்க்கும் நோக்குடன் உருவாக்கப்பட்டது. 1979-இல் ஏற்பட்ட ஈரானிய புரட்சியை மாதிரியாகக் கொண்டது. இவ்வமைப்பு ஈரானிய புரட்சித் தலைவர் அயொத்தலா கொமெய்னியுடன் மிகவும் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தது. ஈரான் கடந்த பல வருடங்களாக ஹிஸ்புல்லா அமைப்பிற்கு ஆயுத மற்றும் நிதியுதவிகளை வழங்கி வருகின்றது. Islamic Revolutionary Guard Corps (IRGC) instructors ஹிஸ்புல்லாவிற்கு ஆயுதப் பயிற்சியும் வழங்கியுள்ளனர்.

பெய்ரூத்தில் அமெரிக்கத் தூதரகக் குண்டுவைப்பு உட்பட்ட பல நடவடிக்கைகளில் ஹிஸ்புல்லா ஈடுபட்டுள்ளது. லெபனானின் உள்நாட்டு போரில் பங்குபற்றியுள்ளது. பொஸ்னியா போரில் பல ஹிஸ்புல்லா ஆதரவாளர்கள் பங்குபற்றியுள்ளனர். ஹிஸ்புல்லா, சிரிய அரசுக்கு ஆதரவாக சிரியாவில் போரில் பங்குபற்றியுள்ளது. 2008-இல் லெபனானிய அரசு ஹிஸ்புல்லாவை அங்கீகரித்துள்ளது. (Hezbollah's existence as an armed organization and guarantees its right to 'liberate or recover occupied lands') 2018-இல் நடைபெற்ற லெபனானிய பொதுத் தேர்தலில் 12 ஆசனங்களை கைப்பற்றியது. இதன் ஆதரவுக் கூட்டணி 70 ஆசனங்களைக் கைப்பற்றியது. மொத்த பாராளுமன்ற ஆசனங்கள் 128. லெபனானில் பல பகுதிகளை ஹிஸ்புல்லா தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றது. இப்பகுதிகளில் ஒரு நிழல் அரசை ஹிஸ்புல்லா நடத்துகின்றது. பெய்ரூத்தின் ஒரு பகுதி, தெற்கு லெபனான், கிழக்கு பெக்கா பள்ளத்தாக்குப் பகுதிகள் ஹிஸ்புல்லாவின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளன.

அங்கு நிர்வாக சீராக்கத்துக்காக நகர்காவலர் அமைப்பையும் ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் இஸ்ரேலின் தாக்குதலினால் அகவிகள் (Pager)மற்றும் வோக்கி டோக்கிகள் திடீரென வெடித்தன. ஹிஸ்புல்லாவின் நகர்காவலர்களே இவற்றை நிர்வாக நடவடிக்கைகளுக்காக வைத்திருந்தனர். ஹிஸ்புல்லா இராணுவத்தில் மொத்தமாக அறுபதாயிரம் படையினர் உள்ளனர். இவர்களிடம் சுமார் 150,000 - 200,000 rockets and missiles உள்ளதாக மேற்கு நாடுகளின் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஹிஸ்புல்லாவின் அமைப்பின் நஸ்ரல்லா கடந்த 32 வருடங்களாக அதன் தலைவராக உள்ளார். ஒரு ஆயுத அமைப்பை, அரசியல் அமைப்பாகவும் மாற்றி, லெபான் அரசில் பங்குதாரர்களாகவும் மாற்றிய பெருமை நஸ்ரல்லாவையே சாரும். லெபனானில் செல்வாக்கு மிக்க தலைவராக இருந்தவர். மத்திய கிழக்கு நாடுகளின் தலைவர்கள் மதிக்கும் ஒரு தலைவராக செயல்பட்டுள்ளார். அமைப்பு தொடங்கிய நாளிலிருந்து ஈரானுடன் மிக நெருக்கமான உறவை தொடர்ச்சியாகப் பேணிவந்துள்ளார். ஆயுத மற்றும் அரசியல் அமைப்புக்களைச் சமதளத்தில் பேணிவந்துள்ளார். மிகவும் சாணக்கியமிக்க தலைவரான நஸ்ரல்லா இஸ்ரேலுக்கு மிகப் பெரிய தலையிடியாகவே இருந்தது. ஹிஸ்புல்லாவின் மிக முக்கிய

### ஒக்ரோபர் 7, போரின் பின்னர் இஸ்ரேலால் கொல்லப்பட்டவர்களுள் முக்கியமானவர்கள்:

| திகதி | பெயர் | இடம் | பதவி | மூலம் |
|---|---|---|---|---|
| ஒக்ரோபர் 13 | Ali Qadhi | காசா | ஹமாஸ் கொமாண்டர் | ட்ரோன் தாக்குதல் |
| ஒக்ரோபர் 13 | Murad Abu Murad | காசா | ஹமாஸ் கொமாண்டர் | விமானத் தாக்குதல் |
| ஒக்ரோபர் 15 | Billal Al Kedra | காசா | ஹமாஸ் கொமாண்டர் | விமானத் தாக்குதல் |
| ஒக்ரோபர் 31 | Ibrahim Biari | | ஹமாஸ் கொமாண்டர் நுக்பா | விமானத் தாக்குதல் |
| டிசம்பர் 25 | Razi Mousavi | சிரியா | கொமாண்டர் IRGC's Quds Force | விமானத் தாக்குதல் |
| ஜனவரி 2 | Saleh al-Arouri | லெபனான் | ஹமாசின் அரசியல் குழு உதவித் தலைவர் | ட்ரோன் தாக்குதல் |
| ஜனவரி 6 | Wissam al-Tawil | லெபனான் | ஹிஸ்புல்லாவின் ரேடவன் தலைமை அதிகாரி Hezbollah's Radwan Force | விமானத் தாக்குதல் |
| ஜனவரி 9 | Ali Hussei n Burji | லெபனான் | கொமாண்டர் ஹிஸ்புல்லா | விமானத் தாக்குதல் |
| ஜனவரி 20 | Sadegh Omidzadeh | சிரியா | Head of the Quds Force intelligence unit in Syria | விமானத் தாக்குதல் |
| மார்ச் 10 | Marwan Issa; Ghazi Abu Tama'a | காசா | Issa was the deputy commander of Hamas' military wing, the Izz ad - Din al-Qassam Brigades. Abu Tama'a was a senior Hamas commander. | விமானத் தாக்குதல் |
| ஏப்ரல் 1 | Mohammad Reza Zahedi | சிரியா | Commander of Quds Force in Lebanon and Syria | விமானத் தாக்குதல் |
| ஏப்ரல் 9 | Mohammad Srour | லெபனான் | Hamas financer | அவரது வீட்டில் வைத்து தலையில் சுடப்பட்டார் |
| யூன் 3 | Saeed Abiyar | சிரியா | Commander in the IRGC | விமானத் தாக்குதல் |
| யூன் 11 | Taleb Abdallah | லெபனான் | Commander of Hezbollah's Nasr unit | விமானத் தாக்குதல் |
| யூன் 17 | Mohammad Mustafa Ayoub | லெபனான் | Commander in the rocket and missile department of Hezbollah's Nasr unit | விமானத் தாக்குதல் |
| யூலை 3 | Mohammed Nehme Nasser | | Commander of Hezbollah's Aziz unit | விமானத் தாக்குதல் |
| யூலை 13 | Mohammed Deif Rafa Salama | காசா | Deif was the commander of Hamas' military wing, the Izz ad-Din al-Qassam Brigades. Salama was the commander of Hamas' Khan Yunis Brigade. | விமானத் தாக்குதல் |
| யூலை 30 | Fuad Shukr | லெபனான் | Senior Hezbollah commander | விமானத் தாக்குதல் |
| யூலை 31 | Ismail Haniyeh | ஈரான் | Political leader of Hamas | குண்டு |
| செப்ரம்பர் 20 | Ibrahim Aqil | லெபனான் | Commander in Chief of Radwan Force | விமானத் தாக்குதல் |
| செப்ரம்பர் 24 | Ibrahim Qubaisi | லெபனான் | Commander of Hezbollah's Missile and Rocket unit | விமானத் தாக்குதல் |
| செப்ரம்பர் 26 | Mohammad Hussein Srour | லெபனான் | Commander of Hezbollah's Drone unit | விமானத் தாக்குதல் |
| செப்ரம்பர் 27 | Hassan Nasrallah ; Ali Karaki ; Abbas Nilforoushan | லெபனான் | Nasrallah was the Secretary - General of Hezbollah. Karaki was the commander of the Southern Front of Hezbollah. Nilforoushan was the Commander of Quds Force in Lebanon. | விமானத் தாக்குதல் |

நோக்கங்களில் ஒன்று இஸ்ரேல் என்ற நாடு இல்லாமல் செய்வதாகும். தெற்கு லெபனானில் 18வருடங்களாகத் தொடர்ச்சியாக நின்று நிலைத்துச் செயல்பட்ட இஸ்ரேலியப் படை

களை 2002-ஆம் ஆண்டில் நஸ்ரல்லா வெளியேற்றினார். இவரது மகன் ஹடி1997-இல் இஸ்ரேலிய படைகளுடன் போர் புரிந்தபோது இறந்தார்.

ஒன்பது சகோதரர்களுடன் பெய்ருத்தின் வடக்கு பகுதியில் 1960 ஓகஸ்ட் 1960-இல் பிறந்த நஸ்ரல்லா தனது 16வயதில் ஈரான் சென்று முஸ்லீம் மதம் பற்றிய கல்வியைப் பெற்றார். 1982-இல் லெபனானில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக




ஈரானிய Iranian Revolutionary Guard members போரிட்டனர். பின்னர் அவர்களின் முயற்சியில் ஹிஸ்புல்லா அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. Party of God என்ற பொருள்படும். இதன் ஆரம்பத்தலைவரான 39 வயதான Sayyed Abbas Musawi 1992-இல் இஸ்ரேலிய வான் தாக்குதலுக்குள்ளாகிக் கொல்லப்பட்டார். பின்னர் ஹிஸ்புல்லா அமைப்பினர் நஸ்ரல்லாவைத் தலைவராக தேர்வு செய்தனர் (secretary-general) கொமெய்னி போன்றே இவரும் America will remain the dreadful enemy and Israel a cancerous growth that should be uprooted கொள்கையை உடையவராக இறுதிவரை செயற்பட்டார். ஏழு பேர் கொண்ட Shura Council இன் தலைவராகவும் அதனுடைய ஐந்து உப அமைப்புக்களை மேற்பார்வை செய்பவராகவும், அரசியல் அமைப்பு, ஜிகாட் அமைப்பு, பாராளுமன்ற அமைப்பு நீதி அமைப்பு உயர் மட்ட நிர்வாக அமைப்பு ஆகியவற்றின் தலைவராகவும் செயலாற்றினார்.

2020-இல் ஈரானிய இராணுவ ஜெனரல் Qassem Soleimani-யைக் அமெரிக்கா கொன்றதன் பின்னர் நஸ்ரல்லா மத்திய கிழக்கின் முக்கிய தலைவரானார். ஹிஸ்புல்லாவின் அடுத்த மட்டத் தலைவர்கள் நஸ்ரல்லா அளவிற்குத் திறமை கொண்டவர்கள் எனக் கூறமுடியாது. Sayed Naim Qassem நீண்ட காலமாக ஹிஸ்புல்லாவின் உதவித் தலைவராகவுள்ளார். Abu Ali சுனைய, Bader unit தலைவராகவுள்ளார். இவர்களில் ஒருவர் அடுத்த தலைவராகலாம். நஸ்ரல்லா கொலை செய்யப்பட்டபோது இஸ்ரேலிய பிரதமர் Benjamin Netanyahu நியுயோர்க் நகரத்திலிருந்தார். அங்கிருந்தே லெபனானைத் தாக்குமாறு உத்தரவிட்டார். காசாவைப் போன்று முதலில் வான் தாக்குதல்கள். நகரங்கள் தரைமட்டமாக்கப்பட்ட பின்னர், தரைவழித் தாக்குதல்களை இஸ்ரேல் தொடரும்.

இஸ்ரேல் உருவாக்கப்பட்ட பின்னர் இஸ்ரேல் தனது எல்லைப் பிரதேச எதிரிகளைப் படிப்படியாக கட்டுப்படுத்தியுள்ளது. முதலில் எகிப்து, பின்னர் ஜோர்டான், தற்போதைய தாக்குதல்களின் பின்னர் லெபனானின் பல பகுதிகள் இஸ்ரேலின் கட்டுப்பாட்டுக்குள் வரும் என நம்பப்படுகிறது. ஏற்கனவே சிரியாவின் Benjamin Netanyahu பகுதி இன்னமும் இஸ்ரேலிடமேயுள்ளது. ஹீதிகள் மற்றும் யமனின் மீதும் இஸ்ரேல் அடுத்த கட்டமாகத் தாக்குதல்களை நடாத்தும் என ஆய்வுகள் கூறுகின்றன. இஸ்ரேல் ஒக்ரோபர் ஏழின் பின்னர் தனது உக்கிரத்தையும் ஆக்கிரமிப்பையும் வெளிப்படுத்துவருகின்றது. உலகம் கைகட்டி அமைதி காக்கின்றது.

'Hezbollah is the world's most heavily armed non-state actor (Center for Strategic and International Studies) இவ்வாறு வர்ணிக்கப்பட்ட ஹிஸ்புல்லாவிற்கு நஸ்ரல்லாவின் மரணம் ஒரு மிகப் பெரிய இழப்பா? 'நியு யோக்கர் சஞ்சிகை நஸ்ரல்லாவின் கொலையை இவ்வாறு கூறியுள்ளது. 'Nasrallah's death will be a political earthquake for Hezbollah'. ஹிஸ்புல்லா போன்ற அரசியல் - இராணுவ அமைப்பிற்கு நஸ்ரல்லா போன்ற தலைவரின் மரணம் மிகப் பெரிய இழப்பாகும். ஹிஸ்புல்லாவிற்கு மட்டுமல்ல, ஈரானுக்கும் மிகப் பெரிய இழப்பு, ஈரானின் பல அரசியல் நகர்வுகள் ஹிஸ்புல்லாவினூடாகவே நடைபெற்றது. அது மட்டுமல்ல ஈரானின் மிகவும் விருப்புக்குரிய தலைவர் நஸ்ரல்லா.

ஒக்ரோபர் ஏழின் பின்னர் இஸ்ரேல் இராணுவரீதியாகவும், அரசியல் தளத்திலும் மிகவும் சாணக்கியத்துடன் நடந்து வருகின்றது. ஹமாசும், பெஞ்சமின் நெடாவும் இஸ்ரேலின் வெற்றிக்கான பாதையை வகுத்துக் கொடுத்துள்ளார்கள். இன்று ஹிஸ்புல்லா மட்டுமல்ல. பாலஸ்தீனமும், ஈரானும், யமனும் ஒரு முக்கிய தலைவரை இழந்துள்ளன. நஸ்ரல்லாவைக் கொன்றதன் மூலம் இஸ்ரேல் தனது நீண்ட கால கனவை நிறைவேற்றியுள்ளது. மிகவும் திறமை வாய்ந்த இஸ்ரேலின் உளவுப் பிரிவு மேற்கின் உதவியுடன் பல கொலைகளை அரங்கேற்றிவருகின்றது. நஸ்ரல்லாவின் கொலை இஸ்ரேலுக்கு வெற்றி, ஹிஸ்புல்லாவிற்கு பின்னடைவு. ஹிஸ்புல்லா அடுத்த கட்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்தாவிடில் அது ஹிஸ்புல்லாவின் அழிவிற்கே வழிவகுக்கும்.



rathan@thaiveedu.com



# செகராசசேகரம் சர்ப்ப சாஸ்திரம்

**- பாவ. சிவகடாட்சம்**

### அறிமுகம்:

பொது ஆண்டு 1500-க்குச் சமீபமாக நல்லூரைத் தலை நகர மாகக் கொண்டு யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டு வந்த வனும் சிங்கைச் செகராசசேகரன் என்று அறியப்பட்டவனு மாகிய ஒரு மன்னன் இலங்கையில் சைவமும் தமிழும் நிலைத்து நிற்கப் பெருமுயற்சி எடுத்தவர்களுள் முதன்மை பெறுபவன்.

சிங்கைச் செகராசசேகரன் செந்தமிழ்மொழி வளம் பெற உத வும் பாவலர்க்கு அவரவர் தகுதிக்கேற்ப பொன்னாலான காளாஞ்சி (வெற்றிலைத் தட்டு) கெண்டிகை (கமண்டலம்) என்பவை பரிசளித்துக் கௌரவித்தான் என்று இம்மன்னன் காலத்தில் ஆக்கப்பெற்ற செகராசசேகரமாலை என்னும் சோதிட நூல் தெரிவிக்கின்றது.

***மன்னர்மன்னு செகராச சேகரன்***
***மணவை ஆரிய வரோதயன்***
***பன்னு செந்தமிழ் வளம்பெறற்கு உதவு***
***பரிசில் அங்கவர் சித்தியாம்***
***பொன்னின் மிஞ்சிய காளாஞ்சி கெண்டிகை***
***பொலங்கலன் பிறவுமாம் பரிச்***
***சின்னமுள்ள தொகையாவும் இவ்விதி***
***சிறந்தறிந் துரசே யிழையாய்***

ஆறுமுகநாவலருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவன் இம்மன் னன். தமிழ் மொழியில் புதிய நூல்களைக் குறிப்பாக மருத்து வம் சோதிடம் தொடர்பான நூல்களை ஆக்குவதற்குப் பெரு முயற்சி எடுத்தவன்.

***நாளுந் தேடு தமிழ் நால்வேதச் சேது வேந்தன்***

என்று இம்மன்னன் பெயரில் ஆக்கப்பெற்ற செகராசசேகரம் சர்ப்ப சாஸ்திரம் என்னும் இந்நூலில் போற்றப்படுகின்றான்.

***சிங்கையாரியன் சேதுகாவலன்***
***கங்கை நாடன் கற்றவர் திலகன்***
***ஆயுள்மறையுடன் அரிய நற் சோதிடம்***
***பாய்திரைக்கடலுட் பலவுமுணர்ந்தோன்***
***ஒப்பிலா முத்தமிழோர்ந்த***
***செப்பரும் செகராசசேகரன்***

என்று தட்சண கைலாய புராணம் என்னும் நூலின் சிறப்புப் பாயிரத்தில் இம்மன்னன் புகழ் பேசப்படுகின்றது.

செகராசசேகரனின் முன்னோர்களான மார்த்தாண்ட சிங்கை யாரியன் போன்றோர் தென்னிலங்கையில் ஆட்சி புரிந்த மன் னர்களிடமிருந்து அவ்வப்போது திறை வாங்கியமை பற்றிய செய்திகள் வரலாற்றில் பேசப்படுகின்றன. தமது முன்னோ ரின் வெற்றிகளைத் தமது வெற்றிகளாகப் பதிவு செய்யும் வழக்கம் மன்னர்களிடம் உண்டு. அவ்வகையில் சிங்கை செக ராசசேகரனும்

***'இலங்கை வேந்தர் சீரிய பொன் திறையளக்கச்***
***செங்கோலோச்சும் செகராச சேகரமன்'***

என்று சர்ப்ப சாஸ்திரப் பாடல் ஒன்றில் புகழப்படுவதை நோக் கலாம்.

சிங்கைச் செகராசசேகரன் ஆட்சிக்காலத்தில் ஆக்கப்பெற்ற செகராசசேகரம் என்னும் மருத்துவ நூலில் ஒரு பாடமாக அமைந்துள்ள பாம்புக்கடி சிகிச்சை பற்றிய சர்ப்ப சாஸ்திரம் முதன் முதலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்தமருத்து வத் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக இருந்த சித்த மருத்துவ கலாநிதி செ. சிவசண்முகராஜா அவர்களால் 2012-ஆம் ஆண்டு வைகாசியில் பதிப்பிக்கப் பெற்றது.

ஓரளவு முழுமையாகத் தமக்குக் கிடைத்த இரண்டு ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து செ. சிவசண்முகராஜா அவர்கள் இந் நூலைப் பதிப்பித்துள்ளார். நூலக நிறுவனத்தினரால் பெறப் பட்டு பதிவேற்றப்பட்ட EAP1260_C001_F001 இலக்கமுள்ள ஏட்டுச் சுவடியொன்று எனக்குக் கிடைத்தது. இந்த ஏட்டுச் சுவ டியில் உள்ள அந்தாதி முறையில் அமைந்த 35 விருத்தப் பாடல்களையும் திரு. சிவசண்முகராஜா பதிப்பித்த செகராச சேகரம் சர்ப்ப சாஸ்திரம் என்னும் நூலுடன் ஒப்பு நோக்கி ஆராய்ந்து அவசியமான ஒருசில திருத்தங்களுடன் இந்த நூலைத் தாய்வீட்டில் வெளியிடத் தீர்மானித்தேன். வரும் காலத்தில் இந்நூலின் மேலும் சில பிரதிகள் கிடைக்கும் போது ஆர்வமுள்ளவர்கள் இதனை மேலும் திருத்தமுறப் பதிப்பிப்பார்கள் என்று நம்புகின்றேன்.

## செகராசசேகரம்
## சர்ப்ப சாஸ்திரம்:



***பொன்படைத்த மால்வரையைப் பூதலத்தைச் சேமமுடன்
தன்படத்தினால் மறைத்துத் தாங்கியே
தென்படைத்த பைநாக ராயன் பனுவலுக்கு முன்பிறந்த
கைநாக மாமுகத்தான் காப்பு***

பொன்நிறைந்த மேரு மலையையும் இந்தப் பூவுலகையும் பாதுகாப்பாகத் தன் படத்தினால் மறைத்துத் தாங்கிநிற்கும் நாகராஜனின் நூலுக்கு முந்தோன்றிய ஆனைமுகத்தான் துணை நிற்க.

***கார்கொண்ட மால் அளித்த பிரமன் மைந்தர்
கருதிய ஒன்பதுபேர்கள் கதிர்பூநாக
தார்கொண்ட டலப்பெருத்து நீண்டுவேண்டுந்
தனித்தனி ஆயிரம் படங்கள் தாங்கி யோங்கிச்
சீர்கொண்ட தவசிகளாய்ச் சகலமாகிச்
செய்நன்றிகளை வரியுஞ் செய்தி யோராய்ப்
பார்கொண்ட யோகிகளு மாகி யென்றும்
பணிபவர்க்கு வரமளித்துப் பணியும் பேரே*** (1)

கார்மேகவண்ணனான திருமால் படைத்த பிரமனின் மைந்தராகக் கருதப்படும் ஒன்பது பேர் ஒளிபொருந்திய நாகப்பூ மாலை அணிந்து பெருத்து நீண்ட உடலும் ஆயிரம் தலைகளும் கொண்டெழுந்து தவசிகளாகிச் சகலதுமாகி செய்நன்றிகளை எழுதும் செய்தியோராயும் உலகாளும் சித்தர்களுமாகித் தம்மை வணங்குவோர்க்கு வரமளிக்கும் பாம்புகளாவர்.

***பேரிவர்க்குச் சேடனுடன் அனந்தன் தக்கன்
பெரும்குளிகன் கார்க்கோடன் வாசுகி பத்மன்
ஆரிக்கும் மகாபத்மன் சங்க பாலன் தனி முதல்
ஆகும் சேடன்றான் தரணி தாங்கி
யேரிருக்கும் மற்றவர்க்கும் எண்டிசை உண்டாக்கி
இவர்போல் ஒன்பது பெண்ணிவருக்கென்றே
யாரிருக்கும் கலியாணம் பிரமன் செய்ய
ஆடி முதல் ஆவணியில் அவர் சேர்வாரே*** (2)

இவர்களின் பெயர்கள் சேடன் அனந்தன் தக்கன் பெரும்குளிகன் கார்க்கோடன் வாசுகி பத்மன் மேன்மைமிகு மகாபத்மன் சங்கபாலன் ஆகும். இவர்களுள் முதல்வனாகிய ஆதிசேடன் பூமியைத் தாங்கினின்று மற்றைய எட்டுப்பேருக்குமென எட்டுத்திசைகளை உருவாக்கினான். இந்த ஒன்பது பேருக்கும் பிரமனானவன் ஒன்பது பெண்களைத் திருமணம் செய்து வைத்தான். இந்த ஆண் பெண் சோடிகள் ஆடி முதல் ஆவணி வரையிலான காலத்தில் புணர்ச்சியில் ஈடுபடுவர்.

***சேரவிதி லொருநூற் றொன்பதுநாட் கெற்பஞ்
சிறந்து தரித்திரு நூற்று நாற்பதண்டம்
மாரவிவை யிட்டெட்டு நாளததா கல்லிடை கிடந்து
வளரிருபதண்ட மேழ் நாட்
பேருறவே பொரிக்குமதில் ஆண்பால் முட்டை
பிச்சிப்பூ நிறமாகத் திரளும் பெண்பால்
நேருமுட்டை பாதிரிப்பூ நிறமதாகி
நீண்டிருக்கும் என்றுலகில் நியமிப்பாரே*** (3)

இப்புணர்ச்சியின் பலனாக உருவாகும் கரு நூற்றொன்பது நாட்களில் நூற்றுநாற்பது முட்டைகளாக வளரும். இம்முட்டைகள் அறுபத்து நான்கு நாட்களாக கல்லிடைக்கிடந்து இவற்றுள் இருபது முட்டைகள் ஏழு நாட்களில் பொரிக்கும். ஆண் பாம்பு பிறக்கும் முட்டை பிச்சிப்பூ நிறத்திலும் பெண்பாம்பு பிறக்கும் முட்டை பாதிரிப்பூ நிறத்தில் சற்று நீண்டும் காணப்படும்.

***நியமிக்கும் பன்னிரண்டா நாளின் ஞான
நினைவுண்டாம் பதினான்காய் நின்ற நாளின்
நயமிக்கப் பகுவாய்ப் பன்முளைக்கும் பல்லு
நன்றாகவே எண்ணில் ஞாலமெங்கும்
செயமிக்க செகராய சேகரன் பொற் சேவடியை
வணங்காமற் திரிந்தார் நெஞ்சிற்
பயமிக்க பரராசர் கெஞ்சிக் காட்டும்
பல்லென முப்பத்திரெண்டு பல்லாம் பண்பே*** (4)

முட்டை பொரித்த பன்னிரண்டாம் நாளில் ஞான நினைவு உண்டாகும். பதினான்காம் நாளில் பகுதி பகுதியாகப் பல் முளைக்கும். பற்களைக் கவனமாக எண்ணிப் பார்த்தால் வெற்றி மிக்க செகராசேகரனின் பொற்பாதங்களை வணங்காமற் திரிந்த பகை மன்னர்கள் நெஞ்சில் பயத்துடன் மன்னிப்பு வேண்டி அவனைக் கெஞ்சி நிற்கும்போது காட்டும் பற்கள் போல் முப்பத்திரண்டாம்.

***பண்பெயிறு நாலு முண்டாய்ப் பதினாறாகிப்
பகர்நாளில் ஆதித்தன் பரந்து தோன்றக்
கண்விளித் ததனை நன்றாய்க் கருதிப்பார்க்க
கடுவுண்டா மப்பொழுது காணும்
நஞ்சமெனப் பயிலும்எயிற் றடியினிற்கு முப்பதெனு
நாளிற் சட்டை களற்றிடு நாளீங்குத்
தண்பயிலும் தட்டுப்பா டாமட்டிப் பாராட்டுப்
பாடறின மேனிதள ராதன்றே*** (5)

குணமுடைய பற்கள் நான்கு உண்டாகிப் பின்னர் அவை பதினாறாய் எண்ணிக்கையிற் பெருகும் நாளில் சூரிய ஒளியில் கண்களை விளித்து உற்றுப் பார்த்தால் நஞ்சு உண்டாம். அப்பொழுது காணும் பல்லின் அடியில் நஞ்சு நிற்கும். முப்பதாம் நாளில் முதன்முதலாகச் சட்டை களற்றும்.

*அன்றி யிவர் குலமுரைக்கிற் சேடனென் போன்*
*அரிதான நாற்குலங்களாகி நிற்பான்*
*வென்றி புனை யனந்தனுட குளிகன் வேத*
*விப்பிரன் வாசுகி சங்கபாலன் வேந்தன்*
*வன்றி றல்சேர் தக்கனுடன் பற்மன்றானும்*
*வைசியனா மிதன்றி மகா பற்மன்றானுந்*
*துன்று புகட் கார்க்கோடகனும் பின்னே*
*சூத்திரனென்றே புவியிற் சொல்லுவாரே* (6)

இப்பாம்புகளுள் சேடன் என்னும் பாம்பு நான்கு சாதிகளாகப் பிரிந்து நிற்கும். அனந்தன் குளிகன் இரண்டும் பிராமண குலம். வாசுகி சங்கபாலன் இரண்டும் அரச குலம். தக்கனும் பத்மனும் வைசிய குலம். மகாபத்மன் கார்க்கோடகன் என் போர் சூத்திர குலம் என்று உலகத்தோர் கூறுவர்.

*சொன்ன பிராமணன் சிவாலயங்க டன்னிற்*
*சுகத்துடனே யிருந்து புற்றாஞ் சோறும்பூவும்*
*தின்னும் மகிழ்ந்தே யாடின்மேலெ பாத்தாடுந்*
*திசையரசன் மரங்களிலே சேர்ந்து வாழும்*
*பன்னுமெலி தவளை தின்னும் ஆடும்போதிற்*
*பல திசையும் பார்த்தாடும் பரிந்தே செட்டி*
*நென்னிறை பொன்மனை யுறையும் அறுகின் வேரும்*
*நிரை வண்டுந் தின்றாடி நேரே பார்க்கும்* (7)

இங்கே சொல்லப்பட்ட பிராமண சாதிப் பாம்புகள் சிவன் கோயிலில் சுகத்துடன் வாழும். புற்றாம் சோறும் பூவும் தின் னும். மகிழ்ந்து ஆடும்போது ஆகாயத்தைப் பார்த்து நின்றா டும். அரச குலத்துப் பாம்பு மரங்களிலே சேர்ந்து வாழும். எலி தவளை என்பவற்றை உண்ணும். இவை ஆடும்போது பல திசைகளையும் பார்த்து ஆடும். செட்டி எனப்படும் வைசிய குலத்துப் பாம்பு நெற்குவியல் நிறைந்த செல்வமிக்க வீடுக ளில் வாழும். அறுகம் வேரும் நிரை வண்டும் தின்னும். நேரே பார்த்து ஆடும்.

*பாரில் உள்ள சூத்திரனாம் பாம்பு புற்றிற்*
*பரிந்திருக்கு மிரையெடுக்கிற் பலவுந் தின்னும்*
*ஏருடனே தானாடிற் பத்ம ராகம்*
*இலங்குமணி முடிபுனையு மிலங்கை வேந்தர்*
*சீரிய பொன் திறையளக்கச் செங்கோ லோச்சுஞ்*
*செகராச சேகரமன் சிங்கை மேவும்*
*ஆரியர் கோன் வெண்குடையி நிழலே செய்யும்*
*அவனிதனைப் பார்த்து நின்றே அமர்ந்தாடும்மே* (8)

சூத்திர குலத்தைச் சேர்ந்த பாம்பு புற்றுக்களில் விரும்பி வாழும். இரை எடுக்கும்போது பலவற்றையும் தின்னும். ஆடும்போது பத்மராகம் என்னும் மாணிக்கக் கற்கள் பதித்த மணிமுடி அணிந்திருக்கும் இலங்கை மன்னர்கள் திறை கொடுக்க வாங்கி அரசு செய்யும் சிங்கை நகர்வாழ் ஆரியர் கோன் செகராசசேகர மன்னன் வெண்குடையின் நிழலில் இருக்கும் பூமிதனைப் பார்த்து நின்று அமர்ந்து ஆடும்.

(குறிப்பு: பாம்புகளை வகைப்படுத்தும்போது கூட தமக்கு மிகவும் பழக்கப்பட்டுவிட்ட சாதிகள் பெயராலேயே அவற்றை பிராமணன், அரசன் வைசியன் சூத்திரன் என்று இனம் பிரித்த னர்)

*மேலான பிராமணன் தான் கண்ணொடுங்கிப் புள்ளி*
*மிகைத்த படம் நேர்ந்திருக்கும் விரும்பும் வேந்தற்*
*காலாலக் கண்சிவந்து படமும் புள்ளியற்ப*
*பெருக்கும் நிறையுரை போலழகதான*
*கோலாரும் செட்டிக்கு வெளுத்துக் கண்ணும்*
*குலப்படமும் புள்ளியும் மேடுறுத்துத் தோன்றும்*
*நாலான சூத்திரன் கண்கறுத்துப் புள்ளி*
*நற்படமும் நீண்டிருக்கும் ஞாலமீதே* (9)

உயர்ந்த பிராமணசாதிப் பாம்பின் கண்கள் சிறிதாகவும் அதிக புள்ளிகளுடன் கூடிய படத்துடனும் காணப்படும். அரச குலப் பாம்பின் கண் பெரிதாக சிவந்த நிறத்துடன் இருக்கும் படத்தில் புள்ளிகள் மிகவும் குறைவாகக் காணப்படும். செட்டி குலத்துப் பாம்புக்கு கண் வெளுத்தும் புள்ளியும் படமும் மேட்டில் உயர்ந்தும் காணப்படும். நாலாவது இனமான சூத் திர சாதிப் பாம்புகளின் கண் கறுத்தும் புள்ளியும் படமும் நீண்டும் இருக்கும்.

*தேடுமிவர் மேவியர்க்கு மிந்தவண்ணஞ்*
*சிறந்தொக்கும் படத்தொடுபார் சிறுத்துத்தோன்றும்*
*ஆடுபுருடன் படமும் இருபாலொக்கும்*
*ஆதிக்கு வேளை பலியறிந்து நல்கச்*
*சூடெயிறு நாலதன் பேர் தகரியென்றுஞ்*
*சூளமகரி காளாத்திரி யமதூதி நாளுந்*
*தேடு தமிழ் நால்வேதச் சேது வேந்தன்*
*தெவ்வரெனக் காற்றருந்தித் திரியுமன்றே* (10)

இவர்களது பெண்கள் இந்த வகையாக சிறந்து விளங்கும் படத்தோடு சற்றுச் சிறுத்துக் காணப்படும். ஆடுகின்ற ஆண் பாம்பின் படமும் பெண் பாம்பின் படத்துடன் ஒத்திருக்கும். நான்கு நச்சுப் பற்களின் பெயர்கள் தகரி அகரி காளாத்திரி யமதூதி என்பவையாகும். நாள் தோறும் தமிழைத் தேடுபவ னும் நான்கு வேதங்களை அறிந்தவனுமான சேது மன்னனின் பகைவரெனக் காற்றை அருந்தித் திரியும்.

*அன்றுநல்ல பாம்புடனே புடையன் புள்ளி*
*அரவிரியன் கருவழலை அவைகள் நாலும்*
*ஒன்றென்னன்று பன்னாறாய் மேலு*
*ஆறுபத்தொரு சாதி யாகத்*
*துன்று விஷமுள்ள தொன்று கடித்ததொன்றற்*
*சொன்ன தெண்ணிக் கண்டுகொண்டு சாதிக்கும்*
*இன்றிது மந்திரம் அவுடதம் தியானம்*
*இவை யடுத்த சாதிகட்கும் இவைமீழுமே* (11)

நல்லபாம்பு புடையன் விரியன் கருநாகம் என்னும் நாலுவகை நச்சுப் பாம்புகளும் ஒன்று பதினாறாகி அறுபத்தொரு சாதிக ளாகப் பிரிந்து பரவும். இவற்றுள் ஒன்று கடித்துவிட்டால் அந் தச் சாதிக்கு உரிய மந்திரம் மருந்து தியானம் என்பவற்றை அறிந்து அதன்படி பரிகரிக்க விடம் நீங்கும்.



Sivakadadcham@thaiveedu.com



# மாதவிடாய் - ஒரு மனித உரிமை சார்ந்த விடயம்

ஷகீதா பாலச்சந்திரன்

உலக மக்கள்தொகையில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர்களுக்கு அவர்களின் வாழ்நாளின் பெரும்பகுதியில் மாதவிடாய் ஏற்படுகிறது. இலங்கையில் 4.2 மில்லியன் கணக்கானோர் மாதவிடாயை அனுபவிக்கின்றனர். மாதவிடாய் என்பது ஒரு தேர்வு அல்ல, இது பெண் உடலில் இயற்கையாக இடம்பெறும் ஒரு இயல்பான உயிரியல் உண்மை ஆகும். இருப்பினும் மாதவிடாய் என்பது பல சமூகங்களால் சமூக, சமய, கலாச்சாரக் காரணங்களால் வெளிப்படையாக பேசமுடியாத விடயமாகக் காணப்படுகிறது. இதனால், மாதவிடாயை அனுபவிப்பவர்கள் உடலியல், உளவியல், மற்றும் உணர்வு ரீதியாகப் பல்வேறு வன்முறைகளுக்கு ஆளாகின்றனர்.

சமகால இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் பின்னரான விளைவுகள், இவ்வன்முறைகளைப் பெருமளவு மோசமாக்குகிறது. உதாரணமாக மாதவிடாய் வறுமையானது, குறிப்பாக மாணவிகள் மாதவிடாயின்போது ஏற்படும் உடல் மற்றும் மனநலப் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றனர். இக்காலப்பகுதியில் பாடசாலைக்கு சமூகமளிக்காமை, பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் சமூகத் தனிமைப்படுத்தல் என பல்வேறு சவால்களுக்கு அவர்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. அத்தோடு மாதவிடாய், சுகாதார அணையாடை தயாரிப்புகள் தேவைகளையும் உருவாக்குகிறது.

இன்றைய நிலையில் மாதவிடாய் வரி, மாதவிடாய் வறுமை என்பன பல்வேறு விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மாதவிடாய் வறுமை என்பது நாட்டின் மக்கள்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்களை பாதிக்கின்ற ஒரு பாரிய பிரச்சினை ஆகும். இருப்பினும் பெரும்பாலான தருணங்களில் கவனிக்கப்படாமல் போகின்ற விடயமாகவே இது இருக்கின்றது. இலங்கையின் மாதவிடாய் வறுமை விகிதம் 50% ஆகும். அதாவது மாதவிடாய் வயதுடைய பெண்களைக் கொண்ட 50% குடும்பங்கள் எந்தவிதமான மாதவிடாய் சுகாதார அணையாடைகளுக்குத் தம்பணத்தைச் செலவிடுவதில்லை.

2021-ம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் 10 துண்டுகள் கொண்ட மாதவிடாய் சுகாதார அணையாடைகளின் பாக்கெட் ஒன்று 140.00 ரூபாவுக்கு விற்கப்பட்டது. தற்சமயம், அதே தயாரிப்பு 270 ரூபாவுக்கு விற்கப்படுகிறது, இது 92% அதிகரிப்பைக் குறிக்கிறது. 2023-ன் பிற்பகுதியில் புதிய VAT திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், முன்னர் விலக்கு அளிக்கப்பட்ட மாதவிடாய் சுகாதார அணையாடைகளுக்கு தற்போது விலக்கு அளிக்கப்படவில்லை. அத்தோடு தற்போது வரி விகிதம் 51.07% ஆக உள்ளது. இந்த கணிசமான விலை உயர்வு, மாதவிடாய் வறுமையால் ஏற்படும் தீவிர பிரச்சனையாகும். அத்தியாவசியப் பொருட்களில் ஒன்றான மாதவிடாய் சுகாதார அணையாடைக்கு அரசு வரி விதிப்பதால், குறைந்த வருமானம் உள்ள பல குடும்பங்கள் இதனால் பாதிக்கப்படுகின்றன. அணையாடைகளை அதிக விலை கொடுத்து வாங்குவதற்கு அவை கட்டுப்படியாகாதுள்ளது. இருப்பினும் மாதவிடாய் சுகாதார தயாரிப்புகளுக்கான அணுகல் மனிதனின் இன்றியமையாத தேவையாகும். இந்த விலை உயர்வுகள் மற்றும் அவை ஏற்படுத்தும் கட்டுப்படியாகாத தன்மை, மாதவிடாய்ப் பொருட்களை வாங்க இயலாமை என பல விளைவுகள் மாதவிடாய் வறுமையில் உள்ளடங்குகிறது. இந்த ஒட்டுமொத்த வரியானது நாட்டின் மாதவிடாய் வறுமையின் விகிதத்தில் ஏற்படுத்தும் தாக்கம், குறைந்த வருமானம் கொண்ட பெண்களின் வாழ்வியலில் பெருஞ் செல்வாக்கைச் செலுத்தி உள்ளது. மாதவிடாய் மற்றும் அதன் தாக்கத்தை புரிந்துகொள்வதில் நாம் அனைவரும் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது.

மாதவிடாய் சம்பந்தமான வன்முறைகள் ஒழிய தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. மாதவிடாய் ஏற்பட இருக்கும் பருவ வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு மாதவிடாய் பற்றிய முன்கூட்டிய அறிவினை வழங்கவேண்டும். அத்தோடு, மாதவிடாயின் போது ஏற்படும் உடலியல், உளவியல் மாற்றங்கள், மாதவிடாய் முகாமைத்துவம் மற்றும் சுகாதாரம், மாதவிடாய் சம்பந்தமான பிரச்சினைகள், அணுக வேண்டிய சேவைகள், தங்களுடைய மாதவிடாய் அணையாடை பொருட்களை தெரிவு செய்ய, அவற்றை அணுகுவதற்கான சுதந்திரம், மாதவிடாயின் போது பாதுகாப்பான, கௌரவமான, சுகாதாரமான முகாமைத்துவம் போன்றவற்றை வழங்கவேண்டும்.

- பங்குபெறுவதில் உள்ள உரிமை
- சமமற்ற ஒதுக்கப்பட்ட முறைமை
- பயன்படுத்தப்பட்ட அணையாடைகளைக் கழிவகற்றல்
- மாதவிடாயின் போது ஏற்படும் அசௌகரியங்களைத் தீர்க்க ஓய்வு

முதாலானவற்றிலும் கவனஞ் செலுத்த வேண்டும். மேலே குறிப்பிட்ட விடயங்களைக் கவனத்தில் கொண்டு மாதவிடாய் வரிகளை முழுமையாக நீக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன் பாடசாலை மாணவிகளுக்கு இலவச மாதவிடாய் அணையாடைகளை நிலைபேறான தன்மையுடன் வழங்குவது குறித்து நன்கு ஆழ்ந்து ஆராய வேண்டும். மாதவிடாய் வரிகளை முற்றாக நீக்குவதற்கு அழுத்தம் கொடுப்பதற்கு மாதவிடாய் வறுமையின் தாக்கத்தை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

## அரசாங்கத்தின் சமகால முன்னெடுப்புக்கள்:

பாடசாலை மாணவிகளுக்கு மாதவிடாய் அணையாடைகள் கொள்வனவு செய்வதற்கான இலவச வவுச்சர்களை வழங்கும் புதிய முயற்சியை கல்வி அமைச்சு ஆரம்பித்துள்ளதோடு ஆறு மாதங்களுக்கு ஒவ்வொரு மாணவிக்கும் ரூ. 1,200 மதிப்புள்ள வவுச்சர் வழங்கப்படும். இந்த திட்டத்திற்காக ஒரு பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தடையில்லா கல்வியை உறுதி செய்யும் நோக்கத்தில், நல்ல வளமான மாணவர்களை உருவாக்கும் நோக்கத்துடன் அமைச்சகம் இம்மாணவர் நலத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த வவுச்சர்களை வழங்குவதன் மூலம், பெண் மாணவிகளிடையே பள்ளி வருகையை மேம்படுத்துவதுவதுடன், பொருளாதார நெருக்கடிகளின் போது ஏற்படும் கல்வி புறக்கணிப்பு மற்றும் சுகாதார பிரச்சினைகள் தொடர்பானவற்றை நிவர்த்தி செய்வதையும் அமைச்சகம் நோக்கமாகக் கொண்டுள்ளது. ஜூலை 10-ம் தேதியுடன் முடிவடைய இருந்த பள்ளி மாணவிகளுக்கான சுகாதாரப் பொருட்களை மீட்பதற்கான கால அவகாசத்தை ஆகஸ்ட் 10-ம் தேதி வரை கல்வி அமைச்சகம் நீடித்திருந்தது.

பெண்களின் நல்வாழ்வுக்கு பங்களிக்கும் முக்கியமான கொள்கைகளில் புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு பொறுப்பானவர்களிடையே ஒருங்கிணைப்பு மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்த...

- மாதவிடாய் சுகாதார அணையாடைகள் மீதான அனைத்து வரிகளையும் நீக்குவதற்கு கொள்கை சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுத்து மாதவிடாய் உள்ளவர்கள் அவற்றை அணுகக்கூடிய மலிவு விலைக்கு மாற்றல்
- மாதவிடாய் மற்றும் மாதவிடாய் வறுமை தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்கு சுகாதார அமைச்சையும் கல்வி அமைச்சையும் வலியுறுத்தல்.
- மாதவிடாய் வறுமை பற்றிய விழிப்புணர்வைத் தொடர்ந்து வழங்குவதற்கும், ஒவ்வொருவருக்கும் அவர்களுக்குத் தேவையான மாதவிடாய் சுகாதாரப் பொருட்கள் மற்றும் கல்விக்கான அணுகலை உறுதி செய்வதற்கும் உறுதியளித்தல்.
- தேயிலை தோட்டங்களில் பணிபுரிகின்ற மலையக பெண்கள் மற்றும் நலிவுற்ற சமூகங்களை சேர்ந்த மக்களை மாதவிடாய் நாட்களில் வலுவூட்டும் வகையில், பொதுசேவைகளுடன் இணைந்து நிர்வகிக்கப்படும் சமூகம் சார்ந்த நிறுவனங்களை அணுகும் திறனை அதிகரிப்பதன் மூலம் மேம்படுத்தப்பட்ட தனிப்பட்ட சுகாதாரம் மற்றும் நீர் வசதிகளை



நடைமுறைப் படுத்தல்.

- முறையான சுகாதார அறிவு மற்றும் நடைமுறைகளை அணுகுவதன் மூலம் சமூகங்களின் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்.
- மாதவிடாய் வறுமையை குறைக்க சமூகமட்ட ரீதியில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளல். உதாரணமாக பயன்படுத்திய மாதவிடாய் அணையாடைகளை கழிவகற்ற பாதுகாப்பான இடங்களை நிர்மாணித்தல், தேயிலைத் தோட்டங்களில் வேலைத்தள ஓய்வு அறைகளைக் கட்டுதல், பள்ளி மாணவர்கள், சமூகம், அரசு மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்களிடையே மாதவிடாய் சுகாதாரம் மற்றும் தகவல்களை உருவாக்குதல்.

மாதவிடாய் சம்பந்தமாக பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்க அனைவரும் முன்வரவேண்டும். இது பெண்கள் மற்றும் மாதவிடாயை அனுபவிக்கும் அனைவரும் கௌரவத்துடனும் மாண்புடனும் வாழ வழிவகுக்கும்.



shageetha.balachandran@thaiveedu.com




சமுதாயத்திற்கு ஆசிரியர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்பைக் கௌரவிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட கொண்டாட்டத்திற்கு ஒரு தினம் அவசியமானதாகும். இந்த நாள் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஆசிரியர்கள் வகிக்கும் முக்கிய பங்கை அங்கீகரிக்கவும் அவர்கள் சவால்களை எதிர்கொள்ளவும் ஒரு வாய்ப்பாக இருக்கும். இவற்றைக் கருத்திற்கொண்டு யுனெஸ்கோ மற்றும் சர்வதேசத் தொழிலாளரமைப்பு (ILO) இணைந்து 1966-யில் பாரிசில் ஆசிரியர்களின் நிலை குறித்து அரசுகளுக்கிடையேயான மாநாட்டைக் கூட்டியது. ஆசிரியர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் மற்றும் அவர்களின் தயாரிப்பு, ஆட்சேர்ப்பு, வேலைவாய்ப்பு மற்றும் பணிச் சூழலுக்கான தரநிலைகள் ஆகியவற்றை விபரிக்கும் ஒரு அடிப்படை ஆவணமான ஆசிரியர்களின் நிலை தொடர்பான யுனெஸ்கோ, சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு ஆகியவற்றின் பரிந்துரையை இந்த மாநாடு ஏற்றுக்கொள்ள வழிவகுத்தது. உலக ஆசிரியர் தினம் 1966 மாநாட்டின் 30-வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் அக்ரோபர் ஐந்து 1994 அன்று தொடங்கப்பட்டது. இக்கொண்டாட்ட தினம் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது. இலங்கையில் அக்ரோபர் ஆறாம் திகதி கொண்டாடப்படுகிறது. 1994 முதல் இது உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த நிகழ்வாக வளர்ந்துள்ளது.

உலக ஆசிரியர் தினம் என்பது கல்வி மாற்றத்திற்கு ஆசிரியர்கள் எவ்வாறு வினையூக்கியாக இருக்கிறார்கள் என்பதைக் கொண்டாடும் ஒரு முக்கியமான சந்தர்ப்பமாகும். ஆசியர்களுக்கு அவர்களின் மாணவர்களின் வாழ்க்கையில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தவும் நிலையான எதிர்காலத்தை வடிவமைக்கவும் மற்றும் அவர்களின் தொழிலில் தனிப்பட்ட நிறைவைக் கண்டறியவும் தனித்துவமான வாய்ப்புள்ளது. பிள்ளைகளின் தலைவிதியைத் தீர்மானிப்பதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். அவர்கள் கல்வியின் வழிகாட்டி விளக்குகள். மாணவர்களில் நம்பிக்கை வைப்பதும், மாணவர்களிடம் நம்பிக்கையை விதைப்பதும் ஆசியர்களே. ஆசிரியர் உங்களுக்குச் சரியான பாதையைக் காட்டுபவர் மற்றும் உங்கள் இலக்குகளை அடையும்வரை உங்களை உந்துதலாக வைத்திருப்பவர்கள். நாளைய சமுதாயம் இன்றைய வகுப்பறையில் தீர்மானிக்கப்படுகிறது என்பதற்கேற்ப ஒரு ஆசிரியர் நினைத்தால் மாணவரை மனிதராகவும் மாற்றலாம், பகுத்தறிவுகொண்ட மாமேதையாகவும் மாற்றலாம்.

ஆசிரியர்கள் அன்றல்ல, இன்றல்ல என்றுமே போற்றப்பட வேண்டியவர்கள். அவர்களது மகத்துவம் ஒளிவீசிக் கொண்டுதான் இருக்கின்றது. ‘வாழ்க்கையில் வெற்றிக்குக் கல்வி முக்கியமானது, அந்தவகையில், ஆசிரியர்களே மாணவர்களில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள்’ சாலமனோர்டிஸ் கூற்று. ‘மாணவர்களிடமிருந்து சிறந்ததை வெளிக்கொணர நல்ல ஆசிரியர்களுக்குத்தான் தெரியும்’ என்கிறார் சார்லஸ் குரால்ட். ‘நான் உயிரோடு இருப்பதற்கு என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன், ஆனால் சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்’ அலெக்சாந்தர் கூறுகிறார்.

‘ஆசிரியர்கள் கதவைத் திறக்கிறார்கள் ஆனால் நீங்கள்தான் உள்ளே நுழைய வேண்டும்’ இது சீனப் பழமொழி. ‘முழுமையான அறிவின் ஒரே அடையாளம் கற்பிக்கும் சக்தி’ அரிஸ்டோட்டில். ‘சாதாரண ஆசிரியர் சொல்வார், நல்ல ஆசிரியர் விளக்குகிறார், உயர்ந்த ஆசிரியர் நிரூபிக்கிறார், சிறந்த ஆசிரியர் ஊக்குவிப்பார்’ வில்லியம் ஏ. வார்டு கூற்று. எந்த ஆசிரியர், மாணவர் கற்றல் குறை அறிந்து அதற்கேற்பத் தன் கற்பித்தல் உத்திகளை மாற்றியமைத்துக் கொள்கிறாரோ அவரே சிறந்த ஆசிரியர். ‘ஒரு தேசம் ஊழல் இல்லாமல் அறிவாளிகளின் தேசமாக இருக்க மூன்று பேரால் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்த முடியும். அவர்கள்தான் தாய், தந்தை, ஆசிரியர்கள்’ என்கிறார் அப்துல் கலாம். ‘கற்பித்தல் என்பது புரிதலின் மிக உயர்ந்த வடிவம்’ அரிஸ்டோட்டில்.

பொதுவாகப் பிள்ளைகளிடம் ஒரு தேவை ஆரம்பித்து அத்தேவை நிறைவடையும்வரை நடைபெறுகின்ற ஓர் உள, உடலியற் தொழிற்பாடு ஊக்கலாகும். ஊக்குவித்தல் என்பது ஒரு பிள்ளை கற்றலுக்கான ஆயத்த நிலையைத் தோற்றுவிப்பதற்கு முக்கியமானதாகையால் ஊக்குவித்தல் கற்றலுக்கு அடிப்படையாகின்றது. ஒவ்வொரு பிள்ளையும் தனது திறமைகளை முழு அளவில் கற்றலுக்குப் பயன்படுத்த வேண்டிய தொரு நிலையை ஏற்படுத்த வேண்டுமானால் அது தொடர்பாக எத்தகைய ஊக்கலைப் பயன்படுத்த வேண்டும் என்பதை ஆசிரியர்கள் அறிந்திருக்கவேண்டும். எல்லோரிடமும் ஊக்கிகள் உண்டு எனினும் அவற்றைப் பயனுள்ள செயல்களில் பயன்படுத்தத் துணை புரிபவர்கள் ஆசிரியர்களாவர். எனவே இவர்கள் வழிகாட்டிகளாகச் செயற்படவேண்டும். மாணவர்களது ஆளுமை வளர்ச்சியில் ஆசியர்களின் பங்களிப்பு அதிகமானதாகும். ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவர்களையும் தனித்தனியாக அறிந்திருக்க வேண்டும். மாணவரது இளமைப்பருவ அனுபவங்கள் ஆளுமை உருவாக்கத்துக்குப் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆதலால் ‘இளமைப் பருவம் மிகுந்த கவனத்துக்குள்ளாக வேண்டும்’ என்பது ஆட்லரது கருத்தாகும். ‘ஆளுமை என்பது ஒருவரது நடத்தைத் தரத்தின் முழுமையினைக் குறிப்பதாகும்’ என்பது உட்வொர்த் என்பவர் கருத்தாகும்.

ஆசிரியர்கள் கொண்டிருக்கவேண்டிய முக்கிய பண்புகளாவன; வினைத்திறன்மிக்க ஆளுமை, கூர்மையான அறிவும் சமூகப் பார்வையும், உணர்வுரீதியான முதிர்ச்சியும், தன்னம்பிக்கை, அன்புசார் நடத்தைகள், பொறுமை, சகிப்புத் தன்மை, சிறந்த தலைமைத்துவம், ஒழுக்கம் பேணுவதில் விருப்பு, பக்கச்சார்பற்ற நடத்தை, கடுமையான உழைப்பும் பொறுப்பும், வெளிப்படையாகப் பேசுதல், கருத்துகளை இலகுவாகத் தொடர்பாடல் செய்தல், அறிவுசார் நடத்தை அதாவது புதிய அறிவினைத் தேடுவதில் ஆர்வம், தனியாள் வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளல், நேர்மனப்பாங்குகொண்ட சிந்தனை, மகிழ்ச்சிகரமான மனோநிலை, வகுப்பறையைத் தமது ஆளுகைக்குள் வைத்திருத்தல், வினைத்திறன்மிக்க ஆளுமை, முன்னுதாரணமாக நடத்தல், தூரநோக்குடையவராக இருத்தல், சிறந்த ஒத்துழைப்பாளராக இருத்தல், பிரச்சினைகளை இலகுவாகக் கையாளுதல் என்பனவாகும்.

ஆசிரியரது வகிபாகம் என்பது மாணவரது தேவை, விருப்பு என்பவற்றைக் கொண்டு அவர்களை தனது பாடத்தின் பக்கம் கவர்ந்திழுப்பதற்காகத் தன்னை உருமாற்றிக்கொண்டு அந்த மாணவரது கற்றலுக்கு உதவுவதாகும். பாடசாலைக் கல்வியின் ஒவ்வொரு செயன்முறையும் மாணவரிடையே ஆளுமைத் திறமையைக் கட்டியெழுப்புவதாக இருக்கவேண்டும். இதற்குக் குழுக் கலந்துரையாடல், விவாதத்திற்கான களநிலைமைகளை ஆசிரியர்கள் அமைத்துக் கொடுத்தல், தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், உள்ளார்ந்த திறன்களை வெளிக்கொணர்தல், சரியானதைத் தவறானதிலிருந்து பிரித்தறிய முடியாத நிலையிலுள்ள பிள்ளைகளிடம் சிறப்பான சிந்தனைத்திறன் வளர்வதற்குப் பகுப்பாய்வுச் சிந்தனை, தர்க்க ரீதியான சிந்தனைத் திறன்கள் என்பன வளர்த்தெடுக்கப்படவேண்டும்.

ஆசிரியர்கள் திறம்படக் கற்பிக்க 12 திறன்கள் அவசியமாகின்றன. மாணவர்களை நிர்வகிக்கவும், வழிகாட்டவும் தேவையான ஒழுக்கத்திறன், ஆழ்ந்த அக்கறை, பொறுமை, பரிவுகாட்டி நல்ல உறவை மாணவருடன் பேணுவதற்கும் இடையூறு விளைவித்தல் ஆபத்து விளிம்பிலுள்ள மாணவர்களைக் கற்றல் சூழலுக்குள் உள்வாங்கி வகுப்பறையைக் கற்றல் கவின்நிலைக்கு ஒழுங்காக வைத்திருக்கக்கூடிய வகுப்பறை முகாமைத்துவத் திறன், மாணவரது புரிதலைக் கவனிக்க, கற்றல் திறன்களை அறிய, உள்ளார்ந்த திறன்களை அறிய உதவும் கண்காணிப்புத் திறன், மாணவர்களைக் கற்றலில் ஈடுபடச் செய்ய, சுவாரஸ்யமாகச் செயற்பட, மாணவர் நலன்களில் அக்கறை காட்ட உதவும் ஈடுபாட்டுத் திறன், ஆசிரியர்கள் தம் பேச்சுத் திறமையில் கவனஞ் செலுத்த, ஆசிரியர் மாணவரிடையேயுள்ள சந்தேகங்களைத் தீர்க்க, மாணவர் முன்னேற்றம் பற்றிக் கலந்துரையாட, பெற்றோர் ஆசிரியர்கள் தொடர்ந்து தொடர்பில் இருக்கத் தேவையான மாணவர் மற்றும் பெற்றோருடனான ஆசிரியர் தொடர்புத் திறன், கற்பித்தலில் ஆர்வமிருக்க, மாணவர் நடத்தையில் கவனஞ் செலுத்த, மாணவருக்கேற்ற கற்பித்தல் முறைகளைக் கையாளக்கூடிய கற்பித்தல் திறன், பாடத்திட்ட மாற்றங்களை அறிந்து அதற்கேற்பத் தம்மைத் தயார்படுத்த, தாம் கற்பிக்கும் பாடத்தில் தேர்ச்சி பெற வழிவகுக்கும் பாடவிடய நிபுணத்துவத் திறன், உரிய நேரத்திற்குப் பாடசாலை செல்ல, ஒதுக்கப்பட்ட பாடநேரத்துள் எடுத்த விடயத்தைக் கற்பிக்க, உத்தியைக் கையாள, பயிற்சிகளை வழங்க, தரமான கல்வியை வழங்க, பின்பற்றும் நேர முகாமைத்துவத் திறன், நேர்மறை அணுகுமுறையைப் பின்பற்ற, எடுத்த நோக்கத்தை நிறைவு செய்ய, தெளிவான திட்டமிடல் திறன், கட்டுப்பாடற்ற கற்பித்தலுக்கு உதவக்கூடிய குழு வீரராக இருக்கும் திறன், மாணவர்களைக் கற்றலில் முழுமையாக ஈடுபடுத்த ஒழுக்கசீலராக மாற்ற ஒழுங்கான வரவை ஏற்படுத்த உதவும் ஊக்குவிக்கும் திறன்.

கல்வி முறைகள் மிகவும் வேகமாக வளர்ந்து செல்லும் அளவுக்கு மாணவர்களது ஒழுக்கமுறைகள் வளரவில்லையெனக் குறை கூறப்படுகின்றது. சமுதாய மேம்பாட்டிற்காகவும் இதில் கவனஞ் செலுத்தவேண்டும். ஆனால் கவனஞ் செலுத்த முடியாத நிலைக்கு ஆசிரியர்கள் தள்ளப்பட்டுள்ளனர். உதாரணமாகப் புத்தளம் பிரதான பாடசாலை ஒன்றில் மாணவரின் தலைமுடி தொடர்பில் ஆசிரியர் மாணவரைக் கண்டித்ததால் ஆசிரியரைக் கத்தியால் குத்திய சம்பவம் நடந்தேறியுள்ளதென முதற்கட்ட விசாரணைமூலம் தெரியவந்துள்ளதாகப் பொலிஸ் தெரிவித்துள்ளதாகப் பத்திரிகை வாயிலாக அறியப்படுகிறது. இதைப் பார்க்கும்போது ஆசிரியத் தொழில் சவால் நிறைந்ததா? என எண்ணத் தோன்றுகிறது. மேலும் இலங்கையில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 60% பேர் கையடக்கத் தொலைபேசிக்கு அடிமையாகியுள்ளனர். இவர்கள் இரவு நேரங்களில் தூக்கமின்றி எப்போதும் கவலையுடன் இருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளது. சிறுவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கைகளைச் சரியாக முன்னெடுப்பதில்லை. கைபேசிக்கு அடிமையாகும் சிறுவர்கள் வன்முறையில் ஈடுபடும் வகையில் நடக்கிறார்களென அறியப்படுகிறது. ‘சிறிய தவறுகளைத் திருத்திக்கொள்ளாவிட்டால் பெரிய தவறுகளைத் தவிர்க்க முடியாது’ என்கிறார் கன்பூசியஸ். தவறும் சரி, நோயும் சரி ஆரம்பத்திலேயே சரிசெய்துகொள்ளவேண்டும். ‘மனிதகுலம் உய்வதற்கான ஒரே நம்பிக்கை ஆசிரியர் பணியில்தான் அடங்கியிருக்கிறது’ என்கிறார் பேர்னாட்ஷா.

பாடசாலையின் வினைத்திறன் என்பது பரந்துபட்ட எண்ணக்கருவாகும். இதில் ஆசிரியர்கள் பங்கு பிரதானமாகவுள்ளது. இதன் பிரதான குறிகாட்டிகளாக மாணவரது அடைவு மட்டம், வினைத்திறனில் ஆசிரியரது கல்வித் தரம், நடத்தைப் பாங்கு, கற்பித்தல் முறையியல்கள், வகுப்பறைக் கட்டமைப்பு, நிதி மற்றும் வளங்களின் கிடைப்பனவு, ஆசிரியரது இயலுமை, மாணவரது ஆயத்தநிலை, பெற்றோர் ஆதரவு, நிறுவனக் கொள்கையாக்கங்கள், பௌதிக வசதிகள், தரமான தலைமைத்துவம், கற்கும் நேரம், மாணவரது ஆரோக்கியம், வரவு, இடைவிலகல் நிலை, செயலாற்றுகைத் தரம், தொழில் திருப்தி என்பன அடங்கும்.

ஒவ்வொரு ஆசிரியரும் சுயமாகச் சிந்தித்துத் தமது கடமைகளை உணர்ந்து செயற்படவேண்டும். நவீன உலகில் நிலவுகின்ற உலகமயமாக்கல் செயன்முறை, உலகக் கிராமம் ஆகிய எண்ணக்கருக்கள் கல்விக்குப் புதிய தொனிப்பொருளை அளித்துள்ளன. இதன் காரணமாக மாணவர்கள் சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய பரந்த அளவுத் தொகுதியை ஆசிரியர்கள் வழங்கவேண்டும். சிறந்த சிற்பிகளே சிறந்த சிற்பங்களை உருவாக்குவார்கள்.



natkunalingam@thaiveedu.com




பொதுவாக எல்லாக் குழந்தைகளும் ஒரே விதமான உடல், உள, சிந்தனைவளர்ச்சியைக் கொண்டிருப்பதில்லை. ஆளுக்காள் வேறுபட்ட மாற்றங்கள் வெளிப்படையில் தென்படுவதனை அவதானிக்கலாம்.

வாழ்வியல் செயற்பாடுகளாகட்டும், கற்றல் செயற்பாடுகளாகட்டும், சம வயதினரின் செயற்பாடுகளை எல்லாப் பிள்ளைகளும் ஒரே மாதிரியாக வெளிப்படுத்துவதில்லை. குறிப்பிட்ட வயதுக்கு இருக்க வேண்டிய நிறை, உயரம், துடிப்பு, சிந்தனை வளர்ச்சி போன்றன ஆளுக்காள் வேறுபடும். தனியாள் வேறுபாடு என உளவியலில் இது அழைக்கப்பட்டாலும் பெற்றோர்கள் தத்தமது பிள்ளைகளின் தனியாள் வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளாமல் ஏனைய பிள்ளைகளோடு தங்கள் பிள்ளைகளை ஒப்பிட முனைவது அல்லது தங்களது எதிர்கால கனவுகளை, ஆசை அபிலாசைகளைப் பிள்ளைகள் வழியாக நிறைவேற்றிக்கொள்ள முனைகின்ற பொழுதுதான் பெற்றோர், பிள்ளை உறவிலே விரிசல் ஏற்பட ஆரம்பிக்கின்றது.

குறிப்பாகக் கற்றல் செயற்பாடுகள் பிள்ளைகளுக்கு வெறுப்புக்குரிய ஒன்றாக மாறுவதற்கு வீட்டுச் சூழலில் பெற்றோரும் பாடசாலைச் சூழலில் வகுப்பாசிரியர் மற்றும் பாட ஆசிரியரும் மேலதிக வகுப்புகளில் கற்பிக்கக்கூடிய அனுபவம் உள்ள, அனுபவமற்ற ஆசிரியர்களும் காரணமாகின்றனர். போட்டித் தன்மை வாய்ந்த முன்னெடுப்புகள் காரணமாக பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

உதாரணமாக ஆரம்பப் பிரிவில் முதலாம் தரத்தில் இணைந்து கொள்கின்ற ஆறு வயது மாணவருக்கு அளவு கடந்த எழுத்து பயிற்சிகளை, சிந்தனைப் பயிற்சிகளைக் கொடுக்க முனைகின்ற பொழுது அவருக்கு கற்றல் செயற்பாடுகள் அலுத்துப் போகும். பாடசாலையும் கல்வியும் ஆசிரியர்களும் வெறுப்புக்குரிய ஒன்றாக மாறும்.

இன்னும் சற்று மேலே சென்றால் மூன்றாம் நான்காம் ஐந்தாம் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கும் அவர்களது உள வயதைக் கருத்தில் கொள்ளாது பாடப் புத்தகத்தின் சுமை போலவே அளவு கடந்த பயிற்சிகள் எழுத்தாக்கங்கள் வீட்டு வேலைகள் கொடுக்கின்ற பொழுது கற்றலிலே வெறுப்பு ஏற்படும்.

இன்னும் ஒரு படி மேலே சென்று பாடசாலையில் தொடரான பல பாடங்களை கற்கக்கூடிய ஆறாம் வகுப்பு முதல் 11-ம் வகுப்பு வரையான மாணவர்களுக்கு இரவு நேரத்தில் தான் கற்றதை மீட்டிப் படிக்க சந்தர்ப்பம் கொடுக்காமல் தினம் தினம் சகல பாடங்களிலும் வீட்டுவேலைகள் ஒப்படைகள் கொடுக்கப்பட்டால் அந்தப் பிள்ளையினுடைய கற்றல் மனோநிலை தலைகீழாக மாறிவிடும்.

இதை விடவும் பயங்கரமான ஒன்றுதான் பாடசாலையில் நேரடி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளைத் தாண்டி, வீட்டு வேலைகளோடு மேலதிக குறிப்புகளை, பயிற்சிகளை இணைய வழியாக whatsapp வழியாக அனுப்புகின்ற பொழுது அல்லது பிரதி எடுக்கச் சொல்லி print அனுப்புகின்ற பொழுது, தேடிக் கொண்டு வரச்சொல்லி அனுப்புகின்ற பொழுது பிள்ளையும் பிள்ளையின் பெற்றோரும் படாதபாடு படுகின்றனர். இது பெற்றோருக்கு ஆசிரியர்கள் மீதிலும் பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் மீதிலும் வெறுப்பை உருவாக்கிவிடும். கல்வி மீது கடுப்பும் காரசாரமான எதிர் மனப்பான்மையும் உருவாவதற்கு ஆசிரியரின் முறையற்ற முகாமைத்துவமும் பெற்றோரின் அழுத்தமும் கண்டிப்பும் நிச்சயம் காரணமாக அமையும்.

கற்றல் என்பது மகிழ்ச்சிக்குரிய செயற்பாடாக இருக்க வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை நீடித்த கல்விக்கு அது இட்டுச் செல்வதோடு வாழ்க்கைக்கும் வழிகாட்டும். வாழ்வின் சவால்களை எல்லாம் நெஞ்சுரத்தோடு நேருக்கு நேர் எதிர் கொண்டு வென்றெடுக்க அது வழிகாட்டும்.

வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் பயன் தராத ஏட்டுச் சுரைக்காய் போன்ற போட்டித் தன்மை வாய்ந்த பரீட்சை மையகலைத்திட்டமும் கல்வி முறையும் பாடநூல்களும் மாணவர்களுக்கு அழுத்தத்தையும் சுமைகளையும் தான் கொடுக்கும். அது வாழ்க்கைக்கு எந்தவிதமான வழிகாட்டலையும் தராது. கல்வி பற்றிய எதிர்மறையான உணர்வுகளை உருவாக்கிவிடும். பாட சாலைகள் மீது, ஆசிரியர்கள் மீது வன்மத்தை கக்கிவிடக்கூடிய துணிச்சலைக் கொடுத்து விடும். தன்னைவிட மிகச் சிறப்பாக கற்கக்கூடிய மீத்திறன் கொண்ட மாணவர்கள் மீது வெறுப்பை காறி உமிழச் செய்யும். அவர்களின் மீது அத்துமீறும் நடவடிக்கைகளில் கூட ஈடுபட வழியமைக்கும்

இலங்கைச் சூழலில் நடைபெறக்கூடிய தேசிய பரீட்சைகளில் பரீட்சை முடிவடைந்த பிற்பாடு மாணவர்களின் பிழையான

நடத்தைகளை சமூக ஊடகங்கள் வாயிலாக காணக்கூடிய தாக உள்ளது. பாடசாலையின் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கின்றார்கள், தத்தமது பண்பாடுகளை மறந்து கேவலமாக நடந்து கொள்கின்றார்கள். ஒழுக்க விழுமியங்களில் எவ்வளவு ஓட்டைகள் உள்ளன? பாடசாலையை விட்டு பரீட்சை எழுதி வெளிவருகின்ற பொழுது எத்தகைய முறையற்ற நடத்தைகள் வெளிப்படுகின்றன? என்பதனைப் பார்க்கும்பொழுது சமயக்கல்வி போலவே ஒழுகலாறு, விழுமியக் கல்வி போன்றன இல்லாமை அல்லது முறையாகவும் தொடராகவும் வழங்கப்படாமையை அவதானிக்கலாம். மாணவர்கள் அவதானிக்கப்படாமையாலும். கண்காணிக்கப்படாமையாலும் புதிய தலைமுறையின் ஒழுக்கத்தில் ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சியையும் கோளாறுகளையும், குறைபாடுகளையும் காணக்கூடியதாக உள்ளது.

13 வருடக் கல்வியானது அவரவர் தனிப்பட்ட குடும்ப, சமூக வாழ்க்கைக்கு பயன்படுவதாக அமைய வேண்டும். இலகுவானதிலிருந்து சிரமமானதை நோக்கி எம்மை அழைத்துச் செல்லக்கூடியதாக இருக்க வேண்டும். எமக்கு விருப்பமான விடயங்களை, அனுபவங்களை அடிப்படையாக வைத்து கற்றல் செயற்பாடுகளைக் கட்டம் கட்டமாக கட்டி எழுப்ப வேண்டும். இயற்கைச் சூழலை, வாழ்க்கை முறைமைகளை, அவதானங்களை அடிப்படையாக வைத்து கற்றல் செயற்பாடுகள் அமைகின்ற பொழுதுதான் அது விருப்பத்துக்குரிய ஒன்றாக மாறும். இல்லாதபோது கற்றலை வெறுக்கச் செய்கின்ற ஆசிரியர்களை தாறுமாறாகப் பேசக்கூடிய, இம்சிக்கக்கூடிய, விமர்சிக்கக்கூடிய ஒரு தலைமுறை, பாடசாலைகளில் மிக வேகமாக உருவாகும்.

இணைய பாவனை காட்டாற்று வெள்ளம் போல பெருக்கெடுத்து ஓடி மூலை முடுக்கெங்கும் வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி இருக்கின்ற நிலையில் சமூக ஊடகங்களின் பாவனை விரல் நுனியில் எல்லோரையும் ஆட்டிப் படைக்கின்ற நிலையில் செயற்கை நுண்ணறிவு கொடி கட்டி பறக்க ஆரம்பித்திருக்கின்ற நிலையில் வளரிளம் தலைமுறையான இன்றைய அல்பா ஜெனரேஷன் எந்தளவு தூரம் கல்வி வழியாக ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் பக்குவத்தையும் பெற்றுக் கொள்ள முடியும்.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசையும் ஆர்வமும் விருப்பமும் ஏற்படக்கூடிய மாணவரமைப்பு உருவாக வேண்டும். சுய கற்றலுக்கு மாணவர்களைத் தூண்டக்கூடிய வகையில் பெற்றோரும் பாடசாலை சமூகமும் இருக்கவேண்டும். மாணவர்களுக்கு அழுத்தத்தையும் அலுப்பையும் வெறுப்பையும் தரக்கூடியதாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளக் கூடாது. கற்றலைச் சுய விருப்பமான ஒன்றாக அன்றாட கருமமாக கருதி செய்யக்கூடிய அளவு அதற்குரிய பக்குவத்தை பாடசாலைகள் வழங்காவிட்டால் கல்வி மூலம் உருவாக்கப்படக்கூடிய தலைமுறை, செயற்கை நுண்ணறிவால் உருவாக்கப்பட்ட உணர்வற்ற சமூகமாக நிச்சயம் மாறிவிடும். இது சமூக மாற்றத்துக்கு ஆபத்தான எச்சரிக்கை ஒலியாக நிச்சயம் அமையும்.

கற்றல் செயற்பாடுகளும் ஆசிரியர்களும் பாடசாலைகளும் வெறுக்கின்ற அளவு மாணவர்களுக்கு பாடசாலைக்கு வெளியிலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும். புத்தக சுமைகளால் அழுத்தங்களை சுமந்து திரிகின்ற மாணவச் செல்வங்கள் சற்று நிதானமாக விளையாடி உடல் ஆரோக்கியத்தை வளர்க்கவும் கலை ஆர்வத்தை மேம்படுத்தவும் ஏற்ற வகையில் அவர்களுக்கு வெளிச் சூழலும் அமைய வேண்டும்.

பாடசாலை முடிந்து வீடு வந்தாலும் சற்று ஓய்வெடுக்கவோ, விளையாடவோ, உறங்கவோ முடியாத அளவுக்குச் சகல பாடங்களுக்கான வீட்டு வேலைகளை இணைய வழியாக அனுப்புவது அம்மாணவர்களை அழுத்தத்துக்கு ஆளாக்கும். அவர்களது ஆரோக்கியத்தையும் பாழாக்கும். கற்றலை விருப்புக்குரிய ஒன்றாக, சுவையான ஒன்றாக மாற்ற வேண்டியவர்களே அதனை வெறுப்புக்குரிய ஒன்றாக, கசப்பான ஒன்றாக காட்டுவது அங்கீகரிக்கத்தக்க ஒன்றல்ல. பெற்றோராகிய நாமும் இதில் அதீத கவனம் செலுத்த வேண்டும்.



bisthamy.ahamed@thaiveedu.com






தொழில்நுட்பச் சாதனங்களின் பயன்பாடு என்றுமில்லா தவகையில் கல்வியில் ஆதிக்கம் செலுத்திவருகின்றது. நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சி உற்பத்தித்துறையில் மட்டுமல்ல கல்வித்துறையிலும் தவிர்க்கமுடியாதபடி ஆதிக்கத்தைச் செலுத்துவதைக் காணமுடிகின்றது. 'என்னிடம் மாணவர்களை ஒப்படையுங்கள், நான் சமுதாயத்தையே மாற்றிக் காட்டுகின்றேன்' என்ற நிலைமையை மீட்டுப்பார்க்கத்தக்கதாக, இன்று தொழில்நுட்பத்தின் தாக்கம் சமூகத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் ஆழ வேரூன்றியுள்ளது அனைவரும் அறிந்ததே. கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் அனைத்து மட்டங்களிலும் இன்று தொழில் நுட்பம், செயற்கை நுண்ணறிவுப் புலம் ஆக்கிரமித்துள்ளது என்பது மறுப்பதற்கில்லை. மாணவர்களின் இயல்பான நுண்ணறிவை மேம்படுத்த இந்த செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுகின்றது. செயற்கை நுண்ணறிவின் வியாபிதம் இன்று உலகை அச்சுறுத்தக்கூடிய அளவிற்கு பல்வேறு பகுதிகளிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்திவருகின்றது. இந்த செயற்கை நுண்ணறிவுப்பயன்பாடு என்பது மனிதர் செய்யக்கூடிய வேலைகளை மிகத்துரிதமாகவும், தவறற்றதாகவும் செய்து நிறைவேற்றும் சக்தி வாய்ந்ததாக மாறிவருகின்றது. தொழில்நுட்பத் தேவைகளும் பயன்பாடும் இன்றுநேற்றல்ல மிக நீண்டகாலமாகக் கண்டறியப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்பது வரலாறாகிவிட்டது. கணினி மட்டும் பயன்பட்ட நிலை மாறி பல்வேறு தொழில்நுட்பச் சாதனங்கள் கல்விப் புலத்தை ஆட்கொண்டுள்ளமை வெளிப்படை. இத்தகைய செயற்கை நுண்ணறிவுச் சாதனங்களின் பயன்பாட்டை நடைமுறைக்குக் கொண்டு வந்த பின்னர் அவற்றைத் தடைசெய்வது என்பது மிகவும் சிக்கலானதும் பின்விளைவுளை ஏற்படுத்தக்கூடியது மாகும். மதுவுக்கு அடிமையாகிவிட்ட ஒருவரை அதனை நிறுத்திக்கொள்ள எத்துணை சிரமங்களையும் சிரம பரிகாரங்களையும் மேற்கொள்ளவேண்டுமோ, அதே நிலைக்கு மாணவர்களையும் உள்ளாக்கவேண்டிய நிலைமைகளை எதிர்கொள்ளவேண்டியுள்ளது.

இன்று ஒன்ராறியோ பள்ளிகளில் செப்ரெம்பர் தொடக்கம் செல்லிடத் தொலைபேசி பாவனைகளில் புதிய விதிகள் நடைமுறைப்படுத்தப்படும் என கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பில் போதிய தெளிவு இல்லை என்று விமர்சகர்கள் கூறுகின்றனர். பாடசாலைககுக் கொண்டுவரலாம், வகுப்பறையில் இடைவேளைகள் தவிரப் பாவிக்கக் கூடாது எனக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடு மாணவர்களின் உளத்தில் தாக்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது உளவியலாளர்களின் கருத்தாகவும் உள்ளது. குழந்தை பிறப்பு முதலே இத்தகைய தொழில்நுட்பச் சாதனங்களைப் பயன்படுத்தி வருவதற்கப் பெற்றோரே வழிவகுக்கின்றனர். குழந்தகளைப் பராக்குக்காட்டுவதற்கு அல்லது அவர்களின் எண்ணங்களைத் திசை திருப்புவதற்குப் பயன்படுத்தி வருகின்றனர். குழந்தை கேட்கின்றது எனச் செல்லிடபேசியைக் கொடுக்கும் பெற்றோர், அதனை அவர்கள் விளையாட்டுப் பொருளாக உபயோகிக்கக் கூடியளவிற்கு விட்டுவிடுகின்றனர்.

மாணவர்கள் வகுப்பறையில் செல்லிடப்பேசிகளை மறைத்தும் அணைத்தும் வைத்திருக்கவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் பணியானது வகுப்பு நேரத்தில் மட்டுந்தான் இதனைக் கவனத்திற் கெடுத்துக்கொள்ளுவதா என்பது ஒரு கேள்வி. அடுத்து வகுப்புக்கு வெளியே இடைவேளைகளில் மாணவர்கள் பாவிக்கலாம் என்பது அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பாகவும் காணமுடியும். வகுப்பில் செல்லிடப்பேசிகளைப் பயன்படுத்துவதைத் தடைசெய்யும் புதிய விதிகள் ஒன்ராறியோ முழுவதிலும் உள்ள பள்ளிகளில் நடைமுறைக்கு வருகின்றன, ஆனால் இந்த விதிமுறைகள் எவ்வாறு செயற்படுத்தப்படும் அல்லது மேற்பார்வை செய்யப்படும் என்பதும், அது எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்பதும் தெரியவில்லை. ஏப்ரலில், ஒன்ராறியோ அரசாங்கம் வகுப்பறைகளில் செல்லிடப்பேசி பயன்பாடு தொடர்பான நடவடிக்கைகளை தரப்படுத்துவதற்கான திட்டத்தை அறிவித்தது. வகுப்பு நேரத்தில் செல்லிடப்பேசிகளின் பாவனை கவனச் சிதறல்களை ஏற்படுத்தும். இது முழு வகுப்பின் கவனத்தையும் ஈர்ப்பதாகவும் கருதப்பட்டு, அதனை அகற்ற விரும்புவதாகத்தத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்ராறியோ மாகாணம் 2019-ம் ஆண்டில் செல்லிடப்பேசிகளில் சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தாலும், புதிய விதிகள் தரத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட வகுப்புப்பிரிவினருக்கு குறிப்பிட்ட வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளன. பாடசாலை ஆரம்பித்ததும், மழலையர் பள்ளி முதல் 6-ம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள் பள்ளி நாள் முழுவதும் செல்லிடப்பேசிகளை நிறுத்தியும், பார்வைக்கு மறைத்தும் வைத்திருக்க

வேண்டும். 7-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு வகுப்பு நேரத்தில் செல்லிடப்பேசி பயன்படுத்த முடியாது. கல்வியாளர் அனுமதித்தால் அல்லது மாணவர்களுக்கு சிறப்புக் கல்வி அல்லது மருத்துவத் தேவைகள் இருந்தால் மட்டுமே செல்லிடப்பேசிகளைப் பயன்படுத்த முடியும் என்று மாகாண அரசு அறிவித்துள்ளது. கவனச்சிதறல்களைக் குறைக்கும் ஒட்டுமொத்த நோக்கமும் வரவேற்கத்தக்கது என்றாலும், விதிகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் தெளிவும் அவற்றைச் செயல்படுத்த வேண்டிய கல்வியாளர்களுக்கு முறையான வழிகாட்டல்களும் ஒத்துழைப்பும் வழங்கப்படவேண்டும் என்பது ஆசிரிய சங்கங்களின் ஆலோசனையாகும்.

'தொலைபேசிகளின் பயன்பாட்டுக்கான கட்டுப்பாடு விதிகளின் அர்த்தம் என்னவென்று பாடசாலை அதிபர்களுக்குத் தெளிவில்லை. பாடசாலைச்சபைகள் அனைத்துப் பிராந்தியங்களிலும் உள்ளன', என்று ஒன்ராறியோ ஆங்கிலக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ரெனே ஜான்சன் இன் டி வால் கூறினார். 'எனக்கு அருகில் இருக்கும் ஆசிரியர்கள் என்னைத் தொலைபேசியில் அழைக்கிறார்கள்' என்றால், ஆசிரியர்கள் செல்லிடப்பேசிகளைப் பயன்படுத்தத் தடையில்லையா என்ற கேள்வியும் எழுகின்றது. ஆசிரியர்களுக்கு மிகுந்த சிரமத்தையும் கவன ஈர்ப்பையும் இது ஏற்படுத்துகின்றது என்பது ஆசிரியர்கள் சார்பாக எழும் குற்றச் சாட்டாகும். விதிகளை கடைப்பிடிக்காத மாணவர்கள் வகுப்பறையில் பாதுகாப்பான இடத்தில் தங்கள் தொலைபேசிகளை வைக்கும்படி கேட்கப்படுவார்கள் என்று அரசாங்கம் கூறியுள்ளது. அவர்கள் இணங்கவில்லை என்றால், அவர்கள் முதல்வரின் அலுவலகத்திற்குச் செல்லுமாறு கேட்கப்படுவார்களே ஒழிய, வேறு மாற்று நடவடிக்கைகள் எவை என்பதில் தெளிவில்லை. ஆசிரியர்களின் எல்லை எவ்விதம் வரையறுக்கப்படுகின்றது என்பதும் தெளிவற்றதே. ஒன்ராறியோவின் தொடக்கநிலை ஆசிரியர் கூட்டமைப்பின் முதல் துணைத் தலைவர் டேவிட் மாஸ்டின், விதிகள் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கும் என்பது குறித்து கேள்விகள் உள்ளன என்றார்.

வழமையாக மாணவர் ஒருவர் அதிபரிடம் அனுப்பப்பட்டால் ஐந்து நிமிடங்களுக்கு அங்கு காட்சிப்பொருளாக மாற்றப்படுகின்றார். அதன்பின்னர் எந்தவித தண்டனையும் இன்றி வகுப்பிற்கு அனுப்பப்படுகின்றார். அதிபர் அறையில் தடுத்து வைத்திருப்பது மாணவருக்கு வழங்கும் தண்டனையாகும். இதற்குமேல் எதுவும் நடப்பதில்லை. மாணவர் இதற்குப் பழக்கப்பட்டுத் தொடர்ந்தால், பெற்றோர் அழைக்கபட்டு முறையிடப்படும். அதன்பின்னரும் தொடர்ந்தால் பாடசாலையிலிருந்து இடை நிறுத்தும் நடவடிக்கை வரை செல்லலாம். ஒன்ராறியோ இடைநிலைப் பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பின் தலைவர் கரேன் லிட்டில்வுட், ஆசிரியர்கள் மீதான சுமை குறித்து கவலைப்படுவதாகக் கூறினார். ஆசிரியர்களின் பணிச்சுமை அதிகரிக்கப்படு தாகக் குறிப்பிடுகின்றார். சில வாரங்களுக்கு முன்பு கல்வி அமைச்சர் ஜில் டன்லப், புதிய விதிகளுடன் அரசாங்கம் குறைந்தபட்சத் தரங்களை நிர்ணயித்துள்ளதாகவும், 'கல்வியாளர்கள் மற்றும் அதிபர்கள் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பார்கள்' என்றும் கூறினார்.

'இது எங்கள் வகுப்பறைகளில் நடக்கும் கலாச்சார மாற்றம்' என்ற அவர், நான் கல்லூரிப் பகுதியில் ஒரு கல்வியாளராக இருந்தேன், ஆனால் வகுப்பறையில் செல்லிடப்பேசிகள் ஏற்படுத்தக்கூடிய கவனச்சிதறலை நான் நேரடியாகப் பார்த்தேன். செல்லிடப்பேசிகளைப் பாவிப்பதில் நன்மையும் உண்டு தீமையும் உண்டு. செல்லிடப்பேசிகளை வகுப்பறைகளில் தடைவிதித்தால் அவற்றைப் பாவிப்பதுபற்றி பிள்ளைகளுக்குப் பயிற்றுவிக்கமுடியாமல் போகும் என்ற குறையும் ஆசிரியர்கள் மத்தியில் இருந்து எழாமல் இல்லை. தொழில்நுட்பம்



ஒரு சக்திவாய்ந்த கற்றல் கருவி. சரியாகப் பயன்படுத்தும் போது அது கருத்துகளை உயிர்ப்பிக்க வைக்கிறது. இருப்பினும், வகுப்பறையில் செல்லிடப்பேசி பயன்படுத்துவது குறித்து கவலைகள் எழுந்துள்ளன. வகுப்பறையில் செல்லிடப்பேசி பயன்படுத்துவதை எதிர்ப்பவர்கள் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாட்டில் இருந்து கவனத்தைச் சிதறடிப்பதாக கருதுகின்றனர். மறுபுறம், வகுப்பறையில் செல்லிடப்பேசி பயன்பாட்டை ஆதரிப்பவர்கள் பாடங்களில் சரியாக ஒருங்கிணைக்கப்படும் போது அவை பயனுள்ள கற்றல் கருவிகளாக இருக்கும் என்று நம்புகிறார்கள்.

செல்லிடப்பேசிகளின் பாவனையால் ஏற்படும் பாதகமான விளைவுகளைப் பின்வருமாறு வரையறுக்கின்றனர்

## ஆசிரியர் மாணவர் நேருக்கு நேர் தொடர்பு குறைதல்:

பாடங்களை எளிதாக்க செல்லிடப்பேசிகள் மற்றும் பிற டிஜிட்டல் சாதனங்களை அதிகம் சார்ந்திருப்பது ஆசிரியர்களுக்கும் அவர்களின் மாணவர்களுக்கும் இடையே நேருக்கு நேர் தொடர்பு கொள்ளும் அளவைக் குறைக்கும். உண்மையில், மாணவர்கள், கணினிகள் மற்றும் கற்றல் என்ற தலைப்பில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பு (OECD) வெளியிட்ட ஓர் அறிக்கை, கணினிகள் உண்மையில் கற்றலில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதைக் குறிக்கும் ஒரு ஆய்வை எடுத்துக்காட்டுகிறது. இவ்வமைப்பு கணினிப் பாவனைகளில் கவனம் செலுத்தினாலும், இந்த கண்டுபிடிப்புகள், அனைத்து வகையான தொழில்நுட்பச் சாதனங்களின் பயன்பாட்டுக்கும்

பொருந்தும் எனப்படுகின்றது. வகுப்பறையில் செல்லிடப்பே சிகள் இடம் பெற்றுள்ளன. இருப்பினும், அவற்றின் பயன்பாடு நேருக்கு நேர் தொடர்புக்கு தீங்கு விளைவிப்பதாக இருக்கக் கூடாது. உணர்ச்சி, மொழி மற்றும் சமூக திறன்களின் வளர்ச் சிக்கு நேருக்கு நேர் தொடர்பு முக்கியமானது. ஒரு கலப்பு அணுகுமுறை, வகுப்பறையில் செல்லிடப்பேசி பயன்பாட்டி னால் நேருக்கு நேரான தொடர்பு ஆதரிக்கப்படுவதை உறுதி செய்கிறது என்பதை ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

## மாணவர்களைப் பணியில் வைத்திருப்பது கடினம்:

முப்பது மாணவர்களைக் கொண்ட ஒரு வகுப்பறையைக் கற் பனை செய்து பாருங்கள். ஆசிரியர் அவர்களின் செல்லிடப் பேசிகளைப் பயன்படுத்தி இணைய ஆராய்ச்சி தேவைப்படும் செயல்பாட்டை அவர்களுக்கு வழங்கியுள்ளார். அனைத்து மாணவர்களும் வேலையில் பிஸியாக இருப்பதாகத் தெரிகி றது, ஆசிரியர் அவர்களைக் கண்காணிக்க சுற்றி வருகிறார். இருப்பினும், வகுப்பின் பின்புறத்தில் அமர்ந்திருக்கும் ஜேன், இன்ஸ்டாகிராமில் தனக்குப் பிடித்த பிரபலங்களின் புகைப்ப டங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தனது ஆசிரியர் எப்போது வருகிறார் என்பதை அவள் அறிந்திருக்கிறாள், மேலும் வேலையில் பிஸியாகத் தோன்றுவதற்காகத் தேடு பொறிக்கு விரைவாக மாறுகிறாள். இந்த காட்சி பொதுவா னது.

செல்போனைப் பயன் படுத்தும்போது ஒவ்வொரு குழந்தை யையும் பணியில் வைத்திருப்பது கடினம். வரையறுக்கப்பட்ட அம்சங்களைக் கொண்ட பள்ளியால் வழங்கப்படும் மடிக்க ணினிகளைப் பயன்படுத்துவது, குறிப்பிட்ட இணையதளங்க ளைத் தடுப்பது மற்றும் ஒவ்வொரு மாணவரின் திரைகளை யும் கண்காணிக்க ஆசிரியர் கணினி அல்லது பிறசாதனத் தைப் பயன்படுத்த அனுமதிப்பது சிறந்த தீர்வாகும்.

## டிஜிட்டல் சாதனங்களின் தீங்கான விளைவுகள்:

மாணவர்கள் தொடர்ந்து டிஜிட்டல் சாதனங்களுக்கு ஆளாகி றார்கள். அவர்கள் எப்போதும் செல்லிடப்பேசிகள், tablets, கணினிகள் அல்லது தொலைக்காட்சியில் எதையாவது பார்த்துக் கொண்டிருப்பார்கள். டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் அதிகப்படியான பயன்பாடு 'நமது மன மற்றும் உடல் ஆரோக்கியம், நரம்பியல் வளர்ச்சி மற்றும் தனிப்பட்ட உறவு களைப் பாதிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள் ளனர். வகுப்பறையில் அதிக 'திரை நேர'த்தைச் சேர்ப்பது சிக்கல்களை மேலும் அதிகரிக்கலாம். தொலில்நுட்பச் சாத னக் கல்விவளர்ச்சியானது தொலைபேசியின் பாவனையை அதிகரிக்கச் செய்துள்ளது எனினும் அதனால் ஏற்படும் எதிர் விளைவுகள் அதிகமாகவே காணப்படுகின்றது. தொலைபேசி யைக் கையில் வைத்திருக்கும் பிள்ளைகள் என்ன செய்கின் றார்கள் என 35 பிள்ளைகளையும் ஓர் ஆசிரியர் மேற்பார்வை செய்ய முடியாத நிலைமை காணப்படுவது தவிர்க்கமுடி யாது. பத்து ஆண்டுகளுக்கு முன்னர் 16 மாணவர்களாக இருந்த ஒரு வகுப்பு, இன்று கல்வி அமைச்சின் கல்விமீதான துண்டு வெட்டு, மிக மோசமாகப் பாதித்துள்ளது என்பதும் மறுப்பதற்கில்லை. அரசாங்கவரவு செலவுப் பாதீட்டில் எல் லாப் பகுதிகளுக்குமான செலவினங்கள் அதிகரிக்கப்பட்டுள் ளபோதிலும் கல்விக்கான செலவினம் ஒரு போதும் விழுக் காட்டிற்கு மேலாகச் செல்லவில்லை என்பது நிதர்சனமான உண்மை. கல்வியைத் தனியார் மயப்படுத்துவதில் ஒன்ரா- றியோ அரசாங்கம் முனைப்புக்காட்டுகின்றதே ஒழிய, அதற் கான தரத்தை உயர்த்த கல்விமீதான முதலீட்டை அதிரிக்க முன்வருவதில்லை.

தனியார் கல்விநிலையங்களை ஊக்குவித்து வெளிநாட்டு மாணவர்களைக் கவர்ந்து அதன்மூலம் நாட்டின் வருவாயை யும் தனியார் வருவாயையும் பெருக்க முனைப்புக்காட்டும் அரசுகள், மாணவர்களின் ஒழுக்க நடவடிக்கைகளுக்கான மேம்பாட்டினை அதிகரிக்கவோ அன்றி அவற்றில் தாக் கத்தை ஏற்படுத்தவோ முனைவதில்லை.

பெருந்தொகையான மாணவர்களின் வரவு வாடகைக் குடியி ருப்புக்களுக்கான தேவைகளை மிக மோசமானஅளவிற்கு அதிகரித்துள்ளமையையும் வீட்டுக்கட்டுமானச் செலவினம், வாடகை என்பவற்றை அதிகரித்துள்ளமையையும் நோக்கும் போது கல்வியைப் பெற்றுக்கொள்ள வரும் மாணவர்களுக் கான வாடகையை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டி யது அரசின் பொறுப்பாகும். ஆனால் வீட்டின் விலைகள் அதி கரித்து, கட்டுமானப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு வாடகை வீடுகளுக்கான தட்டுப்பாடும் நிலவுவதனால் வெளிநாட்டு மாணவர்கள் இருவர் தங்கும் அறைகளில் எட்டு அல்லது பத் துபேர் வரையில் தங்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார் கள் என்பதும் கல்வியின் தரத்தையும் அடைவையும் குறைத் துள்ளமை கனடாநோக்கி வரும் மாணவர்களைப் பாதிப்பது தவிர்க்கபட முடியாதுள்ளது.

தொழில் நுட்பத்தின் விரைவான கண்டுபிடிப்புகள், பாவனை களின் விளைவுகள் நன்மைகளைத் தரும் அதேவேளை தீமைகளையும் தருகின்றன என்பது மறுப்பதற்கில்லை. பல பெற்றோர்கள் தொலைபேசிப் பாவனையை வகுப்பறையில் கட்டுப்படுத்துதல் பிள்ளைகளின் கவன ஈர்ப்புச் சிதல்களைக் கட்டுப்படுத்தி கல்வியில் கவனம்செலுத்த வைக்கும் என நம்பு கின்றர். பல பெற்றோர்கள் தொலைபேசிகளை வாங்கிக் கொடுத்துவிட்டுக் கட்டுப்படுத்த முடியாமல் திண்டாடுவதை யும் காணமுடிகின்றது. தொழில்நுட்பச் சாதனங்கள் பல்கிப் பெருகி அனைத்துச் செயல்களையும் ஆக்கிரமித்துள்ளமை, அதிலிருந்து வெளியே வரமுடியாதவாறு ஈர்ந்து இழுத்து வரு கின்றன. பாடசாலைக் கல்வியில் மட்டுமல்ல அனைத்து மட் டங்களில் இவற்றின் தேவையும் பயன்பாடும் தவிர்க்கமுடியா தவாறு உள்ளன. எனவே பெற்றோர் பிள்ளைகளின் மேல் மிகுந்த அக்கறையோடு கவனம் செலுத் துதல் அவசியமாகின்றது.



sivapalu@thaiveedu.com



# தொழினுட்ப வசதியும் தொலைபேசியும்

**– சுப்ரமணியம் ஜெயசீலன்**

மானுட குலத்தின் மகத்துவங்களை தரணியெங்கிலும் தடம்பதித்திடக்கூடிய பல்வேறு அற்புத தொழில்நுட்பப் படைப்புக்கள் பற்றிய தகவல்கள் ஒவ்வொரு நொடியும் நம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தி மகிழ்ச்சியில் திளைக்கச் செய்கின்றது என்றால் மிகைப்படப் போவதில்லை. அந்த வகையில் தொலைத்தொடர்பாடல் துறையின் முக்கிய மைல் கற்களில் ஒன்றாக கருதப்படக்கூடிய அலைபேசி உலகில் தனக்கென தனியிடம் பதித்து வீறு நடை போடும் ஆப்பிள் நிறுவனம் அண்மையில் புதிய தொழில்நுட்ப அம்சங்களுடன் கூடிய சாதனங்களை அறிமுகம் செய்திருந்தது, அந்த சாத னங்கள் பற்றிய ஓர் ஊடாடலாக இந்த பத்தி அமைகின்றது.

ஆப்பிள் நிறுவனம் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய ஐபோன் 16 ஸ்மார்ட்பேசி உள்ளிட்ட பல்வேறு சாதனங்களை யும் தொழில்நுட்பங்களையும் அறிமுகம் செய்துள்ளது. சில சுவாரஸ்யமான மேம்படுத்தல்களுடன் வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையிலான சாதனங்களைச் சந்தையில் அறிமுகம் செய்யும் ஆப்பிள் நிறுவனம், வாடிக்கையாளர்கள் தங்களது பழைய சாதனங்களை மாற்றீடு செய்து புதிய மேம்படுத்தப் பட்ட சாதனங்களைக் கொள்வனவு செய்வார்கள் என நம்பிக் கையையும் வெளியிட்டுள்ளது.

கடந்த 2020-ம் ஆண்டில் 5ஜீ (5G) அலைக்கற்றைத் தொழில் நுட்பத்தைக் கொண்ட முதல் ஆப்பிள் ஸ்மார்ட்பேசியான iPhone 12 சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, நிறு வனம் வாடிக்கையாளர்களுக்கு இற்றைப்படுத்தப்பட்ட பல் வேறு தொழில்நுட்ப மாற்றங்களையும் வசதிகளையும் அறிமு கம் செய்து வாடிக்கையாளர்களின் கவனத்தை ஈர்த்து வரு கின்றது. குறிப்பாக இன்றைய தலைமுறையினரின் ஆர்வத் தைக் தூண்டக்கூடிய வகையில் சாதனங்கள் அறிமுகம் செய் யப்பட்டு வருகின்றன.

அலைபேசியின் கேமராக்கள் பெரிய வன்பொருள் மாற்றங் கள் இல்லாமல் பெரும்பாலான மக்களின் அன்றாடத் தேவை களுக்குப் பயன்படுத்தக் கூடிய, அளவுக்கு முன்னேறியுள் ளன. மேலும் இந்த சாதனங்கள் சில சந்தர்ப்பங்களில் மனி தக் கண்களினால் உணர முடியாத அளவிற்கு கூடுதல் ஸ்கி- ரீன் ரிசல்யூசன்களைக் கொண்டமைந்ததாக காணப்படுகின் றன. இதன் காரணமாக உலகம் முழுவதிலும் சுமார் 300 மில் லியன் ஐபோன்கள் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக மேம் படுத்தப்படவில்லை என்று கடந்த மாதம் முதலீட்டு நிறுவன மான Wedbush நிறுவனத்தின், ஆய்வாளர் Dan Ives வெளி யிட்ட ஆய்வுக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், அந்நிறுவனத்தின் வருமானத்தில் அரைவாசி பங்களிப்பி னைச் செய்யும் ஐபோன் விற்பனை மந்தமாகவே காணப்பட்ட தாகச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆப்பிள் நிறுவனத்தின் புதிய சாதனங்களில் பாரிய இற்றைப்படுத்தல்கள் இல்லாத கார ணத்தினால் பயனர்கள் அடிக்கடி தங்களது சாதனங்களை மாற்றவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவிதமாக, அண்மைய ஆண்டுகளில் ஆப்பிள் கைக்கடி காரங்கள் மற்றும் ஏர்போட்கள் அதிகளவான மேம்படுத்தல்க ளுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும், புதிய சாதனங்களின் சில மாற்றங்களுக்காக நூற்றுக்கணக்கான டொலர்களை செலவிட பயனர்களைப் பலவந்தப்படுத்தவில்லை என ஆப் பிள் நிறுவனம் தெரிவிக்கின்றது.

சந்தையில் பாரியளவு விற்பனையை ஊக்குவிக்கக்கூடிய சாத்தியங்களைப் பறைசாற்றும் வகையில் ஆப்பிள் நிறுவ னம் பல்வேறு புது விடயங்களை அறிவித்துள்ளது.

### ஐபோன் 16

ஆப்பிள் ஐபோன் 16, இந்த மாதம் 9-ஆம் திகதி (செப்டம்பர் 9) அன்று ஆப்பிள் நிறுவனத்தினால் அறிமுகம் செய்யப்பட்டது. ஆப்பிள் ஐபோன் 16 ஆனது உருவாக்க செயற்கை நுண்ண றிவு (Generative AI) தொழில்நுட்பத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட முதல் அலைபேசி மாதிரியாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது பயனர்கள் இயற்கை மொழி வடிவங்களைக் கொண்டு எழுத்து மற்றும் படங்களை உருவாக்கக் கூடிய ஆற்றல் கொண்டது. ஐபோன் 16 மற்றும் ஐபோன் 16 ப்ரோ இரண்டும் 13-ஆம் திகதி முதல் முன்கூட் டியே கொள்வனவிற்காகப் பதிவு செய்ய முடியும் எனவும் 20- ஆம் திகதி கடைகளில் விற்பனை செய்யப்படும் என அறி விக்கப்பட்டுள்ளது.

### கேமரா கட்டுப்பாட்டு பொத்தான்:

கேமரா கட்டுப்படுத்தக் கூடிய புதிய அம்சம் ஒன்று இந்த அலைபேசியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்த பொத் தானைக் கொண்டு பயனர்கள் 'காட்சி நுண்ணறிவு' அணு கலை பெற முடிகின்றது என ஆப்பிள் நிறுவனத்தின் மென் பொருள் பொறியியல் பிரிவின் சிரேஸ்ட துணைத் தலைவர் கிரேக் ஃபெடரிகி குறிப்பிடுகின்றார்.

உதாரணமாக, பயனர் ஒருவர் உணவகத்தை நோக்கி கேமரா கட்டுப்பாட்டு பொத்தானை அழுத்தினால், iPhone 16 ஆனது உணவகம் பற்றிய வாடிக்கையாளர்களின் மதிப்புரைகள், உணவுப் பட்டியல் மற்றும் முன்பதிவு செய்வது போன்ற பல

தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். நாய்களின் வகைகள் அல்லது நிலக்குறியீடு போன்றவற்றை அடையாளம் காணவும் நாட்காட்டியில் விடயங்களைச் சேர்க்கவும் முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

## சிறி (Siri) நுண்ணறிவு உதவி:

ஆப்பிள் அலைபேசிகளில் காணப்படும் மற்றுமொரு விசேட அம்சமாக இந்த சிறி நுண்ணறிவு உதவியை சுட்டிக்காட்ட முடியும். புதிய ஆப்பிள் சாதனங்களில் Siri இப்போது பயனர்களின் குறுஞ்செய்திகளில் இருந்து தகவல்களை எடுத்துக் கொள்ளக்கூடிய வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதாவது நண்பர்கள் அனுப்பிய தொலைக்காட்சி மற்றும் இசை நிகழ்ச்சிகள் பற்றிய பரிந்துரைகளை இது பயனர்களுக்கு நினைவூட்டும் என பெடரிகி (Federighi) கூறுகின்றார்.

உதாரணமாக, 'சனிக்கிழமை நடைபெற்ற பார்பிக்யூ விருந்தில் இருந்து நண்பி எரிகாவுக்கு புகைப்படங்களை அனுப்பு' என்று கூறலாம், மேலும் எந்தப் புகைப்படங்களை அனுப்ப வேண்டும் என்பதை Siri புரிந்துகொண்டு சரியான நபருக்கு தானாகவே புகைப்படங்களையும், குறுஞ்செய்திகளையும் தானியங்கி அடிப்படையில் அனுப்பக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## புதிய நிறங்கள்:

புதிய அலைபேசிகள் வெள்ளை, கருப்பு, பச்சைநீலம் 'அல்ட்ராமரைன்' மற்றும் இளஞ்சிவப்பு நிறங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளன. புதிய அலைபேசிகள் இரண்டு அளவுகளிலும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. iPhone 16-க்கு 6.1 அங்குலங்கள் மற்றும் iPhone 16 Plus-க்கு 6.7 அங்குலங்கள் என வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த வகை அலைபேசிகளில் காணப்படும் 16 வரியானது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடனான பல பொத்தான்களைக் கொண்டமைந்துள்ளதுடன் அது முந்தைய தலைமுறை அலைபேசிகளில் பிரத்தியேகமாக வடிவமைக்கக் கூடிய எக்ஸன் பொத்தான்களையும் கொண்டமைந்துள்ளது. இது ஒரு புதிய கேமரா கட்டுப்பாட்டு ஸ்லைடரையும் இணைத்துள்ளது, இது அலைபேசியின் பக்கவாட்டில் உள்ள ஒரு சிறிய ஃப்ளஷ் பகுதி ஆகும், இது அலைபேசியின் திரையை ஒரு விரலினால் கட்டுப்படுத்துவது போன்று, கெபாசிடேட்டிவ் டச் தொழில்நுட்பம் மூலம் செயற்படுகிறது. விரல்களினால் ஸ்லைட் செய்தவன் மூலம் புகைப்படங்களை எடுக்கும் போது ஓர் புகைப்படத்தின் மையப் பொருளுக்கும் பின்னணிக்கும் இடையிலான ஆழம் உள்ளிட்ட பல்வேறு புகைப்பட அம்சங்களை எளிதில் விரல்களின் மூலம் கட்டுப்படுத்தக்கூடிய வசதி உருவாக்கப்பட்டுள்ளது.

## வேகமான செயலாக்கி:

iPhone 16 ஆனது Apple Intelligence ஐ சிறப்பாக ஆதரிக்க 17% அதிக சிஸ்டம் நினைவக அலைவரிசையுடன் வருகிறது, இதில் பயன்படுத்தப்படும் கண்ணாடி-பீங்கான் திரை கடந்த ஐபோன் மாடல்களை விட 50% கடினமான மற்றும் 40% வேகமான கிராபிக் செயலாக்க அலகினை GPU உறுதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

புதிய ஐபோனின் 16 இன் விலை 799 டொலர்களில் தொடங்கும் என்றும் ஐபோன் 16 பிளஸின் விலை 899 டொலர்களில் தொடங்கும் எனவும் ஆப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

## ஐபோன் 16 ப்ரோ

ஐபோன் 16 ப்ரோ, ஆப்பிளின் உயர்தர ஐபோன், ஐபோன் 16 ஐ விட கூடுதலான AI அல்லது செயற்கை நுண்ணறிவு அம்சங்களைக் தன்னகத்தே தாங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.பெரிய திரைகள்: ஐபோன் 16 ப்ரோ வரிசை கடந்த ஆண்டு மாடல்களை விட 0.2 அங்குலம் பெரியது: ஆரம்ப நிலை ப்ரோ 6.3 அங்குலம் மற்றும் ப்ரோ மேக்ஸ் 6.9 அங்குலங்களாகும், இது பயனர்கள் அலைபேசி திரையை பார்க்கவும் மேலும் பல விடயங்களை மேற்கொள்ள உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ப்ரோ ரக அலைபேசி சாதனங்களில் இதுவரையில் இல்லாத மிக மெல்லிய விளிம்புகளைக் கொண்டமைந்துள்ளது.

## சிறந்த மின்கலம், புதிய வண்ணங்கள்:

iPhone 16 Pro ஆனது அதன் எந்த அலைபேசிகளிலும் இல்லாத அளவிலான மிக நீண்ட கால மின்கல (பேட்டரி) ஆயுளைக் கொண்டுள்ளது, மேலும் நான்கு நிறங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது.வெள்ளை டைட்டானியம், இருண்ட டைட்டானியம், இயற்கை டைட்டானியம் மற்றும் பழுப்பு நிற பாலைவன டைட்டானியம் ஆகிய நான்கு நிறங்களில் இந்த அலைபேசிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## 4K காணொளி:

புதிய உயர்நிலை iPhone 16 ஆனது 4K தெளிவுத்திறனில் வினாடிக்கு 120 பிரேம்களில் படமெடுக்க கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு காணொளி தொகுதியைப் பதிவுசெய்த பிறகு காணொளியை சலனப்படக் காட்சிகளாக மாற்றம் செய்யும் திறனுடன் உருவாக்கப்பட்டுள்ளது. ப்ரோ லைன் துல்லியமான அடிப்படையில் ஒலிப்பதிவு செய்வதனை உறுதி செய்யும் விசேட ஒலிப்பதிவு வசதிகளைக் கொண்டமைந்துள்ளது, இதில் பின்னணி இரைச்சலைக் குறைக்கும் விசேட ஒலியமைப்பு, பதிவு செய்யப்படும் காணொளியை மையமாகக் கொண்ட நபர்களிடமிருந்து உரையாடல்களைத் தேர்ந்தெடுத்து பதிவு செய்துகொள்ள உதவுகின்றது.

Apple iPhone 16 Proவின் விலை 999 டொலர்கள் மற்றும் iPhone 16 Pro Max இன் விலை 1,199 டொலர்கள் என்று ஆப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது.

## ஆப்பிளின் ஏர்போட்ஸ் 4

ஆப்பிள் தனது ஏர்போட்ஸ் வரிசையின் அண்மைய பதிப்பை வெளியிட்டது. 'மிகவும் வசதியானது' என்று அழைக்கப்படும் AirPods Pro, அரசாங்கத்தின் ஒழுங்குமுறை அனுமதிக்காக காத்திருக்கும் ஒரு செவிப்புலன் உதவி அம்சத்தையும் இந்த ஏர்போட்கள் கொண்டுள்ளன.

## புதிய வடிவம்:

ஏர்போட்ஸ் 4 மேம்பட்ட மாதிரி ஊடாக மீள்வடிவமைப்பு செய்யப்பட்டதாகவும் இதனால் இயர்பட்களை பயனர் காதுகளில் நன்றாகப் பொருந்தும் என தெரிவிக்கப்படுகின்றது.

## புதிய அம்சங்கள்:

AirPods 4-ஆனது இசையை இயக்குவதற்கும் இடைநிறுத்துவதற்கும், அழைப்புகளைத் தொடங்குவதற்கும் நிறுத்துவதற்கும் பல்வேறு கட்டுப்பாட்டு அம்சங்களுடன் உருவாக்கப்பட்

டுள்ளது. தலையை அசைப்பதன் மூலம் எயார்போட்களை கட்டுப்படுத்த முடியும்.

செயலில் உள்ள இரைச்சல் ரத்து மற்றும் 'வெளிப்படைத் தன்மை பயன்முறை' உட்பட, அதன் உயர்நிலை புரோ மாட லில் பொதுவாகக் காணப்படும் சில அம்சங்களுடன் அறிமு கம் செய்யப்பட்டுள்ளன, இது பயனர்களுக்கு வெளிப்புற சுற் றுப்புற சூழலைக் கேட்க வழியமைப்பதாக தெரிவிக்கப்படு கின்றது.

புதிய ஏர்போட்ஸ் 4-இன் விலை 129 டொலர்கள் மற்றும் ஏர் போட்ஸ் 4 செயலில் இரைச்சலை ரத்துசெய்யும் அம்சத்துட னான சாதனத்தின் விலை 179 டொலர்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது.

### செவித்திறன் உதவி அம்சம்:

ஆப்பிளின் புதிய ஏர்போட்ஸ் ப்ரோ மாடல் மருத்துவ-தர ஓவர்-தி-கவுன்டர் செவிப்புலன் உதவி அம்சத்துடன் உரு வாக்கப்பட்டுள்ளதாக ஆப்பிள் நிறுவனம் கூறியுள்ளது. இந்த அம்சத்திற்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாகம் மற்றும் பிற ஒழுங்குபடுத்தல் நிறுவனங்கள் என்பனவற்றிடமி ருந்து விரைவில் அனுமதி பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்ப டுவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆனால் இந்த அம்சம் அமெரிக்கா உட்பட 100-க்கும் மேற் பட்ட நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இந்த மாதம் அறிமு கமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஆப்பிள் கைக்கடிகாரம் சீரிஸ் 10

புதிய ஆப்பிள் கைக்கடிகாரம் 10 ஆனது ஆப்பிள் இதுவரை உருவாக்கிய மிக மெல்லிய ஸ்மார்ட் கடிகாரமாகும். இது ஆப்பிள் கடிகாரத்தின் மிகப்பெரிய திரைக் காட்சியைக் கொண்டுள்ளது. முந்தைய ஆப்பிள் கைக்கடிகாரங்களை விட இது 30 வீதம் பெரியது.

### புதிய தோற்றம்:

இந்த கைக்கடிகாரங்கள் ஜெட் பிளாக் நிறத்தில் ரோஜா தங் கம் மற்றும் வெள்ளியுடன் புதிய பாலிஷ் செய்யப்பட்ட டைட் டானியம் நிறங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

### தூக்கத்தில் மூச்சுத்திணறலைக் கண்காணிக்கிறது:

ஆப்பிளின் அண்மைய கைக்கடிகாரத்தினால் பயனர்க ளுக்கு தூக்கத்தில் ஏற்படக்கூடிய மூச்சுத்திணறலைக் கண்ட றிய முடியும் என்று ஆப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது. மக் கள் நித்தரை செய்யும் போது பொதுவான மற்றும் ஆபத்தான நிலைகளின் போது சுவாசத்தை நிறுத்தக் கூய அபாயம் காணப்படுகின்றது. இந்த விடயத்தை முன்கூட்டியே கண்டறி யக்கூடிய அம்சம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

எனினும், இந்த அம்சத்திற்கு அமெரிக்க உணவு மற்றும் மருந்து பொருள் ஒழுங்குபடுத்தும் நிறுவனத்தின் அனுமதி இதுவரையில் கிடைக்கவில்லை. மேலும் இந்த மாத இறுதி யில் 150 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் புதிய இற்றைப் படுத்தப்பட்ட ஸ்மார்ட் கைக்கடிகாரங்களை பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### வேகமான சார்ஜிங்:

புதிய ஆப்பிள் கைக்கடிகாரங்கள் விரைவாக சார்ஜ் செய்யும் என்று ஆப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது. 30 நிமிடங்களில் 80% வரை, மேலும் இது 18 மணிநேரம் வரை மின்கல ஆயுள் கொண்டது என நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

### புதிய அம்சங்கள்:

இந்த புதிய கைக்கடிகாரத்தைக் அணிந்து கொண்டு நீருக்க டியில் சுமார் 20 அடி ஆழம் வரையில் செல்ல முடியும், நீர் வெப்பநிலை உணர்விகள் மற்றும் ஆழ அளவை கணிப்பிடக் கூடிய தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளது. நீருக்கடியி லான திசை மற்றும் நீருக்கடியில் செலவிட்ட நேரம் போன்ற தகவல்களைத் திரட்டக்கூடிய வகையிலான அம்சங்கள் இந்த ஆப்பிள் கைக்கடிகாரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆப்பிளின் புதிய சீரிஸ் 10 கைக்கடிகாரம் 399 டொலர்களில் தொடங்கும் என ஆப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அமெரிக்காவின் ஆப்பிள் நிறுவனம் ஐபோன்16 உள்ளிட்ட சில சாதனங்களை அறிமுகம் செய்து சில மணித் தியாலங்களில் சீனாவின் ஹுவாவி நிறுவனம் போட்டியான அலைபேசி சாதனத்தை அறிமுகம் செய்துள்ளது.

மூன்று தடவைகள் மடக்கக்கூடிய அதி நவீன ஸ்மார்ட்பே சியை ஹுவாவி நிறுவனம் அறிமுகம் செய்து ஆப்பிள் நிறுவ னத்திற்கு அதிர்ச்சி கொடுத்துள்ளது.

மேட் 60 ப்ரோ மற்றும் மேட் எக்ஸ்5 போன்ற பிரபலமான மாடல்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஹுவாவி நிறுவ னம் ஆப்பிள் நிறுவனத்திற்கு கடும் சவாலை விடுத்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் ஹுவாவி சாத னங்களுக்கு பல்வேறு தடைகள் விதிக்கப்பட்ட நிலையில் ஆகஸ்ட் மாதம் ஹுவாவி நிறுவனத்தின் வருமானமும் இலாப மும் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

ஹுவாவின் மேட் எக்ஸ் ரீ (Huawei Mate XT) மாதிரியானது உலகின் முதலாவது மூன்று மடிப்புகளைக் கொண்ட ஸ்மார்ட் பேசி எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஸ்மார்ட்பேசியின் திரை 10.2 அங்குலத்திலானது என்ப துடன் சிவப்பு மற்றும் கருப்பு நிறங்களில் உருவாக்கப்பட்டுள் ளன. ஆப்பிள் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் உள்ளிட்ட பல்வேறு புதிய தொழில்நுட்பங்களைச் சவாலுக்கு உட்படுத்தக்கூடிய பல அம்சங்களைத் தன்ன கத்தே தாங்கி வருவதாக ஹுவாவி நிறுவனம் தெரிவித்துள் ளது. எனவே அமெரிக்கா மற்றும் சீனாவின் இந்த தொழில் நுட்ப உற்பத்திகள் உலகம் முழுவதிலும் கடும் போட்டியிட் டுக் கொள்ளக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என் பதை மறுப்பதற்கில்லை.



jeyaseelan.s@thaiveedu.com

# முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு



## - 2024 -

கனடா தொல்காப்பிய மன்றமும் தமிழ்நாடு இலக்குவனார் இலக்கிய இணையமும் இணைந்து 2024-ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20, 21, 22-ஆம் திகதிகளில், முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாட்டினை கனடா, ரொறன்ரோ நகரில் நடத்தினார்கள்.

இந்த, உலகளாவிய மாநாடு, கனடா அறிஞர் பெருமக்களினதும், தமிழ்நாட்டு அறிஞர் பெருமக்களினதும், உலகப் பேரறிஞர்களினதும் ஆதரவுடன் சிறப்புற நடந்தேறியது.

இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா முதலிய தமிழ் மக்கள் வாழும் உலகின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பேராளர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.





தொல்காப்பியம் தொடர்பான ஆய்வுரைகளுக்கான 124 ஆய்வுச் சுருக்கங்கள் உலகின் பல பாகங்களிலிருந்தும் கிடைக்கப்பெற்றன. இவற்றில் இறுதிச் சுற்றில் 64 ஆய்வுரைகள் தெரிந்தெடுக்கப்பட்டன. இவ்வாய்வுரைகள் மாநாட்டின் முதல் இரண்டு நாட்களும், ரொறன்ரோ சிவிக் சென்டரில், ஆறு ஆய்வரங்கங்களில் நேரடியாகவும் இணையவழியாகவும் இணைந்து படிக்கப்பட்டன.



ஆய்வுரைகள் மட்டுமல்லாமல் தமிழரது பாரம்பரிய கலைகளான பறை, நாட்டுக் கூத்து, வில்லுப்பாட்டு, நாட்டிய நாடகம், கவியரங்கம், நடனம், நாட்டிய நாடகம் முதலிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

முதலாம் நாள் அமர்வை மருத்துவர் இரா. இலம்போதரன் அவர்களும் இரண்டாம் நாள் அமர்வை பேராசிரியர் ஜோசப் சந்திரகாந்தன் அவர்களும் மூன்றாம் நாள் அமர்வை இந்தியத் தூதரகத்தின் தலைமைத் தூதுவர் திரு. சித்தார்த் நாத் அவர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டு மாநாட்டைச் சிறப்பித்தார்கள்.



























நாம் எமது வாழ்நாளில் செய்திருக்கக்கூடிய பாரிய முதலீடு 'வீடு' என்று சொல்வதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. எனவே அத்தகைய முதலீட்டைப் பேணி உரிய முறைப்படி பராமரிக்க வேண்டியது மிக அவசியமானது. தவறும் பட்சத்தில் அல்லது கவனயீனமாக இருந்துவிட்டால் காலப்போக்கில் அதிக செலவினை எதிர்கொள்ள வேண்டிவரலாம். மறுவார்த்தைகளில் கூறுவதானால் நாங்கள் போட்ட முதலீட்டிற்கேற்ற முழுப் பலாபலனையும் அடையமுடியாது போகலாம். இதனைக் கருத்திற்கொண்டே வீட்டுப் பராமரிப்புப் பற்றிப் பல்வேறு கோணங்களில் ஆராயப்படுகின்றது.

வட அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் மாறிவரும் பருவகால நிலைக்கேற்றவாறு நாமும் வீட்டுப் பராமரிப்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். பருவகால மாற்றத்தைக் கருத்திற்கொண்டு பராமரிப்பு வேலைகளை முக்கிய 4 பிரிவாகப் பிரிக்கலாம்.

- வசந்தகாலப் பராமரிப்பு (Spring)
- கோடைகாலப் பராமரிப்பு (Summer)
- இலையுதிர்காலப் பராமரிப்பு (Fall)
- குளிர்காலப் பராமரிப்பு (Winter)

வழமைக்கு மாறாக இவ்வாண்டு குளிர்காலம் நேரகாலத்திற்கே தொடங்கிவிட்டதுபோலத் தெரிகிறது. எனவே அதற்கேற்றபடி எமது பராமரிப்பு வேலைகளையும் துரிதப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். கோடைகாலத்தில் ஓடியாடித் திரிந்த நாம் வரப்போகும் 4-5 மாதங்களுக்கு நான்கு சுவர்களுக்கு மத்தியில் அடைபட்டுக் கிடப்பது மட்டுமல்லாது எமது நடவடிக்கைகளையும் குறுகிய வட்டத்துள் அடக்க வேண்டிய நிலை தவிர்க்க முடியாதது. அத்தகைய குளிர்காலத்திற்கு ஏற்றவாறு முன்கூட்டியே வீட்டினை, வீட்டுச் சூழலைத் தயார்படுத்துவதையே இலையுதிர்காலப் பராமரிப்பு குறித்து நிற்கின்றது. மறுவார்த்தைகளில் கூறுவதானால் வெள்ளம் வருமுன்னரே அணைகட்டுதல் அவசியமல்லவா ?

### வெப்பமாக்கி (Furnace):

வீட்டில் இருக்கக்கூடிய இயந்திரக் கருவிகளில் வெப்பமாக்கி (Furnace) மிக முக்கியமானது. எதிர்கொள்ளப்போகும் குளிர் காலத்திற்கேற்ப அதனைத் தயார்நிலையில் வைத்துக் கொண்டால் பெருங்குளிர்நேரத்தில் ஏற்படப்போகும் இடர்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.



பெரும்பாலான வீடுகளில் எரிவாயுவில் இயங்கும் (Gas Furnace) வெப்பமாக்கிகளே பயன்பாட்டில் உள்ளன. இத்தகைய வெப்பமாக்கிகளைக் குறைந்தது இரண்டு வருடத்திற்கொரு முறை தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் (Qualified Technician) மூலம் சரிபார்த்துக்கொள்வது நல்லது. சிலர் 'Winter Tune up' என்ற பெயரில் ஒவ்வொரு வருடமும் தயார்படுத்திக் கொள்வதும் உண்டு.

எண்ணெயில் இயங்கும் (Oil Furnace) ஆக இருந்தால் ஒவ்வொரு வருடமும் தகுதிவாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களின் உதவியுடன் சரிபார்த்துக்கொள்வது மிகவும் அவசியம்.

- வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Air Filter) 3 மாதத்திற்கொருமுறை மாற்ற வேண்டும். வெப்பமாக்கியின் தொழிற்பாடு குளிர்காலத்தில் தொடர்ச்சியாக இருக்கப்போவதால் முன்கூட்டியே இதனை மாற்றித் தயார் நிலையில் வைத்திருத்தல் மிகப் பொருத்தமானது. ஆரோக்கியமான வாழ்விற்கு இச்செயற்பாடு மிக இன்றியமையாதது. தொய்வு, ஒவ்வாமை (Ashma, Alergy) போன்ற நோய் அறிகுறிகள்




உள்ளவர்கள் வீட்டில் இருந்தால் வடிகட்டியை மாற்றும்போது ஏற்ற தரமான வடிகட்டிகளை மாற்றுவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும். புதிய வடிகட்டியைப் போடும்போது வடிகட்டியில் போடப்பட்டிருக்கும் அம்புக்குறி குளிர் காற்றுப் பகுதியிலிருந்து வெப்பமாக்கி நோக்கிப் போகும் விதத்தில் போடப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

- முதன்மை விளக்கு (Pilot Lamp) அணைக்கப்பட்டிருந்தால் அந்த விளக்கினைக் கொழுத்தித் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். வெப்பமாக்கி 8-9 வருடத்திற்குட்பட்டதாக இருந்தால் Pilot Lamp இல்லாமல் இருக்கலாம். அதாவது புதிய வெப்பமாக்கிகளில் பொருத்தப்பட்டிருக்கும் Electronic Ignitor தேவையான போது மட்டும் இயங்கி பொறியைக் கொடுக்கும் தன்மை வாய்ந்தது என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

## Heat Register:

இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Duct Cleaning செய்வது நல்லது. தவறினால் இக்காலப்பகுதியில் ஒவ்வொரு அறைகளிலும் மற்றைய வீட்டுப் பகுதிகளிலும் இருக்கக்கூடிய வெப்பமூட்டும் வழிகளுக்கான தடைகளைத் (Heat Register) திறந்து சுத்தம் செய்து (Vacum) வைத்துக்கொள்வது நல்லது.

## தண்ணீர்க் குழாய்கள் (Pipes):

கோடைகாலத்தில் முன்வளவு, பின்வளவு போன்ற இடங்களுக்கு இருக்கக்கூடிய தண்ணீர்க் குழாய்கள் மூலம் நீர் பாய்ச்சியிருப்போம். தற்போது அவற்றின் பயன்பாடு அடுத்த கோடைகாலம் வரை இருக்காது. எனவே இவற்றுக்குரிய கட்டுப்படுத்திகள் (Control Valve) வீட்டிற்குள் உள்ள நிலக்கீழ் அறையில் இருக்கும். பொதுவாக முன்பக்கத்திற்கு ஒன்றும் பின்பக்கத்திற்கு ஒன்றுமாக 2 கட்டுப்படுத்திகள் பொருத்தப்பட்டிருக்கும். அவற்றைக் கண்டுபிடித்து இறுகப் பூட்டிவிடுதல் மிக அவசியம். தவறும் பட்சத்தில் குளிர் காரணமாகத் தண்ணீர் உறைநிலைக்குச் செல்லும் போது குழாய்கள் வெடித்து வீட்டிற்குள் வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

அத்துடன் வெளியில் உள்ள பிளாஸ்ரிக் குழாய்களில் இருக்கும் தண்ணீரைத் திறந்து வடியவிடுதல் வேண்டும். அல்லது அத்தகைய குழாய்களிலும் வெடிப்பு ஏற்படுவதால் அடுத்த வருடம் பாவிக்க முற்படும்போது ஒழுக்கு ஏற்படுவதைக் கண்டு புதிதாக அவற்றை மாற்றவேண்டிய நிலை உருவாகும்.

## குளிரூட்டி (AC):

இனி வரப்போகும் 6 - 7 மாதங்களுக்கு குளிரூட்டியின் தேவை இருக்காது எனவே அதனை உரிய முறையில் பேணினால் அதன் ஆயுட்காலத்தைக் கூட்ட வாய்ப்பிருக்கும். குளிரூட்டிகளைக் கொட்டும் பனியில் மூழ்க விடுவதைவிட உரிய உறைகளைப் போட்டு மூடி வைத்தல் நல்லது. துருப்பிடித்தலைக் கட்டுப்படுத்துவதற்காக வெளிப் பகுதிக்கு ‘Anti Rust Spray’ அடித்த பின்னர் மூடிவிடுதல் நல்லது. 6 - 7 டொலர்களுக்கு வாங்கக்கூடிய Anty Rust Spray பல தடவைகள் பாவிக்கப் போதுமானது.

## Weather Stripes:

தலைவாசற் கதவு, பின்கதவு, கராஜ் கதவு என்பன குளிர் உட்புகாதவாறு மூடப்படுகின்றனவா? என்பதை உறுதி செய்தல் வேண்டும். இடைவெளிகள் காணப்படும் பட்சத்தில் காலநிலைக்கேற்ற Weather Stripe-ஐ பொருத்தி விடுதல் அல்லது சரிபார்த்துக்கொள்ளுதல் வேண்டும். வருடாந்தம் ஏற்படும் வெப்பமாக்கலுக்கான செலவின் கணிசமானளவு திருப்திகரமில்லாத வாசல்களின் ஊடாக ஏற்படுவதாகப் பல அறிக்கைகள் கூறுகின்றன.

## ஈரப்பதனாக்கி (Central Humidifer):

குளிர்காலம் தொடங்குவதற்கு முன்னரே ஈரப்பதனாக்கிக்குரிய வடிகட்டிகளைச் (Evaporator grid) சுத்தம் செய்து வைத்

திருப்பது நல்லது. ஒவ்வொரு வருடமும் இலையுதிர்காலப்பகுதியில் இத்தகைய வடிகட்டிகளையும் மேலதிக நீர் வழிந்தோடும் குழாய்களையும் நீரினால் கழுவிச் சுத்தம் செய்வதை ஒரு பழக்கமாக ஏற்படுத்திக் கொள்ளல் நல்லது.

## Garage Man–Door:

கராஜ்ஜில் இருந்து வீட்டிற்குள் செல்லும் கதவு தானே இறுக்கமாக மூடவேண்டியது மிக அவசியம். குளிர்காலத்தில் ஊர்திகளை வெப்பமாக்குவதற்காகக் கராஜ்ஜின் உள்ளே இயங்க விடுவதும், நிறம், மணம் அற்ற காபன்மொனோக்சைட் வாயு பாதுகாப்பற்ற கதவுகளின் ஊடாக வீட்டிற்குள் செல்வதும், இதன் நச்சுத் தன்மை காரணமாகப் பலர் உயிரிழப்பதும் நாம் வருடா வருடம் கனடாவில் அறியும் செய்திகள். இத்தகைய கதவுகள் தானே மூடப்படுவதற்காகப் பொருத்தப்பட்டிருக்கும் ‘Auto Closer’ சரியாகச் செயற்படுகின்றதா ? என்பதைப் பரிசோதித்து அதன் விசையை உரிய நிலைக்குச் சரிசெய்து விடவேண்டியது மிக அவசியம்.

## கூரை வடிகால்: (Gutters):

கூரை வடிகால்களில் சருகுகள் தேங்கிக் கிடப்பதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றைச் சுத்தம் செய்து அத்துடன் தண்ணீர் ஒழுங்காகக் கீழ்நோக்கிச் செல்லும் குழாயினூடாக (Downspout) அகற்றப்படுகின்றதா ? என்பதை உறுதிப்படுத்துதல் நல்லது.

## குறிப்பு:

சுற்றுப் புறங்களில் அதிக மரங்கள் உள்ளவர்கள் Gutters-க்குரிய துவாரமிடப்பட்ட மூடிகளைப் பொருத்துவதன் மூலம் சுத்தம் செய்யும் மேலதிகப் பழுவைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

ஜன்னல்கள் மற்றும் கூரையில் கண்ணாடிகள் (Sky Light) பொருத்தப்பட்டிருந்தால் அவை இறுக்கமாக மூடப்படுகின்றனவா ? என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

கோடைகாலத்திற்குரிய யன்னல் திரைச்சீலைகளை மாற்றிவிட்டு குளிரை எதிர்க்கக்கூடிய திரைச்சீலையை மாற்றுபவர்கள் இக்காலப்பகுதியில் அதனையும் மறக்காது செய்தல் வேண்டும்.

வீடுகளில் அதிகளவு ஈரப்பதன் காரணமாக யன்னல் கண்ணாடிகளில் நீர்ப்படிவு ஏற்படுவதை அவதானித்திருக்கலாம். குறிப்பாகத் திறக்கக்கூடிய யன்னல் பகுதிக்கு உட்பக்கமாகப் போடப்பட்டிருக்கும் Net அடியிலேயே அதிகளவு நீர்ப்படிமானம் ஏற்படுவது, வழிந்தோடுவது, பங்கசு பிடிப்பது போன்ற பல இடர்களைக் காணக்கூடியதாக இருக்கும். இத்தகைய சூழ்நிலையை எதிர்கொள்பவர்கள் முன்கூட்டியே அத்தகைய Net-களை எடுத்து வைத்துவிட்டு மீண்டும் கோடைகாலத்தில் போடலாம். இத்தகைய Net-கள் காற்றோட்டத்திற்கு இடையூறு செய்வதாலேயே அத்தகைய இடர்கள் ஏற்படுகின்றன. ஆனால், உயர்ந்த மாடிகளில் இருப்பவர்கள் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற் கொண்டு அதனைத் தவிர்த்துவிட வேண்டும்.

Smoke Detectors + Carbon Monoxide Detectors என்பன உரிய முறையில் வேலை செய்கின்றனவா ? என்பதனை உறுதிசெய்தல் வேண்டும். ஏனெனில் குளிர்காலத்தில் இவற்றின் தொழிற்பாடு அதிகளவில் தேவைப்படும்.

## முக்கிய குறிப்பு:

எரிபொருளில் இயங்கும் புல் வெட்டும் இயந்திரத்தை வைத்திருப்பவர்கள் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விடயம். அதனை எவ்வாறு குளிர்காலத்தில் பாதுகாப்பது என்பதே.

இதைப் பலரும் அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. புல் வெட்டும் இயந்திரத்தினை உரியமுறைப்படி பாதுகாக்கா விட்டால் வரப்போகும் கோடைகாலத்தில் அதனை முதற்தரம் இயங்கவைக்கப் படாதபாடு படவேண்டியிருக்கும். அல்லது அதனைத் திருத்துபவர்களிடம் எடுத்துச் சென்று பணம்



செலவு செய்து குணப்படுத்திய பின்னர் பாவிக்கவேண்டியிருக்கும். இதற்கான மாற்று வழி மிக இலகுவானது.

இந்த வருடம் கடைசியாகப் புல் வெட்டிய பின்னர் இயந்திரத்திலுள்ள கொள்கலனில் இருக்கும் பெற்றோலை (gas) முற்றாக எடுத்து விடவேண்டும்.

இயந்திரத்தை ஒரு பக்கமாகச் சரித்து ஒரு பழைய மாஜரின் பெட்டியில் பெற்றோலை மிக இலகுவாக எடுத்து விடலாம். அதன் பின்னர் அவ்வியந்திரத்தை ஸ்டார்ட் செய்து தானாக அது நிற்கும் வரை இயங்க விடவும். அதாவது ‘காபோரேற்றரில்’ இருக்கும் பெற்றோல் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். அதன் பின்னர் சாதாரணமாக ஒரு இடத்தில் பனியின் தாக்கம் நேரடியாக இல்லாதவாறு பாதுகாத்து விடலாம். அடுத்த வருடம் பெற்றோலை நிரப்பிய பின்னர் வழமை போல 3 தடவை ‘பம்’ செய்துவிட்டு ஸ்டார்ட் செய்தால் இயந்திரம் மிக இலகுவாகத் தயாராகிவிடும்.



velasubramaniam@thaiveedu.com




ஒன்ராறியோ மாகாணத்தில் காப்புறுதி செய்யும் ஒருவருக்கு, குறிப்பாக வாகனக் காப்புறுதி குறித்துப் பல கேள்விகள் எழும். ஏன் காப்புறுதிக்கட்டணம், வாகன காப்புறுதிக்கு அதிகமாயுள்ளது என்பதாகும். இதில் சுவையான விடயம் யாதெனில், எனக்கும் இது கூடிக்கொண்டே போகிறது. இந்நிலையில் உங்களுக்கு அறிவுரை வழங்குவதைவிடவும் நாம் இணைந்து இதற்கு என்ன செய்யலாம் என்று ஆராய்வதுதான் தகும்.

ஒன்ராறியோவில் வாகனம் செலுத்துவதற்குச் சாரதிகள் கட்டாயமாக வாகனக் காப்புறுதி வைத்திருக்க வேண்டும் எனச் சட்டம் உள்ளது. அதை மீறி வாகனம் செலுத்தி கண்டுபிடிக்கப்பட்டால் செலுத்தியவருக்கு 5,000 டொலர் முதல் 50,000 டொலர் வரை தண்டனை வழங்கலாம் என்பதுடன் உங்கள் சாரதிப் பத்திரமும் தடுத்து வைக்கலாம் என்ற நிலை உள்ளது.

காப்புறுதி இல்லாது வாகனம் செலுத்திப் பிடிபட்டால், பின்னர் காப்புறுதி கபறும்போது காப்புறுதி நிறுவனம் கட்டணத்தை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல், தொடர்ந்து காப்புறுதி தர மறுக்கவும் செய்யலாம். மேலும் காப்புறுதி செய்யாத வாகனத்தில் விபத்து ஏற்பட்டால் இழப்புகள் நிவர்த்தி செய்யப்படாது என்பதுடன், உங்களுக்கு வழக்கு பதிவு செய்யும் உரிமையும் மறுக்கப்படலாம் என்பதனையும் மறக்க வேண்டாம்.

இன்னுமொரு முக்கியமான விடயம், உங்கள் தவறால் விபத்து ஏற்பட்டு இழப்பு அல்லது மரணம் ஏற்பட்டால், உங்கள் மீது இழப்புகளுக்கான நஷ்டஈடு தொடுக்கப்பட்டு அறவிடவும் செய்யலாம்.

## வாகன காப்புறுதிக் கட்டணம் அதிகமாய் இருப்பதற்கு காரணம் என்ன?

2021-ம் ஆண்டில் அறவிடப்பட்ட கட்டணத்திலும் சென்ற வருடம் அதாவது 2023-ல் 12% கூடுதலாக அறவிடப்பட்டுள்ளது. இதற்கு பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றை முதல் கவனிப்போம்.

- இக்காலகட்டத்தில் கைத்தொலைபேசி பாவனை அதிகரித்துள்ள நிலையில் அதிகளவான சாரதிகள் கவனக் குறைவுடன் வாகனம் செலுத்தி விபத்துக்குள்ளாகுகிறார்கள்.
- தற்காலத்தில் விஞ்ஞான வளர்ச்சி காரணமாக விலை உயர்ந்த வாகனங்கள் பல தயாரிக்கப்படுவதுடன் அவற்றை திருத்துவதற்கான விலையும் அதிகமாயுள்ளது.
- விலைவாசி உயர்வு காரணமாக வாகனம் திருத்தும் செலவும் அதிகமாயுள்ளது.
- வீதியில் ஓடும் விலைகூடிய வாகனங்கள் பெரும் பழுதுக்கு உட்படும் வேளையில், வேறு வாகனம் வாங்குவதற்கான விலையும் அதிகமாயுள்ளது.
- நாட்டின் சீதோஷண மாற்றம் காரணமாக ஏற்படும் பெரு மழை, வெள்ளம், புயல் போன்றவறின் காரணமாகவும் ஏற்படும் இழப்புக்கள் அதிகரித்துள்ளது.
- வாகனக் களவுகள், கடத்தல்கள் மிகுந்து கொண்டு செல்லும் வேளையில் களவை தடுக்கும் முயற்சியில் காப்புறுதி அமைப்புகளின் செலவும் அதிகரித்துள்ளது.

## காப்புறுதி கட்டுப்பணம் நிர்ணயித்தல்:

கீழ் தரப்படும் விடயங்களை அவதானித்தால் உங்கள் காப்புறுதிக் கட்டுப்பணத்தைக் குறைக்க முடியும்.

- சாதாரணமாக கடுகு, கத்திரிக்காய் வாங்குவதற்கு மலிவு பார்த்து பல கடைகள் ஏறி இறங்கும் ஒருவர், காப்புறுதி பெறும் வேளை இரண்டு இடத்தில் விசாரிக்கத் தவறி விடுகிறார்கள். உங்களுக்கு தெரிந்த பல இடங்களில் விசாரித்த பின்பு, மலிவான இடத்தில் உங்கள் கையொப்பத்தை வையுங்கள்.
- பெறக்கூடிய கட்டணக் கழிவுகளை கேட்டுப் பெற்றுக் கொள்ளத் தவறாதீர்கள். உதாரணத்திற்கு உங்கள் வீட்டுக் காப்புறுதி, ஆயுள் காப்புறுதி, சேமிப்புக் கணக்கு, வாடகை




வீட்டுக் காப்புறுதி, போன்றவற்றை ஒரே அமைப்பில் இட்டு வைத்தால் கட்டணத்தில் பெரும் கழிவுகள் பெறலாம்.

- வாகனத்தை வாங்குமுன் காப்புறுதிக் கட்டணத்தை கருத்திற் கொள்ளுங்கள். வாகனத்திற்கு வாகனம் காப்புறுதிக் கட்டணம் வேறுபடுவதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் தேவைகளுடன் கட்டுப்பணத்தை கருத்திற்கொண்டு காப்புறுதி முகாமையாளருடன் கலந்தாலோசித்து வாகனத்தை தேர்ந்தெடுங்கள்.
- கழிவுத்தொகையைக் கூட்டுவது. காப்புறுதி கேட்பனவு செய்யும் வேளை, நீங்கள் பெறும் தொகையில் ஒரு சிறு தொகையை வைத்துக்கொண்டு காப்புறுதி அமைப்பு இழப்பை ஈடு செய்யும். இத்தொகை கூடக்கூட காப்புறுதி அமைப்பு கட்டணத்தொகையைக் குறைக்கும். காப்புறுதி முகவருடன் கலந்தாலோசித்து கழிவுத் தொகையை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் வாகன ஓட்டுநர் பத்திரத்தை துப்பரவாக வைத்திருங்கள். தவறாகச் செலுத்தி அல்லது வேகமாக ஓட்டி குற்றம் புரிந்திருப்பின் அதற்கான தண்டனைப் பணத்தைக் கட்டுவதுடன் உங்கள் காப்புறுதி கட்டணத் தொகையும் கூடுவது இயல்பு. கவனமாக வாகனத்தை செலுத்துவது உங்கள் ஆயுளுக்கு மட்டுமல்ல, காப்புறுதி கட்டணத்தைக் குறைக்கவும் பயன்தரும்.
- பழைய வாகனமாயின் குறைவான விடயங்களுக்கு காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளுங்கள். பழைய வாகனங்களில் விலை மிக்கச் சொற்பமாய் இருக்கும். இந்நிலையில் உங்கள் தவறால் உங்கள் வாகனத்திற்கு ஏற்படும் காப்புறுதியை தவிர்க்கலாமல்லவா? மேலும் அந்த வாகனத்தை யாருமே களவு எடுக்க மாட்டார்கள். இவை குறித்து காப்புறுதி முகாமையாளரிடம் விசாரித்து தக்க காப்புறுதியை மட்டும் பெற்றுக்கொள்ளுங்கள்.
- சாரதிப் பத்திரத்தைப் பெறும்போது தக்க பயிற்சிகளைப் பெற்று எடுத்துக்கொள்ளுங்கள். ஒருமுறை பயிற்சிப் பட்டறையில் பயின்று அதற்கான பத்திரமும் இருப்பின் காப்புறுதிக் கட்டணத்தில் கழிவுகள் தரப்படுவதுண்டு. இவற்றைப் பற்றி காப்புறுதி முகவருடன் கதைத்து முடிவை எடுங்கள்.
- உங்கள் பாவனைக்கு களவு போகாத வாகனங்களைத் தேர்ந்து எடுங்கள். 2018-ம் ஆண்டு காப்புறுதி திணைக்களம் வெளியிட்ட ஓர் அறிக்கையின்படி கனடாவில் வாகனக் களவு 6% அதிகரித்திருப்பதுடன், அதே காலகட்டத்தில் ஒன்ராறியோ மாகாணத்தில் களவுகள் 15%-இனால் அதிகரித்துள்ளது. கள்வர்கள் சில குறிப்பிட்ட வகை வாகனங்களைக் குறிவைப்பதனால் அவற்றைத் தவிர்ப்பது அறிவுடமையாகும்.
- வாகன பாவனையை மீளப் பரிசோதியுங்கள். நீங்கள் முதன் முதல் வாகனத்தை வாங்கிய வேளை ஒரு பெரு நகரத்திலிருந்து, பின் வேறு இடத்திற்கு மாறி இருக்கலாம். மக்கள் செறிவு குறை ஏற்படுவதால் கட்டணம் குறையும். மேலும், நாளாந்தம் வேலைக்குச் செல்ல வாகனத்தைப் பாவித்து, இப்போ அந்த வாகனம் அதற்கு பாவிக்கவில்லை என்றாலும் கட்டணத்தைக் குறைத்துக் கொள்ளலாம்.
- எல்லா காப்புறுதித் தேவைகளையும் ஒரே காப்புறுதி அமைப்புடன் வைத்திருங்கள். உங்களின் சொந்த வீடு, வாடகை வீடு, உங்களிடம் இருக்கும் வாகனங்கள், மற்றும் ஆயுள் காப்புறுதி எனப் பலதரப்பட்ட காப்புறுதிகளையும் ஒரே அமைப்பில் வைத்திருப்பதனால், கட்டணத்தில் பல அமைப்புகள் கழிவு வழங்குவது இயல்பு. எனவே அதனாலும் உங்கள் கட்டணத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள்.
- யார் வாகனத்தைச் செலுத்துவது என்பதில் தீர்க்கமாய் இருங்கள். வீட்டில் யாராவது விபத்துகளில் சிக்கி அல்லது தவறாகச் செலுத்தியதற்கு தண்டனை பெற்றிருந்தால், அவரை ஒரு விலக்கப்பட்ட சாரதியாகக் கொள்வதனால் கட்டுப் பணத்தைக் குறைக்க முடியும். மேலும் எக்காரணம் கொண்டும் அவரை வாகனம் செலுத்த விடக்கூடாது.
- எவ்வண்ணம் காப்புறுதிக் கட்டணம் செலுத்தப்படுகிறது. பொதுவாக நாம் மாதா மாதம் செலுத்துவது வழமை. அதற்காக காப்புறுதி அமைப்பு ஒரு சிறு தொகையை செயலாற்றும் செலவாக அறவிடுவது உண்டு. ஆனால் வருடாந்தம் செலுத்துவீர்களானால் அத்தொகையை மீதம் பிடிக்கலாம்.

மேற்கூறிய கருத்துகளை மனதிற்கொண்டு சிறப்பாக வாகனத்தை செலுத்துமாறு வேண்டிக்கொண்டு முடிக்கிறேன்.



senthuran.p@thaiveedu.com



# அஞ்சலிக் கூட்டங்களும் பரிமாணங்களும்

**வேதநாயகம் தபேந்திரன்**

அஞ்சலி என்பது வணக்க நிகழ்வு, இறுதி வணக்கம், இரங்கல், மரியாதை செலுத்துதல் எனப் பொருட்படும். தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இறந்து போன மனிதர்களின் நற் குணங்களை, சாதனைகளை நினைவுகூர்ந்து கௌரவிக்கும் வகையில் அஞ்சலிக் கூட்டங்களை நடத்தும் மரபு ஒன்று உள்ளது. இறந்தவரின் நல்லொழுக்கம் அல்லது செயல்திறனை வெளிக்கொண்டு வரும் வகையில் அஞ்சலிக் கூட்டங்கள் நிகழ்த்தப்படவேண்டும். இம் மரபுகளில் சில செம்மைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமாக ஒரு கனதி மிக்க அஞ்சலிக் கூட்டத்தை நடத்தலாம். பட்டறிவுக்கு உட்பட்ட கருத்துகளை வரிசைக் கிரமமாக முன் வைக்கிறேன். வேகமாக ஓடிக் கொண்டிருக்கும் உலகில் பிறரது பொன்னான நேரங்களை மண்ணாக்கா வகையில் நிகழ்வுகளைத் திட்டமிட்டு, நடைமுறைப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

## அஞ்சலிக் கூட்டம் யாருக்கு வைக்கலாம்:

சமூகத்தின் உயர்வுக்கு நிறையச் சேவைகளைச் செய்தவருக்கே அஞ்சலிக் கூட்டம் வைக்கலாம். இது தான் மதிப்பார்ந்த ஒரு மரபு. ஆனால் இந்த மரபு இன்று ஆங்காங்கே மீறப்பட்டு பணம் படைத்த அல்லது செல்வாக்குப் படைத்தவருக்கு அஞ்சலிக் கூட்டம் வைப்பதனைக் கண்டுள்ளோம். இதனால் கண்ணியமான மனிதர் யார், கண்ணியம் குறைந்த மனிதர் யாரென்ற சந்தேகங்கள் எழுகின்றது. பொதுச் சமூகத்திற்கு எந்தவித சேவைகளையும் செய்யாதோருக்கும் அஞ்சலிக் கூட்டம் வைப்பதனையும் கண்டுள்ளோம். அதாவது சாதாரண ஒருவராக வாழ்ந்து மறைந்தவருக்கும் அஞ்சலிக் கூட்டம் நடைபெறுகின்றது. இது அஞ்சலிக் கூட்டங்களது கனதியை ஒரு வேடிக்கை நிகழ்ச்சியாக்கி விட்டுள்ளது.

## அஞ்சலிக் கூட்ட ஆரம்ப, முடிவு நேரத்தைத் திட்டமிடல்:

இது மிகவும் முக்கியமானது. இறுதிக் கடமைகளைச் செய்ய சில மணி நேரம் தாமதித்திருந்தால், இறுதி நிகழ்வுக்கு வந்தோரில் பலர் தமது வீடு வாசல்களுக்கு ஓடும் மனநிலையில் தான் இருப்பார்கள். அதனால் நேரத் திட்டமிடல் மிகவும் முக்கியமானது. அவ்வாறு தாமதமானால் மிக மிக சுருக்கமாக அஞ்சலி நிகழ்வை நிறைவு செய்ய வேண்டும். அதை விடுத்து நான் ஆயத்தப்படுத்திக் கொண்டு வந்த எல்லாவற்றையும் சொல்லி முடிப்பேன் பாரெனப் பந்தயம் கட்டக்கூடாது. இடம் வலம் அறிந்து நடத்துதல் வேண்டும். நேரம் இக்கட்டாக இருக்கும்பட்சத்தில் ஒருவர் மட்டும் இறந்தவரைப் பற்றி ஒரு 15 நிமிடங்கள் உரையாற்றுதல் நன்று.

## கூட்டமொன்றின் நிகழ்ச்சி நிரல்:

இறந்தவர் வீட்டுக்கு வந்தவர்கள் அஞ்சலி உரையைக் கேட்டுத் தமது பொன்னான நேரத்தை மண்ணாக்கிப் போட்டார்களேயென மனம் வருந்தக் கூடியதாக, நிகழ்ச்சி நிரலை வைத்துக் கொள்ளுதல் கூடாது. இறந்து போனவரின் இறுதிக் கிரியைகளோடு இணைத்தே அஞ்சலிக் கூட்ட நிகழ்வையும் ஏற்பாடு செய்யவேண்டும். திட்டமிடப்பட்டதை, இறந்தவரின் இறுதிக்கிரிகைகளில் கலந்து கொள்ள வந்தவருக்கு முற்கூட்டியே அறிவித்தால் இறுதி நிகழ்வுக்கு வருபவர்கள் தமது நேர ஒதுக்கீட்டை முற்கூட்டியே தீர்மானித்துக் கொள்ள முடியும்.

## உரைகளின் வரிசை:

இறந்தவரின் நெருங்கிய உறவு அல்லது ஊரவர் கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும். தலைவர் 10 அல்லது 15 நிமிடத்துக்குள் இறந்தவரின் சிறப்புக்களைக் கூறிப் பொதுவான உரையை நிகழ்த்துதல் நன்று. உரையை நிகழ்த்தும் போது இறந்தவருக்கும் உரையாசிரியருக்குமான தொடர்பைக் குறிப்பிட்டே உரையைத் தொடங்கவேண்டும். அஞ்சலி செலுத்தும் நபருடன் நெருக்கமாகப் பழகிய நபர்கள் குறித்தும் உரையாற்றலாம். அஞ்சலி உரையை ஆற்றும்போது முழுமையாக ஆராய்ந்து உண்மை நிலைகளைச் சரிபார்த்து உரையை ஆற்ற வேண்டும். தலைவர் கூட்டத்தை ஒழுங்கமைத்துப் பேசும்பொழுது அமரத்துவமடைந்த பெரியார் செய்த சேவைகள் எல்லாவற்றையும் இரங்கல் கூட்டம் நடத்த வந்த தலைவர் சொன்னால் பின்னால் பேச வருபவர்களுக்கு சொல்ல ஒரு தகவலும் இல்லாமல் போய் விடும். அண்மையில் சமூக சேவைகள் நிறையச் செய்த ஒரு பெரியாரின் இறுதி நிகழ்வுக்குப் போயிருந்தேன். அஞ்சலிக் கூட்டத்தை நடத்திய தலைவர் இறந்தவர் அந்த ஊரில் கோயில், விளையாட்டுக்கழகம், சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், கூட்டுறவு அமைப்பு ஆகியவற்றுக்குச் செய்த சேவைகள் எல்லாவற்றையும் கூறி முடித்தார். ஒரு மணி நேர உரையாக அமைந்தது. தலைவருக்குப் பின்னர் உரையாற்ற வந்த ஊரின் பொது அமைப்புகளது தலைவர்களுக்குத் தாம் புதிதாகச் சொல்ல ஒன்றுமிருக்கவில்லை. கூட்டத்தின் தலைவர் ஆற்றிய உரையையே திரும்பவும் சுட்டிக்காட்டி உரையாற்றினார்கள். அதனால் தேவையற்ற நேர விரயமும் இறுதி அஞ்சலிக்கு வந்தோருக்கு சலிப்புமாக இருந்தது. நிகழ்வின் தலை

வர் பொது அமைப்புகளது பிரதிநிதிகளது உரையைத் தமது பொறுப்பில் எடுக்கவே கூடாது.

இதனால் அஞ்சலிக் கூட்டமொன்றை இறுதிக் கிரியைகள் நடந்து கொண்டிருக்கும்போதே உரிய பிரமுகர்கள் தமக்குள் கதைத்துத் திட்டமிடுதல் நன்று. ஒரு அமைப்பு சார்பாக ஒருவரை மட்டுமே உரையாற்ற விடுதல் நன்று. அவர் தமது அமைப்பு தொடர்பாக இறந்தவர் செய்த சேவைகளை ஒன்று திரட்டி பொருத்தமாக உரையாற்றுதல் நன்று. முகமனுக்காக ஒரு விடயத்தை இருவருக்கு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு உரையாற்ற விடுதல் பொருத்தப்பாடற்றது. நிகழ்வின் தலைவர் எனக்கு தலைமை கிடைத்து விட்டது. விடமாட்டேன் பாரென வரிந்து கட்டிக்கொண்டு பிறரது உரையைப் பற்றிய தனது பொழிப்பைச் சொல்லுதல் ஆகாது.

**சபை நாகரிகங்கள்:**

இறுதிச்சடங்கின் பின் இறந்து போனவர் குறித்து உரையாற்றுபவர், இறந்தவர் செய்த நன்மையான காரியங்களை சபை நாகரிகம் கருதிச் சொல்லுதல் கட்டாயமானது. இறந்தவர் தனது சொந்த நன்மை கருதிச் சமூகத்துக்குத் தீங்கானவற்றைச் செய்திருக்கலாம், அவற்றை இறுதிச் சடங்கில் சொல்லுதல் நாகரிகமாகாது. அப்படிப்பட்ட மனிதருக்கு அஞ்சலி உரையாற்ற மறுப்பதுதான் நன்று. அல்லது அஞ்சலிக் கூட்டம் நடத்துவதை நிறுத்தலாம்.

அஞ்சலிக் கூட்டம் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க அதனைப் பொருட்படுத்தாமல் இறுதி நிகழ்விற்கு வந்தோர் தமக்குள் பெரிய சத்தமாகக் கதைத்துக் கொண்டிருக்கும் நிகழ்வுகளும் உண்டு. இது இறந்து போனவரை அவமதிப்பதாகும். அதனால் இறந்து போனவருக்கு உரிய மரியாதை கிடைப்பதை உறுதி செய்யவேண்டும். ஒலிபெருக்கியைப் பாவிப்பதன் மூலமாகச் சத்தம் சந்தடியைக் குறைக்கலாம். ஒலிபெருக்கியின் சத்த உயர்வு கதைப்போரைக் கட்டுப்படுத்தியதனைப் பல இடங்களில் அவதானித்து உள்ளேன்.

சமூக நீரோட்டத்தில் பலரிடம் முளைத்த புதுப்பணம் புதுப்புதுச் சடங்கு சம்பிரதாயங்களை உருவாக்கி விட்டுள்ளது. இதுவும் ஒருவகைச் சமூகச் சீர்கேடுதான்.

பொய்யான, போலியான நடைமுறைகள் களைந்தெறியப்படவேண்டுமென்ற விழிப்புணர்வில் இந்த எழுத்துகளை இங்கு விதைத்துள்ளேன். பொதுச்சமூகம் சீரான ஒரு செல்நெறியில் ஓடுவது காலத்தின் தேவையாகும்.



thabendran.v@thaiveedu.com





# பாரிஸ் நகரின் சாக்லெட்டும் சாக்கடையும்

– குரு அரவிந்தன்

பாரிஸ் நகருக்குச் சென்ற போது வித்தியாசமான இரண்டு இடங்களைப் பார்க்க முடிந்தது. ஒன்று குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் சாக்லட் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை, மற்றது மனிதக் கழிவுகளை வெளியேற்றும் கழிவு நீர் வடிகால் என்று சொல்லப்படும் sewers at Eesplanade Habib-Bourguiba சாக்கடை அருங்காட்சியகம். சாக்கடைதானே என்று ஒதுக்கி விடாமல், அதன் முக்கியத்துவம் கருதி, பொதுமக்களும் அதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்பதால் அதன் செயற்பாடுகள் நடக்கும் முக்கிய பகுதியை ஓர் அருங்காட்சியகமாக மாற்றி இருக்கின்றார்கள். பல நாடுகளில் அருங்காட்சியகங்களைப் பார்த்திருந்தாலும், முதன் முதலாக நாகரிகத்தில் முன்னிலை வகிக்கும் பாரிஸ் நகரில்தான் இப்படி ஓர் அருங்காட்சியகத்தைப் பார்க்க முடிந்தது. தொழிற்புரட்சி நடந்த இடமென்பதால், இங்கு பணிபுரியும் தொழிலாளருக்கு முன்னுரிமை கொடுத்திருக்கிறார்கள்.

ஒரு நாள் பாரிசில் உள்ள Gourmet சாக்லட் காட்சியகத்திற்கும், அதை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கும் சென்றிருந்தோம். வாசலிலே ஒரு பெண்மணி எங்களை வரவேற்று சாக்லட் சாப்பிடத்தந்தார். கோகோ பழம் பற்றியும் அதன் தொடக்கம் பற்றியும் பல விடயங்களை அங்கே அறிந்து கொள்ள முடிந்தது. தென் அமெரிக்காவில் மாயன் கலாசாரக் காலத்தில் சாக்லட் பாவித்ததற்கான ஆதாரங்களை இங்கே சேகரித்து வைத்திருக்கிறார்கள். அருங்காட்சியகத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பி வரும்போதும் வெளியேறும் வாசலில் பாலுடன் கலந்த சாக்லட் அருந்தக் கொடுத்தார்கள். இனிப்பான இந்த விடயம் பற்றித் தனியாக எழுத வேண்டும் என்பதால், இதைப் பற்றி எழுதுகின்றேன்.

சுமார் 2,800 சதுர அடி பரப்பளவைக் கொண்ட இந்த சாக்லட் அருங்காட்சியகத்தில் சாக்லட் சார்ந்த பல விடயங்களை அறிய முடிந்தது. ஓல்மெக்ஸ், மாயாஸ் மற்றும் அஸ்ரெக்குகள் தொடங்கி அனைத்து வடிவங்களிலும் கோகோ பீனின் 4,000 ஆண்டுகால வரலாற்றை இந்தக் காட்சியகத்தில் காண முடிந்தது. கட்டடக்கலை, வானியல், கணிதம் போன்ற துறைகளில் மேம்பட்ட மாயாக்கள் பொ.ஆ.மு 250 தொடக்கம் பொ.ஆ.பி 900 ஆண்டுவரை கோகோவின் பயன்பாட்டைச் செம்மைப்படுத்தி எப்படி அதைப் பாவித்தனர் என்பன போன்ற விளக்கங்கள் அங்கே கிடைக்கின்றன.

இந்த சாக்லட் அருங்காட்சியகம் மூன்று பகுதிகளாக இருக்கின்றது. ஒரு பகுதி சாக்லட்டின் வரலாற்றைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இதைவிட பல நூற்றாண்டுகளாகச் சாக்லட் எப்படித் தயாரிக்கப்பட்டன என்பது பற்றியும், இப்போது தயாரிக்கும் முறையில் எப்படியான மாற்றங்கள் ஏற்பட்டன என்பன பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது. முதற்பகுதி சாக்லட் தயாரிக்கும் கோகோ மரங்கள், பழங்கள் மூலம் அறிமுகமாகின்றது. சாக்லட் உற்பத்திக்குத் தேவையாக கோகோ விதைகளை எப்படி உற்பத்தி செய்வது, அதற்கு என்ன தேவை என்பன பற்றிய விபரங்கள் விளக்கப் படங்கள் மூலம் கிடைக்கின்றன.

தென்னமெரிக்காவில் மாயா குடிகளின் சடங்குகளில் கோகோ எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது உட்பட, பண்டைய கலாசாரங்களில் கோகோ வகித்த முக்கிய பங்கு பற்றி விளக்கமாகக் காட்சிப்படுத்தி இருக்கிறார்கள். மாயா குடிகள் கோகோ மரத்தைச் ‘சொர்க்கத்தின் மரம்’ என்று வணங்கினார்கள். கோகோவைக் கடவுளுக்கான உணவு என்று குறிப்பிட்டனர். தொடக்கத்தில் இது ஒரு கசப்பான பானமாகவே இருந்தது. பழைய ஓவியங்கள் மூலமும், அக்காலத்தில் பாவித்த பொருட்கள் மூலமும் இதை அறிந்துகொள்ள முடிந்தது. அக்காலத்தில் கோகோவைப் பணம் சம்பாதிப்பதற்காகவும் பயன்படுத்தினர். ஒரு முயலுக்குப் 10 கோகோ பீன்ஸ், ஒரு மனித அடிமைக்கு 100 கோகோ பீன்ஸ் என்று பண்டமாற்று வர்த்தகம் நடைபெற்றது.

இரண்டாம் பகுதியில் 1502-ம் ஆண்டில் கோகோவில் இருந்து தயாரிக்கப்பட்ட பானத்தை அருந்திய முதலாவது ஐரோப்பியர் என்ற பெயரைக் கிறிஸ்டோபர் கொலம்பஸ் பெற்றுக் கொள்கிறார். இது ஐரோப்பாவில் கோகோ பானத்தை அறிமுகம் செய்வதில் தொடங்குகின்றது. புதிய உலகத்தில் இருந்து அறிமுகமான இந்தப் பானத்தை ஸ்பானியர்கள் முதலில் விரும்பவில்லை. அதில் சர்க்கரை சேர்த்துத் தயாரிக்கப்பட்ட பின்பே அதை விரும்பினார்கள். புதிய ஸ்பெயினின் கவர்னராக இருந்த கார்டெஸ்தான் 1527-ம் ஆண்டு கோகோ பீன்களை முதலில் இறக்குமதி செய்தார். அதைத் தொடர்ந்து 17-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளில் கோகோ பிரபலமானது. 18-ம் நூற்றாண்டு வரை சாக்லெட் கையால்தான் தயாரிக்கப்பட்டது. உற்பத்தித் துறைகளின் வளர்ச்சி, சிறந்த கோகோ பீன்ஸ் தெரிவு, சாகுபடியில் ஏற்பட்ட மாற்றம் போன்றவை இன்று சாக்லெட்டைப் பிரபலமாக்கியிருக்கின்றது.

மூன்றாம் பகுதியில் சாக்லெட்டின் இன்றைய நிலை எடுத்துக் காட்டப்படுகின்றது. திரவ, மற்றும் திடமான சாக்லெட், சாக்லெட் பார்கள், சாக்லெட் உருவங்கள் போன்றவற்றைக் காண



முடிகின்றது. குளிரூட்டிய அறையில் ஈபெல் கோபுரத்தின் பெரிய 9 அடி உயரமான வடிவத்தைச் சாக்லெட்டில் செய்து வைத்திருந்தார்கள். இது போன்ற சாக்லெட்டில் செய்த பல உருவங்களை அங்கே காணமுடிந்தது. புதிய தலைமுறையி னர் புரிந்து கொள்ளத்தக்க வகையில் ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. இதைவிட ஒளிப்படங்களாகவும் காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

இம்முறை லண்டன் சென்ற போதும் பிரோம்ப்டன் வீதியில் உள்ள ஹரோட்ஸ் பல்பொருள் அங்காடியில் ஹரோட்ஸ் சாக்லட் எப்படித் தயாரிக்கிறார்கள் என்பதைச் சென்று பார்த் தேன். ஸ்ரோபெரி சாக்லட்டை நாங்கள் வரிசையில் நின்று கடலை வாங்கியது போல, அவர்கள் வரிசையில் நின்று வாங் கினார்கள். எப்படி அதைச் செய்கிறார்கள் என்பதை, வாடிக் கையாளர்களுக்கு முன்பாகவே செய்து காட்டினார்கள். நானும் வரிசையில் நின்று வாங்கினேன், சாக்லட் கழியில் ஸ்ரோபெரியைத் தோய்த்து எடுத்து சிறிது நேரம் காயவிட்டு, அப்புறம் ஒரு பேப்பரைக் கடலைக்குக் கோலுவது போலச் செய்து அதில் ஐந்து ஸ்ரோபெரி சாக்லட்டுக்களை வைத்துக் கொடுத்தார்கள். சிறுவர் சிறுமிகளுக்குப் பிடித்துப் போன இந்த சாக்லட்டைச் சாப்பிடுவதைப் பொதுவாக ஐம்பதுகள் வரை தொடர்ந்து கொண்டே இருப்பார்கள். திடீரென குடும்ப டாக்டர்கள் நிறுத்தச் சொன்னால்தான் இனிப்பை நிறுத்துவார் கள், இல்லாவிட்டால் தொடர்ந்தும் சாப்பிட்டுக் கொண்டே இருப்பார்கள், அந்தளவிற்கு இன்றைய உலகில் சாக்லட் எல் லோரையும் கவர்ந்திருப்பதில் ஆச்சரியமில்லை.

பாரிஸ் நகரத்தின் கீழ் இன்னுமொரு பாரிஸ் இருப்பதாக விக் டர் கியூகோ குறிப்பிட்டிருந்தது ஞாபகம் வந்ததால் அந்த இடத்தைப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். பாரிஸில் இதன் நுழைவசல் பொன்ட் டி எல் அல்மா (Pont de l'Alma) என்ற இடத்திற்கு அருகே செயின் நதிக்கரையில், ஈபிள் கோபுரத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கின்றது. சாக் கடை கழிவு நீர் வடிகால் எப்படி இயங்குகிறது என்பதை அங்கு சென்று பார்த்தேன். நிலத்திற்கு அடியில் பெரிய குழாய்களில் சாக்கடை அழுக்கு நீர் ஓடுவதையும், கதாநாய கனும் வில்லனும் அதற்குள் சண்டை பிடிப்பதையும் ஆங்கி லப் படங்களில் பார்த்திருக்கின்றேன். ஆனால் நேரடியாகவே அப்படி ஒரு இடத்திற்குக் கீழே சென்று அதைப் பார்க்க சந் தர்ப்பம் கிடைத்தது.

இந்த கழிவு நீர் சுரங்கப்பாதை செயின் நதிக்குச் சமாந்தரமா கச் செல்கின்றது. கீழே சென்றதும் முன்பு சாக்கடையாகப் பாவித்த சுரங்கப்பதையைச் சென்றடைய முடியும். இப்போது அதைத்தான் காட்சியகமாகப் பாவிக்கிறார்கள். அங்கே கட மையில் இருந்தவர்கள் பிரெஞ்சு மொழியில் பேசினார்கள். எங்களுக்கு ஓரளவு புரிந்தாலும், கனடாவில் இருந்து வந்தி ருக்கிறோம் என்றதும் ஆங்கிலம் தெரிந்த ஒரு பெண்ணை அழைத்து வந்தார்கள். அவர் நீலநிறச் சீருடை அணிந்திருந் தார். தான் இப்பொழுதுதான் பயிற்சி எடுப்பதாகவும், தனது பெயர் 'ஹெலீனா' என்றும், தனக்கு ஆங்கிலம் ஓரளவு தெரி யும் என்றும் சொன்னார். சுகாதாரம் கருதி கையுறை அணி வது நல்லது என்று சொல்லி கையுறை அணியத்தந்தார். நாங் கள்தான் தனது முதலாவது வாடிக்கையாளர் என்பதை எங்க ளிடம் சொன்னபோது கொஞ்சம் பதட்டப்பட்டார். அவரது எதிர்காலம் சிறக்க முதலாவது வாடிக்கையாளராக அவருக்கு நாங்களும் வாழ்த்துக் கூறினோம். இந்த வடிகால் பற்றிப் பல விடயங்களை அவர் குறிப்பிட்டதாலும், அங்கே நான் அவதா னித்ததாலும் அதை இந்தக் கட்டுரையில் தருகின்றேன்.

இங்கே உள்ள சாக்கடை அருங்காட்சியகத்தை 2021-ம் ஆண்டு முதல் பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து விட்டி ருக்கின்றார்கள். 1889-ம் ஆண்டு முதல் முக்கியமான யாரா வது சாக்கடைச் சுரங்கப் பாதைகளைப் பார்க்க விரும்பி னால், மாதத்தில் இரண்டு நாட்கள் சிறிய படகுகள் மூலமும், அதன்பின் உள்ளே சிறிய வண்டிகள் மூலமும் அழைத்துச் சென்று காட்டினார்கள். அந்த நிலையில் மாற்றமடைந்து, இன்று மின்தூக்கியின் உதவியோடு கீழே சென்று சாக்கடை யைப் பார்க்கக் கூடியதாக வடிவமைத்திருக்கிறார்கள்.

இந்த அருங்காட்சியகம் 14-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாரிஸின் அதிபராக இருந்த ஹியூஸ் ஆப்ரியாட் Hugues Au-briot என்பவர் காலத்துச் சாக்கடை. பின்னர் 19-ம் நூற்றாண் டின் தொடக்கத்தில் பொறியாளர் யூஜின் பெல்கிராண் Eu-gène Belgrand என்பவரால் வடிவமைக்கப்பட்டது. சுரங்கப்பா தைகளைக் கொண்டதாக இச்சாக்கடை வடிவமைக்கப்பட்டது. 18-ம் நூற்றாண்டில் சாக்கடைகள் ஒரு கழிவுநீர்த் தொட்டி போலவே இருந்தன. கழிவு நீர்த்திட்டம் சரியாக அமைக்கப்ப டாததால் தொற்று நோய்கள் இதனால் பரவத் தொடங்கின. இதைவிட காலத்திற்குக் காலம் இங்கு பணியாற்றிய கழிவுநீர்



பணியாளர்களின் பங்கு பற்றியும், மற்றும் நீர் சுத்திகரிப்பு முறைகள் பற்றியும் தேவையான விபரங்களையும் தெரிந்து கொள்ள முடிந்தது. சாக்கடைகளின் வரலாறு மட்டுமல்லாமல், நீர் சுத்திகரிப்பு முறைகள் மற்றும் உரோமன் காலத்திலிருந்து சுத்திகரிப்பு மற்றும் கிருமி நீக்கம் செய்யும் நுட்பங்களின் பரிணாமத்தைப் பற்றியும் இங்கே விளக்கங்கள் கிடைக்கின்றன.

1800-களில் நெப்போலியன் போனபார்டினால் குழாய்கள் மூலம் கழிவு நீர் அகற்றும் திட்டம் அறிமுகமானது. பாரிஸ் நகரில் 550,000 மக்களுக்கு 16 கிலோ மீட்டர் நீளமாக சாக்கடைகள் மட்டுமே அப்போது இருந்தன. 1806-ம் ஆண்டு பாரிஸ் கழிவுநீர் சேவை பாண்ட்ஸ் எட் சாஸீஸின் நிறுவனப் பொறியாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 1833-ம் ஆண்டு மழைநீர், தெருவைச் சுத்தம் செய்யும் நீர் போன்றவற்றைச் சேகரிக்க கழிவுநீர் வலையமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த வலையமைப்பால் வடிகட்டப்பட்ட கழிவுநீர் சுற்றாடலில் உள்ள வயல்களுக்கு உரமாகப் பயன்படுத்தப்பட்டது. 1865-ம் ஆண்டு சுத்திகரிக்கப்பட்ட, ஆனால் குடிக்க முடியாத இந்த நீர் பூங்காக்களுக்கும், தெருவைச் சுத்தம் செய்வதற்கும் பாவிக்கப்பட்டது. 1867-ம் ஆண்டில் சாக்கடையைப் பார்க்க விரும்பிய முக்கியமானவர்களைத் இங்குள்ள தொழிலாளர் படகிலும் அதன்பின் வண்டியிலும் அழைத்துச் சென்று காட்டினார்கள். 1989-ம் ஆண்டின் பின் இந்தச் சாக்கடை அருங்காட்சியகம் புதுப்பிக்கப்பட்டு, அதன் தொழிற்பாடு, இயந்திரங்களின் அமைப்புகளைப் பொதுமக்கள் பார்க்கக்கூடியதாக அமைக்கப்பட்டது. ஆண்டு தோறும் சுமார் ஒரு லட்சம் பார்வையாளர்கள் இங்கு வருகை தருகின்றார்கள்.

1200-களில் பிரான்ஸ் நாட்டின் மன்னராக இருந்த பிலிப் அகஸ்டேவின் காலத்தில் பாரிஸ் நகரில் தெருக்கள் ஒழுங்காக அமைக்கப்பட்டு, கழிவுநீர் ஓடுவதற்கு ஏற்ற வகையில் வடிகால்களும் அமைக்கப்பட்டன. அக்காலத்தில் இருந்து பாரிஸ் நகரத்தின் கழிவுநீர் சாக்கடைகள் மூலம் வெளியேற்றப்பட்டு வருகின்றது. பிரான்சின் மன்னனான நெப்போலியன் போனபார்ட்டின் ஆட்சியின் போது சாக்கடை கழிவுநீரைக் குழாய்கள் மூலம் வெளியேற்றும் முறை ஆரம்பிக்கப்பட்டது. 1850-களில் தெடங்கப்பட்ட கழிவுநீர் சுரங்கப்பாதைகள் இன்று சுமார் 1,500 மைல்கள் நீளமானதாக இருக்கின்றன.

இந்த சாக்கடை சுரங்கங்கள் முன்பு மழைக்காலங்களில் தெருக்களில் இருந்து வடியும் நீர், மலசலகூடத்துச் சாக்கடைகள், தெருவைச் சுத்தம் செய்யும் தண்ணீர் போன்றவற்றுக்காகப் பயன்படுத்தப்பட்டன. தற்போது மலசலகூடத்து கழிவுகள் தனிக் குழாய் மூலம் கொண்டு செல்லப்படுகின்றது. குடிநீருக்கான தண்ணீரும் தனிக்குழாய் மூலம் பாவிக்கப்படுகின்றது. இதைவிட தொலைத்தொடர்பு கேபிள்களும் இந்தச் சுரங்கப் பாதைக்கூடாகத்தான் செல்கின்றன. 20-ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை கழிவுநீர் பெரிய அளவில் விவசாயத்திற்குப் பயன்பட்டது. நகரத்தில் கட்டடங்கள் அதிகரித்ததால் தற்போது விவசாய நிலம் குறைந்துவிட்டது.

இந்தச் சாக்கடை பற்றி விக்டர் கியூகோவின் ‘லெஸ் மிசரபிள்ஸ்’ மற்றும் கேஸ்டன் லெரோக்ஸின் ‘பாண்டம் ஆஃப் தி ஓபரா’ போன்ற இலக்கியப் படைப்புகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. அங்குமிங்கும் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்த எலிகள் எங்களைக் கண்டு கொண்டதாவே காட்டிக் கொள்ளவில்லை. குட்டி முதலை ஒன்றையும் அங்கிருந்த சாக்கடையில் பிடித்து மிருகக்காட்சிச் சாலைக்குக் கொடுத்ததாகச் சொன்னார்கள். பாரிஸில் கழிவுநீர் சுரங்கப் பாதையைச் சென்று பார்த்ததால், பாதாள உலகைப் பார்த்த புதிய அனுபவம் கிடைத்தது.

**உசாத்துணை:**


- https://en.wikipedia.org/wiki/Paris_Sewer_Museum
- https://thebettervacation.com/chocolate-museum-paris




kuruaravindan@thaiveedu.com




தெருக்கூத்து வடிவம்தான் ஆரம்பத்தில் மக்களை மகிழ்விக்கக்கூடிய ஓர் ஊடகமாக இருந்தது. திருவிழா நாட்களில் விடிய விடிய தெருக்கூத்துகள் தினமும் நடக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஓரிரண்டு நூற்றாண்டுகளுக்கு முன் மேடை அமைத்து ஒரு புறம் மட்டும் பார்க்கும் பார்சி பாணி நாடகத்தை வடநாட்டில் அறிமுகப்படுத்தினார்கள். அது மெல்ல நாடு முழுக்க பரவி, தெருக்கூத்து வடிவத்திற்கு இடையூறு செய்தது. பின்னர் திரைப்படங்கள் வந்து நாடகங்களை அழித்தது இன்னொரு திருப்பம். தெருக்கூத்து வடிவம் இன்னும் சில குறிப்பிட்ட தமிழக மாவட்டங்களில் உயிர் பிழைத்து வாழ்ந்துகொண்டிருக்கிறது என்பது ஒரு மகிழ்வு தரும் விஷயம்.

நான் முதன் முதலில் பார்த்த தெருக்கூத்து எந்த கிராமத்திலும் அல்ல. சென்னை மாநகரின் புரசைவாக்கம் பகுதியில் மில்லர்ஸ் சாலையில் ஒரு பேருந்து நிறுத்தத்தில் விடிய விடிய நடைபெற்றதை பார்த்தேன். அப்போது எனக்கு 22 வயது. பிறகு தெருக்கூத்துகள் அனைத்தையுமே திரைப்படங்களில்தான் பார்த்தேன். தெருக்கூத்தும் அல்லாத நாடகமும் அல்லாத சில வடிவங்களைக்கூட திரைப்படங்களில் பார்த்திருக்கிறேன். புதையல் படத்தில் 'கண்டி ராஜா', நவராத்திரி படத்தில் 'சத்தியவான் சாவித்திரி' எல்லாம் ஒரு குழப்பமான வடிவிலேயே காண நேர்ந்தது. ஸ்ரீதர் ராஜன் இயக்கிய 'கண் சிவந்தால் மண் சிவக்கும்' திரைப்படம் இந்திரா பார்த்தசாரதியின் 'குருதிப்புனல்' நாவலை அடிப்படையாகக் கொண்டது. கீழ்வெண்மணியில் நாற்பதுக்கும் மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்கள் உயிரோடு எரிக்கப்பட்ட சம்பவத்தையே நாவலாக ஆக்கினார். நந்தனார் சரிதத்தை தெருக்கூத்தாக அரங்கேற்றும் முயற்சியும், புரிசை கண்ணப்ப தம்பிரான் சம்பந்தப்பட்ட தெருக்கூத்துக் காட்சிகளும் இந்த படத்தில் இருந்தன. தெருக்கூத்தை களமாக வைத்திருந்த முக்கியமான திரைப்படம், நாசர் இயக்கிய 'அவதாரம்'. அதில் நாசரே தெருக்கூத்துக் கலைஞனாக நடித்திருந்தார். கூத்துக் கலைஞர்களின் வேலையிழப்பு, பிழைப்பு தேடி நகரத்தை நோக்கி செல்வது போன்ற அம்சங்களுக்கு முக்கியத்துவம் தந்து, ஒரு மர்மப்பட சாயலில் முடிந்தது அவதாரம். சங்ககிரி ராஜ்குமார் இயக்கிய 'வெங்காயம்' அதிக புகழ் பெறாவிட்டாலும் நல்லதொரு முயற்சி. முயற்சி என்ற அளவிலேயே நின்று போனதுதான் வருத்தம்.

சமீபத்தில் வெளியாகியிருக்கும் 'ஜமா' இதே தெருக்கூத்து கலையை முக்கியமான அம்சமாக கொண்டிருக்கும் ஒரு திரைப்படம். இயக்குநருக்கு முதல் திரைப்படம். கதாநாயகனாக நடித்தவரும் அவரே. பொதுவாக தெருக்கூத்து என்பது தமிழகத்தில் பரவலாக பரவிக்கிடக்கும் கலை வடிவம் அல்ல. பல பிராந்தியங்களில் அதை பற்றி அறியாதோர் பலர் உள்ளனர். தென் தமிழகத்தில் பரவலாகாதது தெருக்கூத்து. அங்கு கணியான் ஆட்டம் போன்ற வேறு வகைகள் இருந்தாலும் கூத்து இல்லை. இந்த திரைப்படத்தின் கதைக்களம் திருவண்ணாமலையை சுற்றிய கிராமங்களில் குடி கொண்டிருக்கிறது. நாயகன் கல்யாணம், தெருக்கூத்துகளில் பெண் வேடம் புனைந்து நடித்து, உடல் மொழி, பேசும் பாணி அனைத்திலும் பெண்மை மிளிர மாறிப்போன ஒரு கலைஞன். இவர்க



ளது ஜமாவுக்கு தலைவராக இருப்பவர் கூத்து வாத்தியார் தாண்டவம். உறவினரும் கூட. மகா கலா கர்வம் கொண்ட கலைஞன். ஆண் வேடம், பெண் வேடம் என அனைத்து வேடங்களையும் புனைந்து, விடாமல் நாட்கணக்காக கூத்து ஆடக்கூடியவர். கல்யாணத்தின் தாய்க்கு தன் மகன் பெண் வேடம் புனைந்து நடிப்பதில் அவ்வளவு விருப்பம் இல்லை. எப்போதும் பெண் வேடங்கள் புனைந்து நடிப்பதாலே அவனுக்கு பெண்களுக்குரிய பல குணங்கள் வந்துவிட்டதாக அவளது கவலை. அவனுக்கு திருமணம் செய்து வைக்க படாதபாடு படுகிறாள். பெண் பார்க்கப்போன இடங்களில், அடுக்களைக்குள் புகுந்து மணப்பெண்ணுக்கே சமையலில்



டிப்ஸ் தருவதும், புடவையை அவளுக்கு சரியாக காட்டித் தருவதுமாக எங்கு போனாலும் பெண் பார்க்கும் வைபவத்தை குலைத்துப்போடுகிறது அவனது குணம். ஊர்ப் பெண்களுடன் சரிசமமாக மல்லுக்கு நிற்பதும், திண்ணைகளில் அமர்ந்து கிழவிகளிடம் வம்பு பேசுவதுமாக பொழுதை கழிப்பவனது ஆண்மையே கேலிக்குரியதாகிறது. இவன் எப்போதும் இப்படி இருந்தவன் இல்லை. நடிப்பின் மீதுள்ள ஈடுபாடு அவனை அந்த அளவுக்கு மாற்றியிருக்கிறது. கூத்தாடியாக மாறுவதற்கு முன் அவனும் சராசரி இளைஞனாகத்தான் இருந்திருக்கிறான்.

வாத்தியாரின் மகள் ஜெகாவின் படிப்புச் செலவுக்காக பல துன்பங்களை கல்யாணம் அனுபவித்திருக்கிறான். அதன் ஒரு பகுதியாகத்தான் நடிக்கவும் வந்தது. என்ன, பெண்வேடம்தான் அவனுக்கு விதித்திருந்தது. ஜெகாவுக்கும் அவன் மீது ஒரு ஈர்ப்பு உண்டு. திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்பது இருவரது விருப்பமும் கூட. பெண் கேட்டு வரும் கல்யாணத்தையும் அவன் தாயையும் தாண்டவம் கடுமையாக அவமதிக்கிறார். வாசலோடு விரட்டப்பட்டவர்களுடன் ஜெகாவும் சேர்ந்துகொண்டு வெளியேறுகிறாள். ஆனால் அங்கும் ஒரு திருப்பம் நேர்கிறது. கல்யாணத்திற்கு கலை மீதுள்ள ஈடுபாடு காதலைத் தியாகம் செய்யும் அளவுக்கு போகிறது. வாத்தியாரிடம் தன்னை மீண்டும் சேர்த்துக்கொள்ள கெஞ்சுகிறான்.

தானே ஜமா என்றழைக்கப்படும் கலைக்குழு ஒன்றைத் தொடங்கி வாத்தியாராக, கிட்டத்தட்ட இயக்குனராக ஆவது கல்யாணத்தின் லட்சியம். இதற்கு ஒரு காரணம் இருக்கிறது. இப்போது தாண்டவம் நடத்திக்கொண்டிருக்கும் ஜமாவை முதலில் தொடங்கியதே கல்யாணத்தின் தந்தை இளவரசுதான். கூத்துக்கு எந்த சம்பந்தமும் இல்லாத கூலித்தொழிலாளியான அவருக்கு எப்படியோ கூத்தின் மீது பெரும் ஆர்வம் ஏற்பட்டு, பயிற்சிகள் எடுத்துக்கொண்டு தாண்டவம் போன்ற ஆட்களை சேர்த்துக்கொண்டு தனியாக ஒரு ஜமா ஆரம்பித்தவர். கோணல் புத்திக்கார தாண்டவம் ஏற்படுத்திய பிரச்சினையில் குடியில் மூழ்கி மரணமும் அடைகிறார். ஜமா தாண்டவம் கைக்கு சென்றுவிடுகிறது.

ஜமாவை தொடங்கும் முயற்சிகளில் கல்யாணம் இறங்குவதை பார்க்கிறோம். நம்பத்தகுந்த ஆட்களாக இல்லை கூட வந்து கூத்தாடப்போகிறவர்கள். தன் சொத்தையே விற்று ஜமாவை தொடங்கும் முட்டாள்த்தனமான முயற்சியில் இறங்குகிறான். படம் நெடுக அவன் தந்தையின் வாழ்க்கையும் இழைக்கப்பட்ட துரோகமும் இவனுக்கு நேரும் அவமானங்களும் ஒரு இழையாய் பயணித்துக்கொண்டிருக்கும்.

ஊர்க் கோவில் கொண்டாட்ட சம்பிரதாயங்களில் ஒரு கூத்தாட்டக் கலைஞனாக கலந்து கொள்ளக்கூட அவனுக்கு உரிமை மறுக்கப்படுகிறது. அவனை ஆணாக அங்கு சிலர் மதிப்பதில்லை. அவர்களில் யாருக்காவது அருள் வந்து ஆடினால் மட்டுமே சில குறிப்பிட்ட பூஜை கொண்டாட்டங்கள் நிகழும். சில வருடங்களாகவே யாருக்கும் சாமி வந்ததாகவும் தெரியவில்லை. தனி ஜமா ஆரம்பித்து கூத்தாட கூட இருப்பவர்களே தயாராக இல்லை. அட்வான்ஸ் கேட்டு அவனை துன்புறுத்துகிறார்கள். எப்படியும் திருவிழாவுக்கு கூத்தாட வேண்டும். பிரிந்தவர்களை ஒன்று சேர்த்தால் மட்டுமே இது சாத்தியம். தாண்டவம் தானும் கூத்தில் கலந்துகொண்டு ஆட, ஒரு நிபந்தனை விதிக்கிறான். அது கூத்தில் கல்யாணம் ஆண் வேடம் புனையக்கூடாது, பெண் வேடம், வழக்கமான திரௌபதி வேடம் கூட இல்லாமல், குந்தி வேடம் மட்டுமே புனையவேண்டும், அதற்கு ஒத்துக்கொண்டால் மட்டுமே மற்றவர்களும் கலந்து கொள்வார்கள். இதற்கிடையில் சம்பிரதாய உரிமையில் கல்யாணம் கலந்து கொள்ள இதுவரை அவனை கேலி செய்து வந்த உள்ளூர் இளைஞர்களே உதவுகிறார்கள். அதில் அருள் வந்து கல்யாணம் சன்னதமும் ஆடுகிறான்.

கர்ணமோட்சம் கூத்து நடைபெறும் நாளும் வருகிறது. கல்யாணம் குந்தி வேடம் புனைகிறான். தாண்டவனுக்கு கர்ணன் வேடம். அர்ஜுனனின் அம்பு பட்டு தேர்ச் சக்கர காலின் அருகே மரண வேதனையுடன் அமர்ந்திருக்கிறான் கர்ணன். தான் பெற்ற மக்களில் மூத்தவனான அவன் நிலை கண்டு கதறி கண்ணீர் வடிக்கிறாள் குந்தி. ஆவேசமும் அவலமும் கலந்த ஒப்பற்ற நடிப்பை அன்று அரங்கேற்றுகிறான் கல்யாணம். நாடகம் பார்க்க வந்த பெண்கள் எல்லாம் அவன் ஒப்பாரி கண்டு அழுது கலங்குகிறார்கள். அவனுடைய நடிப்பின்



வீச்சு தாண்டவனையே உலுக்கிப்போடுகிறது. கண்கள் மூடி நாற்காலியின் ஓரத்தில் சாய்ந்து சவத்தைப் போல கிடக்கும் தாண்டவன் கண் திறந்து கல்யாணத்தை பார்க்கிறான். அவன் கண்களில் இருந்து கண்ணீர்த்துளிகள் வழிந்து ஓடுகின்றன.

கூத்து முடிந்து அனைவரும் கலைந்து சென்று அரிதாரத்தை கலைக்கும் முயற்சியில் இருக்கும்போது, தாண்டவன் அங்கு வருகிறான். நெடுஞ்சாண்கிடையாக அவன் வெறுத்து வந்த கலைஞனின் கால்களில் வீழ்ந்து வணங்குகிறான். அதன் பிறகு... அவன் மீண்டும் எழவே இல்லை.

தாண்டவத்தின் சிதை எரியும்போது அவனது சக கலைஞர்கள் அனைவரும் அவரவரின் முழு ஒப்பனையோடு அவனுக்கு இறுதி மரியாதை செலுத்துகிறார்கள். ஒரு கலைஞனுக்கு இதைவிட என்ன பெரிய மரியாதை கிடைக்கும்!

கல்யாணத்தின் ஜமாவின் முதல் அரங்கேற்றம் ஊர்த் திடலில் நடைபெற உள்ள நிலையில் பார்வையாளர்கள் யாரும் இதுவரை வரவில்லை. ஒப்பனை அறையில் கல்யாணம் முதன் முறையாக ஆண் வேடம் தரித்துக்கொண்டு இருக்கிறான். இடுப்பில் வட்டுடுப்பு, தோள்களில் அகன்ற புஜகீர்த்தி, தங்க ரேக் அலங்கார கிரீடமும் அதில் தொங்கி ஆடும் குஞ்சமும், அட்டைக்கத்தி, முகத்தில் குழைத்து பூசப்பட்ட வண்ணம், தீட்டப்பட்ட கண்களும் அடர்ந்த புருவமுமாக ஒட்டு மீசை சகிதம் தயாராகிறான். திடலில் மின்சாரவெட்டு ஏற்பட்டு குழல் விளக்குகள் அணைந்து போக தீவட்டிகள் ஏற்றப்படுகின்றன. இருளில் கம்பீரமாக இரண்டு தீவட்டிகள் ஏந்தி தோன்றுகிறான் கல்யாணம். குழுவினர் பரவசமாகின்றனர். பாடலும் இசையும் ஒலிக்கத் தொடங்க, அற்புதமான ஒரு ஆண்மை மிளிரும் ஆட்டம் அங்கே துவங்குகிறது. எந்தவிதமான பெண் வாடையுமற்ற உக்ர தாண்டவம்! மயிர்க்கூச்ச வைக்கும் இந்த காட்சியுடன் படம் நிறைவடைகிறது!

ஜமாவின் பெரிய பலம், நடிகர்கள். சேத்தன், அம்மு அபிராமி தவிர பெரும்பாலும் நாம் இதுவரை பார்த்தேயிராத முகங்கள். இயக்குநர் பாரி இளவழகன், கல்யாணம் வேடம் ஏற்றிருப்பதே பெரிய துணிச்சலான முயற்சி. தன் முதல் பிரவேசத்தில் இத்தகைய ஒரு வேடம் ஏற்க பெரும் துணிவு வேண்டும். அது இவருக்கு இருக்கிறது. வெகு சிறப்பாக இந்த வேடத்தை திருநங்கை சாயமில்லாமல் செய்திருக்கிறார். கொஞ்சம் சிறிதாகக்கூட அதீத நடிப்பில் இறங்கியிருந்தால் செயற்கையாக போயிருக்கக்கூடிய வேடம். தாண்டவனாகத் தோன்றும் சேத்தன் இந்த படத்தை தூக்கி சுமந்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். கொஞ்சம் தந்திரம், துரோகம், கலைத்திறன், ஆணவம் அனைத்தும் கைவந்திருக்கிறது. இத்தனை வருடம் கழித்து பெயர் சொல்வது போல ஒரு வேடம்! கன்னடராக இருந்தாலும் திருவண்ணாமலைத் தமிழை அற்புதமாக பேசி நடித்திருக்கிறார். உடல் மொழி, நடனத்திறன் அனைத்துமே ஆச்சரியத்தை தருகிறது! இளையராஜா இதன் இசையை வெகு நேர்த்தியாக தந்திருக்கிறார். பழைய இளையராஜா-வாக இருந்திருந்தால், உச்சகட்ட காட்சியில், இசையால் நம்மை அலற அடித்திருப்பார். ஆனால் இதில் வெகு கவனமாக இசையை கையாண்டிருக்கிறார். உச்சகட்ட காட்சியில் உண்மையான தெருக்கூத்துக் கலைஞர்களின் பாடலையையும் இசையையும், கரகரத்த கூத்துப்பாணி குரல்களை வைத்தே தந்திருக்கிறார்!

ஓர் அழிந்து கொண்டிருக்கும் மக்கள் கலையை சரியான உணர்ச்சி விகிதத்துடன், கிராமியப் பின்னணியுடன், ஒரு திரைக்கதை எழுதி எளிமையாகவும் அழகாகவும் தந்திருக்கும் இயக்குநர் பாரி இளவழகன் பாராட்டுக்குரியவர்.

இந்த திரைப்படம் அமேசன் தளத்தில் காணக்கிடைக்கிறது!



jeeva@thaiveedu.com



# கிழக்கிலங்கையின் சிறுகதை முன்னோடி வ.அ. இராசரத்தினம்

- வே. விவேகானந்தன்

கிழக்கிலங்கையிலே சிறுகதை இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராக இலக்கியவாதிகளால் வர்ணிக்கப்படுபவர் வ.அ. இராசரத்தினம் அவர்கள். இலக்கிய உலகில் வானா அனா என்னும் பெயரில் எல்லோராலும் அழைக்கப்பட்டுப் புகழோடு வலம் வந்தவர். இவர் நீர் வளமும் நிலவளமும், கடல் வளமும் நிறைந்த, கொட்டியாபுரத்தில் வாழ்ந்து வந்த வஸ்தியாம்பிள்ளை அந்தோனியா இணையருக்கு மகனாக 1925-ம் ஆண்டு ஜுன் மாதம் ஐந்தாம் திகதி பிறந்தார். வானா அனா தனது ஆரம்பக் கல்வியை, இவரது தந்தையார் ஆசிரியராகப் பணிபுரிந்த தாமரைவில் ரோமன் கத்தோலிக்கப் பாட



சாலையில் கற்றார். சிறு வயதிலேயே சூடாமணி, நிகண்டு ஆகியவற்றை மனனம் செய்து தந்தையரிடம் ஒப்புவிக்கும் பழக்கத்தைக் கொண்டிருந்தார். இடைநிலைக் கல்வியை மூதூர் அந்தோனியார் பாடசாலையிலும், பின்னர் ஆசிரியர் பயிற்சி நெறியை மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிலும் தொடர்ந்தார். 1946-ம் ஆண்டு ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்ய, ஆக்க இலக்கியத்தைப் படைத்து ஒப்புவிக்க வேண்டியிருந்தது. இவர் தனக்கு விருப்பமான கவிதை இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்த போதிலும், அதில் திருப்தியடையாமையால் சிறுகதை இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்து, 'மழையால் இழந்த காதல்' என்னும் சிறுகதையை எழுதி சமர்ப்பித்து, ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்தார்.

1948-ம் ஆண்டு டெனியாய புனித மத்தியூஸ் கல்லூரியில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டு, அதே பாடசாலையில் 1948- ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்தார். தொடர்ந்து மொரட்டுவ புனித செபஸ்ரியன் கல்லூரி, திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி, சம்பூர் மகா வித்தியாலயம், உப்பாறு ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, பள்ளிக்குடியிருப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இரால்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, சேனையூர் மகா வித்தியாலயம், பாரதிபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, பெரியவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை போன்ற பல பாடசாலைகளில் ஆசிரியராகவும் மூதூர் புனித அந்தோனியார் பாடசாலை அதிபராகவும் பணிபுரிந்தார்.

ஆசிரியராகப் பணிபுரிந்த அதேவேளை இலக்கியப் பணிகளிலும் ஈடுபட்டு வந்தார். ஆசிரியர் பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்வதற்காக இவர் எழுதிய முதலாவது சிறுகதையான 'மழையால் இழந்த காதல்' என்னும் சிறுகதை 1948-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தினகரன் பத்திரிகையில் பிரசுரமானது. அதேவருடம் அவர் எழுதிய முதலாவது கவிதையும் திருகோண மலையில் இருந்து, அ.செ. முருகானந்தன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த, 'எரிமலை' என்னும் பத்திரிகையில் வெளிவந்தது. ஈழகேசரியில் பிரசுரமான இவரது முதலாவது நாவலான 'கொழுகொம்பு' 1959-ம் ஆண்டு தமிழ் நூற் பதிப்பகத்தினால் நூலாக வெளியிடப்பட்டது. வானா அனா அவர்கள் 'ஈழநாகன், கீழக்கரை தேவநேயப் பாவாணர், வியாகேச தேசிகர்' எனப் பல புனைபெயர்களில் தனது படைப்புகளை வெளியிட்டு வந்தார்.

இருபத்தியொரு வயதில் எழுதத் தொடங்கிய வனா அனா 300-க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். 1951-1954 காலப் பகுதியில், ஈழகேசரி, வீரகேசரி, சுதந்திரன் ஆகிய பத்திரிகைகளில் இவர் எழுதிய சிறுகதைகளில், பாலன் வந்தான், கலைஞனும் சிருஷ்டியும், அறுவடை, மனிதன், பாசம், தோணி, பெண், குடிமகன், ஒற்றைப்பனை, கோகிலா, பிரிவுபசாரம், ஏமாற்றம், தருமம், நம்பிக்கை ஆகிய பதின்நான்கு சிறுகதைகள் உள்ளடங்கிய சிறுகதைத் தொகுதியான 'தோணி' 1962-ம் ஆண்டு வெளிவந்தது.

இதற்கு இலங்கை சாகித்திய மண்டலப் பரிசும் கிடைத்தது. கிழக்கு இலங்கைக்குக் கிடைத்த முதலாவது சாகித்திய மண் டலப் பரிசு என்ற பெருமையும் பெற்றது.

வனா அனா-வின் மற்றொரு சிறுகதைத் தொகுதியான 'கொட் டியாரக் கதைகள்' 1999-ம் ஆண்டு மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டது. இந்நூலின் முகவுரை யில், மகாவலி கங்கையின் இரு கிளைகளான குருக்கள் கங் கைக்கும், வெருகல் கங்கைக்கும் இடைப்பட்ட பிரதேசம் 'கொட்டியாரப்பற்று' என சரித்திர நூல்கள் குறிப்பிடுவதாகக் கூறி, இப்பிரதேசத்தின் பேரூர் கொட்டியாரம் எனவும், 17-ம் நூற்றாண்டின் பின்னர் தான் அதற்கு மூதூர் என்ற பெயர் வந் ததாகவும், அதுவே தான் பிறந்த மண் எனவும் பெருமையுடன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சிறுகதைத் தொகுப்பில் 1952-ம் ஆண்டு முதல் 1997-ம் ஆண்டு வரை சிந்தாமணி, தினக்குரல், சரிநிகர் பத்திரிகைக ளில் வெளிவந்த, அந்த விருந்து, நம்பிக்கை, நியதி, தாய், காட்டுப்பூ, அடக்கம், அபிஷேகம், சீதேவிக்காக, ஓர் ஆமைக் கதை, கௌரவப் பிச்சை, இந்தனம் இறக்கி, இரசிகன், எங் கள் கடன்காரருக்கு, சங்கிலி, துணிச்சல், தியாகி ஆகிய பதி னாறு கதைகள் இடம் பெற்றுள்ளன. அவை கொட்டியாபுரப் பற்றின் நிலம், நீர், கடல் வளங்களையும், அங்கு வாழும் மக்க ளின் வாழ்க்கை முறை, தொழில், கலை, கலாச்சாரப் பண் பாட்டுக் கோலங்களையும், மற்றும் மொழிவழக்கில் வட்டாரச் சொற்களையும் செறிவாகக் கொண்டுள்ளமையைப் பிரதிப லிக்கின்றன. இக்கதைகள் ஊடாக வனா அனா, தான் பிறந்த மண் மீது கொண்டிருந்த அளவிலாக் காதலைக் கண்ணாரக் காணக் கூடியதாக உள்ளது. மூதூர் பிராந்தியத்தின் சமூக, பொருளாதார, அரசியற் சரித்திரத்தை, இன்னமும் நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வரும் சரித்திர மாணவர் அறிய வேண்டின், அவர் என் கதைகளைப் படித்தேயாக வேண்டும் என்னும் உயரிய நோக்கத்துடன், தனது ஆக்கங்களைப் படைப்பதாக, 'ஏன் எழுதுகிறேன்' என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கு ஒன்றில் உற்சாகத்துடன் குறிப்பிட்டார்.

சிறுகதைகளை எழுதிக் குவித்த வானா அனா அவர்கள் ஏரா ளமான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அவர் எழுதிய முப் பத்தியிரண்டு கட்டுரைகள் அடங்கிய நூல் 'இலக்கிய நினை வுகள்' என்னும் தலைப்பில் 1995-ம் ஆண்டு திருகோணமலை அன்பர் நிதியத்தினால் வெளியிடப்பட்டது பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆண்டு மலர்கள் போன்றவற்றிலும் கட்டுரை கள் பலவற்றை எழுதியுள்ளார். 1971-ம் ஆண்டு, அகில இலங்கை தமிழ்த் தின திருகோணமலை விழா மலரில் 'கிறீஸ் துவத் தமிழ் இலக்கிய மரபு' என்னும் கட்டுரையை எழுதி சிறப்பித்துள்ளார்.

நாவல் துறையிலும் கால்பதித்த வானா அனா பல நாவல் களை எழுதியுள்ளார். அவற்றுள் துறைக்காரன், கிரௌஞ்சப் பறவைகள், ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக் கிறது, மண்ணிற் சமைந்த மனிதர்கள், ஒரு காவியம் நிறைவு பெறுகிறது என்பன தனித்துவம் வாய்ந்தனவாகும். இவற்றுள் மண்ணிற் சமைந்த மனிதர்கள் என்னும் நாவல் ஊடாக மூதூர் வாழ் மக்களின் வாழ்க்கையையும் மண் வளத்தையும் மொழி வழக்கையும், அத்துடன் ஆசிரியரின் இளமைக்கால, வறுமை யுடன் போராடிய வாழ்க்கையையும் அறிந்து கொள்ள முடிகி றது.

வானா அனா எழுதிய 'ஒரு காவியம் நிறைவு பெறுகிறது' என் னும் குறுநாவல் அவரது குடும்ப வாழ்க்கையை சித்தரிக்கி றது. 1952-ம் ஆண்டு, பயிற்றப்பட்ட ஆசிரியையான மேரி லில்லி தெரேசா என்பவரைத் திருமணம் செய்து, பத்துப் பிள் ளைகளைப் பெற்றார். பொறுப்பு மிக்க தந்தையாக விளங்கி, அத்தனை பேரையும் கல்வியாளர்களாக விளங்கச் செய் தார். குடும்ப வாழ்க்கை தனது இலக்கியப் பணிகளுக்குத் தடையாக இருக்கவில்லை, எனக் குறிப்பிட்ட அவர், தனது மனைவி தனது ஆக்கங்களை சேகரித்து, ஒழுங்கு படுத்தி, பாதுகாப்பாக வைத்திருந்து பேருதவி புரிந்தார் எனக் கூறிப் பெருமை அடைந்தார். 1975-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இரண்டாம் திகதி மேரி லில்லி தெரேசா அமரத்துவம் அடைந்த போது, அவரோடு வாழ்ந்த வாழ்க்கையை நினைவு கூர்ந்து, வானா அனா-வின் உள்ளத்திலிருந்து எழுந்த நினை வுகளே 'ஒரு காவியம் நிறைவு பெறுகிறது' என்ற குறுநாவலாக விரிந்தது. இதே தலைப்பில் 1996-ம் ஆண்டு வானா அனா-வின் ஐம்பது சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுதி மித்ர வெளியீடாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

வானா அனா-வின் சிறந்த மொழிபெயர்ப்பு கவிதை நூலாக, 'பூவரசம் பூ' கவிதை நூலும், சிறந்த வரலாற்று நூலாக 'மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் பூர்வீக வரலாறு' என்ற நூலும் விளங்குகின்றன.

வானா அனா-வின் இலக்கியப் பணிகளைப் பாராட்டி இலங்கை அரசு 'தமிழ் மணி' என்னும் விருதினையும், வட - கிழக்கு மாகாண அரசு ஆளுநர் விருதினையும் வழங்கி கௌரவித்துள்ளன. வானா அனா-வின் பிற்கால வாழ்க்கை துன்பமும் சோகமும் நிறைந்ததாக மாறியமை துரதிஸ்டமா கும். அவரது மகள், நோயுற்று அம்புலன்ஸ் வாகனத்தில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது, அவ்வா கனம் தாக்குதலுக்குள்ளாகியத்தில் மகளும் மருமகனும் பலி யாகினர். அவரது ஐம்பது வருட இலக்கிய வாழ்வில், 300-க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதி, பத்துத் தொகுதிக ளாக வகுத்து, பாதுகாப்பாக வைத்திருந்த ஆக்கங்கள் போர்க்காலத்தில் 1996-ம் ஆண்டு தீக்கிரையாகின. வீடும் எரிந்து, வீட்டு நூலகமும் சாம்பரானது. எனினும், மனம் தள ராது நண்பர்கள், உறவினர்கள், வெளியீட்டாளர்கள் பத்திரி கையாளர்கள் போன்றவர்களைத் தேடிச் சென்று, தனது படைப்புகளை மீண்டும் சேகரித்தார். நினைவில் இருந்த வற்றை மீண்டும் எழுதினார். இறுதி வரை எழுதிக்கொண்டே இருந்தார்.

பாடசாலை ஆசிரியர், அதிபர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பா ளர், விமர்சகர், பேச்சாளர், கவிஞர் எனப் பன்முக ஆளுமை கொண்ட வானா அனா என்ற இரு எழுத்துகளுக்குச் சொந்தக் காரரான, வஸ்தியாம்பிள்ளை அந்தோனியா இராசரத்தினம் அவர்கள் 2001-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இருபத்திரண்டாம் திகதி அமரத்துவம் அடைந்தார். அவரது படைப்புகள் தனித் துவமானவை. அவற்றை வாசிப்பதன் மூலம் தமிழின் பெரு மையை உணரமுடியும்.



vivekananthan.v@thaiveedu.com

# மலையக இலக்கியத்தில் பேசப்படாத பெண் ஆளுமை!



- மு. நித்தியானந்தன்

சிவபாக்கியம் குமாரவேல் (1923-2019) மலையக அரசியல், தொழிற்சங்க ஊற்றிலிருந்து முகிழ்க்கிறார். தனது பதின்ம வயதிலிருந்தே தீவிர அரசியலில் கால் பதித்த சிவபாக்கியம், உயர்ந்த அரசியல் தலைவர்களுடன் பழகுகின்ற வாய்ப்பை அந்த வயதிலேயே பெறுகிறார். மிக இளம் வயதிலேயே இலங்கை இந்தியர் மாதர் ஐக்கிய சங்கத்தின் தலைவியாகும் பெரும் பொறுப்பை ஏற்கிறார். தொழிற்சங்கங்களில் ஆணாதிக்கமே மேலோங்கியிருந்த சூழலில் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, தோட்டப் பெண் தொழிலாளர்களை அணி திரட்டி, பதாதைகளை ஏந்தி, சுலோகங்களைக் கோஷமிட்டு, ஊர்வலம் வந்திருக்கிறார் சிவபாக்கியம். வெற்றுக் கோட்பாட்டாளராக இல்லாமல் களத்தில் நின்ற செயலூக்கம் மிக்கவராக அவர் திகழ்ந்திருக்கிறார்.

வீட்டில் பணிப்பெண்ணாகத் திருகைக் கல்லில் மாவரைத்துக் கொண்டிருந்த லெச்சுமி பாடிய நாட்டார் பாடலின் சோகத்தில் தோய்ந்திருக்கிறது சிவபாக்கியத்தின் கவியுள்ளம். இன்றுபோல் நாட்டார் இலக்கியம் புலமை ஆய்வுக்குள் கொண்டு வரப்பட்டு, நாட்டார் பாடலைச் சேகரிக்கும் ஆர்வம் முனைப்புற்றிருப்பது போலன்றி, அப்பாடல்களில் ஈர்ப்புண்டு அவற்றைப் பதிவிடும் நோக்கில், சிவபாக்கியம் ஆற்றியிருக்கும் பணி முன்னுதாரணமில்லாததாகும்.

சாதாரணமாக, இம்மாதிரி நாட்டார் பாடல்கள் சோகத்தைச் சிந்தி, தம்மைச் சுற்றிலும் இசைக்கப்பட்டு வந்த போதிலும் அவற்றை மிக எளிதாக யாரும் கவனிக்காமலே கடந்து சென்று கொண்டிருக்கும் நிலையில், அந்தப் பாடல்கள் சுமந்து கொண்டிருக்கும் துயரை அவதானித்து, அவற்றைக் கூர்மையாகக் கேட்டிருக்கிறார் சிவபாக்கியம். போதிய கவன ஈர்ப்பு இல்லாத ஒரு காலப்பகுதியில் அவர் தனித்து நடை பயின்றிருக்கிறார். காலம் கடந்தாயினும் அவரது பதிவுகள் இன்று அச்சு வாகனம் ஏறுவது மகிழ்ச்சி தருவதாகும்.

பாரதியின் பாடல்களில் ஈர்ப்பு மிக்கவராக சிவபாக்கியம் திகழ்ந்திருக்கிறார். தனது முதல் கவிதைத் தொகுதியில்,

***‘பிறநாட்டு நல்அறிஞர் சாத்திரங்கள்***
***தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;***
***இறவாத புகழ்உடைய புதுநூல்கள்***
***தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்;***
***மறைவாக நமக்குள்ளே பழம்கதைகள்***
***சொல்வதில்ஓர் மகிமை இல்லை;***
***திறமான புலமைஎனில் வெளிநாட்டோர்***
***அதைவணக்கம் செய்தல் வேண்டும்’***

என்ற பாரதியின் பாடலைத் தன் கவிதையின் ஆரம்பப் பக்கத்திலே பதிவிட்டிருக்கிறார். புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டி நிற்கிறார் சிவபாக்கியம்.

‘எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பும் மெட்டு, இவற்றினை உடைய காவியம் ஒன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர்த்தருவோனாகிறான்’ என்று மகாகவி பாரதி ‘பாஞ்சாலி சபதம்’ (1912) என்ற தனது காவியத்திற்கு எழுதிய முன்னுரையிலே குறிப்பிடுகிறார்.

‘தமிழ் வளர்ச்சிக்குத் தமிழர்கள் தமிழ்த் தொண்டு புரிந்து தமிழ் நாட்டில் தமிழரசை நிலைநாட்ட வேண்டுமானால், கரடு முரடான தமிழில் நூல்கள், கதைகள், கட்டுரைகள், கவிதைகள் எழுதுவதை விடுத்து, எல்லோருக்கும் எளிதில் விளங்கக் கூடிய வகையில், சாதாரண எளிய நடையில் எழுதுவதே சிறந்த கடமையாகும் என்பதே எமது நோக்கமாகும்’ என்று பாரதியின் அடியொற்றி சிவபாக்கியம் குமாரவேல் தனது நூலின் முன்னுரையில் குறிப்பது நோக்கத்தக்கது.

சிவபாக்கியம் தன் ‘ஹிதயகீதம் அல்லது என் அஞ்சலி’ என்ற படைப்பை ‘வசனகாவியம்’ என்றே குறிக்கிறார். ஐம்பத்து நான்கு பாடல்கள் கொண்ட தனது வசனகாவியம் தமிழில் தான் தந்திருக்கும் புதிய நூல் என்பதை பிரக்ஞைபூர்வமாகவே அறிக்கையிடுகிறார்.

சிவபாக்கியம் அவர்களின் சிந்தனைத் தளத்தில் தீர்க்கமான பாதிப்பை ஏற்படுத்தியவராக வங்கக்கவி தாகூர் முக்கியம் வகிக்கிறார். 'இந்திய மொழிகள் அனைத்திலும், கவிஞர்கள் செய்யுள் இலக்கணத்திலிருந்து விடுபட்டு, நவீன கவிதைக்கு வருகின்ற போக்கை 1913-ம் ஆண்டிலேயே தாகூர் கையாண்டது அவரது ஆளுமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. தாகூரின் முன்னெடுப்பை அடுத்து இந்தியாவிலுள்ள அனைத்து மொழிகளிலும் உள்ள கவிஞர்களும் இலக்கணம் இல்லாத கவிதை எழுத வந்தார்கள். இந்திய மொழிகளில் கவிதை விடுதலை அடைவதற்கும் நவீனமடைவதற்கும் தாகூர்தான் மூலகர்த்தாவாக இருந்து வந்திருக்கிறார்' என்று ஞானக்கூத்தன் பதிவு செய்கிறார்.

தாகூர் இலங்கைக்கு மூன்றாவது முறை விஜயம் செய்த போது யாழ்ப்பாணத்திற்கும் சென்று, ஒரு வாரம் தங்கியிருந்து, இரண்டு முக்கிய உரைகளையாற்றியும், தனது நாட்டிய நடனத்தையும் கவிதை வாசிப்பையும் நிகழ்த்தியிருக்கிறார். யாழ்ப்பாணத்தில் தாகூரின் விரிவுரை றீகல் தியேட்டரில் 13.06.1934-ல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபோது, மண்டபம் நிறையவில்லை. '13-ம் திகதி மாலை ஏன் றீகல் தியேட்டரில் மக்கள் திரளவில்லை என்பதை விளங்கிக்கொள்வது கஷ்டமாயிருக்கிறது. ஒரு வேளை அந்த நிகழ்ச்சி எவ்வளவு அரியது என்பதை மக்கள் அறிந்திருந்தால் மக்கள் அந்த அரங்கை நிறைத்திருப்பார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை' என்று யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் ஜோன் பிக்னெல் பாதிரியார் பதிவு செய்கிறார்.

யாழ்ப்பாணத்தில் தாகூர் ஆற்றிய உரையில், 'நீங்கள் ஊமையர்களாய் இருக்கிறீர்கள். உங்கள் ஆத்மாவின் குரலை நான் கேட்டதில்லை. நீங்கள் உன்னத இலக்கியங்களைப் படைக்கவில்லை. சிரஞ்சீவித்துவம் கொண்ட - இறவாப்புகழ் மிக்க சிருஷ்டிகளை நீங்கள் ஆக்கவில்லை. தமிழ் மக்கள் தமது கடந்த காலங்களை ஆராதிப்பதிலும், புகழ்மிக்க தமது முன்னோரை வழிபடுவதிலுமே தமது காலத்தைக் கடத்தி வந்துள்ளனர்' என்று குறித்திருக்கிறார்.

சிங்களக் கலைஞர்கள், இசைவாணர்கள், நாடகாசிரியர்கள், ஓவியர்கள், சாந்திநிகேதனில் பயின்றவர்கள். ஆதலால் சிங்களக் கலை, இலக்கிய உலகில் தாகூருக்கு இருந்த செல்வாக்கு, இலங்கையில் தமிழ் இலக்கிய உலகில் இருந்திருக்கவில்லை. 'தாகூரும் யாழ்ப்பாணத்தவரும்' என்ற தலைப்பில் தா. சனாதனன் தனது 'தாகூரின் யாழ்ப்பாண வருகை, கலை, அடையாளம், கருத்தாடல்'(2021) என்ற நூலில் மிகச் சிறந்த பதிவைத் தந்திருக்கிறார். கலாயோகி ஆனந்தகுமாரசாமியைத் தாகூர் ஒரு ஆங்கிலோ - இந்தியன் ஆகவே அடையாளங் கண்டிருந்தார். ஆனந்தகுமாரசாமியின் மகன் தனது தந்தையை சிங்களவர் என்றே ஒரு பேட்டியில் குறிப்பிடுகிறார்.

ஆனால், தாகூரின் வயப்பட்டவராகத் திகழ்ந்த சி.வி. வேலுப்பிள்ளை தன் கல்வி முடியுமுன்னரே, தாகூர் இலங்கை வந்த போது அவரிடம் கொடுத்து ஆசி பெறுவதற்காகவே 'விஸ்மா-ஜினி' என்ற நாடகநூலை 1934-ம் ஆண்டு அச்சிட்டு, அவருக்கே அந்த நூலை அர்ப்பணம் செய்திருந்தார். 'குருதேவ் தாகூரை நேரில் சந்தித்துப் பேசும் பேறு பெற்றவர் இவரே' என்று சாரல்நாடன் குறிப்பிடுகிறார். தாகூரைப் பற்றி சி.வி. அவர்கள் வீரகேசரியில் எழுதிய கட்டுரையில், தாகூரின் எழுத்துகளில் கவிதையும் இசையும் இணைந்து பரிமளிப்பதையும், அவரின் கவிதைகள் நாயன்மார்கள், ஆழ்வார்கள் பாடிய பக்திப்பாடல்கள் போன்றன என்று சி.வி. எழுதுவதையும் சாரல்நாடன் பதிவு செய்துள்ளார்.

பரமஹம்சதாசன் என்ற மலையகக் கவிஞர் தாகூரின் கவிதையில் தோய்ந்து, 'தீங்கனிச் சோலை', 'கவிதைமணி மாலை' என்று தாகூரின் கவிதைகளை இரண்டு நூல்களில் மொழியாக்கம் செய்திருக்கிறார். அவரின் 'கவிதைமணி மாலை' என்ற நூல் கிடைப்பதற்கரியதாக உள்ளது.

கவி தாகூர் இயற்றிய 'கீதாஞ்சலி'யின் கவிதையில் ஆழ்ந்து, சிவபாக்கியம் தனது கவிமலரை 'ஹிதய தீபம் அல்லது என் அஞ்சலி' என்ற தலைப்பில், புதுக்கவிதையாய் மலையகக் கவிதை உலகிற்கு மணி ஆரம் சூடியிருக்கிறார். 'இந்நூலின் தளகர்த்தன் இறைவன்' என்று சிவபாக்கியம் குறிக்கிறார். இறைவனை ஒரு படைத் தலைவனாகக் காண்கிறார்.

'அந்தோ! கிழக்கு வீதியிலே சாந்தப்போர் நடக்கிறது!
அந்த யுத்த முனையிலே கம்பீரமாக நின்றுகொண்டிருக்கும் ஒவ்வொரு வீரரையும் சாந்தமெனும் தளபதி ஆசிர்வதிக்கின்றான்.' (இதயதீபம் 19).

'என் அன்பின் அருளே! என்னைப் போர்முனைக்கு அனுப்பும் பொழுது ஒரு சிறிதும் கலக்கமடையாதே. மனோதிடத்துடன் என் அருகினில் நின்று நிம்மதியற்று உழன்று கொண்டிருக்கும் என் மனமெனும் பரட்டைத் தலையைச் சீவி முடித்துவிட்டு, என்னில் காணும் தன்னலம், அச்சம், கோழை, எனும் பழம் போர்வையும் களைந்து, வீரம், தைரியம், தியாகம் எனும் புதிய போர் உடைகளை அணிவித்து, உறுதி எனும் வீர வாளை உருவி என் கையில் எடுத்துக் கொடுத்து, எட்டுத் திக்கும் வெற்றி முரசு முழங்க எனை நீ வழியனுப்புவாயோ எனில், அதுவே எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். அதன்பின் உனது வீடு தேடி நான் வராமல் மடிவேனாயினும், வீர சுவர்க்கமடைவேன்.' (இ.தீ 20)

'யான் உனக்காகப் பாடும் பாக்களின் ஒவ்வொரு அடியும், சுதந்திர மண்டபத்திற்குச் செல்லும் படிகளாகும். தனி ஒரு மனிதனும் அப்படிகளில் ஏறிச் சென்று, சுதந்திர மண்டபத்தை அடையவே முற்படுகின்றான். ஆனால், அடக்குமுறை ஆதிக்கம் எனும் காவற் பட்டாளங்கள் சுதந்திர வாயிலின் இரு புறங்களிலும் நின்று கொண்டிருக்கின்றன.

இருப்பினும் மனிதன் ஓரிரண்டு படிகளைச் சாத்வீகமெனும் புரட்சியை ஆரம்பித்துத் தாண்டிச் செல்கின்றான். உறுதி, நம்பிக்கை, வீரம் ஆகியன அவனது ஆத்மாவில் இடம்பெற்றுவிட்டன.' (இ.தீ 24)

'என் இன்ப துன்பங்களையும் பொருட்படுத்தாது, பேரின்பமெனும் பெரும் போரை ஆரம்பித்து அதிலே வெற்றிக்கொடியை

நாட்டும் நாள் சமிபித்து விட்டது...

தைரியம், வீரம், தியாகம், அன்பு, சாந்தம், உண்மை முதலியன படைத்த ஊழியர்களைத் திரட்டுவதில் இறைவா நீ கங்கணம் கட்டிப் புறப்படுவாயாக! (இ.தீ. 27)

சாத்வீகம், சாந்தம் எனும் சுதந்திரப் போரில், தன்னலம், அச்சம், மடமை, கோழைத்தனம் ஆகியவற்றைக் களைந்து, வெற்றி காணும் பெரும் போரில் தங்களுக்குத் தலைமை தாங்கும் தளகர்த்தனாக இறைவனைக் காண்கிறார் சிவபாக்கியம்.

இந்த 'இதய தீபம்' என்ற கவி பாமாலையில் இறைவனை ஒளியாக, ஜோதிப்பெருக்காக, ஞானவிளக்காக, ஜோதிப் பெருங்கடலாக, ஞானகுருவாக, மௌனகுருவாக, ஆனந்தமூர்த்தியாக, பரமபிதாவாக, தேவியாக, அமிர்தமாக, இசையமுதாக, மனிவிளக்காக, தீனபந்துவாகவெல்லாம் அழைத்துப் புலம்புகிறார்.

'அலைந்து அலைந்து திரியும் எனது ஆவிக்கு நீ என்றுதான் இன்பத்தைப் பொழிவாய்? என்றுதான் விமோசனமளிப்பாய்?' என்று கவி ஏங்குகிறார்.

கவி காணும் தெய்வமோ தொட்டுவிடும் தூரத்திலேயே நிற்கிறார். இறைவனது ஆலயத்தை வந்தடைந்து, கதவைத் தட்டுகிறார். ஆனால், அவரது கருணைக் கதவு இன்னும் தாளிடப்பட்டிருக்கிறது என்று மாய்கிறார்.

'இன்னும் எனக்காக ஒரு பாதையேனும் பண்படுத்தப்படவில்லை. இருள் சூழ்ந்த வழி நெடுகிலும் விளக்கென்பதுங் காணப்படவில்லை. இரு கண்களும் திறக்கப்படவில்லை. ஆனதால் நான் வழி நெடுகச் சென்று பிரகாசத்தைக் காணக் கடுங் கஷ்டமடைகிறேன்!' என்று சிவபாக்கியம் துயருறுகிறார்.

இறைவனை அவர் இயற்கையில், நீர்வீழ்ச்சியில், புஷ்பங்களின் வாசனையில், பூஞ்சோலையில் அசையும் மெல்லிய காற்றில், வெள்ளி நிலவில், மரத்தடியில், ஆலயத்தின் பூஜை மணியில், செஞ்சேவலின் சிறகடிப்பில், இன்ப இரவில், ரோஜா மலரில், இனிய குழலோசையில், நதியில் ஓடும் நீரிரைச்சலில், பெருமழையில், புயற்காற்றில், இடிமின்னலில் எல்லாம் காண்கிறார்.

'நள்ளிரவில் தாகங் கொண்டு என்னை நீ தேடி வரும் பொழுது, நின் சதங்கை ஒலி கேட்டு விழித்துக் கொண்டேன். ஆனால் நீயோ என்னுடன் யாதும் பேசாது மௌனமாக வந்து உனக்காகப் பொற்சிமிழில் வைக்கப்பட்டிருந்த சாந்தி மதுவை அருந்திவிட்டு எங்கேயோ சென்று விட்டாய்' என்ற கவியின் வரியில் இறைவனோடு அவர் கொள்ளும் நேசமும் பக்தியும் இழைகின்றன.

பரமபிதாவைத் தேடும் ஆத்மீகச் சிந்தனையில் கவி ஆழ்ந்து தோய்ந்து போனாலும், புழுதி மண்ணில் பலவீனமடைந்து கிடப்பவர்களுக்காகவும், தோல்வியடைந்தவர்களுக்காகவும் முரசறையும் போர் முழக்கத்தையும் சிவபாக்கியத்தின் கவிதை



வரிகளிலே கேட்கமுடிகிறது.

**'எந்த இடத்தில் அன்பு அமைதியில்லையோ,**
**எங்கே துன்பமும் வறுமையும்**
**அதிகமாகக் காணப்படுகின்றதோ,**
**எங்கே அக்ரமங்களும் படுகொலைகளும்**
**மலிந்து கிடக்கின்றனவோ,**
**எங்கே பெரும் யுத்தத்தில் இரத்தக்களறி ஏற்படுகின்றதோ,**
**எங்கே வகுப்பு வெறி, மதவெறியெனும்**
**குண்டுகள் பாய்கின்றனவோ,**
**எங்கே பொறாமை, ஆசை எனும் ஈட்டிகள்**
**ஊடுருவிச் சென்று மானிடரை மாய்க்கின்றனவோ,**
**அங்கெல்லாம் நின் கருணை, சாந்தம், சமதை,**
**சத்தியம், அஹிம்சை எனும் விரிந்த புஷ்பங்களை**
**வாரி இறைத்துக்கொண்டு செல்லும்போது,**
**அங்கெழுந்த பயங்கர சக்திகள் அனைத்தும் காலைக்**
**கதிரோனைக் கண்ட பனி போன்று**
**இமைப்பொழுதில் மறைந்தொடுங்கி விட்டன'**

என்று பூபாளம் இசைக்கிறார் சிவபாக்கியம்.

சிவபாக்கியத்தின் இந்தக் கவிதை வரிகள், வங்கக் கவி தாகூ ரின் கீதாஞ்சலியை எதிரொலிக்கின்றன.

***'எங்கு மனம் பயமற்று விளங்குகின்றதோ,***
***எங்கே தலை கம்பீரமாய் நிமிர்கிறதோ,***
***எங்கு அறிவு சுதந்திரத்துடன் பொலிகிறதோ,***
***எங்கு குறுகிய சாதிமதப் பிளவுகளால் உலகம்***
***உடையாமல் உருப்பெற்றிருக்கிறதோ,***
***எங்கு உண்மையின் ஆழத்தினின்று***
***சொற்கள் உதயமாகின்றனவோ,***
***எங்கே தளரா முயற்சி பரிபூரணத்தை***
***நோக்கிக் கைகளைப் பரப்புகிறதோ,***
***எங்கு பகுத்தறிவெனும் தெளிந்த ஆறு***
***மாண்டொழிந்த பழக்கங்களான***
***பயங்கரப்பாலை மணலில் பாயாது மீள்கிறதோ,***
***எங்கே விரிந்த சிந்தனையிலும் செயலிலும்***
***எனது உள்ளத்தை நினது அருள்***
***இழுத்துச் செல்லுகின்றதோ,***
***அந்தச் சுதந்திர சுவர்க்கத்தில்,***
***எனது அப்பனே,***
***எனது நாடு விழித்தெழுவதாக!***

- தமிழாக்கம்: வி.ஆர்.எம். செட்டியார்

பஞ்சை பராரிகளை, உழைத்து வறுமையில் வாடும் ஏழைக ளின் விடுதலை கோரி கவியரசர் தாகூர் கவி இசைக்கிறார்.

***'ஜபமாலை உருட்டுவதை விட்டுவிடு!***
***மந்திரமும் தந்திரமும் ஆடலும் பாடலும்***
***அவனைக் காட்டமாட்டா!***
***தாளிட்ட அடைபட்ட கோயிலின்***
***இருளடைந்த மூலையில்***
***யாரைப் பூசிக்கின்றாய்?***
***கண்ணைத் திறந்து, உன் கடவுள் உன் முன்னிலையில்***
***இல்லையென அறிந்து கொள்!***

***கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும்,***
***சாலை அமைக்கச் சரளைக்கல் உடைப்பாரிடமும்***
***அவன் இருக்கிறான்.***
***அவர்களுடன் அவன் மழையில் நனைகிறான்,***
***வெயிலில் உலர்கிறான்.***
***அவன் ஆடையில் தூசி படர்ந்திருக்கிறது.***
***உன் காஷாயத்தைக் களைந்தெறி;***
***அவனைப்போலவே நீயும் புழுதியில் இறங்கி வா!***

***விடுதலை? எங்கிருந்து விடுதலை கிடைக்கும்?***
***நம் ஆண்டவனே நம்மீது அருள் சுரந்து***
***சிருஷ்டித்தளைகளைத் தன் மேனியில் பூண்டிருக்கிறான்;***
***என்றும் நம்மை விட்டுப் பிரிய முடியாமல்***
***அவன் இணைக்கப்பட்டிருக்கிறான்.***

***பூவையும் நறும் புகையையும் உன் பூசையையும்***
***விட்டு வெளியே வா!***
***உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன?***
***நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து***
***நின் ஈசனைக்கண்டு கொள்!***

- தமிழாக்கம்: வி.ஆர்.எம். செட்டியார்

மலையகத்தின் பெருங் கவி சிவபாக்கியம் வறுமையில் வாழும் ஜீவிகளுக்காகக் குரல் எழுப்புகிறார்.

***இம்மாயை உலகில் நான் மிகவுந் தாழ்மையுடன்***
***உன்னிடம் மன்றாடிக்கொள்வதென்ன?***
***என் வாழ்நாட்கள் பூராவும் என் சகோதரனான***
***குஷ்டரோகிக்குச் சிகிச்சையளித்து அவனுக்குத்***
***திருப்திகரமான பணிகளைச் செய்யவேண்டும்.***
***வறுமையிலும் துன்பத்திலும் ஆழ்ந்து கிடக்கும் மக்கட்கு,***
***வறுமையும் துன்பமும் நீங்கி***
***வாழும் வழிவகைகள் செய்ய வேண்டும்.***

***தரித்திர திசையையடைந்த என் எளிய சகோதரனிடத்தில்***
***அன்பைச் செலுத்த வேண்டும்.***
***தெருக்களில் அதோ! புன்முறுவலுடன்***
***குப்பை கூட்டிப் பிழைக்கும் பாமரனிடம்***
***அளவற்ற பிரீதி நான் கொள்ள வேண்டும்.***
***இத்தகையோரின் வாழ்நாட்களில்தான்***
***நீ குடி கொண்டிருக்கிறாய்.***
***அவர்களின் பழங்குடிசைகளில்***
***ஒவ்வோர் இரவிலும் நீ தாண்டவம் புரிகின்றாய்!***
***கௌபீனம் தரித்த அவ்வேழையிடம்***
***அதிகார மமதையில்லை.***
***மனிதனை மனிதன் ஆதிக்கஞ் செலுத்தும்***
***கொள்கை அவனிடம் ஒருபோதும் இல்லை.***
***திருடரின் பயம் அவன் அறிவதில்லை.***
***பழங்கஞ்சியை அருந்திவிட்டு, அதோ!***
***கட்டாந்தரையில் சஞ்சலமற்ற ஒரு பொருளாக***
***அமைதியுடன் உறங்குகின்றான்.***
***நடுநிசியில் நித்திரையிலே உன்னைத்தான்***
***பிரார்த்திப்பதாகக் கனவு கண்டு கொண்டிருக்கின்றான்.***
***அவனின் வாழ்க்கையே புனிதம்!***
***ஆதலால், என் கண்மணியே!***
***நான் எதை நீயென உணர்கின்றேனோ அந்த உணர்வினில்***
***நீ பிரதிபலிப்பாயாக!***

மலையக மக்களின் வாழ்வில் பூரண பங்கெடுத்த இம்மாதரசி ஏழையின் வியர்வையில் இறைவனைக் கண்டதில் வியப்ப டைய எதுவுமில்லை. மலையகத்தின் புதுக்கவிதை வாய்க்கா லுக்கு நீர் சுரந்த முன்னோடியாகத் திகழும் சிவபாக்கியம் குமாரவேல் அவர்களின் பெயர் மலையக இலக்கியத்தில் என் றும் நிலைத்திருக்கும்.



nithiyananthan.m@thaiveedu.com



## மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

51

# கோட்டைச்சந்தியும் கோடிப்பக்கமும்

- மல்லியப்புசந்தி திலகர்

பதுளை மாவட்டத்தின் ஹப்புத்தளைப் பிரதேசத்தில் இருந்து எழுதி வரும் இன்னுமோர் இளங்கவிஞர் மார்க்ஸ் பிரபாகர்.




ஹப்புத்தளைப் பிரபா என்னும் பெயரில் ஆரம்பத்தில் எழுதி வந்த இவர், இதுவரை மூன்று நூல்களை வெளியிட்டுள்ளார். மூன்றாவது கவிதை தொகுதியின் தலைப்பு 'கோட்டைச் சந்தி'. இவரது கவிதைகள் குறித்து அவரே இவ்வாறு பதிவு செய்கிறார்: வெறும் வார்த்தைகள்தான் கவிதைகள் என்ற வறண்ட வழிகளில் நின்று விலகி, கவிதையின் ஆழ அகலங்களைப் புரிந்து கொண்டபோது கிடைத்த பூரிப்பு சொல்லில் அடங்காது. இதில் உள்ள கவிதைகள் ஒவ்வொன்றின் பின்னும் ஓர் உண்மை ஒளிந்திருக்கிறது. சொல்ல வந்த விடயத்தை, கவித்துவத்தின் சோதனை சிதைத்து விடக்கூடாது என்பதில் அதிகம் கவனம் செலுத்தி இருக்கிறேன். அழகியலுக்கு அதன் முக்கியத்துவம் தராது மெய்யியலை முன்னிறுத்தி இருக்கிறேன்.

***பாதம் வரை என்னைச் சுற்றிப்***
***பிணைக்கப்பட்ட உலகமய***
***விலங்குகளை முற்று முழுதாய்***
***உடைத் தெறிய முடியாவிடும்***
***அவற்றைக் கடிந்தவாறு இருந்தே***
***உரைப்பேன் என் எதிர்ப்பை***

என உலகமயமாதலுக்கான தனது எதிர்ப்பையும் பதிவு செய்கிறார்.

***சேரன் செய்தால் யாவருக்கும்***
***செங்குறிதான் இன்று வரைக்கும்***
***சமயோசித வாதிகள் சேவகம் என்று***
***வரும்போது மட்டும் இனவாதம் காட்டுவது***
***லாவகமாய் நிகழ்கிறது***

என இலங்கையில் இடம்பெறும் இனவாதப் போக்கினைத் தனது கவிதைகளில் சுட்டிக் காட்டுகிறார்.

***தேர்தல் காலத்தில் தேவாங்காய்***
***உருமாறி மரங்கள் ஏறி கொடி கட்டியும்***
***குட்டிச் சுவர்கள் தேடி தலைவனின்***
***முகமொட்டியும் செம்பு தூக்கி திரிந்தவன்***
***எல்லாம் ஊர் முழுதும்***
***சமாதான நீதிமன்றங்களாகிப்போக எங்கும்***
***வியாபித்திருக்கிறது ஊழல்***

எனச் சமகால அரசியலையும் விமர்சனம் செய்கின்றார் ஹப் புத்தளை மார்க்ஸ் பிரபாகர். இவரது கவிதைகள் குறித்து அணிந்துரையில் கவிஞர்.சி. சிவசேகரம் இவ்வாறு எழுதுகி றார். 'இளந்தலைமுறைக் கவிஞர்களுள் முக்கியமானவர். அவருடைய முக்கியத்துவத்தை வலியுறுத்துவன, அவரு டைய முற்போக்கான சமூகநோக்கும் அழகியல் நிலைப்பா டும் என்பேன்'. முற்போக்கான சிந்தனைத் தளத்தினுள் இவரு




டைய கவிதைகள் தனித்து நிற்பவை. அவை தொடும் விடயங் கள் நமது கவனத்தை மிக வேண்டுவன. ஈழத் தமிழ்க் கவிதையைச் செழுமைப்படுத்தும் வகையில் இக்கவிதைகள் பரவலான வாசிப்புக்குட்பட வேண்டும்.

'கோட்டைச் சந்தி' எனும் அவரது தலைப்புக் கவிதை இவ் வாறு அமைகிறது.

***மல்லியப்புசந்தியில் நடந்த***
***மொல்லமாரித்தனத்திற்கு***
***புள்ளியளவும் சளைத்ததல்ல***
***கோட்டைச் சந்தியில் நிகழ்ந்த***
***காட்டிக்கொடுப்பு!***

இந்தக் கவிதையின் ஊடே ஏதோ உள்குத்து வைத்துவிட்ட தாக உணர்கிறார் கவிஞர் மார்க்ஸ பிரபாகர். பதுளை மாவட் டத்தின் பண்டாரவளைப் பழனி மனோகரன் எழுதி வெளிவந் துள்ள மலையகக் கவிதைத் தொகுப்பு 'கோடிப்பக்கம்'. 'கோடிப்பக்கம்' என்பது மலையகப் பெருந் தோட்டப்பகுதி யில் வாழும் மக்கள் யாவரும் அறிந்த ஒரு சொல்லாடல். லயம் என அழைக்கப்படுகின்ற பத்து அல்லது அதற்கு மேற் பட்ட அறைகளைக் கொண்ட நீளமான குடியிருப்பின் இரண்டு அந்தங்களிலும் அமைந்த பகுதிதான் 'கோடிப்பக் கம்'. காலையில் கூடிப் பேசவும் பகலில் கூட்டம் போடவும் மாலையில் பந்தடிக்கவும் முன்னிரவில் காதலிக்கவும் நடுநிசி யில் மூத்திரம் பெய்யவும் என அமைந்த அந்த 'கோடிப்பக் கம்' எனும் எனும் பகுதியைத் தான் பழனி மனோகரன் தலைப்பாக்கினார். இந்நநூலின் உப தலைப்பு 'மறுதலிக்கப் படும் மறுபக்கம்'.

'மறுதலிக்கப்படும் மலையகத்தின் மறுபக்கத்தை பேசும் மனோகரனின் கவிதைகள், சமூகம் குறித்த எமது பார் வையை மறு வாசிப்புக்கு உட்படுத்துகின்றன. கவிதைகளின் பாடுபொருளில் வெளிப்படும் மனித நேயமும் உரிமைக்குர லும் மலையக இலக்கியத்தின் சமகாலப் போக்குடன் உடன் பட்டுப் பயணிக்கின்றன. உருவத்திலும் உள்ளடக்கத்திலும் செறிவான கவிதைகளை எழுதிய பழனி மனோகரனைப் பின்னட்டையில் அறிமுகம் செய்கிறார் ஊடகவியலாளர் அருள்கார்க்கி.

***சிறகு உடைந்த பறவை***
***இரை தேட முடியாத நேரம்***
***நடந்து வந்த பறவை - அதை***
***துரத்தி வந்த வேளை ...***

***சிறகு உடைந்த பறவை - அதை***
***திரும்பிப் பார்த்த வேளை***
***எனக்கு வேண்டும் உணவு***
***கொஞ்சம் எடுத்துத் தர வேண்டும்***

***உன்கருணை வேண்டும் எனக்கு***
***என் கதையைக் கொஞ்சம் கேளு***
***நான் நடந்து வந்த பாதை***
***அந்த கடவுளுக்குத் தெரியும்***

***சிறகு உடைந்ததாலே - எனக்கு***
***பறக்க முடியவில்லை***
***இரவலர் முன்னே - எனக்கு***
***இருக்க இடம் வேண்டும்***

***கவலைப்பட வேண்டாம்***
***கருணை செய்வேன் நானும் - அந்த***
***காட்டு மரம் நிழலில்***
***கவலையின்றி இருப்போம்***

***கடைசிவரை நானும் - உன்னை***
***கைவிடவும் மாட்டேன்***
***கருணையுடன் நாமும்***
***கவலையின்றி வாழ்வோம்.***

அருள் கார்க்கியின் அறிமுகத்தில் கூறப்பட்ட அளவுக்கு பழனி மனோகரின் கவிதைகள் வீரியம் கொண்டதாக விளங்க வில்லை. குறிப்பாக எழுத்துப்பிழைகள் அவர் சொல்ல வரு

வதை அப்படியே தலைகீழாக்கிவிடுகின்றன. மேலே கவிதை யில் வரும் இரண்டு இடங்களில் வரும் 'வேளை' எனும் சொல் புத்தகத்தில் 'வேலை' என்றே அச்சிடப்பட்டுள்ளமை அவதா னத்துக்குரியது. முலையகம் எனும் தலைப்பில் எழுதப்பட் டுள்ள கவிதை இவ்வாறு அமைகிறது.




***ஆசைக்கு ஓட்டுப்போட்டு***
***அழகுக்குப் பதவிக்கு வந்து***
***சேர்ந்து உதவி செய்வோம் - என்று***
***எங்களைச் சிந்திக்க வைத்து***
***கூடி உதவி செய்வோம்***
***என்று எங்களிடம் கும்பிடு போட்டு***
***நாலும் செய்து கொடுப்போம்***
***என்று எங்களுக்கு நல்லது சொல்லி***
***நாங்கள் இப்போ***
***திக்குத் திசை தெரியாமல் இருக்கின்றோம்.***
***நீங்களோ உல்லாசப் பறவைகளாகச்***
***சுற்றித் திரிகின்றீர்கள்***
***புள்ளடிபோடும் வரை உங்களுக்கு***
***நாங்கள் சொந்தம்***
***எங்கள் தலைவிதி!***

இப்படியாகப் பாப்பா பாடல்கள் வடிவிலேயே பழனி மனோக ரனின் கவிதை இடம்பெற்றுள்ள நிலையில் விரிவுரையாளர் ஆ. கலையரசு இவ்வாறு குறிப்பிடுகின்றார். 'மனிதப் பண் பாட்டு அசைவியக்கத்தின் எழுகோலங்கள் இலக்கிய படைப் புகள். இலக்கியங்களே எமது வாழ்வியலின் அடையாளங் கள். அந்த வகையில் வெளிவருகின்ற இந்தநூல்... சிந்த னைக் கருவூலத்தின் இன்னொரு பெட்டகம். இப்படைப்பு கோடிப்பக்கம் எனும் தலைப்பில் வெளிவருவது இன்னொரு சிறப்புக்குரியது. மலையகப் பெருந்தோட்டங்களில் காணப்ப டும் சொல்லட்சிகள் அப்பிரதேசத்துக்கேயுரிய தனித்துவத் தன்மை கொண்டவை. லயம், நெத்திக்கான், கொந்தரப்பு, பிரட்டுக்களம், போன்றவை அவை. எனினும் சமூக நிலை மாற்றத்தின் ஊடாக இவ்வாறான சொல்லாட்சிகள் மறைந்து வருவதும் இயல்பானது. இந்தக் கவிதைத் தொகுதியின் ஒரே பலம் இந்தச் சொல்லாட்சிகள் மட்டுந்தான். அதற்கு ஆதார மாகக் 'கோடிப்பக்கம்' எனும் கவிதையைப் பார்க்கலாம்.

***தண்ணி புடிக்கப் போனேன்***
***சரியான சனமா இருக்கு***
***வேலைக்குப் போக நேரமும் ஆயிடுச்சி***
***கோடிப்பக்கம் பீலிக்கரை***
***கொஞ்சம் கூட புடிக்கலீங்க..***

என மக்கள் மொழியில் தொடங்கி ...

***வேலையும் முடிஞ்சிருச்சி***
***வேதனையும் தீந்திடுச்சி***
***கோடிப்பக்கம் பீலிக்கரை***
***பேரமாத்தி***
***கோவில் பக்கம் பீலிக்கர***
***பெயரையும் வச்சிடுவோம்...!***

என முடிகின்றது. கவிதைக்குரிய சிந்தனைப் புலம் பழனி மனோகரனிடத்தில் தாராளமாகவே உள்ளது. ஆனால் அவற்றை கவிதையாகப் பரிணமிக்கச் செய்ய அவர் இன்னும் வெகுதூரம் பயணிக்க வேண்டும். அதற்கு அவர் கவிதை களை எழுத முன்னர் நிறையவே கவிதைகளை வாசிக்க வேண்டும்.

தொடரும்...



thilagar@thaiveedu.com




# கடைசிக் கட்டில்

## வாழ்வு நாடகத்தின் தொடக்கமும் முடிவுமான பக்கங்கள்!

- ரூபன் சிவராஜா

### களமும் பொருளும்:

குணா கவியழகனின் 6-வது நாவல் கடைசிக் கட்டில். 'எதிர்' பதிப்பக வெளியீடாக இந்த ஆண்டு (2024) ஜனவரி வெளிவந்துள்ளது. முன்னைய ஐந்து நாவல்களும் போர் வாழ்வை அல்லது போரையும் அதற்கு உள்ளும் வெளியிலுமான வாழ்வையும் மனிதர்களையும் பேசின. இந்த நாவல் போருக்குப் பின்னரான வாழ்வினைப் பேசுபொருளாகவும் கதைக்களமாகவும் கொண்டுள்ளது. கதையின் மையக்களம் யாழ்ப்பாண நகர வைத்தியசாலையோடு இணைந்த புற்றுநோயாளர் விடுதி.

முதலிரண்டு அத்தியாயங்களுக்குள்ளேயே கதையின் களமும் அநேக பாத்திரங்களும் அறிமுகமாகிவிடுகின்றன. மார்க் அன்ரனி என்ற முதன்மைப் பாத்திரமே தன்கதையைச் சொல்கின்ற நேரடிக் கதை சொல்லல் முறைமைக்கூடாக நாவல் நிகழ்கிறது. விடுதிப் பணியாளன் மார்க் அன்ரனி, தாதிகளான மேனகா, கனகாம்பிகை, நோயாளிகளான மாணிக்கவாசகம், மொட்டைப் பரஞ்சோதியர், நாகாய்யா, முகிலன், இராமதாசன், மாணிக்கவாசகத்தைப் பார்க்க வரும் அவரது மகள் வஞ்சி, வண்ணன் டொக்ரர் ஆகியோர் இதன் முதன்மைப் பாத்திரங்கள்.

ஒரு எண்ணம், செயல், சிந்தனைக்குப் பல்வேறு அக-புறத் தூண்டுதல்களும் காரணிகளும் உள்ளன என்பதை மார்க் அன்ரனியின் நடத்தைவாதமுறைகள் விளக்கி நிற்கின்றன. தன் செயல்களுக்கான அர்த்தங்களைக் கண்டறிந்து கற்பிதம் செய்து கொள்வதன் வாயிலாக இது உணர்த்தப்படுகிறது. தன்னைத் தானே கண்டடையும் முயற்சியாகத் தனக்குள்ளும் மற்றவர்களிடமும் தர்க்க மற்றும் தத்துவக் கேள்விகளைக் கேட்டு விவாதிக்கின்ற பாத்திரமாகவும் அப்பாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது.

கதைசொல்லிப் பாத்திரம் தன் வாழ்வையும் காதலையும் பற்றிப் பகிர்ந்து கொள்வதோடு, தான் ஊழியனாகப் பணிபுரியும் புற்றுநோயாளர் விடுதியின் கதையை அங்குள்ள மருத்துவப் பணியாளர்கள், நோயாளர்கள் மற்றும் ஏனையவர்களுடனான ஊடாட்டங்களின் வாயிலாக சம்பவங்களையும் அநுபவங்களையும் கதையின் போக்கில் நாவல் கூறிச்செல்கின்றது.

கதையின் நாயகன் ஒரு தாழ்த்தப்பட்ட சமூகப் பின்னணியைச் சேர்ந்தவன். சாதிய மனநிலை எமது சமூகத்தின் வெவ்வேறு அடுக்குகளுக்குள் எவ்வாறு வெவ்வேறு அளவுகளில் ஊடுருவி நிற்கின்றன என்பது வைத்தியசாலைச் சூழலை முன்வைத்துத் தொட்டுச்செல்லப்படுகின்றது. அது பொதுச் சேவை, அரசுப்பணி நிர்வாக மட்டங்களிற்கூட இன்னமும் இருக்கத்தான் செய்கின்றது. 'வெளிப்படையாகச் சாதி சொல்லித் தசாப்தங்களாயிற்று. ஆனால் சூசனமாக அது உள்ளோடத்தான் செய்கிறது' என்ற வசனம் வைத்தியசாலையில் குறிப்பிட்ட சில துப்புரவுப் பணிகளைச் செய்யச் சிலர் தயங்குவதையிட்டு வருகின்றது. புற்றுநோய் பீடிக்கப்பட்ட மனிதர்களின் சூழ்நிலை, மன உணர்வுகள், அவர்களின் குடும்பம் மற்றும் வாழ்க்கைப்பின்னணி - அவர்களின் உறவுச் சிக்கல்கள், முரண்கள் எனவாகப் பல கதையாடல்களைக் கொண்டுள்ளது நாவல். அம்மனிதர்களின் கதைகளுக்குச் சமாந்தரமாக நாயகனின் வாழ்வும் அவன் வஞ்சிமீது கொண்ட காதலும் சொல்லப்படுகின்றது.

மூன்று வகை மனிதர்கள் அங்கு நோயாளிகளாக உள்ளனர். 'வயதான மனிதர்களைப் பொறுத்தவரை சிலர் வாழ்நாள் முழுவதும் பணம் சம்பாதிக்க முயன்றவர்கள். சிலர் தன் சுற்றத்தில் புகழ் சம்பாதிக்க முயன்றவர்கள், மூன்றாமவர் மிக அருந்தலாக மனித உறவைச் சம்பாதிக்க முயன்றவர்கள். உறவைச் சம்பாதித்தவர்கள் வாழ்வை அனுபவித்து முடித்த பாங்கில் பதட்டமின்றி மரணத்தை எதிர்கொண்டார்கள். இவர்கள் தவிர்ந்த இன்னொரு வகையினரையும் நாவல் குறிப்பிடுகின்றது. அவர்கள் முடிக்காத கடமைக்காக அந்தரிப்பவர்கள், அனுபவிக்காத வாழ்க்கைக்காக ஏங்குபவர்கள். இவை இரண்டுமில்லாமல் இந்த உலகைப் பிரியும் மரணத்துக்கு அஞ்சுபவர்கள் குறித்தும் இந்நாவல் பேசுகிறது.

பின்னணிகளும் அனுபவங்களும், அந்தரங்கங்களும் நோயாளர்களுக்கும் மருத்துவப் பணியாளர்களுக்குமிடையிலான உறவும் நாவலின் அடிநாதம். எல்லா வகையான உறவுகள் இருந்தும் கொடும் நோய்க்கு அப்பால் மனவெறுமையால் ஆட்கொள்ளப்பட்ட மனிதர்கள் இக்கதைக்குள் உலவுகின்றனர். ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஒவ்வொரு தனிக்கதைகள் உள்ளன. ஒவ்வொரு நோயாளிகளின் தனிக் கதைகளும்,

பின்னணிகளும், அனுபவங்களும், அந்தரங்கங்களும் விப ரிக்கப்படுகின்றன. நக்கல், நையாண்டி, குதூகலப் பகிடிகள், மகிழ்ச்சி, அழுகை, வாழ்வின் இன்பமும் துன்பமும் ஏக்கமு மான சம்பவங்களைப் பகிர்தல் எனப் பல்வேறு உரையாடல்க ளும் உணர்வுப் பிரவாகங்களுமாக நோயாளர் விடுதி ஆகிவி டுகிறது.

மரண பயத்தினை உச்சமாக உண்டு பண்ணும் நோய்களில் ஒன்று புற்றுநோய். நோயாளிக்கு மட்டுமல்ல - குடும்பம், நெருங்கிய உறவினர், நண்பர்கள் எனச் சுற்றியிருப்பவர்க




ளையும் பீதிக்கும் துயருக்கும் உள்ளாக்குகின்ற நோய் இது. நோயாளியை அநுதாபத்தோடும் கரிசனையோடும் நோக்குப வர்களே அதிகம். அறியாமை சார்ந்த அணுகுமுறைகள் நோயாளியை நோயின் உத்தரிப்புகளுக்கும் மேலான சங்க டங்களுக்குள்ளும் தள்ளக்கூடியது. உளவனைச் சிதறடிக்க வும் கூடியது.

புற்றுநோயாளர்களிற் பலர் தாம் நோய்வாய்ப்பட்டுள்ளதை உறவினர்கள், நண்பர்கள் உட்பட்ட எவருடனும் பகிர்ந்து கொள்ளத் தயங்குவதுண்டு. அத்தருணங்களில் நோயாளி தம்மைப் பிறர் வந்து பார்ப்பதாலும் நலன் விசாரிப்பதாலும் ஆறுதல் கூறுவதாலும் சலிப்பும் எரிச்சலும் அடைகிறான். இச்சமயத்தில் இவை நோய்ச்சுமையை இரட்டிப்பாக்கிவிடும். இதனாலேயே பலர் புரிதல் கொண்ட நட்பு வட்டத்துடன் மட் டும் தமது நோய் குறித்துப் பகிர்வதுண்டு.

தன்னிலைக் கதை சொல்லல் முறையிலேயே நாவல் நகர்கி றது. இக்கதையின் நாயகன் மார்க் அன்ரனி. இந்நாவலின் கதைசொல்லியும் அவனே. இந்நாவல் தன்னிலைக் கதை சொல்லல் முறையிலேயே (First person narrative) முற்றிலும் இயங்குகிறகிறது. கதைநாயகனுக்கும் ஏனைய கதை மாந்தர் களுக்குமிடையிலான உரையாடல்களிலும் மனவோட்டங்களி லும் தத்துவ விசாரங்கள் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. கனவு, எண்ணங்கள், சிந்தனை, வாழ்வு, செயல், மனம் பற்றிய தத்துவ விசாரங்கள் அதிகம் இடம்பெறுகின்றன. இத்தகைய தத்துவ விசாரங்கள் கவியழகனின் எல்லா நாவல்களிலும் தவறாமல் இடம்பெறும் அம்சம் தான். அவரது நாவல்களின் தனித்த அடையாளங்களில் ஒன்றாக இதனைச் சொல்லமுடி யும். இந்நாவல் மனித மனத்தின் உளசார் உணர்வுகளை நுட் பமாக வெளிப்படுத்தி நிற்கிறது, மனதை இயக்கும் அன்பு, காதல், பாதுகாப்புணர்வு என்பனவற்றையும் மனித மனங்க ளுக்கூடாக எடுத்துரைக்கிறது, பயம், ஆசை, உடல், உயிர் உட்பட்ட அக-புறச் சக்திகள் குறித்த ஒரு தேடலைப் பிரதிப லிக்கும் தத்துவார்த்தப் பிரஸ்தாபிப்புகளும் கேள்விகளும் உளசார் நடத்தைவாத முறைகளுக்கூடாக வெளிப்படுத்தப்ப டுகிறது.

புற்றுநோய் என்பது பல்வேறு வகைப்பட்டது. உடலில் எப்பகு தியில், எந்த வகையினதாக அது உருவாகுகின்றது, நோயைக் கண்டடையும் காலம், மருத்துவ வசதிகள் என்ற பல அம்சங் களிலேயே அதற்கான சிகிச்சையின் பெறுபேறுகளும் குண ம டைதல் வாய்ப்புகளும் பெரிதும் தங்கியுள்ளன. அடிப்படை யிற் தீர்க்க முடியாத, பாரதூரமான நோய் என்பது புற்றுநோய் தொடர்பாகப் பரவலாக நிலைபெற்றுவிட்ட உளவியல். இலங்கை போன்ற, அதுவும் தமிழர் தாயக நிலைமைகளைப் பொறுத்தவரை மருத்துவ வசதிகளின் போதாமைச் சூழல் இவ்வகையான நோய்களுக்கான உரிய சிகிச்சைகள் சார்ந்து நம்பிக்கை தருவனவாக இல்லை. அங்குள்ள நிலைமைக ளில் புற்றுநோய்க்கான வைத்தியம் என்பது பெரும்பாலும் மர ணத்தைக் கொஞ்சம் ஒத்திவைப்பாகும்.

'சாவை ஒத்திப் போடுவதைத் தவிரவும் முக்கியமானது மர ணத்திலிருந்து மீண்டுவிடலாம் என்று மனிதரை நம்பவைப் பது.. மேலும், வருகின்ற மரணத்தை அவர் கண்களிலிருந்து முடிந்தளவு மறைத்துவைப்பது. ஒரு மனிதனுக்கு மரணகாலத் தில் அது வேண்டியிருக்கின்றது. அந்த நம்பிக்கையைக் கொடுக்கும் தொண்டுக்காகத்தான் இந்த விடுதி இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று எனக்குத் தோன்றுவதுண்டு' என் கிறான் மார்க் அன்ரனி. நோயையும் சாவையும் எதிர்கொள்ள லின் மனநிலையையும் நோயின் பல கட்டங்களையும் அதற் கான மருத்துவத்தினையும் சாவையும் எதிர்கொள்ளலில் நோயாளிகளின் மனநிலையையும் கூறும் இந்நாவல் அச்சங்க ளையும் மனநிலைகளில் எழும் அவஸ்தைகளையும் எதிர் பார்ப்புகளையும் நுணுக்கமாகப் பேசுகின்றது. சாவை எதிர் கொள்ளும் அல்லது சாவுக்குத் தயார்ப்படுத்தும் இடைத்தங் கல் விடுதியாக அது இருப்பினும் அங்கு நகைச்சுவைக்குப் பஞ்சமில்லை. மரணத்தை நெருங்கிவிட்டோம் என்பதை அறிந்து, ஒரு வகை ஒப்புக் கொடுத்தலுக்கான நிலையை அடைவோருமுளர். மரணத்தை நெருங்கும் தறுவாயில், நிறை வேற்ற முடியாத கடமைகள் குறித்த ஏக்கம் உடல்நோயை விடப் பெரிதாக நோயாளியை ஆட்கொள்ளும். மரணத்தை

ஒப்புக் கொள்ள மறுத்து அச்சத்தின் பிடியிலிருந்தபடி மரணத்தைத் தழுவுவோருமுளர். இப்படியாக நோயையும் மரணத்தையும் சமாந்தரமாக எதிர்கொள்ளும் தருணங்களில் மனநிலைகளின் இயல்புகளை இந்நாவல் கூறிச்செல்கிறது.

நோய்க் காலத்தை நம்பிக்கையோடு கடப்பதற்கும் எதிர்கொள்வதற்குமான ஒரு இடைத்தங்கல் அந்த விடுதி. அந்தக் கடப்புக்காலம் என்பது நோயிலிருந்து மீள்வது வரையானது அல்லது சாவு சம்பவிக்கும் வரையானது. சித்தரிப்புகளும் விபரிப்புகளும், ஊறி வளர்ந்த காதலும் நினைவுகளும் சித்தரிப்புகளும் காட்சி விபரிப்புகளும் வைத்தியசாலை நோயாளர் விடுதிச் சூழலைக் கண்முன் கொண்டுவருகின்றன. மனிதர்கள் பற்றிய விபரிப்புகள் அவர்களின் தோற்றத்திலிருந்து குணலவியல்புகள், செயல்கள் நெருக்கமாகக் கதையில் உணர வைக்கப்படுகின்றன. விடுதி வளாகத்தின் தேமாப் பூமரமும் அதன் நிழலும் குளுமையும், அதனோடு அண்டியுள்ள கல்லிருக்கையும் விடுதியின் கட்டில்களுக்கு கதைக் களமாக விரிகின்றன. பல தருணங்களில் உணர்வுபூர்வமான பகிர்தல்களினதும் ஆரோக்கியமானதும் சூடானதுமான விவாதக் களமாகவும் அவ்விடம் இயங்குகின்றது. பாத்திரங்கள் உலாவிய இடங்களையும் கதை நிகழும் களங்களையும் வாசக மனதிற்குக் கடத்துவதில் தனித்தன்மை கவியழகனிடம் உண்டு. பூனையும் முக்கிய பாத்திரமாகவும் குறியீடாகவும் வருகிறது. விடுதியின் வெளியேயுள்ள தேமாப்பூ மரமும், அதன் பழுத்துக்கொட்டிய இலைகளும் அதன் நிழலும் கல்லிருக்கையும் கூட முக்கியமானவை.

காதலின் தாழ்திறப்பும் கதவடைப்பும் வாழ்வின் இயல்பான அங்கமே. மன ரீதியாக சிறையடைப்பையும் சிறைமீட்பையும் ஒருசேர நிகழ்த்தக்கூடியது காதல். ஏற்பு, நிராகரிப்பு, உன்மத்தம், எதிர்பார்ப்பு, ஏக்கம், தவிப்பு, சிற்றின்பம், பேரின்பம் எனக் காதலின் தருணங்கள் இதில் நிறைந்துள்ளன. வஞ்சி மீதான காதல் தன்னுள் ஊறி வளர்ந்த விதமும் அவளின் நினைவுகள் ஏற்படுத்திய மனநிலைகளும் சிலிர்ப்புகளும் வெவ்வேறு கோணங்களில் விபரிக்கப்படுகின்றன. ஒருவர் மீதான காதல் எத்தனை நுணுக்கமாகக் தான் காதலிக்கும் நபரைக் கவனிக்கச் செய்யும் என்பதை நாவல் உணர்வுபூர்வமாகக் காட்சிப்படுத்துகிறது. அதனை எழுத்தில் மிக நுணுக்கமாகக் கொண்டுவந்திருக்கின்றார் கவியழகன். பெண்ணின் ஒவ்வொரு அங்க அசைவுகளையும் முகமும் கண்களும் உடலும் வெளிப்படுத்தும் உணர்வுகளையும் நாவல் கச்சிதமாக வெளிப்படுத்துகிறது. உடை, உடையின் வண்ணங்களையும் கோடுகளிலிருந்து உருவாகும் சின்னச் சின்ன டிசைன்களையும் குணாகவியழகன் கதைப்போக்கில் கூறிச்செல்கிறார். பேசும் ஒவ்வொரு சொற்களையும் பெண்ணின் லாவகமான உடல்மொழியையும் நாவல் கூறிநிற்பதுடன் சொற்கள் எந்த உணர்வுடன் எத்தகைய ஏற்ற இறக்கங்களுடன் அவளால் பேசப்படுகின்றது என்பதையும் நாவல் சித்திரிக்கிறது. வார்த்தைகளுக்கிடையிலான மௌனங்கள்கூட மொழிபெயர்க்கப்படுகின்றன. கண்களின் வார்த்தைகளுக்குக்கூட பொழிப்புரை எழுதப்படுகின்றன.

பூனை ஒரு குறியீடாக கதை முழுவதும் வருகின்றது. நாயகனுடைய கையறு நிலையை வைத்தியசாலையில் அநாதையாக அலையும் பூனையின் நிலையுடன் ஒப்பிடும் இடம் கவித்துவம் நிறைந்த காட்சிப் படிமமாகவும் குறியீட்டு உருவகமாகவும் வெளிப்படுகின்றது. காதலின் காதலியின் இன்மையை அல்லது அந்தக் காதல் அல்லது காதலென நம்பப்பட்ட உறவு கைநழுவிய தருணத்தின் தன்னிலை உணர்தலை-வெறுமையின் படிமமாக அது வெளிப்படுகிறது.

## மருத்துவ ஆய்வின் தேவை:

வன்னியில் போரை எதிர்கொண்ட மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் மத்தியில் பலருக்குப் புற்றுநோய் ஏற்படுவதாகச் சொல்லப்படுகின்றது. போரில் பயன்படுத்தப்பட்ட வெடிமருந்துகளின் தாக்கம் அதற்கானதொரு காரணமாகப் பார்க்கக்கூடியது. போரின் விளைவாக புற்றுநோய் அதிகரிப்பு தொடர்பான மருத்துவ ஆய்வின் அவசியம் குறித்து இந்நாவலிற் பேசப்படுகின்றது. அரசாங்கத்தின் அழுத்தம் காரணமாக மருத்துவத்துறையும் கல்வித்துறையும் அதனை முன்னெடுக்க முன்வராது என்ற நுண்ணரசியலையும் நாவல் தொட்டுச் செல்கிறது. அந்த வகையில் இது விடயம் குறித்த மருத்துவ ஆய்வு அவசியம் என்பதை வலியுறுத்துகின்ற விவாதங்களை முன்னெடுப்பதற்கு இந்நூல் பங்களிக்கக்கூடியது.

## வாழ்வனுபவங்கள், உறவு சார் முரண்கள்:

பல்வேறு பின்னணியுடைய வாழ்வு அனுபவங்களுக்கூடாக உறவு சார் முரண்களையும் குடும்பப் பிரச்சினைகளையும் நாவல் பேசுகிறது. . மரணப்படுக்கையில் இருக்கும் தருணத்திற்கூட மனைவிமீது சந்தேகப்படும் மனிதரொருவரும் இந்தக் கதைக்குள் உள்ளார். அவரது பேர்கூட ஒரு குறியீட்டுப் படிமத்தை முன்னிறுத்துகிறது. ‘இராம’தாசன் என்பது அந்தப் பாத்திரத்தின் பெயர். வெளிநாட்டிலுள்ள பிள்ளைகளுக்கும் ஊரில் உள்ள பெற்றோர்களுக்கும் இடையிலான உறவு நிலையின் இடைவெளிகளும் பாசங்குத்தன்மைகளும் இதிற் பேசப்படுகின்றன. உயிரோடு இருக்கும் வரை கவனிக்கத் தவறிய வெளிநாட்டில் வசிக்கும் பிள்ளைகள் பெற்றோரின் செத்தவீட்டினை ஆடம்பரமாகவும் பிரமாண்டமாகவும் முன்னெடுக்கும் நிகழ்வுகளை ஒரு கிளைக் கதைக்கூடாக நாவல் கூறிச் செல்கிறது.

பெண்ணின் மறுமணத்திற்கு எதிரான சமூக மனநிலை நாகாய்யா என்ற நோயாளியின் வாழ்வனுபவப் பின்னணியில் பேசப்படுகின்றது. அத்தோடு முதுமைக் காதல் விடயத்தில் மனத்துணை, மனைத்துணை, மணத் துணை என நகைச்சுவையாக ஒரு சீரியசான விடயம் தொடப்படுகின்றது. முந்நாள் இராணுவ வீரன் ஒருவன் விடுதியில் நோயாளியாக வந்து சேர்கின்றான். ஆரம்பத்தில் அப்பாத்திரத்தைச் சற்று எச்சரிக்கையுடனும் சற்று இடைவெளியுடனும் அணுகும் சக நோயாளர்கள் நாட்கள் செல்லச் செல்ல பகை மனநிலை, வெறுப்புத் தாண்டிய மனிதாபிமானத்துடன் அணுகுகின்றனர். இது பகை-வெறுப்பு எனும் கறுப்பு-வெள்ளை அற்ற இயல்பான சித்தரிப்பு.

நாம் வாழும் ஆபத்தான சூழல் நாவலில் சுட்டப்படுகிறது. அதாவது இயற்கைக்கும் சூழலியலுக்கும் எதிரான போக்கே மனிதர்கள் எதிர்கொள்ளும் நோய்களுக்கான முக்கிய காரணி என்பதை நாவல் ஆழமாகவும் தெளிவாகவும் முன்வைக்கிறது. மூலதன விருத்தியை இலக்காகக் கொண்ட பொருள்முதல்வாதச் சுழல் இயற்கையை மட்டுமல்ல, மனித உடல்களையும் கொஞ்சம் கொஞ்சமாக நச்சாக்குகின்றது. இச்சூழலிலேயே மனிதகுலம் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்

ளது. ‘எங்களுக்கு வந்த வியாதி மனிதன் தனக்குத் தானே உருவாக்கியது. தண்ணீரில், சாப்பாட்டில், காத்தில் நஞ்சு, ஒரே நஞ்சு, நஞ்சுண்ட உடலாப் போச்சுது இது’ என்கிறது ஒரு பாத்திரம்.

## நிராகரிப்பின் வலியும் மீளலும்:

வஞ்சியுடனான காதல் நிராகரிக்கப்பட்டதற்கான காரணம் நேரடியாகச் சொல்லப்படவில்லை. ஆனாலும் மறைபொருளாக அதன் காரணம் வாசகர்களால் உணரக்கூடியதுதான். காதலின் நிராகரிப்பிற்குப் பின்னான நாயகனின் வாழ்வைப் புரட்டிப் போடும் நிகழ்வுகள் இறுதி அத்தியாயத்திற்குள் சொல்லப்படுகின்றன. காதல் வாழ்வில் ஒருமுறை மட்டும் நிகழும் ஒன்றல்ல. அது ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் நிகழக் கூடியது என்பது இயற்கையினதும் மனித இயங்கியலினதும் அங்கம். மேனகாவுடன் காதல் வயப்படல் அத்தகைய இயல்பின் அங்கமே. காதல் உணர்வு, மனதில் ஏற்படும் கிளர்ச்சி, ஏக்கம், தவிப்பு, காதல் பற்றிய உணர்வுபூர்வமான ரொமான்டிக் அழகும் கவித்துவமுமாக வெளிப்படுகின்றது. ஆனால் நாவல் முழுவதும் வஞ்சி மீதான காதல் சம்பவங்களாகவும், நினைவுகளாகவும், எண்ணத் தெறிப்புகளாகவும் திரும்பத்திரும்ப வந்து கொண்டிருக்கின்றமை ஒருவகையான கூறியதுகூறலாக வாசகரின் சகிப்புத்தன்மையைப் பரிசோதிக்கவும் செய்கின்றது. காதல் இதமானது, இனிமையானதுதான். ஆனால் அளவுக்கு மிஞ்சினால் எதுவும் உள்ளார்ந்த சுவையைக் குறைத்துவிடும்.

## நாவலின் இறுதி அத்தியாயம்:

‘மேலே சுற்றும் காற்றாடியின் காற்று. உள்ளே போய் மர்மப்பகுதிகளும் ஈரமில்லாமல் உலரவேண்டி சாரத்தை முடியாமல் இடுப்பில் கொழுவியபடி விட்டிருந்தான்’ என்று ஓரிடத்தில் வருகிறது. உடலின் உறுப்புகளை உள்ளபடி சொல்வதில் ஏன் தயக்கம். அதுவும் உடலை மர்மமாகச் சித்தரிக்க வேண்டியதன் தேவை என்ன என்ற கேள்வி எழுகிறது. இமியுனோ தெரபி, கீமோதெரபி எனப் புற்றுநோய்ச் சிகிச்சை தொடர்பான சில சொல்லாடல்கள் வந்து போகின்றன. மருத்துவம் சார்ந்த, சிகிச்சை முறைகள் சார்ந்த நுண்விபரங்கள் இடம்பெறவில்லை. கதைசொல்லி ஒரு சாதாரண மருத்துவ ஊழியன் என்பதால் அத்தகு நுண்விபரிப்புகளைக் கதைசொல்லிக்கு ஊடாக விபரிப்பது இயல்பன்று. ஆனால் மருத்துவ நிபுணராகவுள்ள டொக்டர் வண்ணன் ஊடாக அல்லது மருத்துவ நிபுணத்துவமுள்ள வேறொரு பாத்திரத்தினூடாக அத்தகு நுண் விபரங்கள் முன்வைக்கப்பட்டிருக்கலாம். கதைக் களத்துடனும் நோயுடனும் இன்னும் வாசகர்களை அது நெருங்கவைத்திருக்கும். அறிவூட்டி யிருக்கும். விவாதங்கள் ஆண்களுக்குள் மட்டுமே அதிகம் நிகழ்கின்றன. தாமதமாகவே மேனகா மிஸ் விவாதங்களுக்குள் இணைந்து கொள்கின்றாள்.

கதையின் முடிவு தமிழ்த் திரைப்படப் பாணிக் கிளைமாக்ஸ் போன்ற உணர்வையே தருகின்றது. கதை நாயகன் கட்டடக் கட்டுமான ஒப்பந்தத் தொழிலிற் பெரும் வளர்ச்சி அடைவதும் - கிராமத்து மக்கள் அனைவரும் (168 குடும்பங்கள்) அவர்களது மொத்தக் குடியிருப்பு நிலமான 130 பரப்பினையும் வணிகப் பெருநிறுவனத்திற்கு விற்கச் சம்மதிப்பதென்பது நம்பகத்தன்மை அற்றதாகத் தோன்றுகின்றது. புதிய இடத்தில் கூடுதல் நிலப்பரப்பும் தரமான புதிய வீடுகளும் கிடைக்குமென்பதை நம்பித் தமது பூர்வீக அல்லது நெடுங்காலமாக வசித்த இடங்களை விட்டு வெளியேறுவதற்குப் பெரும்பான்மையினர் உடன்படும் வாய்ப்புக் குறைவு. குறித்த வீதத்தினரேனும் எதிர்ப்பர், மறுப்பர், குறைந்தபட்சம் நம்பிக்கையீனங்களைக் கொண்டிருப்பர்.

‘சேரியில் இருந்து சொந்த வீடு காணியோடு குட்டிப் பட்டினம்’ என்பதாக சிறந்த திட்டமாக முன்வைக்கப்படுகின்றது. கவர்ச்சிகரமான தோற்றத்தைக் கொடுக்கக்கூடிய திட்டம். தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வு முன்னேற ஒரு முன்னோக்குமிக்க திட்டம் அது. ஆனால் 168 குடும்பங்களும் சேரியிலுள்ள குடிசைகள் எனினும் தமக்கேயான உரித்துடைய இடங்களை விட்டு வெளியேறச் சம்மதிப்பரா என்ற கேள்வி இயல்பாக எழுகின்றது. அதேபோல் கதைநாயகன் சுயேட்சையாக உள்ளூராட்சி சபைத் தேர்தலிற் போட்டியிட்டு வெல்வ தும் - ஆட்சியமைக்கப் பெரும்பான்மையை எட்ட முடியாத கட்சிகள் இவரின் ஆதரவோடு ஆட்சியமைப்பதும் - அதற்கான பேரம் பேசலின் அங்கமாக இவர் நகர மேயர் ஆகுதல் என்பதும் சாத்தியமற்ற விடயங்கள். அவற்றைச் சாத்தியப்படுத்துவதற்குரிய அடிப்படைகளும் புறச்சூழல்களும் கதைப் போக்கில் கதைச் சூழல் சம்பவங்களுக்கூடாக வளர்த்துச் செல்லப்படவில்லை. கடைசி அத்தியாயத்தில் சில பக்கங்களுக்குள் அவசர அவசரமாக இவை ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லி முடிக்கப்படுகின்றன.

## பிரதிபலிப்பு:

ஆங்காங்கே சில மன ரீதியான நினைவுத் தெறிப்புகள், சம்பவ மீட்டல்களோடு ஒரு நேர்கோட்டில் இதன் கதை நகர்கின்றது. ஒட்டுமொத்தமாக இந்நாவல் மரணத்தை எதிர்கொள்ளும் கடைசிக் கட்டில் அநுபவங்கள், காதல், காதலின் பிரிவுத் துயர், வாழ்வு மீதான நம்பிக்கை எனக் கூறலாம். சமூக மனிதனான கதை நாயகனின் மக்கள் நலன் சார்ந்த செயல் முன்னெடுப்புகளையும் நாவல் பேசுகின்றது. மருத்துவப் பணியாளர்கள் - நோயாளர்கள் இடையிலான உறவுமுறைகளையும் மனித நேயத்தினையும் சக மனிதர்கள் மீதான கருணையினையும் நாவல் வெளிப்படுத்துகின்றது. எந்த நோய்களாயினும் காலதாமதமின்றி மருத்துவப் பரிசோதனைகளைச் செய்வது அவசியம். அறிகுறிகளின் ஆரம்பக்கட்டத்திலேயே பரிசோதனைகளை முன்னெடுப்பது பயனுள்ளது என்ற விழிப்புணர்வும் அவசியமானது. அந்த வகையில் இந்நூல் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வுக்கு உந்தக்கூடியது. கட்டுரையின் ஆரம்பத்தில் கூறியது போல வாழ்வு நாடகத்தின் இரண்டு கட்டங்களைச் சமாந்தரமாக இந்நாவல் பேசுகின்றது. இளமைக் காதலையும் புதிய நம்பிக்கைகளையுமான வாழ்வினையும் பேசுமு; இந்நாவல் கொடிய நோயின் பிடியில் வாழும் மாந்தர்களின் வாழ்வின் இறுதிப் பக்கங்களையும் காட்டி நிற்கின்றது. ஒரு வகையில் வாழ்வின் தொடக்கமும் முடிவுமான பக்கங்கள் என இதனைச் சொல்லலாம்.



rooban.s@thaiveedu.com



# ஈழ இலக்கியத்தில் முற்போக்கு நீர்வை பொன்னையன் கதைகளை முன்வைத்து

- ஜிஃப்ரி ஹாசன்

நீர்வை பொன்னையன் 1960-களில் எழுத வந்த ஈழப் படைப்பாளிகளுள் ஒருவர். இடதுசாரி சித்தாந்தத்தின் கலை வடிவமாக தங்கள் புனைவுகளை ஈழப்படைப்பாளிகள் முன்வைத்துக் கொண்டிருந்த முற்போக்குக் காலகட்டத்தில் அதனைத் தீவிரமாக சித்தாந்தரீதியாகவும், படைப்புரீதியாகவும் அங்கீகரித்துக் கொண்டு எழுத வந்தவர்களில் முதன்மையானவர் நீர்வை பொன்னையன். தனது படைப்புலகின் மையமாக முதலாளி - தொழிலாளி வர்க்க முரண்களின் மீது கட்டமைக்கப்பட்ட சமூகப் பொருளாதார, சாதிய அடுக்குமுறையில் கீழ்நிலையிலிருக்கும் எளிய மனிதர்களின் வர்க்கப் போராட்ட வாழ்க்கையை முன்வைக்கும் கருவியாக தனது படைப்புகளை நீர்வை முன்னிறுத்தினார்.

இலக்கியச் செயற்பாடுகளைத் தாண்டி அவர் இடதுசாரி அரசியல் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். இலங்கையில் கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாக இடதுசாரி அரசியலில் அவர் உறுதியாக நின்று செயற்பட்டிருக்கிறார். இந்தியா-கல்கத்தாவில் உயர் கல்வி கற்ற அவர், ஆங்கில மொழி அறிவும் கொண்டவர். ஆழமான வாசிப்புடையவர் என்பது அவரது புனைவுகள் மற்றும் அபுனைவுகள் வழியே புரிந்து கொள்ள முடிகிறது. முற்போக்குக் காலகட்டத்தில் நல்ல புனைவுத் திறனோடு கதைகளை எழுதிய வெகுசில ஈழப்படைப்பாளிகளுள் ஒருவராக நீர்வையையும் குறிப்பிடலாம். ஈழத்தின் மிக முக்கிய படைப்பாளியாக முற்போக்காளர்களால் அங்கீகரிக்கப்பட்ட நீர்வை ஒரு படைப்பாளியாக எவ்வளவு தூரம் இலக்கியத்தரமும், அழகியலும் கொண்ட கதைகளை எழுதினார் என்பதையும், அவரது கதையுலகு எந்தளவு அவரை ஈழ இலக்கியத்தின் முற்போக்கு முகங்களுள் ஒருவராக உருவகிக்கிறது என்பதையும் இங்கு பேச முற்படுகிறேன்.

நீர்வையின் படைப்புகளை வாசிக்கும் போது, ஈழத்தின் முற்போக்கு எழுத்தாளர்கள் என்ற மோஸ்தரில் படைப்பாளிகளாக அங்கீகாரம் பெற்று நிலைபெற்று விட்ட ‘பல்வேறு படைப்பாளிகளுள்’ ஒருவர் தானா நீர்வை? அல்லது ஈழ இலக்கியத்தில் அவரது இடம் என்பது அவரது பெரும்பாலான படைப்புகள் கொண்டிருந்த முற்போக்கு அரசியல் கருத்தியல் அடிப்படையில் மட்டுமே நிறுவப்பட்ட ஒன்றா? அல்லது அவரது படைப்பாற்றல் மற்றும் இலக்கிய அழகியலின் அடிப்படையில் நிறுவப்பட்ட இடமா? என்ற கேள்விகளிலிருந்தே அவரது படைப்புலகை அணுக வேண்டியுள்ளது. நீர்வை பொன்னையனின் படைப்புலகு மேடும் பள்ளமும், உதயம், பாதை, காலவெள்ளம், நிமிர்வு, பாஞ்சான், வேட்கை, ஜென்மம் போன்ற சிறுகதைத் தொகுப்புகளாலானது. புனைவுகள் தவிர சில கவனிக்கத்தக்க அபுனைவுகளும் எழுதி இருக்கிறார். மொழிபெயர்ப்பும் செய்திருக்கிறார்.

இடதுசாரிய அரசியல் செயற்பாட்டாளரான நீர்வை அடிப்படையில் கொள்கைரீதியாக கம்யூனிஷ சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டவர். ‘எனது இலக்கியத்தை அரசியலே வழிநடத்துகிறது’ என வெளிப்படையாகவே அறிவித்துக் கொண்ட அவர் தனது படைப்புகளை முற்போக்கு அரசியலின் பிரச்சாரக் கருவியாகவே பயன்படுத்தினார். பொதுவாக, இவருடைய கதைகள் எளிய சாமான்ய மனிதர்களின் வாழ்க்கையை வெளிப்படையாக எளிமையாக முன்வைப்பவை. தொழிலாளர்கள், சாதியப் படிநிலையில் விளிம்பில் இருப்பவர்கள், பெண்கள், குழந்தைகள் என இவரது படைப்புலகின் மனிதர்கள் ஒடுக்குமுறையின் அழுத்தங்களுக்குள்ளானவர்கள். அதேநேரம், சாதாரண பொது வாழ்க்கையில் கரைந்துவிடாத இலட்சிய வேட்கை கொண்டவர்கள். சமூக சமத்துவத்துக்கான போராளிகள்.

தனது அரசியல் செயலியக்கத்தின் வழியேயேயும், படைப்புகளின் வழியேயும் தன்னை ஒரு தீவிர முற்போக்காளராக நிறுவிக் கொண்ட நீர்வை சமூக அசமத்துவத்துக்கெதிரான கொந்தளிப்பு மனநிலையுடனயே இருந்திருக்கிறார் என்பதை அவரது படைப்புலக மனிதர்களின் மனவெழுச்சியிலிருந்து இன்றைய வாசகனால் புரிந்துகொள்ள முடிகிறது. அதுவே அவரது படைப்புலகின் நிலைத்த தன்மையாகவும் வெளிப்படுகிறது. அதுவே ஈழத்து முற்போக்குப் படைப்பாளிகளின் மொத்தப் படைப்புகளினதும் அடித்தளமுமாகும். இத்தகைய மனிதர்களையும், வாழ்க்கையையும், குரலையும்தான் அவர்கள் தங்கள் படைப்புகளில் திரும்பத் திரும்ப ஒலிக்கவிட்டனர்.

தற்காலத்தில் ஈழத்தின் அரசியல் நாவல்கள் ஒரே வாழ்க்கையையும், ஒரே மனிதர்களையும் திரும்பத் திரும்ப எப்படி ஒரே கோணத்தில் மேலோட்டமாக முன்வைக்கிறதோ அது போன்ற

வொரு நிலைமைதான் ஈழத்து முற்போக்கு யுகப் படைப்புக ளிலும் வெளிப்பட்டது. மனித வாழ்க்கையின் முழுச் சாரமும் முதலாளி-தொழிலாளி வர்க்க முரண்களின் மீது கட்டமைந்த தாகவே இருந்தது. மிகச் சில விதி விலக்குகளைத் தவிர



மாற்று இரசனையுள்ள வாசகர்களுக்கு எந்த விருந்தையும் அவர்கள் கொடுக்கவில்லை. ஆனால் இந்த உண்மையை இன்றுவரை மறுக்கின்ற, முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கின்ற ஒரு பழைய தலைமுறை இன்றும் ஈழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இன்றைய தலைமுறையால் ஈழ முற்போக்கு கதைகள் மறுவாசிப்புச் செய்யப்பட்டு அவற்றின் இலக்கியத் தரமும் அழகியலும் மதிப்பீடு செய்யப்படும் போது தங்களுக்கு கிடைத்த இடம் நீர்த்துப் போய்விடும் என்ற அச்சம்தான் அவர்களை கலங்கடித்துக் கதறவைக்கி றது. இன்று வாசிக்கும் போது, ஈழ முற்போக்கு இலக்கியம் கருத்துரீதியாகச் செறிவும், அழகியல்ரீதியாக ஆழமற்றுமே தோன்றுகின்றன.

நீர்வையின் படைப்புலகில் வரும் எளிய சாமான்ய மனிதர்க ளில் சிலர் நீர்வைக்கிருந்த கனவுகளை, எதிர்பார்ப்புகளை சுமந்து நிற்பவர்கள். இதனால் பல இடங்களில் அவர்கள் இயல்பான மனிதர்களாக இல்லை. மாபெரும் கனவுகளை, தங்களுக்குத் தெரியாத கனவுலகை தங்கள் கண்களில் தேக்கி வைத்திருக்கிறார்கள். வர்க்க முரண், தொழிற் சங்கம், தொழிலாளர் ஒற்றுமை பகிஷ்கரிப்பு போன்ற தங்களுக்கு பரிச்சயமில்லாத ஒரு தோற்றப்பாட்டை தத்தம் தோள்களில் சுமந்து திரியும் சாமான்ய மனிதர்களை நீர்வையும் அவரது சக எழுத்தாளர்களும் எந்த விசாரணையுமின்றி உருவாக்கம் செய்து கொண்டே இருந்தனர். துரதிஸ்டம் இந்த இலக்கியப் படைப்புகளால் ஒரு புரட்சியாவது ஈழத்தில் நடந்ததாகத் தெரியவில்லை. முற்றிலும் இந்த இலக்கிய இயக்கத்துக்கு வெளியேதான் அப்போதைய இடதுசாரி இயக்க அரசியல் தீர் மானங்களால் சில தொழிலாளர் பேரணிகள் இடம்பெற்றிருக் கின்றன.

முற்போக்குப் படைப்புகள் குறித்த இந்தப் பார்வை ஈழத்து முற்போக்குப் படைப்பாளிகளை அவமானப்படுத்துவதாக வும், சிறுமைப்படுத்துவதாகவும் புரிந்துகொள்ளப்படக் கூ டாது. மனிதநேயம், சமூக சமத்துவம், சாமாய மக்கள் மீதான சுரண்டல் போன்றவற்றுக்கெதிரான மிக முக்கிய கலகக்குரல் முற்போக்கு எழுத்தாளர்களுடையது என்பதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் நமது நோக்கம் புனைவில் நாம் அந்தக்காலகட்டத்தில் உண்மையில் என்ன சாதித்திருக் கிறோம்? நமது அடைவுகள் என்ன? அதன் தொடர்ச்சி எப் படி இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்வதற்கு இந்த மறு வாசிப்பும் மதிப்பீடுகளும் தேவையாகவுள்ளன என்பதை வலி யுறுத்துவதுதான்.

ஈழத்தின் பெரும்பாலான முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புகளில் சித்தரிக்கப்படும் அதே வாழ்வியல்தான் நீர் வையிடமும் வெளிப்படுகிறது. மனித வாழ்வு குறித்த கூர்மை யான நோக்குகள், அகவிசாரணைகள், ஆழமான தத்து வார்த்த முன்வைப்புகள் என எதுவுமற்ற தட்டையான மேலோட்டமான விவரணங்களால் ஒரு காலகட்ட மனித வாழ்வை அவர் பேசுகிறார். ஆயினும் நீர்வை, வ.அ. இராசரத் தினம் போன்ற முற்போக்காளர்கள் ஏனையவர்களிடமிருந்து விலகும் ஒரு புள்ளியாக அவர்களின் கதைமொழியைச் சொல்லலாம். நீர்வை நல்ல புனைவாற்றல் கொண்டவர். இலக்கியத் தரமும், அழகியலும் அவரது சிறுகதைகளை மேம்பட்டதாக்குகிறது. அந்த வகையில் அவர் எழுதியவற்றை சிறுகதைகளாகக் கொள்வதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை.

அவரது மேடும் பள்ளமும் கதை மிகச் சாதாரணமாக மேலே எனது மதிப்பீடுகளை நிரூபிக்கும் கதையாக இருக்கிறது. சாதிய அடக்குமுறை, விளிம்புகளின் துயரம் போன்றன கதை யின் மையமாக இருக்கும் அதேவேளை நிலவுடமையாளர்க ளின் ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும் எதிர்க்கும் தொழி லாளர் எழுச்சியையும் தன் முடிவாக முன்வைக்கிறது கதை. மேடும் பள்ளமும் எப்படி சமமற்ற நிலமாகத் தெரிகிறதோ அப்படித்தான் சாதிய அடிப்படையிலும் மேல்சாதி கீழ்சாதி என்ற அடுக்கமைவு, அதுபோலவே வர்க்கப் பிரிவுகள். நிலப் பிரபுக்கள்-கூலியாள் என்ற முரண் அரசியல் என்று நிலம் போல் சமூகமும் அசமத்துவமாக, பிற்போக்கானதாகக் கிடக் கிறது என்பது கதையின் மையமாகும்.

கதையில் வரும் அருணாசல உடையார் நிலச்சுவாந்தராக இருக்கிறார். அருணாச்சல உடையாரின் எடுபிடியான கண- பதி எனும் தொழிலாளி 'நாங்கள் நயினாருடைய உப்பையல் லவா திண்டு வாழ்றம்' என அடிக்கடி சொல்லிக்கொள்பவன். இந்தக் குரலுக்குப் பின்னாலிருப்பது வெறுப்போ, கோபமோ இல்லை. ஒருவித நன்றி உணர்ச்சிதான் அந்தக் குரலில் நிறைந்திருப்பதாகத் தெரிகிறது. அப்படியானால் கணபதிகள்

அந்த வாழ்க்கையைக் குறித்து திருப்திகொண்டிருந்தார்களா? ஆனால் கதையின் நடுவே திடீரென்று அருணாச்சல உடையார் தமிழ்த் திரைப்படப் பாணி வில்லனைப் போன்று வில்லங்கம் செய்யத் தொடங்குகிறார். கணபதி அவரது நிலத்தில் வயல் செய்து நல்ல விளைச்சல் கண்டு அறுவடை நெருங்கும் காலத்தில்தான் வழமையான முற்போக்குப் பாணியில் நீர்வை உடையாரை வில்லங்கமான முதலாளியாக்கி விடுகிறார். வயல்நிலத்துக்குச் சொந்தக்காரனான அருணாச்சலம் உடையார் கணபதியிடம் சென்று குத்தகைப் பணத்தை உடனடியாகத் தரவேண்டும் என பிடிவாதம் பிடிக்கிறார். அவன் அறுவடைக்குப் பின்னர்தான் தன்னால் பணம் தர முடியும் என்கிறான். எவ்வளவு கெஞ்சியும் அவர் கேட்கவில்லை. உடனே தர முடியாவிட்டால் அறுவடையை அவர் செய்யப் போவதாகச் சொல்கிறார். இந்த உழைப்புச் சுரண்டல் ஒருபுறமிருக்க இன்னொரு பக்கம் பாலியல் சுரண்டலும் நிகழ்கிறது. கணபதியின் இளம் மனைவியான வெள்ளச்சியை பாலியல் உறவுக்கு உடையார் பல தடவைகள் அழைத்தும் அது நடைபெறாமலே போகிறது. அதற்கான வன்மம் உடையார் மனதில் வெறியாக இருக்கிறது. அதன் விளைவுதான் இந்தப் பலி.

இப்படி அறுவடைக்காலத்தில் முதலாளிகளால் பாதிக்கப்படும் தொழிலாளர்களைத்தான் முற்போக்கு எழுத்தாளர்களின் படைப்புகள் நெடுகிலும் கண்டு வருகிறோம். எனவேதான் முற்போக்குப் படைப்புகள் ஒரேவகையான வாசிப்பனுபவத்தையே வாசகருக்கு ஏற்படுத்துவதாகச் சொல்லத் தோன்றுகிறது. மிகச் சொற்பமாகவே வேறு தளங்களிலான அனுபவங்கள் கிடைக்கின்றன. நீர்வையின் மொத்தக் கதைகளிலும் மிகச் சொற்ப அளவான கதைகளே முதலாளி - தொழிலாளி முரணிலிருந்து விலகிச் சென்றிருக்கின்றன. எனினும் இத்தகைய கதைகள் நமக்கு சொல்ல வரும் பொது உண்மை என்பது இந்த நிலப்பிரபுத்துவ மனப்பாங்குதான் எல்லா நிலச்சுவாந்தர்களுக்குள்ளும் இருந்தது, தொழிலாளர்களின் கனவுகளுக்கும், உணர்வுகளுக்கும் அவர்கள் ஒருபோதும் இடமளித்ததே இல்லை என்ற சமூக யதார்த்தம்தான். இங்கு, நீர்வை கதையை அழகாக நகர்த்திச் சென்று முற்போக்காக கதையை முடிக்க வேண்டிய கட்டாயத்தால் சிறார் கதை போன்ற முடிவுக்குச் சென்று விடுகிறார். இத்தகைய முடிவுகள் பல கதைகளின் ஆன்மாவையே அழித்துவிட்டிருக்கின்றன. இந்த அவலம் மொத்த ஈழ முற்போக்குப் படைப்புகளினதும் பொதுச் சித்திரமாகவே உருக்கொண்டிருக்கிறது. கொஞ்சம் வித்தியாசமாகக்கூட சொல்லமாட்டார்களா என்ற நம் எதிர்பார்ப்பு தொடர்ந்தும் தகர்ந்து கொண்டே போகிறது. வ.அ.இராசரத்தினத்தின் அப்துல்லாவுக்கும் நீர்வையின் கணபதிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. அவர்களின் கனவுகளும், ஏமாற்றங்களும் ஒன்றுதான். வயல் பொய்த்துப் போவதால் சிதைவுறும் கனவுகள் அவர்களுடையவை. அல்லது முதலாளித்துவச் சுரண்டல்களால் சூறையபடப்படுபவை என ஒரு புறித்த வட்டத்துக்குள் மட்டுமே நின்றுகொண்டிருக்கின்றன.

கதையின் முடிவு ஒரு புரட்சிக்கான அறைகூவலாக இருக்கிறது. தொழிலாளர்கள் ஒன்றுபடுவதன் மூலம் நிலப்பிரபுத்துவத்துக்கு முடிவு கட்டி சமூகசமத்துவத்துக்கான நிலையை எட்ட முடியும் என்ற எளிய அரசியல் சூத்திரமே அப்பட்டமான கதைக்கரு. இந்தப் பிரச்சார அரசிலுக்குள் எளிய மனிதர்களின் அகங்களும் முகங்களும் இரத்தமும், சதையுமாக வெளிப்படாமை புதிய தலைமுறை வாசகருக்கு பெருத்த ஏமாற்றமாகும். பனஞ்சோலை கதை இலக்கிய அழகியலும் புனைவுத்தன்மையும் கொண்ட கதை. நீர்வை ஒரு சிறந்த சிறுகதையாசிரியர்தான் என்பதற்கு ஆதாரமான கதைகளுள் அதுவும் ஒன்று. ஒரு பெண்ணின் காதலை, மனவுணர்வுகளைப், பரிதவிப்பை, தன் சொந்த கிராமத்தை விட்டும் காதலை விட்டும் விலத்திக் கொண்டு செல்லப்படும் அவளின் உணர்வுகளை அழகிய மொழிப்பாவனையால் காட்சிப்படுத்தும் கதை.

பெண் மீதான கருணை வெளிப்படும் அதே இடத்திலிருந்து அதற்கு எதிர்முகத்தையும் காட்டி விடுவார். சோறு கதையில் இப்படி ஒரு விவரணத்தை எழுதுகிறார் - 'வானம் பார்த்த பூமி. தனது மலட்டுத் தனத்தை எண்ணிப் பெருமூச்சுவிடும் பெண்ணைப் போல' என்று எழுதுகிறார். மலட்டுப் பெண் என்ற இளக்காரமான பிற்போக்கான பார்வை ஒன்றும் அவரது முற்போக்குக்குள் மறைந்திருக்கிறது. ஆனாலும் சோறு என்ற கதை இந்த விவரணத்தோடு சுருக்கிவிடக்கூடியதல்ல. அதற்கு அப்பால் பசி கொண்ட மனிதர்களை, ஒரு நல்ல சாப்பாட்டுக்காக ஏங்கும் முகங்களை நம்முன் கொண்டு நிறுத்தும் கதை. கதையில் வரும் கட்டையன் மாலை குடித்த கூழுடன் மறுநாள் வரை வாழ்பவன். பசியால் வெறுங்குடலில் வலியை உணர்பவன். கதையின் பிற்பகுதி முற்போக்கு அரசியலால் பிணைக்கப்படுகிறது. பசியிலிருந்து அவர்கள் மீள்வதற்கான ஒரே வழி புரட்சிதான் என்ற அரசியல் பாடமே வலியுறுத்தப்படுகிறது. அதனால் அந்த வாழ்வு புதுமையற்றதாக, திருப்பங்களற்றதாக, சோர்வானதாக, உத்வேமற்றதாக வாசகன் முன்னால் விரிகிறது. கட்டையனின் பசியை உயிர்ப்பான கலை வடிவமாக்கக்கூடிய படைப்புத் திறன் நீர்வையிடம் இருந்தும் ஒரு புரட்சி அலையில் ஒரு துளியாக கட்டையன் அள்ளுண்டு போகும் காட்சிதான் வாசகருக்கு எஞ்சுகிறது.

முற்போக்கு எழுத்தாளர்களின் ஒரு பொதுவான சறுக்கல் குறித்த ஒரு சம்பவத்தை வைத்து கதையை நகர்த்துவதில்லை. எடுத்துக்காட்டாக சாதி, வர்க்கம், சுரண்டல், பால் வேறுபாடு என அத்தனை விளிம்புநிலைக் கருத்துகளையும் ஒரு கதைக்குள்ளேயே பேசி விடும் முனைப்பு கதையை நீர்த்துப் போகச் செய்துவிடுகிறது. கடைசியில் அவை கதையா என வாசகரைக் குழப்பிவிடுகிறது. எல்லாக் கதைகளிலும் முற்போக்கு எழுத்தாளர்களின் பலவீனமே சாமான்ய மக்களின் அவலத்தைச் சொல்லி ஒப்பாரி வைப்பதுதான் என்ற ஒரு புரிதலுக்கு நம்மைக் கொண்டு வந்து நிறுத்தி விடுகின்றன. கதை அற்ற கதைகளாக அவை சுருங்கி நிற்கின்றன. ஆனால் நீர்வை போன்றவர்களால் இந்த பலவீனத்தை அவரது இலக்கிய அழகியலாலும், புனைவுத் திறனாலும் சில கதைகளில் மறைக்க முடிந்திருக்கிறது.

தவிப்பு கதை குழந்தைகளற்ற ஒரு பெண்ணின் மனத்துயரத்தையும் ஏக்கத்தையும் அழகிய புனைவாக்குகிறது. நீர்வையின் இலக்கியத் தரத்துக்கு இன்னுமொரு எடுத்துக்காட்டான கதை அது. மெஜிக்கல் ரியலிசத் தன்மை இழையோடி இருக்கும் விவரணங்களாலான கதை. ஒரு முற்போக்குப் படைப்பாளி பரீட்சித்துப் பார்க்க விரும்பாத எல்லை வரை கதை சென்று திரும்புகிறது. இந்த வகையில் பார்த்தால் நீர்வையின்

படைப்பு மனம் எப்போதும் கோட்பாட்டுச் சட்டகத்துக்குள் மட்டும் சுருங்கிக் கொள்ளாமல் அவ்வப்போது வெளியிலும் தலைநீட்டி இருக்கிறது என அறிய வரும் தருணங்களாக அவற்றை கருதிக்கொள்ள முடியும்.

குழந்தைக்காக ஏங்கும் கோகிலா தன் அருகில் அம்மா என்றழைக்கும் மழலை மொழி கேட்டு புளங்ககிக்கிறாள். அந்த புளகாங்கிதம் போல் நிஜ உலகில் வெளித்தெரியாத மாய



உலகில் சஞ்சரிக்கும் ஏராளம் குழந்தைகளையும், மழலை அழைப்புகளையும் அவள் கேட்டுக்கொண்டே இருக்கிறாள். அவளால் புரிந்துகொள்ள முடியாத கனவுலகிலிருந்து கடவுளின் தரிசனமாக குழந்தைகள் வருகின்றனர். பின் அது நிஜத்துக்கு அப்பால்பட்ட வெறும் உணர்தல்தான் என அவள் அறியும் போது அவளை மீண்டும் அந்த வெறுமை சூழ்ந்துகொள்கிறது. ஆனால் கதையின் மொழியும், கதைப்பின்னலும், நுண்ணிய சித்திரிப்புகளும் நீர்வையின் கலைத்துவமான சிருஷ்டித் திறனை வெளிக்காட்டுகின்றன.

சிருஷ்டி எனும் குறுங்கதை விளிம்புநிலைப் பெண்ணான பாலியல் தொழில் புரிந்து இறந்துபோன சாவித்திரி எனும் பெண்ணுக்கும் கடவுள்களுக்குமிடையில் பரலோகத்தில் நடக்கும் உரையாடலால் நகர்த்தப்படும் கதை. கதை அளவில் சிறியதுதான். ஆனால் 1960-களில்எழுதப்பட்ட கதை. அக்காலப்பகுதியில் அது கிளர்த்தும் கேள்வியும் சலனங்களும் மிக முக்கியமானவை. பிற்போக்குத்தனமான சமூக அமைப்பில் அது ஒரு மிகப் பெரிய முழக்கம் என்றுதான் சொல்ல வேண்டும். ‘சாவித்திரி என்ற பெயரில் விபச்சாரம் செய்தாளாம் இவள். கற்புக்கரசியின் பெயருக்கே களங்கம்’ என்கிறார் உருத்திரன். ‘பசியைப் படைத்துவிட்டு கற்பைப் பற்றிப் பேச்சு வேறா ?’ என்கிறாள் சாவித்திரி. இந்தக் குரல் அப்போதைய சமூக அமைப்பில் மிகப் பெரிய வெடிப்பு. மத, சாதிய அடுக்கமைவுகளுக்குள் புதைந்து பிற்போக்குத்தனமாக இருந்த சமூகத்தில் ஒலித்த ஒரு துணிகரமான குரலாக இதனைப் பார்க்க வேண்டி இருக்கிறது. கீழ்த்தட்டிலிருக்கும் பெண்களின் அன்றாட வாழ்க்கைப் பாடுகள் குறித்து எந்த அக்கறையும் எடுத்துக்கொள்ளாத சமூகத்திலிருந்து அவளுக்கான ஒழுக்கப் பெறுமானங்கள் மட்டுமே முன்னிறுத்தப்படும் சமூகநிலை மீதான ஒரு கூர்மையான விமர்சனம் இந்தக் கதை.

உதயம் கதையும் வேலுப்பிள்ளை என்ற விவசாயின் அடிமட்ட சாதாரண வாழ்க்கையைப் பேசும் கதை. தன் வயல் தண்ணீர் இல்லாமல் கருகிவிட்டதாக என்ஜினியர் செல்லப்பாவிடம் புகார் கொண்டு வேலுப்பிள்ளை வருகிறான். வேலுப்பிள்ளை போன்ற சாமான்ய தொழிலாளிகள் வேட்டையாடி இலவசமாக மான், மரை இறைச்சிகளை இந்த உயர் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பதும் கைகளைக் கட்டிக் கொண்டு அடிமைகளைப் போல் வளைந்துகொடுப்பதுமான அபத்தம் நிறைந்த ஒரு சமூக சூழலை நீர்வை இக்கதைக்குள் சித்திரிக்கிறார். எனினும், இத்தகையை தொழிலாளர்களை கொண்டாடும் மனநிலையில்தான் நீர்வை தன் படைப்புத் தளத்தை அமைத்திருக்கிறார். இந்தத் தொழிலாளர்களின் சாமான்யப் பண்புகளை நீர்வை வெளிப்படுத்துவதில்லை. உயர் பெறுமானங்கள் கொண்ட பொதுநலமிக்க தொண்டனாகவே வேலுப்பிள்ளை வருகிறான். என்ஜினியர் நீர் தருவதற்கு மறுக்கும் போது வே.பி. நியாயம் பேசுகிறான். அதனால் வேலுப்பிள்ளையிடம் உன் வயலுக்கு மட்டும் தண்ணீர் தருகிறேன் என்று என்ஜினியர் செல்லப்பா சொல்லும் போது, “இல்லை எல்லா வயலுக்கும் தரவேண்டும்” என்று கோபமாகச் சொல்கிறான். இது இயல்பான மனிதப் பண்பையும் அந்த வாழ்க்கையையும் நேர்மையாக முன்வைப்பதாக கொள்ள முடியாது. சாமான்ய மனிதர்களுக்குள்ளிருக்கும், போட்டி, கசப்பு, சுயநலன் போன்ற மனிதப் பண்புகளை வெளிப்படுத்த கிடைத்த ஒரு அபூர்வ தருணம் அது. ஆனால் அதை பொதுநலன் கொண்டு நிரப்பி விடுகிறார் நீர்வை. ஆனால் டொமினிக் ஜீவா தனது பாதுகை கதையில் வரும் செருப்புத் தைக்கும் தொழிலாளியை அவனது அசலான குணத்துடன் காட்டும் ஒரு இடம் உள்ளது.

தொழிலாளியின் ஒற்றுமையும், அவனது மேன்மையும், புரட்சியும் எனும் ஓர் ஒற்றைத் தளத்தில் அமைந்த சாமான்ய மக்களுக்கு அந்நியமான வாழ்வனுபவம்தான் திரும்பத் திரும்ப நீர்வையின் கதைகளில் இடம்பெறுகிறது. இது நீர்வையிடம் மட்டுமல்ல மொத்த ஈழ முற்போக்குப் படைப்புகளிலும் இந்த பண்பைக் காணமுடியும். இது சாமான்யர்களின் உண்மையான வாழ்வனு பவத்தை முன்வைத்துப் பேசவில்லை. ஒரு செயற்கையான கற்பிதமான உலகிலிருந்து ஒலிக்கும் குரல்தான் இது. பிளேட்டோவின் உட்டோபியாத் தனம் நிறைந்திருக்கும் ஒரு கற்பனாவாத-இலட்சிவாதக் குரல். யதார்த்த

வாழ்க்கையோடு இதன் மிகச் சில பக்கங்களை மட்டுமே
பொறுத்த முடியும். மற்ற அனைத்தும் சாமான்ய மக்களின்
வாழ்வனுபவத்தின் எல்லையைத் தாண்டி நிற்பவைதான்.
மேடும் பள்ளமும் கதையில் நிகழும் புரட்சியோ, மாற்றமோ
அப்போதைய சொந்த வாழ்வியல் அனுபவங்களிலிருந்து
முகிழ்த்தவையல்ல. அப்படியொரு சமூக சூழல் உருவாக
வேண்டும் என்ற நீர்வையின் சித்தாந்தக் கனவுக்கான வடிவம்
மட்டுமே அது. ஒரு படைப்பாளி தன்னை நிறுவிக் கொள்ளும்
இடமாக அது ஒரு போதும் இருக்க முடியாது. வாழ்வனுப
வத்தை நேர்மையாகப் பதிவுசெய்து அதைநோக்கி வாசகரை
அழைத்துச் செல்லும் திடமான குரலும் நோக்கும் அவனிடமி
ருந்து வெளிப்பட்டாக வேண்டும்.

அசை கதை ஒரு சமூக யதார்த்தச் சித்திரமாக வந்திருக்கும்
கதை. படித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் ஒரு கீழ்
தட்டு இளைஞனின் மனக்கொந்தளிப்பு அலையாக எழும்
அழகியல் தன்மையான கதை. அவனுக்கு வேலைகிடைப்
பது, தன் காதலியான கோகிலாவுக்கு தான் அமைத்துக்
கொடுக்கப் போகும் வாழ்க்கை போன்றன சுயநலன் பிடித்த
உறவுகளால்-சமூகத்தால் சிதைக்கப்படுவது என கதை நகர்
கிறது. ஆனால் கதையின் முடிவில் அவை எல்லாம் கதை
சொல்லியின் கனவு என நீர்வை கதையை முடிக்கிறார்.
காதல், சமமற்ற மனித உறவு, விளிம்பின் போராட்டம் என
பல தளங்களில் ஒரு தனிமனிதனைச் சுற்றி கட்டமையும் இந்
தக் கதையில் கதைசொல்லியே கதையை முழுவதுமாக
தனக்குள் சொல்லிக் கொள்கிறான். கீழ்தட்டிலிருந்து கல்வி
மூலம் தங்களை உயர்த்திக் கொள்ளும் ஒரு தலைமுறையின்
பிரதிநிதியாக கதைசொல்லி வருகிறான். அவனது முயற்சி
யின் மூலம் அவன் ஓரளவு முன்னேறியதும் அதுவரை அவ
னைப் போன்றவர்களை கண்டுகொள்ளாத சமூக அமைப்பு
அவர்களை திருமணம் போன்ற தங்களது சுய நலன்களுக்கா
கப் பயன்படுத்திக் கொள்ள முயலுகிறது. இந்த போக்கிரித்த
னமான சமூகத்தின் மீதான நீர்வையின் புகார்கள்தான் கதை
சொல்லியின் வாயிலாக வெளிப்படுகிறது. அப்படியான
இளைஞர்கள் தங்களது வாழ்வு, தொழில், வாழ்க்கைத்
துணை குறித்து குறைந்தபட்சம் என்ன கனவுகளை வைத்தி
ருந்தார்கள் என்பதைக்கூட தெரிந்துகொள்ள கொஞ்சமும்
முயலாத சுயநல சமூகத்தின் இருப்பை இக்கதையில் நீர்வை
சங்கடத்துடன் எதிர்கொள்கிறார். இத்தகைய சமூக அமைப்
பின் சுயநல நிகழ்ச்சிநிரலில் வீழும் வறிய படித்த இளைஞர்க
ளின் கனவும், அத்தகைய இளைஞர்கள் மீது எந்த எதிர்பார்ப்
புமில்லாது ஆசைகொண்டிருந்த கோகிலா போன்ற ஏழைப்
பெண்கள் தங்கள் காதலையும் வாழ்க்கையையும் இழப்பதற்
கான சூழலே அங்கு நிலவுகிறது.

இக்கதை கதைசொல்லிக்கு ஒரு கனவாக நிகழக்கூடியது
தான். ஆனால் உண்மையில் அந்தக் கனவு அன்றைய சமூக
நிஜத்தின் பிரதிபலிப்புத்தான். இந்த அரசியல் பார்வையைத்
தாண்டி ஒரு தொழிலாளியின் சாதாரண உணர்ச்சிச் சிக்கல்
கள், மனித உறவுகள் சார்ந்த நெருக்கடிகள் போன்ற நுண்
மையான விசயங்கள் மீது நீர்வையின் கவனம் தொடர்ந்தும்
விழாமலே போகிறது. ஒரு தொழிலாளிக்கு தொழிற்சங்கம்
தொடங்குவதும் அல்லது இருக்கும் சங்கத்தில் உறுப்பினரா
கச் சேர்வது அல்லது சேராமல் இருப்பது போன்ற தொழில்
சார் உலகத்தின் பிரதிதியாகவே ஒவ்வொரு தொழிலாளியும்
நீர்வையின் படைப்புலகில் வந்து போகின்றனர். அதற்கு அப்
பாலான அவனது மனித உணர்ச்சிகள் என்னவாயிற்று? அவ
னுக்குள்ளிருக்கும் அன்பு, சமூகத்தோடு அவன் கொள்ளும்
ஊடாட்டம், கோபம், வெறுமை என எதுவுமற்ற வாய்ப்பாட்டு
வாழ்க்கையையே நீர்வையாலும் சலிப்பின்றி தொடர்ச்சியாக
எழுத முடிந்திருக்கிறது.

சங்கமம் கதை ‘அவன்’ என்கிற தொழிலாளியை சாமான்ய மா
னுடத் தொழிலாளி ஒருவனின் நிலையில் வைத்து பார்க்க
வில்லை என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது. அவனது அடிப்
படையான உணர்ச்சிகள் கூட புரட்சியால் பூசி மெழுகப்படுகி
றது. அவனது தொழிற்சாலைக்குள் மட்டுமே அவன் எதிர்
கொள்ளக்கூடிய வாழ்க்கைச் சிக்கல்களை மட்டுமே பேசுகி
றது சங்கமம். தொழிலாளர் பேரணியில் தன் சுய விருப்பின்
பேரில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவிலிருக்கும் ஒரு
தொழிலாளி தொழிற்சங்கத்தால் கலந்துகொள்ள கட்டாயப்ப
டுத்தப்படும் ஓர் இடம் கதைக்குள் வருகிறது. பின்னர் அவ
னது ஒத்துழையாமை தவறு என அவன் உணர்ந்து விருப்பத்
துடன் பேரணியில் கலந்துகொள்ளும் மனமாற்றம் அவனுக்கு
ஏற்படுகிறது. இத்தகைய மிகச்சாதரணமான ‘கதையம்சமே’
இல்லாத கதைகளையும் கூட நீர்வை அதிகம் எழுதித் தீர்த்தி
ருக்கிறார்.

ஈழ இலக்கியத்தின் முற்போக்கு முகம் என்பது முழுமையாக
இடதுசாரிய அரசியல் சிந்தனையால் வரையப்பட்ட ஒன்று
தான் என்ற புரிதல் அவற்றை வாசித்து முடித்ததும் நமக்கு
உருவாகிறது. முற்போக்குக் கருத்தியலை எழுதுவதன்
மூலமே பலருக்கும் படைப்பாளி அந்தஸ்தும் அங்கீகாரமும்
கிடைத்தது. இந்த பதட்டமும் பல எழுத்தாளர்களை முற்
போக்காளர்களாக மாற்றியது. ஆனால் நீர்வை இலக்கியத்
துக்கு முன்னரே இடதுசாரி அரசியல் ஈடுபாடு கொண்டவர்.
தான் அரசியலிலிருந்து இலக்கியத்துக்கு வந்தாக அவர் ஒரு
முறை சொல்லி இருக்கிறார். இந்த இலட்சியத்துக்காகவே
எழுத வந்தவர் என்ற வகையில் அவர் தன் இலட்சியத்தில்
கடைசிவரை உறுதியாகவே இருந்திருக்கிறார் என்பது உறுதி
யானது. ஆனால் இலக்கியம் எப்போதும் அரசியலுக்கு மட்
டுமே சேவகம் செய்து கொண்டிருக்கும் தொண்டன் அல்ல.
அது காலத்தால் மாறி விடக்கூடியது. தன் காலத்து சாமான்
யர்களின் வாழ்க்கையை ஒரு வாய்ப்பாட்டுச் சூத்திரத்துக்குள்
ளிருந்து விலகிநின்று மாற்றுக் கோணத்தில் முழுமையாக பதி
வுசெய்வதே ஒரு படைப்பாளியின் பணியாகும். அப்போது
தான் எழுத்தாளர் காலத்தின் பிரதிநிதியாக மாறி வரலாற்றில்
வாழத் தொடங்குகிறார். நீர்வையிடமிருந்து பெயர் குறிப்பிட்
டுச் சொல்லக்கூடிய எந்தவொரு மகத்தான படைப்பும் வெளி
வரவில்லை என்பதை இன்று அவரை முழுமையாக வாசிக்
கும் போது புரிந்துகொள்கிறோம். மாஷ்டர் பீஸ் என்று சொல்
லிக் கொள்ள அவரிடமிருந்து எதுவும் நமக்குகிடைக்க
வில்லை. ஆனால் ஏனைய ஈழ முற்போக்குப் படைப்பாளிகளி
லிருந்து அவரைத் தெளிவாக வேறுபடுத்தக்கூடிய ஒன்று
அவரிடம் இருக்கிறதென்றால் அது அவரது
புனைவு மொழி தான்.



jiffry.hassan@thaiveedu.com




*'For there is no friend like a sister*
*In calm or stormy weather;*
*To cheer one on the tedious way,*
*To fetch one if one goes astray,*
*To lift one if one totters down,*
*To strengthen whilst one stands'*

**கி**றிஸ்டினா ரொசட்டி (Christina Rossetti )எனும் ஆங்கிலப் பெண்கவிஞரின் Goblin Market என்ற கவிதையின் இறுதியில் இடம்பெறும் வரிகளுடன் இக்கட்டுரையைத் தொடங்குகிறேன். சகோதரியருக்கிடையே நிலவும் உறவு குறித்த தமிழ்க் கவிதைகளை வாசித்த ஞாபகமில்லை. ஆங்கில இலக்கியத்தில் சகோதரியரை முக்கிய பாத்திரங்களாகக் கொண்ட புனைவுகள் ஒப்பீட்டளவில் தமிழ் இலக்கியத்திலும் பார்க்க அதிகமுள்ளன எனினும், அவை பற்றி எழுதுவது என் நோக்கமன்று. இந்திய இலக்கியத்தில் எவ்வாறு சகோதரியர் பிரதிநித்துவப்படுத்தப்பட்டுள்ளனர் என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு, சகோதரிகளின் உறவினை நுட்பமாகக் காட்டும் தமிழகப் பெண் எழுத்தாளர் ஆர். சூடாமணியின் (ஜனவரி 10, 1931 - செப்ரெம்பர் 13, 2010) 'அந்நியர்கள்' எனும் சிறுகதை குறித்து நோக்கவுள்ளேன்.

ஆணாதிக்க சமூக அமைப்பில் எழும் இலக்கியங்களில், பொதுவாக, கணவன்-மனைவி, தகப்பன்-மகன், அண்ணன்-தம்பி, தந்தை-மகள், அண்ணா-தங்கை, தம்பி-அக்கா உறவுகள் பெற்ற முக்கியத்துவத்தையும், கவனிப்பையும் தாய்-மகள், அக்கா-தங்கை உறவுகள் பெறத்தவறிவிட்டன. தமிழிலே, தாய்வழிச் சமூக எச்சங்களைக் கொண்டிருக்கும் சங்க இலக்கியம் மட்டும் தாய்-மகள் உறவு பற்றிய கவிதைகளைக் கொண்டுள்ளது. இது பற்றி நான் ஏலவே ஒரு கட்டுரை எழுதியுள்ளேன். சங்க இலக்கியத்தில் தலைவிக்கும் செவிலித்தாயின் மகளான தோழிக்கும் இடையிலான உறவு சகோதரியருக்கான உறவினைப் பிரதிபலிப்பதாகக் கட்டமைக்கப்பட்டது எனக் கூறுவாருமுளர். எனினும், அக்கூற்றுப் பரிசீலனைக்குரியது. ஆண்கள் சிருஷ்டித்த உலகில் பெண்கள் இருப்பதால் சகோதரியருக்கிடையிலான உறவு குறித்து இலக்கியம் நவீனகாலம் வரை அதிகம் பேசாதிருந்ததாகலாம். உதாரணமாக, இராமாயணத்தில் இராமனுக்கும் அவனது சகோதரர்களுக்குமிடையே உள்ள உறவு குறித்த ஆழமாக நோக்குண்டு அதே வேளை சீதைக்கும் அவள் சகோதரியர்களான ஊர்மிளை, மாண்டவி, சுருதகீர்த்தி என்பவர்களுக்கிடையிலான உறவு குறித்து மௌனமே நிலவுகிறது.

மகாபாரதத்தில் காசிராஜனின் மகள்களான அம்பை, அம்பிகை, அம்பாலிகை எனும் மூன்று சகோதரியர் பாத்திரங்கள் உண்டு. அம்பை, அம்பிகை, அம்பாலிகை மூன்று சகோதரியர்களையும் பீஷ்மர் தன் சகோதரன் விசித்திரவீரியனுக்காக அவர்களின் சுயம்வரத்தில் கவர்ந்து வரும்போது, அவர்களில் மூத்தவளான அம்பை தான் தன் மனதை சால்வராஜனிடம் பறிகொடுத்து விட்டதாகச் சொன்னதும் பீஷ்மர் அவளை விட்டு விடுகிறார். ஆனால் அம்பையை சால்வராஜன் ஏற்க மறுக்கிறான். அவள் பீஷ்மரைத் தன்னை மணந்து கொள்ளுமாறு வேண்ட அவரும் மறுத்துவிடுகிறார். அவள் தனது அடுத்த பிறப்பில் துருபதனுக்கு மகளாகப் பிறந்து, பின்னர் ஆணாகி (சிகண்டியாகி) பாரதப்போரில் பீஷ்மரைக் கொல்கிறாள். இவர்களுள் அம்பிகையும் அம்பாலிகையும் விசித்திரவீரியனை மணந்து, பின்னர் அவன் இறக்க, தங்கணவனின் சிற்றன்னையான சத்தியவதியின் கட்டளைப் பிரகாரம், அவளுக்கும் பராசரமுனிவருக்கும் பிறந்த வியாசர் மூலமாகப் பாண்டு, திருதராட்டினன் எனும் புதல்வர்களை முறையே பெற்றுக் கொள்கின்றனர். புலமை எழுத்திலும், இலக்கிய எழுத்திலும் இந்த மூன்று சகோதரியர்களுக்கும், அவர்கள் வாழ்க்கையிற் குறுக்கிட்ட வியாசர், பீஷ்மர் எனும் ஆண்களுக்கிடையிலான உறவுகள்தாம் முதன்மைப்படுத்தப்பட்டனவே தவிர, சகோதரியர்களுக்கிடையேயான உறவு பெரிதும் பேசாப்பொருளாகவே இருந்து வந்துள்ளது. சகோதரியர் பற்றி இந்திய இலக்கியம் பேசினும், அது ஆணை மையமாகக் கொண்டு அமைந்துவிடக் காணலாம். உதாரணமாக, இரவீந்திரநாத் தாகூரின் Gardener எனும் தொகுப்பிலுள்ள கவிதை ஒன்றை எடுத்துக் காட்டாகக் காட்டலாம்.

சகோதரிகள் இருவரும் தண்ணீர் எடுக்கச் செல்லும்போது, இவ்விடத்திற்கு வருகின்றனர், புன்னகைக்கின்றனர். தாம் தண்ணீர் எடுக்கச் செல்லும் போதெல்லாம் மரங்களுக்குப்

பின்னால் யாரோ நிற்பதை அவர்கள் அறிந்திருக்க வேண் டும். சகோதரிகள் இருவரும் இவ்விடத்தைக் கடக்கும்போது ஒருவருக்கொருவர் கிசுகிசுக்கின்றனர். தாம் தண்ணீர் எடுக் கச்செல்லும் போதெல் லாம் மரங்களுக்குப் பின்னால் நிற் கும் அந்த ஒருவரின் இரகசியத்தை அவர்கள் ஊகித்திருக்க வேண்டும்

சகோதரிகள் இருவரும் அவ்விடத்தை நெருங்கும்போது அவர்களின் குடங்கள் திடீரென குலுங்குகின்றன, தண்ணீர் சிந்துகிறது தாம் தண்ணீர் எடுக்கச் செல்லும் போதெல்லாம் மரங்களுக்குப் பின்னால் யாரோ ஒருவரின் இதயம் துடிப்



பதை அவர்கள் கண்டுபிடித்திருக்க வேண்டும்

இக்கவிதையைப் பெண்ணிய நோக்கில் ஆராயும்போது அது male gaze (ஆண்பார்வை) பற்றியதாக அமைந்திருக்கக் காணலாம். பதின்ம வயதுச் சகோதரியருக்கிடையே சூழல் குறித்த பிரக்ஞை, பரஸ்பர நம்பிக்கை, ஒற்றுமையுடன் உலகை எதிர்கொள்ளும் பாங்கு என்பன நிலவுவதை இக்கவிதை உணர்த்துகிறது. இது திருமணத்திற்கு முந்தைய நிலையில் சகோதரியரிடையே பொதுவாக அவதானிக்கப்படக் கூடிய தொன்று என்று கூறலாம். அதிக அனுபவமற்ற காலத்தில் உலகினை ஒரேவிதமாக அணுக முடிந்த சகோதரியருக்குத் திருமணத்தின் பின்னர் அது சாத்தியமாவதில்லை. பாசத் தால் பிணைக்கப்பட்டிருப்பினும், கால ஓட்டத்தில் வெவ் வேறு வாழ்வியல் அனுபவங்களினால் அவர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள முடியாத தனிநபர்களாக, ஒரு கொடி யில் மலர்ந்த இரு 'வேறு' மலர்களாகி விடுகின்றனர் என்ப தைச் சூடாமணியின் 'அந்நியர்கள்' எனும் கதை காட்டுகிறது. 1984-ல் அசோகமித்திரன் தொகுத்து வெளியிட்ட புதிய தமிழ்ச் சிறுகதைகள் எனும் தொகுப்பில் இக்கதை காணப்ப டுகிறது. 'ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதுக்குப் பின் தமிழ்ச் சிறுகதை இலக்கியத்திற்கு வளமூட்டிய படைப்புக ளும் படைப்பாளிகளும் கொண்ட தொகுப்பு ஒன்றை அளிக் கும் முயற்சி இது' என்று தனது முன்னுரையில் அசோகமித்தி-ரன் குறிப்பிடுகிறார். இந்நூலை projectmadurai.org எனும் இணையத்தளத்தில் வாசிக்கலாம்.

சூடாமணி 1950, 1960, 1970-களில் பிரபல்யமாக விளங்கிய பெண் எழுத்தாளர். பெண்கள் காலனித்துவ கல்வித்திட்டத் திற்குள் உள்வாங்கப்பட்டமையும், சிறுகதை, நாவல் போன்ற மேனாட்டுப் புத்திலக்கிய வடிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட மையும், கல்கி, விகடன், கலைமகள் முதலான சஞ்சிகைக ளில் அவை வெளிவந்தமையும், பொதுசன வாசிப்புப்பழக்க மும் பெண்களைப் புனைவில் ஆர்வத்துடன் ஈடுபடவைத்தன. குடும்ப இதழாக மலர்ச்சியுற்ற கலைமகள் மூலமாகப் புகழ் பெற்ற பெண் எழுத்தாளர்களில் சூடாமணியும் ஒருவர். மென் மையான உணர்வுகளைக் கையாள்வதில் வல்லவர். மனித உளவியல் வேறுபாடுகளையும், சிக்கல்களையும் அழகியல்ரீ தியாக வெளிப்படுத்தவல்ல திறன் கொண்டவர். சூடாமணி யின் எழுத்துக் குறித்து வெவ்வேறு விமர்சனப்பார்வைகள் உண்டு. இக்கட்டுரையில் அவை பற்றிக் குறிப்பிட வேண்டிய தேவையில்லை. மேலும் இலக்கிய வாசகர்கள், எழுத்தாளர் ஒருவரின் எழுத்துக் குறித்த மதிப்புகளைத் தாமே உருவாக்க வேண்டும். பிறர் கூறியவற்றைத் திரும்பத் திரும்பச் சொல்வ தில் பயனில்லை.

சூடாமணியின் 'அந்நியர்கள்' எனும் இக்கதை, காலத்தின் தவிர்க்க முடியாத மாற்றங்களின் பின்னணியில் இருசகோதரி யரின் உறவின் சிக்கல்களை ஆராய்கிறது. நிலையான உற வுக்கும், அதில் காலம் கொணரும் மாற்றங்களுக்கும் இடையி லான பதற்றமே (tension) கதையின் மையக் கரு. பல ஆண்டு களுக்குப் பின்னர் சந்தித்துக் கொள்ளும் திருமணமான இரண்டு சகோதரிகள் குழந்தைப் பருவ நினைவுகளில் திளைக்கிறார்கள். இரத்தச்சோகை நோயால் பாதிப்புற்ற இளையசகோதரியின் உடல் மூத்தசகோதரியின் கவனிப்பில் தேறுகிறது. எனினும் அவர்களுக்கிடையிலான உரையாடல் கள் நீண்ட கால இடைவெளியில் அவர்கள் தமக்கெனத் தனி அடையாளம் கொண்ட நபர்களாகப் பரிணாமம் பெற்றிருப் பதை உணர்த்துகின்றன. இது அவர்களுக்கிடையே ஒரு ஜாக் கிரதை உணர்வை, மற்றவர் மனதைக் காயப்படுத்தாத எச்ச ரிக்கை உணர்வை ஏற்படுத்துகிறது. ஒரே கூரையின் கீழ் பிறந்து வளர்ந்தவர்களாயினும், பாசப்பிணைப்பில் நெகிழ்ச்சி சிறிதும் இல்லாவிடினும், காலமாற்றங்களும், சொந்த அனுப வங்களும் அவர்களை ஒருவருக்கொருவர் அந்நியர்களாய் உணரவைக்கிறது.

கதைசொல்லியின் விவரணம், சகோதரிகளுக்கிடையில் நிக மும் உரையாடல்கள் என கதையெடுத்துரைப்பு முறை மாறி மாறிச் செல்கிறது. கதைசொல்லி நீண்டகாலத்துக்குப் பின்னர் சந்தித்துக்கொள்ளும் சகோதரிகளின் மனவெழுச்சிகளையும், அன்பின் ஆழத்தையும் காண்பிப்பதில் அதிக ஆர்வம் கொண்டவராக இருக்கிறார். ஆனால் இறுதியில் சகோதரியர் இருவரினதும் பிரிவு பற்றிப் பேசும்போது 'அவர்கள் கைகளைப் பிடித்துக் கொண்டனர், ஆனால் ஒருவருக்கொருவர் பார்க்கவில்லை' என்கிறார். நேசம் மறக்கவில்லை எனினும் அவர்களின் நேசத்தையும், பாசத்தையும் மீறி, நுண்ணிய அந்நியத்துவம் அவர்கள் உறவில் குடிபுகுந்துள்ளது என்பதை இது புலப்படுத்துகிறது.



இந்தக் கதையில், கதைசொல்லியின் விவரணம், உரையாடல்கள் இரண்டுமே முக்கியமானவை. உரையாடல்கள் சகோதரியருக்கிடையே உள்ள கருத்து வேறுபாடுகளை உணர்த்துபவை. இவர்களுக்கிடையிலான கருத்து வேறுபாடுகளுக்குப் பிரதான காரணமாக அமைவது இவர்கள் வாழும் நகரங்களாகும். இருவருமே படித்த, ஆங்கில அறிவுடைய நடுத்தரவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் ஆனால் இந்தியாவின் இரு வேறு பெரு நகரங்களில் வாழ்பவர்கள். அக்கா ஸவிதா சென்னைவாசி என்பதை சென்ட்ரல் புகையிரத நிலையத்தில் தங்கை ஸௌம்யா வந்திறங்குவது, பின்னர் கஸ்தூரிபா நகர் நோக்கி சகோதரியர் இருவரும் பயணிப்பது என்பன மூலமாக வாசகர்கள் அறிந்து கொள்கின்றனர். கதையோட்டத்தில் தங்கை ஸௌம்யா வாழும் நகரான பம்பாய் கதையில் நான்கு இடங்களில் குறிப்பிடப்படுகிறது. சூடாமணியின் ஏனைய கதைகள் போலவே இங்கும் புறவுலக வர்ணனை குறைவு; அகவுலகமே முதன்மைப்படுத்தப்படுகிறது.

இந்தியாவின் நிதித் தலைநகரும், பொலிவூட் எனும் திரையுலகினதும், கேளிக்கைக் கலைகளினதும் உறைவிடமாக விளங்குவதுமான பம்பாயில் பல்லின மக்களும், பன்மொழி பேசுவோரும் வாழ்கின்றனர். ஒப்பீட்டளவில் சென்னையினும் பார்க்க மேலைத் தேயக்கலாசாரத்தின் தாக்கங்களுக்கு உள்ளானது பம்பாய். ஆனால் அங்கு வாழும் ஸௌமியாவை தான் பிறந்த வீட்டுப் பண்பாட்டை இன்னும் பாதுகாக்கும், பாரம்பரிய மதிப்பீடுகள், விழுமியங்களை இன்னுமும் பற்றிக் கொண்டிருக்கும் பெண்ணாகச் சூடாமணி காட்டுகின்றார். ஆனால் பொதுவான எதிர்பார்ப்புக்கு மாறாக, சென்னைவாசியான ஸவிதா ஒப்பீட்டளவில் திறந்த மனதுடையவளாகச் சித்திரிக்கப்பட்டுள்ளாள். எனினும், மூத்தவள் என்ற ஸ்தானமும், விருந்தாளியான தங்கையைக் கவனிக்கும் பொறுப்பும் எவ்வாறு இவள் பேச்சிலும், செயலிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்றும் பார்க்கலாம்.

கதைசொல்லி வாசகருக்கும், கதாபாத்திரங்களுக்குமிடையிலான ஒரு பாலமாகச் செயற்படுகிறார். சகோதரிகளுக்கிடையிலான உரையாடல்கள் மூலம் வெளிப்படுத்தப்படாத எண்ணங்கள், உணர்ச்சிகள், பதற்றங்கள் என்பவற்றை அவரே அறிவிப்பவராக விளங்குகிறார். சகோதரியர் உறவு குறித்த இலட்சிய மயப்பட்ட பார்வை கதைசொல்லிக்கு இருப்பதாக ஆரம்பத்திலே தெரிகிறது. மிக உற்சாகமான தொனியில் அவர்களின் சந்திப்பை விவரிப்பதிலிருந்து அது புலனாகிறது. ஆனால் அவர் இறுதியில் சகோதரிகளின் உறவின் சிக்கல்களை எதிர்கொள்பவராக இருக்கிறார். கதைசொல்லியின் சகோதரியர் உறவு குறித்த வேறுபட்ட மனவோட்டங்களும், புரிதல்களும் வாசகர் பயணத்தை நிகர்த்திருக்கிறது. கதையின் ஆரம்பகட்டங்களில், சகோதரியர்களுக்கிடையே உள்ள பாசப்பிணைப்பினை அவரின் விவரணம் மூலமே அறிந்து கொள்கிறோம். நீண்டகாலத்துக்குப் பின்னர் அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டது பற்றி இவ்வாறு கூறுகிறார்

இரண்டு நிமிஷங்கள் வரையில் மௌனமுகங்களாய்ச் சகோதரிகள் எதிரெதிரே நின்றார்கள் பேச்சுக்கு அவசியமற்ற அர்த்தமயமான, இதயமயமான நிமிஷங்கள். சாமான்களுடன் சென்ட்ரல் ரெயில் நிலையத்திலிருந்து வெளிவந்து டாக்சியில் ஏறிக் கஸ்தூரிபா நகர் வந்து சேரும் வரை பரஸ்பரம், 'எப்படியிருக்கே ? உங்காத்துக்காரர், குழந்தைகளெல்லாம் சௌக்கியமா ?' என்பதற்குமேல் உரையாடவே இல்லை. டாக்ஸியில் அவ்வளவு இடம் இருந்தபோது தம்மையறியாமல் நெருக்கமாய் ஒட்டி உட்கார்ந்த செயல் ஒன்றே எல்லாமாய்ப் பொலிந்தது.

வீட்டுக்குப் போனபின்னர் அவர்கள் பேசிக்கொண்டது பற்றி வர்ணிக்கும்போது, அவர்களின் அன்புப் பிணைப்பிற்கு, நீரிற்கு வெளியே சிறுபகுதியை மட்டும் காட்டி, நீரினுள்ளே தன்னைப் பெருமளவில் மறைத்துக் கொள்ளும் பனிக்கட்டியை உவமையாகக் கூறுகிறார் ‘பேச்சு என்றால் அதில் தொடர்ச்சி கிடையாது. அல்லது, அத்தொடர்ச்சி தனி வகைப்பட்டது’. ஒருநாள் பேசியிருந்த விஷயத்தைப் பற்றி அடுத்த நாளோ மூன்றாம் நாளோ வேறொரு சந்தர்ப்பத்தினிடையே திடீரென்று, ‘அதுக்காகத்தான் நான் சொல்றேன்’. என்றுதொடரும்போது இழைகள் இயல்பாய்க் கலந்துகொள்ளும். அவர்களுக்குத் தொடர்ச்சி விளங்கிவிடும். மேலே தெரியும் சிறு பகுதியைவிடப் பன்மடங்கு பெரிய அளவு நீரின் கீழே மறைந்திருக்கும் பனிப்பாறையைப் போல் இருந்தது உடன்பிறப்பின் பந்தம் வெளியே தலை நீட்டும் சிறு தெறிப்புகளுக்கு ஆதாரமாய் அடியில் பிரம்மாண்டமான புரிந்து கொள்ளல்.

தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட தாகூரின் கவிதையில் காணப்படும் திருமணத்திற்கு முந்திய இளம்பருவ வாழ்க்கை இச்சகோதரியருக்குப் பொதுவானது. சில பழக்க வழக்கங்களும் அவர்கள் இருவருக்கும் பொதுவானவை. இவை பற்றிய விவரிப்புகள் மூலமாக திருமணத்திற்கு முந்தைய வாழ்க்கை குறித்த ஓர் ஏக்கத்தைக் கதைசொல்லி பதிவிடுகிறார்

மற்றவர்களுக்கு உறைப்புச் சமையலைப் பரிமாறிவிட்டுத் தானும் தங்கையும் மட்டும் காரமில்லாத சாம்பாரை உட்கொள்ளும்போது அந்த ஒத்த ருசி இன்னும் ஆழ்ந்த ஒற்றுமைகளின் சிறு அடையாளமாய்த் தோன்றியது. அவ்விருவருக்கும் காபியில் ஒரே அளவு இனிப்பு வேண்டும். இருவருக்கும் அகலக் கரை போட்ட புடைவைதான் பிடிக்கும். மாலை உலாவலைவிட விடியற்காலையில் நடந்துவிட்டு வருவதில்தான் இருவருக்கும் அதிக இஷ்டம். உறக்கத்தினிடை இரவு இரண்டு மணிக்குச் சிறிது நேரம் கண்விழித்து நீர் அருந்திவிட்டு, மறுபடி தூங்கப் போகும் வழக்கம் இருவருக்கும் பொது. இப்படி எத்தனையோ! ஒரே வேரில் பிறந்த சின்னச் சின்ன இணக்கங்கள். ஒவ்வொன்றுமே ஒவ்வோர் இனிமை. ஸவிதா நாற்பது வயதாகப் போகிறது. ஸௌம்யா அவளைவிட மூன்றரை வயது இளையவள். ஆனால், அந்த இனிமைக்குச் சிரஞ்சீவி யௌவனம். ஏனென்றால், அவர்கள் இருவரும் ஒன்று.

பழைய வழக்கங்களை இப்பொழுது இருவருமாகச் சேர்ந்து செய்வதில் இருவருமே மகிழ்ச்சி கொள்கிறார்கள். பிறந்தகத்துப் பழக்கமான தயிரில் ஊறவைத்துச் சர்க்கரை சேர்த்த வற்றலை ஸ்பூனால் எடுத்துத் தங்கையுடன் சாப்பிடுதல் அக்கா ஸவிதாவுக்குப் பிடித்திருக்கிறது. இந்த வற்றலைச் சாப்பிடத் தனது குடும்பத்தினர்க்கு விருப்பமில்லை. ஆனால் தனக்குச் சோடியாகச் சாப்பிடத் தங்கை வந்து விட்டாள் என ஸவிதா அகமகிழ்கிறாள். இது பெண் தனிப்பட்ட ஆசைகளைக் கணவனுடனோ, பிள்ளைகளோடோ எப்பொழுதும் பகிர்ந்து கொள்ள முடியாத நிலையைக் காட்டுகிறது. அதேபோன்று, சிறுமிகளாக இருக்கும்போது பெரியவர்களுக்குப் புரியாமல் தமக்குள் பேசிக்கொள்ள அவர்கள் இருவரும் உருவாக்கிய இரகசிய மொழியை தன் கணவனுக்கு முன்னிலையில் தங்கை ஸௌம்யா பயன்படுத்தியபோது தங்களுக்கிடையிடலான ஒருமை மீண்டும் வலியுறுத்தப்படுவதுபோல் ஸவிதாவுக்குத் தோன்றுகிறது. சகோதரிகள் புன்சிரிப்போடு ஒருவரையொருவர் பார்த்துக் கண்ணைச் சிமிட்டுகிறார்கள். குதூகலமாகத் தொடங்கிய அவர்களின் சந்திப்புப் பற்றியும், ஒன்றாக அவர்கள் இருவரும் வாழத்தொடங்கிய நாட்களின் இனிமை பற்றியும் கதைசொல்லி இவ்வாறு கூறுவார்.

‘இத்தனை வருஷம் ஆனாப்பலேயே தோணலே. ஸவி தலை கொஞ்சம் நரைக்க ஆரம்பிச்சிருக்கு. வேறெதும் வித்தியாசமில்லே’ என்றாள் (ஸௌம்யா). நரை! ஸவிதா லேசாய்ச் சிரித்துக் கொண்டாள். ‘காலம் செய்யக்கூடியதெல்லாம் அவ்வளவு தான். பாவம் வருஷங்கள்!’ என்று சொல்வதுபோல் இருந்தது. அந்தச் சிரிப்பு. பிரிந்திருந்த காலமெல்லாம் இந்தச் சந்திப்பில் ரத்தாகிவிட்டது. பரஸ்பரம் பாசமுள்ளவர்கள் எத்தனை ஆண்டுகளுக்குப் பின் ஒன்று சேர்ந்தாலும் எவ்வளவு எளிதாய்த் தொடர்ச்சியை மேற்கொண்டுவிட முடிகிறது! ஸௌம்யா சொன்னதுபோல், இத்தனை வருஷங்கள் ஆனதாகவே தெரியவில்லை. மனத்தளவில் அவர்களுள் வித்தியாசம் ஏது? எனவே பதினோரு ஆண்டுகளின் இடைவெளி கணப்பொழுதில் தூர்ந்து விட்டது. பிரிவே இல்லாமல் எப்போதும் இப்படியே தாங்கள் இருவரும் ஒன்றாய் வாழ்ந்து கொண்டிருந்தது போலவே தோன்றியது’.

எனினும், சிறிது சிறிதாக அவர்களிடையே கருத்து வேற்றுமைகள் வெளிப்படுகின்றன. அவை இரண்டு பேரையுமே சங்கடத்தில் ஆழ்த்துகின்றன. அவர்களுக்குள் ஓர் எச்சரிக்கை உணர்வை ஏற்படுத்துகிறது. கதைசொல்லி அவர்களின் அன்பின் ஆழத்தைக் காட்ட விரும்பினாலும், உரையாடல்கள் அவர்களின் உறவில் உள்ள சிக்கல்களையும் முரண்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றன. கதைசொல்லியின் இலட்சியச் சித்திரிப்பிற்கு முரணான வகையில் உரையாடல்கள் அமைகின்றன.

சென்னைவாசியான அக்கா ஸவிதா தன் மகன் ராஜுவைக் காலேஜில் இரவு பார்ட்டியின் பின்னர் அங்கேயே தங்கி விட்டு அடுத்தநாள் மாலை வீட்டுக்கு வருவதை அனுமதிக்கிறாள். பம்பாய்வாசியான தங்கை ஸௌம்யாவுக்கு இது சரியாகப் படவில்லை. திரைப்படங்களில் ஆபாசக் காட்சிகள் குறித்த கடும் விமர்சனத்தைத் தங்கை முன்வைக்கும்போது திரைப்படங்களிலிருந்து கதை முதலான நல்ல விஷயங்களை மட்டும் ரசிப்போமே என அக்கா ஆலோசனை சொல்கிறாள். தங்கை ‘நம்மைச் சுத்தி எங்கே பார்த்தாலும் ஆபாசமும் பயங்கரமும் இருக்கறதனால எழுத்திலேயாவது நல்லதையும் தூய்மையையும் காட்ட வேண்டும்’ எனும் இலட்சியத்துடன் எழுதும் கதைகளை, அக்கா நவீன ஃபேரி டேல்ஸ் (fairy tales) என்று அக்கா ஒதுக்கிவிடுகிறாள். மேலும், தங்கைக்குப் பிடித்த நூலை அக்கா ‘எவ்விதமான இலக்கியத் தரமோ மானிட ரீதியான வெளிச்சமோ இல்லாத வெறும் மஞ்சள் குப்பை’ என்று எண்ணுகிறாள். வறியவர்க்கு யார் உதவ வேண்டும் என்பதிலும் இருவருக்குமிடையில் கருத்து வேற்றுமை. அக்கா தனிநபர்கள் உதவுதல் வேண்டும் என்ற கருத்துடையவள். ஆனால் தங்கை ‘இதெல்லாம் பெரிய பெரிய நிறுவன அடிப்படையில் சமாளிக்க வேண்டிய பிரச்சினை. தனி மனுஷா உதவியில் என்ன ஆகும்? நம்ம நாட்டில்

வறுமை ஒரு அடியில்லாத பள்ளம். அதில் எத்தனை போட்டாலும் நிரம்பாது. அதனால், போட்டு என்ன பிரயோசனம்?' என்று கூறிவிடுகிறாள். 'அடியில்லாத பள்ளந்தான். போட்டு நிரம்பாதுதான். அதனால் போட்டவரைக்கும் பிரயோசனம்' என்று அக்கா வாதிடுகிறாள். பெற்றோரை நினைவுகூர ஞாபகச்சின்னங்கள் தேவையில்லை என்பது தங்கை கருத்து. பம்பாய்வாசியான அவள் அதை ஆசைப்பட்ட பெண்ணுக்குக் கல்யாணப்பரிசாகக் கொடுத்து விட்டாள். அக்காவுக்கு அந்த சின்னங்கள் முக்கியமானவை. பெற்றோர் தந்த 'கட் கிளாஸ் ஜாடியை' பொக்கிஷம் போல் பாதுகாக்கிறாள். தன் குழந்தைகள் அதனை உடைத்து விடுவார்களோ என்று எண்ணி அவர்களைக் கண்டிக்கிறாள்.

இத்தகைய வாதங்கள் அவர்களிடையே மனக்கசப்பினை ஏற்படுத்துகின்றன. ஆனால் அவை நீடிக்க அவர்கள் விடுவதில்லை. ராஜூவை வெளியில் தங்க அனுமதிக்கலாமா என்பது குறித்த வாதத்தின் பின்னர், அக்கா கையை நீட்டித் தங்கையின் கையை மெல்லப் பற்றி அமுக்கிறாள். 'இதைப் பற்றிக் கவலைப்படாதே ஸௌமி. அடிபட்டுக்காமல் யாரும் வளர முடியாது. குழந்தைகளைப் பொத்திப் பொத்தி வைச்சுக்க முடியுமா? முதல்லே, அவ அதை ஏத்துப்பாளா? சொல்லு' என்று கூறிவிட்டுத் ஹிந்தித் திரைப்படம் ஒன்றைப் பார்க்கலாமா என்று கேட்டு அதற்கு அழைத்துச் செல்கிறாள். திரைப்படம் பார்த்த பின்னர் வரும் விவாதம் ஓயத் தங்கை தன் கதைகளை அக்காவுக்குக் காட்டுகிறாள். அக்காவும் வாசித்து விட்டு ரொம்ப அருமையாய் எழுதியிருக்கே ஸௌமி! நீ காலேஜில் இங்கிலீஷ்லே மெடலிஸ்ட்னு ஒவ்வொரு வரியும் சொல்றது. அற்புதமான நடை. என்று பாராட்டுகிறாள்.

ஆனால் தன் கதைகள். ஃபேரி டேல்ஸ் தான் என்ற அக்காவின் விமர்சனத்தைத் தங்கை ஏற்றுக் கொள்ளவில்லை. 'நம்மைச் சுத்தி எங்கே பார்த்தாலும் ஆபாசமும் பயங்கரமும் இருக்கறதனால எழுத்திலேயாவது நல்லதையும் தூய்மையையும் காட்டணுங்கிறது என் லட்சியம். என்று தங்கை சொல்கிறாள். இவர்கள் நடுவில் ஒரு திரை விழுந்து விடுகிறது. இருவரும் பேசாதிருக்கிறார்கள். அந்த மௌனம் அக்காவை உறுத்துகிறது. மறுநாள் அதிகாலை ஐந்து மணிக்கு வழக்கம்போல் தங்கையுடன் அடையாறு பாலம் வரை நடந்து உலாவிவிட்டு வந்த பிறகுதான் அந்த உறுத்தல் மறைகிறது. அப்பாடா! எல்லாம் முன்புபோல ஆகிவிட்டது. என்று நிம்மதி அடைகிறாள். அதே போன்று தங்கையும் கருத்து முரண்பாடுகளின் பின்னர் அக்காவுடன் சமாதானமாகப் போக முயற்சிக்கிறாள். பெற்றோர் கொடுத்த கட்கிளாஸ் ஜாடியை எவ்வாறு தங்கை இன்னொருவருக்குப் பரிசாகக் கொடுக்கலாம் என்பது அக்காவுக்கு விளங்கவில்லை. அப்பா அம்மாவை நினைவு வச்சுக்க நினைவுச் சின்னங்கள் வேணுமா என்ன? என்று தங்கை கேட்கிறாள். மீண்டும் கத்தி முனையில் விநாடி இடறியது. சகோதரிகள் ஒருவரையொருவர் தீவிரமாய் வெறித்தார்கள். பார்வையில் குழப்பம். என்று கதைசொல்லி இடையில் புகுந்து இந்நிகழ்ச்சியைக் காட்சிப்படுத்த முயல்கிறார். இறுதியில் தங்கை அக்காவுடன் சமரசம் செய்ய முனைகிறாள் 'நான்போய் நமக்குக் காபி கலக்கிறேன் ஸவி. ஜாடியை ஜாக்கிரதையாய் வச்சுட்டு வா. பின்னர் இருவரும் ஒரே அளவு இனிப்புச் சேர்த்த காபியைப் பருகுகிறார்கள். நழுவிப்போகும் ஒன்றை இழுத்துப் பிடித்துக்கொள்ளும் செயலாய் அது இருந்தது' கதை சொல்லி வியாக்கியானம் செய்கிறார். இந்த விவாதங்களின் முடிவில் தங்கை வந்து நின்ற மூன்று மாதமும் முடியப்போகின்றன. ஆனால் ஒருவரை ஒருவர் காயப்படுத்தக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வும் கூடவே வந்து விடுகிறது. கதைசொல்லி வாயிலாக அதைப் பார்ப்போம்.

அதற்குள்ளாகவா இரு மாதங்கள் முடியப்போகின்றன? அந்த ஏக்கம் இருவர் பார்வையிலும் தெரிந்தது. அடிக்கடி ஒருத்தி தோழமையை மற்றவள் நாடிவந்து உட்கார்ந்துகொள்வதிலும் 'இது அவளுக்குப் பிடிக்கும்' என்று பார்த்துப் பார்த்துச் செய்வதிலும், 'அடுத்த சந்திப்பு எப்போதோ?' என்ற தாபம் தொனித்தது. எனினும். இப்போதெல்லாம் பேச்சில் ஒரு கவன உணர்வு. சிரித்துக்கொண்டே அரட்டையடிக்கும்போது, பழைய நினைவுகளையோ இத்தனை வருஷக் கதைகளையோ பகிர்ந்து மகிழும்போது, சட்டென்று எழும்பிவிடக் கூடிய சுருதி பேதத்தைத் தவிர்க்க முனைந்து கொண்டே இருக்கும் ஒரு ஜாக்கிரதை. விளிம்புக்கு இப்பாலேயே இருக்க வேண்டுகிற கவலையில் நிழலாடும் ஒரு தயக்கம்.

ஆனால், தங்கையால் ஜீரணிக்க முடியாத நிகழ்ச்சி ஒன்று அவள் பம்பாய் புறப்படும் நாளில் நிகழ்கிறது. அது அவளால் ஒருபோதும் சமரசம் செய்யப்படமுடியாத விடயம், ஆனால் அக்காளுக்கோ அது ஒரு விடயமே இல்லை. அது அவர்கள் பிறந்தக வளர்ப்புடன் தொடர்புடையது. தாயுடன் இருக்குமட்டும் அதனைத் தினமும் தவறாது செய்து வந்தார்கள். இறைவழிபாட்டை அக்கா கைவிட்டமை தங்கைக்குப் பேரதிர்ச்சியைத் தருகிறது. கதையில் உச்சம் தொட்ட அந்த உரையாடலைக் கீழே தருகிறேன்.

நீயும் ஸ்டேஷனுக்கு வரயோன்னோ ஸவி? ஆவலுக்கு ஆவல் பதிலளித்தது. கட்டாயம்.

எப்போ எந்த ஊருக்குக் கிளம்பறதுக்கு முந்தியும் சுவாமிக்கு நமஸ்காரம் பண்றது என் வழக்கம்.

ஸவிதா மௌனமாய் இருந்தாள். ஸௌம்யாவின் கண்களில் கலக்கம் தெரிந்தது. ஆனா இங்கே பூஜை அறையே இல்லையே? என்றாள் தொடர்ந்து.

இல்லாட்டா என்ன? மனசிலேயே வேண்டிக்கோயேன். நம்பிக்கை இருந்தால் அது போதாதா?

நம்பிக்கை இருந்தால்னா? உன் நம்பிக்கை அந்த மாதிரின்னு சொல்றயா? திடீரென்று ஸௌம்யாவின் முகம் மாறியது. அல்லது உனக்கு நம்பிக்கையே இல்லைன்னு அர்த்தமா?

நான்... நான் அதைப்பத்தி ஏதும் யோசிச்சுப் பார்த்தது கிடையாது. ஸவிதாவுக்கு சங்கடம் மேலோங்கியது. இப்போ எதுக்கு விவாதம் ஸௌமி, ஊருக்குக் கிளம்பற சமயத்திலே?

என்ன ஸவி இது! இவ்வளவு பெரிய விஷயத்தைப் பத்தி உனக்கு ஏதும் தீர்மானமான அபிப்ராயம் இல்லையா?

இதை ஒரு பெரிய விஷயம்னு நான் நினைக்கலே. ஸௌம்யாவின் கண்கள் அதிர்ச்சியில் பிதுங்கின. அவர்களுடைய சிறுமிப் பருவத்தின் சூழ்நிலை எத்தனை பக்திமயமானது! அம்மா அன்றாடம் பூஜை செய்வாள். சாயங்காலமானால், 'போய்ச் சுவாமி அறையிலும் துளசி மாடத்திலும் விளக்கு ஏத்துங்கோடி' என்று பணிப்பாள். அவர்களை வெள்ளிக்கிழமை தவறாமல் கோயிலுக்கு அழைத்துப் போவாள். தோத்திரங்களெல்லாம் சொல்லிக் கொடுப்பாள். 'வாழ்க்கையில் எந்தக் கஷ்டத்திலும் துணை இருக்கிறது ஆண்டவன் பெயர் ஒண்ணுதான்' என்று போதிப்பாள். தான் அந்த வழியிலேயே நடந்து வந்திருக்க, இவளுக்கு மட்டும் என்ன ஆயிற்று? 'தெய்வ நம்பிக்கையை இழக்கற மாதிரி உனக்கு அப்படி என்ன அனுபவம் ஏற்பட்டது ஸவி?'

அந்த நம்பிக்கை இழந்துட்டேனா இல்லையான்னு எனக்கே நிச்சயமாய்த் தெரியாது. ஆனா, அனுபவம்னு நமக்கே ஏற்பட்டால்தானா? கண்ணும் காதும் மனசும் திறந்துதானே இருக்கு? போகட்டும், உலகத்தின் பிரச்சினைகளையெல்லாம் பார்க்கறபோது இந்த விஷயம் ஒரு தலைபோகிற பிரச்சினையாய் எனக்குத் தோணலேன்னு வச்சுக்கோயேன்.

எத்தனை அலட்சியமாய்ச் சொல்லிட்டே? ஆனா நான், தெய்வத்தை நம்பலேன்னா என்னால் உயிரோடயே இருக்க முடியாது.

இந்த உரையாடலின் பின்னர் சகோதரிகளின் எண்ணவோட்டங்களைக் கதைசொல்லி பதிவிடுகிறார். ஒரே மாதிரியான வளர்ப்பு, ஆழமான அன்பு பாசம் என்பன இருப்பினும், சகோதரிகள் இருவரும் தனிநபர்கள், காலப்போக்கில் தமக்கெனச் சொந்த அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொண்டவர்கள், அதனால் ஒருவருக்கொருவர் அந்நியமாகிப் போனவர்கள் என்று குறிப்பிட்டு, சகோதரிகளின் நிலையை மனித குலத்துக்குப் பொதுமைப்படுத்தி, நாம் எல்லோருமே அந்நியர்களைத்தான் அன்பு செய்கின்றோம் என்று கதையை நிறைவு செய்கிறார்.

பார்வைகள் எதிரெதிராய் நின்றன. அவற்றில் பதைப்பு, மருள். ஸௌம்யாவின் அதிர்ச்சி இன்னும் மாறவில்லை. தமக்கையைப் பார்த்த அவள் பார்வை 'இவள் யார்?' என்று வியந்தது. பிறகு கண்கள் விலகின. ஸவிதா தவிப்பும் வேதனையுமாய் நின்றாள். என்ன சொல்வதென்று தெரியவில்லை. எதைச் சொன்னாலும் அர்த்தம் இருக்கும் போலவும் தோன்றவில்லை. ஒன்றாய்ப் பிறந்து வளர்ந்தவர்கள்தான். ஒரே மரபினாலும் ஒரே வகையான பராமரிப்பாலும் உருவானவைதான் அவர்களுடைய எண்ணங்களும், கண்ணோட்டங்களும், மதிப்புகளும்! ஆனால் வளர வளர அவற்றில் எவ்வளவு மாறுபாடு? ஒவ்வொரு மனித உயிரும் ஓர் அலாதியா? அதன் தனிப்பட்ட தன்மையை ஒட்டித்தான் வாழ்க்கை எழுப்பும் எதிரொலிகள் அமைகின்றனவா? ஒருவரையொருவர் தெரியும் புரியும் என்று சொல்வதெல்லாம் எத்தனை அறிவீனம்? எவ்வளவு நெருங்கிய உறவாயிருந்தாலும் ஒவ்வொரு முறையும் ஒவ்வொருத்தரையும் ஒரு புதிய இருப்பாகத்தான் கண்டு அறிமுகம் செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. காலம் கொண்டு வரும் மாற்றம் வெறும் நரை மட்டுமல்ல...

அன்பு... அது அடியிழை, உள்ளுயிர்ப்பு. அது இருப்பதாலேயே, வேறுபாடுகளினால் அழிவு நேர்ந்துவிடாதிருக்கத்தான் அது இருக்கிறது. மன்னிக்கவும். ஹெரால்ட்ராபின்ஸ்! வாழ்நாள் முழுவதும் அந்நியர்களைத்தான் அன்பு செய்து கொண்டிருக்கிறோம். இங்கு ஹெரால்ட் ராபின்ஸ் (Harold Robbins) எனும் பொதுவாசகரிடையே பிரபல்யம் பெற்ற அமெரிக்க எழுத்தாளர் குறிப்பிடப்படுகிறார். அவர் எழுதிய முதல் நாவலின் தலைப்பான Never Love a Stranger என்பதற்குப் பதில் அளிக்கும் விதமாகவே மன்னிக்கவும். ஹெரால்ட்ராபின்ஸ்! வாழ்நாள் முழுவதும் அந்நியர்களைத்தான் அன்பு செய்து கொண்டிருக்கிறோம். என்று கதை சொல்லி கூறுகிறார்.

இதோ வரோம். வா ஸௌமி! ஸவிதா தங்கையின் கையைப் பற்றிக் கொண்டாள். சகோதரிகள் வாசலை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். கைப்பிணைப்பு விலகவில்லை. ஆனால் அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளவில்லை. என்று நிறைவு பெறும் அந்நியர்கள் எனும் இக்கதையை எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் கட்டாயம் வாசிக்கப்பட வேண்டிய நூறு தமிழ்ச்சிறுகதைகளுள் ஒன்றாகச் சேர்த்துள்ளார். ஒரே வீட்டில் பிறந்து வளர்ந்த நேசமும் பாசமும் இன்னமும் சகோதரியரைத் தாலாட்டிக்கொண்டிருக்கின்றன எனினும் எவ்வாறு காலம் அவர்களை மாற்றுகிறது, எவ்வாறு அவர்கள் ஒருவருக்கொருவர் அந்நியர்கள் ஆகிப் போய் விடுகின்றனர் என்பதை இக்கதை தனது யதார்த்தமான, கூர்மையான உரையாடல்கள் மூலம் தெளிவாகக் காட்டுகிறது. ஆனால் இது சகோதரியருக்கு மட்டுமே உரிய நியதியன்று. ஆண் சகோதரர்களுக்குகிடையில், பெற்றோர் - பிள்ளைகளுக்கிடையில், ஏன் கணவன் - மனைவிக்கிடையிலேயே நிகழக்கூடியதொன்று. பொதுமைப்படுத்தக் கூடிய வாழ்வியல் அனுபவமொன்றைச் சிறுகதை வடிவில் தந்து இலக்கியவுலகில் தனக்கெனவோர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார் எழுத்தாளர் சூடாமணி என்று கூறின் அது மிகையன்று.



maithilithayanithy@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***



# தமிழ் எழுத்தில் எழுதப்படாத முதல் தமிழ் நாவல்

- சு. சத்யதேவன்

1879-ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'பிரதாப முதலியார் சரித்திரம்' தமிழின் முதல் நாவல் என்பது தமிழ் இலக்கிய வரற்றில் ஏற்றுக்கொள்ளபட்ட ஒன்றாகிவிட்டது. ஆயினும் தமிழின் முதல் நாவல் என்று வேறு நாவல்களும் அடையாளப்படுத்தப் படுகின்றன. 1856-ல் வெளியிடப்பட்டதாக அறியமுடிகிற 'காவலப்பன்கதை', 1875-ல் வெளியிடப்பட்ட 'ஆதியூர் அவதானி சரிதம்', ஆகியவற்றோடு 'தாமிரப் பட்டணம்' எனும் நாவலும் 'தமிழின் முதல் நாவல்' என அடையாளப்படுத்தப்படுகின்றன. இவற்றுள் காவலப்பன் கதை ஒரு மொழிபெயர்ப்பு நாவல் என்றும், ஹன்னா மூர் என்பார் எழுதிய 'Parley the Porter' என்னும் நாவலின் மொழிபெயர்ப்பான, இந்நாவல் யாழ்ப்பாணத்தில் 1856-ம் ஆண்டில் வெளியிடப்பட்டதாகவும் சில்லையூர் செல்வராசனின் 'ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி' நூலுக்கு எழுதிய முன்னுரையில் மு. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்கள். டாக்டர் போப்பெர்னட் தொகுத்த 'அச்சிட்ட நூல்கள்' (1909), அறிஞர் ந.சி. கந்தையா பிள்ளை தொகுத்த 'தமிழ் இலக்கிய அகராதி' (1952), 'தமிழ் புலவர் அகராதி' (1960) ஆகிய மூன்றையும் தமது கருத்துக்கு அரணாக கொள்ளும் மு.கணபதிப்பிள்ளை, "எனவே தமிழில் முதலாவது நாவல் தோன்றியது எனச் சுட்டிக் குறிப்போர், 'காவலப்பன் கதை'யினை எவ்வகையாலும் தள்ளிவிட முடியாது. 'காவலப்பன் கதை'யே தமிழகத்தில்-ஈழத்தில்-முதன் முதலாகத் தோன்றிய நாவல் எனக் கொள்ளுதல் வேண்டும்." என அம் முன்னுரையில் தெரிவிக்கிறார். ஆயினும் இந்நாவல் தொடர்பில் உறுதியான சான்றுகள் கிடைத்ததாகவோ, விவாதங்கள் நடைபெற்றதாகவோ அறிய முடியவில்லை.

'ஆதியூர் அவதானி சரிதம்' 1875-ம் ஆண்டு வெளியிடப்பட்ட நூலாகும். அம்மானைப் பாடல்களினால் எழுதப்பட்ட இந்நாவல், புரசைவாக்கம் வித்துவான் சேஷையங்கார் எனும் பேராசிரியாரால் எழுதப்பட்டது. SREEDHARA PRESS. MADRAS-இல் அச்சிடப்பட்டது. நாவலின் வாசகப் பரவலை நோக்காகக் கொண்டு அக்காலத்தில் வீரசாசக் கதைகளின் வெகுஜன வழக்காயிருந்த 'ஜனரஞ்சக கவிதை' வடிவில் இதனை எழுதினார் என்பதை, ஆசிரியர் நூலின் ஆங்கில முன்னுரையில் 'The tale is written not in prose after the model of European Novelists, butnin an attractive popular form of verse, which our people are generally fond of.' என குறித்துள்ளதிலிருந்து அறியமுடியகிறது. மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் தோன்றிய நாவல்கள் பலவற்றிற்கு இரட்டைப் பெயர் சூட்டும் வழக்கத்திற்கமைய, இந்நூலுக்கும் ஆங்கிலத்தில் 'ATHIYUR AVADHANI OR THE SELF – MADE MAN' என இரட்டைப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 'An Original Tamil Novel' என்று ஆங்கிலத்திலும் 'நவீனமாகவியற்றிய கட்டுரைக் கதை' எனத் தமிழிலும் ஆசிரியரே குறிப்பிட்டுள்ளதிலிருந்து, சேஷையங்கார் இந்நூலை நாவலாகவே எழுதியுள்ளதை அறிய முடியும். "நாவெனில் நமது வித்துவான்கள் வழக்கமாயிறங்குந் துறைகளை விட்டுக் காலத்தியற்கையைத் தழுவிப் புதுத்துறையில் காலிட்டேன்' என்று தம் முயற்சி பற்றித் தெளிவுடன் கருத்துரைத்துள்ளமை நூலாசிரியரின் நோக்கை வலியுறுத்துகிறது.



பலகாலம் மறைந்து, மறந்து கிடந்த இந்நூலின் பிரதியொன்றை லண்டன் சென்றபோது பிரிட்டிஷ் மியூசியம் நூலகத்தில் கண்டறிந்த சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் அதன்

ஒளிநகலச்சைப் பெற்றுக்கொண்டு வந்து பெ.கோ. சுந்தரரா-ஜன் (சிட்டி) அவர்களுடன் இணைந்து கோயமுத்தூர் விஜயா பதிப்பகமூடாக 1994-ல் மீள்பதிப்பு செய்தார்கள். இவர்கள் இருவரும் தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்', 'தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்' ஆகிய தமிழ் ஆய்வுலகின் முக்கிய நூல்களை எழுதிய நவீன தமிழ் இலக்கிய வரலாற்று முன்னோடிகளாவார்கள். எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை முன்னிட்டு இம் மீள்பதிப்பு வெளியிடப்பட்டது. முற்போக்கான சிந்தனைகள், சீர்திருத்தக் கருத்துக்கள் பல வற்றை உள்ளடக்கி, உண்மைச் சம்பவத்தின் அடிப்படை யில், சமகால நிகழ்சிகளைப் பின்புலமாக வைத்து, கற்பனை யின் அடிப்படையில் மக்களுக்குப் பரிச்சயமான அம்சங்க ளைக் கொண்டு இந்நாவல் புனையப்பட்டுள்ளது. 'சிட்டி, சிவ பாதசுந்தரம்' இருவரும் ஆதியூர் அவதானி சரிதம் தமிழின் முதல் நாவல் என்பதை தர்க்க நியாங்களுடன் வலியுறுத்தி சிறப்பும் ஆழமும் மிக்க முன்னுரையை எழுதியுள்ளார். அவர் களின் முன்னுரை தரும் தகவல்கள் மற்றும் ஆதியூர் அவ தானி சரிதம் நாவலின் சிறப்புக்கள் தொடர்பாக தனியான கட் டுரை ஒன்று எழுதவேண்டியது அவசியம் என்பதால் விரி வஞ்சி இங்கே தவிர்க்கப்படுகிறது.

மூன்றாவதாகக் குறித்த நூல் மற்றைய நூல்களிலிருந்தும் சற்று வேறுபட்டது. அந்நூலின் பெயர் 'மதீனத்துந் நுஹாஸ்'. அதன் தமிழாக்கப் பெயர் 'தாமிரப் பட்டணம்'. 'பாக்கீர் யஸீது இப்னு மாலிக் அத்தாயீ' என்ற பாரசீகர் தொகுத்த வரலாற்று செய்யுளில் இருந்து 'மாப்பிள்ளை லெப்பை ஆலிம்' என்பவ ரால் 'அரபுத் தமிழில்' எழுதப்பட்டது. தமிழ் மொழியில் எழு தப்பட்டதாயினும் இந்நூல் தமிழெழுத்துக்களில் எழுதப்பட்ட தில்லை. இதில் நேரக்கூடிய மயக்கத்தைத் தவிர்க்க மேற் கொண்டு தாமிரப் பட்டண நாவலைக் குறித்து பேசமுன் அர புத் தமிழ் குறித்து அறிந்து கொள்வது பயனுடையதும் அவசி யமானதுமாகும் என்பதால் அரபுத் தமிழ் குறித்துப் பார்ப் போம்.

அரபுத்தமிழ் அல்லது அர்வி (அரபு: اللِسَانُ الأَرْوِيّ, அல்லி சானுல் அற்விய்ய்) என்பது தமிழ் மொழியை நீட்டிக்கப்பட்ட அரபு எழுத்துக்களில் எழுதப்படும் மொழி வழக்கு ஆகும், இது அரபு மொழியிலிருந்து அதிகப்படியான சொல் மற்றும் ஒலிப்புத் தாக்கங்களைக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு மற் றும் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தினரால் பயன்ப டுத்தப்பட்டது. ஆனால் இன்று இதன் பயன்பாடு அருகிவிட் டது. இந்தியப் பெருங்கடல் வர்த்தகம் ஐரோப்பிய காலனித்து வவாதிகளுக்கு முன்பாக இந்தியாவில் தரையிறங்கிய அரபு மற்றும் பாரசீக வணிகர்களால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட காலத்தில், பயணம் மற்றும் வர்த்தகம் இந்த பிராந்தியத்தில் புதிய மொழிகளின் உருவாக்கத்தைச் சாத்தியமாக்கியது. அராபிய, பாராசீக வணிகர்கள் பேசிய அரபு மொழியானது உள்ளூர் மொழியான தமிழுடன் கலந்து அரபு தமிழ் அல்லது அர்வி என்று அழைக்கப்படுகின்ற மொழியை உருவாக்கியது. எழுத்துரு அல்லது வரிவடிவம் மாற்றியமைக்கப்பட்ட அரே பிய எழுத்துக்களில் எழுதப்படும் இதன் சொற்களும் அவற் றின் அர்த்தங்களும் உள்ளூர் தமிழ் பேச்சுவழக்கில் இருந்து கடன் வாங்கப்பட்டவை. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து, இஸ்லா மிய மார்க்கத்துடன் இணைந்த தமிழர்களுக்கு, தங்கள் தாய் மொழியையும் மதநம்பிக்கைகளையும் ஒருங்கிணைக்கும் ஒரு வழியாக அர்வி எழுத்து உதவியது. அர்வி எழுத்தில் அதிகமாக மதவழி உரைகள், கதைகள், கீர்த்தனைகள் போன்றவை எழுதப்பட்டன.

அரபு தமிழில் ஏறத்தாழ நூற்று ஐம்பதுக்கு மேற்பட்ட சமய நூல்கள் வெளிவந்துள்ளன. திருக்குரானுக்குத் தமிழில் விளக்கவுரை எழுதக்கூடாது என மார்க்க விற்பன்னர்கள் பெரிதும் வற்புறுத்தி வந்ததன் காரணமாக அரபுத் தமிழில் தப்சீர்களும், ஏனைய இஸ்லாமிய நூல்களும் வெளிவரலா யின. குர்ஆனின் அரபுத் தமிழ் விரிவுரைகளான தப்சீர் பத் ஹுல்கரீம், தப்சீர் பத் ஹுல் ரஹீம், புதூ ஹாதூர் ரஹ்மா-னியா பீதப்சீரி கலாமிர் ராப்பானியா ஆகியவை பிரசித்தி பெற்ற நூலாகும். இவை காயல்பட்டனத்திலிருந்து வெளிவந் தவை. காயல்பட்டணம் ஷாம் சிஹாபுதீன் வலி அவர்கள் அர புத் தமிழில் பல பாமாலைகள் இயற்றியுள்ளார். பொதுவாக ஆண்களைவிட பெண்கள்தாம் இவ்வரபுத் தமிழை அதிக மாக எழுதப் படிக்க தெரிந்திருந்தனர். அக் காலத்தில் கடி தங்கள் கூட அரபுத் தமிழில் எழுதப்பட்டு வந்தன. அரபு கட லோடிகளுடனான உள்ளூர் தமிழ் முஸ்லீம் பெண்களின் திரு




மணத்தின் காரணமாக தமிழ்நாட்டிலும், இலங்கையிலும் இது பிரபல்யமாக இருந்தது. அத்துடன் வணிகர்களுக்கிடையில் வணிக உறவுகளை ஆழப்படுத்தவும் உதவியது. அராபிய வணிகர்கள் ஏற்கனவே அவர்கள் அறிந்திருந்த அரபி எழுத் துருவைப் பயன்படுத்தி தமிழ் போன்ற சிக்கலான மொழியை கையாளத் தொடங்கியதே அரபுத் தமழில் தோன்ற முக்கிய காரணமாகும்.

தென்னிந்தியாவில் முஸ்லீம்கள் பல நூற்றாண்டுகளாக நல்

லிணக்கத்துடன் வாழ்ந்தனர். அரேபியர்கள் வர்த்தகத்தின் மூலம் செழிப்பைக் கொண்டு வந்ததால் குறிப்பாக வரவேற் கப்பட்டனர். சில பதிவுகளின்படி, பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம் பெனியின் போட்டியை எதிர்கொள்ளும்போது ஒரு ரகசிய மொழியாக அர்வி பயன்படுத்தப்பட்டது. உள்ளூர் மக்களு டன் தனிப்பட்ட முறையில் தொடர்புகொள்வதற்கான மொழி யாகவும் அர்வி காணப்பட்டது. அரபு மற்றும் உள்ளூர் மொழி யின் இணைப்பால் பிறந்த அரபுத்தமிழ் அராபிய வணிகர்க ளால் வற்புறுத்தப்பட்ட ஒன்று அல்ல என்றே கருதப்படுகிறது. கேரளாவில் சொந்த மொழியுடன் கலந்து அரபு மலையாளம் அல்லது மாப்பிள்ள மலையாளம் என்று அழைக்கப்படுகிற மொழிவழக்கு உருவாகியுள்ளது. குஜராத்தி, பெங்காலி, பஞ் சாபி மற்றும் சிந்தி போன்ற பிற பிராந்திய இந்திய மொழிக ளும் அரேபிய எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன என அறிய முடிகிறது. அக்காலத்தில் இந்து சமுத்திரப் பிராந்திய நாடுக ளில் கணிசமான தமிழ் பேசும் மக்கள் தொகை இருந்ததால் அரேபிய வணிகர்கள் தமிழ்நாட்டிலிருந்து நகர்ந்தபோதும் அர்வியும் அவர்களுடன் தொடர்ந்து சென்றது. வரலாற்று பதி வுகளின்படி, அர்வி இலங்கை, சுமத்ரா, மலேசியா, சிங்கப்பூர், கிழக்காபிரிக்கா மற்றும் தென்னாப்பிரிக்காவிற்கும் பயணப் பட்டதாக நம்பப்படுகிறது. அக்கால இந்து சமுத்திர வர்த்தக மொழியில் தமிழ் மொழி செல்வாக்குச் செலுத்தியதையும் இதனுடன் இணைத்துப் பார்க்க வேண்டும்.

அரபு தமிழ் மற்றும் அரபு மலையாளம் மிகவும் பிரபலமாக இருந்தன, ஏனெனில் அவை வளமான இலக்கிய மற்றும் வாய் மொழி பாரம்பரியத்தைக் கொண்டுள்ளன. இந்தியா மற்றும் இலங்கை முழுவதும், அரபு தமிழில் எழுதப்பட்ட 2,000 புத்த கங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. கேரளாவில், அரிய அரபு மலையாள கையெழுத்துப் பிரதிகளைப் பாதுகாக்க ஆராய்ச்சியாளர்கள் முயற்சித்து வருகின்றனர். காலனித்து வத்தின் விளைவாக, கையெழுத்துப் பிரதிகள் லண்டனில் உள்ள பிரிட்டிஷ் நூலகத்திற்குச் சென்றன. வரலாறு, மதம், மருத்துவம் மற்றும் கலாச்சாரம் முதலிய பல்துறை அர்வி நூல்கள் இன்றும் அங்குள்ளன. இவற்றில் பல பெண்களால் எழுதப்பட்டவை. கணிசமான எண்ணிக்கையிலான புத்தகங் கள் பெண்களால் பிற பெண்களுக்காக எழுதப்பட்டவை. இப் புத்தகங்கள் பிரசவம் மற்றும் பாலுறவு போன்ற பிரச்சினை களை எடுத்துரைக்கின்றன, உணவு வகைகள் மற்றும் கலாச் சாரம் தொடர்பான உள்ளூர் வழக்கங்களை அவை பிரதிப லிக்கின்றன அல்லது விவாதிக்கின்றன. ஒரு தாய்வழிப் பாரம் பரியத்தின் ஒரு பகுதியாக முஸ்லிம் பெண்கள் எப்படி வலு வான குரலையும் அடையாளத்தையும் கொண்டிருந்தனர் என் பதற்கு இது சான்றாகும் என சில அறிஞர்கள் சுட்டிக்காட்டு கின்றனர். தமிழ்நாட்டில் இதில் பார்சி, உருது சொற்கள் பல கலந்து விட்ட பொழுதும் இலங்கையில் இது தன் நிலைகு லையாது இருந்தது. பொ.ஆ.பி. 8-ம் நூற்றாண்டு முதல் 19-ம் நூற்றாண்டு வரை அரபுத் தமிழ் சிறப்புற்று விளங்கியது. அச் சுப் பொறி வந்த பின் இதன் மதிப்பு மங்கலாயிற்று. மேலும் இதில் பயன்படுத்தப்பட்ட சொற்கள் பேச்சு வழக்கில் உள்ள சாதாரண சொற்களாக இருந்தாலும் இதனுடைய நடையும், பழங்காலத்தாயிருந்ததாலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சில முஸ்லிம் தமிழ் எழுத்தாளர்கள் இதனை வன்மையாகத் தாக்கினர். இழித்தும் கூறினார். அதன் காரண மாகவும் அரபி மதராசாக்களில் இது வழகொழிந்ததால் தமிழ் நாட்டில் முஸ்லிம் பொது மக்களிடத்திலும், பெண்களிடத்தி லும் இந்நூல்களைப் படிக்கும் ஆர்வம் அற்று போய் விட்டது.

19-ம் நூற்றாண்டில் கீழக்கரையில் வாழ்ந்த மாப்பிள்ளை ஆலிம் லெப்பை என்பவர் இஸ்லாம் மார்க்க அறிஞரும், சூபி மகானும், எழுத்தாளரும், கவிஞரும் ஆவார். தமிழ்நாடு, இலங்கை, கேரளம், மியான்மர் ஆகிய நாடுகளில் அரிசி மற் றும் இரும்பு வணிகம் செய்த தொழிலதிபரான இவர், அரபுத் தமிழில் பல நூல்களை எழுதி, அரபுத் தமிழ் இலக்கியத் துக்கு பெரும் பங்காற்றியுள்ளார். தமிழ்நாட்டின் காயல்பட்ட ணத்தில் 1816-ல் பிறந்த இவரின் தந்தை வெள்ளை அஹமது லெப்பை ஆலிம் ஆவார். தாயரது பெயர் ஆமினா உம்மா. இவரது இயற்பெயர் செய்யித் முஹம்மத். அவரது இரண்டா வது வயதில், அவர்களது குடும்பம் கீழக்கரையில் குடியேறி யது. இவர் தனது 10-வது வயதில் புனித அல்குர்ஆனை மன னம் செய்தார். கீழக்கரையில் புகழ்பெற்ற மார்க்க அறிஞர் தைக்கா ஸாஹிபு (றழி) அவர்களிடம் கல்விகற்றார். தனது ஆசிரியரின் மகளை மண முடித்தார். இதனால் ‘மாப்பிள்ளை லெப்பை ஆலிம்’ என அழைக்கப்பட்டார். தமது மாமனாரிடம் பைஅத்தும், கிலாபத்தும் பெற்றுக்கொண்ட இவர், அரூ ஸிய்யா மத்ரஸாவை அமைத்து அதில் நூலகம் ஒன்றை நிறு வினார். இலங்கை, கேரளம், மைசூர் ஆகிய பகுதிகளில் நூற் றுக்கணக்கான இஸ்லாமிய நிறுவனங்கள் தோன்றக் காரண மானவராகக் கருதப்படுகிறார். அத்துடன் தென்னிந்தியா மற் றும் இலங்கையில் இஸ்லாமிய மறுமலர்ச்சிற்கு பெரும் பங் காற்றியதாக குறிப்பிடப்படுகின்றார். இலங்கை அவரது இரண்டாவது தாயகமாக இருந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. இலங்கையில் போர்ச்சிக்கீசியரின் வருகையால் இஸ்லாத் தில் ஏற்பட்ட மார்க்க கல்வி, பொருளாதரா வீழ்ச்சியின் தாக் கத்திலிருந்து இஸ்லாம் மார்க்கத்தைப் புனருத்தாரணம் செய்ய பெரும் பங்காற்றியதாகப் புகழப்படுகின்ற மாப் பிள்ளை லெப்பை ஆலிம் இலங்கையில் 355 பள்ளிவாசல்க ளையும் தைக்காக்களையும் நிறுவியதாக நம்பப்படுகிறது. இத்தகு புகழ் வாய்ந்த மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர் கள் பாராசீக எழுத்தாளரான ‘பாக்கீர் யஸீது இப்னு மாலிக் அத்தாயி’ என்பவர் அரபி மொழியில் எழுதிய நெடுங்கவிதை யொன்றைத் தழுவி ‘மதீனத்து நுஹாஸ்’ எனும் பெயர் கொண்ட நாவலை அர்வீ அல்லது அரபுத் தமிழில் எழுதினார் ‘கடந்த காலங்களின் நிகழ்ச்சிகளாக அறிஞர்களால் பதிவு செய்யப்பட்டிருக்கும் வரலாறுகள் மிகப்பல. அவற்றில் ஒன்று தாமிரப்பட்டணம். இந்த அதிசயப் பட்டணத்தை பாரஸீக வாசியாகிய ‘பாக்கீர் யஸீது அபுனமாஸி கித்தாயிய்யி என்ப வர் தொகுத்திருந்ததை தமிழ் கூறும் மக்கள் அறிவான் வேண்டி தமிழாக்கினோம். காலங்கள் தோறும் நிலமெங்கும் வாழும் மனிதர்கள் அபூர்வ நாகரிகங்களைப் படைப்பது நிகழ்ந்து வருகிறது. நிலங்களை ஆட்சி புரியும் அரசர்களும் மக்களும் கால மாறுதல்களால் மாண்டு மடிகின்றனர். அவர் கள் நிர்மாணித்த கோட்டை கொத்தளங்களும் மாடமாளிகை களும் இடிந்து பொடிந்து போகின்றன. ஆகவே, அடுத்த தலைமுறையினரும், பிற்காலத்தவரும் கடு தெளிவான் வேண்டி அவைகளைப் பற்றி பேசுவதில் பொருத்தம் இருக்கி றது. ஆகையால்த்தான், ‘மதீனத்தன்னுஹாஸ்’ தாமிரப்பட்ட ணம் என்கிற வரலாற்றைச் செய்யுள்களாக இருந்ததை தமி ழில் வசனமாக்கித் தரப்படுகிறது’ என மாப்பிள்ளை லெப் பைப ஆலிம் இந்நூல் தொடர்பில் குறிப்பிடுகிறார்.

இதில் ‘தமிழில் வசனமாக்கித் தரப்படுகிறது’ என்று குறிப்பிடு வது அரபுத் தமிழில் வசனத்தில் எழுப்பட்டது என்பதையே குறிப்பதாகும். இதிலிருந்து இந்நூல் சரித்திரச் சம்பவங்க ளைப் பின்னணியாகக் கொண்டு வசனத்தில் எழுதப்பட்ட

புனைவு என்பதை அறியலாம். ஒரு மார்க்க ஆன்மீகவாதியால் இறைவனின் எல்லையற்ற சக்திக்கு அத்தாட்சியை கூறுவதற்கு எழுதப்பட்ட புனைவு என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.1858-ல் இது எழுதப்பட்டதாக தாமிரப்பட்டணம் புதிய மீள்பதிப்பில் (சீர்மை:2024) இந்நூல் தொடர்பான குறிப்புக்கள் முழுதும் குறிப்பிடுகின்றன. இந்நாவல் தொடர்பில் 'தமிழுக்கு முதல் புதினம் கீழக்கிரையிலிருந்து' எனும் தலைப்பில் அனைத்துலக இஸ்லாமியத் தமிழிலக்கிய ஏழாவது மாநாட்டுக்கு மானா மக்கீன் எழுதிய கட்டுரையிலும் இந்நாவல் எழுதப்பட்ட ஆண்டு 1858 என்றே குறிப்பிடப்படுகிறது. மதுரை காமராசர் பல்கலைக்கழக இஸ்லாமிய தமிழ்த்துறை தலைவர் முனைவர் பீ.மு. அஜ்மல்கான் அவர்களது 1985 வெளிவந்த 'தமிழகத்தில் முஸ்லிம்கள்' என்ற நூலில் தாமிரப்பட்டணம் நாவலே தமிழ் முதல் நாவல் என்று குறிப்பிட்டுள்ளதை அந்நூலை சான்று காட்டி மானா மக்கீன் குறித்துள்ளார்.

மேலும் அக்கட்டுரையில் முனைவர் அப்ஸலுல் உலமா தைக்கா ஸ_ஹைபு கொலம்பியாப் பல்கலைக்கழகத்திற்கு சமர்ப்பித்து முனைவர் பட்டம் பெற்றுக்கொண்ட 'Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu (சரந்தீபிலும், தமிழகத்திலும் அரபு, அரபுத் தமிழ் மற்றும் பாரசீக மொழிப் பங்களிப்பு) என்ற ஆய்வு நூலில் தமிழின் முதல் புதினம் 'தாமிரப்பட்டணம்' தான் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாக பதிவுசெய்கிறார்கள். இந்நூல் 'அரபுத் தமிழில் ஹி. 12751, பொ.ஆ.பி. 1858-ல் சரித்திரப் பின்னணியுடன் தமிழ் பேசும் மக்களுக்காக எழுதப்பட்ட முதலாவது புதினம் (நாவல்) இதுவே. இதற்கு முன்னர் எந்தவொரு முஸ்லிமோ, முஸ்லிம்மல்லாதோரோ புதினம் எழுதியவரல்லர்' என்பதை முனைவர் தைக்கா ஸஹைபு தனது முனைவர் பட்ட நூலில் தெளிவாக குறித்துள்ளதையும் சான்றுகாட்டிக் குறிப்பிடுகிறார். இந்நூலின் வெளியீடு தொடர்பில் இருவேறு பதிவுகளைக் காண முடிகிறது. தாமிரப்பட்டணம் புதிய மீள்பதிப்பில் (சீர்மை:2024) 'சையது முஹம்மது ஆலிம் என்பவர் பொ.ஆ.பி. 1889-ல் இந்நாவலை அச்சிட்டார்' என்றுள்ளது. இந்நாவல் தொடர்பில் 'தமிழுக்கு முதல் புதினம் கீழக்கிரையிலிருந்து...' எனும் மானா மக்கீன் அவர்களின் கட்டுரையில் 'இந்நாவல் ஸரந்தீபில் (இலங்கை) ஹி.1318 பொ.ஆ.பி.1900-ல் வெளியானது என்றுள்ளது. ஆசிரியர் மறைந்து இரண்டாண்டு களுக்குப் பின், இது நிகழ்ந்தது. கொழும்பு, 92, இரண்டாம் குறுக்குத் தெரு 'மத்ப அத்துஸ்ஸலைமானிய்யா' பதிப்பகத்தில் டி. முஹம்மது சுலைமான் என்பவரால் இந்நாவல் வெளியிடப்பட்டது. பின், 3 ஆண்டுகளுக்குப் பின் ஒரு மறுபதிப்பு செய்யிது முஹம்மது ஆலிம் அவர்களால் வெளியானது. அதில் பொ.ஆ.பி.1903' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தகவல்களின் படி எழுதப்பட்டு 40 வருடங்களுக்குப் பின் அச்சிடப்பட்ட இவ்வரபுத்தமிழ் இலக்கியம் அதற்கு 70 வருடங்கள் கழித்தே (எழுதப்பட்டு 120 ஆண்டுகள் கழித்து) தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டது. 'பசுங்கதிர்' மற்றும் 'பிறைக்கொடி' ஆகிய இதழ்களின் ஆசிரியராக இருந்த பசுங்கதிர் மௌலானா என அழைக்கப்படும் எம்.கே.ஈ மௌலானா அவர்கள் கீழக்கரை லெ.செ. நூஹ் தம்பி மரைக்காயர் பாதுகாத்து வைத்திருந்த மதீனத்து நுஹாஸ்' அரபுத் தமிழ் பிரதியைத் 'தாமிரப்பட்டணம்' என்ற பெயரில் தமிழாக்கி தனது பசுங்கதிர் ஏட்டில் 23 வாரங்களாக வெளியிட்டார். கீழக்கரையில் பிறந்த பசுங்கதிர் மௌலானா தனது வாழ்வின் பெரும்பகுதியை மன்னார் மரிச்சுகட்டியில் கழித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர் கே.டி.எம்.எஸ். அப்துல் காதிர் தைக்காப்பா அவர்களது உதவியால் 1979 ஆண்டு வெளியிட்டார். வெளிவந்து 25 ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்த இந்நாவலை ஏழாவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மாநாட்டில் மானா மக்கீன் கவனப்படுத்தினார். அதன் பின் அங்கொன்றும் இங்கொன்றுமாக இந்நால் தொடர்பில் ஓரிரு உரையாடல்கள் நடைபெற்றன. ஆயினும் நூலின் பிரதி கைகெட்டாததாக மாறிவிட்டிருந்தது. தற்போது 40 ஆண்டுகள் கழித்து இந்நூல் சீர்மை வெளியீடாக வெளிவந்திருக்கிறது. இது தமிழ் நாவலா ?, மொழியாக்கத்தை, அதுவும் 1899-இல் வெளியிடப்பட்டதை தமிழின் முதல் நாவலாக் கொள்ளலாமா ? என்ற வழக்கமான கேள்விகளுக்கு புதிய மீள்பதிப்பில் பழங்காசு சீனிவாசன் பதிலளித்துள்ளார். அவை தொடர்பான உரையாடல்களைத் துறைசார் அறிஞர்களிடமும் வாசகர்களிடமும் விட்டுவிடுவதான் சரியானது.

ஆனால் கவனத்தில் கொள்ள வேண்டிய வேறொரு விடயம் இங்கு முக்கியமாகிறது. தாமிரபட்டணம் 1858-ல் எழுதப்பட்டதால் அதுவே தமிழ் முதல் நாவல் என்ற வாதங்கள் முன்வைக்கப்படுகின்ற வேளையில் 'பிரதாப முதலியார் சரித்திரம் 1857-ல் எழுதியதாக விக்கிப்பீடியா, தமிழ் விக்கி ஆகியவற்றிலும் அமேசன் இணைய அங்காடியிலும் ஏனைய இணைய விற்பனை அங்காடிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரையான எல்லா ஆய்வுகளும் பிரதாப முதலியார் சரித்திரம் வெளியிடப்பட்டது 1879 ஆண்டு என்பதையே ஏற்றுக்கொள்கிறார்கள். மு. வரதாசராசன். பேரா.க. கைலாசபதி இருவரும் 1876-ல் எழுதப்பட்டு 1879-ல் அச்சில் வெளிவந்ததாக குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் யாரும் பிரதாப முதலியார் சரித்திரம் தொடர்பில் 1857-ல் எழுதப்பட்டதாக கூறவில்லை.

இந்நிலையில் எதுவித சான்றுகளுமின்றி எழுதப்பட்ட ஆண்டு 1857 எனக் குறிப்பது விஷமத்தனமானது என்பதுடன் வாசகர்களையும் ஆய்வாளர்களையும் திசைதிருப்பிவிடும் நோக்கிலானது என்பதையும் நாம் கருத்திலெடுக்க வேண்டும். 1858-இல் எழுதப்பட்ட தாமிரப்பட்டணம் நாவலே தமிழின் முதல் நாவல் என்று கருதப்படுகின்ற சூழலில் அவ்வாதத்தை எதிர்கொள்ளும் வகையில் அதற்கு ஓராண்டு முன்பு 1857-ல் பிரதாப முதலியார் சரித்திரம் எழுதப்பட்டதாகக் குறிப்பிடுவது நேர்மையற்ற கண்டிக்கத்தக்க செயலாகும். பிரதாப முதலியார் சரித்திரம் நாவலை முதல் தமிழ் நாவலாக முன்னிறுத்தும் உள்நோக்கத்தின் அடிப்படையில்தான் மேற்குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளதா ? என்ற சந்தேகமும் எழாமலில்லை. பதிப்பு வரலாறுகள் மறுவாசிப்புக்கு உள்ளாக்கப்படுவதன் நோக்கமே சரியான தகவல்கள் உரிய சான்றுகளுடன் உறுதிசெய்யப்பட்டு ஏலவே உள்ள இடைவெளிகளும் தவறுகளும் நேர் செய்யப்பட வேண்டும் என்பதே. இந்நிலையில் நன்கறியப்பட்ட பதிப்பு விடயம் தொடர்பில் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டு ஆரோக்கியமானதல்ல என்பதை விசனத்துடனே குறிப்பிட வேண்டியுள்ளது.



sathiyathevan.s@thaiveedu.com

# ஒரு நூலின் உருவாக்கம் :
# ஆசிரிய – வெளியீட்டாளருக்கான கைந்நூல்
# (பகுதி 8)

**– என். செல்வராஜா**

ஒரு நூலில் இடம்பெறும் நூலியல் தரவுகளில் 'பதிப்பாசிரியர்' பற்றிய எமது புரிதலைக் கடந்த இரு இதழ்களில் ஆராய்ந்திருந்தோம். அடுத்ததாக, நூலியல் தரவுகளில் முக்கிய அம்சங்களிலொன்றான நூலின் 'பதிப்பு' தொடர்பான குறிப்பு ஒரு நூலில் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை இந்த இதழில் ஆராய்வோம்.

'அறிவுசார்ந்த சொத்தாகிய' ஒரு நூலின் தலைப்பிரசவத் திகதியே அந்நூலின் 'முதற் பதிப்பு' என்று சுட்டப்படுகின்றது. 1-வது பதிப்பு, மார்கழி 2006 என்றால் அதன் கருத்து, ஆக்கியோன் அந்த நூலை முதன் முதலில் அறிவுலகத்திற்கு மார்கழி 2006-ல் வழங்கிவைக்கிறான் என்பதாகும். அந்த நூல் விற்றுத் தீர்ந்தபின் மீண்டும் வைகாசி 2009-ல் திருத்தமேதுமின்றி மீள அச்சிட்டு வழங்கப்பட்டால் அதனை 2-வது பதிப்பு வைகாசி 2009 என்று குறிப்பிடவேண்டும். மூன்றாவது தடவையும் அந்த நூல் சில புதிய தகவல்களை உள்ளடக்கி 2011-ல் வெளிவருமாயின் 3-வது (திருத்திய)பதிப்பு, 2011 என்று குறிப்பிடவேண்டும்.

இந்தப் பதிப்பு விசயத்தை அச்சகத்துடனோ அதனை வெளியிடும் நிறுவனத்துடனோ முடிச்சுப் போடுவதும், குறித்த பதிப்பகத்தின் முதற் பதிப்பு என்று போடுவதும் மிகப்பெரும் தவறாகும். இந்தத் தவறை ஒரு பதிப்பாளர் அல்லது அச்சகம் மேற்கொள்ளும்போது நிலைமை சிக்கலாகவும் குழப்பமாகவும் மாறிவிடுகின்றது. இது எப்படி என்பதை இவ்வுரையில் பின்னர் பார்க்கப் போகின்றோம். அதற்கு முன்னதாக ஒரு நூலின் விவரணத்திற்கு இந்தப் பதிப்பு விபரம் ஏன் தேவைப்படுகின்றது? அதன் முக்கியத்துவம் என்ன என்பதை சுருக்கமாகப் பதிவுசெய்கின்றேன்.

நூல் என்பது ஒரு படைப்பாளியின் அறிவுத்தேட்டத்தை அடுத்தவருக்கு அல்லது அடுத்த தலைமுறைக்கு வழங்கும் ஒரு அறிவுக் கொள்கலனாகும். எந்தக் கொள்கலத்தில் உள்ள அறிவுத் தகவலுக்கும் ஒரு உணவுப் பண்டம் போன்றே ஒரு Expiry date அல்லது Use by date உண்டு என்பதை ஆழமாகச் சிந்திப்பவர் எவரும் பரிந்துகொள்வர். எமது அருஞ்சொத்தாகவுள்ள சாகாவரம் பெற்ற சங்க இலக்கியங்கள் போன்று வரலாற்றை வளப்படுத்திய குறிப்பிட்ட சில நூல்கள் அவ்வப்போது தோன்றிவந்துள்ளன. இவை எக்காலத்தில் முதலில் வெளிவந்தன என்ற தகவல் மிக முக்கியமானது. அத்தகவல் தவறாகக் குறிப்பிடப்படுமாயின் அந்நூலின் வரலாற்றில் பாரிய குழப்பங்களைத் தோற்றுவிக்கும்.

ஒரு நூலின்கண் பொதிந்துள்ள அறிவை நாம் உள்வாங்கிக் கொள்ளும் வேளையில் அது வெளிவந்த காலத்தையும் கருத்தில் கொள்ளவேண்டும். சமூக, அரசியல் மற்றும் தூய விஞ்ஞான நூல்களின் பயன்பாட்டுக்காலம், இலக்கிய, வரலாற்று நூல்களை விட குறைவானது. நவீன அரசியல் பற்றிய ஒரு நூலைத் தேடும் வாசகர் 1956-ல் வெளிவந்த நூலைவிட 2014-ல் வெளிவந்த நுலையே அதிகம் விரும்புவார். பதிப்பு ஆண்டு இரண்டு நூலிலும் போடப்படாதவிடத்து அவரது தேர்வுக்கு வழி தான் ஏது?

இன்று வெளிவரும் ஈழத்துத் தமிழ்நூல்களில் 20 சதவீதமான நூல்கள் பதிப்பு விபரம் அற்றவையாகவே உள்ளன என்பது கவலைக்குரிய யதாரத்தநிலையாகும். நூல்தேட்டத்தின் பதிவுக்காகத் தேடிப்பெற்ற நூல்களில் 2014-2015 காலகட்டத்தில் வெளிவந்ததாக நான் நம்பிய சுமார் 25 நூல்களில் வெளியிட்ட ஆண்டு விபரமே முற்றாகக் காணப்படவில்லை. சில நூல்களின் முன்னுரையை வாசிக்கும் போதுதான் இந்நூலின் முதற்பதிப்பு ஏற்கெனவே சில காலங்களுக்கு முன்னர் வெளி வந்துள்ளது என்ற தகவலைப் பெறமுடிகின்து. இதிலிருந்து ஒரு நூலின் பதிப்பு விபரத்தின் முக்கியத்துவத்தை நாம் பூரணமாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதையே உணர முடிகின்றது. பதிப்பு விபரம் அற்ற ஒரு நூலின் நிலை, தனது பிறந்த தினத்தையே அறியாத ஒரு குழந்தையின் எதிர்காலம் போன்றதாகும்.




'அசட்டு மாப்பிள்ளை' என்ற நகைச்சுவை நாடகம், வரணியூரான் (இயற்பெயர்: எஸ்.எஸ். கணேசபிள்ளை) அவர்களால் எழுதப்பட்டது. இந்நாடகத்தை கமலாலயம் கலைக் கழகத்தி

னர் நவம்பர் 1975-ல் முதன்முதலில் நூல் வடிவில் வெளியிட்டிருந்தனர். பின்னர் மட்டக்களப்பிலிருந்து உதயம் வெளியீட்டு வரிசையில் 1-வது பதிப்பாகக் குறிப்பிட்டு மீண்டும் வெளிவந்தது (உதயம், ஒளி 7, கதிர் 3, டிசம்பர் 1994. பதிப்பாசிரியர்: உஷா சிவதாசன்). 19 ஆண்டுகளுக்குப் பின்னர் வெளிவந்த இந்நூலை இரண்டாவது பதிப்பாக நூலில் குறிப்பிட்டிருக்கவேண்டும். பின்னாளில் உடுவை எஸ். தில்லைநடராஜா அவர்களால் பதிப்பு விபரம் ஏதுமின்றி இந்நூல் மீள் பதிப்பாக குமரன் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. (2014-2015 காலகட்டத்தில் இப்பதிப்பு வெளிவந்திருக்கக்கூடும்). இதனை மூன்றாவது பதிப்பாகக் குறிப்பிட்டிருக்க வேண்டும்.

பாடசாலை மாணவர்களுக்குரிய நூல்களை வெளியிடும் வெளியீட்டு நிறுவனங்களும், ஆசிரிய-வெளியீட்டாளர்களும் பதிப்பு விபரங்களைத் தமது நூலில் பதிவுசெய்வதில் அக்கறை காட்டுவதில்லை. இதில் ஒரு வியாபார தந்திரமும் உள்ளது. ஒரு நூலின் பதிப்பு ஆண்டை வைத்தே உப பாடப் புத்தகங்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் நுகர்வோர் வாங்க முனைவதால், மாணவர்களின் கல்வித் தேவைக்காக வெளியிடப்படும் உப பாடப் பயிற்சிப் புத்தகங்களில் வேண்டுமென்றே பதிப்பு ஆண்டைக் குறிப்பிடுவதைத் தவிர்க்கிறார்கள் என்ற தகவலை கொழும்பின் பிரபல பாடப் புத்தக வெளியீட்டாளர் ஒருவரே நேரடியாக என்னிடம் ஒத்துக்கொண்டார். 2023-ம் ஆண்டு க.பொ.த. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குரியது என்ற குறிப்பை வழங்குவது மாத்திரம் அதிகாரபூர்வமான பதிப்பு ஆண்டு விபரக்குறிப்பாக அமைந்துவிடாது. நூலாசிரியர் குறிப்பிட்டதொரு நூலை 2022 இலோ 2021 இலோ கூட வெளியிட்டிருக்கலாம். மேலட்டையை மாத்திரம் மாற்றிவிட்டு பழைய கள்ளையே புதிய மொந்தையில் வைத்து விற்பனை செய்யும் தந்திரமும் இங்கு வெற்றியளித்து வருகின்றது.

ஒரு நாவலின் அல்லது சிறுகதைத் தொகுதியின் தலைப்பை மாத்திரம் மாற்றிவிட்டு புதிய தலைப்புடன் தனது பழைய நாவலை முதற் பதிப்பாகத் தமிழகத்தில் பிரசுரிக்கும் தந்திரமும் ஈழத்துத் தமிழ்ப் படைப்பிலக்கியச் சூழலில்தான் நிகழ்ந்துள்ளது.

ஈழத்தின் பிரபல எழுத்தாளரும் வெளியீட்டாளருமான வரதரின் (தி.ச. வரதராசன்) முதலாவது சிறுகதைத் தொகுப்பு 'கயமை மயக்கம்' என்ற தலைப்பில் வரதர் வெளியீடாக 1960-இல் யாழ்ப்பாணத்தில் வெளிவந்திருந்தது. டாக்டர் மு. வரதராசனாரின் சிறப்புரையுடன் கூடிய இச் சிறுகதைத் தொகுப்பில், மாதுளம் பழம் (சுதந்திரன்), உள்ளுறவு (ஆனந்தன்), வேள்விப் பலி (மறுமலர்ச்சி), கயமை மயக்கம் (ஆனந்தன்), உள்ளும் புறமும் (புதுவருட மலர்), பிள்ளையார் கொடுத்தார் (ஆனந்தன்), வீரம் (தினகரன்), வெறி (யாழ். எழுத்தாளர் சங்க மலர்), கற்பு (மத்திய தீபம்), ஒரு கணம் (தினகரன்), புதுயுகப் பெண் (கலைச் செல்வி), வாத்தியார் அழுதார் (ஆனந்தன்) ஆகிய தலைப்புகளில் எழுதப்பட்ட கதைகள் இடம்பெற்றிருந்தன. வரதரின் இரண்டாவது கதைத் தொகுதி என்று பலராலும் குறிப்பிடப்படும் 'வரதர் கதைகள்' என்ற சிறுகதைத் தொகுதி 1996-ல் சென்னையிலிருந்து குமரன் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிடப்பட்டது. உண்மையில் இக்கதைத் தொகுதி 1960-இல் வெளிவந்த 'கயமை மயக்கம்' என்ற கதைத் தொகுதியின் மீள் பதிப்பாகவே குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். காரணம் இதில் காணப்படும் 12 கதைகளும் முன்னைய நூலான கயமை மயக்கத்தில் இடம்பெற்றவையே.







நூலின் தலைப்பு, பதிப்பகம் என்பவை மாற்றமடைந்ததால் இரண்டையும் நாம் வெவ்வேறு நூல்களாகவே வரலாற்றில் பதிவுசெய்ய வேண்டியுள்ளது.

ஈழத்தின் மற்றுமொரு பிரபல எழுத்தாளரான செங்கை அழியான் 'இந்த நாடு உருப்படாது' என்ற தலைப்பில் 1989-ல் தனது கமலம் பதிப்பக வெளியீடாக ஒரு நாவலை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிட்டிருந்தார். அதே நாவல் 1986-ல் வீரகேசரி வாரமலரில் 'தீராத சுமைகள்' என்ற தலைப்பில் வெளிவந்தது. இந்நாவல் மூன்றாம் முறையாக 'மண்ணின் தாகம்' என்ற தலைப்பு மாற்றத்துடன் 1989-ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து டேவிட் லிகோரியின் மீரா பதிப்பக வெளியீடாக வெளியிடப்பட்டிருந்தது. பதிப்பிக்கப்பட்ட இரண்டு நூல்களும் முதலாவது பதிப்பாகவே குறிப்பிடப்பட்டிருந்தன. மேற்குறிப்பிட்ட இரண்டு படைப்பாளிகளின் ஆக்கங்களும் உதாரணங்களுக்காக எடுக்கப்பட்டவையே. இவ்வுதாரணங்களின் வழியாக ஈழத்துப் பதிப்புலகச் சூழலில் பதிப்பு விபரத்தின் முக்கியத்துவம் அன்று தெளிவாக உணரப்பட்டிருக்கவில்லை என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

ஆண்டுவாரியாக ஒரு ஈழத்து நூல்விபரப் பட்டியலை ஆய்வுத் தேவைக்கெனத் தயாரிக்க முனையும் ஒருவரைக் குழப்பியடிக்கத் தயாராகவே எமது ஈழத்துப் பதிப்புலகம் கங்கணம் கட்டி நிற்கின்றது. இந்நிலை தொடரின் அது ஒரு நூலின் பிறப்பின் அதிமுக்கிய தகவலை மாத்திரமல்ல எமது பதிப்புலக வரலாற்றையே பின்னாளில் கேள்விக்குறியாக்கப் போகின்றது. தன் சொந்த நூலின் பதிப்பு விபரத்தைப் பதிவிடுவதை கட்டாயமாகக் கைக்கொள்வதில் அக்கறையின்மையைக் காட்டுவதற்கும் அப்பால் தமிழகப் புறக்காரணிகளும் இத்தகைய தவிர்ப்புகளுக்கும் தப்புகளுக்கும் காரணமாக இருக்கின்றன.

'சென்ற நூற்றாண்டில் பிரித்தானியராட்சிக் காலம் வரை இலங்கையில் பெரும்பாலான அரசியல்-சமூக இலக்கியத் தலைவர்களிடையே இந்தியாவின் ஒரு பகுதியாகவே இலங்கையைப்

பார்க்கும் உணர்வுநிலை காணப்பட்டது. ஏகாதிபத்திய நலன் சார்ந்து இந்தியாவுக்கு எதிர்நிலையில் இலங்கையைப் பிரித்தானிய அரசு கையாண்ட போதிலும் நிர்வாகச் செயற்பாடுகளில் இந்தியாவுடன் இணைந்தே இலங்கையையும் ஆளுகை செய்து வந்தது. பிரித்தானியர் வெளியேற்றத்தின் பின்னர் இறைமைமிக்க தனிநாடாக இலங்கை இயங்கிவந்திருக்கிறது. இருப்பினும் பெரும்பாலான தமிழ் மக்கள் இந்தியாவைத் தாய் நாடாகவும் இலங்கையை அதன் சேயாகவும் தரிசிக்கும் மனப்பாங்குடையவர்களாகவே இருந்தனர். இதற்குத் தமிழ் மொழித் தொடர்பாடல் இணைப்புக் கண்ணியாக அமைந்தது. சிங்கள மக்களும் தம்மை இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய வம்சாவழியினராய்க் காண்பதும் பௌத்தத்தை வழங்கிய புண்ணிய பூமியாக இந்தியாவைத் தரிசிப்பதையும் தொடர்ந்து பின்பற்றி வருபவர்கள்தாம்.' (நன்றி: ந. இரவீந்திரன். 'ஈழத்தமிழ்ப் பதிப்புலகம்: பிரச்சினைகளும் செல்நெறியும்', புத்தகம் பேசுகிறது சிறப்பு மலர், 2009).

'பத்தொன்பதாம் நூற்றாண்டிலே தமிழகத்திலும் ஈழத்திலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர்கள் மிகவும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தனர். போக்குவரத்து வசதிகளும் தொடர்பியற் சாதனங்களும் மிக அருகலாக இருந்த அக்காலத்தில் இரு நிலங்களிலுமிருந்த தமிழறிஞர்களும் புலவர்களும் கவிராயர்களும் கணக்காயர்களும் அடிக்கடி சந்தித்து அளவளாவிப் பரஸ்பரம் உணர்வைப் பரிமாறிக் கொண்டனர். இன்று நாம் நம்பமுடியாத அளவில் இது நடைபெற்றிருக்கிறது. ஈழத்தவரான சு.சரவணமுத்துப்பிள்ளை 'சைவ-உதயபானு' என்னும் பத்திரிகையை ஏககாலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்தும் மதுரையிலிருந்தும் வெளிப்படுத்தியிருக்கிறார்.' (நன்றி: க. கைலாசபதி. ஈழத்து இலக்கிய முன்னோடிகள், மக்கள் வெளியீடு, 1986).

மேற்கண்ட இரு அறிஞர் கூற்றுக்களும் ஈழத்தமிழ்ப் படைப்பாளிகளின் தமிழக உறவின் பரிமாணத்தை சற்று விளங்கிக் கொள்ளப் போதுமானது. அன்று போல, இன்றும் ஈழத்தவரின் வெளியீடுகள் தமிழகத்தில் தொடர்ந்தும் நூலுருவாகும் நிலை காணப்படுகின்றது. அதற்குத் தமிழரின் உலகளாவிய புலப்பெயர்வு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

புலம்பெயர் தமிழரின் பொருளாதார வளத்தை வர்த்தக ரீதியாகப் பெற்றுக்கொள்ளும் ஒரு களமாகவும் தமிழகப் பதிப்புலகம் இன்று மாறிவருகின்றது. ஈழத்துத் தமிழ்ப் பதிப்பகங்களின் அசமந்தப் போக்கும் ஸ்திரமற்ற நிலையும் இதற்கு மேலும் காரணமாக அமைகின்றன. இந்நிலையில் முன்னர் தமது நூல்களை இலங்கையில் பதிப்பித்த பல ஈழத்துப் படைப்பாளிகள் தமது புலம்பெயர் வாழ்வில் ஈட்டிய பொருளாதாரப் பலத்தை வாய்ப்பாகக் கொண்டு, அன்று தாம் வெளியிட்ட பல நூல்களை மீண்டும் இன்று தமிழகத்தில் மீளப் பதிப்பிக்கும் சம்பவங்களை அவதானிக்க முடிகின்றது. முறையானதும் ஒழுங்குபடுத்தப்பட்டதுமான விநியோக வசதிகள் எதுவுமற்ற யாழ்ப்பாணத்திலோ, மட்டக்களப்பிலோ, கொழும்பிலோ அச்சிடப்பட்டு வீட்டின் மூலைகளுக்குள் விற்பனை வாய்ப்பின்றி முடங்கிக் கிடப்பதை விட தமது நூல்கள் புதுப்பொலிவுடன் தமிழகத்தில் மாநில அரசின் கொள்வனவுத் திட்டத்தின்கீழ் வாங்கப்பட்டும், தமிழக நூலகங்களில் வைப்பிலிடப்பட்டும், புகலிடத்திலும் தாயகத்திலும் மீளெழுச்சி பெறுவதை புலம்பெயர்ந்த படைப்பாளிகள் விரும்புவதில் தவறேதும் இல்லை.

ஆனால் இதில் விரும்பத்தகாத செயல் என்னவென்றால், தமிழகத்தில் பெரும்பாலும் அச்சிடப்பெறும் மீள்பதிப்புகள் பல்லாண்டு காலம் கடந்தும் மீண்டும் முதற் பதிப்பாகவே வெளியிடப்படும் அவல நிலையாகும். தமிழகத்தின் நூலகங்களுக்கான அரசாங்க புத்தகக் கொள்வனவுத் திட்டத்தில் முதற்பதிப்புகளே முன்னுரிமை பெறுகின்றன. தமிழ்நாட்டு அரசு கொள்வனவு செய்து நூலகங்களுக்கு வழங்கும் செய்முறையில் புலம்பெயர் ஈழத்துப் படைப்பாளர்களுடைய நூல்களையும் உள்ளீர்த்துக்கொள்ள தமிழகத்தில் முதற் பதிப்பாக அவற்றை வெளியிட தமிழகப் பதிப்பாளர்கள் எம்மவரை ஊக்குவிக்கின்றார்கள்.

போர்க்காலத்தில் வன்னி மண்ணில் மிகுந்த சிரமங்களின் மத்தியில் முதலாவது பதிப்பைக் கண்ட பல போர்க்கால இலக்கிய நூல்கள் தமிழகப் பதிப்பாளர்களினால் மூலநூல் வெளிவந்த பல ஆண்டுகளின் பின்னர் மீண்டும் முதற்பதிப்பாக வெளிவந்துகொண்டிருப்பதைக் காண்கிறோம். இதற்கு ஆதாரமாக ஒரு பட்டியலையே நூல்தேட்டத்திலிருந்து வாசகர்கள் பெற்றுக்கொள்ளலாம். இக்கைங்கரியத்தில் ஈழத்தின் பல பிரபல எழுத்தாளர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது வேதனைக்குரியது. தமிழகத்திலிருந்து ஒரு புத்திஜீவி ஈழத்து இலக்கியங்களை ஆய்வுசெய்ய முனையும்போது, தமிழக நூலகங்களில் தான் பார்வையிடும் ஈழத்து இலக்கியங்களின் முதற்பதிப்புகள் தமிழகத்திலேயே முதன்முதலில் வெளியிட்டுவைக்கப்படுகின்றன என்ற தவறான பதிவை மேற்கொள்ள இத்தகைய நடவடிக்கைகள் காரணமாகின்றன.

வன்னியில் இயங்கிய பல பதிப்பகங்கள் அழிந்துவிட்ட நிலையும், இருநூறுக்கும் அதிகமான வன்னி வெளியீடுகள் பல வன்னியைவிட்டு வெளியேறாமலேயே மடிந்துபோன அவலமும் எஞ்சியுள்ள ஒருசில போர்க்காலப் பிரசுரங்களும் மீள்பதிப்புகளை எதிர்நோக்கியுள்ள இவ்வேளையிலாவது நூல்களில் பதிவு செய்யும் பதிப்பு விபரம் பற்றிய பிரக்ஞையை படைப்பாளிகள் மிக முக்கியமான வரலாற்றுக் கடமைகளில் ஒன்றாகக் கொள்ள முன்வரவேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் ஒருநூல் பிரசுரிக்கப்பட்டால் பின்னைய பதிப்புக்கள் அனைத்தும் மறு பதிப்பு / மீள்பதிப்புக்களே. நூலின் உள்ளடக்கத்தில் திருத்தங்கள் ஏதும் செய்யப்பட்டாலன்றி, முகவுரை, அணிந்துரைகளை வழங்கியவர்கள் பின்னைய பதிப்புகளில் வேறுபட்டாலும் கூட, அவை இரண்டாம் மூன்றாம் பதிப்பாகவே கருதப்படவேண்டும். பாரிய திருத்தங்களை மேற்கொள்ளுமிடத்து அதனை 'திருத்திய இரண்டாம் பதிப்பாக' அல்லது 'திருத்திய மூன்றாம் பதிப்பு' எனத் தெளிவாகக் கணித்துக் குறிப்பிடவேண்டும். அதில் குழப்பம் எதுவும் இருக்கக்கூடாது.

ஒரு நூலின் பதிப்பு விபரத்தைத் தீர்மானிக்கும் உரிமை நூலின் உரித்தாளரான ஆசிரியருக்கே உரியது. தமிழகத்திலோ தாயகத்திலோ வேறொரு பதிப்பகம் எமது நூலொன்றை

மீள்பதிப்புச் செய்ய முனைந்தால், அதனை இரண்டாவது பதிப்பு என்றே குறிப்பிட்டாக வேண்டும். பதிப்பகத்தின் வரு வாய்ப் பெருக்கத்துக்காக வரலாற்றைத் திரிபுபடுத்த தன்மா னமுள்ள ஒரு படைப்பாளியும் இணங்கக்கூடாது. முதற்பதிப் பாக வெளிவரும் ஒரு நூலைவிட ஒன்றுக்கு மேற்பட்ட பதிப்பு களைக் காணும் ஒரு நூலுக்கு எங்குமே மதிப்பு அதிகம். காலத்தால் நின்று நிலைக்கும் அவற்றையே வாசகர்கள் அதி கம் நாடுகிறார்கள் என்பதில் உண்மை இல்லாமல் இல்லை. தமிழகத்தில் மீள்பதிப்பாக வெளியிடப்படும் ஈழத்தவரின் நூல்களின் பதிப்பு விபரத்தில் புதியதொரு அணுகுமுறை கையாளப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. பதிப்பு லகச் சூழல் மாற்றத்தால் 'தமிழகத்தின் முதற் பதிப்பு', 'குறித்த வெளியீட்டகத்தின் முதற் பதிப்பு' என்றவாறாகவும் பதிப்பு விபரங்கள் இப்பொழுது குறிப்பிடப்பட்டு வருகின்றன. எது எவ்வாறெனினும், ஆசிரியர் தனது முகவுரையிலாவது தனது நூலின் பூர்வீகத்தை - வரலாற்று முக்கியத்துவமான முதலாவது பதிப்பு ஆண்டினையும் பதிப்பகத்தையும் குறித் துச் செல்லுவதில் அக்கறை செலுத்தவேண்டும்.

'பதிப்பு' (Edition, Ed.,) என்ற பதத்திற்குப் பிரதியீடாக 'அச்சு' (Reprint) என்ற பதமும் ஈழத்துப் பதிப்புலகச் சூழலில் பயன் படுத்தப்பட்டு வருவதை அவதானித்திருப்பீர்கள்.

Edition:The entire number of copies of a publication issued at one time or from a single set of type.
Reprint: A reissue of a printed work using the same type, plates, etc, as the original.

'மீளச்சு' என்பது 'மீள்பதிப்பு' என்பதற்கு நிகரான பதமேயன்றி வேறு கருத்தைக் குறிப்பிடுவதில்லை. உதாரணமாக, ஹேய்ம் ஜீ. இனோட் என்ற உளவியலாளர் 1965-ல் எழுதிய Between Parents and child என்ற ஆங்கில நூலை உதார ணத்திற்கு எடுத்துக்கொள்வோம். மக்மில்லன் பதிப்பகம் வெளியிட்ட இந்நூல் உலகெங்கும் 5 மில்லியன் பிரதிகள் விற் றுத் தீர்க்கப்பட்டு பாரிய வெற்றியைத் தந்த சிறுவர் உளவி யல் நூல். இந்நூல் பின்னர் Dr. Alice Ginott, Dr. H.Wallace Goddard ஆகியோரால் காலத்திற்கேற்ப திருத்தம் செய்யப் பட்டும் மேலதிக தகவல் சேர்க்கப்பட்டும் நியூயோர்க்கிலி ருந்து Three Rivers அச்சகத்தால் 2003-ல் வெளியிடப்பட் டது. மேற்படி 1965-ல் வெளிவந்த மூலப்பதிப்பின் தேர்ந்த பகு திகளின் தமிழாக்கமாக மூன்றாவது மனிதன் வெளியீட்டகம் 2001-ல் 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்ற தமிழ் நூலை எஸ்.கே. விக்னேஸ்வரன் அவர்களின் தமிழாக்க மாக வெளியிட்டார். பின்னர் இந்நூல் மீண்டும் மூன்றாவது மனிதன் பதிப்பகத்தால் 2005-ல் இரண்டாம் பதிப்பைக் கண்டி ருந்தது. இந்நூலின் மூன்றாவது பதிப்பு அண்மையில் குமரன் புத்தக இல்லப் பிரசுரமாக 2015-ல் வெளிவந்துள்ளது. 3-வது பதிப்பின் நூலியல் தகவல் வழங்கும் verso பக்கத்தில் (தலையங்கத்தின் பின் பக்கம்) தமிழில் முதலாம் பதிப்பு 2001, மீளச்சு 2005, தமிழில் இரண்டாம் பதிப்பு 2015 எனக் காணப்படுகின்றது.

இதில் இரண்டு விடயங்களை நாம் முக்கியமாகக் கவனத்திற் கொள்ளவேண்டும். இங்கு 'தமிழில் முதலாம் பதிப்பு' என்று குறிப்பிட்டிருக்க வேண்டிய தேவை எழவில்லை. பதிப்பு விப




ரம் என்பது என்றும் எப்பொ ழுதும் பதிவுக்குள்ளாகும் அந்த நூலிற்கே உரியது. இவ்வி டத்தில் 'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்று தமிழாக்கம் செய்து வெளியி டப்படும் நூல் பற்றியதாகவே நூலியல் விபரம் உள்ளது. மூல நூலின் பதிப்பு விபரத்தை இதே பக்கத்தில் ஒரு குறிப் பாக வேண்டுமானால் தனியா கப் பிரசுரிக்கலாம். ஆனால் அது குறித்த தமிழ் நூலுக் கான நூலியல் தகவலுடன் கலந்து குழப்பிவிடாமல் பார்த் துக்கொள்ள வேண்டும்.

'மீளச்சு' என்ற பதத்தை இரண்டாம் பதிப்பு எனப் பிரசுரித்தி ருக்கலாம். மீளச்சு, மீள்பதிப்பு என்பவை இந்நூலைப் பொறுத்தவரையில் இரண்டாம் பதிப்பு என்பதையே வேறு வடிவில் குறிக்கின்றது. எவ்வாறாயினும் மூன்றாவது மனிதன் பதிப்பகம் இரு பதிப்புகளை வெளியிட்டுள்ள நிலையில், 2015-ல் குமரன் பதிப்பகத்தினால் வெளியிடப்படும் நூலா னது, எஸ்.கே. விக்னேஸ்வரன் அவர்களின் தமிழாக்கமாக வெளிவந்த குறிப்பிட்ட நூலின் மூன்றாவது பதிப்பாகவே இருந்திருக்க வேண்டும். தமிழில் இரண்டாம் பதிப்பு என்று குறிப்பிடப்படுவது தவறான செய்தியாகும். ஒருவேளை அந்த நூலில் மொழிபெயர்ப்பாளர் திருத்தங்களை மேற்கொண்டி ருந்தால், 3-வது (திருத்திய) பதிப்பு என்று எளிமையாகக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும் ஒரு நூலின் பதிப்பு விபரம் என்பது ஒரு மூல நூலின் வேரடியாக வருவதேயன்றி, பதிப்ப கங்களின் / அச்சகங்களின் பார்வையில், அவர்களது வெளி யீட்டில் முதலாவது பதிப்பாக குறிப்பிடுவதாகாது. இந்நடை முறை அந்த நூலின் நூலியல் வரலாற்றைத் திரிபுபடுத்தும் - திசை மாற்றும் வாய்ப்பை உருவாக்கும். இத்தகைய தவறான கருத்துருவாக்கமே அண்மைக்காலத்தில் தமிழகத்தில் வெளி யாகும் எம்மவரின் மீள்பதிப்புகளுக்கு 'தமிழகத்தில் முதற்ப திப்பு' என்று புதுச்சொல்லைக் குறிப்பிட்டு, மூலநூலின் வேர டியை மறைத்துவிடும் துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகி றது.

இன்றைய பதிவில் ஒரு நூலின் பதிப்பு ஆண்டின் முக்கியத்து வம் பற்றி முடிந்தவரை விளக்கியுள்ளேன். அடுத்த சந்திப் பில் அச்சகங்கள்-பதிப்பகங்கள் இடையேயான வேறுபாடு கள் பற்றிப் பார்க்கலாம்.

(இன்னும் வரும்)



selvarajah.n@thaiveedu.com




# கி.ரா. விருது விழா 2024

## *அரவிந்த் வடசேரி*

சக்தி மசாலா நிறுவனத்தின் நிதி உதவிகொண்டு விஜயா வாசகர் வட்டம் ஆண்டுதோறும் கி. ராஜ நாராயணன் அவர்களின் பெயரால் தமிழின் சிறந்த படைப்பாளிகளுக்கு விருது வழங்கி வருகிறது. கண்மணி குணசேகரன், கோணங்கி, அ. முத்துலிங்கம், எஸ்.வி. ராஜதுரை போன்ற சிறந்த எழுத்தாளர்களைக் கௌர வித்ததன் வாயிலாக மிகவும் பெருமை வாய்ந்த விருதாக கி.ரா. விருது மதிக்கப்படுகிறது. 5 இலட்சம் இந்திய ரூபாய் பரிசுப்பணமாகக் கொண்டு தமிழின் அதிக பணமதிப்பு கொண்ட விருதாகவும் கி.ரா. விருது திகழ்கிறது. 2024-ஆம் ஆண்டிற்கான கி.ரா. விருது, மரபிற்கிணங்க, சாகித்ய அகாதமி விருது பெற்ற மூத்த எழுத்தாளர் நாஞ்சில் நாடன் அவர்க ளுக்கு 15 செப்ரெம்பர் 2024 அன்று கோவையில் வழங்கி தனக்கு மேலும் மதிப்பு கூட்டியது.

சிறப்புரை ஆற்றிய உச்சநீதிமன்ற நீதிபதி திரு. ஆர். மகாதேவன் அவர்கள் புனைவு அல்புனைவு எனப் பல படைப்புகளை அளித்த நாஞ்சில் நாடன் அவர்கள் உலகின் உன்னத மொழியான தமிழின் அற் புதத்தை முழுமையாகக் கண்டு திகைத்து நிற்கக் கூடிய மொழியறிவு மிகுந்த படைப்பாளி எனத் தனது உரையில் குறிப்பிட்டார். நாஞ்சில் நாடன் அவர்களது பல்வேறு கட்டுரைகளில் சங்க இலக்கியங்கள் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளதை நினைவுகூர்ந்தார் மாண்பமை நீதியரசர். சமுதாயம் மற்றும் அரசியல் சார்ந்த படைப்புகளை உருவாக்கும் நாஞ்சில் நாடனின் எழுத்து தொழிலாளர் நலம், பெண்களின் மேம்பாடு போன்றவற்றை வலியுறுத்துவதாக, சமுதா யத்தினை அடுத்தகட்டத்திற்கு நடத்திச் செல்லக் கூடிய ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வழி காட்டுபவையாக, தமிழ் மண்ணின் தனித்துவம் மற்றும் பண்பாட்டினை உள்ளடக்கி அதன் நம்பிக் கைகள், மருத்துவம் தொடங்கி வாழ்க்கையின் கூறுகளை எடுத்துக்காட்டுபவையாக அமைந்துள்ளன எனப் புகழாரம் சூட்டினார். இரண்டாயிரம் ஆண்டுக ளுக்கு முன் தோன்றிய தமிழ் மொழி சார்ந்த மக்கள், தங்களது பண்பாட்டையும் கலாசாரத்தையும் மறந்து எந்தத் திசையில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை எழுதிக்காட்டி இந்தச் சமுதாயத்தின் மீது கொண்ட அக்கறையையும் அன்பையும் வெளிப்ப டுத்தும் உன்னத படைப்பாளி நாஞ்சில் நாடன் என்றார். தமிழின் மகோன்னதத்தைப் படைப்புகளில்

எழுதிக்காட்டிய நாஞ்சில் நாடனை அனைவருக்கும் கடத்துங்கள் என வலியுறுத்துவதுதான் இந்த விருதின் நோக்கம் என்றார் திரு. மகாதேவன். சமூக அவலங் களைத் தன் படைப்புகளின் வாயிலாக நாஞ்சில் நாடன் வெளிச்சம்போட்டுக் காட்டுகிறார் என்பதைச் சில எடுத் துக்காட்டுகளுடன் எடுத்துரைத்தார் அவர். மேஜிக்கல் ரியலிசம் போன்ற எழுத்து உத்திகளைப் பயின்று விரு துகளுக்காகவும் பாராட்டுகளுக்காகவும் இல்லாமல் அன்றாடத்தினைப் பேசும் அவரது எழுத்து யாருடைய பரிந்துரையுமின்றி அதன் தரத்தால் மட்டுமே நிலை த்து நிற்கும் என்றார் மகாதேவன் அவர்கள்.

ஏற்புரையாற்றிய நாஞ்சில் நாடன் அவர்கள், போற்று தலையும் புகழுரைகளையும் நோக்கமாகக் கொண்டு படைப்பாளி செயல்படுவதில்லை எனினும் இது போன்ற அங்கீகாரங்கள் மனவலிமை அளிக்கும் என்றார். கி. ரா விருது மேலும் பத்து வருடங்கள் பணியாற்றுவதற்கான வலிமையைத் தந்திருப்பதாகத் தெரிவித்தார். எழுத் தாளன் எழுத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு பிழைக்க முடியாது எனும் சூழல் நிலவுவ தால்தான் அவன் வேறு பணிகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. நாஞ்சில் நாடன் வந்தார்; ஆரல்வாய்மொழிக் கோட்டையின் கதவு களை அகலத் திறந்து விட்டார்; ஓஹோ என்று பார்த்து வியந்தது உள்ளே புகுந்த வாசகர் கூட்டம் எனப் பாராட்டிய கி.ரா. அவர்களின் பெயரால் ஏற்படுத்தப் பட்ட விருதினைத் தான் பெறுவது பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது எனக் குறிப்பிட்டு நாஞ்சில் நாடன் ஆற்றிய இலக்கிய நயம் ததும்பம் உணர்ச்சிபூர்வமான பேச்சு அவையோருக்குச் சிறந்த விருந்தாக அமைந்தது.



aravind.v@thaiveed.com









# பயங்கரவாதப் பிரிவினைவாதம்!

## மகிந்த காலம் (2005 - 2010)

### தமிழில் - என். சரவணன்

4

மகாவம்சத்தின் 6-வது தொகுதியானது 1978-2010 வரையான காலத்தைப் பற்றி பேசும் தொகுதி. இறுதியாக வெளிவந்த 6வது தொகுதி 'மகாவம்சம்' 1978- 2010 காலத்தைப் பற்றியது. ஜே.ஆர். காலம் தொடக்கம் மகிந்த ராஜபக்ச காலம் வரையானது அது. அதாவது ஈழப்போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து முள்ளிவாய்க்கால் முடிவு வரையிலானது. இதில் தமிழ் மக்களுக்கு மிகவும் அவசியப்படும் பகுதி 'பயங்கரவாதம்' என்கிற தலைப்பில் எழுதப்பட்டுள்ள பகுதியாகும்.

இந்த காலப்பகுதியில் ஆட்சி செய்தவர்களின் 'பாதுகாப்பு' அத்தியாயங்கள் மட்டும் இங்கே தொடராக வெளிவருகின்றன. ஜே.ஆர். பிரேமதாச, டி.பி. விஜேதுங்க, சந்திரிகா ஆகியோரின் காலத்தைப் பதிவு செய்கிற அத்தியாயங்கள் மூன்று மாதங்களாக தாய்வீட்டில் வெளியாகின. அந்த வரிசையில் இது இறுதி அத்தியாயம். மகிந்த ராஜபக்சவின் ஆட்சி காலத்து யுத்த நிலைமை பற்றியது.

இன்னும் சொல்லப்போனால் இறுதி யுத்தம் பற்றிய அரச பதிவுகள். மகாவம்சத்துக்காக இவ் அத்தியாயத்தை எழுதித் தருவதற்காக இறுதி யுத்தத்தில் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளும், இன்னும் சில சிங்கள நிபுணர்களையும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இதுவரை வெளியான மகாவம்சத் தொகுதிகளில் இத் தொகுதி தமிழர்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதைப்போலவே இந்த தொகுதியில் உள்ள இந்த அத்தியாயம் அதைவிட முக்கியமானது.

தமிழர்களின் அரசியல் அபிலாசை, அதற்கான போராட்டம், பற்றிய அரசின் கொள்கை என்ன? வியாக்கியானம் என்ன? இதற்கு அரசு வினையாற்றிய விதம் என்பவற்றை அறிவதற்கு இந்த தொகுதியில் பயங்கரவாதம் என்கிற பகுதி தமிழில் மொழிபெயர்த்து உங்களிடம் தருகிறோம்.

82. 2005 நவம்பரில், மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த போது, நாட்டின் பயங்கரவாத பிரிவினைவாத பிரச்சினை பெரும் நிச்சயமற்ற மற்றும் குழப்ப நிலையில் இருந்தது. பெப்ரவரி 2002-இல் இலங்கை அரசுக்கும் எல்.ரீ.ரீ.ஈ.க்கும் இடையே Z போர் நிறுத்த ஒப்பந்தம் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக செல்லுபடியான நிலையில், பிரச்சினைக்கு அமைதியான தீர்வைக்காண ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. ஆனால் எல்.ரீ.ரீ.ஈ. யின் எதிர்மறையான பிரதிபலிப்பு காரணமாக அது தோல்வியடைந்தது. ஆயுத பலத்தையும் அதே போல் நிதி வளங்களையும் கட்டியெழுப்புவதற்கான மூலோபாயங்களை அமுல்படுத்திய எல்.ரீ.ரீ.ஈ.யை எச்சரித்த யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள், ஒரு உறுதியான முடிவை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர். இதன் பிரதிபலிப்பாக, பல்வேறு நாடுகளில் வசிக்கும் எல்.ரீ.ரீ.ஈ சார்பு பிரதிநிதிகளின் மாநாடு பிரான்ஸில் 2003 ஓகஸ்ட் மாதம் நிகழ்ந்தது. அங்கு முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைய வடகிழக்கு மாகாணங்களுக்கான இடைக்கால சுயாட்சி அதிகார சபையை (ISGA) ஸ்தாபிக்க எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு முன்வைத்த திட்டத்தை அரசு நிராகரித்தது.

87. 2004 டிசம்பர் 26, சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பகுதியை மீண்டும் கட்டியெழுப்ப எல்.ரீ.ரீ.ஈ யின் ஆதரவு தேவை என்று எண்ணிய அரசாங்கம், வெளி நாட்டு மத்தியஸ்தர்கள் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ ஒத்துழைப்புடன் 'PTOMS' என்ற நிர்வாகப் பொறிமுறையை உருவாக்கியது. ஆனால் அதன் சட்டபூர்வத்தன்மை பற்றி ஜே.வி.பி தொடுத்த வழக்கின் விளைவாக அது உயர் நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் நிராகரிக்கப்பட்டது.

92. எல்.ரீ.ரீ.ஈ. தமது இராணுவ வலிமையை அதிகரிப்பதற்கு யுத்த நிறுத்த உடன்படிக்கையை சாதகமாக்கிக் கொள்வதற்காக இயங்கியது. ஆயுதங்கள், வெடிமருந்துகள், மனித வளங்கள் மற்றும் பயிற்சி ஆகியவற்றை வலுப்படுத்த அவ்வியக்கம் நடவடிக்கை எடுத்தது. மேலும் அதன் அரசியல் எதிரிகளைக் கொல்வது உட்பட ஒப்பந்தங்களை மீறும் பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. ஆயுதங்கள், கண்ணிவெடிகள், பீரங்கிகள், விமானங்கள், ஏவுகணைகள் உட்பட பல்வேறு வெடிபொருட்கள் வெளிநாடுகளில் இருந்து வாங்கப்பட்டு கப்பல்கள் மூலம் கொண்டுவரப்பட்டு முல்லைத்தீவு கடற்கரையில் உள்ள எல்.ரீ.ரீ.ஈ மையங்களில் தரையிறங்கியதன் மூலம் தங்களது ஆயுத பலத்தையும் போர் உபகரணங்களின் சக்தியையும் வலுப்படுத்திக் கொண்டனர்.

இக்காலப்பகுதியில், எல்.ரீ.ரீ.ஈ. சிறிய ரக விமானங் களைப் பயன்படுத்தி இராணுவத் உத்தியாக விமானத் தாக்குதல்களை நடத்துவதற்கு ஏற்றாற்போல் தமது விமானப்படை பலத்தினை வலுப்படுத்தி இருந்தனர். விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கும், விமான ஓடுபாதைகள் அமைப்பதற்கும் மட்டுமல்லாமல், அமைப் பின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வெளிநாடு களுக்கு அனுப்பி அவர்களுக்கு விமானிகளாக பயிற்சி அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2002 யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம், வடக்கு-கிழக்கில் இலங்கை அரசாங்கத்தினதும் எல்.ரீ.ரீ. ஈ.யினதும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு இருந்தது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் நிராயுதபாணிகளாக நுழைந்து அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள எல்.ரீ.ரீ.ஈ.க்கு அனுமதி வழங்கப்பட்டது. இந்த சந்தர்ப் பத்தைப் பயன்படுத்திக் கொண்ட எல்.ரீ.ரீ.ஈ. அந்தப் பிர தேசங்களில் தமது பிரிவினைவாத சித்தாந்தத்தைப் பரப்புவதற்காக அரசியல் அலுவலகங்களை நிறுவினர். அவர்கள் தங்கள் அமைப்பின் உறுப்பினர்களை நியமித் தனர், தங்கள் அமைப்பை எதிர்த்தவர்களைக் கொன்றனர், இரகசிய உளவுத்துறை பிரிவுகளை வழிநடத்திக் கொண்டு, ஆயுதங்களைச் சேகரித்தனர், தங்கள் சித்தாந்தத்தை ஏற்கத் தயங்கிய மக்களை அச்சுறுத்தினர்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை அமுலில் உள்ள காலப்ப குதியில் எல்.ரீ.ரீ.ஈ. ஆட்பலத்தை அதிகரிப்பதற்காக 1743 சிறுவர்கள் பலாத்காரமாக பயங்கரவாத நடவடிக் கைகளில் ஈடுபடுத்தப்பட்டதாகவும், அவர்களில் 253 பேர் கடத்தப்பட்டதாகவும் கண்காணிப்புக் குழு அறிவித் தது. அவ்வாறு கடத்தப்பட்ட குழந்தைகளின் பெற்றோர் அல்லது உறவினர்கள் கண்காணிப்புக் குழுவிடம் அளித்த புகார்களின் எண்ணிக்கை மட்டுமே பதிவு செய் யப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ.அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் இதுபோன்ற செயல்பாடுகளை விசாரிக் கவோ அல்லது புகார்களை குழுவிடம் சமர்ப்பிக்கவோ எதுவிதமான வழிகளும் இல்லாததால், தங்கள் அறிக் கைகளில் சேர்க்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் கூட முழுமையடையவில்லை என்பதை கண்காணிப்புக் குழு ஒப்புக்கொண்டது.

எல்.ரீ.ரீ.ஈ அமைப்பினர் தனது மேலதிக படையினரை வலுப்படுத்திக் கொள்வதற்காக, தமது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிரதேசங்களில் உள்ள முதியவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை இராணுவ சேவையில் சேர்த்துக் கொண்டதோடு ஒவ்வொரு குடும்பத்திலிருந் தும் ஒரு சிறுவரை அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பெற்றோர்களை நிர்ப்பந்தித்தது. பெண்கள் மற் றும் வயதானவர்கள் போர்க்காலத்தில் மேலதிக வேலை களுக்கு அமர்த்தப்படுவதற்கும் பயிற்சி அளிக்கப்பட் டது. இலங்கை கண்காணிப்புக் குழுவின் அறிக்கைக ளின்படி, 2002-ஆம் ஆண்டில், எல்.ரீ.ரீ.ஈ யில் இருந்த 14,000 தீவிர உறுப்பினர்கள் 2006 அளவில் 25,000 ஆக உயர்ந்தது.

இக்காலப்பகுதியில், எல்.ரீ.ரீ.ஈ. தமது சர்வதேச அமைப் புகளின் வலையமைப்பை எவ்வித இடையூறும் கட்டுப் பாடும் இன்றி மீளமைத்ததுடன், நிதி மற்றும் ஆயுத சேகரிப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தினர். 2003 ஜூலையில், பல்வேறு நாடுகளில் பரவியிருந்த எல்.ரீ.ரீ.ஈ. கிளை அமைப்புகளின் உறுப்பினர்களை அழைத்து, சர்வதேச அமைப்புகளின் வலையமைப்பை மறுசீரமைக் குமாறு அமைப்பின் சர்வதேச அமைப்பு மையங்களுக்கு அறிவுறுத்தினர். இலங்கையில் தனி நாட்டை உருவாக் கும் தங்களது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள பெருந்தொகை நிதி தேவைப்படுவதாகவும், எனவே நிதி சேகரிப்பு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் எல்.ரீ.ரீ.ஈ புலம்பெயர் தமிழர்களுக்கு அறிவித்த துடன் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் அவ்வாறு செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவக் கட்ட மைப்பை விரிவுபடுத்துவதற்காக சுனாமி அனர்த்தத்தை மீளக் கட்டியெழுப்புதல் என்ற போர்வையில் வெளிநாடு களிடமிருந்து பல்வேறு வகையான உதவிகளைப் பெற் றுக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 'தமிழர் புனர்வாழ்வுக் கழகம்' (T.R.O) ஊடாக இந்த நிதி நாட்டுக்கு கொண்டு வரப்பட்டது. அவ்வாறு திரட்டப்பட்ட நிதியினை சேகரித்து வைப்பதற்காக வடக்கு-கிழக்கு அபிவிருத்தி வங்கி எனும் பெயரில் ஒரு வங்கியும் கிளி நொச்சியில் நிறுவப்பட்டது

**107.** போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் அறிக்கையின் படி, 2002 முதல் 2006 வரை எல்.ரீ.ரீ.ஈ. 5461 முறையும், அரசுப் படைகள் 351 முறையும் போர் நிறுத்த ஒப்பந் தத்தை மீறியிருந்தன. யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு கிடைத்த அனுமதியின் பிரகாரம், கட்டுப் பாட்டு பிரதேசம் மற்றும் சொத்து அளவு என்பவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு எல்.ரீ.ரீ.ஈ கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை விசாரிக்க சந்தர்ப்பம் கிடைக் காத சூழ்நிலை போன்ற நிலைமைகளின் அடிப்படை யில் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு உடன்படிக்கையை மீறிய சந் தர்ப்பங்கள் மேற்கூறிய எண்ணிக்கையை விட அதிக மாக இருப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக கண்காணிப்பு குழு தெரிவித்தது. 2006 ஏப்ரல் 08, அன்று, கனடாவும், அந்த ஆண்டின் மே மாதத்தில் ஐரோப்பிய ஒன்றியமும் எல்.ரீ.ரீ.ஈயை ஒரு தடைசெய்யப்பட்ட அமைப்பாக அறி வித்ததோடு, இலங்கையில் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களின் உயிரின் பாதுகாப்புக்கு அது பொறுப் பேற்காது என்று எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு அச்சுறுத்தியது. கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்கள் 2006 செப்டம் பர் முதல் 2007 மே மாதம் வரை கண்காணிப்பு நடவடிக் கைகளில் பங்கேற்பது கட்டுப்படுத்தப்பட்டது. எந்த வொரு சம்பவமோ ஒப்பந்த மீறலோ இடம்பெற்றதா என்பதை கண்காணிப்பது முற்றிலுமாக நிறுத்தப்பட்டது.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்த வேளை,

எல்.ரீ.ரீ.ஈ. பலமாக கட்டியெழுப்பப்பட்ட போதிலும், அரசாங்கத்தின் முப்படைகளின் முன்னோக்கிய பாதை தேக்கமடைந்தது. இரு தரப்பினருக்கும் இடையிலான மோதலை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதான உடன்படிக்கைகளின் ஊடாக பிரிவினைவாத பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதில் நம்பிக்கை கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பாதுகாப்புப் படைகளை வலுப்படுத்துவதில் போதிய கவனம் செலுத்தவில்லை. மேலும்,'சுது நெலும்' மற்றும் 'தவலம' போன்ற பிரச்சாரங்கள் மூலம் மக்கள் மத்தியில் யுத்தம் ஊக்கமளிக்கப்பட்டது. இதன் விளைவாக, 2005 இறுதியில், எல்.ரீ.ரீ.ஈ.யை தோற்கடிக்கும் பலம் பாதுகாப்புப் படைகளிடம் இல்லை என்ற கருத்து சிலரிடையே இருந்தது. இராணுவ வலிமையை குறைத்து மதிப்பிடும் போக்கு ஊடகங்களின் மத்தியில் காணப்பட்டது. எனவே, ஆயுதப் போரைப் பற்றி சிந்திப்பது கூட பயனற்றது என்றும், அது நீண்ட காலமாக இடம்பெற்று வருகிறது என்றும், ஆனால் அது எந்த வெற்றிகரமான முடிவுகளையும் தரவில்லை என்றும், பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவதே ஒரே தீர்வு என்றும் பரவலாக நம்பப்பட்டது. எனினும் நாடு பிளவுபடாமல் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புடன் சமாதானத்தை ஏற்படுத்துவது கடினம் என்பதை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உணர்ந்திருந்தார். எனவே பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்ப்பதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன், தேவைப்பட்டால் மோதலுக்கு முகங்கொடுக்கும் நோக்கில் சம்பந்தப்பட்ட துறைகளின் மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

115. புதிய ஜனாதிபதி பதவியேற்றவுடன், எந்தவகையிலும் இடமும் கொடுக்காமல் எல்.ரீ.ரீ.ஈ யின் தாக்குதல்களை முடுக்கிவிட்ட அதேவேளை, அரசாங்க பாதுகாப்பை நிர்வகித்தல், மனிதவளம், ஆயுத சக்தி, பயிற்சி, புலனாய்வு சேவைகள், தகவல் தொடர்பு மற்றும் இராணுவ வீரர்களின் நலன் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் இராணுவ வீரர்களின் மன உறுதியை அதிகரிக்கும் திட்டங்களை செயல்படுத்தத் தொடங்கினார்.

118. முதலாவதாக, புதிய தலைமைத் தளபதியான ஜனாதிபதியின் கீழ் பாதுகாப்பு அமைச்சு மறுசீரமைக்கப்பட்டதுடன், முப்படைகளின் உயர் பதவிகளுக்கு எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டிய இராணுவ சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, இராணுவம் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ. எதிரிப் படைகளுடன் நல்ல அனுபவம் கொண்ட அவரது சகோதரரான கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார். விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா மற்றும் கடற்படைத் தளபதி பதவியை வகித்த வைஸ் அட்மிரல் வசந்த கரன்னாகொட ஆகியோர் அவர்கள் வகித்த அதே பதவிகளில் தக்கவைக்கப்பட்டனர். எவ்வாறாயினும், இராணுவத் தளபதி பதவியை வகித்த மேஜர் ஜெனரல் சாந்த கோட்டேகொடவுக்கு பதிலாக போர் முனைகளில் வெற்றிகரமான பெறுபேறுகளை பெற்றுக்கொண்ட மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா சில மாதங்களில் ஓய்வு பெறவிருந்த போதிலும், அவரை இராணுவத் தளபதி பதவிக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. பிரேசிலுக்கான இலங்கைத் தூதுவராக 18 மாதங்கள் மாத்திரமே சேவைக்காலம் கொண்டமேஜர் ஜெனரல் சாந்த கோட்டேகொட நியமிக்கப்பட்டார்.

அதற்கமைய, பாதுகாப்பு அமைச்சின் சில முக்கிய பதவிகளுக்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்ட பின்னர், எல்.ரீ.ரீ.ஈ.யால் முன்னெடுக்கப்படும் எந்த ஒரு தாக்குதலையும் எதிர்கொள்ளும் வகையில் அமைச்சும் மறுசீரமைக்கப்பட்டது. அதன்படி, முதலாவது பாதுகாப்பு பிரிவு, இரண்டாவது பாதுகாப்பு தொழில்நுட்ப பிரிவு, நிர்வாகப் பிரிவு, பொலிஸ் பிரிவு, சிவில் பாதுகாப்பு பிரிவு, கருத்திட்டப் பிரிவு என்பவற்றினால் அமைச்சின் சகல செயற்பாடுகளும் ஏழு மேலதிக செயலாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. தேசிய பாதுகாப்பு தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளை முறைப்படுத்தி நவீன ஆயுத உபகரணங்களை செயற்படுத்த வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருந்தது. அதற்கமைய பாதுகாப்பு அமைச்சில் மீளமைக்கப்பட்ட அனைத்து பிரிவுகளின் கீழும் அப்போது நிலவிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்துவதற்கும் புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

122. எல்.ரீ.ரீ.ஈ.யின் சாதனைகள் மற்றும் இலங்கை அரசுப் படைகளின் தோல்விகள் குறித்து நீண்டகாலமாக 'தமிழ் நெட்' இணையத்தளம் மூலமாகவும், பல்வேறு செய்தித்தாள் பத்திகள் மூலமாகவும் பரப்பப்பட்டு வந்த மிகைப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு பதிலளிக்கும் வகையில், பாதுகாப்புச் செயலாளர் அரசாங்கத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய உண்மையான தகவல்களை உலகிற்கு முன்வைக்க ஒரு புதிய வலைத்தளத்தை (www.defence.lk) தொடங்கினார். 4-வது ஈழப்போர் அல்லது மனிதாபிமான நடவடிக்கை மாவிலாற்றில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது, அரசாங்கத்தின் பாதுகாப்புப் படைகள் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருந்த போது இந்த புதிய இணையத்தளத்தின் மூலம் பரப்பப்படும் உண்மைத் தகவல்களால், 'தமிழ் நெட்' இணையத்தளத்தின் பொய்ப் பிரச்சாரமும் பலவீனப்படுத்தப்படக்கூடியதாய் இருந்தது.

123. நாட்டில் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதில் ஆற்றிய பங்களிப்பு தொடர்பான உண்மை தகவல்களை உடனடியாக ஊடகங்களுக்கு பரப்ப வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகுமென உணர்ந்து 2006 ஜூலை 01 ஆம் திகதி தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையம் தாபிக்கப்பட்டது. புதிய இணையத்தளத்தினூடாக இந்த தகவல்களை பகிர்வதற்கு மேலதிகமாக, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள பல்வேறு ஊடக வலையமைப்புகளுக்கு தகவல்களை துல்லியமாக வழங்குவதும், தகவல்களை சேகரிப்பதும் இந்நி

றுவனத்தின் பிரதான செயற்பாடு ஆகும்.

126. பாதுகாப்புப் படையினரின் மனநிலை, ஒழுக்கம் மற்றும் மன உறுதியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த அரசாங்கம், சீருடைகள், காலணிகள், காலுறைகள், பைகள் போன்ற தனிப்பட்ட தேவைகள் இன்மையால் பாதிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப்படை உறுப்பினர்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முன்னுரிமை அளித்ததுடன், இராணுவ வீரர்களின், குறிப்பாக வடக்கில் சேவையாற்றுபவர்களின் நகர்வுகளை எளிதாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. A9 வீதி யானது எல்.ரீ.ரீ.ஈ யினரின் கட்டுப்பாட்டில் இருந்தமையினால் யாழ்ப்பாணத்தில் உள்ள சுமார் 40,000 இராணுவ படை வீரர்களுக்கு உணவு மற்றும் பானங்களை எடுத்துச் செல்லவும், விடுமுறையைக் கழிக்க விமானம் மற்றும் கடல் வழியாக கிராமப்புறங்களுக்கு பயணிக்கவும் நேரிட்டது.

127. இராணுவத்தினர் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தின் சாதாரண மக்களுக்கும் திருகோணமலைக்கோ அல்லது நாட்டின் வேறு பகுதிகளுக்கோ செல்ல போக்குவரத்து வசதிகள் தேவைப்பட்டன, அவர்கள் அனைவரும் பொருட் களை ஏற்றிச் செல்லும் கப்பல்களில் பயணிக்க வேண்டியிருந்தது. பயணிகளை ஏற்றிச் செல்ல அடிப்படை வசதிகள் இல்லாத இந்த கப்பல்களில் பயணிக்க அரசாங்கம் முடிவு செய்தது. ‘த ஜெட் லைனர்’ என அழைக்கப்படும் இந்தோனேசிய பயணிகள் கப்பல் குத்தகைக்கு எடுக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கும் திருகோணமலைக்கும் இடையில் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்பட்டது. ஒரே நேரத்தில் 700 பேரை மட்டுமே ஏற்றிச் செல்லக் கூடிய ஒரு சரக்குக் கப்பலில் அடிப்படை வசதிகள் இல்லாமல் ஒன்றரை நாட்கள் பயணித்த இராணுவ வீரர்கள், ஒரே நேரத்தில் 3,000 பேரை ஏற்றிச் செல்லக் கூடிய பயணிகள் கப்பலில் எளிதாக பயணிக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

பாதுகாப்புப் படையினர் போர்க்களத்தில் இறந்தபோது, சடலங்கள் அவர்களின் கிராமங்களுக்கு கொண்டு வரப்பட்டதுடன் இறந்தவர்களின் குடும்பங்கள் மட்டுமல்லாது, கிராமவாசிகளும் தனிமைப்படுத்தப்படாத வகையில், அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்பதையும் தெளிவுபடுத்த ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன்படி, போர்க்களத்தில் பயங்கரவாத தாக்குதல்களில் பாதுகாப்பு படை உறுப்பினர்கள் மட்டுமன்றி பொதுமக்களும் கொல்லப்பட்ட சந்தர்ப்பங்களில் உடனடி இழப்பீடு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவ்வாறான நடவடிக்கைகளால் இளைஞர்கள் இராணுவத்தில் சேருவதற்கு கொண்டிருந்த தயக்கம் மறைந்து ஆயிரக் கணக்கானோர் இராணுவத்தில் சேர முன்வந்தனர்.

பாதுகாப்புப் படைகளில் சேர்வதன் முக்கியத்துவத்தை மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு உணர்த்தும் வகையில், பாதுகாப்பு அமைச்சு ஒரு விளம்பர நிகழ்ச் சித்திட்டத்தை ஆரம்பிக்க தீர்மானித்தது. ‘ட்ரை எட்ஸ்’ விளம்பர ஏஜென்சியின் வழிகாட்டுதலின் கீழ் ‘டயலொக்’ நிறுவனத்தின் அனுசரணையுடன் பாதுகாப்பு அமைச்சு ‘நாம் நமக்காக’ என்ற பெயரில் பிரச்சாரத்தை ஆரம்பித்தது.

இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் இரண்டு உள்ளன. பாதுகாப்புப் படையினரின் முக்கியத்துவம், தங்கள் உறுப்பினர்களை கவனித்துக்கொள்ள வேண்டியதன் அவசியம் மற்றும் அவர்கள் சமூகத்தின் ஒரு முக்கிய அங்கம் என்று மக்களை நம்ப வைப்பது பிரச்சாரத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். இரண்டாவது நோக்கம் நிதி திரட்டுவது. பாதுகாப்பு படையினரின் நலனுக் காக சேகரிக்கப்பட்ட நிதி ஊடகங்கள் மூலம் அறியப்படுவதுடன், பெறப்படும் நிதி போர் வீரர்களுக்கு வீடுகளை நிர்மாணிக்க பயன்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் முதல் படியாக 2007-ஆம் ஆண்டு மே மாதம் 15-ஆம் திகதி அனுராதபுரம் இப்பலோகம பிரதேசத்தில் பல ஏக்கர் நிலப்பரப்பில் பரந்து விரிந்து கிடக்கும் ‘ரணஜயபுர ரணவிரு கிராமம்’ அமைக்கப்பட்டது. சகல வசதிகளுடனும்1509 வீடுகளைக் கொண்ட இந்த ரணவிரு கிராமத் திற்கு மேலதிகமாக மனிதாபிமான நடவடிக்கைகளின் போது பல பிரதேசங்களில் இதே போன்ற கிராமங்கள் நிறுவப்பட்டு முறையான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் போர் வீரர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இக்காலப்பகுதியில், போர்க்கள நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள போர் வீரர்கள், உயிரிழந்த, அங்கவீனமுற்ற மற்றும் உயிர்த்தியாகம் செய்தவர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்போரின் நலன்களை வெற்றிகரமாக நிறைவேற்றும் நோக்குடன் ‘போர்வீரர்கள்அதிகார சபை’ தாபிக்கப்பட்டது.

இந்த சூழ்நிலையில், பல ஆண்டுகளாக, பாதுகாப்புத் துறையில் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் எதிர்கொண்ட பல சிக்கல்கள் தீர்க்கப்பட்டன, மேலும் பாதுகாப்பு சேவைகளில் இளைஞர்கள் நுழைவதில் ஆர்வம் இருந்தது. 2006-ஆம் ஆண்டில், இராணுவத்தால் 7236 புதிய உறுப்பினர்களைச் சேர்க்க முடிந்தது, 2007-ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 24,352 ஆகவும், 2008-ஆம் ஆண்டில் 35,637 ஆகவும் அதிகரித்தது. 2006-2007-ஆம் ஆண்டில், கடற்படையில் 10,891 பேரும், 2008-ஆம் ஆண்டில் 6436 பேரும், 2006-2007 ஆம் ஆண்டில் 4621 பேரும், 2008-ஆம் ஆண்டில் 6251 பேரும் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். அதே போன்று, விசேட அதிரடிப் படையில் 2006-ஆம் ஆண்டில் 644 பேரும், 2007-ஆம் ஆண்டில் 5045 பேரும், 2008-ஆம் ஆண்டில் 1216 பேரும், 2008-ஆம் ஆண்டு சிவில் பாதுகாப்புப் படைக்கு 38,351 பேரும் தேர்வு செய்யப்பட்டனர்.

பாதுகாப்புப் படையினருக்கு மேலதிகமாக, பொலிஸிலும் போதுமான அதிகாரிகள் பற்றாக்குறை நிலவியது. மற்றும் பல்வேறு பதவிகளில் பல வெற்றிடங்கள் இருந்தன. இதனால் ஏற்பட்ட சிக்கலான சூழ்நிலையைத்

தவிர்க்கும் பொருட்டு, பொலிசில் 2006 ஆம் ஆண்டில் 4803 வெற்றிடங்களும், 2007 ஆம் ஆண்டில் 5045 வெற்றிடங்களும், 2008 ஆம் ஆண்டில் 4212 வெற்றிடங்களும் நிரப்பப்பட்டன. அதன்படி, 2006 ஆம் ஆண்டில் ஜூன் மாதம் ஆரம்பிக்கப்பட்ட மனிதாபிமான நடவடிக்கையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு தேவையான பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் தேசிய பாதுகாப்பு பிரிவு மேலும் பலப்படுத்தப்பட்டது.

2006 ஜூன் 15 அன்று, வடமத்திய மாகாணத்தில் கனுகஹவெவவில் இருந்து கெப்பட்டிகொல்ல நோக்கி பஸ்ஸில் பயணித்த 15 சிறுவர்கள் உட்பட 64 பொது மக்கள் எல்.ரீ.ரீ.ஈ.யினரால் கொல்லப்பட்டதில் 87 பேர் காயமடைந்தனர். சம்பவ இடத்தை பார்வையிட்ட ஜனாதிபதி, பயங்கரவாத தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் போதிய பாதுகாப்பு இல்லை என்று குறிப்பிட்டு, பொதுமக்களை பாதுகாப்பதற்கு முறையான அமைப்பொன்றை ஸ்தாபிகும்படி பாதுகாப்பு செயலாளருக்கு அறிவுறுத்தினார்.

அதன்படி, பயங்கரவாதிகளால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக 1980-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ‘தேசிய தன்னார்வ கிராம பாதுகாப்பு சேவை’யை மேம்படுத்துவதற்கு பொருத்தமான அமைப்பை வடிவமைக்கும் பணியை ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவிடம் பாதுகாப்பு செயலாளர் ஒப்படைத்தார். 'கம் பட்டா' என்று அப்போது அழைக்கப்பட்ட கிராம பாதுகாவலர்களுக்குப் பதிலாக சிவில் பாதுகாப்புப் படையை முறையாக ஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2006-ஆம் ஆண்டின் 1462/20-ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தாபிக்கப்பட்ட சிவில் பாதுகாப்பு படையணியில் 19,424 தொண்டர் கிராம பாதுகாவலர்கள் உட்பட மொத்தம் 41,500 சிவில் பாதுகாப்பு படையினர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். ஹொரண கும்புகா முகாமில் பொலிஸ் அதிகாரிகளால் ஒரு மாத பயிற்சி வழங்கப்பட்ட இந்த கிராம பாதுகாவலர்களுக்கு அதுவரை பெறப்பட்ட சிறிய தொகை சம்பளத்திற்கு பதிலாக நாளாந்த சம்பளம் வழங்கப்பட்டது. ராணுவ சீருடையை ஒத்த சீருடை மற்றும் T-56 ரக துப்பாக்கியும் வழங்கப்பட்டது. சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தை வடிவமைத்த ரியர் அட்மிரல் சரத் வீரசேகர அதன் முதலாவது பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். புதிய துறை நிறுவப்பட்டதன் மூலம், இதுவரை செய்ததைப் போலவே இராணுவப் பயிற்சியைப் பெற்ற போர் வீரர்கள் கிராமங்களின் பாதுகாப்புக்குப் பயன்படுத்தப்படுவதற்குப் பதிலாக மிகவும் பயனுள்ள இராணுவக் கடமைகளுக்கு ஈடுபடுத்த அனுமதிக்கப்பட்டனர்.

எல்.ரீ.ரீ.ஈ. பலவிதமான நவீன ஆயுதங்களை வைத்திருந்த போது, அரசாங்க பாதுகாப்புப் படையினரிடம் ஆயுத பற்றாக்குறைகள் பல இருந்தன. அவற்றில், பாதுகாப்புப் படையினருக்கு ஆயுதங்கள் வாங்கும் முறைக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் இருந்தன. தனியார் விநியோக நிறுவனங்களிடமிருந்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொண்டு அரசாங்க பாதுகாப்பு படையினருக்கு அத்தியாவசிய ஆயுதங்களை விநியோகிக்கும் முறையின் காரணமாக, தேர்ந்தெடுக்கப்பட்ட கம்பனிகள் மூலம் அரசாங்க பாதுகாப்பு படையினரால் அத்தியாவசிய ஆயுதங்களை கொள்வனவு செய்யும் விநியோக முறை காரணமாக இராணுவத்தின் உயர் அதிகாரிகள் ஊழல் மற்றும் மோசடிகளில் ஈடுபட்டனர் என்று சந்தேகங்கள் எழுப்பப்பட்டதன் காரணமாக அவர்கள் அவமானப்படுத்தப்பட்ட சம்பவங்களும் நடைபெற்றன. சமகால உலக அரசியல் போக்குகளின்படி, உலகின் முன்னணி நாடுகள் சில நாடுகளுக்கு இடையில் மட்டுமே ஆயுத பரிவர்த்தனைகளை மேற்கொள்வதையே சரியானதென ஏற்றுக்கொண்டிருந்தன. இந்த காரணிகளைக் கருத்திற்கொண்டு, பாதுகாப்பு அமைச்சில் நிலவும் முறைமையில் ஊழல் மோசடிகள் இடம்பெறுவதற்கான சாத்தியக்கூறுகளைத் தவிர்ப்பதற்கும், உயர் இராணுவ அதிகாரிகள் மீது மக்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும், உலக போக்குகளுக்கு ஏற்ப வெளிப்படையான முறையில் பாதுகாப்பு படையினருக்கு ஆயுதங்களை வழங்குவதற்கும், பாதுகாப்பு அமைச்சின் கீழ் 'லங்கா லொஜிஸ்டிக்ஸ் அன்ட் டெக்னாலஜிஸ்' நிறுவனம் தாபிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் அனைத்து பங்குகளும் இலங்கை அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் வசம் இருந்தன. ஆயுதப்படைகளுக்குத் தேவையான உபகரணங்களையும் சேவைகளையும் வாங்குவதற்கு வசதியளிக்கும் முக்கிய மற்றும் ஒரே நிறுவனமாக இது மாற்றப்பட்டது. இதன்படி, அரசாங்கங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்வதில் மத்தியஸ்தர்களை நீக்குவதன் மூலம் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் நாடுகளின் அரசாங்கங்களின் ஊடாக இலங்கை அரசாங்கம் உற்பத்தியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் ஒரு முறைமை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த புதிய கொள்முதல் முறையின் கீழ், சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், இஸ்ரேல், உக்ரைன், இந்தியா மற்றும் குறைந்த அளவில் பிரேசில் ஆகிய நாடுகளில் இருந்து உயர்தர நவீன ஆயுதங்களை விரைவாகவும் நம்பிக்கையுடனும் வாங்க முடிந்தது, இதன் மூலம் இராணுவ வலிமையை மேம்படுத்த முடிந்தது. அதன்படி, கவச வாகன உடல்கள், கவசம் மற்றும் ஜாக்கெட்டுகள், அவ்ரோ விமானங்கள், படகுகள், புஷ் மாஸ்டர் துப்பாக்கிகள், துப்பாக்கித் தோட்டாக்கள் போன்றவை தேவைக்கேற்ப கொள்வனவு செய்யப்பட்டு 'சாகர' கப்பல் போன்ற இராணுவ உபகரணங்களை வழங்குவதன் மூலம் பாதுகாப்பு படையினரின் ஆயுத பலத்தை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வடகிழக்கு மாகாணங்களுக்கு வெளியே உள்ள ஏனைய பிரதேசங்களில் நாட்டின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் பல்வேறு வகையான அழிவுகரமான நடவடிக்கைகளால் கவலைக்குள்ளாகி இருந்த நிலையில், எல்.ரீ.ரீ.ஈ.யின் உத்திகளை நன்கு அறிந்திருந்த இராணுவத் தளபதிகள், இராணுவ உளவுத்துறையை

மறுசீரமைத்தனர், இது மனிதாபிமான நடவடிக்கையைத் தொடங்குவதற்கு முன்னர் அந்த நடவடிக்கைகள் குறித்து முன்கூட்டியே சரியான நேரத்தில் தகவல்களைப் பெறுவ தற்கான சிறந்த வழியாக இராணுவப் புலனாய்வுப் பிரிவு மறுசீரமைக்கப்பட்டது.

2006 வரை, நாட்டில் பல புலனாய்வு அமைப்புகள் ஒருங் கிணைப்பு இல்லாமல் செயல்பட்டன. இந்த நிலைமை பயங்கரவாதத்தை ஒழிப்பதில் பாரிய பிரச்சினை என்பதை அனுபவத்தில் அறிந்திருந்த பாதுகாப்புச் செயலாளர், அப்போதைய பயங்கரவாத விசாரணைப் பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு, கொழும்பு குற்றத்த டுப்புப் பிரிவு, அரச புலனாய்வுப் பிரிவு, பொலிஸ் விசேட பிரிவு, மேல் மாகாண புலனாய்வுப் பிரிவு, இராணுவப் புலனாய்வுப் பிரிவு, கடற்படை புலனாய்வு பிரிவு, விமா னப்படை புலனாய்வு பிரிவு மற்றும் அனைத்து முகவர் நிலையங்களும் ஒன்றிணைக்கப்பட்டு 'தேசிய புலனாய்வு பிரிவு' உருவாக்கப்பட்டு இராணுவத் தளபதியின் கீழ் கொண்டு வரப்பட்டது. அமைச்சரவை அனுமதியுடன் இருந்த தலைவருக்கு அனைத்து புலனாய்வு சேவைகளி லும் நேரடி அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த அமைப்பு ரீதியான நகர்வு உளவுத்துறை அதிகாரிகளின் ஒரு வலைப்பின்னலை வழங்கியது. அவர்கள் மிகவும் நுட் பமான விஷயங்களில் கூட ஆர்வத்துடன் செயல்பட வழி சமைத்ததுடன், அதிகாரிகளின் வலையமைப்பை நாடா ளாவிய ரீதியில் செயற்படுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாணத்திலும் வன்னியிலும் இடம்பெற்ற மனி தாபிமான நடவடிக்கைகளின் போது, பயங்கரவாதி களால் நாட்டின் ஏனைய பகுதிகளில் திட்டமிடப்பட்ட பல தாக்குதல்களைத் தடுத்ததுடன், கரும்புலிகள், கடற் புலிகள், தற்கொலை குண்டுதாரிகள் பயன்படுத்திய இடைநிலை நபர்களையும் அவர்கள் நடத்திய தாக்கு தல்களுக்குப் பொறுப்பான பயங்கரவாதிகளையும் உள வாளிகளைப் பயன்படுத்தி கைது செய்ய முடிந்தது. முப் படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், உயர் பதவி வகிக்கும் பொலிஸ் அதிகாரிகள், அமைச்சர்கள், இராஜதந்திரிகள் போன்ற உள்நாட்டிலும் வெளிநாட் டிலும் உள்ள பிரமுகர்களின் உயிர்களைப் பாதுகாப் பதன் மூலமும், மனிதாபிமான நடவடிக்கையின் மூன்று வருட காலப்பகுதியில் நாட்டின் அபிவிருத்தி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளைத் தொடர்வதற்கும் தேவை யான சூழல் கிடைத்தது.

இக்காலப்பகுதியில், முப்படையினரினதும் பொலிஸாரி னதும் கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மேம்ப டுத்துவதற்காக பல கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறு வனங்கள் தாபிக்கப்பட்டன. ‘பாதுகாப்பு விவகாரங்கள் பற்றிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்’ எனும் ஒரு நிறுவனத்தின் கீழ் முப்படைச் சேவைகளிலும் தனித் தனியான ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வ தற்காக 2006 ஜூலை மாதத்தில் தாபிக்கப்பட்டது. பல்க லைக்கழகங்களிலிருந்து பேராசிரியர்கள் மற்றும் விரிவு ரையாளர்கள் இந்த நிறுவனத்தின் ஆலோசனை சபைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன், அவர்களின் நிபுணத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் பயன் பாட்டிற்காக பல்வேறு உபகரணங்கள் உருவாக்கப் பட்டன. இந்த நிறுவனம் உருவாக்கிய உபகரணங்களில் ஆளில்லா வான்வழி விமானங்கள் மற்றும் வெடிகுண்டு பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் அதிவேக படகுகள் ஆகியன அவற்றில் முக்கியமானவையாகும்.

பாதுகாப்பு படையினரின் மனவலிமையை மேம்படுத்து வதற்காக 2008-ஆம் ஆண்டின் 05-ஆம் இலக்க சட் டத்தின் கீழ் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு கலைக்கழகம் ஒரு பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. போர் வீரர்களின் பிள்ளைகளுக்கு முறையான கல்வியை வழங்குவதற்கு பொருத்தமான பாடசாலையைக் கண்டு பிடிப்பது போர் வீரர்களின் கடமைகளின் தன்மையைப் பொறுத்து மிகவும் கடினமான பணியாக இருந்தது. அதற்காக 2007 ஜனவரி 17-ஆம் திகதி கொழும்பு மலாய் வீதியின் 34-ஆம் இலக்கம் கொண்ட இடத்தில் ஓர் முழுமையான சேவைபாடசாலை ஒன்று திறக்கப் பட்டது. இப்பாடசாலை கல்வி அமைச்சுடன் இணைந்த அரசாங்க பாடசாலையாகும், இதன் மொழி மூலம் சிங்கள மொழியில் இருந்தாலும், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளை கற்பிப்பதில் சிறப்பு கவனம் செலுத் தப்பட்டது.

எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் தாக்குதல்களால் ஏற்பட்டிருந்த நிலைமையை நன்கு அறிந்திருந்த இலங்கை அர சாங்கம், பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்த நட வடிக்கை எடுத்தது. எல்.ரீ.ரீ.ஈ. சகல கட்சிகளின் அரசியல் தலைவர்களையும் பொதுமக்களையும் கொலை செய் வதை அந்த அமைப்பு தொடர்ந்தும் துரிதப்படுத்திய போதிலும், பேச்சுவார்த்தைகளின் ஊடாக அரசியல் தீர்வை எட்டுவதற்கு அரசாங்கம் தயாராக இருந்தது.

இதற்கிடையில், இலங்கை அரசு மற்றும் எல்.ரீ.ரீ.ஈ. ஆகிய இருதரப்பினருக்கும் டோக்கியோவில் நடைபெற்ற இலங் கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் இணைத் தலைமை நாடுகள் அழைப்பு விடுத்தன. அங்கு எல்.ரீ. ரீ.ஈ. அமைப்பால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை யை அமெரிக்கா கடுமையாக விமர்சித்தது. எல்.ரீ. ரீ.ஈ.யினர் இலங்கை பாதுகாப்புப் படையினருடன் போரில் இறங்கினால், வலுவான உறுதியுடன் ஒழுங்க மைக்கப்பட்டுள்ள இலங்கை பாதுகாப்புப் படைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வது அவர்களுக்கு கடினமாக இருக்கும் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் எச்சரித்தார்.

**147.** 2005 நவம்பர் 18-ஆம் திகதி நிலவரப்படி, 2002 யுத்த நிறுத்தத்தின் கீழ் பேச்சுவார்த்தைகள் முடிவுக்கு வந்து இரண்டு வருடங்களும் எட்டு மாதங்களும் கடந்திருந் தன. 1995ல் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் பிடியில் இருந்து விடுவிக் கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டம் அரசாங்கத்தின் கட்டுப் பாட்டில் இருந்ததோடு, 2002 யுத்த நிறுத்த உடன்படிக்

கையின் பிரகாரம் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்கள் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்தது. கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பெரும்பாலானவை அரசின் கட்டுப்பாட்டில் இருந்ததோடு ஒரு சில பகுதிகள் மாத்திரமே எல்.ரீ.ரீ.ஈ.யினரின் கட்டுப்பாட்டில் இருந்தன. 2006 அளவில், அரசாங்கம் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் படி செயற்பட்டுக் கொண்டிருந்த அதேவேளை, அதை மீறி பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்ட எல்.ரீ.ரீ.ஈ.யினர், அந்த மாவட்டங்களில் அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்களில் தமது அதிகாரத்தை மேலும் பலப்படுத்தினர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த இரண்டு மாதங்களில், அரசாங்கத் தரப்பு போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டு வந்த அதேவேளை தாக்குதல்களை உக்கிரமாக்கிய எல்.ரீ.ரீ.ஈ யினர், 93 பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் உட்பட பல்வேறு பகுதிகளில் பெருந்தொகையான பொதுமக்களையும் கொன்ற போதிலும், அரசாங்கம் எல்.ரீ.ரீ.ஈயினரை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது.

2006 ஜனவரி 26 அன்று, அமைதிப் பேச்சுவார்த்தைக்கான எல்.ரீ.ரீ.ஈ.யினரின் அழைப்புக்கு பதிலளிக்கும் வகையில், சிறுவர் பராமரிப்பு சேவைகள் அதிகார சபையுடன் இணைக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் தடுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டனர். தமது அமைப்பு மீண்டும் சமாதானத்தை குழப்பப் போவதில்லை என்று எல்.ரீ.ரீ.ஈ.யினரின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் கூறினார். இந்த நிலைமையையும் மீறி பல்வேறு பிரதேசங்களில் அவர்கள் தொடுத்த கொலை அலைகள் தொடர்ந்தன.

இதற்கிடையில், எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற கருணா குழுவுக்கும் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கும் இடையிலான முரண்பாடுகள் தொடர்ந்தன. 2006 பெப்ரவரி 07-ஆம் திகதி நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் தலையீட்டுடன் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை பாதையில் பிரவேசிக்க உடன்பட்டனர். முதல் பேச்சுவார்த்தை சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் பெப்ரவரி 22 மற்றும் 23 ஆகிய தேதிகளில் ஆரம்பித்தது. இந்தச் சுற்றுப் பேச்சுவார்த்தையில் எல்.ரீ.ரீ.ஈ. தரப்பின் சார்பில் அன்ரன் பாலசிங்கமும் அரசாங்கத் தரப்பின் சார்பில் நிமல் சிறிபால டி சில்வாவும் தலைமை தாங்கினர். ஜனநாயகத்தை மீட்டெடுத்தல், பல கட்சி முறைமையை பேணுதல், பன்மொழிகளுக்கு நியாயம் வழங்குதல், மனித உரிமைகளை பாதுகாத்தல், சிறுவர் போராளிகளை ஆட்சேர்ப்பு செய்வதை எதிர்த்தல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்தல், அதிகாரப் பகிர்வு பொறிமுறையை நிறுவுதல் போன்ற பல தலைப்புகளில் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்வது அரசாங்கத்தின் நோக்கமாகும். ஒரு முறையான பேச்சுவார்த்தைக்குள் நுழைவதற்கு முன்பு, எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பில் இருந்து பிரிந்து சென்ற கருணா குழுவுக்கு இலங்கை அரசாங்கம் உதவி செய்வதாக குற்றஞ்சாட்டி பேச்சுவார்த்தை மேசையில் இருந்து விலகியதை அடுத்து பேச்சுவார்த்தைகள் முறிந்து போயின.

156. அதனைத் தொடர்ந்து, எல்.ரீ.ரீ.ஈ அரசாங்க பாதுகாப்புப் படைகளின் கவனத்தை திசை திருப்பும் உத்திகளை நாடியதுடன் மனிதாபிமான நடவடிக்கையின் இறுதிக் கட்டம் வரை அவ்வப்போது தாக்குதல்களை நடத்தியதுடன் 2006 மார்ச் 25, அன்று, ஒரு தற்கொலை குண்டுதாரி கற்பிட்டியில் ஒரு கடற்படை டோரா கப்பல் மீது நடத்திய தாக்குதலினால் ஒன்பது வீரர்கள் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 07-ஆம் திகதி தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் திரு. வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் கொல்லப்பட்டதுடன், ஏப்ரல் 10-ஆம் திகதி கொடிகாமம் மற்றும் முகமாலை வீதியில் உள்ள மிருசுவில் என்ற இடத்தில் கிளைமோர் குண்டு ஒன்று வெடித்ததில் 10 பாதுகாப்புப் படையினரும் பொது மக்கள் இருவரும் கொல்லப்பட்டனர். அதே மாதம் 11-ஆம் திகதி, விடுமுறையில் இருந்து வீடு திரும்பும் கடற்படை வீரர்களை ஏற்றிச் சென்ற பஸ் மீது கிளைமோர் தாக்குதலில் 10 கடற்படை வீரர்களும் பொதுமக்களில் ஒருவரும் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 15 அன்று, திருகோணமலையில் பொதுச் சந்தையில் ஒரு குண்டு வெடித்து 15 பேரும், ஏப்ரல் 15 அன்று, வவுனியாவில் மூன்றுமுறிப்பு சந்தியில் இராணுவ வீரர்களை இலக்கு வைத்து ஒரு கிளைமோர் குண்டு வெடித்ததில் 10 படையினர் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 23 அன்று, திருகோணமலை, கோமரங்கடவல, கல்லம்பற்று பகுதியில் வயல்களில் வேலை செய்யும் 6 விவசாயிகள் துப்பாக்கி ஏந்திய எல்.ரீ.ரீ.ஈ. யினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

2006ஏப்ரல்25, அன்று, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகாவைத் தாக்கி கொலை செய்ய ஒரு தற்கொலைக் குண்டுதாரி பயன்படுத்தப்பட்டார். அந்த வருடம் மே மாதம் 27-ஆம் திகதி வில்பத்து தேசிய பாதுகாப்பு பூங்காவில் 07 பேரும் அதே மாதம் 29-ஆம் திகதி வெலிகந்த ஓமடியாமடு பிரதேசத்தில் நீர்ப்பாசன நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த 12 சிங்கள தொழிலாளர்களும் ஆயுதம் ஏந்திய எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர். ஜூன் 26 அன்று, கொழும்புக்கு அருகில் பன்னிபிட்டியவில் ஒரு தற்கொலை குண்டுதாரி பாதுகாப்புச் சபையின் தலைவர் மேஜர் ஜெனரல் பாரமி குலதுங்கவை கொன்றார். அந்த ஆண்டு ஓகஸ்ட் 20 அன்று, யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சின்னத்தம்பி சிவமகாராசாவும் சமாதான செயலகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கேதீஸ் லோகநாதனும் அதே மாதத்தில் கொல்லப்பட்டனர். நவம்பர் 10 அன்று, முதல் நாளில் T.N.A நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜும் படுகொலை செய்யப்பட்டார். கொழும்பு பித்தளை சந்தியில் வைத்து பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட

தற்கொலைத் தாக்குதல் முயற்சி தோல்வியில் முடிந்தது. 2008 ஜனவரி 01-ஆம் திகதி முன்னாள் அமைச்சர் டி.எம். திசாநாயக்க, 2008 மார்ச் 06-ஆம் திகதி, முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கே.சிவநேசன் மற்றும் 2008 ஏப்ரல் 06 ஆம் திகதி வட மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா ஆகியோர் படுகொலை செய்யப்பட்டனர்.

இத்தகைய கொடூரமான தாக்குதல்களுக்கு முகம்கொடுத்த போதிலும், இலங்கை அரசாங்கமும் வெளிநாட்டு மத்தியஸ்தர்களும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் அரசியல் தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளை கைவிடவில்லை. அதன்படி 2006 ஜூன் 8 மற்றும் 9-ஆம் திகதிகளில் நோர்வேயின் ஒஸ்லோவில் இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. எல்.ரீ.ரீ.ஈ. சர்வதேச கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு தாம் பொறுப்பல்ல என்று அந்த அமைப்பு தெரிவித்திருப்பதும், அந்த கண்காணிப்பாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவது. தொடர்பான உரையாடலும் இந்த இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் முக்கியப் பிரச்சினையாக மாற்றப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் எல்.ரீ.ரீ.ஈ. பிரதிநிதிகள் ஒஸ்லோவிற்கு வந்தனர். ஆனால் அவர்கள் பேச்சுவார்த்தையில் பங்கேற்கவில்லை, அதனால் அந்தப் பேச்சு வார்த்தை சுற்றும் முறிந்தது.

சமாதான முன்னெடுப்புகளில் இருந்து பின்வாங்கிய எல்.ரீ.ரீ.ஈ. மிக மோசமான நடவடிக்கைகளுடன் யுத்தத்தில் இறங்கினர். ஜூன் 15 அன்று, கெபிட்டிகொல்லாவில் பஸ் ஒன்றில் மிகப்பெரிய குண்டு ஒன்று வெடித்ததில் 15 பாடசாலை மாணவர்கள் உட்பட 64 பொது மக்கள் கொல்லப்பட்டனர். இதனால் முழு நாடும் அதிர்ச்சிக்குள்ளாகியது. எல்.ரீ.ரீ.ஈ.யினருக்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுப்பதை அரசாங்கத்தால் தடுக்க முடியவில்லை. அரசாங்க பாதுகாப்புப் படைகள் ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதை எதிர்கொள்ள தயாராக இருந்தன.

இக்காலப்பகுதியில், திருகோணமலை மாவட்டத்தில் சேருநுவர, அல்லை கந்தளாய் வீதியில் உள்ள மாவிலாறு அணையின் அணைக்கட்டுகள் எல்.ரீ.ரீ.ஈ.யினரால் மனிதாபிமானமற்று மூடப்பட்ட செயலுக்கு பதிலடியாக பயங்கரவாதத்திற்கு எதிரான மனிதாபிமான நடவடிக்கை 2006 ஜூலை 20 அன்று ஆரம்பித்தது. மாவிலாறு அணைக்கட்டு பொலன்னறுவை மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ளதுடன், அதற்கு வடக்கே 5 கி.மீ தூரத்தில் கல்லாறு என்ற இடத்தில் இராணுவ முகாம் அமைந்துள்ளது. இந்த அணைக்கு மூன்று மதகுகள் இருந்தன. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கல்லாறு, தெஹிவத்தை, தோப்பூர், சேருவில, தங்க நகர், மூதூர், செல்வநகர், நலிபொல, சோமபுர போன்ற 20 கிராமங்களில் உள்ள 22000 சிங்கள, தமிழ், முஸ்லிம்களுக்கு குடிநீரும், விவசாய நடவடிக்கைகளுக்காக 30,000 ஏக்கர் (120 கி.மீ பரப்பளவு) நிலமும் வழங்கப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ.யினரால் மதகுகள் மூடப்பட்டதால் கால்வாய்கள் வறண்டு போனதால், மக்களுக்கு குடிநீர் மற்றும் பிரதான வாழ்வாதா



ரமான விவசாயம் கால்நடை வளர்ப்பு மற்றும் நன்னீர் மீன் தொழிலுக்கு தண்ணீர் கிடைக்காததால், இப்பிரச்சினை தீவிரமடைந்தது. 2002-இல் யுத்த நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர், மாவிலாறு பிரதேசம் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் கட்டுப்பாட்டில் இருந்ததோடு பாதுகாப்புப் படையினர் எக்காரணத்தைக் கொண்டும் அப்பகுதிக்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.

2006 ஜூலை 21அன்று, சம்பந்தப்பட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் மூலம் உள்ளூர் மக்கள் கட்டுமானத்தில் உள்ள நிலைமை குறித்து கல்லாறு இராணுவ முகா

முக்கு அறிவித்தனர். 2002 யுத்த நிறுத்த உடன்படிக் கையின் பிரகாரம், இராணுவ முகாமின் அதிகாரிகள் இவ்வாறான சம்பவங்கள் பற்றி அறிவிக்குமாறு கண்கா ணிப்புக் குழுவுக்கு அறிவித்த போதிலும் அது பயன ளிக்கவில்லை. இதற்கிடையில், நாட்டின் பிற பகுதி களைச் சேர்ந்த பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் அமைப்புகளின் ஆதரவாளர்களின் உதவியுடன், உள்ளூர் மக்கள் ஆர்ப்பாட்டத்தைத் தொடங்கி, மாவி லாறின் அணைக்கட்டுகளைத் திறக்க முன்வந்தனர். ஆனால் இதனை தடுத்த பாதுகாப்பு தரப்பினர் பிரதம தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்த லுக்கு அமைய இதில் தலையிட்டனர். உள்ளூர் மக் களின் அடிப்படை உரிமைகளை மறுத்த ஆயுதம் ஏந்திய பயங்கரவாதிகளுடன் மோதிக்கொண்டே பாது காப்புப் படையினர் பாதிக்கப்பட்ட ஏராளமான மக்க ளுக்கு பாதுகாப்பு, தண்ணீர் மற்றும் உணவை வழங்க வேண்டியிருந்தது.

159. பாதிக்கப்பட்ட அனைத்து கிராமங்களுக்கும் பவுசர் மூ லம் நீரை விநியோகிப்பதும், உலர் உணவுப் பொருட் களை மொத்தமாக விநியோகிப்பதும் பயங்கரவாதிகளு டனான மோதல் நடவடிக்கையைப் போலவே ஒரு கடின மான நடவடிக்கையாகும். அதனை இடைவிடாது மேற் கொண்டு வந்ததுடன் ஜூலை 26-ஆம் திகதி காலை, கல்லாறு இராணுவ முகாமில் இருந்து, திருகோணம லையின் 22-வது படையணியை வழிநடத்தி மாவிலாறு மற்றும் சம்பூர் சமருக்கு கட்டளைத் தளபதியாக பணி யாற்றிய மேஜர் ஜெனரல் மெந்தக சமரசிங்க தலை மையில் வழிநடத்தப்பட்ட 8-வது கெமுனுஹேவா படை யணியும் 5-வது இலங்கை காலாட்படை படைப்பிரிவும் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் கொடூரமான தாக்குதல்களை எதிர்கொண்டு மாவிலாறு அணைக்கட்டுடை நோக்கிச் சென்றன. கண்ணிவெடிகள், மோட்டார் தாக்குதல்கள் மற்றும் அருகருகே இருந்த பதுங்கு குழிகளில் இருந்து எல்.ரீ.ரீ.ஈ. நடத்திய தாக்குதல்களை எதிர்கொண்ட நிலையில், இராணுவம் மிகவும் மெதுவாக நகர்ந்தது. ஜூலை 31 அளவில், அவர்களின் அணைக்கட்டை அடைய மேலும் 100 மீட்டர் இருந்தது.

இதற்கிடையில், 2006 ஏப்ரல் 25 அன்று தாக்குதலில் இருந்து மீண்டு கொண்டிருந்த இராணுவத் தளபதி லெப் டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா குணமடைந்து ஜூலை மாத இறுதியில் மாவிலாறில் தொடங்கிய மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்குவதற்காக மீண்டும் பதவிக்குத் திரும்பினார். மாவிலாறு பிரதேசம் இராணு வத்தின் பிடியில் சிக்கவிருந்த இந்த காலகட்டத்தில் படையினரின் கவனத்தை திசை திருப்பும் வகையில் எல்.ரீ.ரீ.ஈ.யினர் தந்திரோபாய ரீதியில் நகர்ந்துகொண்டு ஒகஸ்ட் 01 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து 1200 பய ணிகளுடன் திருகோணமலை துறைமுகத்தை நெருங் கிக்கொண்டிருந்த ‘ஜெட்லைனர்’ கப்பலை மூழ்கடிப்ப தற்கான தாக்குதல்களை நடத்தினர். ஜெட்லைனரைப் பாதுகாக்க 12 தாக்குதல் படகுகள் முன்னோக்கிச் சென்றன, ஆனால் கடற்படை கொமடோர் நோயல் கலுபோவில உதவியுடன், அதன் இந்தோனேசிய கேப் டன் கப்பலை பாதுகாப்பாக துறைமுகத்திற்குள் கொண்டு வர பலமான முயற்சியை மேற்கொண்டார்.

ஜெட்லைனர் கப்பல் துறைமுகத்தில் இருக்கும்போதே துறைமுகத்தின் வாசலை தடுப்பது எல்.ரீ.ரீ.ஈ. தலைவர் பிரபாகரனின் திட்டமாக இருந்த போதிலும், கடற்படைத் தளபதியின் அறிவுறுத்தலின் பேரில் கப்பல் காலி துறை முகத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ எதிர் பாராத விதத்தில் ஜெட்லைனருக்கு எதுவித அசம்பாவி தங்களும் ஏற்படாத காரணத்தினால் மேலும் ஆத்திரம் அடைந்த பயங்கரவாதிகள் மூதூர் கடற்படைத் தளத் திற்கும், கட்டைபறிச்சான், செல்வாநகர் மற்றும் கீழ் தோப்பூர் ஆகிய ராணுவ தளங்களுக்கு தாக்குதல் களை நடத்தியதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் மனிதாபிமான நடவடிக்கையின் அடுத்த கட்டம் ஆரம் பித்தது.

2006-ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 08-ஆம் திகதி பாது காப்புப் படையினரால் மாவிலாறு அணைக்கட்டை விடு விக்க முடிந்தது. அந்த நடவடிக்கையில், 21 போர் வீரர்கள் கொல்லப்பட்டதுடன் 89 பேர் காயமடைந்தனர். 43 எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்கள் கொல்லப்பட்டதுடன் 20 பேர் காயமடைந்தனர். திருகோணமலை துறைமுகத் தைச் சுற்றியுள்ள மலைத்தொடரின் மூலையில் அமைந் துள்ள சம்பூரின் புவியியல் அமைவிடத்தின் காரணமாக திருகோணமலை துறைமுகம் மற்றும் அதைச் சுற்றி யுள்ள பொருளாதார மையங்களின் பாதுகாப்பை பெரிதும் பாதிக்கக்கூடிய நிலைமை இருந்தது. 2002 யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னர், எல்.ரீ.ரீ.ஈ.யி னரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த சம்பூர், கிழக்கு மாகா ணத்தில் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் தலைமையகமாக மாற்றப் பட்டது. மகாதாதிக மகாநாக மன்னனிலிருந்து மகாசே னன் மன்னன் வரை அபிவிருத்தி செய்யப்பட்ட பாஷான பப்பத விகாரை ஸ்தூபியில் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் ஒலிப ரப்பு கோபுரங்கள் நிறுவப்பட்டதுடன் அங்கிருந்த ஆறு கல்வெட்டுகள் நாசப்படுத்தும் வகையில் மின்சார கம்பி கள் இழுக்கப்பட்டிருந்தன. முழு நிர்வாக நகரமாக கட் டப்பட்டிருந்த அங்கு அவர்களுக்காக சத்திர சிகிச்சை ஆஸ்பத்திரி, நீதிமன்றங்கள், சிறைச்சாலை அறைகள், எல்.ரீ.ரீ.ஈ. தலைவர்களின் அலுவலகங்கள், சொகுசு வீடு கள் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்தன. சம்பூரில் எல்.ரீ.ரீ. ஈ.யின் போர் மையம் மட்டுமல்ல, பெரிய பதுங்கு குழி களும் அங்கு கட்டப்பட்டிருந்ததுடன் 60 மி.மீ பீரங்கி மோட்டார்களும் ஆர்.பி.ஜி போன்ற இராணுவ உபகர ணங்களுடன், இந்த நிலையத்தை மையமாகக் கொண்டு ஒரு பெரும் பலத்தை கட்டியெழுப்பியிருந்தனர். திருகோ ணமலை துறைமுகத்திலிருந்து வடக்கு நோக்கி செல் லும் கடற்படை கப்பல்களை மிக இலகுவாக தாக்கக் கூடிய இடத்தில் அமைந்திருப்பதால் போர்நிறுத்த காலத் திலும் இங்கிருந்து தொடர்ந்து கடற்படை கப்பல்கள் மோட்டார் குண்டுகள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டு வந்தது.



மாவிலாறு அணைக்கட்டு

மாவிலாறில் தோற்கடிக்கப்பட்டு தப்பிச் சென்ற எல்.ரீ. ரீ.ஈ.உறுப்பினர்கள் மீண்டும் சம்பூர் பிரதேசத்தில் பாது காப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தினர். 2006-ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 06-ஆம் திகதி சோமபுர பாடசாலை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு ஆசிரியரும் பல மாணவர்களும் கொல்லப்பட்டதுடன், அப்பாடசாலைக்கு அருகிலுள்ள ஒரு பௌத்த விகாரை கடுமையாக சேதமடைந்தது. இந்தத் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், பாதுகாப்புப் படையினர் 2006 ஓகஸ்ட் 26 அன்று சம்பூரை எல்.ரீ.ரீ.ஈ.யின் பிடியி லிருந்து மீட்க ஒரு நடவடிக்கையை மேற்கொண்டனர். இந்த தாக்குதலில், இராணுவம் எதிரி படையை பீரங் கிகள் மற்றும் பல்குழல் பீரங்கிகளின் மூலம் அழித்த அதேவளை விமானப்படை தனது கிபீர் விமானங்கள் மற்றும் எஃப் 07 ரக போர் ஜெட் விமானங்களை பயன்ப டுத்தி எல்.ரீ.ரீ.ஈ இலக்குகளை தாக்கியது. கடற்படை தமது டோரா படகுகளைப் பயன்படுத்தி சம்பூரில் கடற்புலி அணியை அழித்ததுடன் தரையில் இருந்தும் கடல் மற்றும் ஆகாய வழிகளின் மூலம் தொடர்ச்சியான தாக்குதல்களை எதிர்கொண்ட நிலையில், எல்.ரீ.ரீ.ஈ. யினர் சம்பூரை விட்டு வெளியேறி தப்பி ஓடினர். தங் களின் மிகவும் பெறுமதிமிக்க உடமைகளாக கருதப் பட்ட பீரங்கிகள், பாதுகாப்புப் படையினரின் கைகளில் சிக்குவதைத் தடுப்பதற்காக, அவர்கள் அவற்றை முன் கூட்டியே வெருகல் மற்றும் வாகரை பகுதிகளுக்கு அனுப் பினர். 60.மிமீ மோட்டார் மற்றும் ஆர்.பி.ஜி போன்ற இராணுவ உபகரணங்களைப் பயன்படுத்தி, பாதுகாப் புப் படையினரைத் தாக்கி பின்வாங்கினர். அதன் படி, 2006 செப்டெம்பர் 04-ஆம் திகதி, பாதுகாப்புப் படை களால் பவுல்முனை வரையான பிரதேசத்தை எல்.ரீ.ரீ.ஈ. யின் பிடியில் இருந்து விடுவித்து அங்கு ஒரு தளத்தை நிர்மாணிக்கும் பணியைத் தொடங்க முடிந்தது.

இச்சம்பூர் சமரின் போது, எல்.ரீ.ரீ.ஈ.யின் பிடியில் இருந்த கட்டைபறிச்சான், செல்வநகர், இதிரிமலை, கதிரவெளி, தெஹிவத்த, மேல்தோப்பூர், கல்கந்த, மணிராசக்குளம் உள்ளிட்ட பல பகுதிகள் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகு திகளுக்குள் கொண்டுவரப்பட்டன. இந்த மோதலில் பாதுகாப்பு படையினரின் 29போர் வீரர்களும் 138 எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர். சம்பூர் போரில் வெற்றி பெற்ற படையினர் அதுவரை ஏற்றப்பட் டிருந்த எல்.ரீ.ரீ.ஈ.யின் கொடிக்குப் பதிலாக தேசியக் கொடியை பவுல்முனை கலங்கரை விளக்கத்தின் உச் சியில் ஏற்றினர். அரச பாதுகாப்புப் படையினருக்கும் எல்.ரீ.ரீ.ஈ.க்கும் இடையில் கிழக்கு மாகாணத்தில் இச் சமர் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளை 2006 ஜூலை 28 இல் வன்னியில் அவ் அமைப்பில் இருந்து வெளியே றியிருந்த கருணாவின் தாக்குதலில் 41 எல்.ரீ. ரீ.ஈ. உறுப் பினர்கள் கொல்லப்பட்டனர்.

2006 ஓகஸ்ட் 2, அதிகாலையில், எல்.ரீ.ரீ.ஈ அமைப்பினர் மூதூர் நகரை தாக்கி முழு நகரத்தையும் ஆக்கிரமித் ததைத் தொடர்ந்து, கிழக்கு மாகாணத்தை பயங்கரவா தத்திலிருந்து விடுவிப்பதற்கான மனிதாபிமான நடவடிக் கையாக மூதூர் சமர் ஆரம்பிக்கப்பட்டது. திருகோ ணமலை குடாவின் தென்பகுதியில் மூதூர், கிண்ணியா தவிர்ந்த ஏனைய பகுதிகள் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் கட் டுப்பாட்டில் இருந்தது. பாரதிபுரம், பன்சல்வத்த, சத்தி நகர், நெய்தல்நகர், கீழ்தோப்பூர் போன்ற இடங்களில் உள்ள இராணுவ நிலைகள் மீது தாக்குதல்கள் நடாத் தப்பட்டதுடன் மூதூரில் அமைந்துள்ள ரெலிகொம் நிறுவனம் பொலிஸ் காவல் நிலையம் மற்றும் நகர பொலிஸ் காவல் நிலையத்தை எல்.ரீ.ரீ.ஈ.யினர் அழித் தனர். அரசுக்கு சொந்தமான இரு வங்கிகளை கொள் ளையடித்து முழு நகரங்களையும் கைப்பற்றிய எல்.ரீ. ரீ.ஈ. உறுப்பினர்கள், மூதூர் நகரின் படகுத்துறைக்குள் நுழைந்தனர். சேருநுவர வைத்தியசாலை, பொலிஸ் மற்றும் கிராமங்கள், எல்.ரீ.ரீ.ஈ.யின் மோட்டார் ஷெல் தாக்குதலுக்கு இலக்கு வைக்கப்பட்டது. மூன்று நாட் களாக, மூதூர் நகரில் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் அதிகாரத்தைக் கைப்பற்றி வெற்றி முழக்கமிட்ட போது, மனிதக் கேடயங் களாக நின்ற மக்கள் பயங்கரவாதிகளுக்கு மத்தியில்

இருந்ததால், பாதுகாப்புப் படையினருக்கு பதிலடி கொடுப்பது கடினமாக இருந்தது. எனினும், அவ்வாறான மோதல்களுக்கு மத்தியில், பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாப்பதற்காக எல்.ரீ.ரீ.ஈ.யினரை விரட்டியடிப்பதற்காக பாதுகாப்புப் படையினர் மூதூரை மீட்கும் மனிதாபிமான நடவடிக்கை லெப்டினன்ட் கேர்ணல் சேனக விஜேசூரியவின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கை 7-வது காலாட்படையணியைப் பயன்படுத்தி தொடங்கப்பட்டது.

பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட பதில் நடவடிக்கைகளின் மத்தியில் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பொதுமக்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் கந்தளாய், சேருவில, திருகோணமலை மற்றும் தம்பலகாமம் போன்ற இடங்களில் தஞ்சமடைந்தனர். இறுதியாக 2006 ஓகஸ்ட் 07, அன்று, மூதூர் நகரின் நுழைவாயிலில் உள்ள கட்டப்பறிச்சான் இராணுவ முகாம் உட்பட அனைத்து இராணுவத் தளங்களும் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் பிடியில் இருந்து விடுபட்டன. இந்த நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ. யின் ஏராளமான உறுப்பினர்கள் உயிர் இழந்தனர். இவ்வாறு கிழக்கு மாகாணத்தில் எல்.ரீ.ரீ.ஈ. தொடர்ந்தும் தோற்கடிக்கப்பட்ட நிலையில், பாதுகாப்புப் படையினரின் கவனத்தை திசை திருப்புவதற்காக எல்.ரீ.ரீ.ஈ. வழமையான உத்திகளைப் பயன்படுத்தி, 2006 ஜூலையில் ஹபரண திகம்பதவில் வெடிபொருட்கள் நிரம்பிய வாகனம் ஒன்றை தகர்த்ததில் 100 க்கும் மேற்பட்ட கடற்படை வீரர்கள் கொல்லப்பட்டனர். 01 ஓகஸ்ட் 2006 இரண்டாவது நாள், ஏ9 பாதையில் முகமாலை சந்தியில் உள்ள பாதுகாப்புப் படையினரின் சோதனைச் சாவடி மீது பீரங்கி மற்றும் மோட்டார் ஷெல்கள் வீசப்பட்டதில் அங்கு சேவையாற்றும் பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் உட்பட பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். அதே நேரத்தில், 400-500 எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்கள் கிளாலி கடற்படை முகாமின் மீதும் முகமாலையில் உள்ள முன்னரங்க பாதுகாப்பு வளையத்தின் மீதும் தாக்குதல் நடத்தினர்.

எதிர்பாராத நேரத்தில் இடம்பெற்ற இந்த தாக்குதலில் இராணுவத்தினதும் படையினரினதும் ஆயுதங்கள் மற்றும் வாகனங்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டது. நான்கு T-55 ரக டாங்கிகள் அழிக்கப்பட்டதுடன் நூற்றுக்கும் மேற்பட்ட வீரர்கள் கொல்லப்பட்டு 300 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். உயிரிழந்த இந்த இராணுவ வீரர்களின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அரசாங்கத்திற்கும் எல்.ரீ.ரீ.ஈ.யின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இடையிலான எல்லையான ஓமந்தையில் உள்ள அரசாங்கத் முகாமுக்கு அனுப்பப்பட்டன. அழிக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் இறந்தவர்களின் உடல்களைக் காட்டும் புகைப்படங்கள் எல்.ரீ.ரீ.ஈ.யினரால் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டன. முகமாலை மீதான தாக்குதலுக்கு மேலதிகமாக, ஊர்காவற்துறை மண்டைதீவு போன்ற தீவுகளையும், கல்முனை, மற்றும் பலாலி உள்ளிட்ட பல இராணுவ தளங்களையும் அவர்கள் தாக்கினர். முகமாலை தாக்குதல்கள் தொடங்கியதிலிருந்து, ஜெட் விமானங்கள், கடற்படை தாக்குதல்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் மூலம் விமானப்படையால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களின் மூலம் 2006 ஓகஸ்ட் 13-ஆம் திகதியளவில் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் அனைத்து எதிர்த் தாக்குதல்களையும் தோற்கடித்து அமைதியை நிலைநாட்ட அரசாங்க பாதுகாப்புப் படைகளால் முடிந்தது.

கிழக்கு மாகாணத்தில் மனிதாபிமான நடவடிக்கையின் ஆரம்ப கட்டத்தில் இருந்தே, எல்.ரீ.ரீ.ஈ.யினர் வழமை போல மோதல் இடம்பெறும் பகுதிகளில் இருந்து அரசாங்க பாதுகாப்புப் படைகளின் கவனத்தை திசை திருப்புவதற்காக அவ் அமைப்பு நாட்டின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் மற்றும் பிரமுகர்களை படுகொலை செய்வதோடு முக்கியமான பொருளாதார மற்றும் பாதுகாப்பு மையங்கள் மீதான தாக்குதல்களையும் மேற்கொண்டு வந்தது.

தெற்கு சம்பூரில் இருந்து திருகோணமலை துறைமுகம் வரையான பூகோள ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசத்தில் தமது படை பலத்தை அதிகரிக்க முயற்சித்த எல்.ரீ.ரீ.ஈ., 2002-இல் இருந்து திருகோணமலை துறைமுகத்திலும் அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் மட்டும் 14 முகாம்களை ஸ்தாபித்திருந்தனர். செம்புமலை விகாரை மற்றும் தூபியின் பகுதிகளை அகற்றி இப்பகுதியில் பதுங்கு குழிகள் கட்டப்பட்டன.

அரசாங்கத்தின் கட்டுபாட்டில் கீழ் யாழ்ப்பாணத்திற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையிலான தொடர்பைப் பேணுவதில் ஏ9 வீதி மிகவும் முக்கியமானதாகும் அது எல்.ரீ.ரீ.ஈ.யின் கட்டுபாட்டில் இருந்ததுடன் பயணிகள் போக்குவரத்துக்கும், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளின் விநியோகத்திற்கு, பாதுகாப்பு படையினருக்கு திருகோணமலை துறைமுகம் மிகவும் முக்கியமானதாக இருந்தது. மூதூர் சமரில் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பைத் தோற்கடித்து மூதூரைச் சூழவுள்ள இறால்க் குளி, உப்பாறு, நாவலடி, செல்வநகர் போன்ற கிராமங்களையும், அதில் வாழ்ந்த மக்களையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதில் பாதுகாப்புப் படையினர் வெற்றி பெற்றதை அடுத்து, கிழக்கு மாகாணத்தில் அரசாங்கத்தின் அதிகாரத்தை விரிவுபடுத்துவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது.

இப்பகுதியின் பெரும்பான்மையான மக்கள் முஸ்லிம்களாகவும், சிங்கள மற்றும் தமிழ் மக்கள் குறைந்த எண்ணிக்கையிலும் வாழ்ந்தனர். இந்த மக்கள் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்ததுடன் மூதூர் முஸ்லிம் சமூகத் தலைவர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி செயலகத்திற்கு அழைக்கப்பட்டனர். ஆனால் மூதூரை இலகுவாக தாக்கக் கூடிய கனரக ஆயுதங்கள் சம்பூர் பிரதேசத்தில் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பின் வசம் இருக்கும் நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் மூதூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் மீள்குடியேற விரும்பவில்லை என அத்தலைவர்கள் அரசாங்கத்திற்கு தெரிவித்தனர்.

2006 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி பாதுகாப்புப் படையினரும் அரசாங்கமும் இணைந்து எல்.ரீ.ரீ.ஈ.யினரை சம்பூர் பகுதியிலிருந்து பவுல் முனை வரை முழுமையாக தோற்கடித்து விரட்டியடித்ததன் மூலம் 45 நாட்களுக்குள் இடம்பெயர்ந்த மக்களை மூதூரில் உள்ள அவர்களது கிராமங்களில் மீளக்குடிய மர்த்த முடிந்தது. போரினால் நாசமாக்கப்பட்ட பிரதே சங்களை மீளக் கட்டியெழுப்புதல் மற்றும் உட்கட்டமைப் புகளை அபிவிருத்தி செய்தல் போன்ற பணிகள் பொது மக்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சம்பந்தப்பட்ட பிரி வுகளிடம் ஒப்படைக்கப்பட்டன.

மேஜர் ஜெனரல் மெந்தக சமரசிங்க மற்றும் பிரிகேடியர் பிரசன்ன சில்வா ஆகிய சிறப்புப் படைத் தளபதிகளின் தலைமையில் நடந்த சமரில் சம்பூர் விடுவிக்கப்பட்ட பின்னர், எல்.ரீ.ரீ.ஈ.யினரின் கட்டுப்பாட்டில் இருந்த மணி ராசகுளத்தை விடுவிப்பதற்கான நடவடிக்கை 2006 ஒக் டோபரில் ஆரம்பித்தது. 7-வது மற்றும் 8-வது இலங்கை காலாட்படை படையணிகளுடன் கூடிய சிறப்புப் படை யினர் விரைவாக மணிராசகுளத்தை விடுவித்ததுடன் அச்சமரில் இராணுவத்தைச் சேர்ந்த எவரும் காயமடை யவில்லை.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவ டிக்கைகளின் போது, எல்.ரீ.ரீ.ஈ.யினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளான சம்பூர், மணிராசகுளம் போன்றவை அரசாங்க பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததைத் தொடர்ந்து எல்.ரீ.ரீ.ஈ.யின் கட்டுப்பாட்டில் இருந்த வன்னிக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலான தொடர்புகள் தடைப்பட்டன.

கிழக்கு மாகாணத்திலும் வடக்கு மாகாணத்திலும் மோதல்கள் தொடர்ந்தன, ஆனால் இருதரப்பு போர் நிறுத்த ஒப்பந்தமும் உத்தியோகபூர்வமாக கைவிடப்பட வில்லை. மேலும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதில் ஈடுபட்டிருந்த மத்தி யஸ்தர்களின் முயற்சியின் விளைவாக சில நிபந்தனைக ளுக்கு உட்பட்டு அரசாங்கம் ஒரு சுற்று சமாதானப் பேச் சுவார்த்தையை நடத்துவதற்கு இணக்கம் தெரிவித்தது. சமாதானப் பேச்சுவார்த்தைகளின் தொடங்கி அது முடியும் வரையான காலப்பகுதியில் தாக்குதல்கள் நடத் தப்படாது என்றும், அந்த காலகட்டத்தில் சட்டவிரோத ஆயுதங்கள் கடத்தப்படாது என்றும் பிரபாகரன் உறுதி யாக தீர்மானித்து பின்பற்றுவதை அவர் தனிப்பட்ட முறையில் உத்தரவாதம் அளிப்பார் என்பதும் முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாகும். 2006 ஒக்டோபர் இறுதியில் ஜெனீவாவில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்த முடிவு செய்யப்பட்டது.

இலங்கையில் உள்ள பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வைக் காண்பதற்கு சர்வதேச ஒத்துழைப்பு இருக்காது என்று மத்தியஸ்தராக செயற்பட்ட நோர்வேஜியரான எரிக்சொல்ஹெய்ம் கருத்துவெளியிட்டதைத் தொடர்ந்து இருதரப்பினருக்கும் இடையிலான அமைதிப் பேச்சு வார்த்தைகள் 2006 ஒக்டோபர் 28 மற்றும் 29-ஆம் திகதி களில் ஜெனீவாவில் ஆரம்பமாகின. அங்கு ஏ9 வீதி யைத் திறக்குமாறு எல்.ரீ.ரீ.ஈ.யினர் கோரிக்கை விடுத் தனர். பாதுகாப்பு காரணங்களுக்காக அரசாங்கம் அதை மறுத்ததோடு அமைதிப் பேச்சுவார்த்தை முறிந்தது.

கிழக்கு மாகாணத்தில் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் அதிகாரத்தை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டுவர பாதுகாப்புப் படையினர் மேலும் மூன்று நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டியிருந்தது. இவற்றில் வாகரை சமர் முத லாவதாகும், சம்பூர் போரில் வெற்றி பெற்ற சிறப்புப் படைகளின் தளபதி பிரிகேடியர் பிரசன்ன சில்வா தலை மையில் அது மேற்கொள்ளப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈ. அமைப் பினரின் அச்சுறுத்தல் காரணமாக மக்கள் சம்பூரில் தங்கவோ அல்லது வேறு பகுதிகளுக்கு தப்பி ஓடவோ முடியாத நிலையில் அவர்களை ஒரு கேடயமாகப் பயன் படுத்தி, எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பினர் பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்தினர். ஈச்சிலம்பற்று ஊடாக A5 வீதியூடாக வெருகல் ஆற்றைக் கடந்து கதிரவெளி மற்றும் வாகரைக்கு தப்பிச் சென்றனர். A5 வீதியின் கீழ் கப்புவத்தை இராணுவ முகாம் மீது எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு பீரங்கிகளைக் கொண்டு தாக்குதல் நடத்த ஆரம் பித்தது. சேருநுவர, கல்லாறு, சோமபுர போன்ற கிராம மக்கள் இதனால் பாதிக்கப்பட்டனர். கதிரவெளி பகுதி யில் சுமார் 40000பேர் பயங்கரவாதிகளால் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டு ஆயுதங்களைக் காட்டி பயமுறுத் தப்பட்டனர். விவசாயம் மற்றும் மீன்பிடி தொழிலில் இருந்து கிராம மக்கள் சம்பாதிக்கும் அதிகபட்ச வருமா னத்தை அபகரித்த பயங்கரவாதிகள், A5 மற்றும் A15 வழித்தடங்களில் பயணம் செய்த பயணிகளிடம் கப்பம் வசூலித்தனர். சம்பூரில் இருந்து அழைத்து வரப்பட்ட மக்களின் பிள்ளைகள் மாத்திரமன்றி கதிரவெளி, வாகரை கிராமமக்களின் பிள்ளைகளும் பாடசாலை செல்லும் வாய்ப்பை இழந்ததோடு, பராயமடையாத குழந்தை களும் பலவந்தமாக பயங்கரவாதப் படைகளில் சேர்க் கப்பட்டனர். அதற்கு எதிராக நின்ற பெற்றோர்கள் சிறை முகாம்களில் அடைக்கப்பட்டு கடுமையாக தண்டிக்கப் பட்டனர். மக்கள் எதிர்கொண்ட அடக்குமுறை நிலைமை யைக் கண்டு, பாதுகாப்புப் படையினர் மக்களுக்கு உணவை வழங்கினர். ஆனால், எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு அதை விநியோகிப்பதற்கும் அனுமதிக்கவில்லை.

சம்பூரிலிருந்து வாகரைக்கு அழைத்துச் செல்லப்பட்ட மக்கள் மட்டுமல்ல, வாகரை உள்ளூர்வாசிகளும் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி இருந்ததுடன் அவர்கள் உள்நாட் டில் இடம்பெயர்ந்த மக்களாக மாறினர். ஆரம்பத்தில், பாதுகாப்புப் படையினர் அவர்களை பராமரித்து வந்த போதும் அவர்களுக்கு தொடர்ந்தும் போதிய கால அவகாசம் இருக்கவில்லை. எனவே, உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் பிரச்சினையை தீர்க்கும் வகையில், பாதுகாப்புச் செயலாளரின் தலையிட்டினால், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இராஜதந்திர அதிகாரி களின் பங்களிப்புடன் மனிதாபிமான உதவிகளை வழங் குவதற்கான ஆலோசனைக் குழு ஒன்று ஆரம்பிக்கப் பட்டது. அந்த பொறிமுறையின் முதல் கூட்டம் 2006 ஒக்டோபர் 14, அன்று நடைபெற்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் ஜூலியன் வில்சன், ஜேர்மனிக்கான இலங்கைத் தூதுவர் ஜுயன்ஜென்ட் வொர்த், மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரித்தானிய பதில் பிரதிநிதி அமின் அமட், அகதிகளுக்கான பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதி துன் வெண்டன்ஹோம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனைத்துலகக் குழுவின் தலைவர் மற்றும் உலக உணவுத் திட்ட பிரதிநிதி வாலண்டைன் கெயின்ஸ்கி போன்ற சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர். போர் நிறுத்த ஒப்பந்தம் மற்றும் சமாதான முன்னெடுப்புகளில் ஈடுபட்ட சர்வதேச இணைத் தலைமை நாடுகளுக்கான அமெரிக்காவின் தூதுவர் ரொபட் பிளேக்கும் இந்த அமைப்பில் இணைந்துகொண்டார்.

மனிதாபிமான நடவடிக்கை முழுவதும், வடக்கு-கிழக்கு பிராந்தியத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை பெற்றுக்கொடுத்தலை ஒருங்கிணைக்க இந்த அமைப்பு வாரத்திற்கு இரண்டு முறை பாதுகாப்பு அமைச்சகத்தில் கூடியதுடன் இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவி வழங்க அரசு சாரா உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அமைப்புகளை ஈடுபடுத்தியது. எனினும், அவ்வாறான நிலைமை தொடர அனுமதிக்க முடியாத நிலையில் அரசாங்கத்தின் பணிப்புரையின் பேரில், A5 வீதி மற்றும் கதிரவெளி பகுதி மக்களை எல்.ரீ.ரீ.ஈ.யினர் பிடியிலிருந்து மீட்கும் நடவடிக்கையை பாதுகாப்புப் படையினர் 2006 டிசம்பர் 01-ஆம் திகதி ஆரம்பித்தனர். இந்த மனிதாபிமான நடவடிக்கையின் ஆரம்பத்தில், எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்களால் கேடயங்களாக வைக்கப்பட்டிருந்த ஏராளமான பொதுமக்கள் அவர்களின் பிடியில் இருந்து தப்பி அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு தப்பிச் சென்றனர். போரின் போது பாதுகாப்புப் படையினர் நடத்திய எதிர்த்தாக்குதலை எதிர்கொண்ட நிலையில், எல்.ரீ.ரீ.ஈ. உறுப்பினர்கள் படிப்படியாக பின்வாங்கியபோது, பனிச்சங்கேணி பாலம் தகர்க்கப்பட்டது. இரண்டு நாட்களுக்குள் அந்த பாலத்தை ராணுவம் வழமைக்கு கொண்டு வந்தது.

பயங்கரவாத சக்திகளை படிப்படியாக உடைத்து முன்னேறிய பாதுகாப்புப் படையினர், வாகரை மருத்துவமனையை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். வைத்தியசாலையைச் சுற்றி கட்டியிருந்த எல்.ரீ.ரீ.ஈ.யினரின் பதுங்கு குழிகளையும் அழித்து, அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த வெருகல், ஈச்சிலம்பற்று, கதிரவெளி, வாகரை, கடற்கரைச்சேனை, திரிக்கோணமடு, பாற்சேனை, மாங்கேணி, பனிச்சங்கேணி, ஆகிய பல பகுதிகளை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினர். வடக்கு கிழக்கு இராணுவ நடவடிக்கைகளில் முதல் முறையாக, எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் வசமிருந்த மிகப் பெரிய ஆயுதங்கள் வாகரையிலிருந்து மீட்கப்பட்டன. மேலும் கனரக ஆயுதங்கள் மற்றும் மி.மீ. 122 மோட்டார் உட்பட T-56 1700 தோட்டாக்கள் T-56 ரைபிள் 312, பீரங்கிகள் 152 உட்பட ஏராளமான ஆயுதங்கள் பாதுகாப்புப் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் இந்த சண்டையில் சுமார் 700 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். பாதுகாப்புப் படைகள் இப்பகுதியில் அமைதியை நிலைநாட்டி 2007ஜனவரி 19 அன்று வாகரை இராணுவ நடவடிக்கை வெற்றி பெற முடிந்தது.

அம்பாறை கஞ்சிக்குடிச்சாறு பகுதியில் அமைந்துள்ள வனப்பகுதியும் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் விசேட முகா மாக இருந்தது. அம்பாறையில் உள்ள கஞ்சிக்குடிச்சாறு வனப்பகுதியில் சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக விசேட அதிரடிப்படை முகாமுக்கு தகவல் கிடைத்தது. கிழக்கு மாகாணத்தில் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் அதிகாரத்தை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்புப் படைகளின் அடுத்த கவனம் இதன் மீது குவிந்தது. இதேவேளை, 2007-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ஆம் திகதி பக்மிதியாவ கிராமத்தில் இருந்து 18 வயதுடைய பிள்ளையை கடத்திச் சென்ற எல்.ரீ.ரீ.ஈ அமைப்பினரால் மேலும் 4 பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவங்களுக்கு எதிராக பக்மிட்டியவ பாடசாலை மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்திற்கு பதிலளிக்கும் வகை யில் எல்.ரீ.ரீ.ஈ அமைப்பு அக்கிராமத்தின் முதியோரையும் பாதுகாப்பு படையினரையும் இலக்கு வைத்து மோட்டார் குண்டு தாக்குதலை நடத்தியது.

இந்த சம்பவங்களுடன், 2007 பெப்ரவரி 04-ஆம் திகதி விசேட அதிரடிப்படை கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமல் லென்கே அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் 'நியத்தய் ஜய' என்ற விசேட நடவடிக்கை அப்பிரதேசத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் பொதுமக்களின் வாழ்க்கையை கட்டியெழுப்புவதற்காகவும் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது, எல்.ரீ.ரீ.ஈ. இயக்கத்தைச் சேர்ந்த ஸ்டான்லி, மதுரா, ஜனக், டயானா பேஸ், ஜீவன் பாக்யபேஸ் உள்ளிட்ட 05 முகாம்களை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றினர். இந்த முகாம்களில் பெண்கள் முகாம்கள் இருந்ததும், சிறுகுழந்தைகளை எல்.ரீ.ரீ.ஈ.யினர் கடத்திச் சென்று இந்த முகாம்களில் வைத்திருந்ததும் கண்டறியப்பட்டது.

மேலும் அப் பிரதேசத்தில் தேடுதலின் போது, சுனாமி பேரழிவுக்கு நிவாரணமாக ஐக்கிய நாடுகள் சபையால் வழங்கப்பட்ட கூடாரங்கள், படகுகள், உணவுப் பைகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள், இரட்டை வண்டிகள், வேன்கள், டிராக்டர்கள், மின்சார ஜெனரேட்டர்கள் மற்றும் பெரிய அளவிலான பிற பொருட்களை குவித்து வைக்கப்பட்டிருந்த 4 முகாம்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

அரசாங்கத்தால் பாதுகாக்கப்பட்டு வந்த வனப் பிரதேசமான கஞ்சிக்குடிச்சாறு காடு, எல்.ரீ.ரீ.ஈ.யினரின் 'உயர் பாதுகாப்பு வலயமாக' பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அது கைப்பற்றப்பட்டு சுமார் 45 வீடுகள் கட்டப்பட்டிருந்தன. மின்சார வசதி, தொலைக்காட்சி இயந்திரங்கள், முழு குளியலறைகள் போன்ற புதிய மாதிரி வசதிகளுடன் கட்டப்பட்டிருந்த அவ்வீடுகளில் எல்.ரீ.ரீ.ஈ. உறுப்

பினர்களின் குடும்பத்தினரும், மரணித்த உறுப்பினர் களின் குடும்பத்தினரும் தங்க வைக்கப்பட்டிருந்தனர். அங்கே வதைமுகாமும் அவர்களின் மயானமும் கண்டு பிடிக்கப்பட்டன. மேலும் கஞ்சா கடத்தல், யானையைக் கொன்று அதன் தந்தங்களை விற்பனை செய்வது, காளைகள், மான்கள் மற்றும் பிற விலங்குகளைக் கொல்வது போன்ற பல சட்டவிரோத நடவடிக்கைகள் இந்த பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் மேற்கொள்ளப் பட்டிருந்தன. கற்களால் செதுக்கப்பட்ட பௌத்த விகாரை எல்.ரீ.ரீ.ஈ.யினரின் முகாமாக மாற்றப்பட்டிருந்தது. 10 நாட்கள் நடந்த இந்த இராணுவ நடவடிக்கையின் முடி வில் கஞ்சிக்குடிச்சாறு எல்.ரீ.ரீ.ஈ.யினரின் அதிகாரம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

மாவிலாறு, அணைக்கட்டை மக்களிடம் கையளிக்க அரசாங்க பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட நடவ டிக்கையில் இருந்து சம்பூர், மூதூர், வாகரை மற்றும் கஞ் சிக்குடிச்சாறுகளில் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமான நடவடிக்கைகளில் தோல்வியடைந்து தப்பிச் சென்று சிக் கியிருந்த எல்.ரீ.ரீ.ஈ.யினர் கிழக்கு மாகாணத்தில் தமது கோட்டையாகக் கருதப்பட்ட தொப்பிகல வனப்பகு தியைச் சூழவுள்ள பிரதேசத்தில் அமைத்திருந்த தொப்பிகல முகாம்கள் அனைத்தையும் கைப்பற்று வதன் மூலம் கிழக்கை விடுவிப்பதற்கான இறுதி நடவ டிக்கையாக இருந்தது. எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பு குஞ் சனாமலை என்று பெயரிடப்பட்ட குசலான் மலையின் ஸ்தூபியை தோண்டி, அதில் ஒரு தொலைநோக்கி மற்றும் கனரக ஆயுதங்களை நிறுவி முழு ஸ்தூபி யையும் அழித்திருந்தனர். வடக்கில் நடந்த மோதல் களின் போது, பிரபாகரன் தனது அமைப்புக்கு உணவு பெறவும், வீரர்களுக்கு பயிற்சி அளிக்கவும் மற்றும் புதிய உறுப்பினர்களை சேர்க்கவும் தொப்பிகல பாதுகாக்கப் பட்ட பகுதியைப் பயன்படுத்தியிருந்தார்.

கிழக்கில் 30 வருடங்களாக எல்.ரீ.ரீ.ஈ.யினரின் முழுக் கட் டுப்பாட்டில் இருந்த இப்பிரதேசம் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் முக்கியமான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட சுமார் 860 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டி ருந்தது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன் சேகாவின் அறிவுறுத்தல்களின்படி, கிழக்கு கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிபிட்டிய, 23 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் தயா ரத் நாயக்க, கொமாண்டோ படையின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சாகிகால்லகே, 7 மற்றும் 08-ஆவது கெமுன படைப்பிரிவுகள் மற்றும் 2-ஆம் மற்றும் 07 -ஆவது சிங்க படையணிகளின் கட்டளை அதிகாரி தொப்பிகல நடவ டிக்கையை முன்னெடுத்தனர்.

தொப்பிகலவை மீட்கும் நடவடிக்கையின் முதல் கட்டம் 2007 பெப்ரவரி 21, அன்று மட்டக்களப்பு மேற்கில் இருந்து ஆரம்பித்தது, இரண்டாம் கட்டம் 2007 ஏப்ரல் 25 அன்று செங்கலடி பாதை வழியாக ஆரம்பித்தது. இந்த நடவடிக்கையின் ஆரம்பத்தில், ஏ5 பாதையை பாதுகாப் புப் படையினர் கைப்பற்றியவுடன், பிரபாகரன், கிழக்கு எல்.ரீ.ரீ.ஈ. தலைவர் ரமேஷை தொப்பிகல முகாம்களைப் பாதுகாக்க நியமித்தார். எனினும் அவரும் அவரது குழு வினரும் திருகோணமலைக்கு தென்மேற்கே அங்கொட வில்லுவ பிரதேசத்தில் ஏப்ரல் 12, 2007 அன்று, பாது காப்புப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகினர் ரமேஷின் மெய்க்காப்பாளர் மற்றும் குழுவின் மருத்துவர் உட்பட 12 பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். பின்னர் எல்.ரீ.ரீ.ஈ. தலைவர் பிரபாகரன் மற்றும் சார்ள்ஸ் அன்ரனி படைத் தலைவர் நகுலன் ஆகியோர் மட்டக்களப்பில் பாதுகாப்புப் படையினரை முடக்கும் பணியில் ஈடுபடுத் தப்பட்டனர். சித்தாண்டியிலும் ஏறாவூரிலும் இராணுவத் தாக்குதல்களில் நகுலன் உட்பட 10 பேர் கொல்லப்பட் டனர்.

169. ஜூலை 11, 2007 அன்று, ஒரு ஐந்து மாத பாரிய நடவடிக் கையின் பின்னர், பாதுகாப்புப் படையினர் கிழக்கில் மிகவும் சக்திவாய்ந்த எல்.ரீ.ரீ.ஈ. முகாமான தொப்பிக லவைக் கைப்பற்றினர். இதன் மூலம் முழு கிழக்கு மாகா ணத்தையும் இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது தொப்பிகல மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களின் பிடியில் இருந்த சுமார் 123,000 பொதுமக்கள் பாதுகாப் புப் படையினரால் மீட்கப்பட்டதுடன் ஏராளமான எல்.ரீ.ரீ.ஈ யினர் கொல்லப்பட்டனர்.

ஈழப் போரின் ஆரம்ப கட்டங்களில், எல்.ரீ.ரீ.ஈ.யினரிடம் பீரங்கி, பல்குழல் ஏவுகணைகள் போன்ற நவீன ஆயு தங்கள் இருக்கவில்லை. ஆனால் 2007 அளவில், கிழக் கை மீட்பதற்கான மனிதாபிமான நடவடிக்கையின் போ து, அவர்களிடம் அத்தகைய ஆயுதங்கள் பெருமளவில் இருந்தன, இது வாகரை, கதிரவெளி, தொப்பிகல போன்ற பிரதேசங்களில் பாதுகாப்புப் படைகளால் கைப்பற்றப் பட்ட ஆயுதத் தொகையிலிருந்து உறுதி செய்து கொள்ள முடிந்தது.

பாதுகாப்பு படையினர் கைப்பற்றிய கிழக்கு மாகாணத் தில் பயங்கரவாதிகள் மீண்டும் பிரவேசிப்பதை தடுப்ப தற்கான உத்திகளைக் கையாள வேண்டும் என்று பாதுகாப்பு செயலாளர் பாதுகாப்பு சபைக்கு விளக்கம ளித்தார். அதற்கமைய எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய கிழக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள பொலிஸ், இராணுவம், விமானப்படை, பொலிஸ் விசேட அதிரடிப்ப டையினர் மற்றும் சிவில் பாதுகாப்பு படை யினர் அப்பிர தேசத்தை பாதுகாக்கும் கடமையில் ஈடுபட்டனர். இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் போரி னால் நாசமாக்கப்பட்ட பிரதேசங்களை மீளக் கட்டியெ ழுப்புவதற்கும் மனிதாபிமான உதவிகளுக்கான ஆலோ சனைக் குழு நியமிக்கப்பட்ட பின்னர், எஞ்சிய பாது காப்புப் படையினர் வன்னியை மீட்பதற்கான நடவடிக் கைகளுக்காக விடுவிக்கப்பட்டனர்.

172. மன்னாருக்குத் தெற்கே உள்ள கரையோர நகரமான சிலாவத்துறையில் பல பிரச்சினைகள் காணப்பட்ட தோடு கிழக்கு மாகாணத்தில் மீட்பு நடவடிக்கைகள் மேற்

கொள்ளப்பட்டுக் கொண்டிருந்த போதே வன்னியில் மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது. எல்.ரீ.ரீ.ஈ.யினருக்குச் சொந்தமான கடற்புலிகளால் இந்தியாவிலிருந்து சட்டவிரோதப் பொருட்களைக் கொண்டு வர மன்னார் சிலாவத்துறை துறைமுகம் பயன்படுத்தப்பட்டது. கொழும்பு உள்ளிட்ட தெற்குப் பகுதிகளில் பெருந்தொகையான வெடிபொருட்கள் இருப்பதாக புலனாய்வு அமைப்புகளுக்கு தகவல் கிடைத்தது. எல்.ரீ.ரீ.ஈ. 2007-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09-ஆம் திகதி வில்பத்து பூங்காவின் பாதுகாப்பை சீற்குலைத்திருந்த எல்.ரீ.ரீ.ஈயினர் அங்கு கடமைக்குச் சென்ற வன ஜீவராசிகள் திணைக்களத்தைச் சேர்ந்த குழுவை கொன்றனர். மேலும், அப்பகுதி முழுவதும் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக, பொதுமக்களின் உயிருக்கும், நிர்வாக நடவடிக்கைகளுக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டது. இந்நிலையில், 2007 செப்டெம்பர் 01 சிலாவத்துறையை மீட்க ஒரு மனிதாபிமான நடவடிக்கை தொடங்கப்பட்டது. 1-வது அதிரடிப்படையின் தளபதி சாகி கால்லகே அச்சமருக்கு தலைமை தாங்கினார், அதே நேரத்தில் 8-வது சிங்க ரெஜிமென்ட்டின் சிறப்புப் படைகள் மற்றும் கெமுனு ஹேவா படைப்பிரிவின் சிறப்புப் படைகள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டன.

இந்த நடவடிக்கை மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்பட்ட நிலையில், அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு பொதுமக்கள் வந்தடைந்ததுடன், முருங்கன் டொன் பொஸ்கோ தேவாலயம் மற்றும் நானாட்டான் அரசினர் கல்லூரி ஆகிய இடங்களில் அமைந்திருந்த முகாம்களில் இருந்து அரசாங்க பாதுகாப்புப் படையினர் மூலம் பாதுகாப்பு மற்றும் அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட்டன. செப்டெம்பர் 01-ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை அந்த மாதம் 04-ஆம் திகதி வரை இடம்பெற்றது. 2-வது நாளில், இராணுவம் சிலாவத்துறை பகுதியை பயங்கரவாதிகளிடமிருந்து விடுவித்து, ஒரு எல்.ரீ.ரீ.ஈ. முகாம் மற்றும் பல ஆயுதங்களைக் கைப்பற்றி, அப்பகுதியை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

அப்போது வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய நிர்வாக மாவட்டங்களைச் சேர்ந்த வன்னியின் 6,792 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பு எல்.ரீ.ரீ.ஈ.யினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. கொக்வெலிய மடாலயம், புல்லுமலை மடாலயம் என்பவற்றை அழித்து, கும்பகர்ண மலை பாறையில் இருந்த ஒரு பெரிய தூபியும் அழிக்கப்பட்டு அங்கு ஒரு பங்கர் கட்டப்பட்டிருந்தது. எல்.ரீ.ரீ. ஈ.யினரின் கோட்டையாக மாறியிருந்த பிரதேசங்களை விடுவிக்கும் நோக்கில், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் அறிவுறுத்தலின் பேரில், 2007 டிசம்பரில் வடக்கு மனிதாபிமான நடவடிக்கையை ஆரம்பிப்பதற்கான திட்டங்களைத் தயாரித்தார்.

இந்த நடவடிக்கைக்காக வசதியைக் கருத்தில்கொண்டு, யாழ்ப்பாணம் மற்றும் வன்னி என இரண்டு பெரிய போர் வலயங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன. கிளாலியிலிருந்து நாகர்கோவில் வரையான 12கிலோ மீற்றர் நீளமான முன்னரங்க பாதுகாப்பு வளையமொன்று யாழ்ப்பாண வலயத்தில் பேணப்பட்டதோடு வன்னி வலயத்தின் முன்னரங்க பாதுகாப்பு வளையம் மன்னாரிலிருந்து கொக்குத்தொடுவாய் வரையான 115கிலோ மீற்றர் நீளத்திற்கு பராமரிக்கப்பட்டது. அப்போதிருந்த பகுதிகள் 1994 முதல் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருப்பதால், மோதல்களின் போது வன்னிப் பகுதியில் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் தாக்குதல்களைத் தடுப்பதற்கான பாதுகாப்பை வழங்குவது மட்டுமே செய்ய வேண்டியிருந்தது. எனினும் வன்னிப் பிரதேசத்தில் எல்.ரீ.ரீ.ஈ.யினரின் பிரதேசங்களை விடுவிப்பதற்காக போராட வேண்டியிருந்தது.

ஆரம்பத்தில், வடக்கு போர் முனையை ஏற்பாடு செய்த பாதுகாப்புப் படைகளின் தலைவர்கள் யாழ்ப்பாணப் பகுதிக்குப் பொறுப்பான பிரிகேடியர் கமல் குணரத்ன தலைமையிலான 53-வது படையணியையும், முழு வன்னிப் பிராந்தியத்திற்கும் பொறுப்பான பிரிகேடியர் பிரசன்ன சில்வாவின் கீழ் 55-வது படையணியையும் தேர்ந்தெடுத்தனர். மன்னாரும் வெலி ஓயாவும் நான்கு முனைகளாகப் பிரிந்திருந்தன. வன்னி படையணியின் தளபதியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய முழு மீட்பு நடவடிக்கைகளுக்கும் தலைமை தாங்க நியமிக்கப்பட்டார்.

பிரிகேடியர் சுமித் மானவடு தலைமையிலான மூன்று படையணிகளைக் கொண்ட 57-ஆவது படையணியும், பிரிகேடியர் சவேந்திர சில்வா தலைமையிலான மூன்று படையணிகளைக் கொண்ட 58-ஆவது படையணியும் கிளிநொச்சி யுத்த முன்னணியை வழிநடத்த தெரிவு செய்யப்பட்டன. வன்னியை விடுவிக்கும் முதலாவது போரின் பின்னர் 57-ஆவது படையாலைப்பிரிவின் தலைமைத்துவம் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸிடம் கையளிக்கப்பட்டது. கேணல் எம்.ஜி.சி.அமரசேகரவின் கீழ் 572-ஆவது படையணியும், லெப்டினன்ட் கேர்ணல் சேனக விஜேசூரிய தலைமையிலான 574-ஆவது படையணியும், கேணல் டி.எஸ்.பன்சாஜியாவின் கீழ் 581-ஆவது படையணியும், லெப்டினன்ட் கேர்ணல் எல்.ஏ. என். எஸ்.வணிகசிங்க தலைமையிலான 582-ஆவது படையணியும், லெப்டினன்ட் கேர்ணல் ஜயந்த குணவர்தன தலைமையிலான 583-ஆவது படையணி என 57 மற்றும் 58 ஆகிய பிரதான படைப்பிரிவுகளின் கீழ் பல படையணிகள் பயன்படுத்தப்பட்டன.

பிரிகேடியர் நந்தன உடவத்த தலைமையிலான 59-வது படையணி முல்லைத்தீவு முன்னணியை வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்டது. இதில் லெப்டினன்ட் கேணல் ஏ. ஆரியசிங்கவின் கீழ் 591-வது படையணி, லெப்டினன்ட் கேணல் மனீஷ் சில்வாவின் கீழ் 592-வது படையணி மற்றும் லெப்டினன்ட் கேணல் கே.எச்.பி.பி. பெர்னாண்டோவின் கீழ் 593-வது படையணி ஆகியவை அடங்கும். பிரிகேடியர் சத்தியப்பிரிய லியனகே தலைமையிலான 3 -வது அதிரடிப்படையும், லெப்டினன்ட் கேர்ணல் டபிள்யூ எல்.பி.டபிள்யூ பெரேரா தலைமையிலான 631-வது செயலணி, கேர்ணல் டி.எஸ்.பி.வெலிக்கல தலைமையிலான 632-வது படையணி, லெப்டினன்ட் கேர்ணல் ஏ.எல்.பி.எஸ்.திலகரத்ன தலைமையிலான 633-வது

செயலணி மற்றும் கேர்ணல் நிஷாந்த வன்னியாராச்சி தலைமையிலான 4-வது விசேட அதிரடிப்படை. லெப்டி னன்ட் கேர்ணல் ரந்துல ஹத்தனாகொடவின் கீழ் 642-வது படையணியும் முல்லைத்தீவு போர் முன்னணிக்கு ஒதுக்கப்பட்டது.

மன்னார் போர் முன்னணியை வழிநடத்த பிரிகேடியர் விக்ரமரத்ன தலைமையிலான 61-வது படையணி தெரிவு செய்யப்பட்டதுடன் கேணல் குலதுங்கவின் கீழ் 611-வது படையணியும் லெப்டினன்ட் கேர்ணல் சம்பத் கொட்டு வேகொடவின் கீழ் 612-வது படையணியும் உள்ளடக்கப் பட்டன. வவுனியா போர் முன்னணியை வழிநடத்த 2-வது செயலணியின் பிரிகேடியர் ரோஹன பண்டார நியமிக் கப்பட்டதுடன் லெப்டினன்ட் கேர்ணல் அதுல ஆரியரத் னவின் கீழ் 621-வது படையணி மற்றும் கேர்ணல் எச்.ஏ. செனவிரத்ன தலைமையிலான 622-வது படையணி உள் ளடக்கப்பட்டது.

மன்னார் மற்றும் வெலி ஓயா இரண்டு கள தலைமைய கங்களை பராமரித்து வந்த நிலையில் மன்னார் களத் தலைமையகத்தின் பொறுப்பு கேணல் ஜி.வி.ரவிப்பிரிய விடம் ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு உதவியாக ஜீ. ஜே.ஏ.டபிள்யூ.கலகமகே தலைமையிலான 5-ஆவது அதிரடிப்படையும், லெப்டினன்ட் கேர்ணல் ஏ.பி.ஐ.பெர் னாண்டோ தலைமையிலான 641-ஆவது படையணியும், லெப்டினன்ட் கேணல் ரஞ்சித் அபெரத்னவின் கீழ் 642 வத் படையணியும் இணைந்து செயற்பட்டன. வெலி ஓயா களத் தலைமையக பிரிகேடியர் எம். ஜெயவர்தன கீழ் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாண யுத்த வலயத்தில் முகமாலை, நாகர் கோவில் மற்றும் கிளாலியை ஒட்டிய மூன்று யுத்த முன்ன ரங்குகள் ஸ்தாபிக்கப்பட்டன. யாழ்ப்பாண படைப்பி ரிவின் தளபதியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் பி.ஏ.சந்திரசிறி 2008டிசம்பர் வரை அப்பதவியை வகித் தார். மேஜர் ஜெனரல் மெந்தக சமரசிங்க, பின்னர் திரு கோணமலையின் 22-வது படையணிக்கு கட்டளைத் தள பதியாக இயங்கியதுடன் 2008-இல் மாவிலாறு மற்றும் சம்பூர் சமர்களில் கட்டளைத் தளபதியாக இயங்கிய மேஜர் ஜெனரல் மெந்தக சமரசிங்க 2008 டிசம்பரில், யாழ்ப்பாண படையணியின் தளபதியாக நியமிக்கப் பட்டார். யாழ்ப்பாண படையணி தளபதியின் கீழ், நடவ டிக்கைகளுக்காக இரண்டு இராணுவப் பிரிவுகளும் ஒரு அதிரடிப்படையும் நியமிக்கப்பட்டது. முகமாலை மற்றும் கிலாலிக்கு இடையிலான முன்னரங்க பாதுகாப்பு வளையம் மேஜர் ஜெனரல் கமல்குணரத்ன தலைமை யிலான 53-வது படைப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும், பல்வேறு சந்தர்ப்பங்களில், பல பிற பிரிவுகள், படையணிகள் மற்றும் இராணுவ அலகுகள் ஒழுங்க மைக்கப்பட்டு மனிதாபிமான நடவடிக்கையில் ஈடு பட்டன. 573, 631 மற்றும் 632 ஆகிய மூன்று படையணி களைக் கொண்ட பிரிகேடியர் எஸ்.டி.டி. லியனகே அவர் களின் கீழ் 24-வது படையணி 2008 நவம்பரில் நிறுவப் பட்டது. இலங்கை காலாட்படை, இலங்கை சிங்க, கஜபா மற்றும் விஜயபா ரெஜிமெண்டுகளின் படையினரும் இந்த படைப்பிரிவுகளில் ஈடுபடுத்தப்பட்டனர். மாங்கு ளம், கனகராயன்குளம், ஒலுமடு முத்தரையன் குளம் விமான ஓடுபாதை, இரணைமடு விமான ஓடுபாதை, நீர்மூழ்கி தளம், உடையார்கட்டுக் குளம் ஆகிய இடங் களைக் கைப்பற்றும் நடவடிக்கைகளில் இப்பிரிவின்



படையினர் ஈடுபடுத்தப்பட்டனர்.

பிரிகேடியர் என்.டி.வன்னியாராச்சி அவர்களின் தலை மையில் 2008 டிசம்பர் 10-ஆம் திகதி வெலிஓயா கல்யா ணபுரவில் இரண்டு படையணிகளை இணைத்துக் கொண்டு நிறுவப்பட்ட 64-வது படையணி மனிதாபிமான பணியின் இறுதிக் கட்டத்தில் பங்கேற்றது. இலங்கை காலாட்படை, இலங்கை சிங்க படையணி, கெமுனு ஹேவா படையணி, விஜயபா, கஜபா போன்ற 64 படைப்பிரிவுகள் இதில் பங் கேற்றன. முதலாவது படையணியின் கீழ் இடம்பெற்ற மனிதாபிமான நடவடிக்கைகளின் போது நெடுங்கேணி, ஒதியமலை, ஒட்டுசுட்டான், தண்டுவான், புதுக்குடியி ருப்பு, முத்தையன் குளம், பெரியமடு, முத்துவிநாயக புரம் போன்ற பிரதேசங்களில் அவர்கள் நடவடிக்கை களில் ஈடுபட்டனர். அதே நேரத்தில், இந்த படைய ணிகள் மற்றும் துருப்புகள் பாதுகாப்புப் படைகளால் கைப்பற்றப்பட்ட பகுதிகளைப் பாதுகாக்கவும் ஸ்திரப்ப டுத்தவும் பயன்படுத்தப்பட்டன.

வன்னி மனிதாபிமான பணியை நிறைவு செய்யும் கட் டத்தின் கீழ் செயற்பாட்டு கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும், கைப்பற்றப்பட்ட பிரதேசங் களைப் பாதுகாப்பதற்கும், முறையானதும் வினைத்தி றனானதுமான முறையில் அதிகாரத்தை உறுதிப்படுத்து வதற்கும் பொறுப்பளிக்கப்பட்ட இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா 2009 ஜனவரி

10-ஆம் திகதி ஒரு புதிய படையணியை ஆரம்பித்து வைத்தார். 57-வது படைப்பிரிவின் ஒரு ஆதரவுப் பிரிவாக கேணல் கே.ஏ.சி.எச்.கொடிதுவக்கு அவர்களின் கீழ் நிறுவப்பட்ட இந்த புதிய படையணி, இரண்டு படையணிகள் மற்றும் 12 பாதுகாப்பு படையணிகளை இணைத்து உருவாக்கப்பட்டது. 661-வது படையணி ஆரம்பத்தில் பூநகரியிலும், 662-வது படையணி குட்டிப் பரந்தனிலும் நிறுத்தப்பட்டது. விடுவிக்கப்பட்ட பகுதிகளைப் பாதுகாத்து உறுதிப்படுத்தும் பணி விரிவுபடுத்தப்பட்டதுடன் இரண்டு படையணிகளுடனும் இணைக்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரிக்கப்பட்டது.

மனிதாபிமான நடவடிக்கை முடிந்ததும், மேலும் பல அலகுகள் சேர்க்கப்பட்டன, 10 டிசம்பர் 2009 அன்று, 6 வது நடவடிக்கையணி 66 வது படையணியாக மாற்றப்பட்டது. மீட்கப்பட்ட பகுதிகளைப் பாதுகாக்கும் பணி அதனிடம் ஒப்படைக்கப்பட்டதால், எதிரிகளின் தாக்குதல்கள் எதையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கவில்லை.

பிரிகேடியர் பி.வி.ரவிப்பிரிய தலைமையில் 681 மற்றும் 682-ஆவது படைப்பிரிவுகளை இணைத்து 6-ஆவது படையணி 2009-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02-ஆம் திகதி புதுக்குடியிருப்பில் நிறுவப்பட்டது. இப்பிரிவு 2009 பெப்ரவரி 09 தொடக்கம் 2009 மே மாதம் 15-ஆம் திகதி வரை புதுக்குடியிருப்பு மணற்கண்டல் வெள்ளமுள்ளி வாய்க்கால் போன்ற பிரத்சங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கும் பங்களிப்பு செய்தது.

இதற்கு முன்னர், வன்னி மனிதாபிமான நடவடிக்கையின் போது, குறிப்பாக கிழக்கு மனிதாபிமான பணியின் போது கடற்படை மற்றும் விமானப்படை மூலம் இராணுவத்திற்கு உதவிகள் வழங்கப்பட்டன. மூன்று தசாப்தங்களாக நீடித்து வந்த பிரிவினைவாத பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, பயங்கரவாதிகளுக்கு ஆயுத விநியோகம் செய்யும் வழிகளைத் தடுப்பதில் பிரதானமாக கடமையாற்றிய கடற்படையினர், வன்னிப் பகுதியில் மனிதாபிமான நடவடிக்கையின் போது பெரும் பணியை நிறைவேற்றினர்.

2006-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17-ஆம் திகதி கல்முனை கடற்பரப்பில் பயங்கரவாதிகள் ஆயுதங்களுடன் சென்ற கப்பலை கடற்படையினர் மூழ்கடித்தனர். 2006 ஒக்டோபர் 18 அன்று, எல்.ரீ.ரீ.ஈ.யினரின் பல தற்கொலைக் குண்டுதாரிகள், காலியில் உள்ள கடற்படைத்தளத்தை அடைய முயன்றபோது, அவர்களின் ஐந்து படகுகள் கடற்படையினரால் அழிக்கப்பட்டன. 2006 நவம்பர் எல்.ரீ.ரீ.ஈ பயங்கரவாதிகளுக்குச் சொந்தமான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களுடன் ஒரு கப்பல் அழிக்கப்பட்டது. அதே மாதம் 18-ஆம் திகதி வாகரைக்கு ஆயுதங்களை ஏற்றிச் சென்ற 11 படகுகளை கடற்படை அழித்தது.

2007-இல், தெய்வேந்திரமுனை கடற்கரையில் இருந்து சுமார் 105 கடல் மைல் தொலைவில் பயணித்துக் கொண்டிருந்த 75 மீட்டர் நீளமான எல்.ரீ.ரீ.ஈ.க்கு சொந்தமான கப்பலை கடற்படையினர் விரட்டியடித்தனர். அதே ஆண்டு மார்ச் 18 அன்று, அருகம்பே கடற்கரையில் இருந்து 195 கடல் மைல் தொலைவில் பயணித்த இரண்டு பயங்கரவாத கப்பல்கள் 2017 செப்டம்பர் 10 மற்றும் 11-க்கு திகதிகளுக்கு இடையில் அழிக்கப்பட்டன. 600 பேர் துரத்தப்பட்டு மூன்று பெரிய கப்பல்கள் அழிக்கப்பதுடன் எல்.ரீ.ரீ.ஈ. அமைப்புக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்ட பாதைகளை அடைத்தது. ஒக்டோபர் 07, 2007 அன்று, இலங்கையின் தென்கிழக்கில் 200 மைல் தொலைவில் பயங்கரவாதிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிச் சென்ற பெரிய அளவிலான கப்பலை கடற்படை அழித்தது.

எல்.ரீ.ரீ.ஈ.யினருக்கு ஆயுதங்களைக் கொண்டு சென்ற சமுத்திர, சாக்கிய, சயுர மற்றும் சுரனிம ஆகிய கடற்படைக் கப்பல்களை அழிப்பதில் கடற்படையின் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, 2007 செப்டம்பர் 17-ஆம் திகதி கடற்படை படையணிகளின் கட்டளை அதிகாரிகளுக்கும் ஏனையவர்களுக்கும் சன்னஸ்பத்ர விருது வழங்கி ஓர் சிறப்பான விழாவை சனாதிபதி நடத்தினார்.

எல்.ரீ.ரீ.ஈ.யினரின் தாக்குதலை அடுத்து இலங்கை கடற்படை எதிர்கொண்ட அழிவுகள் மிகக் குறைவு. 2006 மார்ச் மற்றும் மே 04, 2009-க்கு இடையில், திருகோணமலை துறைமுகம், மன்னார், பருத்தித்துறை, சிலாவத்துறை, நெடுந்தீவு, நாயாறு மற்றும் முல்லைத்தீவில் ஆகிய இடங்களில் 12 பெரிய, சிறிய கடற்படை கப்பல்கள், எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பால் கடலில் மூழ்கடிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இலங்கை கடற்படை தயங்கவில்லை மாறாக மனிதாபிமான பணி நிறைவடையும் வரை இராணுவத்திற்கு சாத்தியமான அனைத்து ஆதரவையும் வழங்கியது.

இலங்கை விமானப்படை தொடர்ந்தும் இராணுவத்திற்கு ஆதரவளித்து வந்ததோடு விமானப்படை அதேபோல் முக்கியமான அரசாங்க மையங்கள் மீது எல்.ரீ.ரீ.ஈ.யினரின் விமானத் தாக்குதல்களைத் தடுக்க முறையான நடவடிக்கைகளை எடுத்தது. டிசம்பர் 2005-இல், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இரண்டு 'இந்திரா மார்க் 2' இரட்டை ராடார் தொகுதிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. அவற்றில் ஒன்று கட்டுநாயக்க விமானப்படை தளத்திலும் மற்றொன்று வவுனியா தளத்திலும் நிறுவப்பட்டது. இவை கிபீர், மிக் 27, எஃப் 07 போன்ற சக்தி வாய்ந்த போர் விமானங்களை கண்காணிக்க வடிவமைக்கப்பட்டன. எல்.ரீ.ரீ.ஈ.யினரால் பயன்படுத்தப்படும் குறைந்த அளவு தூரம் பறக்கும் அல்லது சிறிய இலகுரக விமானங்களை கண்காணிப்பதற்கு அவை பொருத்தமானவை அல்ல. இந்த ராடார் கருவிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து இலங்கை விமானப்படை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிப்பதற்காக இந்திய நிபுணர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். கட்டுநாயக்க விமானதளம் மற்றும் கொழும்பு துறைமுகம் போன்ற ஏனைய முக்கியஇடங்களிலும் 40 விமான எதிர்ப்பு ஏவுகணைகள் நிலைநிறுத்தப்பட்டிருந்தன.

கட்டுநாயக்க விமானப்படை தளத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. விமானப்படை தளத்தைச் சுற்றி ஐந்து கிலோ மீட்டர் வரை கட்டுப்பாட்டை பராமரிக்க விமானப்படை வீரர்கள் நிறுத்தப்பட்டனர். சர்வதேச விமான நிலையமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் உயர் பாதுகாப்பு வல யங்களாக அறிவிக்கப்பட்டன. அதற்கு மக்களின் ஆதர வைப் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

மார்ச் 25, 2007 அன்று, கட்டுநாயக்க விமானப்படை தளத்தின் மீது எல்.ரீ.ரீ.ஈ.யினரின் முதல் விமானத் தாக் குதல் நடத்தப்பட்டது. ஹெலிகப்டர் யார்டும் விமானம் பழுது பார்க்கும் தளமும் சேதமடைந்தன. இந்த தாக்கு தலில் 3 விமானப்படை வீரர்கள் கொல்லப்பட்டதுடன் 14 பேர் காயமடைந்தனர்.

2007-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ஆம் திகதி அநு ராதபுர விமானப்படை தளத்தின் மீது எல்.ரீ.ரீ.ஈ. தாக்குதல் நடத்தி பல விமானங்களை அழித்தனர். 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ஆம் திகதி அதிகா லையில் அரசாங்க விமானப்படை மிக்-27 மற்றும் ஒரு கிபீர் விமானங்களை கிளிநொச்சிக்கு கொண்டு சென்று திட்டமிட்டபடி எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் முக்கிய தலைவர் களில் ஒருவரான தமிழ் செல்வன் தங்கியிருந்த குண்டு துளைக்காத பதுங்கு குழியில் குண்டுகளை வீசி அப்ப யங்கரவாத தலைவர் கொல்லப்பட்டார்.

நவம்பர் 2007-இல், செக்கோஸ்லோவாக்கியாவில் தயா ரிக்கப்பட்ட ஒற்றை எஞ்சின் 'ஸ்லின் 143' வகை இலகுரக சிறிய விமானத்தைப் பயன்படுத்தி எல்.ரீ.ரீ.ஈயின் தாக்கு தல்களை எதிர்கொள்ள இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட ரேடாரை விட மேம்பட்ட ஒரு முப்பரிமாண ரேடார் அமைப்பு இறக்குமதி செய்யப்பட்டது. பயங்கர வாதிகள் இரவில் வான்வழித் தாக்குதல்களை நடத்தி யதால், முக்கிய இலக்கு இடங்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்க இரவில் நகரங்களை இருளில் வைத் திருப்பது போன்ற உத்திகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இவை எதுவுமே வெற்றிகரமான தீர்வல்ல என்று நம்பிய பயங்கரவாதிகள், 2007 ஏப்பிரல் 21 அன்று, பலாலி விமானப்படைத் தளத்தின் மீது விமானத் தாக்குதலை நடத்தினர். மயிலிட்டி கடற்கரை அருகே இரண்டு குண்டுகள் வீசப்பட்டதில் 6பாதுகாப்பு படை யினர் கொல்லப்பட்டனர். ஏப்ரல் 29 அன்று, அவர்கள் கொலன்னாவ எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கெலவரப்பிட்டியவில் உள்ள எரிவாயு வளாகம் மீது குண்டுத் தாக்குதல் நடத்தினர்.

ஓகஸ்ட் 26, 2008 அன்று திருகோணமலை கடற்படைத் தளத்தின் மீது பயங்கரவாதிகள் குண்டு வீசினர். 2008 செப்டெம்பர் 09-ஆம் திகதி வவுனியா பாதுகாப்பு வளா கத்தின் மீது விமானம் மற்றும் தரை மார்க்கமாக பயங்க ரவாதிகள் தாக்குதல் நடத்த முயற்சித்தனர். வான் பாதுகாப்பு ரேடார் அமைப்பும் அங்கு நிறுவப்பட்டிருந் ததால், கடுமையான தாக்குதலை ஏற்பாடு செய்த பயங் கரவாதிகள் பத்து தற்கொலை குண்டுதாரிகள் தரையில் இருந்து தாக்கும் போது, வளாகத்தை வான்வழித் தாக் குதல்களால் குண்டுவீச திட்டமிட்டனர், பாதுகாப்புப் படையினரால் குண்டுவெடிப்புகளை முறியடிக்க முடிந் ததால், சில குண்டுகளை வீசியதைத் தவிர எதிர்பார்த் தபடி வான்வழித் தாக்குதலை நடத்த முடியவில்லை. இந்த தாக்குதலில் குறைந்தது 11பாதுகாப்பு படையினர் கொல்லப்பட்டதுடன் 31 பேர் காயமடைந்தனர்.

ஒக்டோபர் 28, 2008 அன்று, பயங்கரவாதிகள் தங்கள் விமானங்களைப் பயன்படுத்தி மன்னாரில் உள்ள தள்ளாடி இராணுவ தளத்தின் மீது இரண்டு குண்டுக ளையும், கொழும்பில் உள்ள களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தின் மீது மேலும் இரண்டு குண்டுக ளையும் வீசினர். இதனால் ஆலைக்கு கடும் சேதம் ஏற் பட்டது. 2007-2009 வரை, மனிதாபிமான நடவடிக்கை களின் போது நாட்டின் முக்கியமான பொருளாதார மற்றும் பாதுகாப்பு மையங்களை அழிக்க பயங்கரவா திகள் மீண்டும் மீண்டும் இலகுரக விமானங்களைப் பயன்படுத்தி வான்வழித் தாக்குதல்களை நடத்தினர்.

பெப்ரவரி 20, 2009 அன்று, மனிதாபிமான நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியபோது, எல்.ரீ.ரீ.ஈ விமானங்கள் தற்கொலை குண்டுதாரிகளுடன் கொழும்பை வந்த டைந்தன, ஆனால் பாதுகாப்புப் படையினர் அந்த விமா னங்களைத் தாக்கி சுட்டு வீழ்த்தினர். கொழும்பில் உள்ள விமானப்படை தலைமையகத்தை இலக்கு வைத்து தாக்கிய இரண்டு விமானங்களில் ஒன்று அருகி லுள்ள வருமான வரித் திணைக்கள கட்டிடத்தின் மீதும் மற்றைய விமானம் கட்டுநாயக்க விமானப்படை தளத் தின் மீதும் விழுந்து நொறுங்கியது.

எல்.ரீ.ரீ.ஈ. அமைப்பின் இலகுரக விமானங்களால் பாது காப்புப் படையினருக்கு ஏற்பட்ட சவால்களுக்கு மத்தி யில், தேவைப்படும் போதெல்லாம் விமானப்படை இரா ணுவத்திற்கு உதவியது, மேலும் அதன் ஆரம்ப நாட் களில் A9 பாதையில் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட் டின் கீழ் இருந்தபோது விமானப்படை இராணுவ வீரர் களின் நகர்வு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட் கள் மற்றும் பிற பொருட்களை இராணுவத்திற்கு விநி யோகிப்பதில் மகத்தான ஆதரவை வழங்கியது.

வடக்கு மனிதாபிமான நடவடிக்கையின் ஆரம்பத்தில், இராணுவத் தளபதி ஒவ்வொரு முன்னணி நடவடிக்கைக் காகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய இராணுவப் பிரிவு களுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளை வழங்கிய பின் னர், அவர்கள் எதிரிகளைத் தோற்கடித்து முன்னேறுவ தற்கான நடவடிக்கைகளைத் ஆரம்பித்தனர். இவ்வா றாக, ஒவ்வொரு பிரிவினரும் வெவ்வேறு பகுதிகளில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டு அந்த பிரிவுகளுக்கு இடையில் மிக நெருக்கமான பரஸ்பர உறவுகள் பேணப்பட்டன.



sarawanan.n@thaiveedu.com

# கலையின் இருவழிப் பாதை

## கருணாகரன்



துயரம், இலக்கியத்தில் - கலையில் வெளிப்படுவதும் இலக்கியம் அல்லது கலை, துயரத்தை வெளிப்படுத்துவதும் இரு நிலையில் நிகழ்வது. இரண்டும் துன்பியலின் வெளிப்பாடுதானென்றாலும் இரண்டுக்குமிடையில் நிறய வேறுபாடுகளுண்டு. ஒன்று துன்பியலின் கலை. மற்றது கலையில் துன்பியல். துயரம், கலையிலும் இலக்கியத்திலும் வெளிப்படும் போது அநேகமாக அதில் உண்மை ஒளிரக் கூடிய சூழல் நிகழ்கிறது. ஒருவருடைய அல்லது ஒரு சமூகத்தின் வாழ்க்கையில் ஏற்படும் துயர நிலையைப் பிரதிபலிக்க முற்படும் கலையோ இலக்கியமோ அந்த வாழ்க்கையின் அடியொலிப்பை அல்லது அடி யொளிப்பைக் காட்டும். இங்கே ஆழ்ந்து கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அது, 'ஒலிப்பு' என்ற ஒலிர்வையும் 'ஒளிப்பு' என்ற ஒளிர்வையுமாகும். ஒலிர்வு, ஒளிர்வு என்ற இவை இரண்டையும் அடிப்படையாகக் கொண்டே கலையும் இலக்கியமும் எப்போதும் இயங்கி வருகின்றன. அது சினிமாவோ, இசையோ, ஓவியமோ, நாடகமோ இலக்கியத்தில் கதை, கவிதை, நாவல் போன்ற எந்த வடிவமாயினும் இந்த இரண்டையும் அடிப்படையாகக் கொண்டவையேயாகும். இரண்டையும் விலக்கி விட்டுக் கலையும் இலக்கியமும் வெளிப்படவும் முடியாது, தொழிற்படவும் முடியாது.

இப்படி ஒலிப்பிலும் ஒளிர்விலும் வெளிப்படுத்திக் காட்ட முற்படும்போது அது அந்த வாழ்க்கையின் உண்மையை - மெய்ப்பாட்டை - பிரதிபலிப்பதாகவே பெரும்பாலும் அமையும் என்பதால்தான், இந்த வகைக் கலைகளும் இலக்கியமும் அந்த வாழ்க்கையோடுள்ள மனிதர்களையும் அவர்களுடைய வாழ்க்கை நிகழும் காலத்தையும் சூழலையும் தன்னுள் கொண்டமைகின்றன. இதனால் இவற்றுக்கு உண்மைக்கு நெருக்கமானதொரு வரலாற்றுப் பெறுமானம் ஏற்பட்டு விடுகிறது. அதேவேளை அது வெறும் வரலாற்றுக் குறிப்பாகவோ வரலாற்று ஆவணமாகவோ இருந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது, அவற்றின் அழகியலாகும். அதாவது அவற்றின் கலைப்பெறுமானமாகும். இந்த வகைக் கலைப்படைப்புகளும் இலக்கிய வெளிப்பாடுகளும் நம்முடைய சூழலிலும் ஏராளமுண்டு. உலக அளவிலும் நிறைய உள்ளது. ஆபிரிக்க இலக்கியம், லத்தின் அமெரிக்கச் சினிமா, பலஸ்தீனக் கவிதைகள், தலித் இலக்கியம், கரிசல் கதைகள். ஈழ இலக்கியம் எனப்பல. இவற்றின் சிறப்பும் அடிப்படையும் என்னவென்றால் அந்த நிலம், அங்குள்ள மக்கள், அவர்களுடைய வாழ்க்கை, இவை இணைந்த சூழல், இவற்றைச் சுற்றி நிகழும் அரசியல், இதெல்லாம் நிகழும் காலம் என்பவைதான் என்று புரிந்து கொள்ள முடியும், அல்லது அவ்வாறான ஒரு படிமம் நமக்கு ஏற்பட்டு விடுகிறது. இந்தப் பின்னணி எதையும் தெரியாத புதிய வாசகர் அல்லது புதிய பார்வையாளர் ஒருவருக்குக்கூட இவற்றில் ஏதாவது ஒன்றுடன் அறிமுகம் நிகழும்போது, உடனடியாகவே அவர் இந்த அடிப்படையைப் புரிந்து கொள்வார். எளிய உதாரணம், 'மரணத்துள் வாழ்வோம்' கவிதைகள். 1985-ல் வெளியான அல்லது தொகுக்கப்பட்ட அந்தக் கவிதைகள், அன்றைய ஈழநிலவரத்தினதும் ஒடுக்குமுறைக்காலத்தின் சித்திரமாகவே உள்ளன. அத்துடன் ஒடுக்குமுறையை எதிர்க்கும் குணநிலை உருவாகி எழுச்சியடையும் தன்மையையும் காணலாம்.

அந்தத் தொகுப்பில் உள்ள கவிதைகளும் இதைத் தெளிவாகவும் வலுவோடும் வெளிப்படுத்துகின்றன. இதற்கமைய அதற்குரிய மொழியையும் வெளிப்பாட்டு முறையையும் அவை தேர்ந்து கொள்கின்றன. இதுகூட இருநிலையிலானது எனலாம். ஒன்று, அந்த ஒடுக்குமுறையையும் அதனால் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட அவலச் சூழலையும் வெளியே தெரியப்படுத்துவது. பகிரங்கப்படுத்துவது நிகழ்கிறது. அதன் மூலமாக அதை உருவாக்கிய அரசை - அதிகாரத் தரப்பை வெளிப்படுத்தி, அம்பலப்படுத்தும் செயல் நடக்கிறது. இதன் மூலமாக இவ்வாறான ஓர் அவலநிலை ஈழத்தில் உள்ளது. அநீதி நடக்கிறது என்பதை உலகப் பெரும்பரப்பில் சொல்வது நிகழ்கிறது. அதன் வழியாக நீதியைக் கோர முற்படுவது. அடுத்தது, அரசினால், அதிகாரத்தரப்பினால், ஒடுக்குமுறையாளரினால் ஏற்படுத்தப்படுகின்ற துயரத்தையும் அவலத்தை

யும் மக்களுக்குச் சொல்லிக் கொள்வதாகும். அதேவேளை நம்முடைய துயரத்தை வாய்விட்டு - மனம் விட்டுச் சொல்வ தன் வழியாக இது ஓர் ஆற்றுப்படுத்தலுக்கானதாகவும் அமைகிறது. கூடவே, இவ்வாறான நிலையே நமக்கு, நம்மு டைய மக்களுக்கு நிகழ்கிறது என்பதை உய்த்துணர வைத்து மக்களை விழிப்படைய வைத்தலாகவும் இருக்கிறது. அதன் வழியாக அவர்களைப் போராடுவதற்குத் தயார்ப்படுத்துதல் நிகழ்கிறது.

இன்னொரு உதாரணம், இந்தக் காலப்பகுதியில் மேற்கொள் ளப்பட்ட 'மண் சுமந்த மேனியர்' நாடகமாகும். அன்று ஈழச் சமூகத்தில் நிலவிய நிகழ்வுகளையும் உணர்வுகளையும் உள் ளடக்கி உருவாகிய நாடகம் என்ற வகையில் இதுவும் 'மரணத் துள் வாழ்வோம்' கவிதைகளைப்போல துன்பியலைக் கலை யாக்கம் செய்வதாக அமைந்தது. அத்துடன் மேலே சொன்ன தைப்போல, இந்தத் துயரத்திலிருந்து விடுபடுவதற்கு மக்கள் எழுச்சி அவசியம் என்பதையும் உள்ளூர உணர்த்தியது. அதாவது தனியே துன்பியலை வெளிப்படுத்தும் அழுகைப் படைப்பாகவோ கண்ணீர்க்கதையாகவோ அமையாமல் போராட்டக் குணாம்சத்தை முன்னிறுத்தி, விடுதலைக்கான வெளியை விரிக்க முயன்றது.

அவலமும் துயரமும் துன்பியலாக மட்டும் வெளிப்பாடடையா மல், அவை விடுதலையை நோக்கிய வெளியை, வேட் கையை விவரிப்பதாகவும் அமைந்தன. துயரத்தை வெளிப்ப டுத்தும் கலையாக்கத்தில் இவ்வாறான விடுதலைக் குணாம் சம் உள்ளடுக்காகவோ வெளிப்படையாகவோ இருப்ப துண்டு. அது தவிர்க்க முடியாதது. ஏனெனில் துயரத்தைக் கடந்தேயாக வேண்டும் என்பது பொதுவான மனித எத்தனமா கும். ஆகவே துன்பியல் உருவாக்கும் கலையாக்கமானது, துயரத்தைக் கடத்தலுக்கான வழியைத் திறப்பதாகவே அடிப்படையில் அமைகிறது. மனம் விட்டு அழுதால் பாரம் குறையும். மனம் லேசாகும் என்று சொல்வார்கள் இல்லையா, அந்த எளிய வார்த்தைகளில் ஆழமான உண்மை படிந்திருக் கிறது. துயரத்தைக் கடத்தல் என்பதும் அதுதான். எனவே, துயரம் கலையின் வெளிப்பாடு. வெளிப்படுதல் என்பதும் வெறுமனே அழுது புலம்பி துயரத்தை வெளிப்படுத்தல் மட்டு மல்ல, பிறரிடம் முறையீடு செய்வதற்கோ இரக்கத்தைக் கோருவதற்கானதுமல்ல. மகிழ்ந்து களித்து உள்ளார்ந்த விருப்பத்திற்குத் தடையாக இருக்கும் சுமைகளையும் இடைஞ்சல்களையும் நீக்குவதற்கான எத்தனமேயாகும்.

ஆகவே துயரத்தைக் கடத்தல் என்பதே மகிழ்ச்சியை நோக் கிய பயணத்தின் தொடக்கமாகும். எனவே துயரம் இலக்கியத் தில் அல்லது கலையில் வெளிப்படுதல் என்பது விடுதலை யின் வழியாக மகிழ்ச்சியை எட்டுவதற்கான எத்தனம் என்றே அமைகிறது. அதனால் இந்த வகைக் கலையாக்கத்துக்கு விடுதலைப் பண்பு அதிகம். விடுதலை என்றாலே மகிழ்ச்சி தானே! என்பதால்தானே பாரதியார், *'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே... ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம் என்று ஆடுவோமே, பள்ளுப் பாடுவோமே...'* என்று மகிழ்ச்சிக் களிப் பில் பாடினார். துயரம், இலக்கியத்திலோ கலையிலோ வெளிப்பாடடைவது இந்த அடிப்படையிலானது, இவ்வாறான விளைவுகளைக் கொண்டது என்றால்... அடுத்து, இலக்கியம் அல்லது கலையானது துயரத்தை வெளிப்படுத்துவது அல் லது பிரதிபலிப்பது எப்படியாக அமைகிறது என்று பார்க்க லாம். அது தான் எடுத்துக் கொண்ட - வெளிப்படுத்த விளை



கின்ற படைப்பின் வழியாக துயரத்தையும் அவலத்தையும் அவை இணைந்த துன்பியலை கலையாக்கமாக முன்வைக்கி றது. அதனுடைய அழகியல் துன்பியலில் வெண்ணெய்யாகத் திரள்கிறது. இந்த வெளிப்பாட்டின் முக்கிய அம்சமே துன்பி யலை, வேதனையை, அவலத்தை, துயரத்தை வெளிப்படுத் திக் காட்டுவதேயாகும். இது உண்டாக்கும் ரசனையும் அது தான். ஆக, துயரத்தில் தோய்வதை - துன்பியலைத் துய்ப் பதை இன்பமாகக் கொண்டது. சினிமா, நாடகம், பாடல் போன்றவற்றில் வெளிப்படும் சோகம் அல்லது துயரமானது அதை ரசிப்பது - துய்ப்பதாகவே அமைகிறது. எழுத்திலும் (இலக்கியத்திலும்) இதுதான் அடிப்படை.

ஆக, இங்கே ருசியும் ருசிப்பதுமே முக்கியமானதாகும். இதில் ஊன்றிக் கவனிக்க வேண்டியது என்னவென்றால், இந்தத்

துயரத்தில் பங்கேற்பதோ, இந்தப் பாரத்தை நீக்கப் பங்களிப் பதோ இங்கே முக்கியமாக அமைவதல்ல. மகிழ்ச்சியை, இன் பத்தை, கொண்டாட்டத்தை ருசிப்பைப்போல துயரத்தையும் துன்பியலையும் ருசிப்பது - நுகர்வது மட்டுமே இங்கே நிகழ்கி றது. இந்த ருசிப்பும் நுகர்வும் ஆழமானதாக இருப்பதில்லை. மாறாக மேல்மட்டத்தில்தான் நிகழ்வதுண்டு. ஆழமாக அது மாறுமாக இருந்தால் அது சிந்தனைக்குக் கொண்டு செல்லப் படும். சிந்தனைக்குக் கொண்டு செல்லப்பட்டால் அது செயற் பாட்டு விளைவுக்குத் தூண்டும். செயற்பாட்டு விளைவென்



பது ஒரு வகையில் அரசியல் இயக்கமாதலேயாகும். இதை நடைமுறையில் உள்ள பழுதடைந்த அரசியல் இயக்கமாக இங்கே கொள்ளப்படவில்லை. புத்தாக்கப்பண்புடைய அரசி யல் இயக்கமாகக் கொள்ளப்படுகிறது.

ஏழுபிள்ளை நல்லதங்காள் கதை தொடக்கம், துலாபாரம் திரைப்படம் வரையிலும் இந்தத் துன்பியலின் ரசானுபவம் பருகப்பட்டிருக்கிறது. மிகச் சிறந்த உதாரணம், கிரேக்க நாட கங்களாகும். துன்பியல் ரசனையைப் பிழிந்தளித்தவை அவை. நாம் தினமும் கேட்கின்ற - தொடர்ந்து ஒலிக்கின்ற ஏராளமான சோகப்பாடல்கள், கேட்டல் இன்பத்தை மட்டுமே அளிக்கின்றன. சிலபோது அவற்றில் அவரவர் தங்களை இணைத்தும் பிணைத்தும் பார்த்துக்கொள்கிறார்கள். அந்தக் கணப்பொழுதோடு அவற்றின் செல்வாக்கு அல்லது ரசானுப வம் முடிந்து விடுகிறது. பதிலாக அதை, அந்த நிலையை எவ ரும் யதார்த்தமாக - நடைமுறை வாழ்க்கையில் ஏற்று அனுப விக்கத் தயாரில்லை. இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டை இங்கே சுட்டலாம். ஆயுதம் தாங்கிய ஈழப்போராட்டம் முடிவு றுத்தப்பட்டிருக்கிறது. அது உண்டாக்கிய அல்லது அதன் போது உண்டாகிய ரணமான விடயங்களும் நிகழ்வுகளும் தொடர்ந்து எழுதப்படுகின்றன. இதற்குப் பல விதமான கார ணங்களும் அடிப்படைகளும் சொல்லப்படுகிறது. அதற்கான நியாயங்களும் இருக்கின்றன. ஆனாலும் இந்த ரணங்களைத் தொடர்ந்து நினைவூட்டலாக்கும்போது அதிலிருந்து மீள எத் தனிப்போருக்கு அது பெரியதொரு பிரச்சினையையே - சிக்க லையே உண்டாக்குகிறது. மனக் காயங்களிலிருந்து விடுபட முடியாத நிலையை, தத்தளிப்பை அது ஏற்படுத்துகிறது. இதனை உளநல மருத்துவர்களே ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆக ஒரு தரப்புக்கு இவற்றை மீள மீளப் பேசி நினைவின் பாதாளத்துள் தள்ளப்படுவது பிரச்சினைக்குரியதாக இருக்கி றது. இன்னொரு தரப்புக்கு இவற்றை அறிய வேண்டிய ஆவ லும் துடிப்பும் ஏற்படுகிறது. அது அதனை இன்பமாக வாசித்தோ பார்த்தோ துய்க்கிறது. இதற்கப்பால் இதை ஆவ ணப்படுத்த வேண்டும் என்ற காரணம் சொல்லப்படுகிறது. ஆனாலும் அடிப்படையில் இழையோடுவது கலையின் - இலக்கியத்தின் வழியே துயரத்தை ரசிப்பதுதான்.

இப்பொழுது மாரி செல்வராஜின் 'வாழை' படம் வெற்றிகரமா கத் திரையில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. வாழை காட்டு கின்ற வாழ்க்கை, துயரத்தின் கலை வெளிப்பாடாகும். அது செயல் விளைவையே கோர முனைகிறது. ஆனாலும், அது எந்தளவுக்குச் சாத்தியம் என்பது கேள்வியே. ஏனென்றால், அங்கே அது கலையில் நிகழும் துயரமாக - அவலமாக இருப்பதால் அல்லது அவ்வாறு அமைவதால் அது மேலாட்ட மான ரசனையாடு தீர்ந்து போகிறது. ஆனால் அதுவுமொரு உளவியலுக்கான தேவையாகவே உள்ளது என்று உளவிய லாளர்கள் கூறுகின்றனர். அது துயரத்தைப் பற்றி அக நிலை யில் ஆழ்ந்துணர் வதற்குப் பதிலாகப் புறநிலையில் - வாழ்க் கைக்கு வெளியே வைத்து ருசிக்க விரும்புவதாக இருக்கிறது. அந்த ரசனையும் ஒரு கொண்டாட்டம்தான். மறுவிதமாக அதை உள்ளார்ந்ததாக எடுத்தால் அது வினையாற்றலுக் குத் தூண்டி விடுமல்லவா! மேலும் ஓர் எளிய உதாரணம், ஒரு சினிமாவைப் பார்க்கிறோம். அதில் அநீதியான சில விடயங் கள் காண்பிக்கப்படுகின்றன. அவ்வாறான சில விடயங்களோ நிகழ்வுகளோ நமக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அல்லது நமக்கே அனுபவமாகியிருக்கும். ஆனாலும் அதையெல்லாம் நாம் ஆழமாக உள்ளெடுத்துக் கொள்கிறோமா ? சினிமாவில் காட்டப்படுவதைப்போல அந்த அநீதிக்கு எதிராகத் திரள்கி றோமா ? இல்லையே! அதையெல்லாம் உள்ளெடுத்துக் கொள்ளாமல், மேல் மனதில் வைத்து ரசித்துக் கொண்டு (ருசித்துக் கொண்டு) இருக்கிறோம்.

இந்த இரு நிலை வெளிப்பாட்டில்தான் கலையில் நிகழ்வு தொடர்ந்து கொண்டிருக்கிறது. இது நம்மை ஏமாற்றிக் கொள் ளும் அல்லது தேற்றிக் கொள்ளும் ஒன்றா ?



karunagaran@thaiveedu.com




**கோ.** நடேசய்யர் தன் காலத்துச் சமூக அரசியல் தேவைகளை மனங்கொண்டு அவ்வப்போது துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுள்ளார். அத்தகைய துண்டுப்பிரசுரங்களுள் 'இலங்கை இந்தியத் தொழிலாளர் நிலைமை' என்ற இதுவரை அறியப்படாத பிரசுரமொன்றைத் தேசபக்தன் பத்திரிகையில் காணமுடிந்தது. ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள அப்பிரசுரத்தை நடேசய்யரே தமிழ்ப்படுத்தித் தேசபக்தனில் தொடராக வெளியிட்டுள்ளார். அதன் ஒவ்வொரு தொடரின் தொடக்கத்திலும் இடம்பெறும்,

*'இலங்கைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களது சம்பள விகிதம் உயர்த்தவேண்டித் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சியை யுத்தேசித்து, இந்தியா சட்டசபை அங்கத்தவர்களுக்கும், சென்னை அங்கத்தவர்களுக்கும் இலங்கை இந்தியத் தொழிலாளர்களின் உண்மை நிலையை அறிவித்தற்பொருட்டும் வெளியிடப்பட்டுவரும் ஆங்கில புஸ்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. வாசகர்கள் ஊன்றி வாசிப்பார்களாக.'*

என்ற குறிப்பு, ஆங்கிலத் துண்டுப்பிரசுரத்தின் நோக்கத்தினை வெளிப்படுத்தி நிற்கிறது. தோட்டத் தொழிலாளரின் சம்பள விகிதத்தை உயர்த்த வேண்டும் என்ற அழுத்தம் ஏற்பட்டபோது இலங்கை அரசு தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. அதன்போது நியமிக்கப்பட்ட குழுக்களும் குழு உறுப்பினர்களும் தோட்டவுடைமையாளர்களுக்கு ஆதரவான நிலையை எடுப்பதை அவதானித்த நடேசய்யர், தோட்டத் தொழிலாளரின் உண்மையான வாழ்க்கை நிலையையும் அவர்களுடைய சம்பள விகிதம் உயர்த்தப்பட வேண்டிய தேவையையும் இந்தியச் சட்டசபை உறுப்பினர்களுக்கும் சென்னை மாகாண அரசியல் உறுப்பினர்களுக்கும் அறியப்படுத்துவதற்கு இப்பிரசுரத்தை முதலில் வெளியிட்டுள்ளார். பின்னர் அதனைத் தோட்டத் தொழிலாளர் உள்ளடங்கலாக ஏனையோரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தானே தமிழ்ப்படுத்தித் தேசபக்தனில் வெளியிட்டுள்ளார்.

இத்துண்டுப்பிரசுரத்தின் ஆறு தொடர்களைத் தேசபக்தனில் கண்டறிய முடிந்தது. அதன் இறுதித் தொடரிலும் 'தொடரும்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அடுத்து வந்த இதழ்களில் அதன் தொடர்ச்சியைக் காணமுடியவில்லை. ஆங்கில மூலமும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. அதனால் இப்பிரசுரம் முழுமையானதா என்பதை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. இரண்டு அத்தியாயங்களைக் கொண்டுள்ள இப்பிரசுரத்தில் முதல் அத்தியாயத்தில் இலங்கையில் இந்தியத் தொழிலாளரின் குடியேற்றம், கோப்பிக்காலத்தின் தொடக்கத்தில் கங்காணிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையிலான உறவு, அக்காலத்தில் சம்பளம் வழங்கப்பட்ட முறை, துண்டு முறையினால் தொழிலாளர் அடைந்த துயர், துண்டுமுறை நீக்கம், துண்டுமுறை நீக்கத்தால் கங்காணிகள் அடைந்த இழப்பு, தோட்டத் தொழிலாளர் சம்பள நிர்ணயக் குழுக்களின் பாரபட்சமான செயற்பாடுகள், தொழிலாளர் சம்பள விகிதத்தை அதிகரிக்க வேண்டியதன் தேவை முதலான விடயங்கள் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் அத்தியாயம் கங்காணி முறை, கோப்பி - தேயிலைக் காலங்கள் என இரண்டு உப தலைப்புகளைக் கொண்டுள்ளது. கங்காணி முறையின் அமைப்பு, கங்காணிகள் தொழிலாளர்களை ஆட்சேர்ப்பு செய்த விதம், கங்காணிகளுக்கு வழங்கப்பட்ட கூலி, கங்காணிகள் எதிர்கொண்ட சிக்கல்கள் எனக் கங்காணி முறையின் இயக்கம் சுருக்கமாக விளங்கப்படுத்தப்பட்டுள்ளதுடன் தோட்ட உடைமையாளர்களதும் கங்காணிகளதும் சுரண்டல், தொழிலாளரின் சம்பள விகிதம், சம்பளப் பிரச்சினையைத் தீர்க்க உருவாக்கப்பட்ட குழுவினருடைய அறிக்கைகள் மீதான எதிர் விமர்சனம், தொழிலாளர்களின் பொருளாதார நிலைமை, துண்டு முறையின் நீக்கத்துக்குப்பின் கங்காணிகள் தம் கடன்களைப் பெற்றுக்கொள்ள மேற்கொண்ட முயற்சிகள், தோட்டவுடைமையாளர்கள் கங்காணிகளுக்குச் செலுத்த வேண்டிய தொகையைக் கொடுக்காமலிருப்பதற்காக மேற்கொண்ட சூழ்ச்சிகரமான செயற்பாடுகள் முதலானவை விவரிக்கப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவின் செழிப்பையும் செழிப்பின்மையையும் ஒட்டி பெருந்தோட்டத் தொழிலாளர் குறைவாகவும் மிகுதியாகவும் இலங்கைக்கு வந்ததாகக் கூறும் நடேசய்யர், அத்தொழிலாளர்கள் எக்காலம் முதல் இலங்கைக்கு வருகைத் தரத் தொடங்கினர் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளமையை, 'இலங்கைத் தீவில் தொன்றுதொட்ட நாள் முதல் இந்தியர்கள் குடியேறிக்கொண்டு வந்திருக்கிறார்கள். எக்காலந் தொட்டு தோட்டங்களில் தொழில் செய்து பிழைப்பதன் பொருட்டு தொழிலாளர் நிலைமையில் இந்தியர் இந்நாட்



டிற்கு வந்தார்களென வரையறுத்துக் கூறுதல் முடியாத காரியம்' எனக் குறிப்பிட்டுள்ளதுடன் கங்காணிகளினூடாகக் கூலித்தொழிலாளர்களைத் திரட்டும் முறைமை வளர்ச்சிபெறத் தொடங்கிய 1847-ம் ஆண்டு முதல் தொழிலாளர்களின் வருகை அதிகரிக்கத் தொடங்கியதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக் கோப்பித் தோட்டங்களில் தமிழ்நாட்டைவிட சற்று அதிகமாகக் கிடைத்த சம்பளம், தமிழ்நாட்டில் அடிக்கடி இடம்பெற்ற பஞ்சங்கள் முதலானவற்றால் தமிழ்நாட்டிலிருந்து தொழிலாளர்கள் இலங்கைக்கு அதிகமாக வந்தனர் எனக் குடிவருகைக்கான பிரதான காரணங்களை வரையறுத்துள்ள நடேசய்யர், கோப்பிச் செய்கை பாதிப்படைந்தபோது தொழிலாளரின் வருகை குறைந்து, தேயிலைச் செய்கை வளர்ச்சியடையத் தொடங்கியதும் மீண்டும் தொழிலாளர் தொகை அதிகரித்தது எனத் தொழிலாளர் எண்ணிக்கையில் ஏற்பட்ட மாற்றத்துக்கான அடிப்படைக் காரணத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார். தேயிலைச் செய்கையின் விரிவாக்கத்தாலும் கோப்பிச் செய்கையில் போலல்லாது தேயிலைத் தோட்டங்களில் வருடம் முழுதும் உழைப்பாளர் தேவைப்பட்டமையாலும் தொழிலாளர் கேள்வி அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் ஏற்பட்ட கொடிய பஞ்சங்கள் அக்கேள்வியை நிவர்த்திசெய்ய துணைபுரிந்துள்ளன.

'இந்தியத் தலைவர்கள், நம் சகோதரத் தொழிலாளர் விஷயத்தில் மிகுந்த சிரத்தையெடுத்து, அவர்களுடைய வாழ்வைச் செம்மைப்படுத்த இச்சந்தர்ப்பத்தில் முற்பட்டால் மட்டிலும் சம்பள விகிதம் கூட்டப்படும்' என்ற நோக்கை அடிப்படையாகக் கொண்டுள்ள இத்துண்டுப்பிரசுரத்தில் தோட்டத் தொழிலாளரின் பொருளாதார நிலைமையை விரிவாக எடுத்துக் காட்டியுள்ள நடேசய்யர், தொழிலாளரின் வேதனம் உயர்த்தப்படவேண்டும் என்பதற்கான நியாயமான காரணங்களை ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளதுடன் தொழிலாளரின் வேதனம் தொடர்பில் நியமிக்கப்பட்ட குழுக்களுடைய அறிக்கைகளை விமர்சனபூர்வமாக ஆராய்ந்து அவற்றின் போதாமைகளையும் அம்பலப்படுத்தியுள்ளார்.

தோட்டத் தொழிலாளரின் சம்பள விகிதத்தில் 1900-ம் ஆண்டும், 1918-ம் ஆண்டும் சிறிதளவு உயர்ச்சி ஏற்படுத்தப்பட்டபோதிலும் துண்டுமுறை நீக்கப்படும் வரை தொழிலாளரின் சம்பள உயர்வு குறித்து முன்னேற்றகரமான செயற்பாடுகள் எவையும் இடம்பெறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள நடேசய்யர், அக்காலப்பகுதியில் மக்களின் வாழ்வாதாரச் செலவுகள் அதிகரித்து வந்தமையைப் புள்ளிவிபரங்களுடன் எடுத்துக்காட்டியுள்ளார். தோட்டத்திலுள்ள ஆண் ஒருவருக்கு மாதமொன்றுக்குத் தேவையான சராசரி உணவையும் அதற்கான செலவையும் (மாமிசம் மற்றும் காய்கறிகளின் கணக்கு விபரம் இல்லாமல்) 1882-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு பத்தாண்டுக்கும் கணிப்பிட்டுள்ள அவர், 1924-ம் ஆண்டு வரை உணவுக்கான செலவைக் கணித்துள்ளார். அதன்படி, 1882-ம் ஆண்டு மாதமொன்றுக்கு 1.65½ சதமாக இருந்த செலவு 1924-ஆம் ஆண்டு 4.88½ சதமாக உயர்ந்துள்ளது. அவ்வாறே உடைகளின் விலையில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களையும் தனியே எடுத்துக்காட்டியுள்ளார். அதன்படி, 1882-ம் ஆண்டு 2.50 சதமாக இருந்த உடைக்கான செலவு, 1924-ம் ஆண்டு 07 ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆனால், இந்த வாழ்க்கைச் செலவு மாற்றங்களுக்கு ஏற்ப தொழிலாளரின் வேதனம் உயர்த்தப்படவில்லை. இப்புள்ளிவிபரங்களைக் கொண்டு, 'ஒரு குடும்பத்திலுள்ள இருவருமே (கணவனும் மனைவியும்) சம்பாதித்தும் அவர்கள் தங்களையே பாதுகாத்துக்கொள்ள சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள்' என்பதைத் துலக்கமாக வெளிப்படுத்தியுள்ளதுடன் தொழிலாளர்கள் மீளாக் கடனுக்குள் தத்தளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கான பின்புலத்தையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

தொழிலாளரின் வரவையும் செலவையும் கள ஆய்வுத் தகவல்களைக் கொண்டு ஆராய்ந்துள்ள நடேசய்யர், 1892-ம்

ஆண்டுக்கு முன்னைய பொருளாதார நிலையையும் அதற்குப் பின்னரான நிலையையும் ஒப்பிட்டுக் காட்டி, தொழிலாளரின் பொருளாதார நிலைமை வரவர பின்தங்கிய நிலைக்குச் செல்வதை விபரித்துள்ளார்.

1892-ம் வருடத்திற்கு முன்பு வந்த தொழிலாளரிற் பலர் தனியாகக் குடும்பமின்றி வந்தமை, அக்காலத்தில் வாழ்க்கைச் செலவு குறைவாக இருந்தமை, தொழிலாளர் எண்ணிக்கை குறைவாக இருந்தமை, சம்பள விகிதம் சாதாரணமானதாக இருந்தமை, நிலத்தின் விலை குறைவாக இருந்தமை முதலான காரணங்களால் சிக்கனமாக இருந்தவர்கள் சிலர் நிலவுரிமையாளர்களாக மாறினர் என்பது நடேசய்யரின் கண்டுபிடிப்பாகும். அதேவேளை, 1902-ம் ஆண்டு முதல் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருவதற்கான செலவு அதிகரித்தமை, பயணச் செலவைத் தொழிலாளரே ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருந்தமை, உணவுப் பொருட்களினதும் ஆடைகளினதும் விலை அதிகரித்தமை, தொழிலாளரின் சம்பளம் உயர்த்தப்படாமை முதலானவை தொழிலாளரின் பொருளாதார நிலைமை மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுவதற்கும் அவர்களின் கடன்தொகை பெருகுவதற்கும் காரணமாக விளங்கியுள்ளவற்றை எடுத்துக்காட்டியுள்ளார். இந்த ஒப்பீடு தொழிலாளரின் வேதனம் நிச்சயமாக உயர்த்தப்படவேண்டும் என்பதை நியாயப்படுத்துவதாக அமைந்துள்ளது.

தொழிலாளரின் உண்மையான வாழ்க்கை நிலைமைக்கு மாறாகவும் உண்மை நிலைமையைக் கவனத்தில் கொள்ளாமலும் தொழிலாளர் வேதனம் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளை நடேசய்யர் கேள்விக்குட்படுத்தியுள்ளார். இந்திய அரசு ஏற்படுத்திய அழுத்தத்தினால் தோட்டத் தொழிலாளரின் வேதனம், வீடு, சுகாதாரம் முதலியன தொடர்பில் திருப்திகரமான ஏற்பாடுகளை வழங்குவதற்கு உடன்பட்ட இலங்கை அரசு, பேர்ட்மென் என்பவரைத் தோட்டத் தொழிலாளரின் வரவு செலவுகளை கணிப்பிட்டு, சம்பள நிர்ணயம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்க நியமித்தது. அவரின் அறிக்கை 1923-ம் ஆண்டு வெளிவந்தது. அவருடைய அறிக்கை பல வகையிலும் பிற்போக்கானது எனக்கூறும் நடேசய்யர், 'ஒரு கூலியின் சராசரி செலவைக் கண்டுணர வேண்டுவோர் எவ்வித விஷயங்களை ஆராய வேண்டுமோ அவற்றைச் சிறிதும் கவனியாது ஒரு தவறான வழியையனுசரித்துக் கூலியின் சராசரி செலவை நிச்சயித்துவிட்டார்' எனக் கூறி அவ்வறிக்கையை முழுமையாக நிராகரித்துள்ளார். உண்மை நிலைமைக்கு மாறாக தோட்டத் தொழிலாளி ஒருவர் வருடமொன்றுக்கு 10 - 12 ரூபாய்களைச் சேமித்துவிடலாம் என பேர்ட்மென் குறிப்பிட்டுள்ள முடிவின் அபத்தத்தைத் தேசபக்தனில் எழுதிய ஏனைய குறிப்புகளிலும் நடேசய்யர் அம்பலப்படுத்தியுள்ளார்.

பேர்ட்மெனுக்குப் பின்னர் மார்க்கஸ் பெர்னாண்டோ தன்னுடைய உரையொன்றில் தோட்டத் தொழிலாளரின் வரவு-செலவுகளைக் குறிப்பிட்டு, தோட்டத் தொழிலாளி ஒருவர் வருடமொன்றுக்கு 24 ரூபாய்களைச் சேமித்துவிடலாம் என்று கணித்துள்ளார். அவரின் இக்கண்டுபிடிப்பை நடேசய்யர், 'இவர் அறிவரோ' என்ற தேசபக்தன் ஆசிரியத் தலையங்கத்தில் விரிவாக விவாதித்துள்ளார். அக்குறிப்பில், சேர். மார்க்கஸ் பெர்னாண்டோ தொடுத்த பிரசங்கத்தால் தோட்டத் தொழிலாளரின் சிக்கன ஜீவியத்தில், அவருக்குப் போதிய ஆராய்ச்சி இருக்குமோவென ஐயுறுகிறோம். அவர் பேச்சளவைக் கொண்டு, அவர் ஆராய்ச்சி மிகுந்தவரல்லர் என்பது புலனாகிறது. ஆராய்ச்சியின்றேல் அனுபோகமிருக்க வேண்டும். அனுபோகமிருப்பதாயும் அறிவதற்கில்லை. அன்னவருக்கு ஆராய்ச்சி குறுகியும் உத்தேசம் பெருகியுமிருக்கிறது. அவரது கூற்றும் உத்தேசத்தையே வெளியிடுகிறது' என மார்க்கஸ் பெர்னாண்டோவின் உரை, ஆய்வியல் அடிப்படைகளுக்கு மாறாக எடுகோள்களை முன்நிறுத்தி நிகழ்த்தப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டி, அவ்வுரையின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளார்.

பேர்ட்மென்னுடைய அறிக்கைக்குப் பின்னர் வெயிட் என்பவர் தலைமையில் நிர்ணயிக்கப்பட்ட குழுவினர் தோட்டத் தொழிலாளரின் சம்பளம் தொடர்பிலான அறிக்கையை 1925-ம் ஆண்டு வெளியிட்டனர். அக்குழுவில் இடம்பெற்றிருந்த டர்னர் என்பவரே அறிக்கைக்கான அடிப்படை செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். அதனால் அதனை டர்னர் அறிக்கை என்றே நடேசய்யர் அடையாளப்படுத்துகிறார். அந்த அறிக்கையின் போதாமையையும் நடேசய்யர் இத்துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளதுடன், அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி சம்பளம் தீர்மானிக்கப்பட்டால், 'கூலியாளரின் கடனும் கஷ்டமும் நீங்காமல், சாப்பாட்டுக்குக்கூட இல்லாமல் தவிப்பார்களென்பதில் ஐயமில்லை' எனக் கணித்துள்ளார்.

தோட்டத் தொழிலாளரின் யதார்த்த நிலைமையைக் கண்டறியும் பொருட்டு அமைக்கப்படும் குழுக்களில் இந்தியர் சார்பாக இடம்பெறுபவர்களும் இந்திய உத்தியோகஸ்தர்களும் தொழிலாளர் நலன்சாராது, தோட்டவுடைமையாளர் நலன் சார்ந்து இயங்குவதை நடேசய்யர் வெளிப்படையாகக் கண்டித்துள்ளார். இத்துண்டுப்பிரசுரத்தில் 1919-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மசோதா தொடர்பாகச் சாட்சியம் அளிக்கையில் பாண்டியன் என்பவர், 'இலங்கைத் தோட்டம் ஓர் இந்தியத் தொழிலாளிக்குச் சொர்க்கலோகமாகும்' எனக் குறிப்பிட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டி, அவர் அவ்வாறு உண்மைக்கு மாறாக கருத்துத் தெரிவித்தமைக்கான பின்புலத்தினைத் தெளிவுபடுத்தியுள்ளார். அதேவேளை, அச்சாட்சியத்தின்போது பெரி. சுந்தரமும் கருமுத்து தியாகராசரும் தொழிலாளரின் உண்மை நிலையை விளக்கியுள்ளனர். அதனைப் பதிவுசெய்துள்ள நடேசய்யர், 'உண்மையை அறியக் கமிட்டியாருக்கு மனமில்லாததால் அவ்விருவருடைய சாட்சியங்களைப் பொருட்படுத்தவில்லை' எனக் குறிப்பிட்டு, அக்காலத்தில் அரசு நியமிக்கும் குழுக்களின் பக்கச்சார்பை, தொழிலாளர் விரோத நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

துண்டு முறையின் ஆபத்தையும் அம்முறை நீக்கப்பட வேண்டிய தேவையையும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்துள்ள நடேசய்யர், அம்முறையை நீக்கும் செயன்முறை இடம்பெற்றவற்றையும் அதனால் ஏற்பட்ட சாதக-பாதகங்களையும் விரிவாக ஆராய்ந்துள்ளார். எடுத்துக்காட்டாக, துண்டு முறையினால் தொழிலாளிகள் மீளாக் கடனில் மூழ்கித் தவிக்க

வேண்டிய சூழலையும் இரக்கமற்ற தோட்ட முதலாளிகள் செய்த சூழ்ச்சியையும் 'ஒரு தொழிலாளியாவது, கங்காணியாவது ஏதாவது காரணங்களினால் தோட்டத்தைவிட்டுப்போக நேரிட்டால், தோட்டக்காரர் அவருடைய பற்றுவரவு கணக்கு நகலொன்று அவருக்குக் கொடுத்தனுப்புவார். அக்கணக்கு நகலைப்பெற்ற அக்கூலி மற்றொரு முதலாளியையணுகி கணக்கு நகலை (துண்டு என்பது அதன் பெயர்) காட்டுவார். அப்புதிய முதலாளியும் தனக்குப் பிரியமிருந்தால் கூலியைத் தன் தோட்டத்திலிருத்திக்கொண்டு, துண்டுப்பிரகாரம், அவருடைய பழைய முதலாளிக்குச் சேரவேண்டிய கடனைக் கொடுத்து விடுவார். ஆகவே, தொழிலாளியின் கடன் ஒரு முதலாளியிடமிருந்து மறுமுதலாளிக்கு மாற்றப்பட்டதேயன்றி, கடன் நீங்கினபாடில்லை. தவிரவும், பிணக்கங்கொண்டு தோட்டத்தைவிட்டகலும் தொழிலாளி, சில கருணையில்லாத முதலாளிகளால் அநியாயமாக ஏமாற்றப்பட்டும் போயினர். கணக்கு வழக்கொன்றும் சிறிதுமறியாத ஏழைக் கூலிக்குக் கொடுக்கப்படும் துண்டில் கூட்டிக் குறைத்து சில்லறைக் கடன் என எழுதவும் ஆரம்பித்தார்கள். தொழிலாளியின் மூடத்தனமும் படிப்பின்மையும் ஏழ்மையும் தோட்டக்காரர் மனம்போனபடியெல்லாம் அக்கிரமஞ் செய்வதற்குச் சாதகமாயிருந்தன' எனத் தெளிவுபடுத்தியுள்ளமையைக் குறிப்பிடலாம்.




துண்டுமுறை நீக்கப்படுவதற்கு முன்னர், தொழிலாளரின் கடனை இல்லாதொழிக்கும் முயற்சி 1919-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட மசோதாவில் முன்மொழியப்பட்டுள்ளது. அம்மசோதாவில் தொழிலாளர் கடனையொழிக்க முன்வைத்த ஏற்பாட்டையும் அதனைத் தோட்டவுடைமையாளர்களும் கங்காணிகளும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டமையையும் நடேசய்யர் இத்துண்டுப்பிரசுரத்தில் பதிவுசெய்துள்ளார். 'கங்காணிகள் தொழிலாளிகளுக்குக் கொடுத்திருந்த பணத்தைத் தோட்டக்காரர்கள் கங்காணிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்றும் அப்படியின்றேல், வேறு எவ்வித வரி விதித்தாவது கங்காணிகளுக்குப் பணம் கொடுக்கப்பட வேண்டும்' என்றும் அம்மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளதால் தோட்டவுடைமையாளரும் கங்காணிமாரும் ஒன்றுகூடி, தொழிலாளரின் சம்பளத்தில் பாதியைத் தம் கடனுக்காகப் பிடித்துக்கொண்டுள்ளனர். அக்கொடுமையைத் தொழிலாளியின் குரலாய் வெளிப்படுத்தியுள்ள நடேசய்யர், அதன் பின்பே இந்திய அரசு குடியேற்ற நாடுகளுக்குப் புலம்பெயரும் தொழிலாளர் தொடர்பில் புதிய ஏற்பாடுகளைக் கொண்டுவந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். குடியேற்ற நாடுகளில் இந்தியத் தொழிலாளர் தொடர்பில் நிலவும் குறைபாடுகள் நீக்கப்படாவிட்டால் தொழிலாளர்களை அந்நாடுகளுக்கு அனுப்புவதில்லை என்ற நடவடிக்கையை இந்திய அரசு முன்னெடுத்ததால், இலங்கை அரசு துண்டு முறையை முழுமையாக நீக்கியுள்ளதுடன் தோட்டங்களுக்கு வரும் தொழிலாளியின் பயணச் செலவு தொழிலாளர்க்கு உரியது என்பதையும் அகற்றியுள்ளது.

துண்டுமுறை நீக்கத்தினால் தொழிலாளரின் கடன் முழுமையாக அகற்றப்படவில்லை என்பதை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எடுத்துக்காட்டியுள்ள நடேசய்யர், இத்துண்டுப்பிரசுரத்தில் துண்டுமுறை நீக்கத்தினால் தொழிலாளர்களுக்குக் கடன் வழங்கிய கங்காணிமார்கள் அடைந்த துயரை விரிவாக விளக்கியுள்ளார். துண்டுமுறை நீக்கச் சட்டம் கொண்டுவரப்பட்டபோது கங்காணிகள் வழங்கிய கடனைத் திரும்பப் பெறுவதற்கான எவ்வித சட்ட ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படாததால் கங்காணிகள் வழங்கிய கடனை மீளப்பெறுவதில் தடையேற்பட்டுள்ளது. கங்காணிகள் வழங்கிய கடனைத் தோட்டவுடைமையாளர்களே திரும்ப வழங்க வேண்டும் என்பது நடேசய்யரின் நிலைப்பாடாக இருந்துள்ளது. கங்காணிகள் தோட்டக்காரரின் நன்மை கருதியே கடன் வழங்கியதால் அக்கடனைத் தோட்டக்காரரே மீளச் செலுத்த வேண்டும் என்பதை அவர் மீள மீள வெளிப்படுத்தியுள்ளார்.

கங்காணிகளுக்குத் 'துண்டு' என்பதே அவர்கள் வழங்கிய கடனை மீளப்பெறுவதற்கு அடிப்படையாக விளங்கி வந்துள்ளது. துண்டுமுறை நீக்கப்பட்டதும் அதற்கான வழி இல்லாமல் போய்விட்டது. இந்நிலையில் கங்காணிகள் தாம் வழங்கிய கடனைப் பெற பலவாறு முயற்சித்துள்ளனர். அவர்களுள்

சிலர் சட்டமுறையில் அணுகி வழக்குத் தொடுத்துள்ளனர். ஆனால், சட்டத்தில் அதற்கு இடமில்லாததால் அவர்களால் வெற்றிபெற முடியவில்லை. இந்நிலையால் தோட்டவுடைமை யாளருடன் சமாதானமான பேச்சுவார்த்தையின் மூலமே கங் காணிமார்கள் தாம் வழங்கிய கடனைப் பெற்றுக்கொள்ள வழி யிருந்துள்ளது.

தோட்டவுடைமையாளருடனான பேச்சுவார்த்தையின்போது அவர்கள் ஐந்து வருடங்களுக்குள் கங்காணிகளின் கடனைத் திருப்பித் தருவதாக வாக்களித்துள்ளனர். இருப்பினும் அதனை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபடாமல் சூழ்ச்சிகர மான தந்திரங்கள் மூலம் கங்காணிகளுக்குக் கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுக்காமலிருந்துள்ளனர். அவற்றை எடுத்துக்காட்டியுள்ள நடேசய்யர், ஐந்து ஆண்டுக ளுக்குள் கங்காணிகளின் கடனைத் திரும்பத் தருகிறோம் என்பதே தோட்டவுடைமையாளரின் சுயநலன் கருதிய முடிவு என்பதை, 'இலங்கை கவர்ன்மெண்டும் இந்தியா கவர்ன்மெண் டும் 1923-ம் வருஷத்தில் சட்டங்களை இயற்றியதும், ஒரு வேளை தொழிலாளர் தோட்டங்களை விட்டுப் போய்விடு வார்களோ என்ற சந்தேகம் தோட்டக்காரருக்கு உண்டா யிற்று. தொழிலாளிகள் போய்விடின் தங்களுடைய பொக்கி ஷங்கள் நிரப்பப்படாமற் போய்விடுமேயென்று பயந்த தோட் டக்காரர் இவ்வாசைமொழியையளித்து, தொழிலாளரைத் தோட்டங்களில் இருத்திக்கொள்ளும்படி கங்காணிகளைத் தூண்டினார்கள்' என விளக்கிக்காட்டியுள்ளார்.

கங்காணிகள் பற்றிய நடேசய்யரின் பார்வையானது அவர் களை முற்றிலும் எதிர்நிலையில் நிறுத்துவதாக அமைய வில்லை. கங்காணிகளின் சுரண்டல்களையும் அராஜகங்க ளையும் சுட்டிக்காட்டியுள்ள அதேவேளை, அவர்களால் விளைந்த நன்மைகளையும் எடுத்துக்காட்டியுள்ளார். கங்கா ணிகளைத் தொழிலாளர் குழுவிலிருந்து வேறுபடுத்தாமல் அவர்களையும் தோட்டத் தொழிலாளருடன் இணைத்து ஒரு குழுவாகக் காணுந்தன்மை அவரிடம் காணப்பட்டுள்ளது. அதனால் கங்காணிமுறையை - கங்காணிகளை முற்றிலும் நிராகரிக்கும் போக்கை மறுக்கும் வகையில், 'கங்காணி' என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் நம்மில் அநேகருக்கு ஒருவித அதிருப்தி ஏற்படுவது இயல்பு. அவ்வித அதிருப் தியை நீக்கும் பொருட்டு கங்காணிகளைக் கொண்டு தொழி லாளரை நடத்தும் முறையைப் பற்றி பொது ஜனங்களுக்கு நன்கு விளக்கிக்காட்ட முற்படுகிறோம்' என்ற பீடிகையுடன் கங்காணிமுறையின் அமைப்பையும் இயக்கத்தையும் இத் துண்டுப்பிரசுரத்தில் சுருக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

இலங்கை இந்தியத் தொழிலாளர் நிலைமை என்ற இத்துண் டுப்பிரசுரம், தோட்டத் தொழிலாளரின் பின்தங்கிய வாழ்க்கை நிலைமையையும் அதற்கு அவர்களுடைய சம்பளப் பற்றாக் குறை பிரதான காரணமாக விளங்குவதையும் சான்றுகளுடன் எடுத்துரைத்து, தோட்டத் தொழிலாளருடைய சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்பதை வலுவாக முன்னிறுத்தியுள் ளது. தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை வரலாற்றுப் பின் புலத்தில் நோக்கும்போது, தொடக்ககாலத்தில் தோட்டவுடை மையாளர் தீர்மானிக்கும் அளவே சம்பளமாக வழங்கப்பட்டு வந்துள்ளது. தோட்டவுடைமையாளருக்கும் தொழிலாளருக் கும் இடையிலான ஒப்பந்தங்களின் அடிப்படையில் தொழிலா ளரின் சம்பளம் தீர்மானிக்கப்பட வேண்டும் என்ற சட்டம் பிந் திய காலத்தில் (1865 மற்றும் 1889) கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் இருதரப்பு பேச்சுவார்த்தையினூடாக சம்பளம் நிர் ணயிக்கப்படாது, தோட்டவுடைமையாளரே அதனைத் தீர்மா னித்து வந்துள்ளார். நீண்ட காலமாகச் சம்பளத்தின் அளவுக ளில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முறையான கால ஒழுங்கில் சம்பளம் வழங்கப்படாது, தோட்டவுடைமையாளர் தீர்மானிக் கும் காலத்திலேயே வழங்கப்பட்டு வந்துள்ளது.

இந்திய அரசின் தலையீடு மற்றும் அழுத்தத்தின் காரணமா கவே தோட்டத் தொழிலாளர் சம்பளம் தொடர்பில் முன்னேற் றகரமான முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. அதன்போது, தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை நிர்ணயிக்க உருவாக் கப்பட்ட குழுக்களின் அறிக்கைகளின் போதாமைகளையும் அவை தோட்டவுடைமையாளருக்குச் சேவகம் செய்வதாக இருப்பதையும் எடுத்துக்காட்டி, தோட்டத் தொழிலாளரின் உண்மையான வாழ்க்கை நிலையை வெளிச்சமிட்டுக் காட் டும் சமூகப் பணியை நடேசய்யர் மேற்கொண்டுள்ளார். சட்ட சபையிலும் பொதுவிலும் அது தொடர்பில் அவர் வெளிப்ப டுத்திய கருத்துகள், தோட்டத் தொழிலாளர் சார்பிலான இந் தியாவின் அழுத்தங்களை மிகுவித்திருக்கும் என்பதில் ஐய மில்லை.

இந்தியாவின் அழுத்தத்தின் காரணமாகவே 1927-ம் ஆண்டு தோட்டத் தொழிலாளருக்குக் குறைந்தபட்ச சம்பளத்தை நிர் ணயிக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது. அச்சட்டத்திலேயே தொழிலாளருக்கு மாதாமாதம் சம்பளம் வழங்கப்படவேண் டும் என்ற விதி ஏற்படுத்தப்பட்டது. நீண்ட பயணத்தில், பெரும் போராட்டங்களுக்கு மத்தியில் தொழிலாளர் சம்பளம் தொடர்பில் இடம்பெற்ற முன்னேற்றகரமான மாற்றங்களாக இவை அமைகின்றன. அந்நெடும் பயணத்தில் நடேசய்யரே தொழிலாளர் சார்பில் வலுவான இடையீட்டினை நிகழ்த்தியுள் ளார். அவருக்கு முன்னர் சேர். பொன். அருணாசலம் தோட் டத் தொழிலாளருக்குக் குறைந்த பட்ச ஊதியமாவது வழங் கப்படவேண்டும் என்பதை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வலி யுறுத்தியுள்ளார். தோட்டத் தொழிலாளருக்குக் குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்த முன்னோடியாக அவரே விளங்குகிறார். சேர். பொன். அருணாசலத்திற்குப் பின்னர் அக்கோரிக்கையை விரிந்தள விலான கள ஆய்வுத் தகவல்களுடன் வரலாற்றுப் பின்புலத் தில் நியாயப்படுத்தியவராக நடேசய்யர் விளங்குகிறார். அவ ருக்கு இணையான வகையில், அவர் காலத்திலோ அவருக் குப் பின்போ வேறு எவரும் அத்தகைய இடையீட்டினை நிகழ்த்தவில்லை. அதற்கு இத்துண்டுப்பிரசுரமும் சான்றாக விளங்குகிறது.



jeyaseelan.mm@thaiveedu.com

# ஈழத்துத் தமிழ்க் கவிதைப் புலத்தில் பெண்நிலைவாதம்

சி. ரமேஷ்



‘பெண்களுக்கான கலை இலக்கியக் கோட்பாடுகள்’ எனும் சிந்தனாநெறிகளாக வளர்ச்சிகண்ட காலத்தில் ஆணாதிக்கச் சிந்தனைகளுக்கு எதிரான கலகக் குரலே ‘பெண் மொழி’ எனப்படும். சீனாவின் தென்கிழக்கு பகுதியில் உள்ள ஜியாங்காங் நகரில் பெண்கள் மட்டுமே பேசும் ஒரு மொழி இருந்ததாகவும் அது தற்சமயம் காணப்படவில்லை என பெண்ணாய்வாளர்கள் உரைப்பார்கள். 1970-களின் முற்பகுதியில், ராபின் லாகோஃப், அன்னே போடின், ரூத் பிரெண்ட் மற்றும் நான்சி கான்க்ளின் போன்ற ஆராய்ச்சியாளர்களின் படைப்புகளில், பெண்கள் மொழி குறித்து ஆராயப்பட்டதோடு பெண்மொழி குறித்தான சிந்தனைகள் விரிவடையத் தொடங்கின. பாலியல்ரீதியாகப் பெண்கள் தொடர்ந்தும் ஒடுக்கப்படும்போதும் ஆண்களால் பெண்கள் இரண்டாம் பாலினமாகப் பார்க்கப்படும்போது, ஆணுக்கானப் போகப் பொருளாகப் பெண்ணுடல் சித்தரிக்கப் படும்போது பெண்களுக்கான பிரச்சினைகளைப் பேசுவதற்கும் அவர்களின் வலியை பெண்ணுணர்வோடு எடுத்து கூறுவதற்கும் பெண் மொழி அவசியமாகின்றது. சமூக அடக்கு முறைக்குள் சிக்கி நின்ற உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் மரபுக்குள் கட்டுண்டு மறுக்கப்பட்ட உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் பெண் தன் உடலரசியலைப் பேசுவதற்கும் இக்குரல் அவசியமாகின்றது.

## ஈழத்துச் சிற்றிதழ்களில் கவிதைகள்:

காத்திரமான கவிதைகளைத் தந்த சிற்றிதழ்களில் ஒன்றான ‘அலை’, ஊர்வசி, மைத்திரேயி போன்ற பெண் கவிஞர்களை அறிமுகம் செய்தது. ஊர்வசியின் ‘வேலி’ கவிதை அடக்கப்பட்டு முடக்கப்பட்ட பெண்ணின் உணர்வுகளைப் பேசிநிற்க மைத்திரேயின் ‘முகம் மறுக்கப்பட்டவர்கள்’ கவிதை சமூகத்தில் முகம் இருந்தும் மறுக்கப்பட்டு மறைக்கப்பட்டவர்களின் வாழ்வைப் பேசிநிற்கிறது, இக்காலப்பகுதியில் வெளிவந்த ‘புதுசு’ சஞ்சிகையில் ஔவையுடன் அலையில் எழுதிய ஊர்வசி, மைத்திரேயி முதலானோரும் தொடர்ந்தும் எழுதினார்கள். ஊர்வசியின் ‘இடையில் ஒரு நாள்’, ‘அவர்களுடைய இரவு’ முதலான கவிதைகள் போரினால் அமைதி குலைந்த நாட்களையும் கனதியான இருளில் முடங்கிப் போன தமிழ் மக்களின் வாழ்வையும் இக்கவிதைகள் பேசிநிற்கின்றன. ஔவையின் ‘சொல்லாமல் போகும் புதல்வர்கள்’ கவிதை போராட்டத்தில் இணைந்த மகன் குறித்த தாயின் உணர்வாய் விரிகிறது. 1980-களின் பிற்பகுதியில் வெளிவந்த திசை சிவரமணி, மைதிலி அருளையா போன்றோரையும் அறிமுகம் செய்தது. 1990-களில் வெளிவந்த ‘கவிதை’ இதழ் சமூகப் பிரக்ஞைமிக்க கவிதைகளை ஈழத்திலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியது. பெண்ணின் மன ஏக்கங்களோடு பெண் வாழும் சூழலில் எதிர் கொண்ட வாழ்க்கைச் சிக்கல்களையும் இக்கவிதைகள் உணர்த்தி நிற்கின்றன. ஆதிலட்சுமி சிவகுமார், மீசாலையூர் கமலா, கு. மணிமேகலை, சந்திரா தனபாலசிங்கம், சி. இரத்தினேஸ்வரி, தே. குயீன் சயிலா ஆகிய கவிஞர்கள் பலரை இவ்விதழ் அறிமுகம் செய்தது. இக்காலப்பகுதியில் வெளிவந்த சஞ்சிகைகளில் பெண்ணுணர்வுகளையும் பெண் அனுபவங்களையும் நேர்த்தியாக வெளிப்படுத்திய சஞ்சிகை ‘பெண்’ ஆகும். இச்சஞ்சிகையில் வாசுகி குணரத்தினம், சே. விஜயலட்சுமி, ஜெயந்தி தனபாலசிங்கம், லோகநாயகி அப்புராமன், பிலிசியா மியூரின், வி.பி. வினித்தா, கே. சுதாயினி, தே. அருட்கவிதா, தில்லை, சுதாகினி, அருள் ஜோதி இராமையா, மல்லிகா செல்லத்துரை, அமுதா இராஜசிங்கம், சதாசிவம் உதயராணி, யாழினி பழனிவேல், அனா ப்ளாண்டியானா போன்ற பலர் எழுதினர். நவீன இலக்கியத்தில் இஸ்லாமியக் கவிஞர்களையும் கவிதைகளையும் வெளிக்கொணர்வதில் ‘யாத்ரா’ ஆற்றிய பங்கு அளப்பரியது. ஃபஹீமாஜஹான், சுல்பிகா, ஷர்மிளா போன்ற பெண் கவிஞர்களின் செயற்பாட்டுக் களமாக இக்கவிதைச் சஞ்சிகை விளங்கியது. போரின் வடுக்களை ஆழமாகப் பேசுங்கவிதைகளாகவும் பெண்ணுணர்வுகளை வெளிப்படுத்தும் கவிதைகளாகவும் இவை அமைந்தன.வெளிச்சம் சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகளில் பெரும்பாலானவை தேச விடுதலையை நோக்காகக் கொண்டு எழுதப்பட்டவை. ஆனையிறவுப் போரில் வீரமரணம் எய்திய வானதி, கஸ்தூரி மற்றும் சகுந்தலா அருணகிரிநாதன் முதலானவர்களால் எழுதப்பட்ட கவிதைகள் விடுதலைப் போரில் களமாடும் வீரமறவர்களின் போர் பரணியைப் பாடி நிற்கின்றன. தேச விடுதலையின் நெருப்பை மக்கள் மனங்களில் விதைக்கும் கவிதைகளாக சுதர்சினி பாலசிங்கத்தின் ‘நெருப்பின் மக்களே’, மன்னார் ரூபி மாக்கிரட்டின் ‘அப்புறமாய்’ வருகிறேன் முதலானவை காணப்பட மன்னார் சமரில் களமாடிய வீரமரணம் அடைந்த மேஜர் பாரதியால் எழுதப்பட்ட ‘கடலலையே நீ கூறு’ கவிதை கரிய இருளில் செல்லும் தானை வீரர்களை வழியனுப்பி காத்

திருக்கும் கடலலையிடம் விடுதலையை வென்றெடுப்போம் என்பதை உறுதியுடன் உரத்து கூறுகிறது. யுத்தத்தினால் சிதைவடைந்த மண்ணும் மண்மீட்பு போரில் ஆகுதியாகிப் போன மாவீரர்களும் சமரில் எதிர்கொண்ட தருணங்களும் இடம்பெயர்வால் அல்லலுற்ற மக்களின் அவல வாழ்வும் வெளிச்சம் கவிதைகளின் பேசுபொருளாயின. சுதாமதி, உதயலட்சுமி, அம்புலி, ஆதிலட்சுமி சிவகுமார், க. பிரமதீஸ்வரி, நாமகள், கரவை தர்ஷிகா, தூயவள், அலையிசை, மீசாலையூர் கமலா, முதலான பலர் வெளிச்சம் இதழில் எழுதினர்.

கலைமுகம் சஞ்சிகை 1990-களில் இருந்து வெளிவந்த போதிலும் 2000 ஆண்டுகளுக்குப் பின்னரே அச்சஞ்சிகையில் பெண்கள் அதிகளவில் உள்வாங்கப்பட்டனர். ஆரம்பகால சஞ்சிகைகளில் ரஜித்தா, கயல்விழி சந்தியோ, சங்கவி முதலானவர்கள் எழுதியிருந்தாலும் அக்கவிதைகளில் பெண்ணின் இருப்போ அகமனமோ வெளிப்படவில்லை. இரண்டாயிரத்துக்குப் பின் கலைமுகம் இதழில் பெண்களால் எழுதப்பட்டு வெளிவந்த கவிதைகளில் பெண்ணுணர்வு மேலோங்கிக் காணப்பட்டது. அக்கவிதைகள் பெண்ணின் சுயத்துவத்தை உணர்த்தி நிற்பதோடு பெண் அடையாளத்தையும் வெளிப்படுத்தி நின்றது. பாத்திமா சியானா, தாட்சாயினி, அனார், பஹிமா ஜஹான், பெண்ணியா, சித்தி றபீக்கா பாயிஸ், அஸ்மா பேகம், நுஹர் கமலா வாசுகி, ஔவை, செல்வமனோகரி, தர்மினி காயத்ரி இராசையா ஜலீலா முஸாம்மில், ராசு. பொ. பற்றிசியா என பலருடைய கவிதைகளைத் தாங்கி கலைமுகம் வெளிவந்தது. அதிகளவான முஸ்லிம் பெண்கள் எழுதிய இதழ் கலைமுகம் என்றால் அது மிகையில்லை. பெண்ணின் அந்தரங்க உணர்வுகள், பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், சங்கடங்கள் முதலானவற்றை இக்கவிதைகள் வெளிப்படுத்தி நின்றன.

ஈழத்தில் இருந்து வெளிவரும் ஜீவநதி சஞ்சிகையும் பெண்ணிலைவாதக் கவிதைகளைத் தாங்கி வெளிவருகிறது. பெண்களின் உரிமைகள் மற்றும் நலன்களை வெளிப்படுத்தும் கவிதைகள் இவ்விதழில் எழுதப்பட்டன. பெண்ணின் சமத்துவம், சுயத்துவம் முதலானவற்றை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்தன. ஆதிலட்சுமி சிவகுமார், கு. சுமதி, ஜோ. நவஜோதி, கெகிறாவ ஸுலைகா, வி. தயானி, மஞ்சுமோகன், ரஜிதா, அஷரபா நூர்டீன், கமலா வாசுகி, சி. சித்ரா, தாட்சாயணி, ப. சர்மியா, ராணி ஸ்ரீதரன் முதலான பலர் எழுதினார்கள். அத்தோடு ஜீவநதி 100 ஆவது இதழ் ஈழத்துப் பெண் எழுத்தாளர் சிறப்பிதழாக வெளிவந்தது. பெண்களின் வாழ்க்கை சுவடுகளுக்கூடாகத் தன்னை முன்னிறுத்தும் இக்கவிதைகள் பெண்களின் அனுபவங்கள், சிந்தனை ஓட்டங்களை நன்கு புலப்படுத்தி இருந்தன. சமூக ஒழுங்குக்குள் அதன் விழுமியங்களுக்குள் நின்று பெண்ணுரிமைகளைப் பேசும் இக்கவிதைகள் ஆண்வழிச் சமூகக் கட்டமைப்புக்குள் நின்று பெண்கள் தம்மை மீட்டெடுப்பவையாக அமைந்தன. உடற்கூற்றியல், பண்பாட்டியல், உளவியலுக்கூடாக பெண்மொழிதலை வெளிப்படுத்தும் இக்கவிதைகள் பெண் நிகழ்கால வாழ்வில் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், அகமனத்தில் எழும் எண்ணங்கள், மன அவஸ்தைகள் முதலானவற்றைப் பேசிநிற்கின்றன.

மட்டக்களப்பில் இருந்து வந்த மறுகா சஞ்சிகையில் வெளிவந்த கவிதைகள் தீவிரத்தன்மை கொண்டவை. கச்சிதமான மொழிகளுக்கூடாகக் கட்டுறும் இக்கவிதைகள் ஆணுக்கு



நிகராகச் சாதிக்க விளையும் பெண்ணின் உளக்கிடக்கைகளை வெளிப்படுத்தும் கவிதைகளாக அமைகின்றன. உடலளவில் பலவீனம் உடையவளாகவும் மென்னுணர்வுத் தளத்தில் இயங்குபவளாகவும் கற்பிக்கப்படும் பெண் பற்றிய கற்பிதங்களை உடைக்கும் கவிதைகளாகவும் இவை அமைகின்றன. சலனி, தமிழ்நதி, பஹீமா ஜஹான், த. உருத்திரா, அனார். பெண்ணியா, தர்மினி, ஆழியாள், தில்லை முதலானவர்களின் கவிதைகள் இத்தளத்திலேயே இயங்குகின்றன.

***‘மறைவிடங்களைக் கண்காணிக்கிறது வெளிச்சம்
வீட்டின் எதிரில்
விட்டு விட்டு எரியும் சிவப்புவெளிச்சத்தில்
சாகாசக் காரர்கள்
மண்புழுவை தேடி நுழைகிறார்கள்
அச்சமூட்டும் வெளிச்சத்தில்
அரங்குகள் ஒளிர்கின்றன
கமரா அர்த்தமுள்ளவையாக மாறுகின்றது…’***

- தில்லை

பெண் காலாதிகாலமாக எவ்வாறு தகவமைக்கப்பட்டாள் என்பதை வெப்பிசாரத்துடன் குறியீட்டு உத்திக்கூடாக வெளிப்படுத்தி நிற்கிறது. பெண் அனுபவக் கடத்தலைக் கொண்டிருக்கும் படைப்பின் மொழி மறுகாவில் வெளிவந்த கவிதைகளில் உச்சமாகத் தெரிகின்றது எனலாம். மொழியாலும் சொல்முறையாலும் இக்கவிதைகள் வேறுபட்டுக் காணப்பட்டன. கவித்துவத்தின் முழுச் சாத்தியத்தில் இக்கவிதைகள் இயங்கின.

எஸ்.ஆர். தனபாலசிங்கத்தை ஆசிரியராகக் கொண்டு வெளி

வரும் 'நீங்களும் எழுதலாம்' என்னும் கவிதைகளுக்கான சஞ்சிகை 2007 முதல் இற்றை வரை வெளிவருகிறது. யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மலையகம் முதலான இடங்களிலுள்ள 250-க்கும் மேற்பட்ட கவிஞர்களுக்கு இச்சஞ்சிகை களம் அமைத்துக் கொடுத்தது எனலாம். குறிப்பாக இளம் படைப்பாளிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் இச்சஞ்சிகையில் எழுதிய பெண் கவிஞர்களில் பலர் புதியவர்கள். கி. கலைமகள், அஸ்ரபா நூர்தீன், றிம்ஸா முஹம்மத், ஆரையூர்த்தாமரை, அஷ்ரபா நூர்டீன் முதலான பழையவர்களுக்கும் 'நீங்களும் எழுதலாம்' களம் அமைத்துக் கொடுத்தது. இக்கவிதைகளில் பல, பெண்ணு



ணர்வுகளைத் தாங்கி வெளிவரவில்லை. கல்வி, தாய்மை, சமூகப்பிறழ்வு, சமவுடமைக் கருத்துக்கள் என பொதுவான விடயங்களையே இக்கவிதைகள் பேசிநின்றன. மனோரஞ்சனி பத்மநாதன் உட்பட பலரால் எழுதப்பட்ட கவிதைகள் அலங்காரத்தன்மை கொண்ட வார்த்தைப் பந்தலுக்குள் கட்டுறுகின்றன. நீண்ட காலம் தொடர்ச்சியாக எழுதிவரும் பெண் கவிஞர்களின் கவிதைகள் ஆழமான உணர்வுத் தளத்தில் கட்டுண்டவை. நிதர்சனமான பெண்ணின் இருப்பை இக்கவிதைகள் வெளிப்படுத்தின.

## ஈழத்தில் வாராந்தப் பத்திரிகைகளில் பெண் கவிஞர்கள்:

காலத்துக்குக் காலம் தோன்றிய ஈழத்துப் பத்திரிகைகள் பெண் கவிஞர்கள் பலரைத் தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகம் செய்தன. தினகரன் பத்திரிகையில் 1980-களின் நடுப்பகுதியில் எஸ். அருளானந்தத்தினால் தயாரித்து அளிக்கப்பட்ட 'இதய கோலங்கள்' ஈழத்தில் நவீன கவிதையின் இலக்கிய முன்னோடிகள் சிலரை அறிமுகம் செய்தது. பாத்திமா நளீரா, ந. பிரமிளா, மாவனல்லை பேகம்காலிதீன், ஸுபியா நஜீமுதீன், நிஷா முகமட், திருமலைச்செல்வி முதலானோர் இதய கோலங்கள் மூலம் அறிமுகமானவர்கள். இப்பகுதியில் வெளிவந்த கவிதைகள் பெண்ணுக்கு மரபு வழியாக வகுக்கப்பட்ட கடமைகள், கட்டுப்பாடுகளைக் கூறிநின்றனவே யன்றி அடிமைத் தளைகளைக் களைந்தெறிந்து ஆணாதிக்க மனோநிலைகளை உடைத்துக் கொண்டு வெளியேறும் பெண்ணின் இருப்பை இக்கவிதைகளில் காணமுடியாது. இதனைப் போன்று இக்காலப்பகுதியில் தினகரனில் சித்திக் காரியப்பரால் தயாரித்து அளிக்கப்பட்ட 'கவிதைச் சோலை' என்னும் பகுதியும் ஏராளமான பெண்பாற் புதுக் கவிஞர்கள் பலரை அறிமுகம் செய்தது. மசூறா மஜீட், நிலாமதி கருணாரத்தினம், ஆயிஷா மஸீஹ், ஜெமீலாஹனூன், மீராசாஹிப், மிஸ்ரியா ஏ. மஜீட், ஷர்மிலா, பரந்தன் கலைப் புஸ்பா முதலான பலர் கவிதைச்சோலை வாயிலாக கவிஞர்களாக அறிமுகமாயினர். இவர்களால் எழுதப்பட்ட கவிதைகள் எதுகை, மோனைக்குள் கட்டுண்ட சராசரிக் கவிதைகளாக அமைந்தனவேயன்றி அவற்றில் பெரும்பாலானவை இயற்கையைப் பாடுவனவாகவும் அகம்சார் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாகவும் அமைந்தன. இக்கவிதைகள் பெண்நிலை சார்ந்த அம்சங்களை வெளிப்படுத்துவனவாக அமையவில்லை. நாற்குணமும் கொண்டு கணவனுடன் ஒருமித்து வாழ்ந்து இல்லறமதில் நல்லறம் காணும் பெண்களே சிறந்த இல்லத்தரசிகள் என்பதை இக்கவிதைகள் விளக்கி நின்றன. மரபும் மரபு வழிவந்த பண்பாடும் அப்பண்பாட்டின் வழிவந்த பழக்க வழக்கங்களும் இக்கவிதைகளின் அடிநாதமாக ஒலித்தன.

1990-களில் தினகரனில் கவிதைக்குரிய பகுதியாக 'கவிதா சாகரம்' என்னும் பகுதி இடம்பெற்றது. இதனை வி. ஜெகதீசன் தொகுத்து அளித்தார். பஹீமா ஜஹான், யாழ். ஜெரீனா தையூப், சில்மியாஹாதி, கரீமா றாகில் முதலான தற்கால முன்னணிக் கவிஞர்கள் பலருக்கும் இக் கவிதைப் பகுதி களம் அமைத்துக் கொடுத்தது. இப்பகுதியில் வெளிவந்தவற்றில் பெரும்பாலானவை பெண்ணிலைவாத எழுத்துக்களை உள்வாங்கி எழுதப்பட்டனவாக இக்கவிதைகள் அமைந்தன. பெண்ணின் பிறப்பு, வளர்ப்பு, நடத்தை வெளிப்பாடு என்பன எவ்வாறு அமையவேண்டும் என்பதையும் சுட்டி நிற்கும் இக்கவிதைகள் மரபுத் தளைகளை உடைத்தெறிந்து பெண் சுயாதீனமாக வாழ்வதற்கான வழிகளையும் கூறி நின்றன. இக்காலப் பகுதியில் தினகரன் வார இதழில் எம்.எம்.எம். ஷம்ஸால் தொகுத்து அளிக்கப்பட்ட 'புதுப்புனல்' என்னும் பகுதியும் நவீன கவிதைகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. மருதூர்அனார், சூரியா, கரீமா றாகில், தாரணி மகாதேவன், அ. யாழ்நங்கை (மட்டக்களப்பு), உதயவாணி, மருதமுனை மஜீதா, முர்பிகா ஜிப்ரி, பாத்திமா நஸ்வா, ஸீனதுன்னிஸா, ஸாபிகா ஸாலிம், பாரிஹா சுபைட் எனப் பலரையும் இப்பகுதி ஈழத்து இலக்கிய உலகுக்கு தந்தது. தினகரனில் 'புதுப்புனல்' போன்று பொன் சுரேந்திரனால் தொகுத்து அளிக்கப்பட்ட 'கவிதை அரங்கேறும் நேரம்' என்னும் பிறிதொரு கவிதைப் பகுதியும் ஈழத்துக் கவிதை இலக்கியத்துக்கு வளம் சேர்த்தது. இப்பகுதியில் கருத்துச் செறிவற்ற ஆலாபனைகளுடன் கூடிய கவிதைகளே அதிகம் இடம்பெற்றன. முஹம்மது கனீபா றிஸ்மியா, எம்.ஐ. சித்தி றபீக்கா, ஸப்பிரியா றிஸ்னி, சிபானியா முகைதீன், எம்.என். அஸ்மா பேகம் முதலான புதியவர்களை அறிமுகம் செய்தது. 2000 காலப்பகுதியில் தினகரனுக்குரிய கவிதைப் பகுதியை ரஷித். எம். றியாழ் 'கவிதைப் பூங்கா' என்னும் பெயரில் தொகுத்து அளித்தார். தாமரைச்செல்வி, சபீறாசரீப், அகல்யா தர்மராஜா, மௌபியா பாறுக், பௌசுல் கரீமா, பாரீஹா, எப்.ஏச்.ஏ. ஹிப்லி, கோவிந்தசாமி சுபாஜினி, எம்.ஏ. சுமைரா, பாயிகா போன்ற பலர் இக்கவிதைப் பகுதியினூடாக அறிமுகமாயினர். இப்பகுதிகளில் வெளிவந்த பெரும்பாலான கவிதைகள் வெற்று வார்த்தைகளையும், அலங்காரத் தன்மைகளையும் வரட்டுச் சித்தாந்தப் போக்குகளையும் கொண்டிருந்தன. மரபுமின்றி நவீன கவிதையுமின்றி சராசரிக் கவிதைகளை இப்பகுதி கொண்டிருந்தாலும் இப்பகுதியில் மருதூர் அனாரின் 'நொந்த நினைவுகள்',

பஹீமா ஜஹானின் 'வெய்யில் விரட்ட மழை ஓட', 'குகைகள்', 'மாடு' முதலான காத்திரமான நல்ல கவிதைதைகளும் வெளி வந்தன.

வீரகேசரியில் இடம்பெற்ற 'கவிதைத்துளிகள்' பகுதில் வி.சி. வினோதினி, வீ. ஜெயந்தி, அ. மகாதேவி, எஸ். சசிகலா, ஜே. சுபாஸினி, அ. சங்கீதா, எஸ். கலையரசி, அ. அருணாதர் சினி, நஸீகா, அ. யாழினி முதலானோரால் எழுதப்பட்ட பெரும்பாலான கவிதைகள் சட்டகத்தன்மைக்குள் உணர் வற்ற வார்த்தை ஜாலங்களுக்கூடாகவே கட்டுறுகின்றன. இத னைப்போன்று தினமுரசில் இடம் பெற்ற 'தேன்கிண்ணம்' பகு தியும் பெண் கவிஞர்கள் பலரைத் தனக்குள் உள்வாங்கிக் கொண்டது. இவ்வகையில் பொ. விஜயா, செல்வி. யசோ, த. தேவிகா, ந. கௌரி, ரோஜா, சுந்தரம் சுமதி, எச். பாத்திமா, த. மோனிஷா, என். சர்மிளா, விஜயதர்சினி, இரா. சசிகலா முத லான பலர் இதனுடாக இலக்கியத்துறைக்கு அறிமுகமாயி னர். இவ்விதழ் கவிஞர்களை உருவாக்கும் நோக்குடன் தமி ழக இலக்கியப் படைப்பாளி பிரம்மராஜனால் எழுதப்பட்ட 'கவிதை எழுதலும் வாசித்தலும்' என்ற தொடரை மீளப் பிரசு ரித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்டத்திலுள்ள கவிஞர்கள் பலருக்கு களம் அமைத் துக் கொடுத்த பத்திரிகையாக 'வலம்புரி' காணப்படுகிறது. இப்பத்திரிகையின் வாரந்தப் பதிப்பில் இடம்பெற்ற 'கவி தைக்கலசம்' ஈழத்து இலக்கிய உலகுக்கு பெரும்பாலான கவிஞர்களை அறிமுகப்படுத்தியது. இவ்விலக்கியப்பகுதியி னூடாக அறிமுகமான பெண் கவிஞர்களாக யோ.நித்தியா, தமிழிசை, இ. கோகிலா, ஜோ. ஜெஸ்ரினா, வாசுகி, எம். சந்திர கலா, எம். இந்திரகலா, நித்தியவாணி, யோ. பிரஷாந்தி, பா. -வனஜா, எஸ். வனிதா, பா. லோகநாயகி முதலான பலரைக் கூறலாம். இவர்களில் பெரும்பாலோர் வடபகுதியைச் சேர்ந்த வர்கள். கவிதை என்பது படிப்போன் மனத்தினில் அதிர்வை ஏற்படுத்தி சிந்தனையைத் தூண்ட வேண்டும். சமூக யதார்த் தத்தைப் பிரதிபலிக்கவேண்டும். ஆனால் உணர்வெழுப் பலை விளிப்பைத் தராத ரசனையற்ற கவிதைகளே இப்பகுதி யிலும் அதிகம் வெளிவந்தன.

தினக்குரல் ஞாயிறு வாரப் பத்திரிகையில் இடம்பெற்ற 'கவிச் சோலை', 'கவிக்குரல்' முதலான கவிதைப் பகுதிகள் புதிய பெண் கவிஞர்கள் பலரை ஈழத்து இலக்கிய உலகுக்கு தந்த தைப்போல இப்பத்திரிகையில் இடம்பெற்ற 'பனுவல்' முத லான இலக்கியப் பகுதிகளும் பெண்களால் எழுதப்பட்ட கவி தைகள் பலவற்றுக்கு களம் அமைத்துக் கொடுத்தன. பனு வல் பகுதியில் ம. அஞ்சனா, நாழிகா, முதலானவர்கள் உரு வாகியது போல் கவிக்குரல், கவிச்சோலை பகுதிக்கூடாக அஞ்சனா மக்கீன் சௌமியா இராஜகோபால், நிலாமதி தங்-கராசா, கரீமுர் றாஹில், தாரணி, பூங்கொடி, சத்யா, தாஹா பாத்திமா றின்னோஷ முதலான பெண் கவிஞர்கள் தமிழ் இலக்கிய உலகுக்கு அறிமுகமாயினர். தினக்குரல் 'கவிச்சோ லை'ப் பகுதியில் வெளிவந்த பெரும்பாலான கவிதைகளில் கவிதையின் ஆன்மாவையோ ஜீவத்துடிப்பையோ காணமுடி யவில்லை.

சுடர்ஒளியில் இடம் பெற்ற 'புதுப்புனல்' என்னும் பகுதி ஈழத் தில் வளர்ந்து வரும் இளம் பெண் கவிஞர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தது. அவ்வகையில் 2001 காலப்பகுதி யில் அறிமுகமான இளம் படைப்பாளிகளாக ந. சங்கீதா, தர்சி, ச. லாவன்யா, ஆரணி, பால. நாகம்மா, ம. விஜிதா, க. மதிவதனி, ஜெயா, சரவணேஸ்வரி, ம. பிரியங்கா, பவானி, அ. அங்கயற்கண்ணி, ஆன்கவிதா, சுகந்தினி, கவிசுகி, சு. பேரின் பநாயகி, இ. அனுசா, சிவாவிசாகை, தி. நிருபா (திருகோண மலை) பிரியா கணநாதன் முதலான பலரைக் கூறலாம். இவ் விதழில் பிரசுரமான கவிதைகளில் பெரும்பாலானவை அலங் காரத் தன்மை கொண்ட வார்த்தை ஜாலங்களாகவே உள் ளன.

ஈழத்தில் காத்திரமான கவிதைகளைப் பிரசுரித்த பத்திகை யாக நமது ஈழநாடு விளங்குகிறது. இப்பகுதியில் இடம்பெற்ற கவிதைகள் பல, ஈழத்தில் மிகச் சிறந்த படைப்பாளிகளால் எழுதப்பட்ட கவிதைகளாகும். இப்பத்திரிகையில் இடம்பெற்ற 'கவிதைச்சோலை' என்னும் பகுதியினூடாகத் தாட்சாயிணி, அம்புலி. கங்கா, கார்த்திகா கனகரத்தினம், சுகந்தினி, வைதேகி, நா. கீர்த்தனா, விஜயா பிரான்சிஸ், என். காயத்திரி, சைலயா, எஸ். நந்தினி, அங்கவை போன்ற பலர் அறிமுகமா யினர். நமது அன்றாட வாழ்வின் நிதர்சனமான உண்மை களை இக்கவிதைகள் வெளிப்படுத்தி நின்றன. புத்துணர்ச்சி கொண்ட புதிய வரலாற்றை எழுதும் கவிதையாகவும் இவை இருந்தன. போரின் உக்கிரத்தையும் உளநெருக்கடிக்குள் ளாகி அல்லலுற்ற மக்களின் வாழ்வையும் இக்கவிதைகள் வெளிப்படுத்தின. இதனைப் போன்று முரசொலியின் 'கவிய ரங்கம்', ஆதவனின் 'கவித்தடாகம்', சாளரத்தின் 'அரும்புகள்', பகுதிகளில் இடம் பெறும் பெரும்பாலான கவிதைகள் உயிர்த் துடிப்பற்று, உணர்வுத்தளமற்று, வார்த்தை ஜாலங்க ளுடன் உருப்பெற்றன. இதனால் இப்பகுதிகளில் வெளிவந்த அனைத்துக் கவிதைகளையும் ஒட்டு மொத்தமாக காத்திரத் தன்மையற்றவை எனக் கூறி நிராகரிக்கவும் முடியாது.

ஈழத்தில் அரசியல், இலக்கியப் பத்திரிகையாக வெளிவந்த 'சரிநிகர்' ஆளுமை மிக்க பெண்ணிலக்கியக் கர்த்தாக்களை தமிழிலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியது. அவ்வகை யில் அனார், ஃபஹீமா ஜஹான், பெண்ணியா, ரேவதி, கலா, நிலா, கற்பகம் யசோதரா, ஆகர்சியா, ஔவை, செல்வம-னோகரி போன்ற கவிஞர்கள் குறிப்பிட்டுக் கூறத்தக்கவர்கள். அகவயற்தன்மையின் உள்ளீடாக அமையும் இக்கவிதைகள் கச்சிதமான வடிவமைப்புக்குள் சொல் நேர்த்தி கொண்டவை யாகவும், காத்திரத்தன்மைமிக்கவையாகவும் விளங்கின. சொற்தேர்வு, ஒற்றையுடல், நெகிழ்வற்ற இறுக்கம், உணர்வுச் சமநிலை போன்ற அளவுகோல்களைக் கொண்டு சரிநிகரில் வெளிவந்த நவீன தமிழ்க் கவிதையையும் அளவிட முடியாது.

இக்காலப்பகுதியில் வெளிவந்த ஈழநாதத்தின் வாரப் பதிப் பான வெள்ளிநாதத்தில் அம்புலி, ஆதிலட்சுமி சிவகுமார், வேழினி, ஆ.சுதுர்மதி, யாழினி போன்ற கவிஞர்களால் எழுதப் பட்ட கவிதைகள் சொல் நேர்த்திமிக்கவையாகவும் பொருளா ழமிக்கவையாகவும் விளங்கின. அத்துடன் கலையரசி, வ. மேனகா, ப. தர்மினி, பி. நாவலகி, பு. ரதீசியா, வி. ரஜனி, ஆறு முகம் ஆனந்தி, எஸ். நிருஷனா, சி. மதுரா, சு. நிலா, சுபா ஜெகநாதன், பா. வனஜா, மு. ராணி, தமிழினி, அ. நளாயினி, தீபியா பரமானந்தம் போன்ற புதுமுகப் பெண் கவிஞர்களை யும் வெள்ளிநாதம் அறிமுகப்படுத்தியது. தன்னுணர்வை அடிப்படையாகக் கொண்டு புறவுலகை மதிப்பிடும் மனவெ ழுச்சியும் உணர்வுச் செறிவும் கொண்ட இக்கவிதைகள் மானு டத்தின் பொது அனுபவ வெளிக்குள் கட்டுண்டவை. மரபுசார் தளைகளை நீக்கி பெண்களின் சுயசார் இருப்பை வலியுறுத்

தும் கவிதைகளாக இக்கவிதைகள் காணப்பட்டன. பால் அச மத்துவநிலையில் இருந்து விடுபடுதலையும் பெண்விளிப்பு ணர்வின் ஊடாக ஆணாதிக்கத்தை ஒழித்து சமூகச் சமத்து வத்தை ஏற்படுத்தலையும் வலியுறுத்தும் கவிதைகளாகவே இவை அமைந்தன.

## புலம் பெயர்ந்த ஈழத்துத் தமிழ்ப் பெண் கவிஞர்கள்:

ஆறாம் திணையாக அறியப்படும் புலம்பெயர் நாடுகளிலி ருந்து வெளிவரும் பெரும்பாலான கவிதைகள் உருவம், உள் ளடக்கம், உணர்த்து முறைகளால் நவீன தமிழ்க் கவிதை யைப் பிறிதொரு தளத்துக்கு இட்டுச் செல்கின்றன. வாழ்வுக் கும் இருப்பியலுக்குமிடையிலான புதிய அனுபங்களுக்கூ டாக மையங் கொள்ளும் இக்கவிதைகள் புதிய குறியீடுகளை யும், புதிய படிமங்களையும், புதிய பாடுபொருள்களையும் நவீன தமிழிலக்கியத்துக்கு அளித்தன. தேவைசார் தமிழ்க் கல்வியையும் அதனூடான பிறமொழிக் கல்வியையும் கொண்ட அமைந்த புலம் பெயர்சார் சமூகக் கட்டமைப்பு, மொழியைச் சிக்கனமாகவும், அதேயளவுக்கு நுட்பமாகவும் பயன்படுத்தி, செறிவடர்த்தி கொண்ட செழுமையான தமிழ்க் கவிதைகளை உருவாக்க வாய்ப்பளித்தது எனலாம். இக்கா லப்பகுதியில் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்த பெண் கவிஞர்க ளாக சுமதிரூபன் (கனடா), ரஞ்சினி (ஜேர்மனி), தானியா (கனடா), தில்லை (சுவிஸ்), துர்க்கா (கனடா), பிரதீபா தில்லைநாதன் (கனடா), ஆழியாள் (அவுஸ்ரேலியா), மைத்திரேயி (சுவிஸ்), சத்தியா (டென்மாக்), மைதிலி (கனடா), கல்யாணி, நிருபா, பிரியதர்சினி, சா. ஜெயந்தி, இ. வசந்தி, உமை யாள், சுகுணா, வினோதினி முதலான பலரைக் குறிப்பிட லாம். பெண்ணின் நுண்ணுணர்வுத் தளத்தில் கட்டுருவாக்கம் பெறும் அன்பு, கருணை, வேட்கை, வலி, ஆகிய இன்னோ ரன்ன அகநிகழ்வுகளை இக்கவிதைகள் வெளிப்படுத்தி நின் றன. புதிய சூழலில் தாம் விட்டு நீங்கிய தமது நாடு, சுற்றம், சூழல் பற்றி நினைவுகளைக் கிளர்த்தும் கவிதைகளும் பெண் களால் எழுதப்பட்டன. பிரதீபா தில்லைநாதனின் 'இரைமீட்பு' கவிதை சொந்த நாட்டு நினைவு, அது தோற்றுவிக்கும் ஏக் கம் முதலானவற்றை வெளிப்படுத்தி நிற்கிறது. போர்ச்சூழ லில் இலங்கைத் தமிழர்கள் அனுபவித்த வலி மற்றும் வாழ்க்கை நெருக்கடிகள் என்பவற்றிலிருந்து தாம் அகன்றி ருப்பது குறித்ததான ஒரு குற்ற உணர்வும் புலம்பெயர்க் கவி தைகளில் வெளிப்பட்டன. கற்பகம் யசோதரவின் 'நீத்தார் பாடல் பிறழ்வுக் குறிப்புகளிலிருந்து' என்னும் தொகுதி ஊழிக்காலத்தின் அடக்குமுறைக்குட்பட்ட வதைபட்ட மனிதர் களின் கொடுந்துயர்களையும் யுத்த நிலத்தில் பிறந்து வஞ் சிக்கப்பட்ட மனிதர்களின் வாழ்வைப் பாடி நின்றன. இத்தொ குதி பெண் சுய அடையாளப் புனைவு வழி புனிதங்கள் என கற்பிக்கப்பட்ட கற்பிதங்களைத் தகர்த்தெறிகின்றது. புலம் பெயர்ந்த இலங்கை பெண் கவிஞர்கள் வன்முறையாலும், தனிமை நெருக்கடியாலும் அல்லலுற்ற சமகால வாழ்வை 'ஒலிக்காத இளவேனில்' முதலான தொகுப்புக்களும் பதிவு செய்தன. புதிய கலாசார தேசங்களுக்குள் நுழையும்போது, காதல் வாழ்வின் மீதான அன்பும் நம்பிக்கையும் காயப்படுத் தப்படுவதை 'நிச்சயமற்ற வாழ்விற்குப் பழக்கப்பட்டவர்கள் / எதற்காகவும் காத்திருப்பதை விரும்புவதில்லை...' ரேவதியின் வரி வெளிப்படுத்தி நிற்கின்றது. புலம் பெயர்ந்த தேசத்தில் சட்ட ரீதியாகவும், கலாசார ரீதியாகவும், நிற ரீதியாகவும், இலங்கைத் தமிழர்கள் ஒதுக்கப்படுவதையும் புலம்பெயர் கவிதைகள் கூறி நிற்கின்றன. மனவுணர்வின் அதியுச்ச வீச்சை வெளிப்படுத்துகின்ற கவிதைகளும் புலம் பெயர்ந்த பெண்களால் எழுதப்பட்டன.

***'ஜன்னலில் நிறைந்திருக்கும் மரங்கள்***
***ஆன்மாவை திருப்ப ஒரு மழை முத்தம் கேட்கிறது***

***கணினியும் மின் குமிழும் வெறுமையை***
***நிரப்ப தனிமையின் சலிப்பை விரட்டி***
***கனவிலும் வராத உனை***
***எப்போதும் புதிய கவிதையாய்***
***எழுதிக்கொண்டிருக்கிறது காதல்'***

றஞ்சனியின் வரிகள் இதனை நினைவூட்டி நிற்கின் றன. போரும் வெறுமையும் தனிமையின் பிரிவையும் தானியா வின் 'சாகாசக்காரி பற்றியவை' தொகுப்பில் காணலாம். ஆழி யாளின் உரத்துப்பேச, துவிதம், கருநாவு, நெடுமரங்களாய் வாழ்தல் ஆகிய தொகுப்புக்கள் சமூக தரிசனங்களுக்கூடாக பெண்ணின் வாழ்வியல் அனுபவங்களைப் பேசின. சமூக மதிப்பில் பெண்ணின் இழிந்த நிலையையும் வாழ்வையும் பேசிய இத்தொகுப்புக்கள் பெண்ணுரிமைக்குரிய குரலாகவும் ஒலித்தன.

இலங்கையில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளையும் போரி னால் அன்றாடம் பாதிக்கப்படும் தமிழர்களின் வாழ்க்கை நிலைகளையும் அப்பாவி மனிதர்கள் கைது செய்யப்பட்டு வதைக்கப்பட்டு காணாமல் போவதையும் புலம்பெயர்கவிதை களும் வெளிப்படுத்தி நின்றன. அதிகாரத்தில் இருப்பவர்க ளால் வஞ்சிக்கப்பட்ட சமூகத்தின் பாடுபொருளாகவும் இக்க விதைகள் காணப்படுகின்றன. அழித்தொழிப்பிற்கெதிரான கலகக் குரலாகவும் அதிகாரத்திற்கெதிரான விமர்சனங்களா கவும் பொதுவெளியில் பெண் எதிர்கொள்ளும் பாலியல் தொல்லைகளுக்கு எதிரான கோசங்களாகவும் இக்கவிதை கள் அமைந்திருந்தன.

புலம்பெயர்ந்த தேசத்தில் பெண்கள் தமது பிரச்சினைகள் குறித்துச் சிந்திக்கவும் செயலாற்றவும் துணிந்ததை அங்கு அவர்களால் நடத்தப்பட்ட மாநாடுகளும் சஞ்சிகைகளும் உணர்த்தி நிற்கின்றன. கண், நமது குரல், சக்தி, ஊதா என சஞ்சிகைகள் பெண்களால் வெளியிடப்பட்டன. ஆனால் இச் சஞ்சிகைகள் தற்போது வெளிவருவதில்லை. ஆயினும் இவ் விதழ்களும் காத்திரமான கவிதைகள் பலவற்றைத் தாங்கி வெளிவந்தன. மரபுசார் வாழ்விலக்கண எல்லையை மீறும் இக்கவிதைகள் கடந்த நூற்றாண்டில் பெண் அனுபவித்த வன்முறைகளையும் வாழ்வின் அவலங்களையும் கூறுபவை யாக இக்கவிதைகள் அமைந்தன. சுயசார் அனுபவங்களை மட்டுமின்றி அதிகாரக் கட்டமைப்புகளுக்கு எதிரான கருத் தாக்கத்தையும் இக்கவிதைகள் வலியுறுத்தி நின்றன. புதிய சூழலில் புதிய அனுபவங்கள், புதிய வெளிப்பாடுளை இக்க விதைகள் பேசிநின்றன.



ramesh.s@thaiveedu.com



# அறுபதுகளின் பின்னரான மலையக நாடகத்துறை முன்னெடுப்புகள்

- அ. லெட்சுமணன்

மலையக கலை இலக்கியம் தொடர்பான சுயாதீன ஆய்வு களே அதன் காத்திர உள்ளடக்கத்ததை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஏனைய ஆய்வுகளைவிட அரங்கியல் தொடர்பான ஆய்வு முடிவுகள் தான் மலையகத்தைப் பாதித்த ஒரு விடயமாகிறது. இலங்கையினுடைய நாடக வரலாற்றைச் சிங்கள நாடக வரலாறு, தமிழ் நாடக வரலாறு என வகைப்படுத்தும் ஆய்வாளர்கள் மலையக நாடகத்துறைத் தொடர்பில் போதிய கவனத்தை எடுத்திராத துர்பாக்கிய நிலையே காணப்படுகிறது. காலமாற்றம் அவரவர் சிந்தனைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இலங்கையினுடைய நாடக வரலாற்றில், வளர்ச்சியில் எந்த வகையிலும் மலையக அரங்கியல் முயற்சிகளும் சளைத்தவைகள் அல்ல. ஏனைய சமூக நாடக முயற்சிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது அவற்றை எல்லாம் விஞ்சும் வகையில் மலையகத்தில் நாடகமுயற்சிகள் காணப்படுகின்றன. அறுபதுகளுக்கு முற்பட்ட நாடக வளர்ச்சியைத் தொட்டுக் காட்டி அறுபதுகளுக்குப் பின்னரான நாடக முயற்சிகளையும் நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறுபதுகளின் முற்பகுதிகளில் மண்வாசனையுடன் பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. 1964 சிறிமா சாஸ்த்திரி ஒப்பந்தம் மண்ணை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டிய கட்டாயத்திற்குட்பட்ட மலையகச் சமூகத்தைக் காட்சிப்படுத்துகிறது. இவ்வெறுப்புணர்வை வீதிப்பாடல்களும் நன்கு புலப்படுத்துகின்றன. நாடகத்துறைச் செயற்பாட்டாளர்கள் புலம் பெயர்கின்ற நிலையில் உறவுகள் நட்புகள் பிரிக்கப்படுகின்றன. கூட்டு முயற்சியில் செயற்படுத்தும் நாடக பங்களிப்பில் இச் செயற்பாடு பாரிய பாதிப்பை ஏற்படுத்தின. உரிமை அற்றவர்கள் என்ற நிலையில் மலையக மக்களின் மனவெழுச்சிகளை இப்படைப்புகளினூடாக அறிய முடிகின்றன. இவ்வாறு உருவான நாடகங்கள் தோட்டப்புறங்களில் அரங்கேறுகின்றன. திராவிட நாடக மரபிலும் நாடகங்கள் ஆற்றுகைக்குட்படுகின்றன. 1962-ல் கொட்டகலை மணிக்கவத்தை தோட்டத்தில் 'தாயகவிடுதலை' 1963 இதே தோட்டத்தில் 'பெண்முடி', பதுளையில் 1963-ல் தமிழோவியனின் 'தியாகி' போன்ற நாடகங்கள் அவ்வகையில் குறிப்பிடத்தக்கவைகளாகும். தலவாக்கலை, மல்லிகைப்பூ தோட்டத்தை சேர்ந்த குமாரசுவாமி வாத்தியாரும் பல நாடகங்களை மேடையேற்றியுள்ளார். மாத்தளை இராஜரட்ணத்தின் 'அன்பின் வெற்றி' கண்டி, ஹட்டன் முதுலான இடங்களில் மேடையேற்றப்பட்டதோடு நாவலியூர் சொக்கநாதனின் 'சிங்ககிரி செல்வி' என்ற நாடகமும் கண்டியில் மேடையேற்றப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் க.ப. சிவம் மற்றும் மாத்தளை கார்த்திகேசு ஆகியோரின் பங்களிப்புகள் விதந்து கூறப்படுகின்றன. நாவலியூர் செல்லத்துரையின் தொடர்போடு சிலோன் சின்னையா அவர்களது நாடகத்துறை ஈடுபாடு குறிப்பிடத்தக்கதாகும். கே.ஏ. இராமன் 'பொன்முடி' 'ஏழைக்கும் பசிக்கும்' போன்ற நாடகங்களை மேடையேற்றியுள்ளார். அறுபதுகளைத் தொடர்ந்து எழுபதுகளில் பல நாடகங்கள் மேடையேற்றப்பட்டுள்ளன. இக்காலத்தில் மாத்தளைப் பிரதேச நாடக ஈடுபாட்டாளர்களின் பங்குபற்றுதல் குறித்து மாத்தளை கார்த்திகேசு குறிப்பிடுவார். மாத்தளை கார்த்திகேசுவின் 'காலங்கள் அழிவதில்லை', 'களங்கம்', 'ஒரு சக்கரம் சுழல்கிறது' ஆகிய நாடகங்கள் குறிப்பிடத்தக்க வகையில் அவர் பெயர் சொல்லும் நாடகங்கள் ஆகும்.

மலையக மக்களின் அன்றாடப் பிரச்சினையை மேடைக்கு கொண்டு வந்ததில் திருச்செந்தூரனுடைய பங்களிப்பு பற்றி மாத்தளை கார்த்திகேசு விதந்து கூறுவார். திருச்செந்தூரன் பற்றிய குறிப்பில் இல. நாகலிங்கம் 1964-ம் வருடம் மலைநாட்டு நல் வாலிபர் சங்கம் மலையக நாடக விழாவை நடத்தியுள்ளமையை குறிப்பிடுவார். இவருடன் செயற்பட்ட வி.ரி. தர்மலிங்கம் புத்தாக்கச் சிந்தனையுள்ள படைப்பாளி. மலையக அரங்கியச் செயற்பாட்டில் தனித்துவமான இடமொன்று அவருக்குள்ளதை நாம் அறியமுடிகிறது. மேலும் இரா.சிவலிங்கம் அவர்களுடைய சமூகச்செயற்பாடுகளும் நாடகத்துறையில் சாதகமான ஓர் இடத்தைப் பெற்றமை கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். இந்நிலையில் மலையக கலை இலக்கியப் பேரவை செயற்பாட்டாளர்களில் ஒருவரான அந்தனி ஜீவாவின் நாடகத்துறைத் தொடர்பான செயற்பாடுகள் வலுவூட்டுகின்றன. சு. முரளிதரனின் நாடக ஈடுபாடும் குறிப்பிடத்தக்கது. அந்தனி ஜீவாவின் 'அக்கினிப் பூக்கள்', சு. முரளிதரனின் 'எங்

கள் ஜாதியே', வ. செல்வராஜாவின் 'மலைகளைப் பேச விடுங்கள்', 'எரிதழல் கொணர்க' போன்ற நாடக எழுத்துருவாக்கங்களும் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன.

நாடகத்துறை ஆர்வலர் இல. நாகலிங்கம் அவர்களது இத்துறை தொடர்பான ஈடுபாடும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. பொகவந்தலாவப் பிரதேசத்தில் குறிப்பாக ஒலிரோசரி வித்தியாலயத்தில் கற்கை நெறிக்களுக்கான களத்தை ஏற்படுத்தி தந்ததில் மிக முக்கியவொருவராக இவர் கொள்ளப்படுகிறார். க.பொ.த உயர்தர மாணவர்கள் 'நாடகமும் அரங்கியலும்' என்ற பாடத்தைக் கற்பதற்கான வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்தார். இதன் பின்னணியில் அரங்கியல் நெறியைக் கற்ற மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு உள்வாங்கப்பட்டனர். 'சேறும், சகதியும் நுளம்புக் கடியும், சிறுவர் துன்புறுத்தல்களும், பசியாலும், மறைமுக அடக்குமுறையாலும் நேரடி நெருக்குதல்களாலும் ஆளாகியுள்ளோரைத் தம்மைத் தாங்குபவர்களாக சொல்பவர்களே சுயநலங்களுக்காக ஏமாற்றி வருவதைப் போட்டுக் காட்டுவதில் மலையக அரங்கங்கள் கவனம் செலுத்துகின்றன என்ற இல நாகலிங்கம் அவர்கள் ஜெகன் சுகுமாரின் 'காமாட்சியும் ஒரு கண்ணகி தான்' என்ற நாடக தொகுப்பின் முன்னுரையில் வரிகள் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. ஜெகன் சுகுமாரன் நூறுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதியும் இயக்கியும் மேடையேற்றியுள்ளார். இந் நாடகங்களை தொகுதிகளாக்கியும் வெளியிட்டுள்ளார்.

எண்பதுகளுக்கு பின் நாவலப்பிட்டி, ஹட்டன் தளங்களில் இருந்து செயற்பட்ட மறுமலர்ச்சி மன்ற செயற்பாடுகள் கலை இலக்கியங்களை ஊடகமாகக் கொண்டு சிந்தனை மாற்றத் திற்கானப் பணியை ஆற்றியமை குறிப்பிடத்தக்கது. திரு. அருளானந்தம் அவர்களின் தலைமையில் இணைத்திருந்த மறுமலர்ச்சி மன்றச் செயற்பாட்டாளர்களின் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கதாகும். குணமூர்த்தி அந்தோனிமுத்து, சித்தி பரீடா, என்டன் கிறிஸ்டோபர் போன்ற கலைஞர்களின் பங்களிப்பு கவனத்தில் கொள்ளத்தக்கது. குறிப்பாக அன்டன் கிறிஸ்டோபர் நாடகத்துறையில் மிகுந்த விற்பன்னராகச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர் மலையக மக்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு இசைநாடகம், கவி நாடகம் முதலானவற்றை எழுதி நெறியாள்கை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

கண்டி சத்தியோத நிறுவனம் மலையக மக்களின்பாற் அக்கறையுடன் செயற்பட்ட நிறுவனமாகும். அந்நிறுவன செயற்திட்டங்களில் நாடகத்திற்குரிய முக்கியத்துவம் வழங்கப்பட்டது. பின்னாளில் கண்டிச் சமூக அபிவிருத்தி மன்றம், மனித அபிவிருத்தி தாபனம் ஆகிய நிறுவனங்கள் கண்டியைத் தளமாகக் கொண்டு செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. மனித அபிவிருத்தி தாபனம், மனித உரிமைகள் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீதி நாடகங்களைச் சூரியா வீதி நாடகக் குழுவை அமைத்து ஆற்றுகை செய்து வந்துள்ளன. இதற்கான பயிற்சிப் பட்டறைகளை வழங்கி இந்நாடகங்களைத் தங்கள் செயற்பாட்டு பிரதேசங்களில் நடத்தி வந்துள்ளது. அறுபதுகளுக்குப் பிற்பட்ட காலங்களில் செங்கொடி சங்க புரட்சிகர கலை இலக்கிய குழுவினர் 'கீமன் கூத்து' என்ற பெயரில் தெருக்கூத்துக்களையும் மேடை நாடகங்களையும் ஆற்றி வந்தமை தொடர்பில் ஓ.ஏ. இராமையா விபரிப்பார்.

கண்டிச் சமூக அபிவிருத்தி நிறுவகம் 'நல்லாட்சி' என்ற சொற்பதத்தை வலியுறுத்தி தன் செயற்பாடுகளை அமைந்திருந்தது. வீதி நாடகங்கள், நாடக பயிற்சிப் பட்டறைகளை நடாத்துதல் போன்ற செயற்பாடுகளில் இந்நிறுவனம் முக்கிய பங்காற்றியுள்ளது. இலங்கையின் பிரபல நாடக கலைஞர்களை இணைத்தும் தமிழகத்தில் 'பிரளயன்' போன்ற நாடகச் செயற்பாட்டாளர்களையும் அழைத்துப் பயிற்சி பட்டறைகளை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. மலையக வாசுதேவன், மகேஸ்வ-ரன், சந்தனம் சத்தியநாதன் போன்றோரும் குறிப்பாக அக்காலத்தில் பயின்ற பேராதனை பல்கலைகழக மாணவர்களையும் இணைத்துக்கொண்டு தோட்டங்களில் வீதி நாடகங்கள் ஊடாக சுருத்தியலைப் பரப்பியமை குறிப்பிடத்தக்கதாகும்.

எண்பதுகளில் தென்னிலங்கையில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியின் எதிர் நடவடிக்கை முனைப்பு பெறுகிறது. இந்த இடத்தில் ஆட்சியாளர்கள் இன ஒழிப்பு என்ற முனைப்பிலிருந்து வர்க்க அழிப்பு என்ற நோக்கிலான பாய்ச்சலில் தடம்பதித்து வெற்றி காண்கிறார்கள். அடிமட்டத்திலிருந்து கல்வி கற்று மாற்று சிந்தனையோடு செயற்பட்ட சிங்கள இளந்தலைமுறையினர் அழிக்கப்பட்டனர். வடகிழக்கு, தென்னிலங்கையில் ஏற்பட்ட இரு வேறுப்பட்ட நோக்கங்களைக் கொண்ட போராட்டங்களின் விளைவு 90-க்கு பின் ஐக்கிய தேசிய கட்சியின் அதிகார கட்டமைப்பு படிப்படியாக உடைந்து 94-ம் ஆண்டளவில் ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது. இப்போராட்டச்சூழலில் வடகிழக்கு இயக்கங்கள் மலையகத்தில் ஊடுருவுகின்றன. நோக்கம் தெரியாத தூண்டலுக்குள் சிக்கிக்கொண்ட இளைஞர்கள் சிலர், மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்களைப்போல அழிக்கப்பட்டனர். பலர் சிறைகளில் அடைக்கப்பட்டனர். வழிப்படுத்தல்கள், தவறுகள் மலையக மக்களின் வாழ்க்கையில் பல்வேறு விதமான தாக்கத்தை ஏற்படுத்தின.

மக்கள் விடுதலை முன்னணிப் போராளிகள் அரசாங்கத்தை எச்சரிக்க வேண்டும் என்பதற்கான தூரநோக்கற்ற செயல் மலையக மக்களின் வாழ்வாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய உண்மையை உணர்வதில்லை. மக்கள் விடுதலை முன்னணியினர் பெருந்தோட்டங்களில் தாக்குதல்களை நடத்தினர். பெருந்தோட்ட மக்கள் யாக்கம்(ஜே.ஈ.டி.பி), ஜனவசம காரியாலயங்கள், தொழிற்சாலைகள் தீக்கிரையாக்கப்பட்டன. பெருந்தோட்டப் பொறிமுறையினைப் பலவீனப்படுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டார்கள். மேற்குறித்த போராட்டச் செயன்முறையால் மலையக மக்கள் அதிக நெருக்கடிகளைச் சந்தித்தனர். இந்நடவடிக்கைகள் சமூகமட்டத்திலும் கலை இலக்கிய பண்பாட்டுப் பின்புலத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பெருந்தோட்டங்களைப் பாதுகாக்கும் நோக்கத்தோடு தோட்டங்களை அண்மித்து இராணுவ முகாங்களை அமைத்ததோடு தோட்ட இளைஞர்களுக்கு இராணுவ முகாங்களில், தோட்டங்களில் சம்பளம் வழங்கி பயிற்சி வழங்கப்பட்டமை

யும் குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சிகளின்போது உளரீதியான அணுகுமுறைகளோடு இயக்கச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன. தோட்டங்கள் தோறும் இயங்கிய அமைப்புகள் இதன் பின்னர் படிப்படியாக வலுவிலந்தமை கவனிக்கத்தக்கதாகும். இவ்வாறான பின்னணியில் மண் சார்ந்து உருவாகும் நாடக படைப்புகள் ஓர் தேக்கநிலையை அடைந்தது. நாடகங்களுக்கான சூழ்நிலை மட்டுமல்ல ஏனைய கலை இலக்கிய முயற்சிகளும் இவ்வாறான நிலையிலே தான் இருந்தன.

நாடகத்துறையை வளர்ப்பதில் இராப் பாடசாலைகள் பெரும் பங்கினை ஆற்றியுள்ளன. முறைசார வகையிலான அமைப்பை கொண்டிருந்தாலும் மலையகக் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய நிறுவன முறையாக இராப் பாடசாலைகள் விளங்குகின்றன. இப்பாடசாலைகளை நடத்தியவர்கள் கலைத்துறையில் திறன் படைத்தவர்களாகவே விளங்குகின்றனர். கலை விழா, சரஸ்வதி பூஜை, ஆகிய நிகழ்வுகளில் மேடையேற்றுவதற்காக நாடகங்கள் பயிலப்பட்டு வந்துள்ளன. இராப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களை வைத்து நாடகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறான இராப்பாடசாலையை நடத்திய ஆசிரியர்கள் மலையகத்தில் பலர் இருக்கின்றனர். இவ்வாறு இராப் பாடசாலைகளை நடாத்திய ஆசிரியர்கள் குறித்த பதிவுகளைத் தேட வேண்டிய அவசியம் காலத்தின் கட்டாயமாகும்.

தொன்னூறுகளில் சீடா திட்டத்தின் செயற்பாடுகளினால் மலையகப் பாடசாலைகள் செயலூக்கம் பெறுகின்றன. இதன் பின்னர் அமைந்த ஆசிரியர் நியமனங்களினால் ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் ஆசிரியர்கள் நாடக செயற்பாடுகளில் ஈடுபட்டனர். யதன்சைட் ஆசிரியர் கலாசாலை, ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி ஆகியவற்றில் உள்வாங்கும் ஆசிரிய பயிலுநுர்களில்மக்களிடையே கருத்துக்களைப் பரிமாறிக்கொள்கின்ற தக்க சூழ்நிலை உருவாகிறது. ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியில் சிவ. இராஜேந்திரன், சு. முரளிதரன், வ. செல்வராஜா ஆகிய நாடகத்துறை ஈடுபாட்டாளர்களின் வழிப்படுத்தல் செயற்பாடுகளும் வலுச்சேர்க்கின்றன. யதன்சைட் ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளில் ஜே. சற்குருநாதன், சு. முரளிதரன், போன்றோரின் வழிப்படுத்தல்களும் செயலாற்றுகைகளும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இராகலை, பொகவந்தலாவப் பிரதேசத்தில் பாடசலைகளில் இத்துறையில் வளர்ந்த மாணவர்கள் இக்களங்களில் தடம் பதித்துள்ளார்கள். இவ்வாறான ஆசிரியர்களில் அகமட் ('வெளிச்சம் வெளியே இல்லை'), நிஸாம், ஹெலன், ராமையா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பாடசாலை நாடகச் செயற்பாடுகளில் 1993-ல் 'வெளிச்சம் வெளியே இல்லை' என்ற நாடகம் ஏற்படுத்திய தாக்கம் பல எதிர்வினைகளை ஏற்படுத்தியது. தமிழ் மொழித்தினப் போட்டிகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டது. மிக நீண்ட காலத்தின் பின்னர் மீளவும் சமூக நாடகப் போட்டி தமிழ்த்தினப் போட்டி சுற்று நிருபத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டது. சுற்று நிருபத்தில் தலைப்பும், கதையம்சம் குறித்த வரையறையும் இருந்தமையால் மலையகப் பாடசாலைகளிலும், மலையக சமூகத்திற்குரியதான பிரச்சினைகளை முதன்மைப்படுத்தி நாடகங்கள் அமைக்க முடியாமல் இருந்தது. இருந்த போதிலும் விடயப்பரப்பிற்கு ஏற்ற வகையில் பாடசாலை மட்டங்களில் இருந்து நாடகத்துறையில் வளருவதற்கு ஏற்ற சூழல் காணப்பட்டமை கவனிக்கதக்கது.

பாடசாலைகளுக்கப்பால் கலாசார அமைச்சினால் நடத்தப்ப










டும் தேசிய மட்டப் போட்டிகளில் போல் விஸ்வாசம், ஜெகன் சுகுமாறன், வே. தினகரன், காளிதாஸ், கார்த்திக், மலையக வாசுதேவன், சுதர்சன், மெ. கேதீஸ் போன்ற ஆளுமைகள் தடம் பதித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மக்கள் 'களரி' அமைப்பினூடாக அஜந்தன், சுமன் லோகநாதன், லீலா, தியாகராஜா மற்றும் பொகந்தலாவைப் பிரதேச நாடகத்துறை ஈடுபாட்டாளர்களும் தடம் பதித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. மக்கள் களரியின் நெறியாள்கையில் (பராக்கிரம நிரியெல்ல) உருவான 'தித்த காட்ட' மலையக மக்களின் பிரச்சினையை சிங்களத்தில் பேசிய நாடகமாக அமைகிறது. இந்நாடகம் தொடர்பில் 'உடல்' இதழில் வெளிவந்த

அ. லெட்சுமணனின் பதிவுகள் அவதானத்துக்குரியதாகும்.

2014-ம் ஆண்டு தமிழ்மொழித்தினப் போட்டியில் சிறுகதைகளை மையமாகக் கொண்டு நாடகங்கள் அமைக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கமைவாக உருவான நாடகங்களில் எட்டியாந்தோட்டை கருணாகரன், அ. லெட்சுமணன் ஆகியோர் நெறியாள்கை செய்த நாடகங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் கவனத்திற்குரியனவாகும். எட்டியாந்தோட்டை கருணாகரன் தெளிவத்தை ஜோசப்பினுடைய 'மீன்கள்' சிறுகதையினை நாடகமாக மாற்றி 'லயன்' முறையில் உள்ள சிக்கலை மேடை வடிவத்தில் காட்டியிருந்தார். அ. லெட்சுமணன் 1964-ஆம் ஆண்டு மலையக மக்களை ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஊடாக துண்டாடப்பட்டும் தாயக பூமியிலிருந்து புலம்பெயர நிர்பந்திக்கப்பட்ட வேதனை உணர்வுகளையும் இந்நாடகத்தில் பதிவாக்கியிருந்தமை பலரது கவனத்தைப் பெற்றிருந்தது. அந்நாடகத்தில் அமைந்த வசனங்களில்

*'காடுகள் அழிக்க வந்தோம் - மீண்டும் எமது விளை நிலங்கள் காடுகளாவது முன்னோக்கிய நகர்வா? பின்நோக்கிய நகர்வா? என்பதோடு,*

*மீண்டும் ஒவ்வொரு சந்தியிலும் வேலைக்காக நின்றுக் கொண்டிருக்கிறோம். இதற்கு தீர்வே இல்லையா!'*

போன்ற வசனங்கள் பலவகையில் சிந்தனைக் கிளர்ச்சியை ஏற்படுத்தியமை தொடர்பில் பார்வையாளர்களின் கருத்து முன்வைக்கப்பட்டது. இந்நாடகம் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பொது மேடைகளிலும் அரங்கேறியமை குறிப்பிடத்தக்கதாகும்.

அண்மைக்காலமாகத் தமிழ் மொழித்தினப் போட்டிகளில் 'சமூக நாடகப் போட்டி இணைத்துக்கொள்ளப்படாமை மலையக நாடக சூழலுக்குள் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை கவனிக்கத்தக்கது. இலங்கையின் கல்வித்துறையின் முக்கியத்துவமான எண்ணக்கருவாக அரங்கியல் பற்றிய எண்ணக்கரு விளங்குகிறது. பல்கலைக்கழகங்களில் பயில்நிலைக்குரிய பாடநெறியாக இது வளர்ச்சி பெற்றுள்ளது. இந்நிலையில் தேசிய ரீதியில் பல நாடகப் போட்டிகள் இடம்பெற்றுள்ள போதும், தமிழ் மொழித்தினப் போட்டிகளின் வாயிலாகவே அதற்கான இயல்பான சூழல் உருவாகின்றமை கவனிக்கத்தக்கது. இப்போட்டியை மீளவும் இணைப்பது தொடர்பில் மீள் பரிசீலனைச் செய்வது கல்வி அமைச்சின் பணியாக அமைகிறது. இத்துறைத் தொடர்பான அமைப்புகளும், ஆர்வலர்களும் இதற்கான தூண்டுதலை ஏற்படுத்த வேண்டியதும் அவசியமாகிறது.

புதிய பண்பாட்டு அமைப்பினர் நடத்திய மலையக நாடக விழாவும், அவ்விழா தொடர்பில் வெளியிட்ட 'செங்கீற்று' பதிவு நூலும் முக்கியத்துவம் வாய்ந்தது. மலையகத்திலிருந்து பல பாகங்களில் இருந்தும் நாடகங்கள் போட்டியில் மேடையேறியது. (ஹொலிரோசரி) பொகவந்தலாவ பிரதேசத்திலிருந்து அரங்கேறிய நாடகம் போட்டியில் முதலாம் இடம் பெற்றது. இந் நாடகம் பேசிய மலையக சமகால பிரச்சினைகள் கவனிப்பிற்குரியதாகும். இந்நாடகத்தில் ஜெகன் சுகுமாரன், கடியன்லென வஸந்தன், ஆகியோரின் நடிப்பு ஆழமாக வெளிப்படுத்தப்பட்டது.

செம்மலர் நாடகக் குழுவினுடைய நாடகங்களும், நாடக செயற்பாடுகளும் முக்கியத்துவமானவை. மலையகத்தின் சமகால பிரச்சினைகளை மையப்பொருளாக்கி அவற்றை வீதி நாடகங்கள் ஊடாக கருத்துப் பரிமாற்றல் மேற்கொள்ளப்பட்டது. இதனுள் இணைந்த கலைஞர்கள் புதிய ஜனநாயக கட்சியைச் சேர்ந்தவர்கள். தேசிய கலை இலக்கிய பேரவையின் செயற்பாட்டில் இணைந்துக் கொண்டவர்களும் உள்வாங்கியிருந்தார்கள். இச்செயற்பாட்டுடன் சிவ. இராஜேந்திரன், ஜெ.-சற்குருநாதன், இராகலை பன்னீர், வே. மகேந்திரன், சுகேஷ-ணன் ஆகியோரின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கதாகும். சிவ. இராஜேந்திரன் அவர்களது நாடகத்துறை ஈடுபாடு குறித்த பதிவை 'நிகர்' 6-வது இதழில் காணலாம்.

கிழக்கு பல்கலைக்கழகத்தில் சுவாமி விபுலானந்தர் அழகியல் கற்கை அரங்கில் கல்வி கற்கும் மாணவர்களின் நாடகச் சித்திரிப்புக்கள் குறித்து விரிவுரையாளர் திரு. சந்திரகுமார் எழுதிய பதிவுகள் சிறந்த ஆவணமாகும். பல்கலைக்கழகத்திற்கு வெளியே வந்த பின்பு 'அடையாளம்' என்ற அமைப்பின் ஊடாக இவர்களது நாடகச் செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்கது.

புதிய பண்பாட்டு அமைப்பின் பொன்பிரபாகரன், பிரேம்குமார் ஆகியோர் நாடகத்துறையில் கொண்டுள்ள ஆர்வம், ஈடுபாடுகளைப் பொகவந்தலாவப் பிரதேசத்தில் நிகழும் ஆற்றுகைகள் வாயிலாக அறியலாம். இப்பிரதேச நாடகச் செயற்பாட்டாளர்கள் மக்கள் 'களரி' இயக்கத்துடன் இணைந்து நாடக முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளில் பின்னணியில் பொன்பிரபாகரன், பிரேம்குமார் ஆகியோரது பங்குபற்றல்கள் குறிப்பிடத்தக்கது.

கொட்டகலை காளிதாஸ் இத்துறையில் முழுநேர செயற்பாட்டாளராக விளங்குவது தேசிய அமைப்புகளுடன் இணைந்து சமகாலத்தில் பங்களிப்பு செய்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய நிலையில் முன்னணி கலைஞராக இலங்கை தொலைக்காட்சிகளில் இடம் பிடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எட்டியாந்தோட்டை கருணாகரன் சமூக மாற்றத்துக்கான முனைப்பு செயற்பாட்டாளராக இனங்காணப்படுகின்றார். இவர் கருத்தியலைப் பரப்புவதற்கு பிரதான ஊடகமாக நாடகத் துறையைப் பயன்படுத்துகிறார். பாடசாலை மாணவர்களுக்கு முற்போக்கான சிந்தனையை ஏற்படுத்துவதோடு நாடகத் துறையில் இளந்தலைமுறையினரை நெறிப்படுத்தும் ஒருவராக திகழ்வது இவரது சிறப்பம்சமாகும்.

அண்மைக்காலமாக நிகர் சமூக கலை இலக்கிய அரங்க செயற்பாட்டாளர்களின் இத்துறை தொடர்பான ஆர்வமிக்க

செயற்பாடுகளைக் கருத்திற் கொள்ளப்பட வேண்டும். 2016-ஆம் வருடம் பிரான்ஸில் இடம்பெற்ற உலகத் தமிழ் நாடக விழாவுக்கு இவ்வமைப்பின் கலைஞர்களும் அழைக்கப்பட்டி ருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அழைக்கப்பட்ட மற்றொரு அணி பேராசிரியர் மௌனகுரு அவர்களது தலைமையிலான அணியாகும். இரண்டு அணிகளுக்கும் விசா அனுமதி மறுக் கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். உலகத் தமிழ் நாடக விழாவை முன்னிறுத்தி 'நிகர்' சிறப்பிதழ் வெளிவந்தது. அவ் விதழ் மலையக நாடகத்துறை தடங்களை ஆவணப்படுத்தும் செயற்பாட்டை முனைப்பாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதா கும்.

கூத்துக்களை அரங்கிற்கு கொண்டுவரும் நிலை குறித்து வேறுப்பட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்படுகிறது. கற்கை நெறியாக கூத்து பரிணாமம் பெற்றுள்ள நிலையில் மேடை வடிவத்திற்கு கூத்தை மாற்றியமைத்தல் அவசியமானதெனப் பலரும் கருத்துக்களை முன்வைப்பார்கள். திருச்செந்தூரன், வி.டி. தர்மலிங்கம், ஆகியோர் மலையகக் கூத்துக்களை மேடை வடிவத்திற்கு கொண்டுவருவதில் ஈடுபட்டவர்களாவர். பின்னாளில் பாடசாலை விழாக்களில் இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. தமிழ்மொழித்தினப் போட்டிகளில் கூத்துக்கள் மாகாண மட்டத்தில் மாத்திரம் வரையறுத்து போட்டி நிகழ்வாக நடத்தப்படுகிறது.

பின்னாளில் ஆசிரியர் பயிற்சி நெறி கூடங்கள், ஆசிரியர் பயிற்சி கலாசாலை, கல்வியற் கல்லூரி ஆகியவற்றில் மலை யகக் கூத்துக்களை மேடை வடிவத்திற்கு கொண்டும் வரும் செயற்பாடுகள் முனைப்பு பெறுகின்றன. இம்முயற்சியில் பிரான்ஸிஸ் ஹெலன், வே. இராமர், நா. சாம்பசிவமூர்த்தி, பொன். பிரபாகரன், பிரேம்குமார், ஆகியோரின் பங்களிப்பு கள் கவனிக்கத்துக்குரியன. இச்செயற்பாடுகளுகளின் பின்ன ணியில் சு. முரளிதரன், வ. செல்வராஜா ஆகியோரது பங்க ளிப்புக்கள் முக்கியமானவை. அண்மைக்காலத்தில் 'அருச்சு-னன் தபசு' கூத்தை வடிவமைப்பதில் வேலாயுதம், ஸ்ரீகணே-சன் போன்றோரின் பங்களிப்பு சிறப்பானதாகும். செம்மொழி மாநாட்டில் மலையக கலைஞர் ஹெலன் தலைமையில் காமன்கூத்தை அரங்கேற்றம் செய்தமை குறிப்பிடத்தக்கதா கும். அவ்வாறே, கலைஞர் வே. இராமர் தலைமையில் 2018-ஆம் வருடம் யாழ். பல்கலைக்கழகத்தில் அனைத்து பல்க லைக்கழக தமிழ்ச் சங்கங்கள் இணைந்து நடத்திய தமிழ் விழாவில் காமன் கூத்து அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக் கது. இந்நிகழ்வில் காமன் கூத்து பிரதியாக்க நூலும் இவரால் தொகுத்து வெளியிட்டமையும் கவனத்திற்குரியதாகும். மலை யக முக்கூத்துகளையும் அரங்கமயப்படுத்தும் முனைப்பில் பலர் ஈடுப்படுகின்ற நிலையில் அதனை ஆய்வுக்குட்படுத்தி யும், ஆவணப்படுத்தும் பலரது பணிகளும் குறிப்பிடத்தக்க தாகும்.

நாடகத்துறை தொடர்பில் சு. முரளிதரன், ஜெ. சற்குருநாதன், சுப்பையா இராஜசேகரன், மாத்தளை கார்த்திக்கேசு, மாத் தளை வடிவேலன், அந்தனி ஜீவா, சிவ. இராஜேந்திரன், இல. நாகலிங்கம், ராஜ்சிவா, அ. லெட்சுமணன், ஆ. முத்தையா மாஸ்டர், மல்லிகை சி. குமார், விஜேயகோபால், ஒ.ஏ. இரா மையா, இரா. மகேஸ்வரன், இரா. யோகேசன் அகியோரின் எழுத்துருவாக்கங்கள் இத்துறை தொடர்பிலான பதிவுகளாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே கண்டி கலைக்கழக வெளியீடாக வெளிவந்த 'மரியம் பீபீ. சுல் தானின் 'அர்த்தமுள்ள உறவுகள்' நாடக பிரதியாக்கத் தொகுப்பு நூலும், பாக்கியா பதிப்பகத்தின் வெளியீடாக வெளிவந்த கலாபூஷணம் ஆ. முத்தையா மாஸ்டரின் 'மலை யக நாடக வரலாறு' மட்டக்களப்பு அரங்க ஆய்வுக் கூடத்தின் வெளியீடான மெய்யநாதன் கேதீஸ்வரனின் 'சகதிப்புழுக்கள்' நாடக பிரதியாக்க நூலும் இத்துறைசார் பார்வைகளுக்கு வலிமை சேர்க்கின்றன எனலாம். மலையகத்தைச் சேர்ந்த மெ. கேதீஸ்வரன் யாழ். பல்கலைக்கழகத்தில் அரங்கியல் துறையில் விரிவுரையாளராக தொழிற்படுகின்றமையும் குறிப் பிடத்தக்கது. மேலும் இவருடன் இணைந்து செயற்படும் ராசு சுதர்சன், செல்வராசா ரஜீவ், ராசு ஞானம், பிரதாரணி போன்ற வர்கள் இணைந்த 'அரங்க வலயம்' அமைப்பு ஊடாக பல அரங்கியல் முயற்சிகள் இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத் தக்கது.

இத்துறை தொடர்பான ஆவணப்படுத்தல் செயற்பாட்டுத் தூண்டலில் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு - 2011 (சர்வ தேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்), கொழும்புத் தமிழ்ச் சங் கம் நடத்திய உலகத்தமிழ் இலக்கிய விழா - 2012 ஆகிய விழாக்கள் முக்கியமாவையாகும். இம்மாநாடுகளில் இத்து றையோடு தொடர்புபட்ட கட்டுரைகளை முன்வைத்த மு. சிவ லிங்கம், பொன். பிரபாகரன், அ. லெட்சுமணன், இரா. நித்தியா னந்தன் ஆகியோரது பணிள் கவனத்திற்குரியன. அண்மை யில் நடந்த இலக்கிய சந்திப்பு 47 நிகழ்வில் பேராசிரியர் சி. ஜெயசங்கர் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற அரங்கி யல் ஆய்வரங்கு முக்கிய கவனத்தைப் பெறுகின்றது. மலை யக நாடகங்களின் முக்கியத்துவம் குறித்த தலைமையுரை யும், சிரேஷ்ட விரிவுரையாளர் சந்திரகுமாரின் 'மலையக நவீன நாடகங்கள் குறித்த பார்வையும்' அ. லெட்சுமணன் அவர்க ளின் 'மலையக நாடகங்களின் பிற்புலம் குறித்த பார்வையும்' அழமானவை. அவ்வாறே திண்டுக்கல் காந்தி கிராம கிராமி யப் பல்கலைக்கழகம் நடத்திய 'இலங்கை மலையகத் தமிழ் இலக்கியமும் கலைப் பண்பாட்டு வடிவங்களும்' (2017) எனும் தலைப்பில் இடம்பெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட 'மலையக அரங்கியல் களம்' எனும் கட்டுரை யும் மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்ற 'இலங்கை மலையகத் தமிழ் இலக்கியம்' என்ற கட்டுரையும் பன்னாட்டு ஆய்வரங்கில் வாசிக்கப்பட்ட 'மலையக அரங்கியல் செல் நெறி' எனும் கட்டுரையும் மலையகத்தின் காத்திரத்தன்மை யான நாடகச் செயற்பாடுகளை அறிய உதவுகின்றன. சர்வ தேச அரங்குகளிலே முன்வைக்கப்பட்ட பதிவுகள் என்ற வ கையில் இவ்விடயங்களும் குறிப்பிடத்தக்கவையாகும்.

## முடிவுரை:

ஈழத்து நாடகத்துறையில் மலையகம் காத்திரமான பங்களிப்பினை ஆற்றியுள்ளது. அப்பங்களிப்புகள் குறித்து ஆவணப்படுத்தாமை, ஆய்வுக்குட்படுத்த ஆய்வாளர்கள் முன்வராமை அப்பங்களிப்புகளை ஆய்வாளர்கள் அறிய முற்படாமை, அறிய ஆவல் இல்லாமை அதனை ஒரு பொருட்டாக எண்ணாமை போன்ற காரணங்களால் மலையக நாடகங்கள் ஓரங்கட்டப்பட்டு வந்த நிலையில் இக்கட்டுரை மலையக நாடகத்துறையின் முயற்சிகளைப் பேசிநின்றது. மலையக நாடக பாரம்பரியம் இருநூறு வருட காலத்திற்கு முற்பட்டது. தென்னிந்தியாவின் பூர்வீகத்தின் இணைப்பிற்குட்பட்டது. அந்நிலையில் இக்கட்டுரை சிறிதளவாவது மலையக நாடகத்தை அறிய உதவும்.

ஒரு தேசிய இனத்தின் அடையாளத்தை அதன் மரபு சார்ந்த கலைகளின் வரலாறே நிர்ணயிக்கிறது. அதுவே மனித சமூகத்தின் வரலாறுமாகும் என்ற ‘உடல்’ இதழின் கூற்றுக்கு அமைய மலையக தமிழர்களின் வரலாற்றை காத்திரப்படுத்துவதற்கு இச் சமூகஞ்சார் கலைப் பண்பாட்டுப் புரிதலைச் சரியான வகையில் ஆவணப்படுத்தவேண்டியது காலத்தின் நிர்பந்தமாகும் ஆகும். அந்த வகையில் மலையக நாடகத்துறைப் பங்களிப்பு குறித்த ஆவணப்படுத்தலை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் சமகாலப் பிரச்சினைகளை வெளிப்படுத்தியும் அவற்றுக்கான தீர்வு நோக்கிய சிந்தனையைப் பரப்புவதற்கும் இத்துறையைப் பிரயோகச் செயப்பாட்டுக் களமாகப் பயன்படுத்த வேண்டும்.

- நாடகத்துறை தொடர்பான ஆளுமைகள், பங்களிப்பு, நுட்பமுறைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளல்.
- நாடகங்கள் ஊடாக ஏற்படுத்திய கருத்தியல் தொடர்பில் ஆராய்தல்.
- நாடகப் பாடல்களை ஆவணப்படுத்தல் அதன் உட்கருத்துகளை வெளிப்படுத்தல்.
- நாடகங்களை நூலுருவில் ஆவணப்படுத்துவதோடு மீளவும் மேடையேற்றஞ் செய்தல்.
- நாடகங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
- தேசிய, சர்வதேசிய வளர்ச்சிப் போக்குடன் ஒப்பிட்டு மலையக நாடகங்களின் போக்கினைக் கொண்டுசெல்லல்.
- பயில்நிலைக்குரிய நாடகக்களங்களை உருவாக்குதல்.

போன்ற விடயங்களை கருத்திற்கொண்டு முன்னகர்த்துவது இத்துறைக்கு ஆற்றுகின்ற பெரும் பணியாக அமையும். மலையகத்தில் ஆங்காங்கே பல பகுதிகளில் இத்துறை ஆர்வளர்கள் செயற்படுகின்ற போதும் மாறுபட்ட கருத்துக்களுக்கு அப்பால் சில குறுகிய வட்ட மனப்பாங்குகள் விரிசலை ஏற்படுத்தியுள்ளதையை அறிய முடிகிறது. அச்சிந்தனைகளை உடைத்தெறிந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது மலையக நாடகத்துறைக்கு ஆற்றுகின்ற பெரும் பங்களிப்பாக அமையும். இதனூடாக கருத்து பரிமாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஒன்றிணைந்த கலந்துரையாடல் ஊடாகவும் மலையக நாடகத்துறையை காத்திரத்துடன் முன்னகர்த்த முடியும் என்பது திண்ணமாகும்.

**உசாத்துணை:**


- முரளிதரன் .சு (2000) மலையக இலக்கிய தளம் - மலையக வெளியீட்டகம்.
- மௌனகுரு .சி (2008) ஈழத்து தமிழ் நாடக அரங்கு - குமரன் புத்தக இல்லம்.
- மௌனகுரு .சி (2007) நாடகம் - அரங்கியல் பழையதும் - புதியதும் - குமரன் புத்தக இல்லம்.
- இளஞ்செழியன் .ஏ (2000) ஈழத்து பெரியார் முதல் அண்ணா வரை - (அரசியல் பொன்விழா குழு - நாவலர். ஏ. இளஞ்செழியன்).
- மௌனகுரு .சி (2007) பேராசிரியர் எதிரி வீர சரத்சத்திரவும், ஈழத்து நாடக மரபும் - விபவி - வெளியிடு.
- சாரல் நாடன் (1988) தேசபக்தன் கோ. நடேசய்யர் - மலையக வெளியீட்டகம்.
- முத்துலிங்கம் .பெ (1996) எழுதாத வரலாறு - சமூக அபிவிருத்தி நிறுவகம்.
- புவாஜி ஏ.ஏ.எம் (2001) மாத்தளை மாவட்டத் தமிழர் வரலாறும் பாரம்பரியமும் - மத்திய மாகாண இந்து காலாசார அமைச்சு.
- முத்தையா .ஆ (2014) மலையகத் தமிழர் நாடக வரலாறுடு - பாக்கியா பதிப்பகம்.
- சாரல் நாடன் (2010) இளைஞர் தளபதி இரா. சிவலிங்கம் - கொழும்புத் தமிழ்ச் சங்கம்.
- அந்தனி ஜீவா (2002) கண்டி மாவட்டத் தமிழர்களின் வரலாற்று பதிவுகள் தொகுப்பு - மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சு
- சுகுமாறன் .ஜெ. (2005) காமாட்சியும் ஒரு கண்ணகிதான் - மணிமேகலை பிரசுரம்.
- சிவலிங்கம் .மு (2014) மலையகத் தமிழர் நாட்டுபுறப் பாடல்கள்: தொகுப்பு - குறிஞ்சித் தமிழ் இலக்கிய மன்றம்.
- சிவலிங்கம் .மு (2010) ஒப்பாரிக்கோச்சு (சிறுகதை) - நாவலப்பிட்டி தமிழச் சங்கம்.
- கேதீஸ்வரன் .மெ (2018) சகதிப்புழுக்கள் - அரங்க ஆய்வுக்கூடம்.




letsumanan.a@thaiveedu.com


***தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.***
***விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.***

***E-mail: info@thaiveedu.com Fax: 1-416-849-0594 Tel: 1-416-857-6406***




ஒலிவியாவுக்கு அப்போது 67 வயது. அன்றும் வழக்கம் போல தேநீர் போடுவதற்காகச் சமையல் அறையில் இருந்த போதுதான் இது நடந்தது. ஒரு குவளையில் கொதிக்க வைக் கப்பட்ட தண்ணீருள் தேயிலையைப்போட முயன்றபோது, அவரது கை விரல்கள் பெரிதாக வளரத் தொடங்கின. அவை திடீரென பூதாகரமாகப் பெருத்துவிட்டன. அந்தப் பெரிய விரல்களால் தேயிலைப் பையினை எடுக்க முடியவில்லை, அவரால் தேநீர்போட முடியவில்லை. அவரின் கைகள் மிகப் பெரிய விரல்களைக் கொண்டிருக்கின்றன என்பதனை அவர் உணர்ந்து கைகளைக் கண் முன்னால் உயர்த்திப் பார்த்தார் என்ன ஆச்சரியம்! அவை வழக்கம் போல எந்தவிதமான மாற் றங்களும் இல்லாத சாதாரண விரல்களாகவே தென்பட்டன. அப்போதுதான் ஒலிவியா உணர்ந்துகொண்டார், அவரது சொந்தக் கை விரல்கள் எவ்வாறு இருக்கின்றன என்று உணர் வதற்கும், அவை உண்மையில் எவ்வாறு இருக்கின்றன என்ப தற்கும் இடையே மிகுந்த வேறுபாடுகள் இருக்கின்றன என்ப தனை. இது எதோ மனக்குழப்பத்தில் நடைபெறுகின்றது, எல் லாம் சில நிமிடங்களில் சரியாகிவிடும் என்று நினைத்துக் கொண்டார் ஒலிவியா. அவர் நினைத்தது போலவே சில நிமி டங்களின் பின்னர் இந்த வினோத மனநிலையினிலிருந்து ஒலிவியா விடுபட்டுக் கொண்டார். அடுத்த நாள் மீண்டும் ஒரு நிகழ்வு, இப்போது அவரது உடல் மிகப் பெருத்துவிட்டது போல ஒரு உணர்வு. அவர் இருக்கும் அறையினை விட்டு எவ் வாறு வெளிவரப்போகின்றார் என்று பயந்துபோனார். தனது உருவத்தினை toiletல் இருந்த கண்ணாடியின் முன்னால் சென்று பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டார். Toiletஇல் இருந்த கண்ணாடியினைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது மீண்டும் ஒரு மனக்குழப்பம், மேலே பறக்கப் போவது போல ஒரு உணர்வு, toileஇல் இருந்தவற்றை இறுக்கமாக ஒலிவியா பற்றிக்கொண்டார். இந்த மனக்குழப்பங்களுக்குத் தீர்வைத் தேடி ஒலிவியா மருத்துவரை நாடினார்.

மருத்துவர் வழக்கம்போல சகல பரிசோதனைகளையும் செய்து பார்த்தார். ஒலிவியாவின் கண்களில் ஏதாவது கோளாறு இருக்கின்றதா? அவர் மூளையில் ஏதாவது கட்டி வளர்கின் றதா? பக்கவாதம் (stroke) போல ஏதாவது ஏற்பட்டு மூளை யின் ஒரு பகுதி பாதிக்கப்பட்டுவிட்டதா போன்ற சகல பரிசோ தனைகளின் முடிவுகளும் ஒலிவியாவுக்கு ஒரு குறைபாடுக ளும் இல்லை என்றே கூறின. மருத்துவர், ஒலிவியாவிடம் அவர் உட்கொளும் மருந்து விபரங்களைக் கேட்டபோது, ஒலி வியா அவரது மன அழுத்த வியாதியில் ( Depression) இருந்து விடுபடுவதற்காக zoloft எனும் மருந்தை உபயோ கிப்பதாகவும். இந்த மருந்தை பத்து வருடங்களுக்கு முன்னர் உபயோகித்தபோது தனது மனதில் ஏற்பட்ட தடுமாற்றங்க ளையும் மருத்துவரிடம் விபரித்தார். ஒலிவியாவின் மனக்குழப் பங்களுக்கு இந்த மருந்து zoloftனை உபயோகிப்பதால் அபூர்வமாக ஏற்படும் பக்கவிளைவுதான் காரணமாக இருக்க லாம் என்று கருதிய மருத்துவர், சில காலத்திற்கு இந்த மருந்தை உட்கொள்வதனை நிறுத்தி வைக்கும்படி ஒலிவியா வுக்கு ஆலோசனை வழங்கினார். ஒலிவியாவின் மனக்குழப் பங்களும் இந்த மருந்தினை உட்கொள்ளாதபோது ஒரு வாரத்தின் பின்னர் தீர்ந்துவிட்டன. ஒலிவியாவின் மனக்கு ழப்ப நிலைமையினை ஆங்கிலத்தில் Alice In Wonderland syndrome, சுருக்கமாக AIWS என அழைக்கின்றனர். இந்த பெயர் புகழ்பெற்ற குழந்தைகளுக்கான நூலான Alice's ad- ventures in wonderland எனும் புத்தகத்தில் இருக்கும் கதா பாத்திரம் Aliceஐ மையப்படுத்தி இருக்கிறது. Aliceஇன் கதா பாத்திரம் சில வேளைகளில் மிகச் சிறிய உருவமாகவும் சில வேளைகளில் மிகப் பெரிய உருவமாகவும் மாறும் அதிசயத் தைக் கொண்டது. இப்படி மாறுவதற்காக Alice ஏதோ ஒரு வகை மூலிகையினை அருந்துகின்றார். இந்த நூலினை எழு திய Lewis Carroll கூட ஒலிவியாவுக்கு ஏற்பட்ட மனக்குழப்ப நிலைமைக்கு உட்பட்டு இருந்தாரோ என்ற ஐயத்தினை AIWS தொடர்பாக ஆய்வுகளை நடத்தி வரும் சில நரம்பியல் வல்லுநர்கள் முன்வைக்கின்றனர். இந்த மன நோய்க்குறி (syndrome) மிக அபூர்வமாகவே மருத்துவ நூல்களில் குறிப் பிடப்பட்டிருக்கின்றது. இதுவரை அறுபது வரையிலான நோயாளிகளின் குறிப்புகள் மட்டுமே தரவுகளாக இருக்கின் றன.

நரம்பியல் வல்லுநர்கள் AIWS நோய்க்குறியினை ஒரு வகை மாயத் தோற்றத்திற்கான (Hallucination) ஒன்றாகக் கருதா மல், இந்த நோய்க்குறி, புலன்களின் இருந்து வரும் தகவல்

களை மூளை தவறாகப் புரிந்துகொள்ளும் முறைமையே காரணம் என நம்புகின்றனர். அதாவது sensory distortionதான் காரணம் என்கின்றனர். மாயத் தோற்றம் (Hallucination) என்பது இல்லாத ஒன்று இருப்பது போலத் தோன்றுவது, கேட்பது, அல்லது உணர்வது. AIWS நோய்க்குறி புலன்களிலிருந்து வரும் தகவல்களில் இருந்து மூளையினால் உண்மையான யதார்த்த நிலைமையினைக் கட்டியெழுப்ப முடியாத ஒரு நிலைமை. AIWS நோய்க்குறி இருப்பவர்கள் சில வேளைகளில் முப்பரிமாணப் பொருட்களைத் தட்டையான பொருளாக அதாவது இரு பரிமாணப் பொருளாகப் பார்ப்பது, ஒரே நிறத்தில் சகலதும் தோன்றுவது, ஒரே உருவம் பலதாகத் தெரிவது இப்படிப் பல வினோத உணர்வுகளுக்கு (perception) மிகக் குறுகிய நேரங்களுக்குள் உட்படுகின்றனர். AIWS நோய்க்குறி இருப்பவர்கள் பெரும்பாலும் நீண்ட காலமாகத்



தலைவலி (chronic headache) காரணமாக அவதிப்படுவர்களாகவோ, வலிப்பு (Epilepsy) மற்றும் பக்கவாதம் (stroke) போன்ற நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களாகவோ இருக்கின்றனர். மேலே குறிப்பிட்ட நோய்களுக்கும் AIWS நோய்க்குறிக்கும் என்ன நேரடி தொடர்பு என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை.

புலன்களிலிருந்து வரும் தகவல்களில் இருந்து உண்மையான வெளியுலகைக் கட்டியெழுப்ப முடியாததுதான் ஒரு வகை நோய்க்குறியாயின், புலன்களில் இருந்து எந்தவிதமான தகவல்களும் மூளையின் பகுதிகளுக்குச் சென்றடையாதபோதே மூளை அற்புதமான போலி விம்பங்களை அதாவது மாயத் தோற்றங்களை (Hallucination) யதார்த்தம் போல தோற்றுவிக்கும் நோய்க்கூறுகளாக(syndrome) இருக்கின்றன. புகழ்பெற்ற மூளை - நரம்பியல் மருத்துவரும், எழுத்தாளருமான Oliver Sacks அவர்கள் மாயஉணர்வுகள் பற்றி Hallucinations எனும் தலைப்பில் ஒரு புத்தகமே எழுதி இருக்கின்றார். அவர் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் மாயத் தோற்றங்கள் தொடர்பான ஒரு நோய்க்குறி Charles Bonnet Syndrome. இதனைச் சுருக்கமாக CBS நோய்க்குறி என அழைக்கின்றனர். இந்த நோய்க்குறி தொடர்பாக Oliver Sacks பின்வருமாறு விபரித்திருந்தார்.

2006-ம் ஆண்டு கார்த்திகை மாதம் ஒரு நாள் டாக்டர் Oliver Sacks அவர்களுக்கு அதிகாலையிலேயே ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. இந்த தொலைபேசி அழைப்பு, வயோதிபர்களைப் பராமரிக்கும் ஒரு முதியோர் வசிக்குமிடத்திலிருக்கும் ஒரு தாதியிடம் இருந்து வந்திருந்தது. அங்கு வசிக்கும் 96 வயது மூதாட்டி Rosalie ஏதோ வினோத காட்சிகள் தனக்குத் தென்படுவதாகத் தாதிகளிடம் கூறியிருக்கின்றார். Rosalieயை பராமரிக்கும் தாதி, Rosalie எதாவது மறதி நோயினால் (dementia) அல்லது பக்கவாதம் (stroke) அல்லது ஏதோ ஒரு வகை மன நோயினால் அவதிப்படுகின்றாரோ என எண்ணி Rosalieயை பரிசோதித்துப் பார்ப்பதற்கு டாக்டர் Oliver Sacks அவர்களின் உதவியினை நாடியிருக்கின்றார்.

வழக்கம் போல Rosalieயை பரிசோதித்துப் பார்த்தவுடன் ஒன்றுமட்டும் டாக்டர் Sacksக்குத் தெளிவாகப் புரிந்தது. Rosalie 96 வயதைக் கடந்துவிட்டாலும் இன்னமும் மன உறுதியுடனும், தெளிவான சிந்தனையுடனும் வாழும் ஒரு வயோதிபர் என்பது. அது மட்டுமல்லாது Rosalie பக்கவாதமோ அல்லது எந்தவிதமான மறதி அல்லது மன நோய்களால் பாதிக்கப்படவில்லை என்பது. வழக்கமான பரிசோதனைகள் முடிந்த பின்னர் டாக்டர் Sacks அவர்கள் Rosalieயிடம் அவர் காணும் காட்சிகள் பற்றி வினாவினார். முதலில் தயக்கம் காட்டினாலும் சிறிது நேரத்தில் Rosalie, தனது அனுபவங்களை டாக்டர் Sacksசிடம் பகிரத் தொடங்கினார். Rosalieக்கு அடிக்கடி பல வினோதமான காட்சிகள் தென்படுகின்றன. ஜன்னல் திரைச்சீலைகள் படிக்கட்டுகளில் மேலும் கீழுமாக நடந்து வருகின்றன, மனிதர்கள் கிழக்கு ஐரோப்பா மக்கள் அணியும் உடைகளுடன் Rosalieயின் அறையினுள் உலாவுகின்றனர். அடிக்கடி முக்கோண, சதுர வடிவங்கள் தோன்றுகின்றன. மிக கூர்மையான பெரிய பல்லுகளை உடைய விலங்குகள் அபத்தமான அமைப்புகளுடன் தோன்றுகின்றன, இப்படிப் பல தோற்றங்கள் தோன்றி Rosalieயினைத் தொந்தரவு செய்கின்றன. இதில் ஆச்சரியப்பட வேண்டிய விடயம் என்னவெனில் Rosalie 10 வருடங்களுக்கு முன்னர் Age-related macular degeneration (AMD) எனும் நோயினால் பாதிக்கப்பட்டு இரண்டு கண்களின் பார்வைத் திறனை இழந்திருந்தார். இன்னுமோர் விடயத்தையும் டாக்டர் Sacks அவதானித்தார். இப்படியான வினோத விம்பங்கள் Rosalieக்கு தோன்றும்போது அவர் எதோ ஒன்றை உற்றுநோக்கிப் பார்ப்பதினையும் அவரது கண்கள் அங்கும் இங்கும் அசைந்து இயல்பாகவே ஒரு காட்சியினைப் பார்ப்பது போலச் செயற்படுவதினையும் கூடவே அவதானித்திருந்தார்.

Rosalie தனக்கு ஒரு திரைப்படம் பார்ப்பது போல இந்தக் காட்சிகள் தோன்றுவதாக டாக்டர் Sacksஇடம் கூறினார். அது மட்டுமல்லாமல் தனது கண் பார்வையினை இழந்து பத்து வருடங்களின் பின்னர் ஏன் இப்போது இப்படி வினோதமான விம்பங்கள் தோன்றுகின்றன என்பதனை எண்ணி விசனப்பட்டார். அமைதியாக எல்லாவற்றையும் கேட்ட டாக்டர் Sacks. மிக ஆறுதலாக Rosalieயிடம் கூறினார். உங்களுக்கு ஒன்றும் ஆகிவிடவில்லை உங்களுக்கு இருப்பது Charles Bonnet Syndrome எனும் நோய்க்குறி இதில் பயப்படுவதற்கு ஒன்று

மில்லை என்றார். நல்ல விடயம் என்று ஆமோதித்த Rosalie நீங்கள் போகும்போது என்னைப் பார்த்துக்கொள்ளும் தாதியிடம் ‘எனக்கு இருப்பது Charles Bonnet Syndrome மற்றும்படி நான் ஒரு மன நோயாளி அல்ல’ என்பதனை விளக்கி கூறிவிட்டு செல்லுங்கள் என்று கூறினார்.

அதிஷ்டவசமாக CBS நோய்க்குறி உள்ளவர்கள் மாய தோற்றங்களை இலகுவாக அடையாளம் கண்டுகொள்கின்றனர். அவை உண்மையான இயற்கைக் காட்சிகளைப் பிரதிபலிப்பதில்லை என்பதனையும் உணருகின்றனர். இதனால் இப்படித் தோன்றும் காட்சிகள் இவர்களைப் பாதிப்பதோ அல்லது பயமுறுத்துவதோ இல்லை. CBS நோய்க்குறி உள்ளவர்களின் அனுபவங்களில் ஒரு முக்கிய அம்சத்தையும் இங்கே குறிப்பிட வேண்டும், இவர்கள் காணும் காட்சிகளில் அவர்களையோ, அவர்களை சார்ந்தவர்களையோ, அல்லது தெரிந்தவர்களையோ காண்பதில்லை. டாக்டர் Sacks அவர்கள் மாய விம்பங்கள் மட்டுமல்லாமல் மாய ஒலிகள் கேட்பது, மற்றும் LSD போன்ற போதை மருந்துகளால் ஏற்படும் பரவச உணர்வுகள் பற்றி நோயாளிகளின் அனுபவங்களையும் அவற்றிற்கான காரணங்களையும் அவரது ‘Hallucinations’ புத்தகத்தில் விபரமாக எழுதியிருக்கின்றார். பதினெட்டாம் நூற்றாண்டு வரை இந்த வகையான நோய்க்குறி உள்ளவர்கள் தமது அனுபவங்களை மற்றவர்களுடன் பகிரும்போது அவர்களை ஒன்றில் மன நோய் உடையவர்களாக (crazy people) ஒதுக்கி வைப்பதோ அல்லது தெய்வீக அருள் பெற்றவர்களாக தூக்கி வைப்பதோ சமூக நடைமுறையாக இருந்து வந்திருக்கின்றது. நல்லவேளையாக நரம்பியல் - மூளை சார்ந்த நவீன அறிவியல், மூளையின் தொழிற்பாட்டை படம் பிடிக்கும் கருவிகளின் அபரிதமான தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றின் வரவினால் இந்தவகை நோய்க்குறி வருவதற்கான காரணங்களைத் துல்லியமாக அனுமானிக்க முடிகின்றது. முதலில் AIWS நோய்க்குறி வருவதற்கான காரணம் என்னவாக இருக்கலாம் என்பதனைப் பார்ப்போம்.

அறிவுசார் நரம்பியல் வல்லுநர்கள் (cognitive neuroscientists), மூளையினை மூன்று பாகங்களாக அவற்றின் தொழிற்பாட்டின் அடிப்படையில் பிரித்து அணுகுகின்றனர். முதலாவதாகப் புலன்களில் இருந்துவரும் தகவல்களை ஆராயும் பகுதி (sensory cortex). உதாரணமாக கண்கள் விழும் ஒளி, காதுகளில் கேட்கும் ஒலி, தொடுவதினால் ஏற்படும் உணர்வு போன்ற சகல புலன்களில் இருந்துவரும் தகவல்களைப் பகுத்து ஆராயவெனத் தனித்தனிப் பகுதிகள் மனித மூளையில் விருத்தியடைந்து இருக்கின்றன. இவற்றையே பொதுவாக sensory cortex என்றழைக்கின்றனர். இரண்டாவதாக உடல் உறுப்புகளை இயக்கும் பகுதி (motor cortex). அதாவது எமது உடலில் உள்ள சகல உறுப்புகளை இயக்குவதற்கான கட்டளைகளும் மூளையில் இருந்தே ஆரம்பிக்கின்றன. இந்த கட்டளைகளை உருவாக்குவதற்கும் கட்டுப்படுத்துவதற்குமாகவென மூளையின் ஒரு தனித்த பகுதி செயற்படுகின்றது, இதனை motor cortex என்கின்றனர். மூன்றாவதாக ஒன்றிணைக்கும் பகுதி (association cortex). இந்த ஒன்றிணைக்கும் பகுதி புலன்களில் இருந்துவரும் தகவல்களையும் (sensory cortex) எமது உடலின் பாகங்களின் நகர்வுகளைக் கட்டுப்படுத்தும் பகுதியில் இருந்து வரும் தகவல்களையும் (motor cortex) ஒன்றிணைத்து நாம் இருக்கும் இடத்துக்கும் நமது உடலுக்கும் (space -body) உள்ள தொடர்புகளை உணர்த்துவது. இவ்வாறு உணர்ந்த அறிவின் மூலம் நாம் எமது உடலின் நகர்வுகளைத் திட்டமிடுவதற்கும் மற்றும் வெளியில் உள்ள பொருட்களுக்கும் எமது உடலுக்கும் இடையில் இருக்கும் தொடர்புகளை உணர்ந்து கொள்வதற்குமாக இந்த ஒன்றிணைக்கும் பகுதி செயற்படுகின்றது.

மூளையில் உள்ள புலன்களில் இருந்துவரும் தகவல்களை ஆராயும் பகுதிகளிலோ அல்லது உடல் உறுப்புகளை இயக்கும் பகுதிகளிலோ பாதிப்புகள் ஏற்பட்டால் அவற்றின் விளைவுகளை நேரடியாக நோயாளிகளில் அவதானிக்க முடியும். உதாரணமாக stroke காரணமாக மூளையில் உடல் உறுப்புகளை இயக்கும் பகுதி பாதிக்கப்படுமாயின் நோயாளியின் ஒரு பக்கம் பாதிக்கப்பட்டுவிடும். மேலே குறிப்பிட்ட மூளையில் இருக்கும் ஒருங்கிணைக்கும் பகுதிகளில் ஏற்படும் பாதிப்புகள் மிகச் சிக்கலான நோய்க்குறிகளை இலகுவாக அடையாளம் காணமுடியாதவாறு உருவாக்குகின்றது. மூளையில் இருக்கும் ஒருங்கிணைக்கும் பகுதிகளில் முக்கியமான ஒரு பகுதி temporo-parieto-occipital junction. இதனை TPO அல்லது PTO junction எனச் சுருக்கமாக குறிப்பிடுவார்கள். இந்தப் பகுதிகளில் ஏற்படும் பாதிப்புகள் உடல் சார்பாக வெளியே இருக்கும் பொருட்களின் அளவுகளைச் சரியாகக் கணிக்க முடியாத ஒரு நிலைமையினை நோயாளிகளுக்கு உருவாக்கிவிடும். உதாரணமாக வெளியே இருக்கும் பொருட்கள் உடலை விட மிகப் பெரிதாகவோ சிறிதாகவோ தென்படும். AIWS நோய்க்குறி உள்ளவர்களில் பலருக்கு அவர்கள் மூளைகளில் இருக்கும் TPO junction பகுதி பாதிக்கப்பட்டிருப்பதினை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த பாதிப்புகளால் இவர்களால் வெளியே இருக்கும் பொருட்கள் தொடர்பாகச் சரியான விம்பத்தைக் காட்டமுடியாமல் சில வேளைகளில் அவதிப்படுகின்றனர் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

உண்மையில் AIWS நோய்க்குறி என்பது பலவிதமான மனக் குழப்பங்களை நோயாளிகளுக்கு உருவாக்கும் ஒரு நோய்க் குறி. நோயாளிகளின் நோய்க்குறிகளுக்கு ஏற்ப மூளையின் வேறு வேறு பாகங்களில் ஏதாவது பாதிப்பு ஏற்பட்டிருக்கக் கூடும். இருந்தும் இந்த வகையான நோய்க்குறிகள் ஆய்வாளர்களுக்கு ஒரு உண்மையினைப் புலப்படுத்துகின்றது. வெறும் புலன்களில் இருந்து வரும் தகவல்களை மட்டும் வைத்து மூளை வெளியுலகம் தொடர்பான ஒரு விம்பத்தை எமது மூளையில் உருவாக்குவதில்லை. மாறாக, மூளையில் இருக்கும் பல பாகங்கள் வலைப்பின்னலாக ஒன்றிணைத்து வெளியிருக்கும் உலகினை யதார்த்தமாகக் கட்டியெழுப்புகின்றன.

சிறு வயதில் உயிரியல் கல்வியில் Homeostasis அதாவது உடல் சமநிலைமை பற்றி பல வாசகர்கள் படித்து அறிந்திருப்பீர்கள். அதாவது எமது உடலின் இயக்கத்துக்கு குறிப்பிட்ட உடல் வெப்பநிலை, அமுக்கம், குருதியின் அமிலத் தன்மை (pH), ஒக்ஸிஜினின் அளவு போன்ற சகலதும் சரியான அளவில் உடலில் இருக்கும்போதே உடல் ஆரோக்கியத்துடன் இயங்கும். இதே போல மூளையில் இருக்கும் புலன்களில் இருந்துவரும் தகவல்கள் வருவதும், வரும் தகவல்களை ஆராய்வதற்காக மூளைக் கலங்கள் தயாராக இருப்பது ஒரு சமநிலை. புலன்களில் இருந்து தகவல்கள் வரும்போது இந்தத் தகவல்களின் அடிப்படையில் எமது உடல் சார்பாக

வெளியுலகம் தொடர்பாக ஒரு விம்பத்தை மூளை கட்டியெழுப்புகின்றன. குறிப்பிட்ட ஒரு புலனில் இருந்து தகவல்கள் உதாரணமாக பார்வைப் புலனை இழந்த ஒருவரின் கண்கள் எதோ ஒரு நோய் காரணமாகவோ அல்லது விபத்து காரணமாகவோ ஒளிகளை உள்வாங்கும் தன்மையினை இழந்துவிட்டதனால் பார்வைத் திறனை இழந்திருப்பார், ஆனால் கண்களில் படும் ஒளிக்கதிர்களை ஆராயும் அவரது மூளையில் இருக்கும் கலங்களாகிய நியூரோன்கள் எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாமல் உயிர்ப்புடன் இருக்கும். இவ்வாறான கலங்கள் கண்களில் இருந்து எதாவது ஒளிக் கதிர்கள் வருகின்றனவா எனத் தொடர்ந்து தேடிக்கொண்டே இருக்கின்றன. உதாரணமாக நாம் வானொலிப்பெட்டி ஆன்டெனாவைத் திருப்பித் திருப்பி சமிக்கைகளைத் தெளிவாகப் பெற முயல்வதுபோல எமது மூளையில் உள்ள ஒளிகளை ஆராயும் பகுதியும் செயற்படுகின்றது. வானொலிப் பெட்டிகளில் சிலவேளைகளில் வானொலிப் பெட்டியினுள் இருக்கும் இலத்திரனியல் பாகங்களே அர்த்தமில்லாத சத்தங்களை (random noise) ஏற்படுத்துவது போல, CBS நோய்க்குறி உள்ளவர்களின் மூளைகளில் இருக்கும் ஒளிக்கதிர்களை ஆராயும் பகுதியும் தானாகவே சில வேளைகளில் மாயத் தோற்றங்களை உருவாக்குகின்றது. இதுவே CBS நோய்க்குறி வருவதற்கான காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

வியக்கத்தக்க வகையில், எந்தவிதமான பார்வைக் குறைபாடு இல்லாத சாதாரணமாக மனிதர்களைக்கூட அவர்களது கண்களை மூடி ஒளி புகாத கருப்புத் துணிகளினால் மறைத்துச் சில நாட்களுக்கு வைத்திருப்போமாயின் பலருக்கு CBS நோய்க்குறி போன்ற அனுபவங்கள் ஏற்படுகின்றன. இதே போல தன்னந்தனியாக வெளியுலகே தெரியாத அறையினுள் அடைக்கப்படும் சிறை கைதிகளும் CBS நோய்குறியினுள் குறிப்பிடப்படும் மாயத் தோற்றங்களைக் காணுகின்றனர். இதனை ‘கைதிகளின் சினிமா’ (Prisnor’s cinema) என்றழைக்கின்றனர். CBS போன்ற நோய்க்குறியினைக் குணப்படுத்துவதற்கு மருந்துகள் ஒன்றும் இதுவரை இல்லை. ஆனால் இந்த நோய்க்குறிகளின் காரணங்களை நோயாளிகளுக்கு விபரிப்பதன் மூலம் நோயாளிகளும் இந்த மாய தோற்றங்கள் பற்றிப் புரிந்து வாழ்வதற்கு பழகிக்கொள்கின்றனர். மாய தோற்றங்கள், மாய ஒலிகள் மட்டுமல்லாது போரில் கைகளின் அல்லது கால்களின் ஒரு பகுதியினை இழந்த இராணுவ வீரர்கள் அவர்கள் இழந்துபோன உறுப்புகளிலிருந்தே அதாவது உடலில் இல்லாத உறுப்புகளில் இருந்தே வலிகள், உளைவுகள் போன்ற அபூர்வமான உணர்வுகளைத் தோற்றுவிக்கும் நோய்குறியினைப் பெறுகின்றார்கள். இதனை phantom limbs என அழைக்கின்றனர். இவைபற்றி புகழ்பெற்ற நரம்பியல் ஆய்வாளர், மருத்துவர், பேராசிரியருமான V.S. இராமச்சந்திரன் அவர்கள் PHANTOMS IN THE BRAIN எனும் புத்தகத்தில் விபரமாக எழுதி இருக்கின்றார்.

மேலே குறிப்பிட்ட நோய்குறிகள் நோயாளிகளின் இயல்பான வாழ்வைப் பெரும்பாலும் பாதிப்பதில்லை. ஆனால் பல நோயாளிகள் தமக்குத் தோன்றும் பலவிதமான மாய உணர்வுகளை, முழுமையாக அவை மாயை என்று புரிந்து கொள்ளாமையினால் வாழ்வில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக மனச்சிதைவு (Schizophrenia) போன்ற நோய் உடையவர்களின் வாழ்வு மிகுந்த சிக்கலுக்கு உள்ளாகின்றது.

ஜோசேப்புக்கு தான் எதற்காக இந்த மருத்துவமனைக்கு வந்துசேர்ந்தான் என்பது புரியவில்லை. அவன் ஒரு உயிரைக் காப்பாற்ற முயற்சித்தான். ஆனால் அவனைப் பொலிசார் இந்த மருத்துவமனையில் அனுமதித்துவிட்டனர். இரண்டு நபர்கள் யாரோ ஒருவனைக் கொலை செய்ய திட்டமிடுவதனை ஜோசப் கேட்டிருந்தான். இவர்கள் யார் என்றோ அல்லது யாரைக் கொலை செய்ய திட்டமிடுகின்றனர் என்பதுகூட ஜோசப்புக்கு தெரியவில்லை. இறுதியாக இந்தக் கொலையினைச் செய்பவர்களில் ஒருவன் இதனை நாளை இரவுக்கு முதல் செய்து முடித்துவிட வேண்டும் என்று கூறியதுகூட ஜோசேப்புக்கு தெளிவாகக் கேட்டது. இந்த கொலையினைத் தடுப்பதற்கு ஒரே வழி போலீசை நாடுவதுதான் என்று முடிவெடுத்து அவர்களிடம் தான் கேட்டவற்றை எடுத்து கூறினான். அவர்கள் அவன் கூறிய யாவற்றையும் விபரமாகப் பதிவு செய்துகொண்டனர். அத்துடன் அதனை முழுமையாக விசாரிப்பதாகவும் உறுதி கூறினார். அது மட்டுமல்லாமல் ஜோசெப்பை அருகில் உள்ள மருத்துவ மனையின் அவசர காலச் சிகிச்சை பகுதியில் அனுமதித்தும் இருந்தனர். அவசர காலச் சிகிச்சைப் பகுதியில் கடமையாற்றிய மருத்துவர் ஜோசெப்பை ஒரு மன நல மருத்துவர் பரிசோதிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்த சம்பவத்திற்கு முன்னரே ஜோசெப்பின் நண்பர்களும் உறவினர்களும் கூட ஜோசப்பை ஒரு மன நல மருத்துவரினை நாடும்படி ஆலோசனை வழங்கி இருந்தனர். ஆனால் அவர்கள் ஒருவரும் தான் சொல்லும் உண்மைகளை உணருவதற்குத் தயாராக இல்லை என ஜோசப் நம்பியிருந்தான். மற்றவர்களுக்குத் தெரியாத பல உண்மைகள் தனக்கு மட்டுமே தெரியும் என ஜோசப் நம்பியிருந்தான். ஏனெனில் அவனுக்கு யாரோ ஒருவர் காதுக்குள் சகலதையும் கூறிக்கொண்டே இருக்கின்றார். அவர் யார் என்பது ஜோசப்புக்குத் தெரியாது, ஆனால் தனது ஏழாவது அறிவின் மூலமாகத் தனக்கு இந்த ஒலிகள் கேட்பதாக ஜோசப் நம்பினான். ஜோசப் ஒரு அழகிய இளம் வாலிபன். மற்ற இள வயதினர்கள் போலவே உடைகள் அணிவது, வீடியோ கேம் விளையாடுவது போலவே அவனது வாழ்வும் நகர்ந்து கொண்டிருந்தது. அவனது பதின்மவயதுகளில் அவனது காதுகளில் ஒரு வயோதிபரின் அடைத்த குரலில் தெளிவில்லாத குரல்கள் கேட்க தொடங்கின. ஒரு கட்டத்தில் இந்தக் குரல்கள் அவனது நிம்மதியினைக் குலைத்தது, இந்த மன அழுத்தத்தில் இருந்து விடுபட அவனது இளம் வயது நண்பர்களில் ஒருவன் அவனைக் கஞ்சா புகைக்கும்படி ஆலோசனை வழங்கி இருந்தான். அவன் கஞ்சா புகைக்கத் தொடங்கிய பின்னர் அவனுக்கு இந்தத் தெளிவில்லாத குரல்கள் கேட்பது குறைந்துவிட்டது, பதிலாக மிகத் தெளிவான குரலில் இப்போது அந்தக் குரல்கள் பேசத் தொடங்கி விட்டன. அவற்றை உண்மை என ஜோசெப்பும் நம்பிவிடுவான், அது மட்டுமல்லாமல் அந்தக் குரல்களுடன் தனிமையில் உரையாடவும் தொடங்கி விட்டான், இதனை அவதானித்த அவனது குடும்பத்தினரும் நண்பர்களும் அவனை ஒரு மருத்துவரிடம் செல்லும்படி வற்புறுத்தினர். ஆனால் அவன் அதற்குத் தயாராக இல்லை.

மாயமாக யாரோ பேசுவது போல ஒலிகள் கேட்பது, அவ்வாறு கேட்டவற்றை உண்மையென நம்பி அந்தக் குரல்களுடன் உரையாடுவது, செயற்படுவது போன்ற நிலைமையினை, மனச்சிதைவு (Schizophrenia) நோய்க்கூற்றின் அடையாளமாகவே பார்க்கப்படுகின்றது. மனச்சிதைவு நோய் வருவதற்குப்

பல காரணங்கள் இருக்கலாம் என மூளை நரம்பியல் ஆய்வாளர்கள் நம்புகின்றனர். பிரசவ காலங்களில் ஏற்படும் தொற்று நோய்களின் காரணமாகத் தாய்மார்களின் உடலினுள் இருக்கும் முக்கிய உறுப்புகளில் வீக்கங்கள் (inflammation) காணப்படுவதால் மூளையின் செயற்பாட்டிற்கு தேவையான முக்கிய நொதியங்கள் இதனால் பற்றாக்குறையாகி விடுகின்றன. ஆதலால் மனச்சிதைவு நோய் ஏற்படுகின்றது. அதுமட்டுமின்றி விபத்தின் காரணமாக தலையில் ஏற்பட்ட காயங்கள், மூளையின் வளர்ச்சியினைத் தீர்மானிக்கும் மரபணுக்களில் உள்ள குறைபாடுகள், மூளை கலங்களுக்கு இடையில் இருக்கும் தொடர்புகள் உறுதியாக இல்லாமல் இருத்தல் போன்று இன்னும் பல காரணங்களால் மனச்சிதைவு நோய் ஏற்படுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அடிப்படையில் மனச் சிதைவு நோய்க்குறி, நோயாளிகளின்களின் மனத்தில் 'நான்' என்ற அடையாளத்தினையே சிதைத்துவிடுகிறது. இந்த நோயாளிகள் தங்கள் சிக்கலான மன நிலைமையை உணர்ந்து, தகுந்த மருத்துவ உதவியினை நாடுவதற்கு இதுவே தடையாக இருக்கின்றது.

ஆப்பிரிக்கா கண்டத்தின் எங்கோ ஒரு மூலையில் உருவான மனித இனம், இன்று இந்த பூமிப்பந்தின் மேற்பரப்பு முழுவதும் பரவி விரிந்த ஒரு உயிரினமாக வெற்றிநடை போடுவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்று எம்மையே நாம் அறியும் உணர்வு. அதாவது தன்னிலை அறிதல் (self-awareness). இந்த உணர்வு நவீன மனிதர்களின் (Homo sapiens) முன்னோர்களான Homo erectus காலத்திலேயோ அதற்கு முந்திய காலங்களிலேயோ உருவாகி இருந்திருக்கலாம். தன்னிலை அறியும் உணர்வு மனித மனங்களில் படிப்படியாக வளரும் ஒரு உணர்வுநிலை. பிறந்த குழந்தை 6-7 மாதங்களில் தான்வேறு தனது தாய் இன்னொருவர் என்பதனை உணரத் தொடங்குகின்றது. இதனால்தான் இந்த காலகட்டத்தில் தாயிடம் இருந்து பிரிந்து இருக்கும்போது குழந்தை தனிமையில் இருப்பதாக உணர்ந்து குழப்பமடைந்து அழத் தொடங்குகின்றது. குழந்தைகள் பிறந்து பதினெட்டு மாதங்களில் தாம் யார் (self recognition) என்பதனை அடையாளம் கண்டுகொள்ளத் தொடங்குகின்றனர். கண்ணாடியில் தமது உருவத்தை அடையாளம் கண்டுகொள்கின்றனர். கண்ணாடியில் தெரிவது தனது உருவம் கண்ணாடிக்கு பின்னால் யாரும் இல்லை என்பதனையும் புரிந்து கொள்கின்றனர். இவ்வாறு தாம் யார் என்பதனை(self recognition) அடையாளம் காணும் அறிவில் இருந்து படிப்படியாக மூளையின் தொழிற்பாடு விருத்தியடைந்து இரண்டரை - மூன்று வயதளவில் தாம் யார் என்ற உணர்வு (self awareness) உருவாகின்றது. இந்த தன்னை உணரும் நிலைமையை அடைவதற்கு மூளையின் முக்கிய பாகங்களில், குறிப்பாக இன்சுலா (Insula), முன்புறணி (Prefrontal cortex) மற்றும் உடல் உறுப்புகளை இயக்கும் பகுதியாகிய Motor Cortex போன்ற பாகங்கள் சீராக விருத்தி அடைவது மட்டுமல்லாமல் அவற்றிற்கு இடையில் இருக்கும் மூளைக் கலங்களுக்கு இடையில் தகுந்த இணைப்புகள் உருவாகுவது அவசியமாகின்றது.

நான் இங்கே இருக்கின்றேன் வெளியே இருக்கும் உலகம் அங்கே இருக்கின்றது. நான் எனது புலன்கள் மூலம் வெளி உலகை உணர்வது புறம்(exteroceptive) சார்ந்த உணர்வு. இந்த வெளி உலகம் தொடர்பாக என் மனதில் எழும் உணர்ச்சிகள், நினைவுகள் யாவும் அகம்(interoceptive) சார்ந்த உணர்வு. எவ்வாறு வெளியுலகம் வேறு நான் வேறு என்று உணர்கின்றேனோ அதே போல நான் வேறு, சக மனிதர்கள் வேறு. இந்தக் கட்டுரையினை keyboardல் எனது கைகள் தான் type பண்ணுகின்றன. எனது நடவடிக்கைகளுக்கு நானே பொறுப்பு. வேறு ஒருவர் type பண்ணுவதற்காக எனது கைகளை இயக்கவில்லை. எமது வாழ்வின் இயங்கியலுக்கு இந்த உணர்வு மிக முக்கியமான ஒன்று. இவை இயல்பாகவே செயற்படுபவதினால் இவற்றைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்ப்பதே இல்லை. உதாரணமாக எமக்குள்ளே நாமே பேசிக்கொள்வது நம் எதிர்காலம் தொடர்பாக சிந்திப்பதற்கும் திட்டமிடுதலுக்கும் அவசியமான ஒன்று. வேறு யாரோ வந்து எம்முடன் பேசவில்லை நாமே எமக்குள்ளே பேசிக்கொள்கின்றோம். இந்த கட்டுரையினை வாசிக்கும் நீங்கள் இந்தக் கட்டுரை தொடர்பாக ஒரு உரையாடலை உங்கள் உள் மனத்தில் (அகத்தில்) நடத்தக்கூடும். இந்த உரையாடல் உங்கள் சொந்த உரையாடல். வேறு ஒருவர் வந்து உங்களுடன் பேசவில்லை. உங்கள் எண்ணங்கள், சிந்தனைகள், கனவுகள் யாவும் உங்களுக்குச் சொந்தமானவை. இதனை உணர்வதற்கு எமது மூளையில் உள்ள கலங்கள் மற்றும் அவற்றிற்கு இடையில் இருக்கும் இணைப்புகள் ஆரோக்கியமாக இருத்தல் அவசியம். மனச்சிதைவு நோயுடையவர்கள் அவர்கள் உணர்வுகள், உணர்ச்சிகள், ஏன் அவர்கள் செயற்பாடுகள் கூட அவர்களுக்குச் சொந்தமானதல்ல. அவை வேறு ஒருவருடையது என்று எண்ணுகின்றார்கள். இதுவே இந்த நோய்க்குறிக்கு முக்கிய காரணம் என்று மூளை - நரம்பியல் வல்லுநர்கள் நம்புகின்றனர்.

தன்னிலை (self-awareness) அறியாத ஒரு அவல நிலைமை. மனச் சிதைவு நோய் பற்றி வெளிவந்த முக்கியமான நூல்களில் ஒன்று. அறுபதுகளில் வெளியான 'The Divided Self' அதாவது பிளவுபட்ட ஆத்மா. இதனை எழுதியவர் R.D. Laing எனும் மன நல மருத்துவர். R.D. Laing அவர்களே மனச்சிதைவு நோயினால் பாதிப்புக்கு உள்ளானவர். தனது அனுபவங்களை மற்றவர்கள் விளங்கிக்கொள்வதில் உள்ள சிக்கலைப் பின்வருமாறு விபரிக்கின்றார் 'உண்மையில் 'நான்' என்கின்ற சுய அடையாளத்தை இழக்காத ஒருவருக்கு, அவரது அடையாளமே அவரோடு எப்போதுமே ஒன்றாக பிணைந்து இருக்கும். சாதராண ஒருவருக்கு, நான் என்ற சுயஉணர்வையே இழந்து நான் எனும் அடையாளத்தினைப் பல குழம்பிய வடிவங்களில் எதிர்கொள்ளும் என்னை போன்றவர்களின் மன நிலைமைகளை விளங்குவதென்பது மிகவும் சிக்கலான ஒன்று. அடுத்த தடவை ஏதோ சந்தியில் உரத்து தனக்குளே பேசிக்கொண்டிருக்கும் மனச் சிதைவு நோயாளியினைக் கண்டால் முகம் திருப்பிக் கொள்ளாதீர்கள். அது சிதைவடைந்த ஆத்மாவுடன் அல்லல்பட்டு உழலும் ஒரு மனித மனதின் அவல நிலை. ஒதுக்கப்படவேண்டிய மனிதனில்லை, அன்புள்ள ஆத்மாக்களால் அணைக்கப்படவேண்டிய உள்ளம்.

**மேலும் வாசிக்க:**

- A Sense of Self by Veronica O'Keane
- Phantoms in the Brain by V.S. Ramachandran & Sandra Blakeslee
- Hallucinations by Oliver Sack
- Bizarre by Marc Dingman



kugan.s@thaiveedu.com




இருபதாம் நூற்றாண்டில் சமூக விஞ்ஞான மெய்யியலுக்கும் முறையியலுக்கும் மார்க்சியத்தின் பங்களிப்பு முக்கியமானது. மார்க்சியம் ஒரு மெய்யியல் (Philosophy) என்ற வகையிலும், சமூகக் கோட்பாடு என்ற வகையிலும் சமூக விஞ்ஞான முறையியலுக்குத் தனித்துவமான பங்களிப்பை வழங்கியது. மார்க்சியக் கோட்பாட்டை நிறுவியவர்களான மார்க்சும் எங்கெல்சும் 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். அவர்கள் இருவரும் சமூக விஞ்ஞான முறையியல் பற்றிய பெருவிவாதம் ஐரோப்பாவில் நடைபெற்றபோது உயிருடன் இருக்கவில்லை. ஆனால் 20-ம் நூற்றாண்டில் வாழ்ந்த மார்க்சிய புலமையாளர்கள் (Academic Marxists) இவ்விவாதத்தில் பங்கு கொண்டு, நேர்க்காட்சி வாதத்திற்கு (Positivism) மாற்றீடான மார்க்சீயக் கொள்கை நிலைப்பாட்டினை முன்வைத்தனர். இவர்களின் பங்களிப்பினால் மார்க்சிய சமூக விஞ்ஞான முறையியல் செழுமை பெற்றது. இருபதாம் நூற்றாண்டில் நேர்க்காட்சிவாதத்திற்கு மறுப்பாக அமையும் வேறுபல முறையியல்களும், மார்க்சிய சமூக விஞ்ஞான முறையியல் வளர்ச்சிபெற்ற காலத்தில், சமாந்தரமாக வளர்ச்சி பெற்றன. இவையாவற்றையும் பின்-நேர்க்காட்சிவாத முறையியல்கள் (Post-Positivist Methodologies) என்ற பொதுப்பெயரால் குறிப்பிடுவர். பின் நேர்க்காட்சிவாத முறையியல்களில் முக்கியமானவை சில பின்வருவன.

- தோற்றப்பாட்டியல் (Phenomenology)
- பொருள்கோடலியல் (Hermeneutics)
- இருத்தலியம் (Existentialism)
- பெண்ணியவாதம் (Feminism)
- விமர்சனக்கோட்பாடு (Critical theory)
- மார்க்சியம்

மேற்கூறியவற்றுள் இறுதியாகக் குறிப்பிட்டுள்ள மார்க்சியம் பின்-நேர்க்காட்சிவாத சிந்தனைப் பிரிவுகளில் ஒன்றாகவே கருதப்படுகிறது. மார்க்சிய அறிவாராய்ச்சியியலும், சமூக விஞ்ஞான முறையியலும் பற்றியதான இத்தமிழ்க்கட்டுரை பேராசிரியர் ஜயதேவ உயன்கொட எழுதிய Social Research: Philosophical and Methodological Foundations என்னும் நூலின் 13-வது அத்தியாயத்தினைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டதாகும். குறித்த அத்தியாயத்தின் ஆங்கிலத்தலைப்பு 'Post Positivist Social Science: Marxism and Social Science Methodology' என அமைந்துள்ளது.

## சூழமைவு (Context):

20-ம் நூற்றாண்டில் அறிவாராய்ச்சியல் (Epistemology) முறையியல் (Methodology) ஆகிய இரண்டு விடயங்களிலும் சமூக விஞ்ஞானங்களிற்கு மார்க்சியம் செய்த பங்களிப்பு நிகழ்ந்த சூழமைவை வரலாற்று நோக்கில் உயன்கொட அவர்கள் முதலில் விளக்கிக் கூறியுள்ளார். மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகிய இருவரும் தொழிலாளி வர்க்கத்தின் செயற்பாட்டாளர்களாக ஐரோப்பாவைக் களமாகக் கொண்டு செயற்பட்டனர். அவரது ஆதரவாளர்களான செயற்பாட்டாளர்கள் பலர் அந்நூற்றாண்டில் அமெரிக்காவிலும் இருந்தனர். மார்க்சும் எங்கெல்சும் அவர்கள் வாழ்ந்த காலத்தில் செயற்பாட்டாளர்கள் (Activists) என்பதைவிட மெய்யியலாளர்கள், அரசியல் பொருளியலாளர்கள் (Political Economists), சமூகக் கோட்பாட்டாளர்கள் (Social Theorists) சிந்தனையாளர்கள் ஆகிய தகுதிகளையும், மதிப்பையும் உடையவர்களாகவும் போற்றப்பட்டனர். 20-ம் நூற்றாண்டில் மார்க்சியம் பல்கலைக் கழகங்களின் புலமைத்துறைகளுள் புகுந்து தனக்கோர் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதன் பயனாக புலமைத்துறை மார்க்சியம் (Academic Marxism) 20-ம் நூற்றாண்டில் வளர்ச்சி பெற்றது. பல்கலைக் கழகங்களிலும், ஆய்வு நிறுவனங்களிலும் பணியாற்றிய மார்க்சியப் புலமையாளர்கள் ஆராய்ச்சியிலும், கோட்பாட்டு உருவாக்கத்திலும் (Research and Theory Building) தமது பங்களிப்பை நல்கினர். புரட்சிக்குப் பிந்திய சோஷலிச சமூகங்கள் (Post - Revolutionary Socialist Societies) எனப்படும் சோவியத் ரஷ்யா, கிழக்கு யேர்மனி, செக்கோசிலாவாக்கியா போன்ற நாடுகளில் மார்க்சியம் உத்தியோக பூர்வமான கருத்தியலாக (Official Ideology) ஆகியது. இதனால் அந்நாடுகளின் பல்கலைக் கழகங்களில் மார்க்சியம் கற்பிக்கப்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சியின் கல்விக் கூடங்களிலும் (Party Schools) மார்க்சியம் கற்பிக்கப்பட்டது, ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முதலாளித்துவ நாடுகளின் பல்கலைக்கழகங்களிலும், மார்க்சியம்

பாடவிதானத்திற்குள் புகுந்தது. இம்முதலாளித்துவ நாடுக ளில் பல்கலைக்கழக மட்டத்தில் மார்க்சியத்திற்கு எதிர்ப்பும் மார்க்சிய ஒவ்வாமையும் பலமானதாக இருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. புலமைத் துறைகளில் நேர்க்காட்சி வாதம் வேர்கொண்டிருந்த இடங்களில் எல்லாம் மார்க்சிய எதிர்ப்புப் பலமானதாக இருந்தது.

ஆயினும், மெய்யியல், அரசியல் பொருளாதாரம் (Political Economy), வரலாறு ஆகிய துறைகள் மார்க்சியத்திற்கு இடம ளித்து ஏற்புடமை வழங்கின. இத்துறைகளையடுத்து அரசி யல் விஞ்ஞானம், சமூகவியல், மானிடவியல் இலக்கியம், பண் பாட்டுக் கல்வி ஆகிய துறைகளின் புலமையாளர்களால் மார்க்சியம் விரும்பி ஏற்கப்பட்டது. இவ்வாறு விரும்பி ஏற்ற புலமையாளர்கள், சமூக விஞ்ஞானங்களிலும் மனிதப் பண்பி யல் கல்வியிலும் செல்வாக்குச் செலுத்திவந்த மையநீரோட்ட (Main Stream) நோக்கு முறைகளில் அதிருப்தியடைந்தவர்க ளாக இருந்ததோடு, மார்க்சியத்தை பதிலீடான சிறந்த முறை யியலாக ஏற்கலாயினர். ஆயினும் மார்க்சிய சார்புடைய ஆய் வாளர்கள் எண்ணிக்கையில் சிறிய தொகையினராகவே இருந்தனர்.

மேற்கு நாட்டுப் பல்கலைக்கழகப் பண்பாட்டில் (Western University Culture) முதன்மை பெறாத, சிறிய குழுவொன்றின் புலமை ஆர்வங்களை வெளிப்படுத்தும் போக்காகவே மார்க் சியம் இருந்து வந்தது. அதுவொரு சிறுமரபு (Minor Tradition) என்னும் வகையினதாக இருந்தது. மார்க்சியம் ஒரு சிறுமர பாக இருந்த போதும் மார்க்சிய அறிஞர்களின் புலமைத்து றைப் பங்களிப்பு ஆழமும் அகலமும் மிக்கதாக அமைந்த மையால், 20-ம் நூற்றாண்டில் மார்க்சியப் புலமையாளர்கள் பலர் செல்வாக்குடையவர்களாக விளங்கினர். அவர்கள் சமூக விஞ்ஞான முறையியலுக்கு வழங்கிய பங்களிப்பு புறந் தள்ள முடியாததொன்றாக அமைந்துள்ளது. குறிப்பாக அனு பவவாதம் நேர்க்காட்சி வாதம் என்பனவற்றிக்கு எதிர்ப்பான மார்க்சிய முறையியல் புலமைத்துறைகளில் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது. 1960-களுக்குப் பிற்பட்ட காலத்தில் மேற்கு நாடுகளிலும், மூன்றாம் உலக நாடுகளிலும் மார்க்சியத்தால் ஆதர்சம் பெற்ற ஆய்வுகள் பெரும் எண்ணிக்கையில் வெளி வந்துள்ளன.

## வரலாற்றுப் பின்புலம்:

20-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மார்க்சியப் புலமையாளர் கள் மெய்யியல், முறையியல் என்ற இரு விடயங்கள் சார்ந்த பிரச்சினைகளில் கூடிய அளவு கவனம் செலுத்தினர். 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த மார்க்ஸ் மெய்யியலாளராகவே தமது இளமைக்கால அறிவுத்துறை வாழ்க்கையை ஆரம்பித்தார், 1850-களில் அவர் மெய்யியல் என்ற துறையைக் கைவிட்டு அரசியல் பொருளியல் என்ற இரு துறைகளிலும் முழுக்கவ னத்தையும் செலுத்தத் தொடங்கினார். மார்க்சினால் இடைந டுவில் கைவிடப்பட்ட மெய்யியலை 20-ம் நூற்றாண்டின் முற்ப குதியில் மேற்கு நாட்டின் மார்க்சிய சிந்தனையாளர்கள் முன் னிருத்தினர், இதனால் பிறந்ததே 'மேற்கு மார்க்சியம்' (Western Marxism) என்ற கருத்தை பெரி அண்டர்சன் தமது Considerations on Western Marxism (1975) என்ற நூலில் தெளி வாக எடுத்துக் கூறியிருப்பதை ஐயதேவ உயன்கொட குறிப் பிடுகிறார்.

ஐரோப்பிய புலமைத்துறை மார்க்சியம் (Academic Marxism), அரசியல், பொருளியல் என்ற இரண்டையும் கைவிட்டு, முழுமையாக மெய்யியலில் மட்டுமே முழுக்கவனத்தையும் செலுத்தியதென்றும், இந்தக் கவனத்திருப்பத்திற்கான முதன் மைக் காரணம் மேற்கு மார்க்சியத்தின் விசாரணை மார்க்சின் சிந்தனை எவ்வாறு உருவாக்கம் பெற்றது என்ற விடயம் பற்றி யதாகவே அமைந்தமை தான் என்றும் பெரிஅண்டர்சன் குறிப் பிட்டார். மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரும் இளமையில் ஹெகல், பெயர்பாக் (Feuerbach) என்ற இருவரதும் மெய்யியல் சிந்த னைகளால் கவரப்பட்டவர்களாய் இருந்தனர். அந்தக் கவர்ச்சி தற்காலிகமானது தான். அவர்கள் சிறிது காலத்தின் பின்னர் 1850-களின் தொடக்கத்தில் ஹெகலையும், பெயர்பாக்கை யும் கைவிட்டு முன்நகரத் தொடங்கினர். ஆனால் 20-ம் நூற் றாண்டு மார்க்சிஸ்டுகளுக்கு மார்க்சியத்தின் முறையியலை மெய்யியல் நோக்கில் நியாயப்படுத்தி அதற்கு விளக்கம் கொடுத்து அரண்சேரக்கும் தேவை இருந்தது. ஆகையால் அவர்களின் எழுத்துகள் மார்க்சிய முறையை தத்துவார்த்த நோக்கில் நியாயப்படுத்துதல் (Philosophical Defence of Marxist Method) அல்லது எதிரிகளின் வாதங்களை முறிய டித்து மார்க்சீயத்திற்கு அரண் சேர்த்தல் என்னும் நோக்குடை யனவாக அமைந்தன. மார்க்சிய முறை பற்றிய தொடக்க கால மெய்யியல் படைப்புகளில் ஒன்றாக லெனின் எழுதிய 'பொருள்முதல் வாதமும் அனுபவவாத விமர்சனமும்' (Materialism and Empirio - Criticism) என்னும் நூல் அமைந்தது. இந்நூல் 1909-ம் ஆண்டு வெளியானது. இதனைத் தொடாந்து, கார்ல் கோர்ஷ் (Karl Korsch) எழுதிய 'மார்க்சியமும் மெய்யிய லும்' (Marxism and Philosophy) என்னும் நூல் 1923-ல் வெளி யாயிற்று. அதே அண்டில் ஜோர்ஜ் லூகஸ் (George Lukacs) 'What is orthodox Marxism' என்னும் நூலை வெளியிட்டார். தொடக்க காலத்தில் வெளியான தத்துவார்த்த விமர்சன எழுத்துக்களில் மேற்குறிப்பிட்ட வி.ஐ. லெனின், கார்ல் கோஷ், ஜோர்ஜ் லூகஸ் ஆகிய மூவரின் நூல்களும் முக்கிய மானவை. 1970-களில் இத்தாலிய மார்க்சிஸ் அறிஞரான லூசியோ கொலத்தி (Lucio Colletti), லூயிஸ் அல்தூசர் என் னும் பிரான்ஸ் நாட்டின் மார்க்சிஸ்ட் என்னும் இருவர் (இத்தா லிய, பிரஞ்சு மொழிகளில்) தத்துவார்த்த விமர்சன நூல்களை எழுதினர். 1909 முதல் 1970-கள் வரை அறுபதுக்கும் மேற் பட்ட ஆண்டு காலத்தில் வெளிவந்த முக்கியமான நூல்கள் பல மார்க்சிய மெய்யியல், மார்க்சிய முறையியல் என்ற இரு விடயங்கள் சார்ந்தனவாக அமைந்தன.

லெனின் 'பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்' எனும் நூலை 1908-ல் எழுதி 1909-ல் பிரசுரித்தார். 20-ம் நூற் றாண்டில் புலமைத்துவ மார்க்சியத்தின் தொடக்கப் புள்ளி யாக இந்நூல் அமைந்தது. இந்நூல் மார்க்சிய மெய்யியல் முறை (Marxist Philosophical Method) பற்றிய விளக்கமாக வும், அதனை நியாயப்படுத்துவதாகவும் அமைந்தது. அக்கா லத்தில் ஐரோப்பா எங்கும் அனுபவவாதம் (Empiricism) செல்வாக்குடைய மெய்யியல் முறையாக இருந்தது. யேர்மனி

யில் அனுபவ வாதம் சமூகக் கோட்பாட்டாளர்களிடையே மிகுந்த செல்வாக்குடையதாக இருந்தது.

'மெதொடென்ஸ்றிற்' (Methodenstreit) என அமைக்கப்படும் விவாதத்திற்குரிய களமாக யேர்மனி விளங்கியது. இச்சொல் 'முறைகள் குறித்த சர்ச்சை' (Clash Over Method) என்னும் பொருள் உடையது. லெனினின் மேற்குறிப்பிட்ட நூல் கண்




டன முறையான விவாத நூலாகும். இந்நூலில் அவர் அனுபவ வாதிகள் மார்க்சியத்திற்கு எதிராகத் தொடுத்த கண்டனங்களுக்குப் பதில் வழங்கும் முறையிலான எதிர்வாதங்களை முன்வைத்தார். அனுபவவாதிகள் மார்க்சியத்தை அபௌதீகம் (Meta physics) பற்றிப் பேசும் தத்துவம் எனக் கண்டித்தனர். மார்க்சியத்திலிருந்து அபௌதிகத்தை அப்புறப்படுத்த வேண்டும் என்று அனுபவாதிகள் கூறினர். எர்னஸ்ட் மாக் (Ernst Mach) என்பவர் (1838 - 1916) செல்வாக்குமிக்க அனுபவாத மெய்யியலாளராவர். வியன்னா வட்டத்தைச் சேர்ந்தோர் எர்னஸ்ட் மாக் கருத்துக்களால் பெரிதும் கவரப்பட்டனர். எர்னஸ்ட் மாக் அவர்களின் ஆதரவாளர்கள் பலர் ரஷ்யாவிலும் இருந்தனர். மார்க்சியம் பூரணமான அனுபவாதம் அல்ல, அதில் அபௌதிகத்தின் கலப்பு உள்ளது என்பதே எர்னஸ்ட் மாக் அவர்களின் ஆதரவாளர்களின் கருத்தாகும். மார்க்சீய தத்துவம் புறநிலை யதார்த்தத்தின் (External Reality) இருப்பை ஏற்பது, அவ்வாறு ஏற்பது 'எமது புலன்கள் வழிப்பெறப்படும் அனுபவத்திற்கு அப்பால்' (Outside our pure Sensory Experience) புறஉலகு உள்ளது எனக் கூறுவதற்கு ஒப்பானது என அவர்கள் வாதிட்டனர்.

அனுபவாத மெய்யியல் புறநிலை யதார்த்தம் புலன்களால் அறியக்கூடியது. புலனறிவுக்கு எட்டாத யதார்த்தம் என ஒன்று இருக்க முடியாது என்ற கருத்தை வலியுறுத்தியது. இத்தகைய நிலைப்பாடு அனுபவவாதத்தின் தீவிர நிலைப்பாடு ஆகும். ரஷ்யாவின் மார்க்சிஸ்டுகளில் மென்செவிக் பிரிவினர் (Menshevik Wing) அனுபவவாதத்தின் தீவிர நிலைப்பாட்டை ஆதரித்தனர். போல்செவிக் பிரிவினர் மென்செவிக்குகளின் தீவிர அனுபவவாத நிலைப்பாட்டை எதிர்த்தனர். வி.ஐ. லெனினின் 'பொருள்முதல்வாதமும் அனுபவவாத விமர்சனமும்' நூல் எர்னஸ்ட் மாக் கருத்துகளை கண்டனம் செய்வதாக அமைந்தது. மார்க்சியத்தை அபௌதிகம் பற்றியது என நிராகரித்த மாக்கின் வாதங்களை அவருக்கு எதிராகத் திருப்பிய லெனின் மாக்கின் கருத்துகள் அபௌதிகம் ஆக இருப்பதைச் சுட்டிக்காட்டினார். லெனின் சுட்டிக் காட்டிய முக்கியமான கருத்து மார்க்சியம் ஒரு அனுபவவாத தத்துவமன்று, அது ஒரு பொருள்முதல்வாதத் தத்துவம் என்பதாகும் (Marxism is not an Empiricist, But a Materialist Philosophy) இவ்வுண்மையை அவர் மார்க்ஸ் எங்கெல்ஸ் இருவரதும் நூல்களில் இருந்து மேற்கோள் காட்டி வாதித்தார், ஐரோப்பாவில் முறையியல் (Methodology) தொடர்பாக நடைபெற்ற விவாதங்களில், லெனின் சுட்டிக் காட்டிய இந்த உண்மை மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும். அதாவது மார்க்சியம் ஒரு அனுபவவாத தத்துவமல்ல, அது ஒரு பொருள்முதல்வாத தத்துவம் என்பது, நேர்க்காட்சி வாதம் என்ற தத்துவத்தின் கருத்துமுதல்வாத வேர்களைச் சுட்டிக் காட்டிப் பொருள்முதல்வாத தத்துவமான மார்க்சியத்தில் இருந்து அதனை வேறுபடுத்த உதவியது. மார்க்சியத்தின் முறையியல் விவாதம் அனுபவவாதத்திற்கும். அகவாதத்திற்கும் (Subjectivism) இடையிலான விவாதமல்ல உண்மையில் அது பொருள்முதல்வாதத்திற்கும், கருத்துமுதல்வாதத்திற்கும் இடையிலான விவாதமாகும் என்பதை எடுத்துக் காட்டிய சிறப்பு லெனினின் 'பொருள்முதல்வாதமும் அனுபவாத விமர்சனமும்' என்னும் நூலுக்கு உரியதாகும்.

### மார்க்சியம் ஒரு விஞ்ஞானம்:

மார்க்சியம் அனுபவவாத தத்துவமல்ல, அது ஒரு பொருள்முதல்வாத தத்துவம். ஆகையால் மார்க்சிய முறையியல் விவாதத்தை அனுபவவாதம் எதிர் அகவாதம் (Empiricism vs Subjectivism) எனக் கூறுவது நேர்க்காட்சி வாதத்துடனான விவாதத்தை பிழையான திசையில் திருப்புவதாக அமைந்துவிடும். 19-ம் நூற்றாண்டில் மார்க்சிய முறையியல் உருவாக்கம் பெற்ற பொழுது அவ்விவாதம் பொருள்முதல்வாதம் எதிர் கருத்து முதல்வாதம் என்பதாகவே அமைந்தது என்பதைக் கவனித்தல் வேண்டும். ஆகையால் அனுபவாதம் எதிர் அகவாதம் என்பதில் இருந்து வேறான பிறிதொரு இருமைவாதமாகிய (Dualism) பொருள்முதல்வாதம் எதிர் கருத்துமுதல்வாதம் என்பதில் நாம் கவனம் செலுத்துதல் வேண்டும். மார்க்ஸ் பொருள் முதல்வாத தத்துவவாதி எனத் தன்னை அடையா

ளப்படுத்தினார். அவரது எழுத்துகளில் ஆங்கில நாட்டுப் பொருள் முதல்வாதம் (English Materialism) மீது அவருக்கு இருந்த கவர்ச்சியும் ஆர்வமும் வெளிப்படுகிறது. ஆங்கில நாட்டுப் பொருள்முதல்வாதம் ஹாப்ஸ் (Hobbes) ஊடாக பிரான்சிஸ் பேக்கனில் (Francis Bacon) ஆரம்பம் கொண்டது. மார்க்ஸ் எங்கெல்சுடன் இணைந்து எழுதிய 'புனிதக் குடும் பம்' (The Holy Family) என்ற நூலில் (1845) ஆங்கில நாட்டுப் பொருள் முதல்வாதம் குறித்த விமர்சனத்தைக் காணலாம். அப்பொருள்முதல்வாதம் இறையியல் சார்புடையது. அத னால் அது இறையியல் சார் குழப்பமான கருத்துக்களைக் கொண்டிருந்தது என மார்க்சும் எங்கெல்சும் மேற்படி நூலில் விமர்சனம் செய்திருந்தனர். அதன் இறையியல் குழப்பங்க ளோடு (Theological Confusions) கருத்துமுதல்வாதப் படுகு ழிகள் (Ideological Pitfalls), கணிதவியல் சூத்திரக் குறுக்கங் கள் (Mathematical Abstractions) என்பனவும் இணைந்து அதனைக் குழப்பம் மிகுந்த தத்துவமாக ஆக்கிவிட்டன என மார்க்சும் எங்கெல்சும் குறிப்பிட்டனர். ஆயினும் ஆங்கில நாட்டுப் பொருள்முதல்வாதத்தின் பகுத்தறிவுச் சார்பு (Rationalist Orientation) அவர்களால் நயந்து பாராட்டப்பட்டது.

மார்க்சும் எங்கெல்சும் பிற்காலத்தில் பொருள்முதல்வாதத் தத்துவத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட சமூகக் கோட்பாட்டை (Social Theory) உருவாக்குவதில் தமது முழுக் கவனத்தையும் செலுத்தினர். இப்பணியின் முதற்கட்ட வேலையாக ஹெகல், லுட்விக் பெயர்பக் (Ludwig Feurbach) ஆகிய இருவரின் கருத்துகள் மீதான அவர்களின் விமர்சனம் அமைந்தது. ஹெகல் யேர்மனியில் 18-ம் நூற்றாண்டில் செல் வாக்குமிக்க தத்துவஞானியாக விளங்கினார். மார்க்சின் இள மைக்கால அறிவியல் பயணம் ஹெகல் தத்துவத்தின் மீதான தீவிர ஆர்வத்துடன் தொடங்கியது. லுட்விக் பெயர்பக் (1804-1872) இடது சாரி ஹெகலியவாதியாக (Left Hegelian) விளங் கினார். மார்க்சும் பெயர்பக் போன்றே இடதுசாரி ஹெகலிய வாதியாக இருந்தார். மார்க்சும் எங்கெல்சும் தமது பொருள்மு தல்வாத தத்துவம் விஞ்ஞான பூர்வமானது எனவும் கருதினர்.

இயற்கை விஞ்ஞானங்களில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றங்க ளால் கவரப்பட்ட மார்க்சும் எங்கெல்சும் தமது பொருள்முதல் வாதத்தை இயற்கை விஞ்ஞான அடிப்படையில் அமைத்துக் கொண்டனர். மார்க்ஸ் டார்வினின், உயிரியல் பரிணாமக் கோட்பாட்டினை (Theory of Biological Evolution) ஒத்ததான சமூகப் பரிணாமக் கோட்பாட்டை நிறுவ வேண்டும், அதன் அடிப்படையில் தமது சமூகக் கோட்பாடு (Social Theory) அமைய வேண்டும் என விரும்பினார்.

மார்க்சியம் மனித சிந்தனை வரலாற்றில் ஒரு பெரும் திருப் பத்தை ஏற்படுத்தியுள்ளது என்ற கருத்தை உடையவரான எங்கெல்ஸ் மார்க்சியத்தை ஒரு விஞ்ஞானமாக வளர்ப்பதில் அக்கறை கொண்டிருந்தார். 1883-ல் மார்க்ஸ் காலமான போது, அவருக்கு அஞ்சலி செலுத்தும் உரையில் தனது தோழரின் பங்களிப்புப் பற்றி எங்கெல்ஸ் பின்வருமாறு குறிப்பிட்டார். 'உயிரியலில் இயற்கையின் பரிணாம வளர்ச்சி விதியை டார்-வின் கண்டுபிடித்துக் கூறியது போன்று, மார்க்ஸ் சமூகத்தின் பரிணாம வளர்ச்சியை விளக்கிக்கூறும் வரலாற்றுப் பொருள் முதல்வாத (Historical Materialism) விதிகளை கண்டுபிடித்தார்'.

மார்க்ஸ், வரலாற்றுப் பொருள்முதல்வாத விதிகளை மட்டு மன்றி உபரி மதிப்பு (Surplus Value) என்னும் மிக முக்கிய மான விதியையும் கண்டுபிடித்துக் கூறியதாகவும் எங்கெல்ஸ் மார்க்சிற்குப் புகழாரம் சூட்டினார். உபரிமதிப்பு (Surplus Value) பற்றிய எங்கெல்ஸ் கூற்று முக்கியமானது. உபரிமதிப் பைக் கண்டுபிடித்துக் கூறியதன் மூலம் 'முதலாளித்துவ உற் பத்தி முறையின் இயக்க விதியை (The Law of Motion of The Capitalist mode of Production) மார்க்ஸ் கண்டு பிடித் துக் கூறினார் என அவர் குறிப்பிட்டார். இக்கூற்றில் எங்-கெல்ஸ் பௌதிகவியலின் 'இயக்க விதி' (Law of Motion) என்ற உருவகத்தை உபயோகிப்பதைக் காணலாம். எங் கெல்ஸ் கூற்றையே மார்க்ஸின் மூலதனம் முதலாம் தொகுதி யின் முன்னுரையும் முற்கூட்டியே பிரதிபலித்தது.

தமது மூலதனம் (Capital) என்ற நூலின் இறுதி இலக்கு 'நவீன சமூகத்தின் பொருளாதார இயக்குவிதியை கண்டறிந்து வெளிப்படுத்துவதே' (To Lay Bare The Economic Law of motion of modern Society) என்று கூறியிருந்தார். மார்க்சியத் தின் விஞ்ஞானத்தன்மையை (Scientificity) எடுத்துக் காட்டு வதற்கு 'இயக்க விதி' என்பதை இன்னொரு சந்தர்ப்பத்திலும் எங்கெல்ஸ் உபயோகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மார்க்ஸ் காலமாகி இரு ஆண்டுகள் கழிந்த பின், அவரது 'லூயி போனப்பாட்டின் பதினெட்டாம் புருமயர்' நூல் 1885-ல் வெளிவந்தது. அந்நூலுக்கு எழுதிய முன்னுரையில் எங் கெல்ஸ் தனது தோழர் பற்றி பின் வருமாறு குறிப்பிடுகிறார். 'வரலாற்றின் இயக்கவிதி என்னும் பெருமைக்குரிய விதியை முதலில் கண்டுபிடித்தவர் மார்க்சே ஆவர் (It was precisely Marx who had first discovered the great law of motion of History)'. இவ்விடத்து அவர் பெருமைக்குரிய விதி எனக்குறிப் பிடுவது 'வரலாற்றுப் பொருள்முதல்வாதம்' என்னும் தத்துவத் தையேயாகும். மேற்படி கூற்றை அடுத்து வரும் வாக்கியம், சக்தியின் நிலைமாற்றம் பற்றிய விதி இயற்கை விஞ்ஞானத் தில் எந்தளவுக்கு முக்கியத்துவம் உடையதோ அந்த அள வுக்கு வரலாற்றுக்கு இந்த விதி முக்கியமானது. எங்கெல்ஸ் இவ்வாறாக விஞ்ஞானத்திற்கு கொடுத்த முக்கியத்துவத் தைச் சுட்டிக் காட்டும் விமர்சகர்கள், எங்கெல்ஸ் மார்க்சி யத்தை விஞ்ஞான மயப்படுத்த (Scientize Marxism) முனைந் தார் எனக் குற்றம் சாட்டினர். எங்கெல்ஸ் விஞ்ஞானங்களின் பகுத்தறிவுப் பார்வையையே 'விஞ்ஞானம்' என்ற சொல்லால் குறிப்பிட்டார். அவர் அனுபவவாதச் சார்பை அச்சொற்பிர யோகம் மூலம் குறிப்பிட்டார் எனக் கருதுவது தவறு.

மார்க்ஸ் பற்றிய எங்கெல்ஸ் கருத்தும் இத்தகையதே. மார்க்ஸ் புத்தொளி (Enlightenment) மரபின் பகுத்தறிவு நோக்கினை வரவேற்றாரேயன்றி அவர் நேர்க்காட்சி வாதம், அனுபவ வாதம் என்பனவற்றை ஆதரித்தவர் அல்லர் என்பதும் அவர் கருத்தாகும்.



தொடரும் ...

shanmugalingam@thaiveedu.com

# பாபநாசம்

தி. ஜீவராஜ்

24

காணாமல்போன பதிகம் இருக்கட்டும், கந்தளாயிலிருந்து நாங்க காணாமல்போன சேதி இங்கே இருப்பவர்களுக்கு கிடைத்திருக்குமா? என்று பதட்டத்துடன் கேட்டாள் கோதையின் தாய். துள்ளலோடு நடந்துகொண்டிருந்த ஆதினியும், கோதையும் சட்டென நின்று அறிவாட்டியைத் திரும்பிப் பார்த்தார்கள்.

நிச்சயம் செய்தி கிடைத்திருக்கும். நாம் குற்றம் செய்தவர்கள் இல்லையே. எல்லாவற்றையும் தீர யோசித்துத்தான் நங்கை சானி அம்மையார் எங்களை இங்கே அனுப்பி வைத்திருக்கிறார் என்று தைரியம் கூறினாள் அறிவாட்டி. முன்னும், பின்னும் அதிகளவிலான பக்தர்கள் தேவாரப் பாடல்களைப் பாடியபடி நடந்து கொண்டு இருந்தபடியால் அதிகமாக இது தொடர்பில் அவர்களால் விவாதித்துக் கொள்ள முடியாது இருந்தது. முன்னே நடந்து கொண்டிருந்த மாதவர் சற்று நேரம் நின்றார். அறிவாட்டிப் பாட்டி நெருங்கியதும் தான் மாட்டு வண்டிலை யாத்திரிகர் மடம் இருக்கும் பகுதியை நோக்கி கொண்டு செல்வதாகவும் அவர்களை பாபநாச தீர்த்தத்தில் நீராடி விட்டு வரும்படியும் கூறினார்.

அவர்கள் நடந்து வந்த காட்டுப் பாதையின் இடது பக்கம் இருந்த சிறிய வழி ஒன்று பாபநாச தீர்த்தத்தை நோக்கிச் சென்றது. இவர்களுக்கு முன்னால் தேவாரத்தைப் பாடியபடி சென்று கொண்டிருந்த அடியவர்கள் தீர்த்தக் கேணியை நோக்கி நடக்க இவர்களும் பின்தொடர்ந்தார்கள். பாபநாசத்தில் நீராடிவிட்டு ஆலய தரிசனத்திற்காகச் செல்லும் பக்தர் கூட்டத்திற்கு வழிவிட்டபடி ஒருவர் பின் ஒருவராக நால்வரும் தீர்த்தக் கேணியை நோக்கி நடந்தார்கள்.

மிகப் பரந்த, நீள் சதுரமான, ஆழமான அந்த கேணியை முதன்முறையாகப் பார்த்த மூவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. சுற்றிவர அமைக்கப்பட்டிருந்த கருங்கல் படிக்கட்டுகளில் பக்தர்களின் பாதங்கள் ஏறுவதும், இறங்குவதுமாக இருந்தது. கேணிக்கு அருகில் உற்சவ காலங்களில் சுவாமி எழுந்தருளி இருப்பதற்கான மண்டபம் அழகான முறையில் அமைக்கப்பட்டிருந்தது. நடந்து வந்த களைப்பினை ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்காக அறிவாட்டி தீர்த்தக்கேணியின் அருகில் இருந்த மரத்தின் நிழலில் அமர்ந்து கொண்டாள். அவருக்கு முன்னால் மற்றைய மூவரும் அமர்ந்து கொண்டார்கள்.

நடந்து வரக்குள்ள என்னவோ கேட்டீங்க என்று கோதையின் தாயைப் பார்த்து அறிவாட்டிப் பாட்டி கேட்டாள்.

கந்தளாயில இருந்து உயிரப் பணயம் வைச்சு ஓடி வந்தம். ஆனா இடையில ஏதேதோ எல்லாம் கதைச்சுக் கொண்டு இருந்திட்டம். இங்க வந்ததும் திரும்பி பயம் வந்திட்டு என்றாள் கோதையின் தாய்.

பிராமணப் பெண்ணான ஆளப்பிறந்தாளுக்கு ஏதும் நடந்தால் கந்தளாயில எங்களுக்கு ஏதும் பிரச்சினை வரலாம் எண்டுதான் நங்கை சானி அம்மையார் எங்களை இங்கு அனுப்பி வைச்சார். கோணேச்சரத்தில பூசை செய்யிறவங்க பாசுபதர் எண்டு அழைக்கப்படுறவங்க. தீவிரமான சிவபக்தி நிறைஞ்ச குடி. அதைவிட ஆலயத்துக்குப் பணி செய்யிற பல குடிகள் இருக்கிறாங்க. அவங்கள தொழும்பாளர் எண்டு சொல்லுவாங்க. இங்கே இருக்கிற சமூகக் கட்டமைப்பு ஒப்பீட்டு அளவில எங்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் எண்டு நினைச்சுத்தான் எங்கள நங்கை சானி அம்மையார் இஞ்ச அனுப்பி வைச்சிருக்கிறார். அதற்குரிய எல்லா ஏற்பாட்டையும் வேளைக்காரப் படை வீரர்கள் மூலமாகச் செய்திருப்பார். பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்றார் அறிவாட்டிப் பாட்டி.

ஆளப்பிறந்தாள் பாட்டி உங்களோட போட்டி போட்டு நடனமாடி தோற்றுப் போனா. பிறகு உங்கள பழிவாங்கிறதா நினைச்சு எங்கள பழிவாங்கினா. அது வெளியில தெரிஞ்சாலும் தனக்கு எதிரா எந்தத் தண்டனையும் கிடைக்காது என்று நம்பி இருந்தா. அந்த நம்பிக்கையும் தோற்றுப் போனதால தன்னை தானே மாய்த்துக் கொண்டா. இதற்கு நாங்கள் ஏன் பாட்டி ஊர் விட்டு ஊர் ஓடிக் கொண்டிருக்கிறம் என்று கேட்டாள் கோதை.

அதுதான் உலகத்தின் வியாதி. அது விளங்கிட்டா நீயும் அறி



வாட்டிப் பாட்டி மாதிரி மாறி விடுவாய் என்று கொடுப்புகள் சிரித்தபடி கூறினாள் ஆதினி.

எனக்கு விளக்கம் தெரிஞ்சாகணும் என்று ஆதினியைப் பார்த்து பொய்க் கோபத்தோடு கூறிய கோதை, ஏன் பாட்டி மனிசருக்குள்ள இத்தனை பிரிவுகள் ? என்று அறிவாட்டியைப் பார்த்துக் கேட்டாள்.

இதெல்லாம் எங்கிருந்து தொடங்கியது பாட்டி என்று கோதையைத் தொடர்ந்து ஆதினி கேட்டாள்.

வயதுக்கு மீறிய புரிதல்களோடு உரையாடிக்கொண்டிருக்கும் அந்த இரு சிறுமிகளையும் வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தாள் கோதையின் தாய்.

எல்லா பிரிவினைகளும் மனிசரிட மனசுல இருந்துதான் வந்தது என்று உற்சாகமாக அவர்கள் இருவருக்கும் பதிலளிக்கத் தொடங்கினாள் அறிவாட்டிப் பாட்டி. தொடர் பயணங்களால் ஏற்பட்ட களைப்பு மறைந்து அவரது முகத்தில் புத்துணர்ச்சி ஏற்பட்டிருந்தது.

வேற ஓர் இடமும் போகத் தேவையில்லை. நம்மட இடையர் கல்லில எத்தினை குடிகள் இருக்குது ? என்று கேட்டாள் அறிவாட்டிப் பாட்டி.

நார்க்கட்டி இடையர், மணிக்கட்டி இடையர், கல்கட்டி இடையர் என்று தொடங்கினாள் கோதை.

ஏன் சிறுதாலி இடையர், பெருந்தாலி இடையர் எண்டும் இருக்கு என்றாள் ஆதினி.

அதுதானே ஒரு ஊருக்குள்ளேயே பெரியவர், சின்னவர் என்று சொல்லி எத்தனை வேறுபாடுகள் என்று அவர்களது உரையாடலில் கலந்து கொண்டாள் கோதையின் தாய்.

நம்மட மனங்கள் மாறாதவரை இந்த வேறுபாடுகளில் எந்த மாற்றமும் வராது என்று கூறினாள் அறிவாட்டிப் பாட்டி.

மேல இருக்கிறவங்க அடக்கிறதாலதானே பாட்டி நாங்க அடங்கிப் போக வேண்டி இருக்குது என்றாள் கோதை.

மேலே இருக்கிறவங்கள விடுவம். நீ எப்படி உன்னை கீழானவளாக நம்புகிறாய். நீ மட்டும் இல்ல உன்னைச் சேர்ந்தவங்க எல்லோருமே அப்படித்தானே நம்புறாங்க என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

இது என்ன புதுசா. காலாகாலமாக இருந்து வாற வழக்கம் தானே என்றாள் கோதையின் தாய்.

இதுதான் பிரச்சினை. நாம முதலில எங்களோட கண்ணால பாக்கிற எல்லா மனிசரையும் போல நாங்களும் மனிசர்தான் எண்டு முதல்ல நம்பணும். எதிரில வாறவர நிமிர்ந்து பார்க்கத் திறணி இல்லாம நிலத்தை பாக்கிற எங்களுக்கு அந்த எண்ணம் வர இன்னும் ஆயிரம் வருசம் ஆகுமோ தெரியாது என்றாள் கவலையோடு அறிவாட்டிப் பாட்டி.

உரையாடலின் சுவாரசியத்தில் தீர்த்தக்கேணி வெறிச்சோடி இருப்பதை கவனிக்காதிருந்த அறிவாட்டி தன் கண்களால் அனைவரையும் நீராடும்படி சைகை செய்தாள். கடலுக்கு நடுவில் நீண்டிருக்கும் கோணமாமலையில் மிக ஆழமாக கருங்கல் படிக்கட்டுகளின் துணையோடு அமைக்கப்பட்டிருந்த அந்த பாபநாசத் தீர்த்தத்தில் அனைவரும் ஆனந்தமாக நீராடினர்.

பயங்கலந்த நீண்ட பயணத்தை கடந்து வந்திருந்த நால்வருக்கும் பாபநாச தீர்த்தக் கேணியில் நீராடியது ஒரு புத்துணர்வைத் தந்தது. கோதைதான் மீண்டும் உரையாடலை விட்ட இடத்தில் இருந்து ஆரம்பித்தாள்.

நாங்கள் முன்னேற வழியே இல்லையா பாட்டி என்றாள் கோதை.

உனக்குத் தெரியாததா?, அதற்குத்தானே உங்களுடைய ஊருக்கு வந்த காலத்தில இருந்து நானும் முயற்சி எடுக்கிறேன். முதல்ல ஊர்ப் பெண்கள் கொஞ்சமாவது முன்னேற முயற்சி எடுக்கணும். அப்பத்தான் குடும்பம் முன்னேறும். குடும்பம் முன்னேறினால்தான் குலம் நிமிரும் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

நம்மட ஊர்ப் பெண்கள் அண்டைய நாள கடத்தினால் காணும் எண்டு இருக்கிறாங்க அப்ப எப்படி முன்னேறிறது என்று சலித்துக் கொண்டாள் கோதையின் தாய்.

அதுதான் எனக்கும் கவலை. என்னால முடிஞ்ச அளவு, எனக்குத் தெரிஞ்ச எல்லாம் ஊர்ப் பெண்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறேன். ஆனா அது எவ்வளவு பிரயோசனப்படும் என்று தெரியல்ல. பழைய மாதிரி உடம்பும் ஒத்துழைகுதில்ல. வயசு போன காலத்துல எனக்கு இப்ப இருக்கிறது இரண்டே இரண்டு நம்பிக்கை தான் என்றாள் அறிவாட்டிப் பாட்டி.

படிகளில் ஏறிக் கொண்டிருந்த ஆதினியும், கோதையும் திரும்பிப் பார்த்தார்கள். மதிய நேர சூரிய ஒளி பட்டு நன்றாக பளபளத்துக் கொண்டிருந்த பாபநாச தீர்த்தக்கேணி நீர் அவர்களது முகத்தைப் பிரதிபலித்துக்கொண்டிருந்தது.

(தொடரும்...)



jeevarajah@thaiveedu.com

Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA



For Shipping Schedule Visit
www.ceycantranship.com
For further information contact -
Kumar (905) 673-9873

OUR AGENTS ACROSS CANADA
Head Office
(905) 673-9873
Toronto/ New Market/Durham region
Sam (647) 986-2393
Brampton/Mississauga/Halton /Peel region
Noel (647) 891-9445
Ottawa
Iggy - 613 799 3519 /613 237 3569
Hamilton/Waterloo /St Catherines
Dharmaweera (519) 760-1280
Montreal
Gana (514) 573-0093
Edmonton/Calgary
Randy (604) 399-8785
Vancouver/British Columbia
Randy (604) 273-4911
KMR Global Logistics Ltd.
135 & 140 - 14480 Knox Way Richmond
British Columbia, V6V 2Z5

United Kingdom :
Atlas Shipping 430 High Rd
Willesden London NW10 2HA
Tel: 02024596633 - Mobile 07949143535

SRI LANKA'S BEST CLEARING FACILITIES

COLOMBO
Ceylon Shipping Lines Ltd
760 Dr Danister De Silva Mw,
Colombo 9
Tel : 2680301 – 308

KANDY
Ceylon Shipping Lines Ltd
175 Parangantota Road
Mavilmada - Kandy
Tel : 812 234356/57/59

BATTICALOA
Ceylon Shipping Lines Ltd
134 Main Street
Addalachenai - 09
Tel : 067 2277302

1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com




சோழராட்சிக் காலத்தில் உரோகணத்தில் ஏற்பட்ட கிளர்ச்சிகளின் நடுவே அங்கொன்றும் இங்கொன்றுமாக உரோகணத்தை ஆண்ட பலரில் காசியப்பனும் ஒருவன். இவன் அனுராதபுர அரசுக்கோ கடைசி அனுரை மன்னனான ஐந்தாம் மகிந்தனுக்கோ எவ்விதத்தில் உறவு என்று தெரியவில்லை. அரசியல் காரணங்களால் உரோகணத்தில் இருந்த அவனது வம்சத்துக்கும் அனுரை அரச வம்சத்துக்கும் மணவுறவு இருந்திருக்கக்கூடும். மகாவம்சம் ஐந்தாம் மகிந்தனோடு இவனை இணைத்து ஒரு வம்சவரிப்படத்தைச் சொல்கின்றது. அந்த வம்சவரிப்படம் பலவந்தமாக காசியப்பனை அனுரை அரச பரம்பரையில் இணைக்கும் முயற்சியாக தென்படுவதால் அதன் நம்பகத்தை பல வரலாற்றாசிரியர்கள் மறுக்கிறார்கள்.

சோழராட்சியின் போது உரோகணத்தை ஆண்ட பல சிற்றரசரில் 'உரோகண மகாசாமி' என்ற பட்டம் கொண்டிருந்த காசியப்பனும் ஒருவனாக இருக்கவேண்டும். காசியப்பனுக்குப் பின்னர் அவன் மகனான 'உரோகண மகாசாமி முகலன், தேவி கோன்' என்பவளை பட்டத்தரசியாகக் கொண்டு 'அபய சலாமேகன்' என்ற பெயரில் முடிசூடி ஆண்டிருக்கிறான். அபய சலாமேகன் என்பது அனுரை அரசனுக்குரிய இரு பட்டங்களில் ஒன்று (மற்றையது சிறீசங்கபோதி). அப்போது அனுராதபுரம் சோழர்வசம் இருந்ததால், உரோகணத்தில் அனுரையின் கொடிவழியாகத் தன்னைக் காட்ட முகலன் முயன்றிருக்கலாம்.

அனுரை அரசின் அதிகாரபூர்வத் தொடர்ச்சியாக தன்னைச் சொல்லிக்கொண்ட முகலனின் உரிமைகோரல் உண்மையோ பொய்யோ அவனுக்கு உரோகண மக்களிடம் இருந்த செல்வாக்கை அவன் மகன் கீர்த்தி பயன்படுத்திகொண்டான் என்பது அவனது கதிர்காம வெற்றியாலும், மலைநாட்டு வெற்றியாலும் தெரியவருகின்றது. வெறுமனே தந்தையின் பெயர் புகழ் மாத்திரமன்றி, மிகுந்த இராசதந்திரமும் ஆளுமையும் கீர்த்தியின் பிற்கால வெற்றிகளுக்கு அடிப்படையாக அமைந்தன. ஆம், கீர்த்தி தான் சோழரிடமிருந்து ஈழத்தை மீட்ட விசயவாகு பேரரசன்!

சோழராட்சிக்கு அஞ்சி மலையதேசத்தில் இருந்த 'கல்வளை' என்ற இடத்தில் முகலனின் குடும்பம் கொஞ்ச நாள் மறைந்து வாழவேண்டி நேர்ந்தது. கதிர்காமத்தை ஆண்ட லோகேசுவரனின் தண்டநாயகரில் ஒருவனான புத்தராசன், அவனோடு முரண்பட்டு விலகி கல்வளைக்குச் சென்று முகலன் குடும்பத்தின் பாதுகாவலன் ஆகின்றான். முகலன் குடும்பத்துக்கோ கீர்த்திக்கோ ஏற்பட இருந்த எத்தகைய அச்சுறுத்தல்களையும் சவால்களையும் புத்தராசன் முறியடித்து உதவினான் என்ற விபரம் தெளிவில்லை. எனினும் அந்த நிகரற்ற உதவிகளுக்கு நன்றிக்கடனாகவே இன்று கிடைத்துள்ள இலங்கையின் மிகப்பழைய செப்பேடான 'பனாகடுவைச் செப்பேடு' விசயவாகு என்ற பெயர் சூடிக்கொண்ட கீர்த்தியால் பின்னாளில் புத்தராசனுக்கு வழங்கப்பட்டது. அந்தச் செப்பேட்டின் மூலம் பல மானியங்களைப் பெற்றுக்கொண்ட புத்தராசன் அச்செப்பேட்டில் 'சித்தநகரிப் பிரிவின் புத்தராசன்' (சித்நரு பிம் புதல்) என்று அழைக்கப்பட்டுள்ளான்.

மகாவம்சம் மற்றும் ஏனைய பாலி-சிங்கள இலக்கியங்களைக் கொண்டு லோகேசுவரன் மற்றும் கேசதாது தந்தநாயகன் ஆகியோர் மீது கீர்த்தி நிகழ்த்திய பெரும்போர்களில் புத்தராசனின் உதவி இருந்தது என்பதை ஊகிக்க முடிகின்றது. அவர்களை வெற்றி கொண்டதை அடுத்து உரோகணத்தின் கதிர்காமத்தில் 'விசயவாகு' என்ற பெயரில் அவன் யுவராசனாக முடிசூடிக்கொண்டான் என்கின்றது மகாவம்சம்.

யுவராசப் பட்டம் சூடி உரோகணத்தில் தனக்கெதிராக கீர்த்தி வியூகங்களை வகுப்பதறிந்து சோழமன்னன் (பெரும்பாலும் இராசேந்திரதேவ சோழன்) புலத்திநகரில் இருந்த தன் சேனாபதி தலைமையில் உரோகணம் மீது போர்தொடுத்தான். ஆனால் கதிர்காமத்தை சோழப்படை நெருங்கியபோது விசயவாகு மலையகத்திற்கு பின்வாங்கிவிட்டான். சோழப்படை ஆத்திரத்துடன் கதிர்காமத்தை சூறையாடியது. சிலநாட்களின் பின் மலையகத்திலிருந்து படையெடுத்த விசயவாகு, கதிர்காமத்தின் அருகே சிப்பித்தடாகம் என்ற இடத்தில் தங்கியிருந்த சோழப்படையை தாக்கி விரட்டினான். அதன்பின்னர் விசயவாகு பர்மாவிலிருந்த ராமஞ்ஞ நாட்டு மன்னனுக்கு பரிசுகளை அனுப்பியதாக மகாவம்சம் சொல்வதால், அவன் சோழருக்கெதிரான சக்திகளை தனக்கு உதவியாக்கிக் கொள்ள முயன்றமை தெளிவாகின்றது.

இராசேந்திரதேவ சோழன் 1056-ம் ஆண்டைச் சேர்ந்த தன் மணிமங்கலக் கல்வெட்டில் கலிங்கத்தைச் சேர்ந்த வீரசலா மேகன், மானாபரணனின் இரு மைந்தர் என்று இலங்கை அரசர் மூவரை வென்றதாகக் குறிப்பிட்டுள்ளான். இவர்கள் மூவர் பற்றிய எந்தக் குறிப்பும் இலங்கை ஆவணங்களில் கிடைக்கவில்லை. எனவே, இவர்களையும் வழக்கம் போலவே சோழரை எதிர்த்த உரோகணக் கிளர்ச்சியாளர்களில் சிலர் என்றே கொள்ளமுடிகிறது. எவ்வாறெனினும் இக்கல்வெட்டில் இராசேந்திரதேவனால் சொல்லப்படும் போர்வெற்றியின் ஒரு பாகமாக, விசயவாகு தன் முதலாம் ஆட்சியாண்டில் (1055) எதிர்கொண்ட தோல்வியையும் கருதலாம். இக்காலத்தில் விசயவாகுவுக்கு உதவியாக இருந்த ரவிதேவன், சலன் என்ற இரு வீரர்கள் அவனுக்கு எதிராக மாறி சோழருடன் இணைந்துகொண்டனர்.

புண்பட்ட புலியாக விசயபாகு பதினொரு ஆண்டுகள் காத்திருந்தான். அப்போது சோழநாட்டில் இராசேந்திரதேவ சோழன் (1051 - 1062) மறைந்து அவனது தம்பியான வீர இராசேந்திர சோழன் (1062 - 1069) முடிசூடி ஆண்டுகொண்டிருந்தான். அவனது ஆட்சியின் பெரும்பகுதி சோழநாட்டு வட எல்லையில் சாளுக்கியருடன் மோதுவதிலேயே கழிந்தது. இந்நிலையில், விசயவாகுவின் தூண்டலாலோ அல்லது வேறு காரணங்களாலோ வட இலங்கையில் சோழருக்கெதிரான பல கிளர்ச்சிகள் ஏற்பட்டன. மன்னார் மாதோட்டமூடாக மீண்டுமொரு முறை சோழப்படையெடுப்பு ஏற்பட்டு இராசநாடும் உரோகணநாடும் கடுமையாக ஒடுக்கப்பட்டன.

ஆனால் உரோகணத்தில் பழுத்தகிரி என்ற பாதுகாப்பான அரணில் தங்கியிருந்து விசயவாகு நிகழ்த்திய இந்தப்போரில் சோழப்படையே தோற்றுப் பின்வாங்கநேரிட்டது. பின்வாங்கிய படை மீது பாய்ந்து சோழ சேனாபதியைக் கைப்பற்றிய சிங்களப்படை அவன் தலையைக் கொய்தது. விடாது சோழர்களைப் பின் தொடர்ந்து புலத்திநகரத்தையும் வென்று கைப்பற்றிக்கொண்டது. இச்செய்தி சோழமண்டலத்தை அடைந்ததும் அதிராசேந்திரன் ஆத்திரமுற்று பலம் வாய்ந்த இன்னொரு சோழப்படையை ஈழத்துக்கு அனுப்பினான். சோழப்படைக்கு உதவிப்படை கிளம்பி வருவதை அறிந்து அவர்கள் மாதோட்டத்தில் தரையிறங்குவதற்கு முன்பே தாக்குதல் நடாத்தி அழிக்குமாறு விசயவாகு சிங்களப்படைக்கு ஆணையிட்டான். ஆனால் வெற்றித்திருமகள் அப்போது சோழர் பக்கமே இருந்ததால் அவர்கள் மாதோட்டத்தை அண்மிப்பதற்கு முன்பே சோழப்படை இலங்கையில் பாதுகாப்பாக தரையிறங்கி அனுராதபுரத்தை நெருங்கிவிட்டிருந்தது. அனுராதபுரமருகே இருபடைகளும் மோதிக்கொண்டன. சோழப்படையின் வலிமை இப்போது அதிகரித்திருந்ததால், விசயவாகு புலத்திநகரிலிருந்து பின்வாங்கி உரோகணம் திரும்பினான். அங்கு வாதகிரி என்ற இடத்தில் அவன் அரண் அமைத்துத் தங்கியிருந்தான்.

விசயவாகுவின் இத்தோல்வியை அவனது பெயரைக் குறிப்பிட்டே வீர இராசேந்திர சோழன் தனது ஆறாம் ஆட்சியாண்டுத் திருமுக்கூடல் கல்வெட்டில் (1067/8) ஆடம்பரமாகக் குறித்துள்ளான். இப்போரில் சிங்களப்படைகளால் கொல்லப்பட்ட சோழ சேனாதிபதியின் பெயர் 'குருகுலத்தரையன்' என்பது அதே கல்வெட்டின் மூலம் அறியக்கிடைக்கின்றது. விசயவாகு மீதான வெற்றியின் போது சோழர் விசயவாகுவின் தேவியையும் அவனது செல்வங்களையும் கைப்பற்றியதாக அக்கல்வெட்டு மேலும் சொல்கிறது. இலங்கை வரலாற்றில் அறியப்படுகின்ற விசயவாகுவின் இரு தேவியரான லீலாவதி, திரிலோகசுந்தரி எனும் இருவர் தவிர, இன்னொருத்தி அவன் தேவியாக இருந்து சோழரால் கைப்பற்றப்பட்டாளா, அல்லது மேற்சொன்ன இருவரில் ஒருத்தியே சோழரால் சிறைப்பிடிக்கப்பட்டு பின் விடுவிக்கப்பட்டாளா என்பது தெரியவில்லை.

விசயவாகுவைத் தோற்கடித்த வீரராசேந்திரனின் கல்வெட்டுகளெதுவும் இலங்கையில் கிடைக்கவில்லை. வீரராசேந்திரனின் இறுதிக்காலத்தில் 1067-ம் ஆண்டு முதல் அவனது மகனான அதிராசேந்திரன் அவனோடு இணையரசனாக இயங்கிக்கொண்டிருந்தான். இறுதியில் 1070-ம் ஆண்டில் அதிராசேந்திரன் முடிசூடப்பட்ட சிலநாட்களிலேயே சோழ அரசில் ஏற்பட்ட கலவரத்தில் அவன் கொல்லப்பட்டான். அதிராசேந்திரனின் மூன்றாம் ஆட்சியாண்டு வரையான கல்வெட்டுகள் தென்பாண்டி நாடு, இலங்கை உட்பட்ட பகுதிகளில் கிடைத்துள்ளன. எனவே அவன் மடியும்வரை சோழநாட்டின் தென்பகுதியில் இணையரசனாக அவனது ஆதிக்கம் நீடித்தது என்பதைப் புரிந்துகொள்ளமுடிகின்றது. அப்படிக் கொள்வது உண்மையாயின் அவன் தந்தையின் திருமுக்கூடல் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஈழம் பற்றிய வீரப்பிரதாபங்கள் அதிராசேந்திரனின் வழிகாட்டலில் நிகழ்த்தப்பட்டவை என ஊகிக்கமுடிகின்றது.



அதிராசேந்திரனின் இரு கல்வெட்டுகள் பொலனறுவை இரண்டாம் இலக்க சிவாலயம் என்று அறியப்படும் புலத்திநகரியின் வானவன் மாதேவி ஈச்சரத்தில் கிடைத்துள்ளன. அவற்றிலொன்று அவன் காலத்தில் அக்கோவிலுக்கு வழங்கப்பட்ட தாரா நிலை விளக்கொன்றைப் பற்றிச் சொல்கின்றது. இன்னொரு கல்வெட்டு முக்கியமானது. சோழர் காலத்து இலங்கைக் கோவில்களின் நிருவாகத்தில் அங்கம் வகித்தோரைச் சொல்லும் அரிய கல்வெட்டு அது.

வானவன் மாதேவி ஈச்சரத்தில் 1070-ஆம் ஆண்டு திருவாராதனை பண்ணுவார், பரிசாரகர்கள், வாத்தியம் இசைப்பார், நாட்டார், தேவரடியார், எனும் பல்வேறு தரப்பினர் இயங்கியபடி இருந்திருக்கிறார்கள். ஒரு பிராமணனும் சிவப்பிராமணனும் திருவாராதனை பண்ண, உவச்சர் ஒருவர் வாத்தியம் மீட்ட, மு(து)க்க(ல்) நாடாள்வான் ஒருவன் நாட்டார் தலைவனாக வீற்றிருக்க, வேறு சிலர் பன்மாகேசுரக் கங்காணிப் பணி செய்ய, ஆறு தேவரடியார் ஆடல் பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற தகவலை அதிராசேந்திரனின் கல்வெட்டுச் சொல்கின்றது. இவர்கள் அனைவரையும் சாட்சியாக வைத்து சண்டேசுரர் முன்னிலையில் சித்திரைத்திங்கள் முதற்பலி எண்ணெய் எரிப்பதற்காக, சோழமண்டலத்து தக்(...)கோட்டத்து விற்பேட்டு நாட்டு மங்கலப்பாடி என்ற ஊரைச் சேர்ந்த 'வெள்ளாளன் (....) சீராளன்' என்பவன் ஐந்து காசும் ஒரு நந்தாவிளக்கும் தானம் கொடுத்துள்ளான்.

இக்கல்வெட்டை 1923-ம் ஆண்டு முதன்முதலில் படியெடுத்து வாசித்த தமிழக வரலாற்று அறிஞர் கிருச்ண சாத்திரி 'மு(து)க்க(ல்) நாடாழ்வான்' என்றபெயரை 'மு(த)க்க(ரை) நாடாழ்வான்' என்று படித்துள்ளார். முதுக்கல் என்பதே சரி ஆகுமென்றால் இன்றும் பொலனறுவைக்கு அருகே நீடிக்கும் பழந்தமிழ் ஊரான 'முத்துக்கல்' லோடு இந்த நாடாழ்வானை இணைத்துப் பார்க்கமுடியும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்படும் ஆறு தேவரடியாரும் 'மாணிக்கம்' என்ற பட்டத்தைத் தரித்திருந்தார்கள். திருக்கோணேச்சரத்தில் மாணிக்கங்கள் என்றழைக்கப்பட்ட ஆடல்மகளிர் பணியாற்றியதும் அவர்களின் தொடர்ச்சியாக தம்பலகாமம் ஆதிகோணேசர் ஆலயத்தில் 'மாணிக்கம்' எனும் கோவில் ஊழியம் இன்றும் நீடிப்பதும், அறுந்துபோன தொன்மையான சோழத்தடமொன்றின் எச்சசொச்சங்கள் தான்.

அக்காலத்து ஈழத்தில் இன்றைய புத்தாண்டான சித்திரை மாதத்தின் முதல் நாள் (சித்திரைத்திங்கள் முதற்பலி) கொண்டிருந்த முக்கியத்துவம், சிவாச்சாரியார்களைக் குறிக்கும் 'சிவப்பிராமணர்' என்ற அரிய கல்வெட்டுச் சொல் இடம் பெற்றுள்ளமை என்றெல்லாம் பல்வேறு செய்திகள் பதிவாகியுள்ள இக்கல்வெட்டு இன்னும் ஆய்வாளர்களால் விரிவாக ஆராயப்படவில்லை.

அதிராசேந்திரன் கல்வெட்டுகள் வானவன் மாதேவி ஈச்சரத்தில் பொறிக்கப்பட்ட காலத்துக்குப் பின்னர் புலத்திநகரியின் வானை போர்மேகங்கள் சூழ ஆரம்பித்தன. வாதகிரியில் தங்கியிருந்த விசயவாகு பின்னர் உரோகணத்துக்குப் பின்வாங்க நேரிட்டபோதும், அவன் சோழருக்கெதிரான அறுதியும் இறுதியுமான தாக்குதலொன் றை மிகத்தீவிரமாகத் திட்டம் தீட்டிவிட்டிருந்தான். அந்த வஞ்சத்தின் முன் உரோகணத்தில் அவனை எதிர்த் துக் கிளர்ச்சி செய்த பல கலகக்காரர்கள் கூண்டோடு அழிக்கப்பட்டனர். இறுதியில் உரோகணத்தின் இறுதித் தலைநகராக விளங்கிய 'மகாநாககுலம்' என்ற இடத்தை வந்து சேர்ந்து பெரும்படையை ஒன்றிணைத்தான். அந்நகர் தென்னிலங்கையில் இன்றைய அம்பலாந்தோட்டத்துக்கு அருகேவளவை கங்கைக்கரையில் அமைந்திருந்தது.



அவனது படையின் ஒரு கிளை இரு வீரர்களின் தலைமையில் இலங்கையின் மேற்குக்கரையூடாக சோழர் குடியிருப்புகளை வென்று அனுராதபுரம் நோக்கி நகர்ந்தது. அது மேலும் இரண்டாகப் பிரிந்து ஒரு சிறுகிளை மாதோட்டத்தைக் கைப்பற்ற மறுகிளை அனுராதபுரத்தை வென்று பொலனறுவை நோக்கி நகர்ந்தது. இன்னொருகிளை வேறு இருவீரர்களின் தலைமையில் கிழக்குக்கரையோர 'கடற்கரைப்பெருந்தெரு'வூடாக பொலன றுவை நோக்கி நகர்ந்தது. அது செல்லும் வழியில் இருந்த சோழர் அரண்களை அழித்து பொலனறுவையை நெருங்கி விசயவாகுவுக்கு செய்தி அனுப்பியது. மகாநாககுலத்திலிருந்து அவன் எஞ்சிய மூன்றாவது கிளைப்படையினருடன் மகாவலி கங்கைக் கரையோரமாகப் புறப்பட்டு வந்து புலத்திநகரின் அருகே பாளையமிட்டான்.

சோழப்படைகள் ஈழம் நுழையும் பிரதான வாயிலான மாதோட்டம் இப்போது மூடப்பட்டுவிட்டது. அனுரையிலும் மாதோட்டத்திலும் சிங்களப்படைகளால் சுற்றிவளைக்கப்பட்டதால் சிதறியோடிய சோழப்படைகள் இறுதியில் பொலனறுவையில் ஒன்றுதிரண்டு அங்கு சிங்களப்படைகளை எதிர்த்தன. இறுதியில் அவர்களுக்கு ஈடுகொடுக்கமுடியாமல் புலத்திநகரில் புகுந்து கோட்டைவாயிலை மூடிக்கொண்டன. ஒன்றரை மாதம் சிங்களப்படைகள் புலத்திநகரை முற்றுகையிட்டிருந்தது. முற்றுகையின் இறுதியில் புலத்திநகரி வீழ்ந்தது. சனநாதமங்கலபுரம் வீழ்ந்தது. சிங்களப்படைகள் உள்ளே புகுந்து சோழவீரர்களை நாசம் செய்தன. விசயவாகு சனநாதபுரத்தின், இல்லையில்லை, விசயராசபுரத்தின் உள்ளே வெற்றித்திருமகனாக உள்நுழைந்தான். அவன் தன் பதினாறாம் ஆட்சியாண்டில் அதாவது 1069-ம் ஆண்டில் அனுராதபுரம் சென்று அங்கு முழு இலங்கையின் அரசனாக முடிசூடிக்கொண்டான். ஆம், ஈழத்தில் வீழ்ந்தது சோழம்!



thulanchanan.v@thaiveedu.com

# இனப்படுகொலையின் அரசியல்-7

## இனப்படுகொலை : தத்துவார்த்தக் கேள்விகள்-3

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### அறிமுகக் குறிப்புகள்:

1990-களின் இறுதிப்பகுதியில் உலகளாவிய ரீதியில் இனப்படுகொலைகள் தொடர்பாக, தொடர்பாடலின் நவீனமயமாக்கமும் செய்தி ஊடகங்களின் பரவலும் உலகெங்கும் நடக்கும் விடயங்கள் அறிக்கையிடப்படுவதை இலகுவாக்கியும் ஐக்கிய நாடுகள் போன்ற உலகளாவிய அமைப்புகளின் இருப்பு இருக்கின்றபோதும் கூட ஏன் இனப்படுகொலைகளையோ அதையொத்த பாரிய கொடூரங்களையோ தடுத்து நிறுத்த இயலவில்லை என்ற கேள்வி எழுந்தது. அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் மீதான தாக்குதலை அடுத்த 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்' எழுப்பிய அறம் சார்ந்த வினாக்கள் ஒருபுறமும், சர்வதேச சமூகம் உலகின் ஏதோ ஒரு மூலையில் பாரிய குற்றங்கள் நிகழ்கின்ற போது பார்த்துக் கொண்டு வாழாவிருக்க முடியுமா என்ற கேள்வி மறுபுறமுமாக சர்வதேச அரசியல் அரங்கில் 'சர்வதேச சமூகத்தின்' பொறுப்பு என்ன என்ற கேள்வி மேலெழுந்தது.

இதன் தொடர்ச்சியாக, 2005-ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஒருமனதாக காக்கும் கடப்பாடு (Responsbiltiy to Protect - R2P) என்ற கொள்கையை அங்கீகரித்தது. இது அரசானது இறையாண்மை, பொறுப்புகள் மற்றும் உரிமைகளை உள்ளடக்கியது என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனச் சுத்திகரிப்பு ஆகியவற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அரசுகளுக்கு இருப்பதால், இந்தப் பொறுப்பு தேசிய மற்றும் சர்வதேச அளவில் உள்ளது. எந்தவொரு காரணத்திற்காகவும், ஓர் அரசு இந்தப் பொறுப்பில் 'வெளிப்படையாகத் தோல்வியடைந்தால்', தவறியுள்ள இந்தப் பொறுப்பினை நிறைவேற்றும் கடமையும் உரிமையும் சர்வதேச சமூகத்திற்கு இருக்கிறது என்று இக்கொள்கை பிரகடனப்படுத்தியது.

சட்ட, தார்மீக, அரசியல் ரீதியான சரியான நடத்தைகள் எவை என்பது பற்றிய சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகள் மாறியுள்ளமையை இந்தக் 'காக்கும் கடப்பாடு' பிரதிபலிக்கிறது. இங்கு இரண்டு விடயங்கள் கவனிப்புக்குரியன. முதலாவதாக, இனப்படுகொலை குற்றத்திற்கு இதனைப் பயன்படுத்துவதன் மூலம், இது இனப்படுகொலைத் தடுப்புப் பிரச்சினையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம். இரண்டாவதாக, கொசோவோவில் முன்னுக்கு வந்த நெருக்கடிகளை நிவர்த்தி செய்வதன் மூலம், கெடுபிடிப்போருக்குப் பிந்தைய சட்டபூர்வ நெருக்கடிக்கு அடித்தளமாக இருந்த இறையாண்மை-தலையீடும்-அதிகாரம் என்கிற முரண்களுக்கிடையே காக்கும் கடப்பாட்டின் தாக்கத்தை பகுப்பாய்வு செய்வது முக்கியம்.

கடந்த இரண்டு தசாப்தகாலத்தில் மிகவும் சிக்கலான, சர்ச்சையான அதேவேளை மிகுந்த விமர்சனத்திற்கு உட்பட்ட ஒன்றாக இந்தக் காக்கும் கடப்பாடு இருக்கிறது. இது குறித்து




ஐ.நா மனித உரிமைகளுக்கான முன்னாள் ஆணையர் லூயிஸ் ஆர்பர் சொன்ன கருத்து முக்கியமானது. 'காக்கும் கடப்பாட்டை அனைத்திலும் செயல்படுத்துவதற்கான சர்வதேச அழுத்தம் அதிகரித்ததால் சிக்கல்கள் எழுந்தன. கோட்பாட்டு ரீதியானதாகவும் சர்வதேச சட்டவடிப்படைகளின் பிரகாரம் காக்கும் கடப்பாடு என்ற தத்துவம் கட்டமைக்கப்பட்டி

ருந்தாலும் கூட, அது சொல்லாத விஷயங்கள் நிறைய உள்ளன. முதலில், அது எந்த வகையான பொறுப்பு, பாதுகாக்க வேண்டிய பொறுப்பு யாருடையது என்று சொல்லவில்லை. இது தார்மீகப் பொறுப்பா? அரசியல் பொறுப்பா? அல்லது இது சட்டப்பூர்வமானதா?'

அதன் ஆரம்பக் கருத்தாக்கத்தில், தலையீடு மற்றும் அரச இறையாண்மைக்கான சர்வதேச ஆணையம் (International Commission on Intervention and State Sovereignty) டிசம்பர் 2001-ல் காக்கும் கடப்பாடு என்ற தலைப்பில் 90 பக்க அறிக்கையில் ஒரு கருத்தை முன்வைத்தது. அதன் அடுத்த இடைநிலைக் காலத்தில் இக் கருத்து 2004-ம் ஆண்டிற்குள் மறு ஆய்வு செய்யப்பட்டு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. மிகவும் பாதுகாப்பான உலகம் நம்மனைவருக்குமான பொறுப்பு (A More Secure World: Our Shared Responsibility) என்ற தலைப்பிலமைந்த ஐ.நா. பொதுச்செயலாளரின் உயர்மட்ட குழு அறிக்கை, அத்துடன் 2005-ல், பரந்த சுதந்திரத்தில் அனைவருக்கும் வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகளை நோக்கி (In Larger Freedom: Towards Development, Security and Human Rights for All) என்ற ஐ.நா. பொதுச் செயலாளர் அறிக்கை ஆகியன காக்கும் கடப்பாட்டின் முக்கியத்துவம் குறித்து விரிவான குறிப்புகளைக் கொண்டிருந்தன. ஆனால் குறித்த கொள்கையானது ஐ.நா பொதுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட நேரத்தில், காக்கும் கடப்பாடு என்ற கருத்துருவாக்கம் மூன்று பத்திகளாகக் குறைக்கப்பட்டது.

முதல் இரண்டு பத்திகள் இனப்படுகொலையைத் தடுப்பதில் உள்நாட்டின் பொறுப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. ஏனெனில் அரசுகள் தங்கள் மக்களை (குடிமக்கள் மட்டுமல்ல), இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், இனச் சுத்திகரிப்பு மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களிலிருந்து பாதுகாக்க வேண்டும். மேலும் இந்தக் குற்றங்கள் எழுவதைத் தடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடையாளம் காணப்பட்ட நான்கு குற்றங்களில் இருந்து மக்களைத் தடுப்பதற்கும் பாதுகாப்பதற்கும் இந்தப் பொறுப்புடன் இறையாண்மையின் உரிமை பிணைக்கப்பட்டுள்ளதால், காக்கும் கடப்பாடானது முழுமையான இறையாண்மை என்ற கருத்தை தெளிவாகக் கட்டுப்படுத்துகிறது. இந்த உள்நாட்டுப் பொறுப்புக்கு கூடுதலாக, அடுத்த பத்தியானது, சர்வதேசப் பொறுப்பையும் விதிக்கிறது, ஏனெனில் 'சர்வதேச சமூகம் இந்தப் பொறுப்பைச் செயல்படுத்த அரசுகளை ஊக்குவிக்கவும் உதவவும் ஒரு பொறுப்பைக் கொண்டுள்ளது. எந்தவொரு காரணத்திற்காகவும், அரசுகள் தங்கள் காக்கும் கடப்பாட்டை நிறைவேற்றத் தவறினால், அது இராணுவத் தலையீட்டிற்கு வழி வகுக்கிறது, ஏனெனில் சர்வதேச சமூகம் ஐ.நா பாதுகாப்பு சபையின் மூலம் சரியான நேரத்தில் மற்றும் தீர்க்கமான முறையில் கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்'.

ஆனால் இந்தக் காக்கும் கடப்பாடு என்பது 'மனிதாபிமானத் தலையீடு' (Humanitarian Intervention) என்ற குறுகிய கருத்தாக்கத்திற்குரியதாகவே விளக்கப்பட்டது. இதனால் இது சர்வதேச அரசியற் சதுரங்கத்தில் பகடைக்காயாக உருண்டது. லிபியாவில் செல்லுபடியான காக்கும் கடப்பாடு இலங்கையில் செல்லுபடியாகவில்லை. உக்ரேனில் செல்லுபடியாகும் இக்கொள்கை பலஸ்தீனத்திற்கு உரியதல்ல. இவை இந்தக் கொள்கை குறித்த பல அரசியற் கேள்விகளை எழுப்புகின்றன. இதைப் புரிந்து கொள்வதற்கு இதன் வரலாற்று வளர்ச்சியை நோக்குவது அவசியம்.

வரலாற்றின் வழிப்பட்டு இரண்டாம் உலகப் போரின் முடிவில், எதிர்காலத்தில் இதுபோன்ற பயங்கரமான மோதலைத் தவிர்க்க உலகம் விரும்பியது. முதலாம் உலகப் போருக்குப் பிறகு லீக் ஆஃப் நேஷன்ஸ் மூலம் பலதரப்பு ஒத்துழைப்பை இயக்குவதற்கான ஒரு தோல்வியுற்ற முயற்சிக்குப் பிறகு, இரண்டாம் உலகப்போரில் வென்ற தலைவர்கள் ஒன்றிணைந்து ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கினர். சர்வதேச ஈடுபாட்டிற்கான ஒரு மன்றமாக வடிவமைக்கப்பட்ட ஐ.நா சர்வதேச மோதல்களைத் தணிக்கவும், ஆக்கிரமிப்பு முழு அளவிலான போராக மாறுவதைத் தடுக்கவும் நிறுவப்பட்டது. இந்த புதிய உலக ஒழுங்கிற்கு அடிகோலுவது இறை



யாண்மைக்கு - எந்த நாடும் மற்றொரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட முடியாது என்ற கொள்கை - வழங்கப்பட்ட முக்கியத்துவமாகும்.

அமைதியைப் பாதுகாக்கவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், ஐக்கிய நாடுகள் சபை பன்னாட்டு அமைதி காக்கும் படைகளை உருவாக்கியது. அதேவேளை எல்லா விடயங்களிலும் உள்ளூர் அரசாங்கங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது சிறந்தது என்ற முடிவுக்கு ஐ.நா வந்தது. வெறுமனே, ஐ.நா அமைதிப் படைகள் உள்ளூர் அரசாங்கங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாக இருந்தது. ஆனால் பிரச்சனைகள் விரைவாக வெளிப்பட்டன ஒரு உள்ளூர் அரசாங்கம் தனது சொந்த மக்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டால், இந்த அமைதி காக்கும் படையினர் எவ்வாறு பதிலளிப்பார்கள்? ஒரு பாரிய அட்டூழியத்தைத் தடுப்பதானது ஒரு நாட்டின் இறையாண்மையை மீறும் நிலையில் அதை நியாயப்படுத்த முடியுமா?

பல தசாப்தங்களாக, இறையாண்மை மதிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கூறியது. ஆனால் 1990-களில் முன்னாள் யூகோஸ்லாவியாவில், ருவாண்டாவில் மற்றும் பல




போர்களுக்குப் பிறகு, அறிஞர்கள் மற்றும் இராஜதந்திரிகள் இந்த சிந்தனையை மறு மதிப்பீடு செய்தனர். இதன் வெளிப்பாடே காக்கும் கடப்பாடு என்ற கொள்கையின் உருவாக்கமாகும். லிபியாவின் உள்நாட்டுப் போருக்கு மத்தியில் காக்கும் கடப்பாடு 2011-ல் சோதிக்கப்பட்டது. ஐ.நா.வின் ஆரம்ப மனிதாபிமான தலையீடு விரைவில் ஆட்சி மாற்ற நடவடிக்கையாக உருவெடுத்தது. இந்த வளர்ச்சியானது, இறையாண்மையை மதிப்பதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இடையேயான நுட்பமான சமநிலைச் செயல் குறித்து உலகத் தலைவர்களிடையே பிளவுபடுத்தும் விவாதங்களுக்கு வழிவகுத்தது. இந்தக் காலக்கெடு ‘மனிதாபிமான தலையீடு மற்றும் காக்கும் கடப்பாடு ஆகியவற்றின் பரிணாமத்தை குறிக்கிறது. இது லிபியாவில் அதன் சர்ச்சைக்குரிய நடைமுறைக்குப் பிறகு கோட்பாட்டின் நிச்சயமற்ற எதிர்காலத்தையும் பார்க்கிறது.

இரண்டாம் உலகப் போரினால் மனித வரலாற்றில் மிகக் கொடிய மோதலாக, ஆறு மில்லியன் யூதர்கள் இனப்படுகொலைச் செயலில் கொல்லப்பட்டனர் - உலகத் தலைவர்கள் ஐக்கிய நாடுகள் சபையை உருவாக்கினர், இது போன்ற எந்தவொரு சண்டையும் நிகழாமல் தடுக்கப்பட்டது. அதன் நிறுவனர்களால் கற்பனை செய்யப்பட்டபடி, ஐக்கிய நாடுகள் சபையானது, வெளிப்புற விரோதம் மற்றும் உள் வன்முறைக்கு எதிராக நாடுகளுக்கு உதவ ஒரு பன்னாட்டுப் படையைத் திரட்டியது. ஆனால் அந்த அரசாங்கங்கள் ஐ.நாவின் தலையீட்டை நிராகரித்தால் என்ன நடக்கும்? இந்த இக்கட்டான நிலைக்கு ஐக்கிய நாடுகள் சபையிடம் பதில் இல்லை. ஒரு மோதல் தவிர்க்க முடியாததாக இருந்தாலும், ஐக்கிய நாடுகள் சபை அதன் உறுப்பு நாடுகளின் இறையாண்மைக்கு மதிப்பளிப்பதாக முதலில் உறுதியளித்தது.

இரண்டாம் உலகப் போரின் இறுதி நாட்களில், நாற்பத்தொன்பது நாடுகளின் பிரதிநிதிகள் சான் பிரான்சிஸ்கோவில் சந்தித்தனர். அங்கு அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தை உருவாக்கினர், இது உலக அமைதிக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு புதிய சர்வதேச அமைப்பின் ஸ்தாபக ஆவணம். சாசனம் ஐக்கிய நாடுகளின் பணியை வரையறுத்தது: நாடுகளின் இறையாண்மையைப் பாதுகாப்பது. பிரதிநிதிகள், அமைதியைப் பேணுவதற்கும், அரசுகளுக்கு இடையேயான ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கும் ஆயுதம் ஏந்திய பன்னாட்டு இராணுவப் படையை உருவாக்கும் திறன் உட்பட, அமைப்பின் அதிகாரங்களையும் வகுத்தனர். இந்தப் படைகள் ஐ.நா. அமைதி காக்கும் பிரிவுகளாக அறியப்பட்டன. அவை போர்நிறுத்தங்களைச் செயல்படுத்தவும், தேர்தல்களைக் கண்காணிக்கவும், பாதிக்கப்படக்கூடிய நாடுகளின் இறையாண்மையைப் பாதுகாக்கவும் உள்ளூர் அரசாங்கங்களின் வெளிப்படையான அனுமதியுடன் செயற்பட்டன.

உலகளவில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் புதிய சட்டங்களை ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கியது. மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனம் அனைத்து மக்களுக்கும் சமமான, பிரிக்க முடியாத உரிமைகள் - அதாவது வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கு உரிமை உண்டு என்பதை அங்கீகரித்தது. இதற்கிடையில், இனப்படுகொலை குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டனை வழங்குதல் தொடர்பான மாநாடு, சர்வதேச சட்டத்தின் கீழ் முதன்முறையாக ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு வேண்டுமென்றே தீங்கு விளைவிப்பதை குற்றமாக்கியது. எல்லா மக்களுக்கும் சில சுதந்திரங்களுக்கும் உரிமைகளுக்கும் உரிமை உண்டு என்று உலகம் ஒன்று கூடி அறிவித்ததில்லை. மேலும், இந்த உரிமைகளை மீறுவது இப்போது சர்வதேச சட்டத்திற்கு எதிரானது. இன்றுவரை, அந்த ஆவணங்கள் அரசாங்கங்கள் தங்கள் குடிமக்களை நடத்தும் விதம் குறிது எதிர்பார்க்கப்படும் தரநிலையாக செயற்படுகின்றன.

ஜூலை 1960-ல், ஐக்கிய நாடுகள் சபை அதன் மிகப்பெரிய அமைதி காக்கும் நடவடிக்கையாக கிட்டத்தட்ட இருபதாயிரம் துருப்புக்களை காங்கோ ஜனநாயகக் குடியரசிற்கு அனுப்பியது. இந்த நடவடிக்கையின் நோக்கம், அதன் சுதந்திரத்தை ஒப்புக்கொள்ள மறுத்த சட்டவிரோதமாக நிலை

கொண்டுள்ள பெல்ஜியம் துருப்புக்களை வெளியேற்றுவதற்கு புதிதாக நிறுவப்பட்ட கொங்கோவுக்கு உதவுவதாகும். அடுத்த நான்கு ஆண்டுகளில் ஐ.நா. அமைதி காக்கும் படையினர் உள்நாட்டுப் போரைத் தடுக்க உள்ளூர் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்றினர். 1964-ல் கொங்கோவில் இருந்து அமைதி காக்கும் படையினர் வெளியேறியபோது பாரிய தவறுகள் நடந்து முடிந்திருந்தன. அதை விசாரிக்கச் சென்ற ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் மர்மமான முறையில் விமான விபத்தில் கொல்லப்பட்டார். சோவியத் யூனியன் காங்கோவில் ஐக்கிய நாடுகளின் தலையீட்டை விமர்சித்தது. ஏனைய நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கு இது ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என்று அஞ்சியது.

ஐநா அமைதிப்படை உள்ளூர் அரசாங்கங்களின் அனுமதியுடன் மட்டுமே செயல்பட முடியும். உதாரணமாக, எகிப்தில், ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இஸ்ரேலுடனான அதன் பதட்டமான எல்லையில் ரோந்து செல்ல ஐ.நா. அமைதி காக்கும் படையினரை அரசாங்கம் அனுமதித்தது. எவ்வாறாயினும், 1967-ல் எகிப்து இஸ்ரேலுடன் போருக்குத் தயாராகத் தொடங்கியபோது எகிப்திய அரசாங்கம் ஐ.நா. அமைதி காக்கும் படையை திரும்பப் பெறுமாறு கோரியது. போர் தெளிவாகத் தெரிந்தாலும், எகிப்திய இறையாண்மையை மீறுவதைத் தவிர்ப்பதற்காக அமைதி காக்கும் படையினர் இணங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஒரு மாதம் கழித்து, எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே போர் வெடித்தது.

1945 முதல், ஐக்கிய நாடுகள் சபை அதன் உறுப்பு நாடுகளின் இறையாண்மையைப் பாதுகாக்கவும் மதிக்கவும் பாடுபட்டு வருகிறது. ஆனால் 1990-களில், வெகுஜன அட்டூழியங்களின் அலை உலக மனசாட்சியை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ருவாண்டாவிலும் முன்னாள் யூகோஸ்லாவியாவிலும் பரவலான மனித உரிமை மீறல்கள் மற்றும் பாரிய உயிர் இழப்புகளில் ஐ.நா பலமுறை தோல்வியடைந்தது அல்லது தலையிட மறுத்தது. நாடுகளுக்கு அவற்றின் எல்லைக்குள் முழுமையான இறையாண்மையை வழங்குவது இனப்படுகொலை, இன அழிப்பு போன்ற அட்டூழியங்களுக்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்து, வல்லுநர்கள் தேசிய இறையாண்மையையும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதன் அவசியத்தையும் சமநிலைப்படுத்த பாடுபட்டனர்.

1991-ல் ஓர் இராணுவ சதியால் சோமாலியாவில் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கம் செயற்படாமல் போனது. இதற்குப் பதிலடியாக, போரிடும் பிரிவினரிடையே ஒரு சிறிய போர்நிறுத்தத்தைப் பேணவும் பட்டினியால் வாடும் மக்களுக்கு உதவிகளை வழங்கவும் ஐக்கிய நாடுகள் சபை அமைதிப் படைகளை அனுப்பியது. அவர்களின் மனிதாபிமான ஆணை இருந்தபோதிலும், ஐ.நா. அமைதி காக்கும் படையினர் அடிக்கடி உள்ளூர் போராளிகளின் தாக்குதலுக்கு இலக்காகினர். இந்த வன்முறையைக் கட்டுப்படுத்த, ஐக்கிய நாடுகள் சபை 1993-ல் சோமாலியாவின் தலைநகரில் உள்ள போராளித் தலைவர்களைக் கைப்பற்ற அமெரிக்காவிற்கு அங்கீகாரம் அளித்தது. இந்த நடவடிக்கை கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தது, இதன் விளைவாக பதினெட்டு அமெரிக்கர்கள் இறந்தனர். உலகெங்கிலும் உள்ள தொலைக்காட்சிகள் சோமாலியத் தலைநகர் மொகடிசுவின் தெருக்களில் வீழ்ந்த அமெரிக்கப் படைவீரர்களை சோமாலியர்கள் இழுத்துச் செல்லும் படங்களைக் காட்டியதால், எதிர்கால அமைதி காக்கும் பணிகளுக்கு தங்கள் படைகளை ஈடுபடுத்துவதில் நாடுகள் அதிக எச்சரிக்கையுடன் இருந்தன.

ஜனவரி 1994-இல், ஐநா அமைதி காக்கும் படையினர் ருவாண்டாவில் உள்ளாட்சித் தேர்தல்களைக் கண்காணித்து வந்தனர். ஆனால் அந்த ஆண்டின் பிற்பகுதியில் இனப்படுகொலைக்கு வித்திட்ட இனப் பதட்டங்கள் வெடித்தபோது, அதே அமைதி காக்கும் படையினர் தலையிட வேண்டாம் என்று மீண்டும் மீண்டும் கட்டளையிடப்பட்டனர். சோமாலியாவில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து, உள்நாட்டு மோதலில் தலையிடுவது மற்றும் அவர்களின் பணியின் குறுகிய நோக்கத்தை மீறுவது குறித்து ஐ.நா எச்சரிக்கையாக இருந்தது. இருப்பினும், ஐ.நா. அமைதி காக்கும் படையினர் ஓரங்கட்டப்பட்டதால், வெறும் மூன்றே மாதங்களில் எட்டு லட்சத்திற்கும் அதிகமான ருவாண்டா மக்கள் கொல்லப்பட்டனர். இந்த அதிர்ச்சியூட்டும் இறப்பு எண்ணிக்கை உறுப்பு நாடுகள் தங்கள் அமைதி காக்கும் படையினரை விலக்க உத்தரவிட்டது குறித்து ஒரு விரிவான ஐ.நா விசாரணையைத் தூண்டியது. முந்தைய பயணங்களில் பெருமளவிலான உயிரிழப்புகள் ஏற்பட்ட பிறகு அவர்களின் சொந்த பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்க ஐ.நா முடிவு செய்தது.

1995-ல், ருவாண்டாவில் எட்டு இலட்சம் மக்கள் இறந்த ஒரு வருடத்திற்குப் பிறகு, அமைதி காக்கும் படையினர் மற்றொரு உள்நாட்டு மோதலை எதிர்கொண்டனர். முன்னாள் யூகோஸ்லாவியா பிரிந்ததைத் தொடர்ந்து, பால்கனில் நடந்த உள்நாட்டுப் போர் பொஸ்னிய முஸ்லிம்களை பொஸ்னிய செர்பியர்களுக்கு எதிராக நிறுத்தியது. ஐ.நா. அமைதி காக்கும் படையினர் முஸ்லீம் நகரமான ஸ்ரெப்ரெனிகாவை பாதுகாத்து வந்தனர், ஆனால் பொஸ்னிய செர்பிய இராணுவம் அவர்களின் திசையில் முன்னேறத் தொடங்கியபோது, ஐ.நா. அமைதி காக்கும் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டனர். அமைதி காக்கும் படையினர் போதிய அளவில் ஆயுதம் ஏந்தியிருக்கவில்லை, மேலும் செர்பிய அதிகாரிகளுடன் நடந்து வரும் அமைதி பேச்சுவார்த்தைகளுக்கு மோதல்கள் ஆபத்தை விளைவிக்கும் என்று ஐ.நா தலைவர்கள் அஞ்சினார்கள். ஐ.நா. அமைதி காக்கும் படையினர் விலக்கப்பட்ட பிறகு, பொஸ்னிய செர்பிய இராணுவம் சுமார் எட்டாயிரம் பொஸ்னிய முஸ்லிம் ஆண்கள் மற்றும் சிறுவர்களை தூக்கிலிட்டது. பின்னர் ஒரு சர்வதேச நீதிமன்றம் இந்தப் படுகொலையை இனப்படுகொலை என்று அறிவித்தது.

1999-ம் ஆண்டில், முன்னாள் யூகோஸ்லாவியாவில் வன்முறை மீண்டும் அதிகரித்தது, செர்பிய அதிகாரிகள் கொசோவோ அல்பேனியர்களுக்கு (செர்பியாவிற்குள் உள்ள கொசோவோவில் வசிக்கும் இன அல்பேனியர்கள்) ஒரு சுதந்தித் தனி நாட்டுக் கோரிக்கையை விடுத்தனர். இனச்சுத்திகரிப்பு உடனடி அச்சுறுத்தல் இருந்தபோதிலும், ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டுமா என்பதை ஏற்றுக்கொள்ள முடிய

வில்லை. இருப்பினும், இந்த முறை, வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (நேட்டோ) ஐரோப்பிய கண்டத்தில் பாரிய வன்முறையை பொறுத்துக்கொள்ள மறுத்தது. அமெரிக்கா வின் தலைமையில், கூட்டணி மோதலை முடிவுக்குக் கொண் டுவரும் முயற்சியில் ஒரு விரிவான குண்டுவீச்சு நடவடிக்கை யைத் தொடங்கியது. இனச் சுத்திகரிப்புக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் வெகுஜன அட்டூழியங்களைத் தடுப்பதற்கும் செர்பியாவைத் தாக்குவது நியாயமானது என்று நேட்டோ முடிவு செய்தது. இந்த முடிவு சர்ச்சைக்குரியதாகவே உள் ளது. ஒருபுறம், இது செர்பியர்களை விரோதப் போக்கை முடி வுக்குக் கொண்டுவருவதற்குத் தள்ளியது. ஆனால் இந்த நட வடிக்கைக்கு ஐ.நா.வின் அங்கீகாரம் இல்லை. இதனால் நேட் டோவின் இச்செயல் செர்பிய இறையாண்மையை மீறியதாக வும் இருந்தது. இக்குண்டுத் தாக்குதல்களால் பரவலான சேதம் மற்றும் இடப்பெயர்ச்சி ஏற்பட்டது. குண்டுவீச்சுகள் ஆயிரக்கணக்கான இறப்புகளுக்கு பங்களித்தது மற்றும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான கொசோவோ அல்பேனியர்கள் இடம்பெயர்ந்தனர். நேட்டோவின் நடவடிக்கைகள் மனிதாபி மான தலையீடுகளை மேற்கொள்வதில் சில உலகத் தலை வர்களிடையே ஆர்வம் இருப்பதை நிரூபித்தது. இருப்பினும், அத்தகைய தலையீடுகளுக்கு வழிகாட்டுதல்கள் அவசியம் என்று தெளிவுபடுத்தப்பட்டது.

ருவாண்டா மற்றும் முன்னாள் யூகோஸ்லாவியாவில் நடந்த வன்முறைக்குப் பிறகு, ஐக்கிய நாடுகள் சபை இதுபோன்ற துயரங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய முயன்றது. ஒரு பாரிய அட்டூழியத்தைத் தடுக்க, ஒரு நாட்டின் இறையாண்மையை மீறுவதன் நியாயப்பாடு பற்றிய கேள் வியை உலகத் தலைவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண் டிய கட்டாயம் ஏற்பட்டது. 2005-ல், அங்கீகரிக்கப்பட்ட காக் கும் கடப்பாடு முந்தைய தசாப்தங்களில் இருந்து ஒரு தீவிர மான மாற்றத்தைக் குறிக்கிறது. 2005-க்கு முன்னர், ஒருத லைப்பட்ச மனிதாபிமான தலையீடு ஒரு நாட்டின் இறையாண் மையை சட்டவிரோதமாக மீறுவதாக கருதப்பட்டது. இருப்பி னும், இந்தக் கொள்கையைப் பயன்படுத்துவது தந்திரமான தாக இருக்கும் என்பது கொஞ்சக்காலத்திலேயே புலனானது.

லிபியாவின் தலைவர் முகம்மர் கடாபி, உள்ளூர் எதிர்ப்புக ளுக்கு தீவிர வன்முறையைப் பயன்படுத்துகிறார் என்ற சாட்டை முன்வைத்து, ஐக்கிய நாடுகள் சபை காக்கும் கடப் பாட்டை 2011-ல் பயன்படுத்தியது. ஒரு படுகொலைக்கு அஞ்சி, கடாபியின் படைகளிடமிருந்து பொதுமக்களைப் பாதுகாப்ப தற்காக லிபியாவின் இறையாண்மையை மீறுவதற்கு ஐக்கிய நாடுகள் சபை நேட்டோவை அங்கீகரித்தது. இந்த தாக்குத லின் நோக்கம் குறுகியதாக இருக்க வேண்டும் என்று சொல் லியது. ஆனால் அது சீர்குலைக்கும் ஆட்சிமாற்ற நடவடிக் கையாக விரைவாக உருவானது. இறுதியில், கடாபி ஆட்சி கவிழ்க்கப்பட்டது, ஆனால் லிபியாவில் உள்நாட்டுப் போர் இன்னும் நடந்து கொண்டிருக்கிறது. இன்று, நாடு முன்னெப் போதையும் விட ஸ்திரமற்றதாகவும் வன்முறையாகவும் இருக் கிறது. இதன் விளைவாக, சீனா மற்றும் ரஷ்யா போன்றன எதிர்கால மனிதாபிமான தலையீடுகளுக்கு அனுமதிப்ப தில்லை என்ற முடிவுக்கு வந்தன. இதனால் தான் லிபியாவில் நேட்டோ செய்தததை சிரியாவில் செய்ய இயலவில்லை.

லிபியாவில் மனிதாபிமான தலையீடு ஒரு ஆட்சிமாற்ற நடவ டிக்கையாக உருவான பிறகு, உறுப்பு நாட்டின் இறையாண் மையை மீறுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையை இனி ஒருபோ தும் அனுமதிக்க மாட்டோம் என்று சீனாவும் ரஷ்யாவும் சபதம் செய்தன. சிரியாவில், உள்நாட்டுப் போர் தொடங்கியதில் இருந்து மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்த நிலை யில் நான்கு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொல்லப் பட்டுள்ளனர். ஏமனில், ஒரு உள்நாட்டுப் போர் உலகின் மிக மோசமான மனிதாபிமான நெருக்கடியை உருவாக்கியுள்ளது. மேலும் மியான்மரில், ரோஹிங்கியா சிறுபான்மையினருக்கு எதிராக அரசாங்கம் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளில் இறங்கியது. ஆனால் இந்த நெருக்கடிகள் ஒவ்வொன்றிலும், ஐக்கிய நாடுகள் சபையின் பதில் மட்டுப்படுத்தப்பட்டதா கவே உள்ளது. உலகெங்கிலும் உள்ள பல குடிமக்களுக்கு உடனடி அச்சுறுத்தல் இருந்தபோதிலும், இறையாண்மைக்கு மதிப்பளிப்பதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இடையிலான சரியான சமநிலையில் ஐ.நா மீண்டும் பிளவுபட் டுள்ளது. வெகுஜன அட்டூழியத்தைத் தடுப்பது ஒரு நாட்டின் இறையாண்மையை மீறுவதை நியாயப்படுத்துகிறது என் பதை உலக நாடுகள் ஒப்புக்கொண்ட காலமொன்று இருந் தது. ஆனால் 2011 லிபியாவின் தலையீடு காக்கும் கடப்பாடு என்ற கொள்கைமீதான சர்வதேச ஒருமித்தகருத்தை சிதைத்தது.

## தொடரும் குறிப்புகள்:

இறையாண்மை-தலையீடு குறித்த தடுமாற்றம் மற்றும் இனப் படுகொலைத் தடுப்பு ஆகிய பிரச்சனைகளில் காக்கும் கடப் பாட்டின் தாக்கம் பற்றிய கவலைக்குரிய இரண்டு புள்ளிக ளுக்குத் திரும்புவது முக்கியம். முதலாவது, காக்கும் கடப் பாடு என்ற கொள்கையின் ஏகோபித்த ஒப்புதலானது, மனிதா பிமான தலையீடு என்ற பொருளில் எளிமையாக விளங்கப் பட்டது. இது மனிதாபிமானத் தலையீட்டுக்கான ஒரு சட்டரீதி யான நியாயத்தை உருவாக்குவதாகவே இருந்தது. இதனால் காக்கும் கடப்பாட்டின் பெயரால் பல சட்டவிரோத நடவடிக் கைகள் நியாயப்படுத்தப்பட்டன. இரண்டாவது, குறித்த காக் கும் கடப்பாடு என்ற கொள்கையின் துர்ப்பயன்பாடு ஏற்படுத் திய தாக்கம், தலையீடு தேவைப்பட்ட பல நாடுகளில் சர்வ தேச சமூகம் அமைதிகாப்பதைத் தவிர்க்கவியலாததாகிற்று. அதற்கு இலங்கை ஓர் உதாரணம்.

காக்கும் கடப்பாடு 2011-ம் ஆண்டு லிபியா மீதான தலையீட் டின் பின்னரே தனது அங்கீகாரத்தையும் நியாயத்தையும் இழந்தது. ஆனால் இலங்கையில் போர் 2009-ல் கொடிய முடி வுக்கு வந்தது. அந்த சந்தர்ப்பத்தில் இலங்கையில் 'சர்வதேச சமூகம்" காக்கும் கடப்பாட்டை ஏன் பிரயோகிக்கவில்லை என்பது முக்கியமான கேள்வி. இது குறித்து அடுத்த கட்டுரையில் நோக்கலாம்.



meenilankco@thaiveedu.com



# வெ.மு. பொதியவெற்பனின் விமர்சனப் பார்வை

– சு. வேணுகோபால்

பொதியவெற்பன் கவிதை, புனைகதை, திறனாய்வு, பதிப்பியல், இலக்கியக் கோட்பாடு, அரசியல்துறை, சமூகவியல் என பல்வேறு தளங்களில் தன் மதிப்பீட்டை கடந்த 40 ஆண்டுகளாக வைத்து வருபவர். 'வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்' என்ற அவரது நூல் அண்மைக்காலப் புனைகதைகள் மீதான திறனாய்வு நூல். பொதியவெற்பனின் விமர்சன தருக்கநெறிமுறைகளையும் விவாதப் பண்புகளையும், இனங்காண்பதோடு அவரது பார்வைக் கோணத்தை அறிந்துகொள்ளவும் தெளிவுபெறவுமான விதத்தில் அமைந்த நூல் இது. பின்நவீனத்துவ சிந்தனைகளின் சாரத்திலிருந்து இலக்கியப் பிரதிகளை அணுகுவதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் விமர்சிப்பதற்குமான முறையியலைக்கொண்ட முதன்மையான முதல்நூல் இது எனக் கொள்ளலாம்.

எண்பதுகளுக்குப் பின் எழுதவந்த புனைகதையாளர்களைப் பற்றி விமர்சனத்திற்கு உட்படுத்துகிறது. சைவ பக்திநெறியில் உச்சமாகப் பேசப்படும் நந்தன் அன்றும் இன்றும் சாதிய முரண்களைக் கலைத்துப்போடும் உயிர்ப்புள்ள மாந்தனாகவே தொடர்கிறார். பக்தி இலக்கியப் பனுவலில் வரும் நந்தனை நவீன இலக்கியவாதிகள் பல்வேறு கோணங்களில் காட்டியுள்ளதைத் தொட்டுக்காட்டி சோலை சுந்தரப்பெருமாளின் 'அடிக்கல்', 'மரக்கால்', நாவல்களை ஆராய்கிறார் பொதியவெற்பன்.

வேத மரபினரான பார்ப்பனர்கள் இறை வழிபாடு என்ற அதிகாரம் மிக்க தலைமையைக் கைப்பற்றிய பின் சாதியப் பிரிவுகளைத் தீவிரப்படுத்தியபடி மக்களையும் அரசர்களையும் தங்களின் அடிமைகளாக ஆக்கிய வரலாற்றின் புள்ளிகளைத் தொட்டுக்காட்டி 'மரக்கால்' நாவலின் பேசுபொருளான நந்தனை ஆராய்கிறார்.

வேத ஆகம முறைகளுக்கு எதிர்நிலையாக தொடர்ந்துவரும் மரபான சைவ நெறிகளை ஏற்க மறுத்து புரோகித மரபை உட்புகுத்துகின்றது. அதற்குச் சாதியப் படிநிலைகளை வெகுநுட்பமாக பயன்படுத்திக்கொள்கின்றனர். சூத்திர சாதியில் வெள்ளாள சாதியை மேலடுக்கில் வைத்தும் மற்ற சாதிகளைக் கீழடுக்கில் வைத்தும் மக்களை ஒன்றுசேரவிடாமல் பகையை உண்டாக்கியிருக்கும் விதத்தை நாவலின் பாத்திரங்களிலிருந்து காட்டுகிறார். நிலம், கோயில், தேவரடியார், மன்னர், வேதமரபினர் தன்வசப்படுத்தியிருக்கும் வரலாற்றுப் பின்புலத்தை 'மரக்கால்' நாவலில் எடுத்துப் பேசுகிறார். வேளாளர், வைத்தியர், உடையார் என சாதியக் குழுக்களின் அதிகாரப் போட்டியின் உள்முரண்களில் மறைந்திருப்பதை எடுத்துக் காட்டுகிறார். இந்நாவலின் பேசுபொருளின் ஊடே தோத்தா-திரி, இந்த பிரிவிற்கு வர்க்கமுரண்தான் காரணம் என்று பார்ப்பதில் மற்றொரு பக்க உண்மையான சாதி மறைக்கப்படுவதை எடுத்து வைத்து, பூணூல்தானே எல்லா சாதி உயர்வு தாழ்வுக்கான கருவியாக இருக்கிறது. அந்த உயர்ந்த சாதி மனோபாவத்தைத் தரும் பூணூலை அறுத்து எறிவதுதானே சமத்துவத்துக்கான நகர்வாக இருக்கும் என்ற ஆழமான கருத்தை முன்வைக்கிறார் பொதியவெற்பன்.

திருப்புன்கூர் நந்தி சற்றே விலகியிருப்பதின் பின்னால் நிகழ்ந்திருக்கக்கூடிய சதி வேலையையும் தில்லைமா நந்தி நந்தனை மறைப்பதற்குக் கீழ்சாதிதான் தடையாக இருக்கிறது. தீயில் புகுந்து வெளியேறினால் புனிதமாகிவிடும் என்று உருவேற்றி சாகடித்த கதையையும் வேதமரபினரின் சூழ்ச்சியாக விரிப்பதை முன்வைக்கிறார்.

இந்த வேதமரபினரின் அகமலத்தைக் கண்டு சொல்கிற சோலை, தலித் மக்களுக்கு வைதீக தீட்சையோ சைவமடத்தின் தலைமையோ ஏன் கிடைக்கவில்லை என்று ஆராய்ந்து பேசவில்லை. காரைக்கால் அம்மையாரை முன்வைக்காமல் ஞானசம்பந்தத்தை சைவத்தின் தலைமையான இடத்தில் வைப்பதும் சாதியப் பிடிப்புதான் காரணம். இதுபற்றியெல்லாம் நாவல் உள்நுழைந்து பேசவில்லை. மதம் வெகுமக்களுக்கு எதிராகவும் வேதமரபினருக்குச் சாதகமாகவும் ஆகிப்போன முரணை எல்லா பாதைகளிலும் சென்று பார்த்து களையவேண்டிய இடங்களைச் சுட்டுவது பொதியவெற்பனின் பார்வையாக வெளிப்படுகிறது. அதேபோல நந்தன் நிலத்தோடு பின்னி வாழ்பவன். அந்த மதம் மலரவில்லை. மலர்ந்திருக்க வேண்டிய பகுதி என்பதை தி.சு. நடராசன் கோபாலகிருஷ்ண பாத்திரத்தில் நந்தன் கதைப் பாடலை பார்த்தப் பார்வையை முன்வைத்துச் சுட்டுகிறார்.

நந்தனை எரித்த நெருப்பின் பின்னால் இப்படியான அரசியல் இருப்பதைச் சுட்டிக்காட்டும்போது, மத நம்பிக்கை என்ற உணர்வும் வெகுதீவிரத்தன்னையை உண்டாக்கியிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். சீதை தீப்புகுந்தது, வைணவ நெறியில் இரண்டு சக்திகளுக்கு இடையில் ஊடிப் பயணிப்பது, கலிங்கத்துப்பரணியில் வெற்றிக்காக கொற்றவை முன் தன் தலையை தானே அறிந்துகொள்வதுமான நிகழ்வுகள், கிராமங்களில் சத்தியம் தவறாதவர் என்பதற்காக சுடாத மண்சட்

டியில் சமைத்துக்காட்டச் சொல்வது என பல்வேறு வடிவங்கள் அறிவியல் உண்மைக்கு மாறானவையே. உண்மையைப் பெற இந்த நம்பிக்கைக்குத் தீவிரவடிவம் புகுத்தப்பட்டது. என்றாலும் இது குறித்த சமுதாய ஆய்வும் தேவை.



சோலை சுந்தரப்பெருமாளின் மற்றொரு படைப்பான ‘தாண்டவபுரம்’ நாவல் ஞானசம்பந்தம் ஏற்படுத்திய சைவ வளர்ச்சிப் பணியின் பெருமிதத்தைப் பேசுகிறது. சைவ பக்திநெறியில் வந்த ஞானசம்பந்தர் வைதீகக் கருத்தியலை முன்வைத்தவர். சமண, பௌத்த எதிர்ப்பாளர். அவை தமிழ்ச் சமூகத்தில் இடையில் வந்து கலந்தவை. புறசமயம் என்று கருதுபவர். பார்ப்பனக் குலத்தில் பிறந்தவர். சைவக் குரவர்களான மூவரை ஆளுடையப்பிள்ளை என்று அடையாளமிட்டு அழைப்பது வழக்கம். சோலை, பிள்ளை என்ற நாயன்மார்களுக்கான சிறப்புச் சொல்லை பிள்ளை என்ற வேளாள சாதியில் ஞானசம்பந்தர் பிறந்தவராகக் கற்பிதம் செய்ததில் நேர்ந்த தவறானது சமய வரலாற்றின் மெய்காண் முறையையே தவறாகக் காணவைத்துள்ளதை எடுத்துவைக்கிறார்.

சைவநெறியில் திருமூலரின் பாதை ஒன்றாகவும் அப்பர், சம்பந்தர், திருநாவுக்கரசரின் பாதை ஒன்றாகவும் சேக்கிழாரின் பாதை ஒன்றாகவும் அமைந்து ஒன்றுக்கொன்று இணைந்து சைவம் வளர்ந்ததைப் பிற தமிழறிஞர்களின் பார்வைகளின் வழி முன்வைத்து சமய வரலாற்றின் பின்புலத்திற்கு ஒத்துரழ்ந்து எழுந்துவராத படைப்பு ‘தாண்டவபுரம்’ என்று காரணங்களை எடுத்துவைத்துப் பேசுகிறார். சேக்கிழாருக்குப் பின்னான சைவம் வைதீகம் கலந்ததாகிறது. பார்ப்பனரும் வெள்ளாளரும் கட்டமைத்த சைவமாகிறது. இந்த பக்தி இயக்கப் பின்புலத்தைக் கணக்கில் எடுக்காமல் வெறுமனே சம்மந்தரை தமிழ்க் குடியின் வேளாளப் பிள்ளை சமூகத்திலிருந்து வந்தவராக தாண்டவபுரத்தில் நிலைநிறுத்தப் பார்ப்பது சைவ பக்திப் பனுவல் காட்டும் கருத்தியலுக்கே முரணானது என்று முன்வைக்கிறார்.

ஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒரே காலத்தவராகக் கொண்டு சம்பந்தரை சிவிகையில் திருநாவுக்கரசர் தூக்கிச் சுமந்தவராக கதைகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் சம்பந்தர் சைவத்திற்குள் வேதமரபை போற்றுபவராகவும் திருநாவுக்கரசர் சைவத்தில் வேதமரபை மறுப்பவராகவும் செயற்பட்ட விதத்தை பொதியவெற்பன் பக்திப் பனுவல்களைக் கொண்டு காட்டுகிறார். சம்பந்தர் தன்னைப் பார்ப்பனர் என்று வெளிப்படுத்திக்கொள்வதில் உள்ள மேலாண்மை மனம் ஊறிக்கிடப்பதும், சாதியை திருநாவுக்கரசர் மறுத்து சைவத்தை முன்னெடுப்பதையும் நிறுவப்பட்ட ஆய்வுகளின் வழியாகவும் தான் கண்ட வழித்தடத்தின் வழியாகவும் முன்வைக்கிறார். சைவத்துவம் நான்மறைகளைக் கொண்டது, அதனை நான்மறையாக (வேத சார்பான) கொள்வது பிழையானது. வேதம் மந்திரத்தோடும், சைவ தந்திரம் என்பது ஆகம வழிபாட்டுடன் தொடர்புகொண்டுள்ளதை விளக்குகிறார். சைவத்தைப் போற்றிய திரு. வி.க., அ.ச. ஞானசம்பந்தன், மறைமலை அடிகள் வேதமரபை ஏற்றுக்கொண்டதில் சைவம் தழைத்தோங்க வேண்டும் என்ற சமரச நோக்குப் புதைந்திருப்பதை பொதிய வெற்பன் தெளிவுபடுத்துகிறார். திருமூலரின் சித்தர் மரபு கோயில், வேத பண்பாட்டை எடுத்துக்கொண்டது. பிற்காலச் சித்தர்களின் சிந்தனைகளை நிறுவன சமயத்தின் அதிகாரத்தை எதிர்ப்பதாக இருக்கிறது. இவ்விதம் சைவ பக்தி இலக்கிய நெடும்பரப்பில் ஊடாடும் நுண் அரசியலை எடுத்துவைத்துப் பேசாமலும் சமய அரசியல் பின்னலைப் புரியாமலும் பேசுவதைச் சுட்டுகிறார். மேலோட்டமான பார்வையில் சைவ வளர்ச்சி வேளாளரின் பெரிய பங்களிப்பதாகச் செய்திருக்கும் புனைவு அக்கால சமூக சிக்கலின் அடிப்படையைப் புரிந்துகொள்ளாமலே செய்திருப்பதைச் சுட்டி நிறுவியிருக்கிறார்.

சைவ வளர்ச்சியில் சமணர்கள் தடையாக இருந்தார்கள். மக்களை சைவத்தின்வழி ஒன்றுதிரட்டுவதைச் சிதைப்பதில் சித்தர்கள் கவனம் செலுத்தினர். இதையெல்லாம் மீறி சம்பந்தர் சைவத்தின் பக்கம் ஒன்றுதிரட்டினார். சமணர்களுக்கு எதிராக அரசு அதிகாரம் சமணர்களைக் கழுவேற்றியது என்கிற பார்வையில் தாண்டவபுரத்தை உருவாக்கியிருப்பது, பின்நவீனத்துவ வாழ்முறையை நம்பிக்கையைச் சிதைப்பதாக ஆக்குகிறது. சமண சமயத் துறவியான இளங்கோ உருவாக்கிய காப்பியத்தில் சமய காழ்ப்பு இல்லை. தாண்டவபுரத்தில் சைவ சமயத்தின் சார்பாக சோலை மாறிநின்று பிற சமயத்தவரை சைவசமய எதிரிகளாகச் சித்தரித்திருப்பது ஒரு இடதுசாரி

யின் பெருவீழ்ச்சியே என்கிறார். சம்பந்தரை அவரது திருமண நிகழ்வில் சமணர்கள் எரித்தனர். 8000 சமணர்களை பாண்டிய மன்னன் கழுவேற்றினான் என்கிற இரு செய்திகளிலும் அதிகாரம் உள்ளவர்களே நிகழ்த்த முடியும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. சம்பந்தருக்கும் தேவதாசி மனோன்மணிக்கும் இல்லற உறவின்வழி கருவுறுகிறாள். அவளது பிரசவத்தைச் சமணப் பெண்கள் வெகு நேசத்துடன் பார்த்த பகுதி மட்டுமே மதிக்கத்தக்கதாக இருக்கிறது. மற்றபடி தாண்டவபுரத்திற்குள் சோலையின் மத அரசியல் இந்து மதத்திற்குச் சார்பானஒன்றாகவே அமைந்திருக்கிறது என்கிறார்.

‘தாண்டவபுரம்’ நாவலை முன்வைத்து எழுதியிருக்கும் மூன்று ஆய்வுக் கட்டுரைகள் ஒரு பெரிய திறப்பை நமக்குத் தருகிறது. வரலாற்றுப் பின்புலத்தில் நாவல் எழுதும்போது வரலாற்று காலத்து சமூக உறவுகள், இறைகோட்பாடுகள், பண்பாடுகளைப் பின்நவீனத்துவ அறிதலோடு நெருங்கி உருவாக்கும்போதுதான் அது ஒரு முழுமைபெற்ற படைப்பாக இருக்கும் என்பதை பொதியவெற்பன் குறிப்பது படைப்பு சார்ந்த மிகச்சிறந்த கருதுகோளாக அமைகிறது.

பொதியின் பார்வை பிற சமூகத்தின்மீது கொள்ளும் காழ்ப்பை, ஆதிக்கத்தை, அடிமைத்தனத்தை, நிராகரிப்பைக் கொண்டிருக்கும் எந்தப் பிரதியையும் எதிர்க்கிறார் என்பதுதான். எதிர்ப்பதற்கான காரணங்களை எடுத்துவைக்கிறார். இது பொதியவெற்பனின் ஆய்வுமுறை. இதை எழுதும் இந்தத் தருணத்தில் ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்’ என்ற குறள் ஞாபகம் வருகிறது.

திராவிட இயக்கம், காலத்தின் தேவையிலிருந்து எழுந்த சமூக நிகழ்வு. பொதுவுடமை கட்சியும் 50-களில் வர்க்கபேதத்தை நீக்க முனைந்து அரசியலில் செயலாற்ற விழைந்தது என்பது முக்கியமான நிகழ்வு. இதைச் சுட்டிக்காட்டும் பொதியவெற்பன் இலக்கியத்தை வெகுஜன இதழ்கள் வாழ்வின் சிக்கல்களை, நெருக்கடிகளை ஆழமான கண்ணோட்டத்தில் அணுகாமல் அவற்றிலிருந்து ஒதுங்கி சாதாரணமான பொழுதுபோக்கு அம்சங்களுக்கு முக்கியம்தந்து வெளியிடுவதை முதன்மையாகக் கொண்டன. இத்தன்மைக்கு மாறாக சிறுசிறு நண்பர்கள் குழாம் சிற்றிதழ்களைத் தொடங்கி தீவிரமான இலக்கியப்போக்கின் பக்கம் திருப்பினர். இவற்றில் குறுங்குழுவாதம் மேலோங்கி இருந்தது. தரம் சார்ந்து ஒரு இலக்கிய மதிப்பீட்டை அவர்களே உருவாக்கினர். அவர்களிடம் இருந்த இந்தக் குறையை மேட்டிமைத்தனம் என்று சொல்லிமட்டும் ஒதுக்கிவிட முடியாது. பல திராவிட, முற்போக்கு இலக்கியப் பிரதிகளில் கலைத்துவும் கூடிவரவில்லை என்றும் வாழ்க்கைக்கு நெருக்கமாக இல்லை என்றும் விமர்சிப்பவர்களை திராவிட இயக்க ஒவ்வாமை என்கிறார். என்னைப் பொறுத்தவரை இந்த விமர்சனத்தைச் சவாலாக ஏற்றுக்கொண்டு திராவிட இயக்க, பொதுவுடமை இயக்க வழியில் வந்த படைப்பாளியாக செயலாற்றியிருக்க வேண்டும் என்பதுதான். அப்படியொன்றும் நிகழவில்லை என்பதும் தெரிகிறது.

ரசனை என்பதைக்கூட பொதியவெற்பன் மிகவும் எளிமைப்படுத்தி ஒரு நோஞ்சான் நோக்கு என்பதாகத்தான் எழுதுகிறார். ரசனை என்பது டி.கே.சி. அணுகிய விதம் மட்டும்தானா? டி.கே.சி. செய்தது சுவை உணர்வு. ரசனை என்பது நான் ரசிப்பதாக மட்டும் கொள்ளவில்லை. தனித்துவம், உண்மையொளி, நம்பகத்தன்மை, புதிய பாதை, தீவிரத்துடன் வாழ்வை புரிந்துகொண்ட விதம் என பல அம்சங்கள் ஊடி இயைந்து உருவாகியிருப்பதையும் அதனை வாசகன் காண்கிற ஆற்றலையும் சேர்த்துதான் ‘ரசனை’ என்ற சொல்லால் குறிக்கிறேன். படைப்புச் சக்தியின் ஒட்டுமொத்த பலத்தைக் குறிக்க ‘ரசனை’ என்ற சொல்லை நான் எடுத்துக்கொள்கிறேன். க.நா.சு.வின் இலக்கியம் குறித்த புரிதலை, தன் மதிப்பீட்டை பொதியவெற்பன் ஒரு ரசனைவாதி என்று மேலோட்டமாக கேலிசெய்யும் தொனியில் சொல்வது நியாயமாகப்படவில்லை. அவருடைய கட்டுரைகளை ஓரளவு முழுமையாகப் படித்தவன் என்ற வகையில் எனக்குள் உருவாவது அவர் டி.கே.சி.போல ரசனைவாதி அல்ல. வாழ்வின் தீவிரத்தைத் தன் தனித்த ஆற்றலால் இலக்கியப் பிரதியில் வெளிப்படுத்தியிருக்கும் தன்மையைத்தான் முதன்மையாகக் கருதுகிறார். அவர்களை மேதை என்றும் குறிப்பிடுகிறார். புதுமைப்பித்தன், டால்ஸ்டாய், தாஸ்தாவேஸ்கி எனவாங்கு அவர் முன்வைப்பது இந்த அடிப்படையில்தான். அவ்விலக்கியப் பிரதிகள் ரசானுபவத்தோடு இருப்பதை நேசிக்கவும் செய்திருக்கிறார். வெறும் ரசனையை மட்டுமே முன்வைக்கும் பிரதியை அவர் கொண்டாடியதில்லை. க.நா.சுவை வெறுமனே ரசனைவாதி என்று கொஞ்சம் மட்டம்தட்டும் தொனியில் பார்ப்பது அவரது இலக்கிய ஆளுமையை மிக குறைத்து மதிப்பிடுவதாகும்.

பொதியவெற்பன் கலையம்சத்தைவிட கருத்தம்சத்திற்கு அதன் பேசுபொருளுக்கு முக்கியத்துவம் தருகிறார் என்பதுதான் தூக்கலாகத் தெரிகிறது. என்றாலும் பொதியவெற்பன் யார் கலைஞராக வாய்க்கப்பெற்றவர் என்பதை அறிந்தவர். படைப்பின் வெற்றி படைப்பாக்கத்தின் தனித்தன்மையில் கூடி இணைந்து உருவாகி வருவது என்பதில் தெளிந்த சிந்தனை உடையவர். அழகியல் குறித்தான இச்சிந்தனைகளை முன்வைத்திருப்பவர்களின் கருத்துக்களை அரண்செய்து பேசியிருக்கும் ஞானதிரவியம் எழுத்துக்கள் மீதான கட்டுரையைப் படித்தால் தெரியும். ந. முத்துமோகன், மணிவண்ணன், மாலன், அ. மார்க்ஸ், சுந்தர ராமசாமி, ஆதிமூலம், ஞானதிரவியம் முதலியவரின் எழுத்தாக்கம் குறித்த சிந்தனைகளை எடுத்துவைப்பதிலே பொதியவெற்பனின் படைப்பாக்கச் செயற்பாட்டில் கொண்டிருக்கும் அக்கறை விளங்கும். வாய்ப்பு கிடைக்கும்போது புதுமைப்பித்தன், பிரேமிள், வண்ணதாசன் இவர்களின் படைப்புச் செயற்பாட்டில் வெளிப்படும் கலையாற்றலை எடுத்துரைத்தே வந்திருக்கிறார். புதிய படைப்பின் தீவிரத்தன்மையை எப்படி உறிஞ்சிக்கொள்ள முடியும் என்பதற்கு தெளிவாகத்தரும் கருத்துக்களையே அழகியல் கொள்கை எனலாம். இந்த அழகியலின் உள்ளுறைந்து இருப்பதுதான் ரசனை என்பதும் இதன் பகுதியாகவே நான் கொள்கிறேன். விசயத்தின் முப்பரிமாணத்தை உள்வாங்கி வெளிப்பட்டிருக்கும் படைப்பில்தான் ரசனையும் மிளிர்ந்துவரும். தமிழ்ச் சினிமாவின் காமெடி ட்ராக்போல ஒட்டாது செய்யப்படும் ஒன்றல்ல.

சோலை சுந்தரப் பெருமாளின் நாவலில் சமூகப் பார்வை ஆழ அகலங்களோடு வெளிப்பட்டிருப்பதையும் ‘தாண்டவபுரம்’ மாற்றுப் பக்கங்களின் நியாயங்களின் மீது கவனம் செலுத்தாமலேயே ஒற்றைத் தன்மையாகவும், தவறான பார்வை மீது கட்டப்பட்டிருப்பதையும் செறிவாக ஆராய்ந்து சொல்லியிருக்கிறார். அதேபோல ஞானதிரவியத்தின் படைப்புகளைச் சிறப்பாகவே மதிப்பிட்டிருக்கிறார்.

‘கள்ளர் இனவரைவியலை தஞ்சை வட்டார மொழியில் மேலெடுத்துச்சென்ற சி.எம். முத்து, தஞ்சைப்பிரகாஷ் இவர்களுக்கும் அடுத்தப் பாய்ச்சலான ஊற்றுக்களைத் திறந்து மடையை திருப்பிவிடப்பட்டிருப்பது ஓர் அருங்கொடை. ஞானதிரவியம் எழுத்தாக்கங்களில் வெளிப்படும் கவித்துவத்திற்கும், கதை பாங்கிற்கும் உரிய தாதுமூலங்கள் யாவற்றிற்கும் ஆதார சுருதியானது அவரை ஈன்றெடுத்த அத்திவெட்டி மண்ணாதாரமே’. ‘பொருள்வயிற் பிரிவின் வாழ்புலம் இழந்த துயர், புகலிட அவலம், சிதிலங்களாகும் விழுமியங்களின் சின்னாபின்னங்கள், விழுமியங்களைப் பேணா கல்விப்புலச் சீரழிவுகள், குடும்ப வன்முறையின் வலைக்கண்ணிகளிடையே அலைக்கழியும் ஓர்மையற்ற ஓர்ந்தும் விடுபடமாட்டா எழுத்துக்களின் வடுப்பாய்ந்த வியாகுலங்கள், வட்டாரக் கிளைமொழி, இனவரைவியல், நிலவரவியல் என ‘அத்திவெட்டித் தமிழ்’ நெடிகப்பிய ‘அகஒட்டு’ தாக்கத்தை மீக்கூறச் செய்கிறது. இத்தகைய கூறுகளின் வெவ்வேறு அம்சங்களும், வெவ்வேறு பரிமாணங்களும் ஞானதிரவியத்தின் சிறுகதைகளுக்கு ஊடாகவும் அமைந்திருக்கின்றன. சிறுகதைகளுக்கான தலைப்புகளின் பெயரிடுதலும் ‘அகஒட்டு’ எனும் புதினத்தின் பெயரீடு போலவே உன்னிப்பான கவனிப்பின் உச்சபட்சம் துலங்கவல்லதாகும்’.

‘அருமையான சங்கேதகங்கள் எளிமையான சொலவங்களுக்கு ஊடாக நிலையோடு கிடப்பதே ஞானதிரவியத்தின் புனைவுவெளி’

‘அகஒட்டு’ நாவலிலும் ‘வெற்றிடம்’ ‘கொமரு’ ‘பொங்க’ சிறுகதைகளிலும் நகர்மயமாதல், உலகமயமாதல், ஊடகமேலாதிக்கம் இவற்றால் ஏற்படும் பண்பாட்டு வெற்றிடம், அடிமைக் கல்விமுறையின் ஆதிக்கமும், பெறுமதிமிக்க விழுமியங்களின் அழிபாடுகளும் - மாற்றுக் கல்வியாளரின் நெஞ்சத்து அவலங்களாகவும் அருமையாகச் சித்தரிக்கப்பெற்றுள்ளன’.

‘சுவரிடுக்கில் ஆல்’ சிறுகதை குறித்து ‘சிறு’ தெய்வங்களிடையே மாட்டப்பட்டு வசவுரிக்கப்படும் பிள்ளையார் குறித்த பதிவுகளூடே காணக்கிடக்கும் அங்கதம் என்பது குத்திக்கிழிக்கும் அங்கத வகைமையின் பாற்பட்டதாகும்... கோயிற் பண்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கும் பிற்காலச் சித்தர் மரபின் தொடர் நீட்சியாகவும் ஆந்திரத் திகம்பர கவிகளிடமும், தெருக்கூத்தின் கோமாளிகளிடமும் பயின்று வரும் பாங்கினதாகவும் இதனை அடையாளப்படுத்தலாம். இது அடித்தட்டு மக்களிடமும் படைப்பிற்கான முன் நிபந்தனையாக இருப்பது குறித்த ஒரு தலித்தியப் பார்வையையும், மிகைநகை யதார்த்தம் எனப்படும் கோமாளிய யதார்த்தம் குறித்த பதிவையும் இங்கே ஒருசேர நோக்கலாம்’ என்று இலக்குமிகுமாரன் ஞானதிரவியம் படைப்புகளை மேன்மையாகவே மதிப்பிடுகிறார். குறையாக பார்க்கப்பட வாய்ப்புள்ள இடங்களைக்கூட ‘மிகைநகை யதார்த்தம்’ எனப்படும் கோமாளி யதார்த்தம் என்ற சொற்தொடரால் மதிப்பு தந்தே மதிப்பிடுகிறார். இந்தப் பார்வை மற்ற படைப்பாளிகளை மதிப்பிடும்போது ஒளிமங்கி எதிர்மாறலான மதிப்பீட்டை முன்வைப்பதில் விரும்பிச் செயற்படுகிறது.

ஒரு வகையில் முற்போக்குத்தொனி வெளிப்படையாகத் தெரியும் படைப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்து மதிப்பீடு செய்கிறார். தன்னை முற்போக்குவாதி என்று வெளிப்படையாக கூறிக்கொள்ளாது சிறந்த முற்போக்கு கதைகளை எழுதுபவர்களை சோலை, இலக்குமிகுமார ஞானதிரவியம், பெருமாள் முருகன் வரிசையைவிட மேலான தரத்துடன் எழுதியிருப்பவர்களைக்கண்டு எழுதவேண்டும் என்ற தேடல் இல்லை. மாறாக இலக்கிய அரசியல் சாதிய உள்முரணைப் பேசும் படைப்புகள் மீது ஒருவகையில் பரபரப்பாக்கிவிடுவதில் கவனம் செலுத்துகிறார். பரபரப்பிற்கு உள்ளாகாத பிற சமூகப் பிரச்சினைகளில் கவனம்கொண்ட முக்கியமானப் படைப்புகளைப் படைப்புகளாக மதிப்பீட்டிற்கு உள்ளாக்கவில்லை. வந்ததை வரவில் வைத்திருக்கிறார் என்று சொல்லவரவில்லை. (இலக்கிய நட்பு, எதிர்ப்பு என்ற நிலையில் மட்டுமே செயலாற்றியிருகிறார்) வெகுமக்களிடம் பிரச்சினைகளுக்குரிய படைப்புகளாகப் பேசுபொருளாக்கிய படைப்பாளர்களை அவர்களின் இலக்கியச் செயற்பாடுகளை ஒடுக்கப் பார்க்கிற பண்பாட்டுக் காவலர் என்று சொல்லிக்கொள்கிற வலதுசாரிகளின் பாசிச கருத்தியல்களுக்கு எதிராகப் படைப்பாளிக்கும் அவர்தம் படைப்பிற்கும் உள்ள சமூக அக்கறைகளை எடுத்து விவரிப்பதோடு ஒரு சமூகத்தின் வளர்ச்சிப் பாதையில் அப்படைப்புகள் நிற்கிற தகைமையைத் தடுக்கிற தடைகளைச் சுட்டிக்காட்டி ஆராய்கிறார். அதேபோல படைப்பு பன்முக இருப்பை மறுத்து ஒற்றைத்தன்மையான கருத்தியலை தூக்கிப்பிடிக்கிறபோது அதன் தீய விளைவுகளை வரலாற்றின் தடத்தில் வைத்து முன்வைக்கிறார்.

மூன்று கட்டுரைகள் இலக்கியத்திற்கு எதிரான திருச்செங்கோட்டில் வளைந்த செங்கோலும் ‘மாதொருபாகனி’ல் தெரித்த பரல்களும், ‘மாதொருபாகன்’ நாவல் ஆங்கிலத்தில் வந்தபின் அதனை பிரச்சினைகளுக்கு உள்ளாக்கி தடைவிதிக்க இந்து அமைப்புகள் எப்படி மறைமுகமாகச் செயற்படுகின்றன என்பதற்கான ஆதாரங்களைச் சொல்லி, இதற்கு ஆதரவாக நிற்பவர்கள் யார் யார், அரசியல்வாதிகள் யார் யார், இவர்களின் நோக்கங்களின் உட்கிடை என்பதைச் சொல்லி இந்து புராணிக ஆக்கங்களில் அங்கீகரிக்கப்பட்ட பாலியல் மீறல்களை இன்று புனைவில் சொல்லும்போது எதிர்ப்பைக் கிளப்புவதில் உள்ள உள்நோக்கங்களை அலசுகிறது. ‘கருத்துச் சுதந்திரம், கட்டப் பஞ்சாயத்தும் இலக்கிய பஞ்சாயத்தும்’ கட்டுரை ‘மாதொருபாகன்’ நாவலை முன்வைத்து மத அதிகாரம், சாதிய அதிகாரம், அரசியல் அதிகாரம் என இந்துத்துவ நிறுவன அமைப்புகள் செய்கின்ற ஆக்கத்தின் அழிப்பைப் பற்றியும் அரசியல் தலைவர்களான காந்தியடிகள், நேரு, இராஜாஜி, விவேகானந்தர் இவர்களை அடிமனதில் இருத்தி மதம் குறித்து கொண்டிருக்கும் கருத்துக்களையும் சமூக நெகிழ்ச்சியை மறுதலித்து பெருமாள் முருகனை எழுதவிடாமல் செய்கிற ஆர்.எஸ்.எஸ். முதலான இந்துத்துவ அமைப்புகளுக்கு எதிரான குரலை பொதியவெற்பன் முன்வைத்து பெருமாள் முருகனின் எழுத்துச் சுதந்திரத்திற்கு அரண் செய்கிறார்.

‘முறைகேடாகப் பிறந்த கதைகள் கோலமாறும் கலைடாஸ் கோப்பின் காட்சிப் பிழைகள்’ கட்டுரை மோடியின் பாசிச ஆட்சியில் தொடங்கிய மதவெறுப்பு, மதக் கலவரத்தின்வழி அவர்கள் கட்டமைக்க விரும்பும் அரசியலைப் பேசுகிறது. டி.எம். கிருஷ்ணா தொடங்கி, மேனகாகாந்தி, காந்தியடிகள், அமித்ஷா, சோ, தினமலர், ஜெயமோகன், சாரு நிவேதிதா முதலியவர்கள் இஸ்லாமியர்களை இரண்டாம்தர குடிமக்களாகப் பார்க்கிற பார்வையை இனம்காட்டுகிறார். மருதயன்,

ந. முத்துமோகன், அஸ்கார் அலி, பி.ஆர். அம்பேத்கார், ராமசந்திர குஹா, இந்து, தினமணி நாளிதழ்களில் வந்த கட்டுரைகளை இனம்காட்டி அச்சமற்ற ஓர் இணக்கமான நற்சூழலை இஸ்லாமியர்களுக்கு உருவாக்கித்தராமல் எப்படி இந்து அமைப்புகள் பேதத்தை உருவாக்கிவிடுகின்றன என்பதை மேற்கோள்களுடன் முன்வைக்கிறார். இந்து முஸ்லிம் இரு இனங்களின் மோதலை வளர்த்துவிடுவதைப் போலவே 'மாதொருபாகன்' நாவலை வெள்ளாளருக்கு எதிரான சாதிய நாவல் என்று கூறி பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தி பெருமாள் முருகனை முடக்கப் பார்ப்பதை எதிர்க்கிறார். ஒருவகையில் சாதிய, மதத்தின் பெயரால் ஏற்படும் பேதத்தை, ஒடுக்குமுறையை வன்மையாகக் கடிகிறார். மூன்று கட்டுரைகளும் பிரதிக்கு வெளியே மத நிறுவனவாதிகள் எப்படியெல்லாம் மக்களைத் தூண்டிவிட்டு எழுத்தாளர்களை முடக்கப்பார்க்கிறார்கள் என்பதை உலகின் முன்வைக்கிறார். இந்துக்களால் இஸ்லாமியர் பாதிக்க நேருவதைப்போலவே இஸ்லாமியத் தீவிரவாதிகளால் மக்கள் பாதிக்கப்பட்டதை எடுத்துவைத்து பேசியிருக்கவேண்டும். இது கட்டுரையில் பேசப்படாதப் பகுதியாக நிற்கிறது. கோவை குண்டுவெடிப்பு, பாராளுமன்றத் தாக்குதல், இந்துத்து தலைவர்கள் கொலைவழக்கு என்று வன்முறை நிகழ்ந்ததையும் இணைத்துப் பார்த்திருக்க வேண்டும். மோதலின் இரண்டு முகங்களில் ஒரு முகத்தைக் கிழித்திருக்கிறார். மத அடிப்படைவாதிகளின் ஒருமுகம் பேசப்படாமல் மறைக்கப்படுகிறது. மதவெறுப்பைத் தூண்டி வளர்க்கும் இந்து அமைப்புகளின் அரசியல் செயற்பாட்டை வெளிப்படையாக முன்வைத்துப் பேசியிருக்கிறார். பொதியவெற்பன் படைப்புகளின் தார்மீக எழுத்துரிமையின் பக்கம் நின்று பேசுவதும் வற்புறுத்துவதும் ஆரோக்கியமான செயற்பாடாகும். 'ஐந்தவித்தான்' நாவல் குறித்து விமர்சனத்தில் முன்னீடாக பின்நவீனத்துவத்துக்கால இருப்பை புரிந்துகொள்வதற்கான விரிந்த கருத்தாடல்களை முன்வைத்திருக்கிறார். நவீனத்துவச் சிந்தனை மரபிலிருந்து மாற்றான வெளிச்சத்தைச் சமூகத்தின்மீது பாய்ச்சி பேசாபொருளை, பேசக்கூசிய வாழ்க்கையை, பேசுவதற்கான தார்மீகப் பொறுப்பை, சிந்தனைகளை முன்வைக்கிறார். நாவலில் திருக்குறள் ஓர் ஊடிழைப் பிரதியாக இணைந்து அறம் சார்ந்த வெளியைப் பேசுகிறது.

இரண்டாவது பின்நவீன எழுத்தாக்கங்களை வாசிப்பதற்கான எண்ணற்ற வாயில்களையும் அதற்கான பின்புலங்களையும் எடுத்துவைக்கிறார். இந்த இரண்டு அம்சங்களின்வழி 'ஐந்தவித்தான்' நாவல் குறித்து தனக்கான ஒரு வாசிப்பு அனுபவத்தை அந்நாவலின் ஊடாக கதையாடலை நிகழ்த்துகிறார். 'ஐந்தவித்தான்' நாவலை மட்டும் வாசிப்பதற்கான பற்றுக்கோடாக அல்லாமல் பின்நவீனத்துவச் சூழலையும் பின்வீனத்துவ எழுத்துக்களை வாசிப்பதற்கான வழித்தடமாகவும் செறிவுபடுத்தியிருக்கிறார். நாவலில் மனநோய் தோற்றமும் வளர்ச்சிதை மாற்றமும் பின்நவீனத்துவ வாசிப்பு முறைக்குரிய ஒன்று.

அர்த்தத்திற்கான மொழி என்பதிலிருந்து விலகி மொழியின் விளையாட்டில் உருவாக்கிக்காட்டும் பொருண்மையானது பல்வேறு பிரச்சினைகளைப் பல்வேறு எல்லைகளைத் தொட்டுப் பெரியப் பின்னலாக விரியும் சாத்தியங்களைப் பிரதி கொண்டிருப்பதை பொதியவெற்பன் கதையாடலில் அறிய முடிகிறது.

மொழி குறித்த சிந்தனைகளை தொல்காப்பியர், பெர்டினட் டி. சசூர், தெய்வச்சிலையார், எம்.டி. முத்துக்குமாரசாமி, கா. பஞ்சாங்கம், ச. பாலசுந்தரம், பிரேம் ரமேஷ், பி.ஆர். அம்பேத்கர், காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் என பல்வேறு அறிஞர்கள் சொற்கள் உருவாக்கும் அர்த்தபாவங்கள், குறியீட்டுத்தன்மைகள் இட கால சூழலில் வெளிப்படுவதை எடுத்துக்காட்டுகிறார்.

ரோலான் பர்த், எச். முஜீப் ரஹ்மான், தமிழவன், நோயல் ஜோசப் இருதயராஜ், லெகான், ஜாக்வெஸ், அலன்ஸ் மில்லர், க. பூரணச்சந்திரன், பூ.கோ. ஜிலியோ கிறிஸ்தவா, லெவிஸ்ட்-ராஸ் முதலியோர் பின்நவீனத்துவ எடுத்துரைப்பு குறித்து கூறிய கதைவெளிப்பாட்டு முறைகளை அரணாகக்கொண்டு ஐந்தவித்தான் நாவலின் கதையாடலைச் சொல்கிறார்.

பின்நவீனத்துவவாதிகள் வாழ்க்கை குறித்தும் பின்நவீனத்துவ கதையாடல் குறித்தும் முன்வைத்த கருத்தியல்களைக் கைக்கொண்டு நாவலை அறியத் தருகிறார். வாழ்வின் கூறுகளை மறைக்கப்பட்ட வரலாறுகளை மேலைநாட்டுச் சிந்தனைகளை கற்பனையின் சாத்தியங்களை வெவ்வேறு விதமாக வெட்டி இணைத்து புதிய புனைவு ஒழுங்கில் உருவாக்கி வாசகனுடன் உரையாடலை நிகழ்த்துவதை எடுத்துவைக்கிறார். உரையாசிரியர்கள் குறிப்பாகச் சொன்னமைக்கு (கலைச்சொற்கள்) அந்த விளக்கங்கள்போல இந்த நாவல் பிரதிகளுக்கு பொதியவெற்பன் எடுத்துவைத்துத் தரும் பொருள் நன்றாக இருக்கிறது.

தாய்மை குறித்து, தந்தைமை குறித்து, காமம் குறித்து, காமத்தைத் தாண்டுவதல்ல கடத்தல் குறித்து, உடல் அரசியல் குறித்து, பால்பேதங்கள் கடப்பது குறித்து, தொல்குடி பிள்ளையார் இன்று உருவாகிவந்திருக்கும் புராணத்தன்மை குறித்து, உடலுறவை நிகழ்த்து கலையாகப் பார்ப்பது குறித்து, மரண தண்டனைக்கு எதிரான சிந்தனை குறித்து, விடுதலை குறித்து, பெரியாருக்கு எதிர்நிலையாய் சுற்றுச்சூழல் குறித்து, பிச்சை பாத்திரத்திற்கு இன்றைய பொருள் குறித்து, குடும்பத்தில் சாதிகளின் முரண் ஆட்டிப் படைப்பது குறித்து, உலகப்போர்கள், பெட்ரோல் அரசியல் என்று வாழ்வின் முரண்களின் வலையில் சிக்கவைத்திருப்பதை 'ஐந்தவித்தான்' நாவல்கொண்டு உரைக்கிறார். (பிற) பிரஞ்சு வெள்ளையரின் பாகுபாடு, பாண்டிச்சேரியின் விடுதலை, தண்ணீர், தாய்மொழி, அணுஉலை, ஈழ விடுதலை, புலிகளுக்குத் தடை என்று உள்ளூர் பிரச்சினைகள் உலகளாவிய பிரச்சினைகளுடன் பின்னியிருப்பதை 'ஐந்தவித்தான்' நாவல்வழி ஒரு விரிந்த கதையாடலாக உருவகித்துக் காட்டுகிறார் பொதியவெற்பன். இது பிறதின் நோயைத் தன்நோய்போல பார்க்கிற பார்வை. உலக மக்களின் பிரச்சினைகளைத் தன் பிரச்சினையின் கூட்டாக பார்க்கிற பார்வை இது.

மொழிவிளையாட்டின்வழி உருவாக்கும் புனைவிலக்கியம் உலகின் எல்லா விஷயங்களையும் தொட்டு விரியலாம். கூடுவிட்டு கூடு பாயலாம். பிரதிவிட்டு வேறொரு பிரதிக்குள் சென்று பேசலாம். இடம்விட்டு இடம் மாறலாம். இன்றைய உலகில் இருந்து புராணிக உலகிற்குள் சென்று பேசலாம். புராணிக உலகத்தை இன்றைய கதிக்கு இழுத்து வரலாம். இந்த பின்நவீனத்துவ சொல்முறை பெரிய புனைவுவெளியை உருவாக்கிக் காட்டுகிறது என்பது உண்மையே. வாசகனைப் பாதிக்கிற சக்தியை அப்படைப்பு கொண்டிருக்கிறதா என்பது

தான் என்முன் நிற்கும் கேள்வி. வாசகனைப் பாதிக்காத ஒரு பிரதி அறிவு தளத்திலோ அல்லது பின்நவீனத்துவ மொழிப்புனைவிலோ சொல்லப்பட்டிருந்தாலும் பிரதியாகவே நிற்கும். இந்த எதிர்பார்ப்பை உதறி பின்நவீனத்துவப் பிரதிகளை வாசிப்பதும் உரையாடுவதும் தேவையாக இருக்கிறது. இலக்கியத்தில் இது ஒரு புதிய பாதை.

'வானத்தின் மீது மயிலாடக் கண்டேன் மயில் குயிலாச்சுதடி' கட்டுரை, தமிழவனின் 'நடனக்காரியான 35 வயது எழுத்தாளர்' குறுங்கதைத் தொகுப்பு குறித்த கதையாடலாய்வை பொதியவெற்பன் முன்வைக்கிறார். பின்நவீனத்துவ எழுத்துக்களாக சட்டக மாற்றம் செய்தவர்கள் என்று தமிழவன், சிவசு முன்வைத்த பட்டியலைத் தந்து, அதில் புதுமைப்பித்தன், எம்.-வி.வி, ந.பி. முதலானவர்கள் நிகழ்த்திய மாயாஜால எழுத்து வகையை நிராகரித்து அல்லது மறைத்து எண்பதுகளுக்குப் பின் எழுத வந்தவர்களை மட்டும் குறிப்பது வரலாற்றை மறைக்கிற செயல் என்று சுட்டிக்காட்டுகிறார். புதுமைப்பித்-தன் 'சிற்பியின் நரகம்' 'நாரத ராமாயணம்' இன்றைய பின்நவீனத்துவ எழுத்து வடிவங்களுக்கு வலுவான முன்னோடியாக இருப்பதை எஸ். ராமகிருஷ்ணன், ஜமாலன் இருவரின் இரண்டு நோக்கில் கண்டிருப்பதைச் சுட்டுகிறார்.

சிவசு, நோயல் ஜோசப் இருதயராஜ், எம்.ஜி. சுரேஷ், தமிழ-வன் இவர்கள் பின்நவீனத்துவ எழுத்து வகைகள் குறித்து எழுதிய விளக்கங்களைத் தருகிறார்.

தமிழவன் தன் கதைத்தொகுப்பில் உள்ள கதைகளின் இயங்குமிடம் குறித்தும், நிகிதா எழிலரசி, சண்முக விமல்குமார், சிவசு மூவரும் தமிழவனின் சிறுகதைகள் குறித்து எழுதிய மதிப்புரையில் உள்ள விடுபடல்களைச் சுட்டிக்காட்டுகிறார். சிவசு, எம்.ஜி. சுரேஷ்குமார், தமிழவன், முபீன் சாதிகா முதலானோர் முன்வைத்த பின்நவீனத்துவ எழுத்து வகையின் உள்ளியக்க கருத்துக்களை நிகிதா எழிலரசி தன் கருத்தைப் போல கதைத்து எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டி இது ஒரு பிழையான அணுகுமுறை என்று சுட்டுகிறார்.

தமிழவன் கதைகள் குறித்து எழுதியிருக்கும் பால்ராஜ், நிகிதா எழிலரசி, ந. பெரியசாமி, சாகிப்ஹிரான், கே.என். செந்-தில், சண்முக விமல்குமார், சிவசு இவர்களின் கருத்துகளில் ஏற்புடைய பார்வைகளை ஏற்று முரண்பட்டு மறுக்கவேண்டிய இடத்தில் மறுத்து தன் கருத்துக்களை முன்வைக்கிறார். முக்கியமாகத் தமிழவன் நவீனத் தமிழ் எழுத்து வகைகளுக்கு தத்துவப் பின்புலம் இல்லை என்பதை மறுத்து மணிமேகலை, திருக்குறள், பக்திப் பனுவல்கள், சித்தர் பாடல்கள் என நிறைந்து செறிந்திருக்கும் தத்துவப் பின்புலப் பிரதிகளைக் கவனத்தில் கொள்ளாது எழுதுவது மறதியின்பார்பட்டது என்று சுட்டிக்காட்டுகிறார். தமிழவன் சிந்தனைப்பள்ளி மீது பற்றுகொண்டவர்கள் அவரது கதையாடல்களை உயர்வு நவிற்சியாகக் காணுவதைத் தள்ளிவைத்துவிட்டு பொதியவெற்பன் விடயம் சார்ந்து அணுகுகிறார். அதேசமயம் படைத்தல் என்பதைவிட புதிய பொருண்மையை விளக்குவது என்ற தளத்தில் தன் கதைகள் இயங்குவதாக குறிப்பிடும் தமிழவனின் கருத்தையும் 'ஒவ்வொன்றும் அதனால்தான் இயற்கையில்தான் மனித மூளை குழம்பாமல் செயற்படும் நேச்சுரல் விஹிஸ்டரியின் மூலத்துவம் இழையறாமல் கதையாடல் ஒவ்வொன்றிலும் எவ்வெவ்வாறெல்லாம் குறுக்கும் மறுக்காக பின்னப்பட்டுள்ளது' எனும் பாங்கை தொல்காப்பியத் திணையியல் அகம் - புறநோக்கு இயல்புவாத (சாங்கியம்) அடிப்படையில் பொருள்கோடலாக அகழ்ந்தெடுக்கும் சண்முக விமல்குமாரின் விமர்சனத்தைச் சிறப்பானதாக மதிப்பீடு செய்கிறார். நிகிதா எழிலரசி பிற விமர்சனகளின் கருத்துக்களைச் செறித்துக்கொண்டு சொன்னாலும் கதையில் நிலவும் கதைப்பின்னல், அதன் மிதத்தல்தன்மை, கூழ்மம்போல அடர்த்தியாக உருவாக்கப்பட்ட வடிவம் என்று இனம் காணுவதை நல்ல அவதானிப்பாக ஏற்றுக்கொண்டு தன் ஆய்வை மேற்செலுத்துகிறார் பொதியவெற்பன்.

இந்தக் கட்டுரையில் மூன்று கோணங்களில் தமிழவன் கதைகளை ஆராய்கிறார். தமிழவன் கதைகள் குறித்து மதிப்பீடு செய்பவர்களில் தனது எண்ணப்போக்கிற்கு, புரிதலுக்கு எப்படியேனும் இந்தக் கதை குறித்து ஒரு பார்வையைச் சொல்ல வேண்டுமே என்று சொல்லப்பட்டவற்றை எடுத்துக்காட்டி இக்கதையாடல் மதிப்பீடு ஆழமற்று மேற்பரப்பில் தடவி ஒதுங்குவதைக் கணிக்கிறார். கேச்சிங்கான ஒரு தார்ப்பரியத்தை கதையிலிருந்து புத்தம் புதிதாக உண்டாக்கிக்காட்டும்படி தமிழவன் கதையில் யோசித்திருக்கவில்லை என்றாலும் அந்த புதியப் பார்வை கதையை மிக ஆழமான வாசிப்பிற்கு உள்ளாக்குவதைச் சுட்டுகிறார். உதாரணமாக 'தமிழனுக்கு தத்துவமரபு இல்லையோ' என்று வெள்ளைக்காரன் தமிழாசிரியரிடம் கேட்கப்படும் கேள்விக்கு ராமநாதனின் மௌனத்தை உடைத்து கதைவாசகர் உள்ளே செல்கிறார். இயற்கையோடு இணைந்து வாழ்கிற திணை மரபானது ஏனைய வரலாற்றை மீட்டெடுக்கும் பொருண்மையைத் தக்கவைத்திருப்பதை அந்த மௌனத்தில் சாட்சியாக உறைந்திருப்பதை சந்திரன், முத்தையன் சொல்வதை மிகச்சிறப்பான வாசிப்பாகக் காட்டுகிறார்.

இரண்டாவது ஒரு கதையை புரிந்துகொள்வதில் ஜோசப் இருதயராஜ், க. பூரணச்சந்திரன், எம்.ஜி. சுரேஷ்குமார் முதலியோர் பின்நவீனத்துவ கதையாடல் பிரதிகளின் எழுத்துமுறை, புரிதல்முறை குறித்துச் சொன்ன கருத்துக்களையும், தமிழவன் தன் கதைகள் குறித்தும் தன் எண்ணத்தில் படிந்திருக்கும் பண்பாடு குறித்தும் வாசிப்பு குறித்தும் பின்நவீனக் கதையாடல்கள் குறித்தும் சொல்லியிருக்கும் கருத்துக்களின் அடியொற்றி தமிழவன் கதைகளை அணுகிப் பார்க்கிறார். 'மொழிபெயர்ப்பு நிறுவனம்' கதையில் இளம் சிறுவனை வேலைநீக்கம் செய்ய அவன் அறியாமலே அவனுக்கு வரும் குறுக்கீடுகளைத் தொட்டுக்காட்டி மேலதிகாரியும், மொழிபெயர்ப்பாளனும் ஒத்திசைந்து செய்யும் அதிகார வஞ்சனையை, தேர்வு வஞ்சனையை வெளிப்படுத்துவதாக பொதியவெற்பன் காட்டுகிறார். இக்கதையை நம் பல்கலைக்கழகத்திற்குத் தளம்மாற்றி வாசித்தால் 'அம்மா' இறந்த துக்கத்தைக் கேட்க துணைவேந்தர்கள் சின்னம்மா சன்னதியில் குழுமி வணங்கியதை ஒப்பிட்டுக்காட்டுகிறார்.

தமிழவன் தன் கதைகளின் உள்ரகசியமாகக் கண்ட ஸ்டில்னெஸ் தன்மையை அசையா நீரின் தன்மையாகப் பார்த்த விதத்தில் தோன்றியதைக் குறிப்பிடுகிறார் பொதியவெற்பன். சித்தர் மரபில், புதுமைப்பித்தன் கதைகளில் ஸ்தம்பித்தல் என்ற நிலைக்குள் நிற்பதைச் சொல்லி மேற்சொன்ன வாழ்வு நகராமல் உரையும் சூழலை தமிழவன் காட்டுவதாகச் சொல்கிறார். இன்னும் சில பின்நவீனத்துவவாதிகளின் அசையும்

பிரதியில் அசைவின்மையில் கொண்டிருக்கும் தன்மையால் அப்பிரதி மரணத்தன்மை கொண்டிருப்பதை பொதியவெற்பன் எடுத்துக்காட்டுகிறார்.

தமிழவனின் வேறு பல கதைகளை ஒரு சந்தர்ப்பத்தில் படித்தேன். கதையில் சம்பவம் நிகழ்கிறது, ஒருவித மர்மத்தன்மை அந்த நிகழ்வில் வெளிப்படுகிறது. அக்கதையின் பின்னணியும் திரண்டு இருக்கிறது. கதைக்குள் அழுத்தத்தோடு சில குறிப்பான, தெறிப்பான சில சம்பவங்களும் நிகழ்கின்றன. சில கதைகள் சென்ற நூற்றாண்டின் காலப் பின்னணியிலும் உருவாகியிருக்கின்றன. கதைக்குள் காரண காரியங்கள் சொல்லப்படாமல் விடுபட்டிருக்கின்றன. ஒரு வகையில் கதைகள் படிமமாக இருக்கின்றன. அக்கதை அல்லது கதைகளை உள்ளிருந்து புரிந்துகொள்வதைவிட வெளிச்சமூகத்தில் வைத்து புரிந்துகொள்வதற்கு அதிக சாத்தியங்களை உண்டாக்குகின்றன. மறைக்கப்பட்ட பரதவர் வரலாறு, மறைக்கப்பட்ட நாட்டுப்புறத் தொன்மங்கள், மறைக்கப்பட்ட அரசியல் வாதிகளின் சமூக அக்கறை இவ்விதமான பல்வேறு நிலைகளில் மறைக்கப்பட்டதை பொதுவெளியில் வைத்து திறந்து பார்த்துக்கொள்வதற்கான சாத்தியங்களை உண்டாக்குகின்றன. சொல்லப்பட்ட விதம் சொல்லாமல் விடப்பட்டதை வாசகனே விரித்து காரண காரியங்களை ஆராயும்படி இருக்கின்றன. இந்த கதையாடல் பின்னலை பொதியவெற்பன் 'பிறிது மொழிதலின் உட்கிடையான தொனிப்பொருள் நவீன குறியியலின் வாய்பாடாக அமைந்திருப்பதாக' குறித்திருக்கிறார். வாசிப்பதன் மூலம் வேறொன்றைத் தொட்டு அந்தப் பிரதி உயிர் பெறுகிறது என்ற பின்நவீனத்துவ கதையாடலுக்கு தமிழவன் கதைகள் பொருந்திப் போகின்றன. பின்நவீனத்துவ கதைசொல்லியின் மொழியின் விளையாட்டை நிகழ்விற்கு மறுதலையாக வாக்கியங்களை நிகழ்வின் மையம்நோக்கி ஓடிவிடாதபடி தடுத்து வெவ்வேறு தொடர்களாக மாற்றி கொலாஜ் தன்மையில் தரும் பாணியிலிருந்து தமிழவன் விலகி நவீனகதை போலவே எழுதி கதைக்குள் பொருண்மையை வைக்காமல் வெளியில் தேடும்படி செய்துவிடுகிற மொழி விளையாட்டைச் சாத்தியப்படுத்தியிருக்கிறார். எம்.ஜி. சுரேஷ் விளக்கியதுபோல நவீனத்துவ எதார்த்தப் பிரதிகள் ஒற்றை அர்த்தத்தை அளிக்கும்போது பின்நவீனத்துவ பிரதிகள் பன்முக அர்த்தத்தைத் தரும் சாத்தியப்பாட்டைக் கொண்டிருக்கின்றன. எம்.ஜி. சுரேஷ் தமிழவனின் ஆக்கப் பிரதியைப் பின்நவீனத்துவ பிரதி இல்லையென்று சொல்வதற்குக் காரணம், நவீனத்துக் கதைபோலவே நிகழ்வின் துல்லியமும் தெளிவும் இருப்பதால்தான். மொழி விளையாட்டை கொலாஜ் தன்மையில் உண்டாக்கி வாசிப்புப் பிரதியாக தருவதை மட்டுமே பின்நவீனத்துவ பிரதி என்கிறார். இத்தன்மையான மொழிவிளையாட்டைக் கொண்டிருக்கும் பிரதியை மட்டுமே பின்நவீனத்துவ பிரதி என்று ஏற்கவேண்டியதில்லை என்பது என் கருத்து.

தமிழவன் மீதும் தமிழவன் சிந்தனைப்பள்ளியில் நின்று இயங்குபவர்கள் மீதும் பொதியவெற்பன் ஒரு விமர்சனத்தை வைக்கிறார். தமிழவன், மௌனி, புதுமைப்பித்தனைத் தாண்டிச் சென்றுவிட்டார் என்ற மனப்பான்மையிலிருந்து விலகி தமிழவன் எழுத்துவகையினையும் பகடியாடல் மூலமே அவரைத் தாண்டிச் செல்வதற்கான வழி. இலக்கியத்தின் சாத்தியங்களை மேலும் அறிவதற்கான வழி. தமிழவன் தன் ஆக்கங்களுக்காக தரும் விளக்கங்கள் ஒருபுறும் இருக்க. நம்மை நாமே கடக்க வேண்டும். தன்னையும் பகடியாக்கி பார்க்கிற துணிவும் இருக்கவேண்டும். சுயத்தையும் அய்யுற்று எழுதுவதே பின்நவீனத்துவ எழுத்து வகை என்ற கருத்தையும் முன்வைக்கிறார்.

பொதியவெற்பனின் விமர்சன ஆய்வுமுறை என்பது மேற்கோள் களை எல்லா நிலைகளிலும் எடுத்துவைத்து விளக்குவது. இதில் போற்றப்பட வேண்டிய அம்சம் உண்டு. எதிரெதிரான கருத்தியல்கொண்ட மேற்கோள்களைத் தருவது உண்மைக்கும் பொய்மைக்கும் உள்ள நிலையில் வைப்பதோடு, கட்டமைக்கப்படும் பொய்மைகளையும் புரிந்துகொள்ளுங்கள் என்ற ஆய்வு நோக்கில்தான். அரண் செய்ய வந்த மேற்கோள்கள் புதிய வெளிச்சங்களை, மறைக்கப்படும் உண்மைகளை அல்லது படைப்பாளிக்கு தெரியாத, தெரிய வராத எடுத்துக்கொண்ட கருத்தியலுக்கு மாற்றான சமூக உள்ளுறைகளை, உண்மைகளை எடுத்துவைப்பதால் வாசகர்களுக்கு புதிய உலகம் ஒன்று துலங்கத் தொடங்குகின்றது. மேற்கோள்களின் சாரத்தை பொதியவெற்பன் எடுத்துக்கொண்டு விளக்கமுடியும். அதை எப்போதும் தவிர்க்கிறார். பிற அறிஞர்களின் ஆய்வு உண்மைகளை அப்படியே தரும்போது அது நான் கண்டது அல்ல அதற்குமுன் மற்றவர்கள் கண்டு தெளிந்தவை என்பதை குறிப்பிடுவதாகவும், அதிலிருக்கிற உண்மைத்தன்மையைக்கொண்டு மறுதலிக்கிறேன் என்பதாகவும் அல்லது வாசகர்கள் எது சரியென்று தெளிவு பெறட்டும் என்பதாகவும் அமைகிறது. அடுத்து மேற்கோள்காரர்களின் உழைப்பை மதிக்கின்ற, போற்றுகின்ற ஆய்வுநெறி சார்ந்ததாகவும் இருக்கிறது. மாற்று கருத்துகொண்ட மேற்கோள்களையும் தருவதென்பது நேரிய உண்மை எவை என்று வாசகர்கள் எடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பினைத் தருவதா கும். தருவதோடு ஆய்வின் முடிவாக நான் இந்த இடத்திற்கு நகர்ந்து இந்தக் கருத்தியலை முன்வைக்கிறேன் என்ற குறிப்பைக்காட்டி நிற்கிறார். இது தமிழ்ச்சூழலில் பொதியவெற்பன் செய்கிற ஆய்வு நேர்மையும் நெறியும்.

அதேசமயம் ஒரு இலக்கியப் பிரதிக்குப் பல்வேறு கோணங்களில் பல்வேறு விமர்சகர்கள் வைத்த மேற்கோள்களையெல்லாம் திரட்டி முன்வைத்து ஆய்வை நகர்த்தும்போது பொதியவெற்பனின் ஆய்வு முடிவு அல்லது மதிப்பீடு அம்மேற்கோள்களினுள் புதைந்துபோகிறது. இந்த மேற்கோள்களை எடுத்துக்கொண்ட பிரதிக்குத் தேவையானவற்றை மிகக்குறைந்த அளவில் பயன்படுத்தி பொதியவெற்பன் தன் வாசிப்பின் வாசல்களை அதிகம் திறக்கிறபோது அது கூடுதல் மதிப்பை ஏற்படுத்தும். மாறாக விதந்தோதுபவர்களின் கருத்துக்களை அய்யுற்று பீடங்களைச் சாய்ப்பதை முதன்மையாகவும் வேறு கோணங்களைத் தொட்டுக்காட்டுவது இரண்டாவது நிலையிலும் அமைகிறது.

தன்னை மயிலாகப் பாவிக்கிற இலக்கியவாதிகளின் ஆளுமையை நெருங்கி கறாராக மதிப்பிடும்போது குயில் அளவினதாக சுருங்கிக்கிடப்பதை காண நேர்கிற காட்சியைச் சொல்லத்தான் 'வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்' தலைப்பு. மிகையான தவறான மதிப்பீடுகளைத் தகர்க்கும் அவரது பாணிக்கும் இத்தலைப்பு பொருத்த மாகவே இருக்கிறது.



venugopal@thaiveedu.com




### சென்ற இதழில்...

- அசோகச் சக்கரவர்த்தியின் (பொ.ஆ.மு.3-ம் நூற்றாண்டு) கிர்னார் (Girnar) கல்வெட்டு, தம்பபர்ணி (தாமரபரணி) என்று அழைக்கப்பட்ட ஈழத்தில் பௌத்தம் பரப்பும் முயற்சி முன்னெடுக்கப்பட்டிருப்பதை உறுதி செய்கிறது. இதனையே வரலாறு, மகிந்தனும் சங்கமித்தையும் வெள்ள ரசுக் கிளையுடன் இலங்கை வந்து பௌத்த மதத்தைப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டார்கள் என்று கூறுகிறது.
- எனவே, பொ.ஆ.மு.3-ம் நூற்றாண்டளவில் பௌத்தம் ஈழத் திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.
- வெள்ளரசு மரத்தின் கிளை ஒன்று, அசோகச் சக்கரவர்த்தி யின் மக்களான (?) மகிந்தனாலும் சங்கமித்தையாலும் கொண்டுவரப்பட்டு நடப்பட்டதாக, அறியப்படுகிறது, அசோகர் காலம், பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டு.
- 1958-ம் ஆண்டுக் கலவரத்துக்கு முன், அனுராதபுரியில் தமிழ் மக்கள் வாழ்ந்திருந்த வாழ்க்கை பற்றிய சிறு குறிப்பு.
- சங்க காலத்தில் ஈழம், தென் இந்தியா ஆகிய இரு நாடுக ளிடையேயான தொடர்பு. ஈழம் அனைத்து வகைகளிலும் தென் இந்தியாவின் தாக்கத்தில் இருந்துவந்திருக்கிறது. தமிழ் கல்வி, விவசாயம், அரசியல் அனைத்துமே தென் னிந்தியாவைத் தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது.
- பௌத்தம், அசோகச் சக்கரவர்த்தியினால் இந்தியாவின் நாலா திசைகளிலும் எடுத்துச் செல்லப்பட்டதற்கு அசோக னின் கல்வெட்டுக்களே சான்று. அவற்றில் ஒன்று தான் பௌத்தம் ஈழத்திற்குக் கொண்டுவரப்பட்டது.
- தமிழ் நாட்டின் ஊடாகவே பௌத்தம் கொண்டுவரப்பட்டது என்பதற்கான சான்றுகள் தமிழ் நாட்டில் காணப்படுகின் றன.
- ஈழத்தில் பௌத்த மடாலயங்கள் அமைக்கப்பட்டு, பொது மக்களின் முக்கிய தேவைகளான. மருத்துவ வசதி, கல்வி முதலியவை இலவசமாக வழங்கி மக்கள் மனத்தில் இடம் பிடித்துக் கொண்டார்கள்.
- சங்கப் பாடல்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கியங்களில் பௌத்தம் பற்றிய சான்றுகள்.
- பௌத்த மதப் பிரிவினை - ஹீனயானம், மகாயானம்.

### இந்த இதழில்...

வல்லிபுரக் கோவிலில் புத்தர் சிலை. இந்தக் கோவிலுக்கு வல்லிபுர ஆழ்வார் கோவில் என்று ஒரு பெயரும் உண்டு. வல் லிபுர ஆழ்வார் கோயில், ஈழத்தின் வடபகுதியில் வடமராட்சிப் பகுதியில் வல்லிபுரம் என்னும் ஊரில் உள்ள ஒரு சிறப்பான கோவில். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் வடமாகாணத் தின் நாலா திசையிலிருந்தும் வண்டில் கட்டி, வல்லிபுரக் கோவில் திருவிழாவிற்கு மக்கள் வந்து சேர்வார்கள். வல்லிபு ரக் கோவில் கப்பல் திருவிழா மிகவும் விமரிசையாக நடைபெ றும். வல்லிபுர ஆழ்வார் கோவிலின் மூலவர் விஷ்ணு. இந்தக் கோவிலின் மூல மூர்த்தி விஷ்ணுவின் சுதர்சனச் சக்கரம்.

இக் கோவிலைச் சுற்றிலும் கடற்பரப்பு. இயற்கையால் சூழப் பட்ட இந்தக் கோவில் வரலாற்றுப் பெருமை மிக்கது. இந்த ஆலயம், மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கு அமைந்த புராதன தலம். யாழ்ப்பாணத்தில் நாகர் ஆட்சியும் அதன் பின் லம்பகர்ணர் ஆட்சியும் ஏறக்குறைய 6-ம் நூற் றாண்டு வரை நடந்து முடிந்தன என்பது வரலாற்று ஆசிரியர் கள் கருத்து. இவர்கள் ஆட்சி முடிந்தபின் படை வீரர்கள் ஆதிக்கம் அப்பகுதியில் மேலோங்கியபோது வடமறவர்கள் ஆண்ட இடம் வடமராட்சி எனப்பட்டது என்பர். ஆனால், ஆ.- முத்துத்தம்பிப்பிள்ளையின் நூலின்படி தொண்டை நாட்டின் வடபகுதி மக்களில் ஒரு பகுதியினர் இங்கு வந்து குடியேறிய தாகவும் அக் குழுவின் தலைவன் வல்லியத்தேவன் என்றும் அவன் பெயரைக் குறிக்கவே அக் கிராமம் வல்லிபுரம் என்று அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. வல்லி என்பதற்கு ஆயர்பாடி என்று பொருள் கொண்டு ஆயர்பாடிகளின் கோவில் என்றாயிற்று எனப்படுகிறது.

விஷ்ணு வழிபாட்டில் ஆழ்ந்து ஈடுபடுவர்கள் ஆழ்வார்கள் என அழைக்கப்பட்டனர். விஷ்ணுவைப் போற்றிப் பாடியவர்

கள் பன்னிரு ஆழ்வார்கள். வைணவ மதம் ஓங்கியிருந்த ஆறாம் நூற்றாண்டுக்கும் 9-ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதி வரலாற்றில் பக்தி இலக்கிய காலம் என்று



அழைக்கப்படுகிறது. தமிழ் நாட்டில் ஓங்கி வளர்ந்த வைணவ மதத்தின் தாக்கம் ஈழத்தில் ஏற்படாமல் இருந்திராது என்று கொள்வதுதான் பொருத்தமாக இருக்கும். வரலாற்று ஓட்டமும் அதைத்தான் வலியுறுத்துகிறது. தமிழ் நாட்டில் தழைத்தோங்கிய வைணவ பக்தி ஈழத்திலும் பரவியது, அதன் காரணமாகவே வல்லிபுர ஆழ்வார் கோவில் என்னும் வைணவக் கோவில் யாழ்ப்பாணத்தில் எழுந்தது எனலாம். வல்லிபுர ஆழ்வார் கோவில் பற்றிய வரலாறு ஒன்றும் கூறப்படுகிறது. புலோலியில், வராத்துப்பளை என்னும் சிறிய கிராமத்தில் வல்லிநாச்சியார் என்னும் பெண்கண்ணனைத் தினமும் வழிபட்டு வந்தார். இவருக்குக் குழந்தைப்பேறு இல்லை. அவர், நாராயணனிடம் தன் குறையைக் கூறி இரந்தார். நாராயணனும் அவர் வேண்டுகோளுக்கு இரங்கி, அவர் கனவில் தோன்றி, 'நீ உடனே கற்கோவளம் கடற்கரைக்கு வா' என்று பணித்தார். வல்லி நாச்சியாரும் அவ்வாறே அங்கு சென்றார். அலை கடலின் நடுவே விளையாடிய கண்ணன், நாச்சியாரின் மடியில் தவழ்ந்து விளையாடினான். தொடர்ந்து இன்னம் ஒரு அதிசயம் நடந்தது. நாச்சியார் மடியில் விளையாடிய கண்ணன் திடீரெனச் சக்கர வடிவம் கொண்டான். வல்லிநாச்சியார் சக்கர வடிவம் எடுத்த கண்ணனைப் பல்லக்கில் ஏற்றி ஊருக்குக் கொண்டு சென்றார். செல்லும் வழியில் பல்லக்குத் தூக்கிய அடியார்கள் தாகசாந்திக்காக நின்றபோது, பல்லக்கு இறக்கி வைக்கப்பட்டது. மீண்டும் பல்லக்கைத் தூக்க முயன்றபோது, தூக்கமுடியவில்லை. ஸ்ரீசக்கரம் அங்கேயே நிலையாக இருந்துவிட்டது. அந்த இடமே தற்போதுள்ள கோவிலாகும். இன்று இக்கோயில் மிகப் பெரிய வடிவத்தில் கோவிலுக்குரிய அனைத்து அலங்காரங்களுடனும் விளங்குகிறது. இக் கோவிலின் மூலஸ்தானத்தில் சக்கரம் பிரதிஸ்டை பண்ணப்பட்டிருக்கிறது. கோவிலின் பரிவாரமூர்த்திகளாக விநாயகர், நாகதம்பிரான், நாச்சிமார் கோயில் கொண்டிருக்கிறார்கள். இக் கோவிலின் கடலாடு தீர்த்தம் மிகவும் சிறந்தது.

புலோலியைச் சேர்ந்த தமிழ் தாத்தா கந்தமுருகேசனார், கோவிலைச் சூழவுள்ள மணல் மேடுகள், இடிபாடுகளை ஆராய்ந்து எடுத்த சான்றுகளைக் கொண்டு மணிமேகலையில் கூறப்பட்ட மணிபல்லவம் இதுவாக இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். கற்கோவளம் கடற்கரைப் பகுதியில் சிங்கை என்னும் இராஜதானி அமைந்திருக்கவேண்டும் வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்குச் சொந்தமான நிலத்தில் பழைய இடிபாடுகள் காணப்படுகின்றன. இந்த இடிபாடுகளுக்கு இடையில் 1936-ம் ஆண்டில் வல்லிபுரப் பொன்னீட்டுச் சாசனம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. நான்கு வரிகொண்ட அந்தச் சாசனம் 'பிராமி' வரிவடிவத்தில் எழுதப்பட்டிருந்தது. அந்தச் சாசனத்தில் இடம்பெற்றிருந்த 'பியகுக' என்னும் இடம் தற்காலத்து 'புங்குடுதீவைக்' குறிப்பதாக அறியப்படுகிறது. இதன்படி, வல்லிபுர ஆழ்வார் கோவிலும் வரலாற்று முக்கியத்துவம் பெறும் இடமாக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

வல்லிபுர ஆழ்வார் கோவில் - இன்று வல்லிபுரக் கோவிலில் புத்தர் சிலை எப்படி வந்தது. பௌத்தம் தமிழரால் வழிபாட்டு முறையாகக் கொள்ளப்பட்டதா ? சைவக் கடவுளரும் வைணவக் கடவுளரும் சமாதானமாக ஒன்றாக வழிபாடு செய்யப்பட்ட காலத்தில் பௌத்தமும் நின்று நிலவியிருக்கிறதா ? சமயப் பொறையா ? பார்க்கலாம்.

தொடரும் ...



selvanayaki.s@thaiveedu.com

# ‘மௌனமே சொல்லாக’

– கிருங்கை சேதுபதி

ஆண்டு எண்ணிக்கைக் கணக்கில், 39 கூட நிறைவுறாத பாரதியின் வாழ்க்கையில் ஆயிரக்கணக்கான நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. அவர் எழுதிய சுயசரிதையோடு, அடுத்தவர்கள் எழுதிய வரலாறுகளையும் இணைத்துப் பார்த்தால் கூட, எஞ்சியிருப்பவை ஏராளம் என்பது தெளிவாகப் புரிகிறது. எனவே, ஒற்றை நூலுக்குள் அவர் வரலாறு அடங்குவதாய் இல்லை. அவர்தம் வரலாறே அவ்வாறு ஆயின், அவர் வரலாற்றுக்குள் வந்து போகும் குள்ளச்சாமி குறித்து இன்னும் முழுமையாகத் தெரியவில்லை. ஆனாலும் என் தேடல் முடியவில்லை. யதுகிரி அம்மாள் எழுதிய ‘பாரதி நினைவுகள்’ நூலில், குள்ளச்சாமியின் வரவு ஒரு சிறு குறிப்பாய் அமைந்திருக்கிறது. அத்துடன் ஒத்து உணர்ந்துகொள்ளச் சில தடயங்கள் இருக்கின்றன. அவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

## பாரதி – குள்ளச்சாமி சந்திப்பு:

அறுதியிட்டுச் சொல்ல முடியாவிட்டாலும் யதுகிரி உறுதியாய்த் தருகிற செய்தி, ‘குள்ளச்சாமி - பாரதி அறிமுகம், முருகேசம்பிள்ளை வீட்டில்’ என்பது. முருகேசம்பிள்ளை வீட்டார் பழைய வழக்கங்கள் உடையவர்கள். பௌர்ணமி, வெள்ளிக்கிழமை, கிரண நாட்களில் சாமிகள், பண்டாரங்கள், ஆண்டிகள் இவர்களுக்குப் படி அளப்பார்கள். படி என்றால் அரிசி, தேங்காய், வெல்லம், பருப்பு இவைகளே. வழக்கமாக ஓர் அளவில் கொடுப்பார்கள். பாரதியாருக்கு இவை பிடித்தமில்லாதவை. குருட்டு வழக்கம் என்பார்... ‘சாமியாவது, பூதமாவது?’ என்பார். ‘ஆண்டி, பண்டாரம் இவர்கள் சோம்பேறிகள், மோசக்காரர்கள்’ என்று சொல்வார். ‘பிச்சையிட்டால், நொண்டி, முடம், குருடு, கிழம் இவர்களுக்குப் போடுங்கள். சோம்பேறிகளுக்கும் பொய் வேஷதாரிகளுக்கும் போட வேண்டாம்’ என்பார். முதல் முதல் அவரை வசப்படுத்தியவர் குள்ளச்சாமியார்தாம். முருகேசம் பிள்ளை வீட்டிற்கு வரும்போது இவருடன் மெல்ல மெல்லப் பழகினார். அதில் நன்மை ஆயிற்றோ இல்லையோ, சாமிகள் கூட்டத்தில் அப்பொழுதிலிருந்து சேர்ந்தார் பாரதியார். எதிலும் புதிய வழியைத் தேடும் பாரதியாருக்குக் குள்ளச்சாமி ஒரு வழிகாட்டியானார். இதற்குப் பின்னர் பாரதியின் வாழ்வில் நிகழ்ந்த பல மாற்றங்களை, தன் நினைவுக் குறிப்புகளில், தான் கண்டவண்ணமும், கேட்டவாறும் எளிமையுறப் பதிவு செய்கிறார் யதுகிரி.

‘குரு தரிசனம்’ பாரதி நினைவுகள் என்ற தன் நூலில் பாரதி எழுதிய பாடல்களுடன் அவற்றின் தோற்றக்காரணங்களையும் அது தொடர்பான செய்திகளையும் சின்னஞ்சிறு அத்தியாயங்களாகத் தந்திருப்பார் யதுகிரி. பாரதியார், தன்னுடன் நிகழ்த்திய உரையாடலுடன் தன் தந்தையார் உள்ளிட்ட பெரியவர்களுடன் நிகழ்த்திய உரையாடல்களையும் செவிமடுத்த நினைவுகளை, அவ்வண்ணமே சித்திரித்திருப்பார். அதில் ஓர் இடம் இப்படி அமைகிறது. பாரதியாரும் யதுகிரியின் தந்தையார் மண்டையம் ஸ்ரீநிவாச்சாரியாரும் உரையாடுகிறார்கள். அதில் யதுகிரியின் பெயரும் அடிபடுகிறது. பாரதியைப் பார்த்து, ஆச்சாரியார் சொல்கிறார். ‘சில நாட்களாகப் பாரதியார் ஏன் பாட்டுச் செய்வதில்லை என்று அடிக்கடி கேட்பாள். வேறு வேலை இருப்பதால் செய்வதில்லை என்பேன்’. அதற்குப் பதிலாக, ‘வேலையும் இல்லை. மண்ணும் இல்லை. ராஜாராம் தன் தகப்பனார் தமிழ்ப்படுத்திய உபநிஷத்தைச் சரியாக இருக்கிறதா, இல்லையா என்று பார்க்கும்படி சொன்னான். அதுவே சுமார் மூன்று மாதம் பிடித்தது’ என்கிறார் பாரதி. இதைக் கண்ணுற்றதும், ‘யார் இந்த ராஜாராம். இது எப்போது நிகழ்ந்தது?’ என்ற கேள்வி என்னுள் எழுந்தது. உடனே, இதற்காக தடயம், ‘பாரதி அறுபத்தாறில்’ பதிவாகி இருப்பதும் நினைவுக்கு வந்தது.

‘குரு தர்சனம்’ என்ற தலைப்பின்கீழ், இடம்பெறும் முதற்பாடலில், (பாரதி அறுபத்தாறு - 23) குள்ளச்சாமியைச் சந்தித்த அனுபவத்தைக் குறிக்கிறார் பாரதி. புதுவை நகரத்து ஈசுவ-ரன் தர்மராஜா வீதியில் அமைந்த சிறிய இல்லத்தில், பாரதி இருக்கும்போது, நாகைப் பார்ப்பான் ஆகிய இராஜாராம் ஐயன் வருகிறார். முன்பு தன் தந்தையார் தமிழில் மொழிபெயர்த்து வைத்திருந்த உபநிடதத்தைத் திருத்தச் சொல்லி வேண்டுகிறார். அதற்காக ‘யான் சென்று ஆங்கண் இருக்கையிலே, அங்கு குள்ளச்சாமி வந்தான்’ என்கிறது அப்பாடல். இது நிகழ்ந்த இடம் ராஜாராம் ஐயன் இல்லம். ஆண்டு? மீளவும் யதுகிரி அம்மாள் நினைவில் பதிவான இன்னொரு பாடல் துணை செய்கிறது. மறுபடியும் இன்று முதல் முதலாக ‘ஸரஸ்வதி ஸ்தோத்திரம்’ செய்திருக்கிறேன்’ என்ற பாரதியார் நொண்டிச்சிந்து மெட்டில், ‘எங்ஙனம் சென்றிருந்தீர்’ என்ற பாடலைப் பாடிக் காட்டுகிறார். இந்தப் பாடல், சுதேசமித்தி-ரன் 29.8.1917 இதழில், அச்சேறியிருக்கிறது. ஆக, இந்நிகழ்வு நடந்த ஆண்டு, 1917 என்பது உறுதி. மாதம், அதற்கு முந்தியதாக இருக்கலாம். ‘ராஜாராம் ஐயன் தந்த பணியை முடிக்க, மூன்று மாதங்கள் ஆனது’ என்பதால், ஏப்ரல் மாத வாக்கில் குள்ளச்சாமியின் குரு தரிசனம் பாரதிக்குக் கிட்டியது என்று தெரிகிறது. மேலும், ‘எங்ஙனம் சென்றிருந்தீர்’ எனும் ஸரஸ்-வதி ஸ்தோத்திரத்து இரண்டாம் பாடலில், ‘மாதம் ஓர் நான்

காம் நீர் அன்பு வறுமையிலே எனை வீழ்த்தி விட்டீர்' என்றும் குறிப்பிடுகிறார். இதனால், பாரதி - குள்ளச்சாமியைத் தன் குருநாதராகக் கண்டுகொண்ட சந்திப்பு நிகழ்ந்த மாதம் ஏப்ரல் என்றும் ஆண்டு, 1917 என்றும் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். ஆனால்,

***அன்றொருநாள் புதுவைநகர் தனிலே கீர்த்தி***
***அடைக் கலம்சேர் ஈசுவரன் தர்மராஜா***
***என்றபெயர் வீதியில் ஓர் சிறிய வீட்டில்,***
***இராஜாராம் ஐயன் என்ற நாகைப் பார்ப்பான்***
***முன்தனது பிதா தமிழில் உபநிடதத்தை***
***மொழிபெயர்த்து வைத்தனைத் திருத்தச் சொல்லி***
***என்றனை வேண்டிக்கொள்ள யான்சென்றுஆங்கண்***
***இருக்கையிலே அங்கு வந்தான் குள்ளச்சாமி.***

*பாரதி அறுபத்தாறு - 23*

இந்தப் பாடலில் சுட்டப்பெறும் 'அன்று ஒரு நாள்' எதுவென்று துல்லியமாய்க் காண முடியவில்லை. என்றாலும், இதற்கு முன்னர், குள்ளச்சாமியோடு பழகி இருந்தாலும், அன்றைய தினம்தான், அவரை இழுத்துப் பிடித்து, வேதாந்த உபதேசத்தைப் பெற்றிருக்கிறார் என்பது அடுத்துவரும் பாடல்களில் உறுதிப்படுகிறது. அதற்குப் பிறகே அடுத்தடுத்த சந்திப்புகள் அமைந்திருக்கின்றன. அதன்வழி விளக்கங்கள் கிடைத்திருக்கின்றன. அந்தப் பதிவுகள் யதுகிரி அம்மாள் நினைவுக் குறிப்புகளில் மௌன நாடகமாய்க் காட்சிகளை விரித்துக் கொண்டு போகின்றன. அவற்றைப் பின்வரக் காணலாம்.



### சொல் ஒன்று வேண்டி...

இளவயது முதலே, கள்ளங்கபடமில்லாமல் பாரதியிடம் பழகி, துணிச்சலாகப் பேசி, அவர்தம் கவியுளம் அறிந்து கொண்டாடியவர் யதுகிரி. காலப்போக்கில், அவருக்குத் திருமணம் ஆகி, குழந்தையும் பிறந்து விடுகிறது. அவர் புக்ககம் உள்ள பெங்களூருவில் இருந்து, கைக்குழந்தையுடன் மீளவும் புதுச்சேரிக்கு வருகிறார். அப்போது பாரதியிடம் புதிய மாற்றம் தெரிகிறது. 'நள வருஷம் ஐப்பசி மாதம் கையில் குழந்தையுடன் புதுச்சேரி சென்றேன். ஐயரும் பாரதியாரும் வந்து என்னை க்ஷேமம் விசாரித்துப் போனார்கள். பாரதியார் முன்போல் கலகலப்பாக எல்லாருடனும் பழகுவதை விட்டுவிட்டார் என்று அறிந்தேன். என் தாய் முன்பெல்லாம் சொல்லுவாள். 'பாரதியார் வந்தால் பின்னால் நாலு பேர், முன்னால் நாலுபேர் எப்பொழுதும் யாராவது அவரைச் சுற்றிக் கொண்டே இருக்கிறார்கள். எல்லாம் அவர் கவிதையின் மகிமை' என்று. இப்பொழுது அந்த நிலைமை இல்லை. முதல் முதலில் இந்தத் தனிமை அவருக்குக் கஷ்டமாகத்தான் இருந்திருக்கும் என்று எண்ணுகிறேன். என்று யூகிக்கிறார். பிறகு வளர்ந்த உரையாடலின் இடையில் செல்லம்மாவிடம் கேட்கிறார். 'புதிய பாட்டுக்கள் எவ்வளவு பாடியிருக்கிறார்?' அதற்குச் செல்லம்மாவின் பதில், 'புதிய பாட்டுக்களைக் காட்டிலும், விரதம் அதிகமாகி விட்டது. எனக்கே சகிக்க முடியவில்லை. வாய் மூடாமல் பாட்டும் பேச்சுமாக இருந்தவர், ஊமை போலச் சமிக்ஞை செய்வது, எழுதிக் காண்பிப்பது, இது என்ன புதுமையோ?' என்பதாக அமைகிறது.

உடனே, பாரதி 'நீயும் மௌனமாக இருந்து பார் செல்லம்மா, அதில் தனி சுகம் இருக்கிறது' என்கிறார். 'பால்காரி, எண்ணெய்க்காரிக்கு யார் பதில் சொல்வது? இந்த வழியை எந்த மண்ணாய்ப் போகிறவன் காட்டினானோ?' என்று எரிச்சலுடன் செல்லம்மா பதில் சொல்கிறார். இந்த இடத்தில் பாரதி தன் குருவைக் காட்டிக் கொடுக்கவில்லை. மாறாக, "யாரும் காட்டவில்லை. செல்லம்மா, ஒருநாள் செய்தேன். எனக்கே 'மஜா' பிறந்தது. அந்த வழியைப் பிடித்தேன்" என்கிறார். மேலும் தொடர்ந்த உரையாடலில், 'இனி மாதத்தில் சில நாள் மௌன விரதம் என்று கிரமம் செய்து விடுகிறேன். புதிய சொல், அதாவது 'ஓம்' என்பதைப் போல், தமிழில் ஒரு பதம் கண்டுபிடிக்க வேண்டும். அதனால் மௌன விரதம் இருக்கிறேன்' என்கிறார். பிறகு, 'தேவர் வருகவென்று' என்ற பாட்டைப் பாடினார் பாரதியார்" என்கிறார் யதுகிரி. அந்தப் பாடலின் தலைப்பு, 'சொல்'. அதற்கு முன்னுரை போல, 'சொல் ஒன்று வேண்டும். தேவ சக்திகளை நம்முள்ளே நிலைபெறச் செய்யும் சொல் வேண்டும்' என்று பாரதி குறித்திருப்பதையும் கவனத்தில் கொள்ளலாம்.

### 'போதையா? தேடுகிற பாதையா?'

இது நிகழ்ந்தது நள வருஷத்துப் புயலுக்கு முன்பு. புயலுக்குப் பின்னர் தம்மைக் காத்த பராசக்தியை, செல்லம்மாவும் பாரதியும் விசேஷமாகப் பூசித்தனர். அந்தப் பூசைக்குத் தன்னையும் அழைத்திருந்தார்கள் என்று யதுகிரி அம்மாள் எழுதும், 19-வது அத்தியாயத்தில், 'பாரதியார் முன்போல் இல்லை. அவர் போக்கு வேகமாய் மாறிக்கொண்டு வந்தது. யாரோ அவரைத் தப்பு வழிகளில் இழுக்கிறார்கள் என்று தோன்றிற்று. ஆனால், அவர் போக்கை மாற்ற முடியவில்லை. செல்லம்மாவின் வேண்டுகோள்களையும் தள்ளிவிட்டு முன்போகிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது. முன்னெல்லாம் போல எதையும் அவரிடம் வெளிப்படையாகக் கேட்க நான் குழந்தை அல்ல. ஒரு குழந்தையின் தாய். அதனால் செல்லம்மாவோடு தாராளமாய்ப் பேசுவதுபோல அவரிடம் பேச முடியாது' என்று தன் உள்ளக்கிடக்கையைப் பதிவு செய்கிறார். மேலும், 'பாரதியார்

எதைப் பார்த்தாலும் கண் கொட்டாமல் உற்றுப் பார்ப்பார். ஆனால், அவரது கண்ணில் பார்வை முன் இருந்த அழகு இல்லை. சூரியனைப் பார்த்துப் பார்த்து விகாரமாக ஆகிவிட்டது என்பார் செல்லம்மா'. என்றும் எழுதுகிறார்.

அது உண்மையா தெரியவில்லை. ஆனால், இந்தக் காலத்தில்தான் பாரதி, லாகிரிப் பொருள்களைப் பயன்படுத்தத் தொடங்கினார். அதன் விளைவே இந்த வேற்றுமையும் விகாரமும் என்று கருத இடம் இருக்கிறது. அதற்குப் பின்னர் பாரதி யதுகிரியின் இல்லத்திற்குச் சென்றிருந்தபோது நிகழ்ந்த உரையாடலில், 'யதுகிரி, நான் ஒரு புதிய வழி தேடிக் கொண்டிருக்கிறேன்' என்கிறார். 'என்ன வழி?' என்று யதுகிரி கேட்க, 'சாகாமல் இருக்க வேண்டும். அதைக் கண்டுபிடிக்கப் போகிறேன்' என்று பதில் அளித்திருக்கிறார். 'எல்லா அதிசயமும் செய்யலாம். ஆனால், சாகாமல் இருக்க முடியாது என்று எல்லாரும் சொல்கிறார்கள். நீர் அதைக் கண்டுபிடித்தால் மிகவும் அதிசயமே' என்று யதுகிரி சொல்ல, 'நான் பிரயத்தனப்படுகிறேன். அது கட்டாயமாக எட்டும் என்று தோன்றுகிறது' என்று பாரதி நம்பிக்கையுடன் கூறுகிறார். இந்தச் சமயத்தில், அந்த இடத்திற்கு வருகை தந்த யதுகிரியின் தந்தையார் ஸ்ரீநிவாசாரியார், 'குருவியின் தலையிலே பனம் பழத்தைக் கட்டுவதுபோல், அவளுக்கு வேதாந்த விகாரம் எதற்கு, பாரதி? அவள் பெரியவளாக ஆகும்போது தன்னாலே தெரிந்து கொள்கிறாள். இப்பொழுது அந்த வீண் விவகாரமெல்லாம் வேண்டாம்' என்று சொல்லித் தடுத்துவிடுகிறார்.

'பாரதியார் மறுமொழியே பேசவில்லை. பேசாமல் எழுந்து போய்விட்டார்' என்று யதுகிரி முடித்துவிடுகிறார். ஒருவேளை ஆச்சாரியார் வராமல் இருந்திருந்தாலோ, அல்லது தாமதமாக வந்திருந்தாலோ, அந்த விவரம் யதுகிரி வாயிலாய்ப் பதிவாகி இருந்திருக்கும். காலம் அதற்குக் களம் அமைத்துக் கொடுக்காதது, இழப்புத்தான். ஆனால், இந்த உரையாடலின்மூலம் பாரதி மேற்கொண்ட பிரயத்தனம் புரிபடுகிறது. இதன் முதிர்ந்த பதிவு, பாரதி அறுபத்தாறில் விளக்கமாகிறது. இதற்கடுத்த அத்தியாயத்தில் பாரதி மேற்கொண்ட சாதகம் யதுகிரியின் பார்வைக்குப் படுகிறது. அதிகாலையில் கடற்கரைப் பகுதியில் யதுகிரி தன் தந்தையார், தங்கையுடனும் வருகிறபோது, பாரதி பாடுகிற குரல் போல் கேட்கிறது. போய்ப் பார்த்தால், பாரதியேதான். கருப்புச் சொக்காய், கச்சை போட்ட வேஷ்டி, கூப்பிய கரங்களுடன் கடலில் உதயமாகும் பால சூரியனை நோக்கியபடி, திருவாய் மொழிப் பாடலைப் பாடிக் கொண்டிருக்கிறார்.

விசாரணை போல நடந்த உரையாடலில், சில விஷயங்கள் வெளிச்சத்திற்கு வருகின்றன. பாரதி வீட்டை விட்டு வந்து வெகுபொழுதாயிருக்கிறது. எங்கிருக்கிறார் என்று தெரியாமல் கவலைப்படும் வீட்டார் பற்றி ஆச்சாரியார் விசனப்பட்டபோது, தலைகவிழ்ந்தபடி பாரதி கேட்கிறார்: 'செல்லம்மா உங்கள் வீட்டில் வந்து கேட்டாளா? நான் என்ன குழந்தையா?' அடுத்து நடந்ததை அப்படியே எழுதுகிறார் யதுகிரி. 'உடன்பிறந்த சகோதரனை அன்புடனும் ஆதரவுடனும் தழுவுவதைப் போல என் தகப்பனார் அவருடைய இரு கரங்களையும் பிடித்துக் கட்டுமரத்தைவிட்டு இறக்கினார். எங்களை, நீங்கள் நிதானமாகப் போய்க் கொண்டிருங்கள். நாங்கள் பின்னாலேயே வருகிறோம்' என்றார். பாரதியாரோடு ஆங்கிலத்தில் பேசினார். அவர் பதிலே பேசவில்லை. ஆனால், அவர் கண்களில் தாரை தாரையாக நீர் பெருகியது. அந்தக் காட்சி என் கண்களை விட்டு இன்றும் அகலவில்லை.

பின்னர், பாரதியை அழைத்துக் கொண்டு, அவர் வீட்டிற்குச் செல்கிறார்கள். செல்லம்மா தெரு வாயிற்படியில் செல்லம்மா நிற்கிறார். அவர் பாரதியிடம் எதுவும் கேட்கவில்லை. பாரதியோ தலையைக் கவிழ்ந்தபடி, உள்ளே சென்றுவிடுகிறார். 'கடற்கரையில் என்ன பேசினார்கள்? ஏன் பாரதியார் கண்களில் கண்ணீர்?' என்று யதுகிரி கேட்கவில்லை. அவர் தங்கை ரங்கநாயகி கேட்க, 'கண்ணில் சமுத்திர மணல் விழுந்திருக்கும்' என்று கூறி மழுப்பிவிடுகிறார் ஆச்சாரியார். 'முன்போல் இல்லாத மாற்றம் எதனால்' என்ற கேள்வி யதுகிரியின் மனத்தைக் குடைகிறது. திரைப்படத்திலோ, நாடகத்திலோ, சொல்லப்படாத காட்சியின் உள்நோக்கு உணர்ந்த ரசிகனுக்கு முன், இந்தக் காட்சிப் பின்புலம் தெரியாத சில கதாபாத்திரங்கள் பேசிக் கொள்வதுபோல, இந்தக் காட்சிகள் விரிகின்றன. பாரதி-செல்லம்மா அந்தரங்க வாழ்வின் இடையில் விழுந்த மௌனத்திரை எதன் பொருட்டு? யாரால் என்கிற கேள்விகள் துளைத்துக் கொண்டே இருக்கின்றன, யதுகிரிக்குள். அவர் ஒன்றும் இப்போது சிறுபெண் அல்லவே தாய் அல்லவா? ஒரு பெண் படும் வேதனை இன்னொரு பெண்ணுக்குத் தெரியாதா? தாயினும் பரிந்து பேணும் தந்தையாகிய ஆச்சாரியார், 'செல்லம்மாளையோ, பாரதியையோ ஒன்றும் கேட்டு வைக்காதே. மனக்கஷ்டப்படுவார்கள்' என்று இச்சிக்கலை விளக்கிச் சொல்லாமல் முற்றுப்புள்ளிவைத்துவிடுகிறார்.

யதுகிரியின் மனம் மேலும் கனக்கிறது. இவர்களைவிடுத்து, வ.வே.சு. ஐயரிடம் நடந்தவற்றைச் சொல்லி விளக்கம் கேட்கிறார் அவர் ஒருவாறு இந்த மௌனநாடகம் குறித்த தன் புரிதலை யதுகிரியிடம் சொல்கிறார். அவருக்கு ஏதாவது புதிய வழி என்று தோன்றிவிட்டால், அதைச் செய்யலாமா, கூடாதா என்றுகூட யோசிப்பதில்லை. நானும் அவருக்கு வேண்டிய அளவு சொல்லிப் பார்த்தேன். அவர் பாட்டுக்குக் கண்ணை மூடிக் கொண்டு முன்னுக்குப் போய்க் கொண்டிருக்கிறார். இது இன்னும் எவ்வளவு தூரம் அபாயத்தில் கொண்டு விடுமோ தெரியவில்லை. இப்போதைக்கு அவர்கள் வீட்டுக் குழப்பம் தீராது என்று தோன்றுகிறது' என்று பூடகமாகச் சொல்லிவிட்டு, 'வீட்டுத் தொல்லைகளை மறந்து தன் கற்பனா உலகத்தில் சந்தோஷமாக இருக்க லாகிரி வஸ்த்துக்களை உட்கொள்கிற விஷயத்தைப் படர்க்கை நிலையில் எடுத்துரைக்கிறார். 'லாகிரி வஸ்த்துக்களை உட்கொண்டால் தொல்லைகளை மறந்து ஆகாயக் கோட்டை கட்டலாம். லாகிரியின் வேகம் குறையக் குறைய உடலின் வலிவு குறைந்து பிழிந்து எறிந்த பழத்தைப் போல் ஆகிவிடுகிறது. வருந்துவதைத் தவிர, செய்வதற்கு ஒன்றும் இல்லை. நம் உபதேசங்கள் யாவும் செவிடன் காதில் சங்கு ஊதுவதுபோல் ஆகும்' என்று சலித்துக் கொள்கிறார். 'பாரதியின் மாற்றம், தடுமாற்றமா? முன்னேற்றமா? அம்மாற்றத்திற்குக் காரணம் போதையா? புதிதாய்த் தேடும் பாதையா?' என்ற குழப்பம் யதுகிரிக்குள் தோன்றுகிறது ஆனாலும், நம்மைப் போலவே, பாரதியின் மீதிருந்த யதுகிரியின் நம்பிக்கை தளரவில்லை. நிகழ்வின் பதிவுகள் தொடர்கின்றன.

## மௌன நாடகத்தின் உச்சக் காட்சி:

பாரதி நினைவுகள் நூலின், 21-ம் அத்தியாயம், 'சாகாவரம்.' அதில், இந்த மௌனநாடகத்தின் உச்சக்காட்சி அமைகிறது. இப்போது பிங்கள ஆண்டு பிறந்து விடுகிறது. கிட்டத்தட்ட

1918 ஏப்ரல் மாதத்திற்குப் பிந்தையக் காலக்கட்டம். தன் குழந்தையைச் சாகக் கொடுத்த துக்கத்தோடு புதுவை வந்த யதுகிரிக்கு, தன் தோழி மீனாவும் தன்னைப் போலவே, குழந் தையை இழந்து தவிக்கிற துக்கச்செய்தி வந்து தாக்குகிறது. துக்கம் விசாரித்து மீண்ட யதுகிரி பாரதியின் இல்லம் வருகி றார். செல்லம்மாளும் யதுகிரியும் அழுது தீர்க்கிறார்கள். இத னைப் பார்த்த பாரதியின் கண்களிலும் நீர். இப்போது யதுகிரி எழுதுகிறார் 'அன்று அவர் 15 நாள் மௌன விரதம் ஆரம்பித் திருந்தார். சிறிது நேரத்திற்குப் பின்னர் மாடியிலிருந்து அவர் எங்களை அழைத்தார். நாங்கள் போனோம். 'குழந்தை இல் லாமல் உன்னைப் பார்ப்பது எங்களுடைய பாவம்' என்று ஒரு சீட்டில் எழுதி என்னிடம் காட்டினார். நான் அவரை உற்றுப் பார்த்தேன். வெறும் எலும்புக் கூடு, சிவப்பான கண்கள். துர்ப் பலமான உடம்பு. பார்க்க சகிக்கவில்லை. என் மனத்தில் இருப்பதை அறிந்து கொண்டவர் போல, 'நான் புதிய வழியில் யோகசாதனம் செய்கிறேன். அதனால் உடம்பு இளைத்திருக் கிறது' என்று அறிவித்தார். 'பாஞ்சாலி சபதம்' துகிலுரியும் சர்க்கத்தை அன்று முடித்திருந்தார். அதைப் பாடிக் காட்டி னார். மௌன நாட்களில் பேசத்தான் மாட்டார் கவிதைக ளைப் பாடுவார்.

செல்லம்மா அப்போது வருத்தத்துடன் சொன்னார்: யதுகிரி, இதுவரை விதியின் விளையாட்டைப் பார்த்தாகிவிட்டது. இனி இந்தச் செய்கையின் விளையாட்டைக்கேள். தெய்வம் பாதி கெடுத்தால், மனிதர் பூராவும் கெடுத்துக் கொள்ள வேண் டுமா? இவர், 'எள்ளத்தனைப் பொழுதும் பயனின்றி, இரா மென் நாவினிலே என்று பாடிவிட்டு, இப்படி ஊமையைப் போல், அபிநயிப்பதைக் கண்டு என் நெஞ்சு வெடித்துவிடும் போல் இருக்கிறதே. இந்தக் கஷ்டம் என் பகைக்கும் வேண் டாம். என்ன வழியோ? என்ன விதியோ? இந்தக் கோலம் சகிக்க முடியவில்லையம்மா. பாரதியார்: 'நான் மந்திரச் சொல்லைக் கண்டு பிடிக்காமல் இருந்தால் செல்லம்மா கலாட்டா செய்கிறாள்' என்று எழுதிக் காட்டினார். நான் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன்'.

அப்போதும் பாரதியின் மீதிருந்த நம்பிக்கை யதுகிரிக்குக் குறையவில்லை. 'குழந்தையை இழந்து துன்புறும் மீனா பிழைப்பது கடினம்' என்று செல்லம்மா சொல்கிறபோது, 'பார தியார் சாகாமல் இருக்க வழி கண்டுபிடிக்கப் போவதாக முன்பு ஒருநாள் சொன்னார். அன்று ஐயா (யதுகிரியின் அப்பா) குறுக்கிட்டு அந்தப் பேச்சைத் தடை செய்துவிட்டார். பங்களூரில் என் குழந்தை இறந்து போனபோதுகூடப் பாரதி யார் சொன்னதைத்தான் நினைத்துக் கொண்டேன். மரணம் பயங்கரமானது. மீனாவை இவர் காப்பாற்ற மாட்டாரா? என்று கேட்கிறார் யதுகிரி. அப்போது, 'பாரதியார் ஏதோ எழுத முயன்றார். அதைக் கண்ட செல்லம்மா சட்டென்று எழுந்தார். என் கையைப் பற்றி அழைத்துக் கொண்டு கீழே வந்தார். 'யதுகிரி, அவரிடம் அந்தப் பேச்சை எடுக்காதே. நேரமாகிறது. வீட்டுக்குப் போய் வா. என்று விடை கொடுத்தார்'. என்று எழு துகிறார். இந்த முறையும் ஏமாற்றம்.

## இறுதியில் நடந்தது என்ன?

செல்லம்மா எவ்வளவு முறையிட்டும் பாரதியார் மௌன விர தத்தை மாதக் கணக்காக அநுஷ்டித்தார். ஒருதரம் நாற்பது நாள் விரதம் இருந்து கவிதைகள் செய்தார். அதுதான், பாரதி அறுபத்தாறு என்ற பெயரில் இப்போது உலவுகிறது. இன்று அதைப் படித்தால், அன்று அவர் அதைச் செய்ய எவ்வளவு தவம் செய்திருக்க வேண்டும் என்பது விளங்குகிறது.

## பாரதியின் உபதேசம்:

புற உலகின் பார்வையில் மேதாவியின் செயல்பாடுகள் பைத் தியக்காரத் தனம்போலவே தென்படும். ஆனால், அதுவொரு சித்த தவம் என்பதை இப்போதும் புரிந்து கொள்ள முடியாத போது, அப்போதைய உலகம் எப்படிப் புரிந்து கொள்ளும்? பாரதியின் மெலிவுக்கும் நலிவுக்கும் லாகிரிப் பொருட்பயன் பாடு மட்டுமா, காரணம்? ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி, உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சுவைத்த அனுபவத்தில் பிறந்தவை, 66 பாடல்கள். உக்கிரம் மிகுந்த 'பாஞ்சாலி சபத'த்தையும், தத்துவம் ஒளிரும் 'பாரதி அறுபத் தாறு' நூலையும் பாட அவர் என்ன பாடுபட்டிருக்க வேண் டும்? அவருக்குள் நிகழ்ந்த மாற்றங்களை யாரே அறிவார்? பேசாதிருப்பது மௌனமல்ல; யாரும் பேசாப் பொருளைப் பேசவும் கேட்கா வரத்தைக் கேட்கவும், 'வாயே திறவாத மௌனத்திருந்து' மணக்குள விநாயகரைப் பாடியவர் பாரதி. மௌனச்சாமியாய் வந்து பாரதியை ஆதர்சித்து, 'சும்மா' இருக்கும் சுகத்தைப் பெற, 'சொல்லறச் செய்யும் மௌன தவத்தைப் பாரதி மேற்கொள்ளவில்லை. சாவினுக்கு அஞ் சும் மாந்தர்களின் மரண பயம் போக்க, ஓம் என்ற சொல்லி னும் ஓங்கிய 'சொல்' வேண்டி மேற்கொண்ட மேன்மைத் தவம். தான் பெற்ற அனுபவத்தை, தன் பாடலில் நிறைத்து குருவின் உபதேசமாகவே பாரதி பாடுகிறார்.

***'தேசிகன்கை காட்டிஎனக்கு உரைத்த செய்தி***
***செந்தமிழில் உலகத்தார்க்கு உணர்த்து கின்றேன்:***
***வாசியைநீ கும்பகத்தால் வலியக் கட்டி,***
***மண்போலே சுவர்போலே, வாழ்தல் வேண்டும்;***
***தேசுடைய பரிதியுருக் கிணற்றி னுள்ளே***
***தெரிவதுபோல் உனக்குள்ளே சிவனைக் காண்பாய்;***
***பேசுவதில் பயனில்லை, அனுப வத்தால்***
***பேரின்பம் எய்துவதே ஞானம்'***

என்றான். பொருள் விளக்கம், எழுதியோ, பேசியோ பெற முடி யாது. அவரவரும் 'பேசாது அனுபவத்தால் பேரின்பம் எய்து கிற தவம் செய்தல் வேண்டும்' என்பதே பாரதியின் உபதே சம். இதில் மௌனமே சொல்லாகிறது.

***'பார்மீது நான்சாகா திருப்பேன், காண்பீர்!***
***மலிவுகண்டீரிவ்வுண்மை, பொய்கூ றேன்யான்,***
***மடிந்தாலும் பொய்கூறேன் மானு டர்க்கே,***
***நலிவுமில்லை, சாவுமில்லை, கேளீர், கேளீர்'***

என்று ஞானாகாசத்து நடுவே நின்று மௌனத்தின் உச்சத் தில் பாரதி உபதேசித்த உண்மை உணர, மீளவும் 'பாரதி அறுபத்தாறு' பயிலத் தொடங்கலாம். செப்டம்பர் 11 பாரதி யின் 103-வது நினைவுதினம். நாம் அவரை எப்போது மறந் தோம்?

sethupathi@thaiveedu.com






சென்ற இதழில் கம்பராமாயணம், அயோத்தியா காண்டத்தின் எட்டாவது படலமாகிய சித்திரகூடப் படலத்தில் குறிஞ்சி நில இயற்கை அழகுடன், சீதையின் அழகையும் இராமன் கூறுவதாகக் கம்பரின் கற்பனை மிகுந்த கவி வண்ணத்தின் மூலமாகக் கண்டு மகிழ்ந்தோம். இந்த இதழில் இராமன், சீதை, இலக்குமணன் மூவரையும் சித்திரகூட மலையிலே விட்டு விட்டுக் கம்பருடன் சேர்ந்து நாமும் அயோத்திக்குத் திரும்பிப் பள்ளிபடைப் படலத்தில் கம்பரின் கவிவண்ணம் காட்டும் செய்யுள்கள் சிலவற்றை எடுத்துச் சுவைத்து மகிழ்வோம். பள்ளிபடைப் படலமென்பது தயரத மன்னனைப் பள்ளி படுத்தும் செய்தியை உணர்த்துவதெனப் பொருள்படும். பள்ளி படுத்தல் என்பது இறந்த உடலை எரிப்பதற்காக விறகுகள் அடுக்கப்பட்ட படுக்கையில் கிடத்துதலைக் குறிப்பதாகும்.

தயரதன் இறந்ததும் வசிட்ட முனிவனால் ஓலை கொடுத்து அனுப்பப்பட்ட தூதர்கள் கேகய நாட்டை அடைந்து பரதனின் மாளிகைக்குச் சென்று அங்கிருந்த காவலாளியிடம் தமது வரவைப் பரதனிடம் கூறும்படி சொல்கிறார்கள்.

***தூதர் வந்தனர் உந்தைசொல் லோடெனக்***
***காதல் முந்திக் களிக்கின்ற சிந்தையான்***
***போது கீங்கெனப் புக்கவர் கைதொழத்***
***தீதி லன்கொல் திருமுடி யோனென்றான்.***

*கம்ப. அயோத்தி. 808*

'உமது தந்தையின் செய்தியுடனே தூதர்கள் வந்துள்ளார் என வாயிற் காவலர்கள் பரதனிடம் கூற அவன் மகிழ்வுற்ற மனமுடையவனாகத் தந்தை அனுப்பிய செய்தியைக் கேட்க ஆவல் கொண்டவனாக', இங்கே வருக! என்று தூதர்களை அழைக்க அவர்கள் வந்து அவனை வணங்கி நிற்க, தூதர்கள் ஓலையுடன் வந்ததனால் சிறிது ஐயம் கொண்டவனாக, தந்தை யாதொரு தீங்குமின்றி நலமே இருக்கின்றாரா ? என்று வினவுகின்றான்.

தந்தையின் உடல் நலத்துக்கோ, நாட்டு நலத்துக்கோ தீதொன்றும் நிகழ்ந்து விடவில்லையே என்பதாகத் 'தீதிலன் கொல் திருமுடியோன்' என்று பரதன் கேட்பதாகக் கம்பரின் சொற்றொடர் இருக்கிறது. ஐ என்பது தந்தை என்பதாகவும் பொருள்படும் ஓரெழுத்தொரு மொழி. 'மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன் ஐ யானை எறிந்து களத்து ஒழிந்தனனே| - (புறநானூறு 279.3) என்னும் புறநானூற்றுப் பாடல் வரியில் ஐ என்னும் சொல் தந்தையைக் குறித்து வருவதைக் காணலாம். இந்த வேர்ச் சொல்லிலிருந்தே தன் ஐ - தந்தை என்றும், என் ஐ - எந்தை என்றும், உன் ஐ - உந்தை என்றும் சொற்கள் உருவாக்கம் பெற்றன.

அயோத்தியில் நிகழ்ந்தவை பற்றி எதுவும் அறிந்திராத தூதுவரிடம் தந்தையினதும், இராம இலக்குவரதும், மற்றும் சுற்றத்தாரதும் நலன்களை விசாரித்தபின் அவர்கள் கொண்டு வந்த ஓலையைப் பரதன் பெற்றுக்கொள்கிறான்.

***சூடிச் சந்தனந் தோய்த்துடைச் சுற்றுமண்***
***மூடு தோட்டின் முடங்கல் நிமிர்த்தனன்***
***ஈடு நோக்கிவந் தெய்திய தூதர்க்குக்***
***கோடி மேலும் நிதியம் கொடுத்தனன்.***

*கம்ப. அயோத்தி. 812*

அந்த முடங்கலை முதலிற் தன் தலையிற் சூடியபின் மேற்புறத்தில் சந்தனம் பூசப்பெற்று வாய்ப்புறத்தில் மண்வைத்து மூடி முத்திரையிடப்பட்டுள்ள ஓலையின் சுருளைப் பிரித்துப் பார்த்தவனாய் அவ்வோலையில் எழுதியிருந்த செய்தியை அறிந்து கொண்டவனாக, அந்த முடங்கலைக் கொண்டு வந்த தூதர்களுக்கு கோடிக்கு மேலாகப் பரதன் பொருள்களை வழங்கினான். அந்த முடங்கல் அயோத்தியிலிருந்து வந்தது என்னும் பெரு மதிப்பினால் முதலில் அதனைத் தலையில் சூடிப் பின் எடுத்துப் பிரித்தான் என்கிறார் கம்பர். அந்த ஓலையில் 'கைவிஞ்சிப் போகின்ற காரியம் ஒன்று ஏற்பட்டுள்ளதால் உடனே வருக!' என எழுதியிருந்தாலும், அங்கு நிகழ்ந்தவை எதனையும் அறியாதவனாக இராமன் முதலியோரை விரைவில் காணப்போகின்றோம் என்னும் மகிழ்ச்சி

யால் தூதர்க்குப் பெருநிதியம் வழங்கினான் என்பதாகும்.

முடங்கல் என்னும் சொல்தான் இக்காலத்தில் கடிதம் அல்லது அஞ்சல் என அழைக்கப்படுகிறது. கடிதம் என்பது தமிழ்ச் சொல் அன்று. கடிதாசி என்பது உருதுச் சொல். அது தமிழ், தெலுங்கு, துளு, மலையாளம் ஆகிய மொழிகளில் கடிதம் ஆனது. முத்திரையிட்டு மூடப்பட்ட அஞ்சல் முடங்கல் ஆகும். முற்காலத்தில் அரசர்கள் பனையேட்டில் செய்தி எழுதிச் சுருளாகச் சுற்றிய ஓலையின் வாய்முகத்தில் மண்ணையிட்டு அரச முத்திரை பதித்து அனுப்புவது மரபு. அவ்வாறு மூடி முத்திரையிடப்பட்டதுதான் முடங்கல் ஆகும். அது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குச் செல்லும் தன்மையால் அஞ்சல் என அழைக்கப்படுகிறது. மின்னஞ்சல் என்னும் சொல் இப்போது பரவலாகப் பயன்பாட்டில் வந்துவிட்டது. மடல் என்பதும் கடிதத்தைக் குறிக்கும் இன்னொரு சொல். மடல் என்பது ஒரு தாளைக் குறிக்கும். தாழை மடல் போல நல்ல பரப்பான, மென்மையான, தன்மையுடையதால் காகிதத்தைத் தாள் என அழைக்கிறோம். ஒரு தாளில் எழுதப்படுவதால் மடல் என்றும் கூறப்படுகிறது. கடிதம் என்னும் உருதுச் சொல் வந்து நாம் பயன்படுத்திய முடங்கல், அஞ்சல், மடல், திருமுகம் ஆகிய அழகான தூய தமிழ்ச் சொற்களை வழக்கிழந்து போகச் செய்து விட்டது கவலைக்குரியது. ஓலையைப் பெற்றுக்கொண்ட பரதன் சத்துருக்கனோடு உடனே புறப்படுகிறான்.

***எழுக சேனையென் றேவினன் எய்தினான்***
***தொழுது கேகயர் கோமகன் சொல்லொடும்***
***தழுவ தேரிடைத் தம்பியோ டேறினான்***
***பொழுதும் நாளும் குறித்திலன் போயினான்.***

*கம்ப. அயோத்தி. 814*

உடனே பரதன் தான் புறப்படக் கருதியவனாய், 'பரிவாரச் சேனைகள் உடனே புறப்படுக!' என்று ஏவினான். கேகயர் கோனை வணங்கி விடைபெற்றுக் கொண்டு குதிரைகள் பூட்டப்பட்டுத் தயாராக வந்து நின்ற தேரின் மீது தன் தம்பியாகிய சத்துருக்கனுடன் ஏறிப் புறப்பட்டான். அயோத்திக்குப் புறப்படுவதில் ஏற்பட்ட பேரவாவினால் பயணத்துக்கு ஏற்ற நல்ல நாளும் பொழுதும் பார்க்காதவனாக அயோத்தி நோக்கி அவன் புறப்பட்டான் என்கிறார் கம்பர். பயணப்படும்போது சகுனம், நாள், பொழுது போன்றவை பார்க்கின்ற மரபு அக்காலத்திலேயே இருந்தது என்றாலும், கடவுளிடத்தும் நல்லவர்களிடத்தும் செல்லப் புறப்படும்போது அவற்றைக் கவனிக்க வேண்டியதில்லை என்பதைப் 'பொழுதும் நாளும் குறித்திலன் போயினான் எனக் கம்பர் காட்டுகிறார். கோளாறுப் பதிகத்தில்' ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கும் மிகவே என்னும் திருஞானசம்பந்தர் கருத்தையும் இங்கு நினைவில் கொள்ளலாம்.

பரதன் அயோத்தி நோக்கிப் புறப்பட்டபோது யானைப்படை, குதிரைப்படை, வேதியர் கூட்டம், இசைக் குழுவினர் என்று பல்வேறு அரச சின்னங்கள் திரண்டு வந்ததாகக் கம்பர் 8 செய்யுள்களில் வருணிக்கின்றார். அவற்றுள் ஒன்று இது.

***ஊன ளைந்த உடற்குயி ராமெனத்***
***தான ளைந்து தழுவின தண்ணுமை***
***தேன ளைந்து செவியுற வார்த்தென***
***வான ளைந்தன மாதகர் பாடலே.***

*கம்ப. அயோத்தி. 822*

மாதகர்களின் பாடல்கள், தேனின் இனிமையை அளைந்து கொண்டு வந்து செவிக்கு இனிமையாய் சொரிந்தாற்போல வானகம் வரை பரவியிருக்க, உடலெங்கும் பரந்து செறிந்து உயிர் கலந்திருப்பதைப்போல, தண்ணுமை என்னும் மத்தள இசைக்கருவிகளின் ஒலிகள் அவற்றுடன் கலந்து தழுவியிருந்தன என்பது கம்பரது வருணனை. உயிரானது உடலின் எல்லாப்பகுதிகளிலும் கலந்து தழுவி நிற்பதைப் போலத் தண்ணுமை ஒலிகள் மாதகர் பாடலுடன் கலந்து தழுவி நின்றன என்னும் உவமை நயம் சிறப்பானது. ஊனளைந்த, தானளைந்து, தேனளைந்து, வானளைந்து என அழகிய ஓசைநயம் மிக்க தலையாய எதுகை கொண்ட சொல்லாட்சியில் இச்செய்யுள் சிறக்கிறது. அளைதல் என்னும் சொல் நன்றாகக் கலப்பதைக் குறிக்கும் சொல்லாகப் பேச்சு வழக்கிலும் இருப்பதை நாமறிவோம். இச்செய்யுளில் மாதகர் என்னும் சொல் வருகிறது. அரசரின் முன்னேயிருந்து அவரது புகழ்பாடுவோர் மாதகர் என அழைக்கப்பட்டனர்.

பரதன் கோசல நாட்டை அடைந்தபோது அந்நாட்டில் எவரும் தத்தம் தொழிலைச் செய்யாமலும், மகிழ்ச்சியற்று இருப்பதையும், நகரம் பொலிவிழந்து இருப்பதையும் கண்ட பரதனும், சத்துருக்கனும், ஏதோ பெருந்துயரம் நேர்ந்திருக்குமோ என எண்ணி மனதில் கவலை கொள்வதாக, திருமகளே அந்நாட்டைவிட்டு நீங்கினாற்போல அந்நாடு காணப்பட்டதாக 15 செய்யுள்களிலே கம்பர் வருணிக்கின்றார். அவற்றுள் ஒருசில செய்யுள்களைப் பார்ப்போம்.

***நகையி ழந்தன வாண்முகம், நாறகில்***
***புகையி ழந்தன மாளிகை, பொங்கழல்***
***சிகையி ழந்தன தீவிகை, தேமலர்த்***
***தொகையி ழந்தன தோகைய ரோதியே.***

*கம்ப. அயோத்தி. 831*

அந்நாட்டிலுள்ளவரது ஒளிமிகுந்த முகங்கள் மகிழ்ச்சியால் ஏற்படும் சிரிப்பை இழந்து காணப்பட்டன. அந்நாட்டு மனைகளில் நறுமணம் வீசுகின்ற அகிலின் புகை நீங்கப் பெற்றிருந்தன. வீதிகளில் ஏற்றப்பட்டிருந்த விளக்குகள் தீச்சுவாலை இழந்து ஒளிமங்கிக் கிடந்தன. அந்நாட்டு மகளிரின் கூந்தல்கள் தேனையுடைய மலர்கள் சூடப்பெறாமல் அழகு இழந்து காணப்பட்டன என அந்நாடு களையிழந்து காணப்பட்டதை பரதனும் சத்துருக்கனும் காண்பதாகக் கம்பர் காட்சிப்படுத்துகிறார். இவ்வாறு ஒவ்வொரு செய்யுளிலும் ஒரே சொல் திரும்பத் திரும்ப வந்து பொருள்நயம் தருகின்ற சொற்பொருட் பின்வரு நிலையணி என்னும் அணி நயம் இங்கே பல செய்யுள்களிலே வருவது கம்பனின் கவித்திறனை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

*அண்ட முற்றும் திரிந்தயர்ந் தாய்அமுது*
*உண்டு போதியென் றொண்கதிர்ச் செல்வனை*
*விண்தொ டர்ந்து விலக்குவ போல்வன*
*கண்டி லன்கொடி யின்னெடுங் கானமே.*

*கம்ப. அயோத்தி. 836*

ஒளிபொருந்திய கதிர்களை வீசுகின்ற கதிரவனை நோக்கி 'நீ இந்த அண்டம் முழுவதும் அலைந்து சோர்ந்திருக்கின்றாய். இங்கு தங்கி உணவு அருந்திச் செல்வாயாக!' என்று சொல்வதற்காகக் கதிரவன் செல்கின்ற வானளவுக்கு உயர்ந்து சென்றிருக்கும் கொடிச் சீலைகளின் தொகுதிகள் இல்லாது அயோத்தி நகரத்து நிலை மாறி அழகு அழிந்திருப்பதைப் பரதன் கண்டு கலங்குவதாகக் கம்பர் கூறுகிறார். வானளாவ உயர்ந்துள்ள அந்நகரின் கொடிச் சீலைகள் வருணிப்பதற்கு வானின் வழியாகச் செல்லுகின்ற கதிரவனை மறித்து, 'பசியோடு அலைகிறாய், உணவு உண்டு செல்க' என அழைப்பதற்காகக் கொடிச் சீலைகள் வானுயர்ந்துள்ளன எனக் கம்பர் தன்மைத் தற்குறிப்பேற்ற அணி நயத்துடன் வருணித்திருப்பது சிறப்பானது.

பொலிவிழந்த நகரைப் பார்த்துக் கலங்கியவாறு வந்த இருவரும் அரண்மனையை அடைந்து தந்தை இருக்குமிடம் செல்கிறார்கள். தந்தையை அங்கு காணாமையால் மேலும் கலக்கமடைகிறார்கள். அப்போது பணிப் பெண் ஒருத்தி வந்து தாய் அழைப்பதாகக் கூறப் பரதன் தாயிருக்குமிடம் சென்று அவளை வணங்கித் தந்தை எங்குள்ளார் என வினவத் தயரதன் வானகம் சென்றான் என்னும் செய்தியைச் சொல்லி 'நீ வருந்தாதே' என்கிறாள் கைகேயி. அதனைக் கேட்ட பரதனின் நிலையைக் கம்பர் இவ்வாறு கூறுகிறார்.

*எறிந்தன கடியசொல் செவியுள் எய்தலும்*
*நெறிந்தலர் குஞ்சியான் நெடிது வீழ்ந்தனன்*
*அறிந்திலன் உயிர்த்திலன் அசனி ஏற்றினால்*
*மறிந்துயர் மராமரம் மண்ணுற் றென்னவே.*

*கம்ப. அயோத்தி. 851*

கைகேயியின் கடுஞ் சொல் இடியெறிந்தாற்போலக் காதில் பட்டவுடனேயே செறிந்த தலைமயிரையுடைய பரதன், ஓங்கி வளர்ந்த மராமரமானது பேரிடியினால் முறிந்து பூமியில் விழுந்தாற்போல வீழ்ந்து, அறிவிழந்து, உயிர்ப்புமின்றி மூர்ச்சித்துக் கிடந்தான் என்பது பொருள். தந்தை இறந்த செய்தியைக் கைகேயியின் வாயாற் கேட்ட மாத்திரத்தே உயர்ந்து வளர்ந்திருந்த மராமரம் இடியேறுபட்டு நிலத்தில் வீழ்ந்தது போல அவன் வீழ்ந்த காட்சியைக் கம்பரின் உவமை நயம் நம் கண்முன் நிறுத்துகிறது. பின்னரும் பரதன் கொண்ட துயரினைக் கம்பர் மேலும் பல செய்யுள்களிலே வருணிக்கின்றார்.

*எழுந்தனன் ஏங்கினன் இரங்கிப் பின்னரும்*
*விழுந்தனன் விம்மினன் வெய்து யிர்த்தனன்*
*அழிந்தனன் அரற்றினன் அரற்றி யின்னன*
*மொழிந்தனன் பின்னரும் முருகிற் செவ்வியான்.*

*கம்ப. அயோத்தி. 853*

முருகக் கடவுளைப்போல் சிவந்த மேனியையுடைய பரதன் தான் விழுந்து கிடந்த தரையிலிருந்து ஏக்கத்துடன் எழுந்தான். பின்னரும் தரையில் வீழ்ந்தான். மனம்மிக வருந்தி வெம்மையாக மூச்செறிந்து மனநிலை குன்றிப்போய்ப் பலவாறு புலம்பலானான். பரதனுடைய சிவந்த நிறத்தையும், அழகையும் முருகக் கடவுளுக்கு உவமையாக்குகின்றார் கம்பர். தந்தையின் இறப்பையிட்டுப் பலவாறு அரற்றிப் புலம்பிய பரதன், இராமனைக் கண்டு வணங்கினாலன்றித் தன் மனத்துயர் தீராது என்று தாயிடம் சொல்ல, இராமன் இலக்குவன் சீதை மூவரும் காடேகிய செய்தியைக் கைகேயி அவனிடம் தெரிவிக்கின்றாள்.

*வனத்தினன் என்றவள் இசைத்த மாற்றத்தை*
*நினைத்தனன் இருந்தனன் நெருப்புண் டானென*
*வினைத்திறம் யாதினி விளைப்ப தின்னமும்*
*எனைத்துள கேட்பன துன்பம் யானென்றான்.*

*கம்ப. அயோத்தி. 866*

இராமன் காடு சென்றுவிட்டான் என்று கைகேயி சொன்ன சொல்லை மனத்தினால் எண்ணியெண்ணிப் பார்த்து நெருப்பை உண்டவனைப் போல மிக்க பெரும் துன்பம் கொண்டு எனது தீவினையின் கூறுபாடு இனியும் உண்டாக்கக் கூடிய தீமை உள்ளதா? நான் இன்னும் கேட்க வேண்டிய துயரச் செய்திகள் இன்னும் உள்ளனவோ? எனப் பரதன் அஞ்சுவதாகக் கம்பர் கூறுகிறார்.

இராமன் கானகம் செல்வதற்குக் காரணம் யாது? இராமன் காடு சென்றது தந்தை இறப்பதற்கு முன்னரா அல்லது இறந்த பின்னரா? என்று பரதன் கைகேயி;டம் வினவுகிறான். அதற்குக் கைகேயி விடையளிக்கிறாள்.

*வாக்கினால் வரந்தரக் கொண்டு மைந்தனைப்*
*போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனக்கு*
*ஆக்கினேன் அவனது பொறுக்க லாமையால்*
*நீக்கினான் தன்னுயிர் நேமி வேந்தென்றாள்.*

*கம்ப. அயோத்தி. 871*

மன்னவனது வாயினால் இரண்டு வரங்களைப் பெற்றுக்கொண்டு அதன்மூலம் இராமனைக் காட்டுக்கு அனுப்பினேன். அவனை அனுப்பி விட்டு இந்த நாட்டை நீ அரசாள்வதற்காக உனக்காக வைத்துள்ளேன். தயரதன் மைந்தனைப் பிரிந்த துயரினைத் தாங்கமாட்டாமையால் தன்னுயிரைப் போக்கினான் என்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கைகேயி தெரிவிக்கிறாள்.

தந்தையின் வாக்கை நிறைவேற்றுதலின் பொருட்டே இராமன் காடு சென்றான் என்பதையும், அவனைப் பிரிந்த சோகத்தால் தயரதன் உயிர் துறந்தான் என்பதையும் சொன்ன கைகேயி, மைந்தனே இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தை உனக்காகப் பெற்றுத்தந்துள்ளேன்| என்று கூறி இதனால் பரதன் மகிழ்ச்சியும், சமாதானம் அடைவான் என அவள் எண்ணினாள் என்பதை இச்செய்யுளில் மறைபொருளாகக் கம்பர் காட்டுகிறார். அதுகேட்டுப் பரதன் என்ன மனநிலையைக் கொண்டான் என்பதையும், தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் அடுத்த இதழில் கம்பரின் கவிவண்ணத்துடன் கண்டு மகிழ்வோம்

வளரும்...



shanmugarajah@thaiveedu.com

# தமிழ்வலை - 108

'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-108 வினா

### இடமிருந்து வலம்

1 உயிர்வாழும் முன்னாள் அமெரிக்க அதிபர் (3-3)
5 காடு
6 ஒரு வாசனை மரம்
7 திமுக நிறுவனரின் செல்லப்பெயர்
8 போர்க்குலத்தவர்
10 குறிஞ்சிமலர் நாவலாசிரியரின் முதல் எழுத்துகள்
11 அடிபிடி
12 ஓர் இலக்கணச் சொல்
13 தாயின் தங்கை
16 ஜெயகாந்தனின் முதல் நாவல் (5-4)

### மேலிருந்து கீழ்

1 புகழ்பெற்ற பண்டை இலங்கை மன்னன்
2 மன்னாரில் பாடல்பெற்ற ஆறு
3 சைமன் காசி செட்டி எழுதிய பேர்போன நூல் (3-5)
4 ஒருவகைப் புல்
7 வழிபடு
9 ஒருவகைப் பறவை
10 ஒருவகை மான்
11 வேகம்
14 இறவா
15 தாய்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 107-க்கான விடைகள்




## தமிழ்வலை-107 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

சின்னத்தம்பி பார்வதி, வவுனியா
ஏ.எஸ். மகாலிங்கம், ரொறன்ரோ
தவமணி கனகசிங்கம், பாரிஸ்.
கிருபா சண், ரொறன்ரோ.
பாண்டியன் வீராசாமி, திருச்சி,
ஜெயரட்ணம் ஜோண், ரொறன்ரோ
த.செ. நடராசா, ரொறன்ரோ.
தேவாம்பிகை அரவிந்தன், இங்கிலாந்து

### பரிசுபெறும் போட்டியாளர்

**உமா கதிர்,**

**ஏஜக்ஸ், கனடா.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



# வாழ்வுரிமை

## மா. சித்திவினாயகம்

14



விலங்குப் பண்ணைக்கு நேர் எதிரே இருந்த கிளிநொச்சியின் மதுக்கடைக்கு முன்னதாக மது ஒழிப்பு மாநாடு நடந்து கொண்டிருந்தது. விலங்குப் பண்ணை விலங்குகளுக்கோ பெரு வியப்பு. மதுக்கடையில் நின்றவர்கள்தான் மது ஒழிப்பென்றும் அங்கே குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். எது உண்மை முகம், எது பொய் முகம் என்று எவருக்கும் விளங்கவில்லை. சாதியம், பெண்ணடிமை, மது, புகைபிடித்தல், மதவாதம், இனவாதம் என்று பிரிந்தழிகிற இந்தச் சனிப்பிடித்த மனிதஜாதி மொழிகளுக்கென அடிபட்டு முழுவதுமாய் தோற்றுப் போய் நிற்கிறது. வாழ்வென்றால் என்ன? அந்த வாழ்விற்காக எதைச் செய்ய வேண்டும்? எதற்காகப் போராட வேண்டும் என்பதை சாதாரண மனிதர்களுக்குப் புரியும்படி சொல்வதற்கு முதலாளித்துவம் என்றும் விடுவதில்லை. ஒளிவட்டம் பொருந்திய பணக்காரத் தலைவர்கள் இந்த எளிய மனிதரை என்றும் ஏய்த்து விடுகின்றார்கள். அவர்கள் சொல்வதைக் கேட்டபடி அவர்கள் பின் ஓடுவதையே தங்களின் தலையாய கடன் என்று நினைக்கின்றார்கள் இந்த அப்பாவிகள்.

விலங்குப்பண்ணையின் அரசியல் ஞானியான பன்றி பெருமூச்செறிந்தது. உண்மையில் மாநாடு போட்டு மதுவை இவர்கள் ஒழித்து விடுவார்களா? என்றது அடங்காப்பிடாரியான கழுதை.

சங்கக்கடை இல்லாத கிராமங்களில் கூட அரசு மதுக்கடை அமைத்து, மலிவு விலையில் சாராய விநியோகம் செய்கிறது. அதே சமூகத்தின் அடியாட்களைத் தலைவர்களாக்கி அவர்களுக்கு சாராயக்கடை நடத்தும் அங்கீகாரம் வழங்கி, அந்த சாராய வியாபாரிகளையே காலப் போக்கில் இந்த முட்டாள் மக்கள் தம் அரசியல்வாதியாக்கி, நாடாளும் மந்திரியுமாக்குகின்றார்கள். இப்போ இவர்கள்தான் மது ஒழிப்பு மாநாடு நடத்துகின்றார்களாம், அத்தனையும் ஏமாற்று என்ற பன்றி, அந்தா பார் என்றது விறைப்போடு.

பன்றி காட்டிய திசையில் அனைவரும் திரும்பினார்கள்.

வயது வித்தியாசம் இல்லாமல் தவறணையில் அனைவரும் மது அருந்திக் கொண்டிருந்தார்கள். வரிசையில் நின்றவர்கள், நின்றபடியே இருந்தார்கள். மற்றவர்கள் மது குடித்த வாயைப் புறங்கையால் துடைத்தபடி, அவர்கள் மது ஒழிப்பு மாநாடு நடத்தும் இடத்திற்குப் போனார்கள். அங்கே தவறணை முதலாளி மது ஒழிப்பிற்கு ஆதரவாய் உரத்த குரலில் அடுக்குத் தமிழில் பேசிக் கொண்டிருந்தான். விலங்குகள் ஒன்றையொன்று பார்த்தன.

சாராயக்கடை முதலாளியின் பேச்சில் மயங்கி உட்கார்ந்திருந்த சனங்கள் கை தட்டின. இவர்களின் வாழ்வு இப்படித்தான். இவர்களுக்குக் கைதட்ட மட்டுமே கை. இவர்களின் தேர்தலும் இப்படித்தான், மகாநாடுகளும் இப்படித்தான், போராட்டங்களும் இப்படித்தான். எதற்கும் கைதட்டும் மிகப் பெரிய அடி முட்டாள்கள் இந்த மனிதர்கள் என்றது பன்றியாகிய தேவன்.

உனக்குத் தனிநாடு பெற்றுத் தருவேன் என்று ஒற்றையாட்சிப் பாராளுமன்றில் பேசிப்பேசியே உசுப்பேற்றி ஏமாற்றும் தலைவர்களையே இந்த மனிதர்கள் காலங்காலமாகத் தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்புகின்றார்கள். ஒற்றையாட்சிப் பாராளுமன்றில் எப்படித் தனிநாடு வரும் என்று எவரும் கேட்பதில்லை. பிறகு ஆளுக்காள் சண்டை பிடிப்பார்கள். அடுத்தொரு தேர்தல் வைப்பார்கள், அதில் மேலுமொரு திருடனை தனிநாடு பெற அதே மன்றத்திற்கு அனுப்புவார்கள். உண்மையில் இந்த மக்களுக்கு எல்லா நாட்களும் ‘ஏப்ரல் 1’ தான்.

அதென்ன ‘ஏப்ரல் 1’ என்றது வெள்ளாடு?

அது, அவர்கள் தங்களைத் தாங்களே முட்டாள்கள் என்று கொண்டாடுகிற தினம் என்றது பன்றி. ஆடு சிரித்தது. இத்தனை முட்டாள்களாக இருந்து கொண்டு அவனுகள் எங்களையெல்லோ விலங்குகள் என்று பரிகசிக்கின்றார்கள் என்றது வெள்ளாடு.

மது இந்தளவு இந்நிலத்தில் வேரூன்ற காரணமென்ன? மதுவை இந்த மண்ணில் இருந்து நிரந்தரமாக வெளியேற்ற முடியுமா? முடியாதா? அதை எப்படி வெளியேற்றலாம்? அதற்கான சாத்தியகூறுகள் என்னென்ன? மக்களின் ஜனநாயக அரசுகள் மக்களுக்குத் தீங்கான மதுவைத் தடுக்காமல், மதுக்கடைகளைப், புகைபிடித்தலை, தனியார் மருத்துவ மனைகளை, முதலாளித்துவக் கல்வி நிறுவகங்களைத், தனியார் போக்குவரத்துகளை நடத்துவதின் நோக்கம் என்ன? இந்த நாதாரிமனிதர்கள் போராடுவதுமில்லை. சிந்திப்பதுமில்லை கேள்வி கேட்பதுமில்லை. ஆனால் எல்லாப் பக்கத்திலும் நின்று எதற்காகப் போராடுகின்றோம் என்று அறியாமலேயே, காசு கொடுப்பவன் பின்னால் கைதட்டி அலைவதே



இந்த மனிதர்களின் வழமையாயிற்று. இத்தகு அறிவிலிக ளான இவர்களுக்கு தனியாட்சியும், மொழியும் ஒரு கேடோ? என்று கோபமாக கத்தியது காலத்தால் முந்திய செக்குக் கணபதியின் எருது.

குடிநீருக்காகப் பல மைல் தூரம் நடக்கவேண்டிய தொலை தூர கிராமங்களில் கூட மலிவான சாராயம் புத்தம்புதிய போத்தல்களில், பாக்கெட்டுகளில் மிகவும் சுலபமாகக் கிடைக்கிறது. ஆனால், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை. ஆண்கள் தாம் வேலை செய்து ஈட்டிய நாட்கூலி அனைத்தை யும் மது அருந்துவதற்காகச் செலவுசெய்வதும், மது அருந்தி விட்டு தம் மனைவியரைப், பிள்ளைகளைக் கொடுமைப்படுத்

துவதும், அவர்களைச் சிறுமைப்படுத்துவதும் தினமும் இத்தெருவில் நடக்கிற கொடுமை. குடிப்பவர்களோடு மல்லுக் கட்டுகிற மனிதர்கள், மது தயாரிப்பவர்களையும், விற்பவர்களையும், அரசையும் ஏனென்றும் கேட்பதில்லை.

மகாசேனன் மின்னேரியா குளம் கட்டினான், பராக்கிரமபாகு பாராக்கிரமச் சமுத்திரத்தைக் கட்டினான். முகல மன்னன் பதவியாக் குளம் கட்டினான். தேவநம்பியதீசன் திசாவாவியைக் கட்டினான். அன்று ஒற்றுமையாக மகாவலி என்கின்ற 335 கிலோமீற்றருக்கும் அதிகமான மிக நீண்ட பேராற்றை தங்கள் ஆற்றலால் நாடெங்கும் ஓட வைத்தார்கள். ஆனால் இன்றைக்கு இவர்களோ சராயத் தண்ணீரை மட்டுமே நாடளாவி ஓட வைத்துத் தலைவர்களாகிக் கொண்டிருக்கின்றார்கள் என்றது கற்றிந்த அமாயா நாய். எங்கே கல்வி பெருக்கெடுக்கின்றதோ அங்கேதான் அறிவு தடங்கலின்றி ஓடும். பயமின்றி அங்கேதான் மக்கள் தலை நிமிர்ந்து வாழ்வார்கள். தளர்வில்லா முயற்சிகளில் ஈடுபடும் மக்களிற்கு தான் சுதந்திரம் தேவை. ஆனால் சாராயப் பேராறு பாயும் அடிமைகளின் பூமியில் என்றும் குறுகிய சிந்தையோடு மனிதர்கள் சோரம்போய் விடுகின்றார்கள். அவர்களிற்கு என்றும் சுதந்திர விடியலில்லை என்றான் பன்றித் தேவன்.

இதற்கு, நேற்றைய தினம் கட்டி வைத்த கொட்டகையில் பிடித்த தீயில் அகப்பட்டு இறந்த எம் யானை நல்ல உதாரணம் தோழர்களே என்றது தேவன். காட்டையே அழிக்கின்ற வல்லமை கொண்ட யானையை இந்தமனிதர்கள் வெறும் கயிற்றில் கட்டி வைத்து அது தன்னுயிரைக் காப்பாற்ற இந்த நல்ல மனிதர்கள் வருவார்கள் என்று இறுதிவரை நம்பி நெருப்பில் தீய்ந்து இறந்து போயிற்று. இப்படிப் போராடும் குணத்தை கைவிட்டு எம்மை அடிமைகளாக்குவதிலேயே இந்த மனிதர்கள் வெற்றி காண்கின்றார்கள். இந்தக் கேடு கெட்ட மனிதர் பற்றிய விடுப்புக் கதைகளை விட்டு விட்டு, எமது போராட்டம் பற்றி பேசத் தொடங்குவோம் என மிருகங்களைத் திசை திருப்பினான் விலங்குத் தலைவனான பன்றித் தேவன்.

விலங்குகள் இப்போது நன்றாக வாசிக்கக் கற்றுக் கொண்டிருந்தன.

அப்போது தான், அமாயாவின் அந்தக் கேள்வி அனைத்து விலங்கையும் சிந்திக்க வைத்தது. கிளிநொச்சி என்பது வன்னியா? ஆதியில், வன்னியரசோடு இந்தக் கிளிநொச்சி இருந்ததா? கனடாவிலிருந்து வந்த அமாயாவிற்கு வன்னி பற்றித் தெரிந்திருக்க வாய்ப்பில்லைத்தான். ஆனால், உள்ளூரவர்களும் அதனை அறியாதிருக்கின்றார்களே.

இது ஒரு வில்லங்கமான கேள்வி. உண்மையில் இன்று வன்னி நாட்டின் ஓர் அங்கமாக கிளிநொச்சியும் பேசப்பட்டாலும், அது உண்மையில் வன்னியா என்பதை எந்த ஆதாரத்தோடு எவர் பேசுவது? வன்னி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், தீவு, என்று நாட்டாரியல், பண்பாட்டியல் எழுதிய புத்தகத்தைக் கையில் வைத்திருந்தது அமாயா.

இப்பகுதிகளுக்கெல்லாம் சடங்குகள், சம்பிரதாயங்கள், வழிவழியான நம்பிக்கைகள், ஐதீகங்கள், நாட்டார் இலக்கிய மரபுகள், பூர்வீகக் குடிகள், பழமொழிகள், கலைகள், சமூக பண்பாட்டியல்புகள் என்பனவெல்லாம் ஒன்றே தானா? அல்லது வேறா? வேறென்றால் அவர்கள் பேசுகிற மொழி அவர்களை ஒன்றாக்கி விடுமா? இது பற்றிய ஆய்வுகள் ஏதாவது கிளிநொச்சி சார்ந்து இற்றைவரை இடம் பெற்றிருக்கின்றதா?

அமாயாவின் இந்தக் கேள்விக்கு விடையறியாது தவித்தான் தேவன்.

பல்கலைக்கழக ஆய்வில் பண்பாட்டியல், நாட்டாரியல் ஆய்வு செய்கின்றோமென்பவர்கள், விழுந்த பாட்டிற்கு குறிசுட்டு வைக்கின்றார்களே தவிர, தேடல் மிக்க ஆய்வுகளைத், தொன்மைகளைத் தேடி அவர்கள் செய்திருப்பதாக நானுணரவில்லை என்றது தேவன்.

அவையனைத்தும் ஒருவரை ஒருவர் பிரிக்கவே உதவுகின்றன. அதனால்தான் அனைத்து வரலாறும் குழம்பிக் கிடக்கிறது. இன்று இங்குள்ள உழைக்கும் சமூகம் போரில் தோற்று அனைத்தாலும் சிக்குண்டு சோர்ந்து கிடக்கிறது.. உழைக்கும் வர்க்கமாகத் திரள வேண்டிய மக்கள், இப்படித்தான் ஆயிரம் கூறுகளாகி எப்படி எப்படியோ பிரிந்து, தானே அழிந்து தலை சாய்கின்றார்கள்.

கனடாவிற்குள் இருக்கிற ஆதிப்பழங்குடிகளைத் தவிர கனடாவைச் சொந்தம் கொண்டாட எவருக்கும் அதிகாரபூர்வமான உரிமைகள் கிடையாது. தத்தம் தேசியம். நாட்டாரியல், பண்பாட்டியல் பேசுகிற எவருக்கும் அங்கு அரசியல் செய்ய உண்மையில் யோக்கியதை இல்லை. ஆனாலும், அங்கோ அப்பேற்பட்ட வந்தேறிகளே அதிகாரம் செய்கின்றார்கள். ஆட்சி நடத்துகின்றார்கள். ஒட்டுமொத்தக் கனடியப் பொருளாதாரத்திற்கு அதிபதியாக அவர்களே இருக்கின்றார்கள். கேட்டால் அதற்குப் பதில். உலக ஆரம்பத்திலிருந்த குரங்கிலிருந்து மாற்றம்கண்ட மனிதக் கூட்டத்திற்கு தொடக்கம் ஒன்றுதான். அவைக்கு ஏது நாட்டாரியல்? அவைக்கு ஏது பண்பாட்டுத் தொடர்ச்சி? அனைத்தும் உணவிற்காகப் போராடிய விலங்குகள் தான். வேட்டைதான் எம் நாகரிகம், வேட்டைதான் நம் நீட்சி, அதுதான் நம் கலை. மற்றையவை எல்லாம் வெறும் நடிப்பு என்கின்றார்கள். ஆனால், சந்தர்ப்பம் பார்த்து தம் கலையும், மொழியுமே தங்களுடைய பெருந்தனம் என்கின்றார்கள் என்று பொருமியது அமாயா நாய்.

விலங்குகள் குழம்பி நின்றன.

மனிதர்கள் என்றும் இரட்டை வேடதாரிகள் தான் என்றது எருது. அமாயா எழுப்பிய இந்தக் கேள்விக்கான விடையை நாம் அறிய வேண்டுமெனில், இன்றைக்கு மானிட சமூகம் நம்பி வருகிற நம்பிக்கைகளைச், சடங்குகளை நாம் பூரணமாகக் கற்றுத் தெரிந்துணர்ந்தால்த்தான் அதனுடைய விவகாரம் பற்றி நம் எல்லோர்க்கும் புரியும் என்றது எருது. எருதைப் பார்த்து எம்முள் முதிர்ந்த அனுபவமிக்க நீயே அதைப்பற்றிப் பேசு என்றது பன்றித்தேவன். பேசத் தொடங்கிற்று எருது. மானிடக் குழந்தைகள் எம் குழந்தையைப் போல பிறந்தவுடன் எழுந்து நடமாடுகிற, நீர் குடிக்கிற, உணவுண்கின்ற குழந்தைகள் அல்ல. அவை நடமாடா ஜடங்கள். பேசா ஜந்துகள்.

தொடரும் ...



sithivinayagam@thaiveedu.com

# மாற்றம் ஒன்றே மாறாததது!

– உஷாதீபன்

அந்த மாதிரி ஒரு கேள்வியை எதிர்பார்த்துத்தான் இருந்தார் ஈஸ்வரன். அப்படியெல்லாம் கேள்வியும், பேச்சும் வரும் என்று தெரிந்துதானே அங்கே போனார். வேறு வழியும் இல்லை. அன்றாடம் ரயிலேறிப் போய்விட்டு இரவாவது வீடு திரும்ப முடிகிறதே என்கிற சமாதானம்தான். மனதை சமன் செய்து கொண்டு தயாராய்த்தான் இருந்தார்.

அந்த ரயிலின் எட்டுப் பெட்டிகளிலும் நிறைந்து வழிந்து ஊழியர்கள் பயணம் செய்கிறார்கள். அரசு அலுவலகங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் என்று பல்வேறு தரப்பினரும் அன்றாடம் போய் வந்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஆளோடு ஆளாகச் சேர்ந்து தானும் போய் வருவதில் என்ன சிரமம்? தனக்கு மட்டும் அப்படியென்ன கஷ்டம் வந்தது? அவர்களெல்லாம் மனிதர்களில்லையா? அறிந்தோ அறியாமலோ உள்ளூரே அவருக்கு வாய்த்து விட்டது. காலமும் ஓடி விட்டது. அவரென்ன செய்வார்? யாரையும் தொந்தரவு செய்துவிட்டு, தூக்கி விட்டு விட்டு வந்து குந்தவில்லையே? ஆனாலும் பழி அவருக்குத்தான்.

அவரு உள்ளூர விட்டு நகர மாட்டாருங்க... இந்தக் காம்பவுன்ட்லயே நாலு ஆபீஸ் இருக்கு... இதுக்குள்ளயேதான் சுத்துவாரு...இல்லன்னா டவுனுக்குள்ள... சிட்டி பஸ் ஏறி போய்த் திரும்புறாங்களே... அதுபோலக் கூடப் போக மாட்டாரு... பத்திருபது கி.மீ. கூடப் போய் வரமாட்டாரு அய்யா... இங்கயே குப்ப கொட்டணும் அவருக்கு... மத்தவுகதான் அலையணும்... அவரு டிபார்ட்மென்டுக்கு செல்லப் பிள்ளை... அப்டித்தான சில பேரை வச்சிருக்காங்க...? அவுருதான் திறமையான வேலைக்காரராம்... நாமெல்லாம் சொங்கியாம்...

எவ்வளவோ வார்த்தைகளைக் கேட்டாயிற்று. நேரடியாகவும், மறைமுகமாகவும்... அந்த எல்லோருக்கும் இப்போது நிச்சயம் சந்தோஷமாகத்தான் இருக்கும். மனம் ஆறுதல் கொள்ளும். யப்பாடீ... தொலைஞ்சான்யா...!! இனி எப்டி உள்ளூருக்குள்ள நுழையறான் பார்ப்போம்... எங்கடா இந்தப் ப்ரமோஷன்லயும் உள்ளூர்லயே வந்து உட்கார்ந்துடுவானோன்னு நினைச்சது...நல்லவேளை... சாமர்த்தியம் பலிக்கலை... எல்லாக் காலத்துலயும் எல்லாமும் பலிதமாகிடுமா? ஒருவாட்டிதான் வெளியூர் போய்ப் பார்க்கட்டுமே?

எல்லோருடைய ஆசீர்வாதத்தோடும் உள்ளூரை விட்டுக் கிளம்பியாயிற்று. சந்தோஷமாப் போயிட்டு வாங்க... நீங்களும் வெளியூர் பார்க்கணும்ல...!!

கவனமாப் போயிட்டு வாங்க சார்... ரயில் ஏறி... இறங்கி... உடம்பப் பார்த்துக்குங்க...முடிலன்னா அங்கயே ஒரு ரூம் போட்டுத் தங்கிடுங்க... வாரா வாரம் வெள்ளிக் கிழமை ராத்திரி வீடு வந்தாப் போதும்... எதுக்கு வெட்டிக்கு அலையுறீங்க...

ரொம்பவும் வருத்தமான பாவத்தோடுதான் சொன்னார்கள். உள்ளூர எத்தனை மகிழ்ச்சி என்பது இவருக்குத்தானே தெரியும்! அங்கயே ரூம் போட்டுத் தங்கணுமாம்... காசு எவன் கொடுப்பான்... இவங்கப்பனா...? ரூம் போடணும்... அப்புறம் ஓட்டல்ல சாப்பிடணும்... அது உடம்புக்கு ஒத்துக்கணும்...

அங்க உங்களுக்கு நல்லா பைசா பார்க்கலாம் சார்... செழிப்பா இருக்கும்.. நீங்க வேணாம்னாலும் வந்து திணிப்பாங்க... நீங்க வாங்க மாட்டீங்க... அது வேறே... ஆனாலும் விட மாட்டாங்க... தெம்பாத் திரியலாம்... அங்க ஆபீஸ் குப்பையாக் கிடக்குன்னுதானே உங்களைப் போட்டது... நீங்க போய்த்தான் சரி பண்ணனும்... சரியான ஆளாப் பார்த்துத்தான் தள்ளி விடுறாங்க... இனி உங்க ராஜ்யம்தான்... குப்பையைக் கூட்டலாம். அள்ளவும் செய்யலாம்...

இருவேறு அர்த்தங்களில் புகழ்ந்தார்கள். வஞ்சப் புகழ்ச்சி. அடேங்கப்பா... இவர்களின் சிலேடைகளுக்குத் தனிப் புத்தகமே போடலாம். என்னவோ சொல்லிவிட்டுப் போகட்டும். இந்த மட்டுக்கும் போய் வருவது போலான தூரத்தில் கிடைத்ததே என்று இவருக்கு சமாதானமாய் இருந்தது.

மனிதர்கள் என்றுமே சராசரியானவர்கள்தான். சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல்தான் பேசுவார்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்றுதான் பேசுவார்கள். எல்லோருக்கும் இரண்டு முகங்கள் உண்டுதான். அதில் ஒன்று வெளியில் சொல்ல முடியாதது. பழகும்போது நண்பர்கள்தான். ஆனால் பேசும் போது? அதாவது ஆளில்லாமல் பேசுகையில்!

என்னவோ இவர்களாய் முயற்சி செய்து அங்கே மாறுதல் வாங்கிக் கொடுத்ததுபோல் அளந்து கொள்கிறார்கள். இவரல்லவோ போய்ச் சொன்னார். கேட்டுக் கொண்டார். போயிட்டு வர்ற மாதிரியாவது போட்டுக் கொடுங்க... ரொம்ப தூரத்துக்குப் போட்டுடாதீங்க... ஒய்ஃப் தனியா இருக்காங்க... துணைக்கு யாருமில்லே...! இவ்வளவுதான் சொன்னார். அது

நாள் வரையிலான அவரது அடையாளம் அவரைக் காப்பாற்றியது என்று நினைத்துக் கொண்டார். மறுபேச்சிலாமல் ஆர்டர் கைக்குக் கிடைத்தது.

நேர்ல போயும் உள்ளூர் கிடைக்கலியா சார்...? யாரையாவது தூக்கி விட்டுட்டு வந்து உட்காருவீங்கன்னு எதிர்பார்த்தோம்...! அது வேணாம்னு நினைச்சிட்டீங்கபோல...! ரிடையர்ட்மென்ட் நெருங்கையில் எதுக்கு இந்தப் பாவத்தச் சுமந்திட்டுன்னு விட்டுட்டீங்களோ? - என்ன குரூரம்...?

முப்பது வருட சர்வீசில் முதல் ஏழு ஆண்டுகள் வெளியூரில் இருந்தாயிற்று. அது பேச்சலர் காலம். பிறகு உள்ளூர் வந்து மீதி இருபது ஆண்டுகள். இப்போது ஒரு பதவி உயர்வு இன்னும் ஆறரை ஆண்டுகள் மீதமுள்ளது. அதற்குள் இன்னும் ஒரு பதவி உயர்வு வராதா? வரலாம்...

வெளியூர் வந்தாலும் வந்தார். பிறகு உள்ளூர் ஆபீசை எட்டியே பார்க்கவில்லை. எதற்கு? என்கிற விலகல் வந்து விட்டது. இப்பத்தான போனாரு? அதுக்குள்ளயும் எதுக்கு வந்து நிக்கிறாரு? டிரான்ஸ்பர் வேணுமாமா? போகச் சொல்லுங்க அந்தாளை... குத்துக்கல் மாதிரி இத்தன வருஷம் கிடந்தது பத்தாதா? பழைய வாசனை இன்னும் விடலையோ?

அவர்கள் சொல்வதை இவரே நினைத்துக் கொண்டார். மலிவான சிந்தனைகளில்தான் மனிதர்கள் வலம் வருவார்கள். அதனால்தான் அரசியல்வாதிகளின் பொய்கள் இங்கே எடுபடுகின்றன. திரித்து மறைத்துச் சொல்வதெல்லாம் இங்கே நன்றாய் விலைபோகும். நல்லவைகள் காற்றோடு போய் விடும். அறிவுக்கு எட்டாது. நிலைக்காது.

எதிரே அமர்ந்திருந்த மயில்வாகனத்தை நிமிர்ந்து பார்ப்பதற்கு சங்கடப்பட்டு ஏதோ யோசனையில் தலை குனிந்திருந்தார் ஈஸ்வரன்.

என்னா சார்... உடம்பு சரியில்லையா?... ரொம்ப அமைதியாயிட்டீங்க...?

அதெல்லாம் ஒண்ணுமில்லே... ஏதோ யோசனை... என்றார் இவர்.

பொண்ணுக்குக் கல்யாணம் வச்சிருக்கேன் சார்... பத்திரிகை கொடுத்து உங்களை அழைச்சிட்டுப் போகலாம்னு வந்தேன்... -சொல்லியவாறே அழைப்பிதழை நீட்டினார் மயில்வாகனம். தேடி வந்து கொடுக்கும் விஸ்வாசம். வேலை கற்றுக் கொடுத்ததே அவர்தானே... அந்த நன்றி...!

கட்டாயம் வந்திருங்க சார்... ஞாயிற்றுக்கிழமை பார்த்துத்தான் வச்சிருக்கேன்... அன்னைக்கு ரிசப்ஷன்... மறுநாள் முகூர்த்தம்... ரெண்டு நாளுக்கும் நீங்க வரணும்... வந்து பொண்ணை ஆசீர்வாதம் பண்ணனும்...

அவசியம் வர்றேன்... ஆனா திங்கட்கிழமை வர முடியாது. ரிசப்ஷனுக்குக் கண்டிப்பா வந்திடுறேன்... திங்கள் லீவு போட முடியாது. ஆபீசே நான்தான் அங்கே. இல்லன்னா நாறிப் போகும்... அதனால...

தெரியும் சார்...கேள்விப்பட்டேன் எல்லாமும்... நீங்க ஆளே ரொம்ப மாறிட்டீங்களாமே...! அவரா இப்படிங்கிறாங்க... இங்க? நான்லாம் நம்பல சார்... நீங்களாவது மாறுவதாவது? ஆனா பாருங்க உங்களப்பத்திதான் ஒரே பேச்சு... நானே ஆடிப் போனேன்... விடாமச் சொல்லச் சொல்ல நம்பும்படியா ஆயிடிச்சு... நீங்களா சார் இப்டி...? - கையை ஆதுரமாய்ப் பிடித்துக் கொண்டார்.

சட்டென்று விடுவித்துக் கொண்ட இவர்... கேட்டார்.

என்ன சொல்றீங்க...? அப்டீன்னா...? - சற்றுக் கோபமாகவே குரல். எதுவோ சொல்ல எதையோ இழுக்கிறாரே இவர்? பத்திரிகை வச்சமா போனமான்னு இல்லாம...?

காசுப் பொழக்கம் ரொம்ப அதிகம்னு சொன்னாங்க... நீங்கள்லாம் இப்டி ஆவீங்கன்னு நாங்கள்லாம் நினைச்சுக் கூடப் பார்க்கல சார்... குட்டைல விழுந்த மட்டை நாறித்தான் போகும்ங்கிற மாதிரி உங்களக் கொண்டு அங்க போட... போகைலயே நானெல்லாம் நினைச்சேன்... சாரு அங்க போறாரே... என்ன கதியாகப் போறாரோன்னு...! அது சரியாத்தான் போச்சு...!

என்ன தைரியம்? வீடு தேடி வந்து தன் கண் முன்னே...! இதைக் கேட்டு விடுவதில் அப்படியொரு குரூர ஆறுதல்... அதுதானே?
நீங்க என்ன சொல்றீங்க மயில்வாகனம்...? வெளிப்படையாச் சொல்லுங்க... இப்டி மழுப்பிப் பேசாதீங்க... கல்யாணப் பத்திரிகை கொடுக்க வந்த இடத்துல... எதுக்கு இதெல்லாம்...?

கரெக்ட் சார்... நீங்க சொல்றது சரிதான். அழைச்சமா... கிளம்பினமான்னு இல்லாம... ஸாரி சார்... எப்டியோ பேச்சு வந்திடுச்சி... மன்னிச்சிடுங்க...எல்லாரும் பேசிக்கிறாங்களேன்னு வயித்தெறிச்சல்ல சொல்லிப்புட்டேன்... நம்ப சாரா இப்டின்னு நினைச்சு அந்த வருத்தம்தான்... நான் வர்றேன் சார்...

கேள்விப்படுறதெல்லாம் உண்மையாயிடாது... புரியுதா? கண்ணால் பார்ப்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்யுன்னு உங்களுக்குத் தெரியாது? தெரியாதவங்களுக்கு நீங்கதான் சொல்லணும்... சாரு இப்படிச் சொன்னாருன்னு... புரியுதா? போய்ட்டு வாங்க...

நா வர்றன் சார்... விசேடத்துக்குக் கட்டாயம் வந்திடுங்க... எதுவும் மனசுல வச்சுக்க வாணாம்... மாமியையும் கூட்டிட்டு வந்திருங்க...

மயில்வாகனம் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தார் ஈஸ்வரன். தெருத் திரும்புகையில் திரும்பிப் பார்த்துக் கையசைத்தார் அவர். பதிலுக்கு அசைக்க இவருக்குக் கையெழவில்லை. இவன்லாம் ஒரு ஆளு?

ரயிலிலிருந்து இறங்கி ஆபீஸ் வந்தடைந்தபோது இவருக்கு வியர்த்திருந்தது. காற்றாடியைச் சுற்றவிட்டு கண்ணை மூடி அமர்ந்திருந்தார். முதல் நாள் மயில்வாகனத்தோடு நடந்த பேச்சு இன்னும் அவர் மனதில் ஓடிக்கொண்டிருந்தது. அதற்குள் மாவட்டம் பூராவுமா பரவி விட்டது? வதந்தி... தந்தியை விட வேகம்தான்... மக்களுக்கு அதில் ஒரு கொண்டாட்டம்...

ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தார்கள். மணியைப்

பார்த்தார். வெளியூரான இவர் சரியான நேரத்துக்கு வந்து விடுகிறார். உள்ளூர்காரர்களான பணியாளர்கள் தாமதமாக வருகிறார்கள். ஆடி அசைந்து பத்தரை மணியைப் போலத் தான் ஆபீஸ் நிறைகிறது. தான் வந்து அமர்ந்திருப்பதுபற்றி ஒரு பதட்டமேயில்லை. தனக்குப் பயப்பட வேண்டாம். நேரத் துக்கு பயம் வேண்டாமா ?

இவரும் எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டார். சத்தம் போட்டும், கோபப்பட்டுப் பேசியும், இணக்கமாய்ச் சொல்லி யும்... ஊ...கும்... யாரும் அசைவதாய் இல்லை. இங்கெல்லாம் அப்டித்தான் சார்... நீங்க பெரியாபீசையே மனசுல வச்சிட்டுப் பேசறீங்க...

பணியாளர்கள் நேரத்துக்கு வருவதையே தன்னால் சரி செய்ய முடியவில்லை. மற்றவற்றையெல்லாம் என்னென்பது ? எதையும் மாற்றுவது போலவா அங்கு நிலைமை இருக்கிறது ? எல்லாம் ஊறித் திளைத்த கடல் நண்டுகள்! குப்பையைக் கூட்டுவதா, குப்பையில் மூழ்குவதா ?

சார்... ஒரு வருஷத்துக்கு என்னை எதுவும் கேட்கக் கூடாது. பிறகு பாருங்க... மேலதிகாரியிடம் உரிமையோடு சவால் விட் டதுபோல்தான் சொல்லி வந்தார். ஆனால் இங்கு வந்து பார்த் தால் ? எந்த எம்டனும் ஜெயிக்க முடியாது போலிருக்கி றதே... ?

சார்... உங்ககிட்டே நாங்கள்லாம் ஒரு விஷயம் பேசணும்...

காலை ஆபீஸ் வந்ததும் வராததுமாக அத்தனை பேரும் தன் னைச் சுற்றி வந்து நிற்பதைப் பார்த்து என்னவோ ஏதோ என்று சற்றே கலவரமடைந்தார் ஈஸ்வரன்.

தான் கண்டிப்பாக இருப்பதை ஒன்றுகூடி எதிர்க்கிறார் களோ ? புதிதாக வந்திருப்பவரிடம் முதலிலேயே சொல்லி விடுவது நல்லது என்று முடிவு செய்து வந்து ஆஜராகியிருக் கிறார்களோ ?

கண்டிப்பான ஆள் என்பதுதான் அடையாளமாகியிருக்கிறதே யொழிய எதுவும் மாறவில்லையே ? மாற்றவும் இல்லையே ? கடலில் கரைந்த பெருங்காயமா நான் ? இங்கு வந்து ஜோதி யில் ஐக்கியமாகிவிட்டேனா ? தன்னால் எந்த மாற்றம்தான் நிகழ்ந்திருக்கிறது இங்கே ? இன்னும் முழு நடப்பியலையும் ஸ்டடி பண்ணவேயில்லையே ? பலதும் பூடகமாகவே இருக்கி றதே ? தப்பு நடக்கும் இடங்களெல்லாம் அப்படித்தான் ரகசிய மாகச் செயல்படுமோ ? எவனும் மனம்விட்டுப் பேசமாட்டே னென்கிறானே ?

பியூன் கூட நேரத்துக்கு வருவதில்லை. சாயங்காலம் ஸ்டாஃப் எல்லாரும் போன பிறகு வாட்ச்மேனுக்குக் காத்திருந்து அவன் வந்த பிறகல்லவா, தான் கிளம்பிப் போக வேண்டியி ருக்கிறது ? சொல்லிச் சொல்லி அலுத்ததுதான் மிச்சம். நாலு நாளைக்குப் புலம்புவாரு... பிறகு புரிஞ்சிக்கிடுவாரு...!

மார்ச் பொறந்திடுச்சு சார்... இந்த மாதம் பூராவும் டைட்டா இருக்கும் வேலை. ராத்திரி கூட உட்கார்ந்து செய்து முடிக்க வேண்டியிருக்கும்... அது எங்களுக்குப் பழகிப் போனதுதான். ஃபுல் நைட்டும் உட்கார்ந்திடுவோம். நீங்க சொன்னாலும் சொல்லாட்டாலும் செய்து அன்யூவல் டார்கெட்டை அச்சீவ் பண்ணிடுவோம். பாஸ்கிட்டே சொல்லிடுங்க... பில்லு போடு றது...டிரஷரிக்கு அனுப்புறது... பாஸ் பண்றது... செக் வாங்கு றது... எல்லாமும் எங்க பொறுப்பு... எதுவும் மிஸ் ஆகாது... டிலேயும் ஆகாது... ஆனா...

ஆனா... ? என்ன ஆனா... சொல்லுங்க... ஏன் நிறுத்திட்டீங்க... ? எதைச் சொல்ல வருகிறார்கள் ? மொத்தமாய் வந்து கெரோ பண்ணுகிறார்களோ ?

எங்களுக்கு வர்ற கமிஷன் பர்சன்டேஜ் கண்டிப்பா வந்திர ணும்... அதுக்கு நீங்கதான் பொறுப்பு...

அப்டீன்னா... ?

என்ன சார்... தெரியாதமாதிரிக் கேட்கறீங்க... ? வருஷம் பொறந்ததும் இங்க வந்து ஜாய்ன் பண்ணினீங்க... நீங்க வந்து ரெண்டு மாசத்துல மார்ச் வந்திடுச்சு... இயர் என்டிங் திருவிழாதான் உங்களுக்குத் தெரியுமில்ல சார்... சொல்லி அனுப்பியிருப்பாங்களே... சப்-டிவிஷன் பூராவும் வழக்கமா உள்ள கத தானசார்... புதுசா என்ன ?

அதுதான் தானா உங்களுக்கு வந்து சேர்ந்திடும்ல... ? நானென்ன அதுக்கு ஜவாப்தாரி... ? புரியல... ? நீங்க வேலை செய்றீங்க... வாங்கிக்கிறீங்க... அதானே ?

சார் இப்பத்தான் முதல் முறையா சப் டிவிஷன் வர்றீங்க போல... இத்தன வருஷமா பெரிய ஆபீஸ்லயே இருந்து பழ கிட்டீங்க... அங்க இதெல்லம் பார்த்திருக்க மாட்டீங்க... நீங்க உண்டு உங்க வேலை உண்டுன்னு... இருந்திருப்பீங்க...

சரி... அதுக்கென்ன இப்ப... ? அதுக்கும் நீங்க கேட்குறதுக் கும் என்ன சம்பந்தம் ? நான் எதுக்கு நீங்க சொல்ற வட்டத்துக் குள்ள வரணும்னு யோசிக்கிறேன்... ?

என்ன சார்... இந்த ஆபீஸ் சூப்பிரன்ட் நீங்க... உங்ககிட்ட தான் ஒவ்வொரு ஸ்கீமுக்குமான பாஸ் பண்ணின பில்களோட செக் வந்து சேரும். அந்தந்தக் கான்ட்ராக்டர்களுக்கு நீங்க தான் டிஸ்டிரிபியூட் பண்ணப் போறீங்க... அவ்வளவு பெரிய பொறுப்புல இருக்கிற நீங்க... எங்க சம்பந்தப்பட்ட சின்ன விஷயத்தை தெரியாத மாதிரிக் கேட்டா என்ன சார் அர்த் தம் ? உண்மைலயே உங்களுக்குத் தெரியாதா ? இல்ல நமக் கெதுக்கடா வம்புன்னு ஒதுங்கப் பார்க்கிறீங்களா ? - அவர்க ளுக்குத் தலைமை போல் அறியப்பட்ட துரைராசன் இப்படிக் கேட்டதும்... துணுக்குற்றார் ஈஸ்வரன்.

சீனியர் மோஸ்ட் அசிஸ்டன்ட்... தைரியமாய்க் கேட்கிறார்... நாளைக்கே நான் உங்க சீட்டுக்கு வந்தாலும் ஆச்சரியப்படுற துக்கில்ல சார்...! சொல்லாமல் சொல்கிறாரோ ? யார் கண் டது ? வந்தாலும் வரலாம். காலியிடத்தைப் பிடிப்பதை விட இருக்கும் ஒருவனைத் தூக்கி எறிவதுதான் இங்கே கைவந்த கலை. அதில் பெருமையும் கூட. அப்பத்தானே அடுத்தவன் தன்னைத் தொடமாட்டான் என்கிற திண்ணக்கம். தான் வந்தது காலியிடம் என்று சொல்லாமல் சொல்லி உணர்த்துகிறாரோ ?

சர்க்கிள் ஆபீஸ்ல இருந்திருக்கீங்க... சப்டிவிஷன் நடைமு றையெல்லாம் தெரியாதுன்னா எப்டி சார்... ? அங்கேயிருந்து நீங்க வர்றதை சந்தோஷமா நாங்க எதிர்நோக்கினோம்...



நீங்க நழுவப் பார்க்கறீங்க...! நீங்கதான் எங்களுக்குப் பாது காப்பு...! உங்கள வச்சுத்தான் நாங்க...

அடேயப்பா... கொக்கியைப் பலமாய்த்தான் போடுகிறார்கள். நாளைக்கு ஏதேனும் வில்லங்கம் என்றால் எல்லாம் உங்கள் தலையில்தான் என்று மறைபொருளாய் உணர்த்துகிறார்கள். மீதிக் காலத்தைக் கழிப்பதுதான் இனி பிரம்மப் பிரயத்தனம் போலும்...!

வெறுமே அன்றாட வேலைகளைப் பார்ப்போம், கிளம்பு வோம்... எதிலும் தலையைக் கொடுத்துக் கொள்ள வேண் டாம் என்று பார்த்தால் விட மாட்டார்கள் போலிருக்கிறதே...? எங்களுக்கு நீங்கள்தான் பொறுப்பு என்றல்லவா வந்து நிற்கி றார்கள்? தரகு வேலை பார்க்கச் சொல்கிறார்களோ? மாமா?

இதுநாள் வரை வண்டியை ஓட்டியது பெரிதில்லை. இனி மீதிக் காலத்தைக் கவனமாகக் கழிப்பதுதான் துர்லபம்...! உஷாரா னார் ஈஸ்வரன்.

இங்க என்ன வழக்கமோ அது, தானா நடக்குமுல்லங்க... அதுக்கு நான் என்ன பொறுப்பு? அதெல்லாம் கூடாதுன்னு நான் நிறுத்தக் கிளம்பினேன்னா நீங்க என்கிட்டே வந்து நிற்க ணும்... உங்களுக்கு வழக்கமா உள்ளது வரத்தான போகுது... என்னை விட்ருங்க... அவ்வளவுதானே?

கொஞ்ச நேரம் எந்த சலசலப்பும் இல்லாமல் அமைதி தவழு வதைக் கண்ணுற்றார் ஈஸ்வரன். அவருக்கு அந்த நடைமுறை களே பிடிக்காமலிருந்தது. சரியாக வந்து சிக்கிக் கொண் டோம் என்று நினைக்க ஆரம்பித்திருந்தார். வசமாக எதிலே னும் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பதிலேயே அவர் கவனம் பதிந்திருந்தது.

சார்... மன்னிக்கணும்... கொஞ்சம் உட்கார்ந்து பேசலாமா...?

என்ன துரைராசன்... இப்டியெல்லாம் கேட்கறீங்க...? உங்க யாரையும் என்னைக்கும் நான் நிற்க வச்சுப் பேசினதில் லையே? என் எதிரே வந்ததும் முதல்ல உட்காருங்கன்னு தானே சொல்லுவேன்...

துரைராசன் உட்கார்ந்தார். மற்றவர்கள் அவரைச் சுற்றி நெருங்கி வந்தார்கள். இது ஒரு தனிக் கும்பல். தொழில் நுட் பம் என்பது தனி. ஆபீஸர் குழு என்பது சிறப்புத் தனி. அது

மாவட்டம் வளைத்தது. பெரிய இடம்...

சார்... தப்பா நினைச்சிக்கிடாதீங்க... கொஞ்சம் இந்த லிஸ்டை நீங்க பார்க்கணும்... இதான் இங்க உள்ள நடைமுறை. இத நீங்க ஓகே பண்ணிட்டீங்கன்னா நாங்க பாட்டுக்கு வேலையைப் பார்க்கப் போயிடுவோம். நீங்க எதுவும் சொல்லணும்னோ, கேட்கணும்னோ வச்சிக்க மாட்டோம். எல்லாம் தானா, பம்பரமா நடக்கும். எங்கள நம்பி நீங்க தைரியமா வலம் வரலாம்... என்றவாறே ஒரு சின்னத் தாளை நீட்டினார் துரைராசன்.

அதைக் கையில் வாங்கிய ஈஸ்வரன் ஒன்றின் கீழ் ஒன்றாக வரிசையாக எழுதியிருந்ததைக் கண்ணுற்றார். நிரந்தர ஆவணக் குறிப்பு போல ஒவ்வொருவர் பையிலும் இருக்குமோ? என்று நினைத்துக் கொண்டார்.

அதில் அவர் பெயரும் இருந்தது அவரை ஆச்சரியப்படுத்தியது. அவரில் ஆரம்பித்து காவலர் வரை சென்று முடிந்திருந்தது. அந்த ஆண்டின் மொத்த ஒதுக்கீட்டுத் தொகை என்ன என்று குறிப்பிட்டு, ஒவ்வொரு தனித் தனிப் பணிக்குமான நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்பதையும் குறித்து, அந்தந்தப் பணிகள் முடிந்த பிறகு அப்பணிகளை வெற்றிகரமாக முடித்த நிலையில், அதில் பங்கு பெற்ற பணியாளர்களுக்குச் சேர வேண்டிய அவரவர் பணி அளவிலான சதவீதக் கமிஷன் தொகை கணக்கிடப்பட்டு மொத்தமிடப்பட்டிருந்தது.

கில்லாடிகள்தான். மாதா மாதம் ஆய்வுக் கூட்டத்திற்கு அட்டவணை போடும் இவர்களுக்கு இதுவா தெரியாது? வெறும் பிசாத்து...!

மொத்தம் இவ்வளவா? தருவாங்களா? தர மனசு வருமா? இதென்ன அநியாயமாயிருக்கு? இத எப்படிக் கேட்கறது? என்ன பேர் சொல்லி?

இதுதான் இங்க வழக்கமா? என்று அதிராததுபோல் கேட்டார் ஈஸ்வரன்.

இந்த சப்டிவிஷன் ஆரம்பிச்சதிலிருந்து இதான் சார் வழக்கம். ஆனா பதினஞ்சு இருபது வருஷத்துக்கு முன்னாடி திட்ட ஒதுக்கீடுத் தொகை எவ்வளவு இன்னைக்கு எவ்வளவுங்கிறதை நீங்க கொஞ்சம் நினைச்சுப் பார்க்கணும்... அதப்போல் பத்து மடங்கு இருபது மடங்கு இன்னைக்கு வரவு உயர்ந்திருக்கு. நிதி ஒதுக்கீடு அதிகமாயிருக்கு. ஆனா எங்க பாக்கெட் வரவு அதே இடத்துலதான் நிக்குது... இதுக்கெல்லாம் போராட முடியுமா சார்... மனமுவந்து செய்றது... பிரியப்பட்டுக் கொடுக்கிறது... அன்னைப்போல பல மடங்கு வேலை கூடியிருக்கு... ஆனா யாரும் கண்டுக்கிறதில்லை... இப்ப நீங்க வந்திருக்கீங்க... நீங்களாவது இந்த வேறுபாட்டை எடுத்துச் சொல்லி எங்களுக்கெல்லாம் கொஞ்சம் கூட வாங்கித் தரணும்... சர்க்கிளாபீஸ்லருந்து வந்திருக்கிறதால உங்க வார்த்தைதான் எடுபடும்... ராப்பகலா வேலை பார்த்து நாங்கள்லாம் ரொம்பக் கஷ்டப்படுறோம் சார்... அலுங்காமக் குலுங்காம பெரிசுக தட்டிட்டுப் போயிடுதுங்க... பிள்ளைங்களுக்கு ஒரு டேர்ம் ஃபீசுக்கு ஆகாது சார் இந்தத் துட்டு...!

இந்தப் பாவக் காசுலயா பையன்களைப் படிக்க வைக்கிறீங்க...? கேட்கத் தோன்றியது ஈஸ்வரனுக்கு. நாக்கை உள்ளே இழுத்துக் கொண்டார் வறுமையில் வாடுவதுபோல் பேசுகிறார்கள். ஊமை அழுகை அழுகிறார்கள்.

நானே ஏண்டா இங்க வந்தோம்னு நினைச்சு இடிஞ்சு போய் உட்கார்ந்திருக்கேன்... நீங்க என்னடான்னா? எதெதுலயோ கொண்டு என்னை மாட்டிவிடப் பார்க்கிறீங்க?

நீங்கதான சார் மானேஜர்... சூப்பிரண்ட்... எல்லாமும்... உங்க கிட்டதான நாங்க சொல்ல முடியும் சார் அப்டிச் சொல்லக் கூடாது... பல வருஷமா இருக்கிற வழக்கத்த மாத்தறதுக்கு நாம யாரு? ஊரோட ஒத்து வாழ்... அதான் நம்ம பாலிசி... எல்லாருக்கும் உள்ளது நமக்கும்... இந்த சர்க்கிள்ல மத்த சப்-டிவிஷன்லெல்லாம் என்னைக்கோ நிலமை மாறிடிச்சி... ஆனா இங்கதான் எதுவும் நடக்கலை... பழசுலயே இழுத்திட்டிருக்கு... எங்களுக்கு சப்போர்ட் பண்ண இப்ப நீங்க இல்லேன்னா, பின்ன எப்பவும் இல்ல சார்...

கிணறு தோண்ட பூதம் கிளம்பிய நிலையாய் உணர்ந்தார் ஈஸ்வரன். எதையும் தன்னால் நிச்சயம் மாற்ற முடியப் போவதில்லை. ஆபீஸ் நிர்வாகத்தைச் சீரமைக்கலாம் என்று வந்தால் இங்கே கதை கந்தலாய்க் கிடக்கிறதே! ஒரே வழி... வேண்டுமானால் இந்த இடத்தை விட்டு அகலலாம். அதுவும் இப்போதைக்கு முடியாது. குறைந்தது ஒரு வருஷமாவது ஆக வேண்டும். மெடிக்கல் லீவு போடலாமென்றால் அடுத்து ப்ரமோஷன் எதிர்நோக்கும் நிலையில் வீட்டில் உட்கார்ந்திருந்தால் துறை நடப்பியல் எதுவும் தெரியாது போய்விடும் அபாயம் உண்டு. என்ன செய்யலாம்? ஈஸ்வரனின் மூளை வேகமாக வேலை செய்ய ஆரம்பித்த போது சட்டென்று அவருக்கு யோசனை தோன்றியது. சொன்னால் சந்தோஷப்படுவார்களா?

ஒண்ணு செய்யுங்களேன்... இந்த லிஸ்ட்ல எனக்குன்னு... அதாவது மானேஜருக்குன்னு ஒரு பங்குத் தொகை வருதுல்ல...அதை நீங்க எல்லாரும் பிரிச்சு எடுத்துக்கங்களேன். என்னை ஆள விட்ருங்க... எப்டி யோசனை...? - உற்சாகமாய்த்தான் கூறினார் ஈஸ்வரன். அந்தப் பாபக் காசு தனக்கு வேண்டாம்... என்பதே அவர் எண்ணமாயிருந்தது. இந்தக் கடைசி மூணு வருஷத்தில் இந்தச் சாக்கடையில் வீழ வேண்டுமா என்பதே அவர் எண்ணமாயிருந்தது. இத்தனை ஆண்டுகள் கஜகர்ண வித்தை பயின்றாயிற்று. இனிமேலா தடம் புரள வேண்டும்?

சொன்ன மறு நிமிடம் ஒருசேரக் குரல் உயர்ந்தது.

ஐயையோ... அதெல்லாம் வேண்டாம் சார்... உங்க காசு எங்களுக்கு வேண்டாம்... இன்னும் அந்தப் பாவம் வேறே சேரணுமா? என்றனர் எல்லோரும். எப்படி எல்லோரும் ஒரே மாதிரியான வார்த்தைகளில் கோரஸாய் மறுப்பைத் தெரிவிக்கிறார்கள் என்று ஆச்சரியமாய் இருந்தது ஈஸ்வரனுக்கு.

அப்போதைக்கு என்ன தீர்வு என்கிற ரீதியில் யோசிக்க ஆரம்பித்திருந்தார். அப்போ பாவக் காசு என்று ஒப்புக் கொள்கிறார்கள்! அப்படித்தானே? ஆனால் விட முடியவில்லை. மனசில்லை. பழகிப் போச்சு... அதுதானே? கோபப்படுவதா? பரிதாபப்படுவதா? எங்கிருந்து மாற்றத்தை நிகழ்த்துவது? எவ்வழி அவ்வழி?

சரி... முயற்சி செய்றேன். நீங்க சொல்றதை பாஸ்கிட்டப் பேசிப் பார்க்கிறேன்.... சந்தோஷம்தானே? சீட்ல போய் அவுங்கவுங்க வேலையைப் பாருங்க... ஆபீஸ் வேலைல எந்தத் தாமதமும் கூடாது... அதுதான் எனக்கு வேணும்...

வாங்கிக் கொடுக்கிறேன்னு சொல்லுங்க சார்... நாங்க எல்லாரும் எப்பவும் உங்க பக்கம்தான் நிற்போம்... அதுல உங்களுக்குச் சந்தேகமே வேண்டாம்... கன் மாதிரி வச்சிருப்போம் அவுங்கவுங்க சீட் வேலையை... யாரும் எப்பவும் வந்து இன்ஸ்பெக்ட் பண்ணிக்கலாம்... எந்த நிமிஷமும் ஆடிட் வரலாம்... அரை நாள்ல தயாராயிடுவோம்... உங்க பேருக்கு எந்த பங்கமும் வராது... அதுக்கு நாங்க கியாரண்டி...

அப்படீன்னா நான் சொல்றதை நீங்களும் கேட்டுத்தான் ஆகணும்...! என் பங்குத் துட்டை நீங்க எல்லாரும் பிரிச்சு எடுத்துக்குங்க... எனக்கு வேண்டாம்... அதுக்கு சம்மதம்னாத்தான் என்னால நீங்க சொல்றதைச் செய்ய முடியும்... என்ன சொல்றீங்க...? என் பேரே இந்தப் பேச்சுல அடிபடக் கூடாது... ஓகேயா...?

பதில் சொல்லாமல் அகன்றனர் எல்லோரும். நகரும் அவர்களையே ஒவ்வொருவராய்ப் பார்த்துக் கொண்டிருந்தார் ஈஸ்வ-ரன்.

பாவம் இவர்கள்... பரிதாபத்துக்குரியவர்கள். அவர் மனதுக்கு என்னவோ இப்படித்தான் தோன்றியது.

நிதியாண்டு வெற்றிகரமாக முடிந்த முதல் வாரத்தின் கடைசி நாள்... வளாகத்தினுள்ளே உள்ள கோயிலில் எல்லோரும் குழுமியிருந்தார்கள். ஒரு வரிசையில் ஆண்களும்... எதிர் வரிசையில் பெண் பணியாளர்களுமாய்...

ஒலிபெருக்கி பக்திப் பாடல்களை அலற விட்டுக் கொண்டிருந்தது. வண்ணக் காகிதங்கள் தோரணங்களாய்க் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தன. சீரியல் பல்புகள் விதவிதமான வண்ணங்களை உமிழ்ந்து கொண்டிருந்தன. குப்பையும் கூளமுமாய் இருக்கும் அலுவலகத்திற்கு, அந்த வளாகத்திற்கு இப்படியொரு அழகு எங்கிருந்து வந்தது. கொண்டாட்ட மனநிலையில் அனைத்து ஊழியர்களும்...

அழைத்து வரப்பட்டிருந்த அர்ச்சகர் மந்திரங்களைப் பக்தி பூர்வமாய் உரக்கச் சொல்லி, ராகமாய் உச்சரித்து, கற்பூரம் காண்பித்துப் பூஜையை ஜோதி மயமாய் நிறைவேற்றிய அந்தத் தருணம்...

எல்லோரும் பார்க்க வரிசையிலிருந்து நிதானமாய் அகன்ற ஈஸ்வரன் இரு பக்கம் நின்றிருந்தவர்களையும் கைகளால் சைகை காண்பித்து நடுவே வழி உண்டாக்கி விலக்கிக் கொண்டு நடந்து, எல்லோரும் திடுக்கிட்டு நோக்க, தன் இடக் கையிலிருந்த அந்தக் காகித உறையிலிருந்து பணத்தை அப்படியே உருவி எடுத்து, எல்லோரும் ஆச்சர்யமாய்ப் பார்க்க சந்நிதி வாயிலுக்கு முன்பு தரையில் பதிக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய உண்டியலில் அதைச் சேர்ப்பித்தார். நன்றாய் உள்ளே போய் விட்டதா என்று அங்கு கிடந்த ஒரு சிறு குச்சியை எடுத்து உண்டியலின் குறுகிய நீண்ட வாய்ப் பகுதியைக் குத்தி விட்டார். பிறகு ஒரு திருப்தி வந்த நிறைவோடு... திரும்பி... வரிசையின் கடைசியில் வந்து அமைதியாய் நின்று கொண்ட போது, எதிர்கொண்ட கற்பூர ஆரத்தியை இருகரம் குவித்து அப்படியே அணைத்து வாங்கி முகத்தில் கண்மூடி ஒத்திக் கொண்டார். அந்தக் கணம் மனதில் ஏதோவொரு நிறைவு வந்திருப்பது போல் அவரால் உணர முடிந்தது.

பூஜை முடிந்த கையோடு எல்லோரும் அவரவர் இருப்பிடம் நோக்கி கலைந்து செல்ல... சார்... சார்... என்று பின்னால் எழுந்த குரல்களைப் பொருட்படுத்தாது வேகமாய் நடந்தார் ஈஸ்வரன்.

என்ன சார் இப்டிச் செய்திட்டீங்க...? எங்களுக்கு வேண்டாம்னு நாங்க சொன்னதுக்கா இந்த தண்டனை...! நீங்க இப்டிச் செய்யப் போறீங்கன்னு தெரிஞ்சிருந்தா சரின்னு வாங்கிட்டிருப்போமே சார்... உங்க மனசைப் புண்படுத்திட்டமா சார்? எங்களை மன்னிச்சிடுங்க...சார்... கொஞ்சம் முன்னாடியாவது நீங்க எங்ககிட்டே சொல்லியிருக்கலாமில்ல சார்...! உங்களை மாதிரி எங்களாலெல்லாம் இருக்க முடியாது சார்... நாங்க அப்பாவிங்க... சராசரிங்க... - புலம்பிக்கொண்டே நெருக்கமாய்ப் பின்னால் வந்து கொண்டிருந்தார்கள் அவர்கள்.

எதுவுமே பதில் பேசாமல் தன் இருக்கையை நோக்கி நடந்து கொண்டிருந்தார் ஈஸ்வரன். கோயிலிலிருந்து தன் அலுவலக இருக்கை கொஞ்சம் அதிக தூரம்போல் தோன்றியது அன்று..!

காசுப் பொழக்கம் ரொம்ப அதிகம்னு சொன்னாங்க... நீங்கள்லாம் இப்டி மாறுவீங்கன்னு நாங்கள்லாம் நினைச்சுக் கூடப் பார்க்கல சார்... எல்லாரும் உங்களப் பத்திதான் பேசிக்கிறாங்க... - அன்று மயில்வாகனம் சொன்ன வார்த்தைகள் ஈஸ்வரனின் காதுகளில் அறைந்து கொண்டிருந்தன.

வதந்தியான, வம்பு நிறைந்த மனிதாத்மாக்களின் தங்கு தடையற்ற விட்டேற்றியான எண்ணங்களை, பேச்சை எதைக் கொண்டுதான் தடை போடுவது? எதைச் சொல்லிப் புரிய வைப்பது? எப்படிச் சொல்லி விளங்க வைப்பது?

இப்டீன்னு தெரிஞ்சிருந்தா சரி கொடுங்கன்னு வாங்கிட்டிருப்பமே சார்... அவ்வளவு வேதனையிலும் அவர்களின் இந்த வார்த்தைகளை நினைத்து வேதனையோடு சிரித்துக் கொண்டார் ஈஸ்வரன். அவர்களைப் பொறுத்தவரை அந்த விஷயத்தில் திடமாய்த்தான் நிற்கிறார்கள். திண்டாட்டமும் தவிப்புமெல்லாம், சரியாயிருக்கணும் என்று உறுதியாய் நின்று செயல்படுபவனுக்குத்தான். உலகம் இன்றுவரை இந்த ரீதியில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. நினைத்துக் கொண்டார்.

மாற்றம் என்ற சொல் ஒன்றே மாறாதது. மற்ற அனைத்தும் மாறக்கூடியதுதான். ஏற்கனவே மாறி, ஊறித் திளைத்துக் கிடப்பவர்கள் மத்தியில் எந்தப் புதிய மாற்றத்தையும் கொண்டுவர வாய்ப்பேயில்லை என்பதுவே நிதர்சனம்.

ushadeepan@thaiveedu.com





# காதலோ காதல்

- அ. கந்தசாமி

அம்மா ஒரு விசித்திரமான பிறவி. அவளைப் புரிந்துகொள்ள முயற்சிப்பது கல்லிலே நார் திரிக்கும் வேலை. எங்கோ ஒரு பணக்காரக் குடும்பத்தில் பிறந்திருக்க வேண்டியவள். சுழி தப்பிப் போச்சுது.

அம்மா நல்ல நிறம். அதிலை அற்ப சொற்பத்தை எனக்கும் ஈந்திருந்தாள். எல்லா அம்மாமாருக்கும் இருக்கும் பிள்ளைப் பாசம் இவளிடம் கொஞ்சம் தூக்கலாகவே இருந்தது. அவளுக்கு எல்லாம் நான்... நான்... நான்தான்.

எனக்குப் பிடிச்ச எல்லாத்தையும் பார்த்துப் பார்த்துக் கரிசனையோடு செய் வாள். நான் செய்யிற ஒவ்வொண்டும் அவளுக்குத் தெரியவேணும் எண்டு எதிர்பார்ப்பாள். நானும் ஒண்டுக்கு, இரண்டுக்கு போறதெண்டாலும் அவவிட்டச் சொல்லிப் போட்டுத்தான் போவேன்.

மனிசி இதை ஊரெல்லாம் சொல்லித் திரியும். 'என்ரை பிள்ளை ஒண்டுக்கு போறதெண்டாலும் எனக்குச் சொல்லிப்போட்டுத் தான் போவான்'.

இப்படி சொல்லிக்கொள்ளுறதிலை அவவுக்கு கொடுப்பு நிறைந்த பெருமை. இதைக் கேக்கிறவை என்னை ஒரு மாதிரியாப் பாக்கிறது வழக்கமாய்ப் போச்சு.

அம்மா உணர்வோட்டமுள்ள மனிசி. ஆனால் எந்த உணர்வையும் வெளிகாட்ட மாட்டா. மூக்கு மின்னியும் காத்துத் தோடும் அவவின்ரை எடுப்பை எழுப்பிக் காட்டும். சும்மா சாதாரண வொயில் புடவையிலேயே அம்மாவின்ர அழகு சொட்டும். எனக்கு அம்மாவோடை சேர்ந்து வெளியிலை போகப் படுபுழுகம். ஒரு தேவதை என் கைப்பிடித்துக் கூட்டிச் செல்வதுபோல் இருக்கும்.

நான் வீட்டுக்கு ஒரே பிள்ளை. இடுப்பிலேயே காவித் திரிந்தவ. வளர்ந்து கொஞ்சம் எடை போட்ட பிறகு காவுறதை விட்டாலும்... காவத் துடிக்கிற ஏக்கத்தோட என்னைப் பார்ப்பா. களிசானைக் கடந்து சாரம் கட்டத் தொடங்கும் வரைக்கும் அம்மாவுக்கு அருகில்தான் படுப்பன்.

என் வளர்ச்சியைக் கண்ட பிறகு, 'நீ வளந்திட்டாயெல்லோ இனி தள்ளிப் படுக்கவேணும்' எண்டு தனிப்பாய் போட்டாள். நான் சிணுங்கியபோது, பெட்டைக்கோழி சின்னக் குஞ்சுகளைத் தன் இறக்கைக்குள் அணைத்துத் திரிவதையும் குஞ்சுகள் வளர்ந்தபின் அவற்றைக் கொத்திக் கலைப்பதையும் சொல்லிச் சிரித்துக்கொண்டு என் கன்னத்தை நிமிண்டுவாள்.

பழக்கப்படாத தனித்துப் படுக்கும் பழக்கம் எனக்கு இனிய தாய் இருக்கவில்லை. அரவணைப்புக்குள் இருந்த உடல், போர்வைக்குள் முடங்கத் தயங்கியது.

என் சுருண்ட முடியும் வாளிப்பும் அக்கம்பக்கத்து அக்காமாருக்கு சுண்டியிருக்கவேணும். அடிக்கடி என்னை வாரியணைச்சுக்கொள்ள ஆசைப்பட்டார்கள். அவர்களின் தாவணிச் சுகம் தனிமை உணர்வைப் போக்கடிச்சதென்னவோ உண்மைதான். அந்த அக்காக்களோடு கிடைத்த புதிய அனுபவம் உங்களுக்குச் சொல்லிப் புரியாது.

இதிலை சில அக்காமார் தாவணி அணியா பருவத்தில் என்னை இடுப்பில் கவித்திரிந்து அம்மா பினைஞ்சு தந்த சோத்தை எனக்குள் திணித்து விடுவார்களாம். எனக்கு ஒரு வாய் சோத்தைத் தீத்துவதற்குள் உன்னை பிடி என்னைப் பிடி என்றாகிப்போகுமாம். குழந்தைப் பருவத்திலை நான் நல்ல குண்டனாம். இதுவும் சறோஜா அக்கா சொல்லித்தான் எனக்குத்தெரியும். இந்தக் குண்டனைத் துக்கித்திரிந்து சோத்தை உண்ண வைப்பதில் அக்காக்களுக்குள் செமப் போட்டியாம்.

அக்காக்களின் பின்னல் முடிந்த தலைகள் சும்மா ஆடாது. எல்லாம் காரியத்தோடுதான்.

என்னுடைய சோத்துத் தட்டோடு, ஒரு கிண்ணியில் சக்கரையில் பிசைஞ்ச அவல், தேங்காய்ச் சொட்டுக்கள், பரவலாகக் கலந்து அவித்த கொண்டல் கடலை, எப்பவாவது மோதகம், கொழுக்கட்டை போன்ற சொட்டைத் தீனிகள் அவர்களுக்கு கையூட்டாக கிடைக்குமாம். அதுமட்டுமல்ல என்னுடைய தளதளத்த உடல் வாகில் அவர்களுக்கும்... இருந்திருக்கு.

'டேய் உன்னை தொட்டா பஞ்சு மாதிரி மெத்தெண்டு இருக்குமெடா'.

இது அவர்கள் தாவணிக்குள் முகம் புதைத்த அன்றைய காலங்களில் என் காதுக்குள் அவை கிசுகிசுத்தது.

இதுபோல கணக்க இருக்கு. சொன்னாத் திகட்டிப்போம். பிறகு இடைச்செருகலுக்கு தேவைப்படின் சொருகுவம். இந்தத் தருணத்திலை என்னைக் குறை மாதத்தில்லை உலகைக் காட்டிய அம்மா பற்றியும் கொஞ்சம் பறைய வேணும்.



அம்மாவின் விருந்தோம்பல் குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டியது. வீட்டுக்கு விருந்துக்கென்றில்லை சும்மா 'ஹாய்' சொல்லிப்போவோமே என்று எவர் வந்தாலும் 'சாப்பிட்டு விட்டுதான் போகவேணும். இந்தக் கோப்பியைக் குடிச்சுக்கொண்டிருங்கோ, ஐஞ்சு நிமிசத்திலை ஓடியந்திடுரன்' எண்டு அம்மா சேலைத்தலைப்பாலை தலையை மூடிக்கொண்டு வெளியே ஓடுவாள்.

வீட்டிலை சல்லிக்காசு இருக்காது. ஆனாலும், வந்தவருக்கு விருந்து போடவேணும் எண்ட எண்ணம் எண்டைக்கும் மாறினதில்லை. அண்டை அயலாருக்கு அம்மாவின் குணம் தெரியும். வாங்கும் கடன் தவணை தப்பினாலும் வந்து சேரும்.

சுடு தார். செருப்பில்லாக் கால்கள். அவள் மனசும் உடலும் கடைகளை நோக்கி விரையும். 'உதெல்லாம் ஒரு சூடே. பட்டுப் பட்டு சுணை கெட்டுப் போச்சுது. வந்தவையை வயிறார சாப்பிட வைச்சு அனுப்பவேணும்'. இந்த நினைப்பு மட்டுந்தான் அவவின்ர தலைக்குள்ள நிற்கும்.

அவ திரும்ப வரேக்கை பனைஓலைக் குடுவைக்குள்ளை பாரை அல்லது விளைமீன், பொரிப்பதற்கென்று நல்ல மீன்சினைகள், உள்ளங்கை கணியத்தில் இறால்கள் எல்லாமே இருக்கும். பார்த்தாலே எச்சில் ஊறும்.

இப்படி செலவழிச்சால் ஒரு சாதாரண தொழிலாளியால் என்ன செய்ய முடியும்? காசு என்ன மண்ணில் விளையுதா? மரத்தில் காய்க்குதா? அப்பா பாவம். அம்மாவே அடிக்கடி சொல்லுவா..., 'கொப்பர் சாப்பிடேக்கை தான்ரா வாயை திறப்பார்'.

அதாலதான் நான் தொடக்கத்திலை அப்பாவைப் பற்றி வாய் திறக்கேல்லை.

என்னோடு கூட பொறுக்கி எடுத்த சில சொற்கள்தான் பேசுவார். 'தம்பி சாப்பிட்டியாடா, கவனமாப் படி. இதைச் சொல்ல ஒரு அப்பா தேவையில்லைத்தான். ஆனால் அவர் அன்பானவர். அம்மாவின் எடுத்தெறிந்த செலவுகளைப் பார்த்து முகம் சுண்டாத மனிதர். மாதக் கடைசியில் பொத்தினாப்போல் சம்பளத்தை அம்மாவிடம் கொடுத்து விடுவார். அம்மா அலுமாரிக்குள் கூறைச்சீலை மடிப்பில் சொருகி வைப்பாள். பணத் தேவையின் போது சேலை மடிப்பு கலையும்.

அப்பாவுக்கென்று தனிச் செலவுகள் இல்லை. எப்பவாவது

ஒரு நெவிக்கட் சிகரட்டை வெளித்திண்ணையில் இருந்து கொண்டு புகைப்பார். அது ஒரு மோனநிலை. மாலை மங்கி இரவோடு கலக்கும் வேளையில் இது நிகழும். நுனியில் கனன்றிருக்கும் அக்கினிப் பூவிலிருந்து சாம்பலை சுண்டுவிரலால் சுண்டிவிடும் லாவகம் உண்மையில் ஒரு இலக்கியம். அம்மாவின் அசுமாத்தம் இல்லாத நேரங்களில் நான் அவர் அருகிருந்து ரசித்திருக்கிறேன்.

அம்மாவின் பார்வையில் பட்டுவிட்டால் மண்டபப் படிதான். அவ பக்கத்திலும் ஞாயம் நிரம்ப.

காசை ஏன் கரியாக்குவான்?

இவன் பொடியன் உதைப்பார்த்துக் கெட்டுப் போகமாட்டானா?

நான் கெட்டுப்போகவில்லை என்பதென்னவோ உண்மைதான். ஆனால், அதுக்கான காரணம் இதில்லை. அது நடந்தது பேராதனைப் பல்கலைக்கழகத்தில்.

அங்கை நடந்த ராக்கிங்கில் ஒரு ராட்ஷசன் 'வையன்னாச் சீனா' சுறுட்டு ஒன்றை என் வாய்க்குள் செருகிக் கொள்ளி வைத்து 'டேய் இதை முழுக்க குடிச்சுப்போட்டு தான் நீ லெக்சருக்கு போகவேணும்' என்று அடம்பிடித்தான்.

அன்றோடு பனிப்புகாரை பாத்தாலும் எனக்குப் பயம். இவளவுக்கும் அந்தச் சனியன் ஒரு தமிழ் பொடியன்.

உங்களை இப்படியே கொஞ்சநேரம் பல்கலைக்கழகத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்போறன்.

அம்மா என்ர அத்திவாரத்தைப் போட்டா எண்டால், கட்டடம் எழுப்பினது பல்கலைக்கழகம்தான்.

பல்கலைக்கழகத்திலை ராக்கிங் பொதுவான விசயம்தான். ஆனா, அதைப் பலவிதமாய்ச் செய்வாங்கள். சிங்களப் பொடியளின்ர ராக்கிங் கொஞ்சம் வித்தியாசம். லெக்சர் முடிந்து, நல்ல மத்தியான வெய்யிலிலை ஜேம்ஸ் பீரிஸ் விடுதிக்கு வந்து சேர, அண்டைக்குச் சரத் பண்டார பிடிச்சுக் கொண்டான். 'என்னுடைய அறைக்கு வா' என்றான். ஆங்கில உரையாடலில் ஒரு வசதி. டேய், டா, டீ எண்டெல்லாம் போட்டுப் பேச வசதி இல்லை.

'என்ரை அறையை ஒழுங்குபடுத்தித் தா' எண்டான். அவன் இரண்டாம் ஆண்டு மாணவன். அவன் பல்கலைக்கழகம் திறந்து இரண்டு, மூன்று கிழமைகள் தாமதமாக வந்திருக்கிறான்.

'மாட்டன்' என்று சொல்ல ஏலாது.

அதையிதை நகர்த்தி, தூசுதட்டி, வைக்கவேண்டிய இடங்களில என்ர அறிவுக்கெட்டினபடி வைச்சன்.

எல்லாம் முடிஞ்சபிறகு கதிரையை காட்டி 'இரு' என்று சைகையால் உணர்த்தினான்.

மேசை லாச்சிக்குள் இருந்த ரெமி மாட்டின் பிரண்டியை ஒரு குழந்தையை தூக்குவதுபோல் எடுத்து இரண்டு கிளாசிலை ரசித்தபடி அளவோடு நிரப்பினான். ஒரு கிளாசை என் பக்கம் நகர்த்தினான்.

'எடுத்துக்கொள். இதில் ஹங்கோவர் வராது'.

இல்லை... எனக்குப் பழக்கமில்லை.

ஷ்ஷ், என்னடா நீ.., பாட்டியிலை குடிக்க வைச்சிருப்பானுகளே.

அந்த அனுபவத்திலைதான் சொல்லுறன். அண்டைக்கு நான் தலை சுத்தி நல்லாக் கஷ்ரப் பட்டிட்டன்.

விளங்குது, அந்த நாயள் எல்லா பிராண்டையும் ஒண்டா ஊத்திக் கலக்கித்தான் தருவானுகள். அப்பத்தான் பயங்கரக் 'கிக்'-ஆ இருக்கும் எண்டுறது அவங்கட கணிப்பு. கித்துள்கள் குடிச்ச குரங்குகளின்ர கூத்தை மனிசரிட்டைப் பார்க்கிறதிலை அவங்களுக்குத் திறில். நீ பயப்பிடாத, இது சுப்பர் சமான், எடு.

'என்ர கை கிளாசை நோக்கி நீளுறதை ஆவலாய்ப் பார்த்தான் பண்டார'. அதிலை அப்ப வைச்ச கைய இண்டை வரைக்கும் எடுக்க முடியேல்லை எண்டுறது வேறை கதை.

திருப்பியும் அம்மாவிட்டை போவம்.

என்ர படிப்பிலை அம்மாவுக்கு பெரு நம்பிக்கை. எனக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைச்சது. அது பௌதீக விஞ்ஞானப் பிரிவுதான். பல்கலைக்கழகமெண்டா அது எஞ்சினியரிங், மெடிசன் எண்ட மிதப்பில திரியிற அம்மாக்களிலை என்ர அம்மாவும் ஒருத்தி.

'எஞ்சினியர், டாக்குத்தர் படிப்பு படிக்கேலாதோ, அதென்டா பிசிக்கல் சையன்ஸ், கேக்க, ஹோம் சயன்ஸ் மாதிரிக் கிடக்கு'.

அதாவது கிடைச்சுதே எண்டு வைரவருக்கு வடைமாலையைப் போட்டுப் பூசையை செய்யாமல் எஞ்சினிரியரிங், மெடிஸின் என்று வேறு வாயை சப்புறியே. உன்ரை வயித்துக்குள்ளை வச்சிருந்து குறை மாதத்திலை பிறந்த பொடிக்கு இந்தளவுக்குத்தான் மூளை. உங்கடை பரம்பரையிலை ஆராவது எஸ்.ஸ்.சி-க்கு மேலை எட்டிப் பார்த்தவை இருக்கினமே? வீட்டுக்கு வர்றவையளை, வாசலிலை நிண்டு எட்டிப் பார்த்தவையளை எல்லாம் அடுப்படிப் புட்டுவத்திலை இருத்தி அவிச்சவிச்சுப் போடுவியே? நானோ அப்பவோ ஏனெண்டு மூச்சு விட்டிருப்பமா? உன்ரை சந்தோசத்தை நாங்கள் குழப்பினதில்லை. நான் இப்ப தோளுக்கு மேலை வளர்ந்திட்டன். இண்டைக்கு ஒருத்தியை கட்டினாலும் பத்து மாதத்திலை உன்ரை கையிலை ஒரு பேரப்பொடி.

அடங்கிப் போனா அம்மா. நான் கடைசியாச் சொன்ன வசனத்திலை சிக்குப்பட்டு நிண்டா.

'தம்பி, தூரப் படிக்கப் போற நீ, அங்கை பெட்டையளோடை கதை வச்சுக்கொள்ளாதை, பத்திரம். உனக்கு நாங்கள் பாத்து நல்ல இடத்திலை பெரிய சீதனத்தோடை கட்டி வைப்பம். நீயா ஒருத்தியையும் கூட்டிக்கொண்டு வந்து நில்லாதை. கவனமப்பு'.

நல்லாப் படி எண்டு சொல்லுறதை விட, அம்மாவுக்கு இது தான் முக்கியமாய்ப்பட்டது.

'எதிலை போய் முட்ட?

லீவுகளுக்கு கூட வீட்டுப் பக்கம் தலை வைக்கப்படாது. எதாவது பகுதிநேர வேலையை தேடிக்கொண்டு தப்பிச்சிட வேணும்...

ஒருத்தருக்கு முன்னாலை தடைகளை அடுக்கிக்கொண்டே போனால் பாத்து முழுசிக்கொண்டு நிக்கேலாது. உடைத்து முன்னேறத்தான் மனசு முனையும்' என்டு செல்லித்திரியற மாணவர் கூட்டமே இருந்தது.

எனக்கு இப்பிடியெல்லாம் நடக்க விதிக்கப்படவில்லை.

பல்கலைக்கழகத்திலை தனிமனித சுதந்திரம் உச்சியிலை கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்தது விரிவுரைகளுக்கு போகலாம், விடலாம். கேட்க யாருமில்லை. முதல் வருடத்தை முட்டித்தள்ளி ஒப்பேற்றி விட்டால், இரண்டாம் ஆண்டு விசில் அடித்துக்கொண்டு இஸ்டத்துக்குத் திரியலாம். இது தேர்வுகள் இல்லா ஆண்டு.

இந்த ஆண்டில்தான் ஆண், பெண்கள் விரல் கோத்துத் திரிவர். காதலர் வளைவிலும் லைபிரரியிலும், அதற்கு வெளியே உள்ள நீண்ட விறாந்தையின் ஒவ்வொரு தூண்களோடும் தங்களை மறந்த மோனநிலையில் இருப்பர். காதல் தேவதை வளாகமெங்கும் சிறகடித்து திரிவாள்.

காதல் தேவதைக்கும் இனப்பாகுபாடு உண்டு என்பது அன்றொருநாள் காலையில் நீள்விறாந்தையில் சுத்தித்திரிந்த போதுதான் உறைத்தது.

காதல் தேவதைக்கு ஆர் கண்ணடக்கம் போட்டங்களோ சிங்களச் சோடிகளே எங்கும் நீக்கமற நிறைந்திருந்தனர்.

கூட்டாளி குணரெத்தினத்தையும் கூட்டிக்கொண்டு துருவித்துருவி பூதக்கண்ணடியாலை கூட தேடிப் பார்த்தேன். மருந்துக்குக் கூட ஒரு தமிழச் சோடி தட்டுப்படவில்லை. கன்டீனிலை கடும்பாலோடை சுடச்சுட ஒரு தேத்தண்ணியை குடித்தபடி இரண்டு சோடி களைத்த கண்கள் ஒன்றை ஒன்று வெறித்துக் கொண்டன.

பேராய்வுக்குரிய ஆய்வுப் பரப்பாக இந்தக் கேள்வி எங்களுக்குள் உறைந்தது.

குணரெத்தினம் மவுனத்தை உடைத்தான்.

மச்சான்... நீ என்னடா நினைக்கிறாய்?

நான் நீண்ட பெருமூச்சை விடையாக்கினேன்.

எப்பிடியடா? இத்தனை சிங்களச் சோடியளும் ஒருத்தரிலை மற்றவர் எதையெதையோ மாறி மாறி தேடிக்கொண்டிருக்கினமே, இதை எங்கடை பொடி பெட்டையள் பாக்கிறதே இல்லையாடா.

தமிழர் புலனடக்கம் கொண்டவர்கள் எண்டு பெருமை அடிச்சுக் கொள்ளுவம்.

புல்லுப் புடுங்கினவை... வீக்கென்டிலை இவங்கள் தங்கடை அறையளுக்கை இருக்கமாட்டாங்கள். எங்கை போறாங்கள் எண்டு நினைகிறாய்?

நான் என்னத்தையெடா கண்டன். இருக்கிற அறையை விட்டா விரிவுரை வகுப்புகள், இல்லையெண்டா லைபிறரி,

டேய்! கடுகஸ்தோட்டைக்கு போறாங்களெடா?

நான் மக்குப் பிளாஸ்திரி. அங்கையெண்னடா ரம்புட்டானும் மங்குஸ்தானும் கிடைக்குதோ?

பு... புடலங்காயும் பூசணிக்காயும் கிடைக்குது. நீ சன்னதியிலை போய் மணி ஆட்டத்தான் லாயக்கு.

முழுசினேன்.

டேய் கடுகஸ்தோட்டை விபச்சாரம் விளைச்சலாகும் பூமியடா.

நான் யோசிச்சன்.

சரிதானடா இப்பிடி ஆளுக்காள் நோண்டுறதை விட, அவங்கள் பாதுகாப்பா தங்களுக்குள்ளை ஒரு வடிகாலை தேடிக் கொள்ளுறாங்கள். அதிலை என்ன பிழை. என்னத்தை சொன்னாலும் பெண்களுக்கு கற்பு எண்டொண்டு இருகல்லோ

ஓ... அது எங்கடையளுக்கு கால் வழிய கை வழிய சொட்டிக் கொண்டுதானேயிருக்கு? எனக்கு வாயிலை நல்லா வருகுது. இங்கை பார். ஒருத்தியை கல்யாணம் செய்யிறதெண்டால் இவங்கள் என்னத்த கணக்கிலை எடுக்கிறனாங்கள் தெரியுமே?

அவளின்ரை வடிவையா..? அதையென்ன கழுவியா குடிக்கிறது?

'இது நியாயம்'

அவளின்ரை தொம்பை (பின்னணியை) ஆராய வேணும்,

இதிலை என்ன பிழை?

நல்லா தோண்டித் துருவவேணும். என்ன படிச்சிருக்கிறாள் என்றதையும் கேட்டுக் கொள்ளவேணும். கூடப் படிச்சிருந்தா பின்னடிக்கு இடஞ்சல்; இதெல்லாம் மூக்குப்பொடி விஷயங்கள்...

மிக மிக முக்கியமானது என்ன தெரியுமோ? அவள் என்ன சாதி எண்டு அறிய வேணும்? எங்கடை சமுகத்தின்ரை முகப்புவிளக்கே அதுதான் தானே.

எவள்... எப்பிடி எது, எண்டு ஒண்டும் தெரியாம, காதலிச்சு அதை இதைச் செருகிப்போட்டு, லோல் படுறத்துக்கு இவங்கள் ரெடியில்லை. படிச்ச பிறகு, குலங்கோத்திரம் விசாரிச்சு, கொழுத்த சீதனத்தோட கல்யாணம் செய்யேக்க, பழைய ரெக்கோட் எல்லாம் கீளீனா இருக்கவேணுமெல்லோ..'

எவடம் எவடம்... புங்கடி புளியடி...

பேப்... பூனாக்களே... உங்களுக்கு என்ன மயித்துக்கெடா கல்யாணம். பேசாமை... சறத்தாலை மூடிகொண்டு படுங்கோடா. பரதேசியளே!



kandasamy.a@thaiveedu.com



# காலை உணவு

– அம்பாறோ டிவிலா

தமிழில் : என்.கே. மகாலிங்கம்

காமென் குடும்பம் காலை உணவுக்கு வழக்கமான நேரமான ஏழரை மணிக்குக் கீழே வந்தபோது அவளும் கீழே வந்தாள். ஆனால் அவள் இன்னும் ஒழுங்காக உடை உடுத்திருக்கவில்லை. நேவி நீல வண்ண குளியல் உடையில் தன்னைச் சுற்றிக் கட்டியிருந்தாள். அவளுடைய தலைமுடி ஒழுங்கற்றிருந்தது. அவளுடைய பெற்றோரினதும் சகோதரனினதும் கவனத்தை ஈர்த்தது, அவை மட்டுமல்ல. அவளுடைய இளைத்துப்போய் சுருங்கிப் போன முகமும் கண்களைச் சுற்றிய குழிகளும் தான். முந்தைய நாள் இரவு அவளுக்கு மிக மோசமானதாக இருந்திருக்க வேண்டும். அல்லது அவள் மிகவும் நோயுற்றிருக்க வேண்டும் என்ற தோற்றத்தையும் அவை கொடுத்தன. காலை வணக்கம் என்று தன்னிச்சையாகவே கூறிவிட்டு மேசையில் தனக்கான கதிரையில் ஏறக்குறைய விழுந்தது போல இருந்து கொண்டாள்.

‘உனக்கென்ன நடந்தது ?’ என்று தந்தை கேட்டார். அவளைக் கவனமாக உற்றுப் பார்த்து அளந்து கொண்டிருந்தார்.

‘அன்பே, உனக்கு என்ன நடந்தது? உனக்குச் சுகமில்லையா ?’ என்று தாய் தன் பங்குக்குக் கேட்டாள். தன் கைகளால் அவள் தோள்களை அணைத்தும் கொண்டாள்.

‘அவள் நித்திரை கொள்ளவில்லை போலும்,’ என்றான் அவளுடைய சகோதரன்.

அவர்கள் எவருக்கும் பதிலளிக்காமல் அவள் சும்மா இருந்தாள். அவர்கள் சொன்ன எதுவும் காதில் விழாதது போல. காமனின் நடத்தையையும் தோற்றத்தையும் பார்த்து அவளுடைய பெற்றோர் மிகவும் குழம்பிப் போனார்கள். தங்கள் கடைக்கண்களால் தங்கள் செய்திகளைப் பகிர்ந்து கொண்டார்கள். மேலும் கேள்விகளைக் கேட்க துணிவில்லாமல் உணவை உண்ண ஆரம்பித்தார்கள். அவளே தன் இயல்பு நிலைக்கு வந்து விடுவாள் என்று நம்பினார்கள். ‘சிலவேளை நேற்றிரவு அவள் அதிகம் மது அருந்தியிருக்கலாம். அதனால் ஏற்பட்ட கடும் பாதிப்பாக இருக்கலாம்,’ என்று நினைத்தான் அவளுடைய சகோதரன். ‘அவள் மெலிவதற்காக உண்ணும் உணவு அவளைப் பாதித்திருக்கலாம்,’ என்று அவளுடைய தாய் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள், கோப்பியையும் வறுத்த முட்டையையும் எடுக்க சமையலறைக்குப் போய்க் கொண்டே இருக்கும்போது.

‘இன்று பகலுணவுக்கு முன் நான் நாவிதனிடம் முடிவெட்டப் போகிறேன்,’ என்றார் தந்தை.

‘நீங்கள் பல நாட்கள் இப்படித்தான் சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள்,’ என்றாள் தாய். ‘அப்படி அதைப்பற்றி நினைப்பதே ஒருவகைத் துன்பம் தான்.’

‘அதனால் தான் நான் அந்தப் பக்கம் போவதே இல்லை,’ என்று உறுதியாகச் சொன்னான் இளைஞன்.

‘இப்போது உன் முடி ஓர் இருத்தலியல்காரனுடைய அசத்தலான பிடரிமயிர் போல இருக்கிறது. இந்தத் தலைமுடியுடன் நான் என்றால் வீதியில் போகத் துணிய மாட்டேன்,’ என்றார் தந்தை.

‘உங்களுக்குத் தெரியாது, இது எத்தனை பேரைக் கவர்ந்திருக்கிறதென்று,’ என்றான் மகன்.

‘நீங்கள் இரண்டு பேரும் ஒன்றாக நாவிதனிடம் போய் வர வேண்டும்,’ என்று ஆலோசனை சொன்னாள் தாய், கோப்பியையும் முட்டையையும் பரிமாறிக் கொண்டே.

காமென் தன் முழங்கைகளை மேசைமேல் ஊன்றிக் கொண்டு கைகளில் தன் முகத்தை ஏந்திக் கொண்டிருந்தாள்.

‘நான் மிகவும் மோசமான கனவொன்று கண்டேன்,’ என்றாள் தன் மெல்லிய குரலில்.

‘ஒரு கனவா ?’ என்று கேட்டாள் தாய்.

‘ஒரு கனவுக்காக இப்படி நீ நடக்கத் தேவையில்லை,’ என்றார் தந்தை. ‘வா, வந்து காலையுணவைச் சாப்பிடு.’

ஆனால் அதைச் செய்யப் போவதில்லை என்பதுபோல அவள் தான் இருந்த இடத்திலிருந்து எழும்பாமல், வருத்தம் தோய்ந்த முகத்துடன் ஆழ்ந்த சிந்தனையில் அப்படியே இருந்து கொண்டிருந்தாள்.

‘அவள் எழும்பும்போதே சோகமான மனநிலையில் தான் எழும்பினாள். அதற்கு நாங்கள் என்ன செய்வது ?’ அவளுடைய சகோதரன் சிரித்துக் கொண்டே சொன்னான். ‘இன்னும் கண்டுபிடிக்கப்படாத நடிகைகள்! நீ கவலைப்படாதே, பாடசாலை நாடகத்தில் உனக்கு நடிக்க ஓரிடம் கிடைக்கும்.’

‘அவளைத் தொந்தரவு செய்யாமல் சும்மா இருக்க விடு,’ என்றாள் தாய், எரிச்சலுடன். ‘நீ அவள் நிலையை இன்னும் மோசமடையச் செய்கிறாய்.’

அவன் தன் பகடிகளை மேலும் அழுத்திச் சொல்லாமல்



முதல் நாள் இரவு மாணவர்களால் நடத்தபட்ட பேரணியைப் பற்றிச் சொல்லத் துவங்கினான். அப்பேரணியைக் கலகம் அடக்கும் பொலிஸார் கண்ணீர்ப் புகை அடித்து கலைத்தி ருந்தார்கள்.

'அதற்காகத் தான் உன்னைப் பற்றி மிகவும் கவலைப்பட் டேன்,' என்றாள் தாய். 'அப்படியான ஆபத்தான பேரணிக ளுக்கு நீ போவதைத் தடுப்பதற்கு நான் எந்த விலையையும் கொடுப்பேன். அப்பேரணிகள் எப்படி முடியும் என்றோ யார் அவற்றில் பாதிக்கப்படுவார்கள் என்றோ யார் சிறையில் தள் ளப்படுவார்கள் என்றோ எவருக்கும் தெரியாது.'

'அப்படி ஒருத்தனுக்கு நடந்தால் அதைப்பற்றி ஒன்றும் செய்ய முடியாது,' என்றான் அவன். ஆனால் பலரும் போராட் டத்தில் தங்களிடம் உள்ள அனைத்தையும் தியாகம் செய்யும் போது ஒருத்தன் வீட்டில் சும்மா அமைதியாகக் குந்தி இருக்க முடியாது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.'

'அரசு தன் தந்திரோபாயங்கள் அத்தனையையும் உபயோ கிப்பதை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்,' என்றார் தந்தை, வெண்ணெயை ஒரு துண்டு பாணில் பூசிக் கொண்டும் கோப் பியை ஒரு கோப்பையில் ஊற்றிக் கொண்டும் சொன்னார். 'இருந்தாலும், என்னால் மாணவர்களின் பேரணிகளுடன் அனு தாபம் கொள்ள முடியாது. ஏனென்றால், மாணவர்கள் தங்கள் படிப்பில் தான் முதலில் கவனம் செலுத்த வேண்டும்.'

'உங்களைப் போன்றதொரு ஒரு பழமைவாதியால் இப்படி யான இயக்கத்தைப் புரிந்து கொள்வது கடினம்,' என்றான் இளைஞன் முரண்நகையுடன்.

'நான் எக்காலத்திலும் சுதந்திரம் மற்றும் நீதியையே ஆத ரித்து வந்திருக்கிறேன். இன்றும் ஆதரிக்கிறேன். ஆனால் என் னால் இதை ஏற்றுக் கொள்ள முடியாது...' என்று பதிலளித் தார் தந்தை.

'லூசியானோவை அவர்கள் கொன்று போட்டார்கள் என்று நான் கனவு கண்டேன்,' என்றாள் காமென்.

'என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதது...' தந்தை திரும்பவும் சொன்னார். 'யாரைக் கொன்றார்கள் ?' என்றார் சடுதியாக.

'லூசியானோவை.'

'அன்பானவளே, பார், அப்படியான அபத்தமான ஒரு கன வைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பது, வங்கியில் நான் பணத்தைக் கையாடி விட்டேன் என்பது போலவும் அதனால் நான் நோயுற்றேன் என்பது போன்ற ஒரு கனவை நான் காண் பதை ஒத்தது,' என்றார் தந்தை, தன் கைத்துண்டால் மீசை

யைச் சுத்தம் செய்து கொண்டே. 'நான் லொட்டரியில் பரிசு வென்றதாகக் கனவு கண்டிருக்கிறேன், பார்...'

'சிலவேளைகளில் விரும்பத்தகாத விஷயங்களையும் சில வேளை அழகான விஷயங்களையும் நாங்கள் எல்லோரும் கனவில் கண்டிருக்கிறோம். ஆனால் அவை எதுவும் உண்மையில் நனவில் நடக்கவில்லை. கனவைப் பற்றி மக்கள் வியாக்கியானப்படுத்துவது போல நாங்களும் வியாக்கியானப்படுத்துவதென்றால் கனவில் சாவை அல்லது சவப்பெட்டியைக் கண்டால் நீண்ட ஆயுள் அல்லது திருமணம் நடைபெறப் போகிறதென்று சொல்லுவார்கள். இன்னும் இரண்டு மாதத்தில்...' என்றாள் தாய்.

'அப்படியென்றால் எந்த நேரத்தில்,' என்றான் காமெனின் சகோதரன் அவளைப் பார்த்துக் கொண்டே. 'நான் ஒருமுறை க்ளோடியா காடினலுடன் என் விடுமுறைக்கு மலைத்தங்குமிடத்திற்குச் சென்றேன். அங்கே நாங்கள் ஒரு சிற்றறையில் தங்கினோம். நாங்கள் இரண்டு பேரும் நல்லதொரு கட்டத்திற்குச் சென்று கொண்டிருக்கும்போது.. நீ என்னை எழுப்பினாய். உனக்குத் தெரியுமா? அப்போது நான் உன்னில் மிகவும் கோபம் கொண்டேன்.'

'அது எப்படித் துவங்கினது என்பதை நான் மறந்து விட்டேன்... ஆனால் நாங்கள் லூசியானோவில் அடுக்கத்தில் இருந்தோம். ஒரு பூச்சட்டியில் சிவப்பு கார்னேஷன் மலர்கள் இருந்தன. நான் அதில் ஒன்றை எடுத்தேன். அழகான ஒன்றை எடுத்துக் கொண்டு கண்ணாடி இருக்கும் இடத்திற்குச் சென்றேன்.' காமென் கதையைச் சொல்லத் துவங்கினாள். மெதுவாக, தட்டையான குரலில், ஏற்ற இறக்கம் இல்லாமல். 'நான் கார்னேஷன் மலருடன் விளையாடத் துவங்கினேன். அதன் வாசனை மிகவும் வலிமையாக இருந்தது. அதை நான் நுகர்ந்து கொண்டே இருந்தேன். அங்கே இசையும் இருந்தது. நான் நடனமாட விரும்பினேன். சிறுமியைப் போல, அப்பாவுடன் நடனமாடுவதைப் போல சடுதியாக உணர்ந்தேன். கையில் கார்னேஷன் மலருடன் நடனமாடினேன். கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த சீமாட்டிகள் போல நடனமாடினேன். நான் எதை உடுத்திருந்தேன் என்பது எனக்கு நினைவில்லை... இசையும் இன்பமாக இருந்தது. அதில் நான் என்னை இழந்தேன். இதற்கு முன்னர் நான் அப்படி நடனமாடியதில்லை. என்னுடைய பாதணிகளைக் கழற்றி யன்னலால் எறிந்தேன். இசை போய்க் கொண்டேயிருந்தது. நான் களைப்படையத் துவங்கினேன். நடனமாடுவதை நிறுத்தி இளைப்பாற விரும்பினேன். ஆனால் என்னால் அசையாமல் இருக்க முடியவில்லை. கார்னேஷன் மலர்கள் என்னை நடனமாடத் தூண்டிக் கொண்டேயிருந்தது...'

'அது விரும்பத்தகாத கனவாக எனக்குத் தோன்றவில்லை,' என்று தாய் தன் கருத்தைச் சொன்னாள்.

'உன் கனவை மறந்துவிட்டு இப்போ கொஞ்சம் உணவருந்து,' என்று தந்தை திரும்பவும் கெஞ்சினார்.

'நீ உடை உடுத்து அலுவலுகம் செல்ல உனக்கு நேரமில்லாமல் போகப் போகிறது,' என்று அவளைத் தாய் எச்சரித்தாள்.

காமன், அவர்கள் சொன்னதை எந்த விதத்திலும் கவனத்தில் எடுக்காமல் இருக்க, அவள் சொன்னதில் தன் ஊக்கமின்மையைக் காட்டிக் கொண்டார், தந்தை.



அம்பாரோ டிவிலா 1928-2020. மெச்சிக்கோ நாட்டு பெண் எழுத்தாளர். ஸ்பானிய மொழியில் சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள், கட்டுரைகள் எழுதியவர். முக்கியமாக சிறுகதைகள். முரண்புனைவும் விசித்திரமும் அவரின் கதைகளில் காணப்படுபவை. அவரின் கதைகளில் பைத்தியகாரத்தனம், அபாயம், மரணம் ஆகியவை தூக்கலாக இருக்கும். மனநலம் பாதிக்கப்பட்ட பெண்களையே பிரதான பாத்திரங்களாக்கியுள்ளார். அவர்கள் வன்முறை கொண்டவர்கள். அவர் தன் இளமைக் காலத்தில் தன் தந்தையின் நூலகத்திலேயே பல நூல்களை வாசித்துள்ளார். அவரின் இளமைக்காலம் முழுவதும் அவரைப் பயம் ஆட்கொண்டிருந்தது. அதை அவரின் படைப்புக்களில் அதிகம் காணலாம். அவர் 1950-இலிருந்து 1970-கள் வரை அருமையான பல கதைகள், கவிதைகள் எழுதிப் பிரசுரித்தவர். பின்னர் 1977 வரை எதையும் பிரசுரிக்காமல் மறைந்து விட்டார். பின்னர் மெச்சிக்கன் இலக்கியம் அவரை மீளவும் கண்டடைந்து கொண்டாடியது. மெச்சிக்கோ அரசும் அவரை முக்கிய எழுத்தாளராக அங்கீகரித்தது. பல விருதுகளும் அவருக்குக் கிடைத்தன. அவரின் இறப்பையும் அரசே அறிவித்தது. அவர் 92 வயதில் இறந்தார்.

'இறுதியில், சனிக்கிழமை வருகிறது டொன் யூலியனின் இரவுணவு விருந்து. என்னுடைய ஒக்ஸ்ஃபோட் ஆடைகளை உலர் சலவைக்கு அனுப்ப வேண்டும். ஆடைகளை நன்றாகத் தேய்த்து மடிக்க வேண்டும்,' என்றார் தந்தை தன் மனைவிக்கு.

'நான் அவற்றை இன்றே அனுப்புகிறேன், சனிக்கிழமைக்குத் தயாராக இருப்பதற்காக. சிலவேளை அவர்கள் நம்பத்தகுந்தவர்கள் அல்ல.'

'எங்கே அந்த இரவுணவு விருந்து நடக்கிறது?' என்று அவர்களின் மகன் கேட்டான்.

'நாங்கள் அதைப்பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை. ஆனால் அநேகமாக ஹோட்டல் அல்மேய்டாவின் மொட்டைமாடியில் தான் நடக்கும்.'

'எத்தனை நேர்த்தியான இடம்! அதை நீங்கள் விரும்புவீர்கள். அற்புதமான காட்சிகள் உள்ள இடம்,' என்றான் அந்த இளைஞன்.

'நான் எதை உடுக்கப் போகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை,' என்று மனைவி குறைப்பட்டாள்.

'உன்னுடைய கறுத்த உடை உனக்கு மிகவும் எடுப்பாக இருக்கும்,' என்றார் கணவன்.

'ஆனால் அதைத்தான் எல்லாவிடமும் உடுக்கிறேன். அது மட்டுந்தான் என்னிடம் இருக்கிறது என்று எல்லோரும் நினைக்கப் போகிறார்கள்.'

'நீ விரும்பினால் இன்னம் ஒன்றை உடு. ஆனால் அந்த உடை உனக்கு பகட்டாக இருக்கும்.'

‘லூசியானோ நான் நடனமாடுவதைப் பார்த்து மகிழ்ந்தான். அவன் தோல் பெட்டியிலிருந்து தந்தத்தினால் செய்த புகையிலை குழாயை ஒன்றை எடுத்தான். அப்போது சடுதியாக இசை நின்றது. ஆனால் என்னால் ஆடுவதை நிறுத்த முடியவில்லை. திரும்பத் திரும்ப நிறுத்த முயன்றேன். நான் வைத்திருந்த கார்ணேஷன் மலர்தான் என்னை நடனமாடச் செய்கிறது என்று எண்ணி அதை எறிந்து விடுவதற்குத் தீவிரமாக முயன்றேன். ஆனால் அதை எறிவதற்கு என்னால் என் கை விரல்களைத் திறக்க முடியவில்லை. திரும்பவும் இசை இசைத்துக் கொண்டே இருந்தது. சுவர்களிலிருந்து, கூரையிலிருந்து, தரையிலிருந்து புல்லாங்குழல்களிலிருந்து, ஊது கொம்புகளிலிருந்து, கிளாரினெற்றுக்களிலிருந்து, சக்சஃபோன்களிலிருந்து இசை எழுந்து கொண்டே இருந்தது. அது வொரு மயக்கம் தரும் தாளம். நீண்ட கரடுமுரடான சத்தம் அல்லது கலகலவென்ற சிரிப்பு. தாளத்தினால் நான் உடன் இழுக்கப்படுவதை உணர்ந்தேன். வேகமாகவும் வெறித்தனமாகவும். என்னால் நடனமாடுவதை நிறுத்த இயலவில்லை. கார்ணேஷன் என்னை வசப்படுத்தி விட்டது...’

காமென் தொடர்ந்து தன் கதையைச் சொல்வதற்காக மற்றவர்கள் சில கணங்கள் காத்திருந்தார்கள். பின் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். தங்கள் குழப்பத்தை அப்படிக் காட்டினார்கள். தங்கள் காலையுணவையும் உண்டு கொண்டே அப்படிச் செய்தார்கள்.

‘முட்டைகளை எனக்கும் தாருங்கள்,’ என்று மகன் தாயிடம் கேட்டாள். காமனை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டான். காமன் தன் எண்ணங்களில் ஆழ்ந்து போய், ‘போதை மருந்து எடுத்திருக்கிறாள் என்று என்னை எவரும் நினைக்கலாம்,’ என்று நினைத்தாள்.

தாய் தன் மகனுக்கு முட்டையைப் பரிமாறி விட்டு காமனுக்கு முன்னால் இருந்த தக்காளிச் சாறு கிளாஸை எடுத்தாள்.

‘இந்த தக்காளிச்சாறை குடி, மகளே,’ என்று தாய் கெஞ்சினாள்.

தன் தாய் நீட்டிய கிளாசைக் கண்டதும் காமென்னின் முகம் முற்றாக உருத்திரிந்து போய்விட்டது.

‘வேண்டாம், கடவுளே, எனக்கு வேண்டாம். அப்படித்தான் அவனுடைய இரத்தமும் இருந்தது. சிகப்பு, சிகப்பு, தடித்த சிகப்பு, பசை போன்ற ஒட்டும் சிகப்பு! வேண்டாம், வேண்டாம், எத்தனை குரூரம்! என்று வார்த்தைகளை ஆவேசமாகக் கொட்டிக் கொண்டிருந்தாள். பின் தன் கைகளுக்குள் முகத்தைப் புதைத்து கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள்.

அவளுடைய தாய் திகைத்துப்போய் தன் மகளின் தலையைத் தடவி விட்டாள். ‘அன்பானவளே, உனக்கு உடம்பு சரியில்லை.’

‘அது சரி!’ என்றார் அவளின் தந்தை, மிகவும் எரிச்சலடைந்து. ‘அவள் கடுமையாக உழைக்கிறாள். ஒவ்வொரு இரவும் பிந்தியே படுக்கிறாள். அவள் நாடக அரங்கத்திற்குப் போகாவிட்டால், திரைப்படங்களுக்கோ, இரவுணவு விருந்துகளுக்கோ, ஒன்றுகூடல்களுக்கோ போகிறாள். அதனால் தான்இது நடக்கிறது! இந்த இளைஞர்கள் எல்லாவற்றையும் ஒரேயடியாகச் செய்யப் பார்க்கிறார்கள். நீ நிதானத்தைக் கொஞ்சம் சொல்லிக் கொடு. உனக்கு அது பற்றி ஒன்றும் தெரியாது. நீ இளமையாக இருந்தபோது அது வேறு கதை. இது உண்மை. உனக்குப் பல விஷயங்கள் பற்றித் தெரியாது. குறைந்தது, இது போய் அதில் முடியக்கூடாது..’

‘நீங்கள் எதை மறைமுகமாகச் சொல்ல வருகிறீர்கள் ?’ மனைவியின் குரல் வெளிப்படையாகவே கடுமையாக இருந்தது.

‘தயவுசெய்து, இது பொறுத்துக்கொள்ள முடியாதளவு போய்க் கொண்டிருக்கிறது,’ என்று மகன் இடையில் புகுந்து சொன்னான்.

‘லூசியானோ பச்சை சோபாவில் படுத்திருந்தான். அவன் புகைத்துக் கொண்டும் சிரித்துக் கொண்டும் இருந்தான். புகை அவனுடைய முகத்தை மூடியிருந்தது. ஒவ்வொரு வாய் புகையையும் பல சிறிய வளையங்களாக ஊதிக் கொண்டிருந்தான். அவை மேலே மேலே சென்ற பின் வெடித்து, ஆயிரக் கணக்கான துண்டுகளாக உடைந்தன. அவை கிளாஸ்களால் ஆன சிறிய உயிர்கள். சிறிய குதிரைகள், புறாக்கள், மான்கள், முயல்கள், ஆந்தைகள், பூனைகள்... அந்த அறை முழுவதும் சிறிய கிளாஸ் மிருகங்களால் நிரப்பப்பட்டிருந்தன. அவை எல்லாவிடமும் சூழ்ந்திருந்தன. அமைதியாகக் கேட்போர் போல. மற்றவை காற்றில் மிதந்தன. கண்ணுக்குத் தெரியாத கயிறுகள் இருப்பது போல. லூசியானோ சிரி சிரி என்று சிரித்தான். ஒவ்வொரு வாய் புகையிலும் ஊத வெளிவரும் மிருகங்களைப் பார்த்து அவன் சிரி சிரி என்று சிரித்தான். நான் நடனமாடிக் கொண்டிருந்தேன். நிறுத்த முடியாமல். சிறிய மிருகங்கள் அறை முழுவதையும் ஆக்கிரமித்து விட்டதால் அங்கே நான் அசைந்தாடுவதற்கு அதிக இடம் இருக்கவில்லை. கார்ணேஷன் மலர் என்னை நடனமாட வற்புறுத்திக் கொண்டிருந்தது. மேலும் மேலும் மிருகங்கள் வந்து கொண்டே இருந்தன. சிறிய கிளாஸ் மிருகங்கள் என்னுடைய தலையிலும் இருந்தன. அவை என்னுடைய தலைமுடியில் கூட கூடு கட்டியிருந்தன. தலைமுடி பிரமாண்டமான மரத்தின் கிளைகள் போலாகி விட்டது. நான் முன்னொருபோதும் காணாதது போல லூசியானோ சிரித்துக் கும்மாளமிட்டான். இசைக் கருவிகள் கூட சிரித்தன. எனக்கு ஆட இடமில்லை என்று தெரிந்ததும் புல்லாங்குழல்களும் ஊதுகொம்புகளும் கிளாரினெற்றுக்களும் சக்சஃபோன்களும் சிரித்தன. இன்னும் இன்னும் மிருகங்கள் வெளியே வந்தன. என்னால் அசைய முடியாமல் போன ஒரு கணம் வந்தது. முன்னும் பின்னும் அசைய மட்டுந்தான் முடிந்தது. பின் அதைக் கூடச் செய்ய முடியவில்லை. என்னை முழுவதும் கிளாஸ் மிருகங்கள் சுற்றி இருந்தன. நான் கார்ணேஷனைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். அது என்னை நடனமாடக் கேட்டுக் கொண்டே இருந்தது. அங்கே கார்ணேஷன் இருக்கவில்லை. லூசியானோவின் இதயம் மட்டுந்தான் இருந்தது. சிகப்பாக, சூடாக என் கைகளில் இருந்து இன்னும் துடித்துக் கொண்டிருந்தது.’

அவளுடைய பெற்றோரும் சகோதரனும் குழம்பிப் போய் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். இப்பொழுது எதுவுமே புரியாதவர்களாக. காமனுடைய தடுமாற்றம் அவர்களின் உணர்ச்சிகளைக் கடுமையாகப் பாதித்தது. அத்துமீறி நுழைந்த ஒருத்தன் அவர்களின் வாழ்க்கையின் இயல்பான நிலைமையைக் குலைத்து அனைத்தையும் சீர்குலைத்து விடுவது போல. அவர்கள் திடீரென மௌனமாகி, வெறுமையான உணர்ச்சிகளுடன் எந்தவிதமான எண்ணங்களையும் சிந்திப்பதற்கு அச்

சப்பட்டு இருந்து கொண்டிருந்தார்கள்.

'அவள் சற்று நேரம் படுத்திருப்பதும் அவளுடைய பதற்றத்தை நீக்குவதற்கு ஏதாவது மருந்து எடுப்பதும் தான் மிகச் சிறந்த செயல், அப்படிச் செய்யாவிட்டால் நாங்கள் எல்லோரும் பைத்தியக்காரர்களாக முடிவோம்,' என்று சகோதரன் கடைசியில் சொன்னான்.

'ஓம், அதைத்தான் நானும் நினைத்துக் கொண்டிருந்தேன்,' என்றார் தந்தை. 'நீ எடுக்கும் குளிசை ஒன்றை அவளுக்கும் கொடு,' என்று அவர் தன் மனைவிக்கு ஆணை இட்டார்.

'அன்பானவளே, மேல் மாடிக்குப் போய் சற்று நேரம் படு,' என்றாள் தாய். பின் மகளைத் தூக்கி நடக்க வைப்பதற்கு முயன்றாள். முடியாமல் தடுமாறினாள். அவளே எதையும் செய்வதற்கு பலவீனமானவள். 'இந்த திராட்சைப்பழங்களை எடுத்துக்கொள்.'

காமென் தன் தலையைத் தூக்கினாள். அவள் முகம் அதிர்ச்சியடைந்திருந்தது. மெலிந்த முணுமுணுப்பான குரலில் அவள் எதையோ சொன்னாள்.

'அப்படித்தான் லூசியானோவின் கண்கள் இருந்தன. உறைபனி கண்ணாடி போன்ற மாறாத, பச்சை நிறம், எழுந்து வரும் சந்திரன் யன்னலால் தெரிந்தது. குளிர்ச்சியான வெளிச்சம் அவன் முகத்தில் ஒளிர்ந்தது. பச்சை நிறக் கண்கள் அகலத் திறந்திருந்தன. கருவிகளும் சிறிய கண்ணாடி மிருகங்களும் இப்போது போய் விட்டன. எல்லாமே மறைந்து விட்டன. இப்போது இசை இல்லை. தனியே அமைதியும் வெறுமையும். லூசியானோவின் கண்கள் என்னை வெறித்துப் பார்த்தன. என்னை ஊடறுப்பது போல விறைத்துப் பார்த்தன. அவனுடைய இதயம் என் கைகளில் துடிக்க அறையின் மத்தியில் நான் இருந்தேன். இதயம் இன்னும் துடித்துக்கொண்டிருந்தது..

'அவளை மேல்மாடிக்கு தூக்கிச் செல்,' என்றார் தந்தை தன் மனைவிக்கு. 'அவளுடைய அலுவலுகத்தை அழைத்து அவளுக்குச் சுகமில்லை என்று சொல்லப் போகிறேன். மருத்துவரையும் அழைக்கப் போகிறேன்.' அதற்கான சம்மதத்தை அவர்களிடம் பார்வையால் தேடினார்.

தாயும் மகனும் ஓம் என்று தலையை ஆட்டினார்கள். உடனடியான தங்கள் விருப்பத்தை அவர் நிறைவேற்றுகிறார் என்பதற்காகக் கண்களால் அவருக்கு நன்றியைத் தெரிவித்தார்கள்.

'வா, நாங்கள் மேல் மாடிக்குப் போவோம்,' என்றாள் காமெனின் தாய்.

ஆனால் காமென் அசையவும் இல்லை. அதைக் கேட்டதாகக் காட்டிக் கொள்ளவும் இல்லை.

'அவளை இங்கே விட்டு விடுங்கள். நான் மேலே கொண்டு வருகிறேன்,' என்றான் சகோதரன். 'தேநீர் கொஞ்சம் போடுங்கள். அது அவளுக்கு ஊக்கத்தைக் கொடுக்கும்.'

தாய் பலமாகக் காலடி எடுத்து வைத்துக் குசினிக்குச் சென்றாள். பல்லாண்டுகளாகச் சுமந்த பாரம் அவள் மேல் சடுதியாக விழுந்தது போல இருந்தது. காமெனின் சகோதரன் அவளை அசைக்கப் பார்த்தான். அதற்கு அவள் இசையாமல் இருந்தாள். அவளில் பலாத்காரத்தைப் பிரயோகிக்க அவன் விரும்பவில்லை. எப்படி அவள் எதிர்வினை ஆற்றப் போகிறாள் என்பதற்காக காத்திருக்கத் தீர்மானித்தான். ஒரு சிகரெற்றைப் பற்ற வைத்துக் கொண்டு அவளுக்குப் பக்கத்தில் இருந்தான். அவர்களின் தந்தை தொலைபேசியில் கதைப்பதை முடித்து விட்டு, பழைய சாய்மனைக் கதிரையில் சாய்ந்தார். அங்கே இருந்து காமெனைக் கவனித்துக் கொண்டிருந்தார். 'இன்றைக்கு ஒருவரும் வேலைக்குப் போகவில்லை. ஒன்றும் பாரதூரமான விஷயமாக இல்லை என்று நம்புகிறேன்.' தாயார் குசினிக்குள் இரைச்சல் செய்து கொண்டிருந்தார். திரும்புகிற பக்கமெல்லாம் தட்டுத் தடுமாறி விழுவதைப் போல. தோட்டத்திலிருந்து சூரியன் யன்னலால் உள்ளே வந்து கொண்டிருந்தான். அது அறைக்குள் சூட்டையோ ஆரவாரத்தையோ கொண்டு வரவில்லை. அறையில் எல்லாமே ஸ்தம்பித்து விட்டது போல இருந்தது. அவர்களின் எண்ணங்களும் சந்தேகங்களும் அச்சத்தால் மறைக்கப்பட்டோ திரையிடப்பட்டோ இருந்தன. அவர்களின் பதற்றமும் தவிப்பும் வெறிச்சோடிய மௌனத்தால் மறைக்கப்பட்டிருந்தன.

இளைஞன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான்.

'ஏறக்குறைய ஒன்பதாகிறது,' என்றான், எதையாவது சொல்வதற்காக.

'மருத்துவர் வந்து கொண்டிருக்கிறார். நான் அழைத்தபோது அதிர்ஷ்டவசமாக அவர் வீட்டில் தான் இருந்தார்,' என்றார் தந்தை.

'பரிஸ் நகரத்தை நான் கடைசியாகக் கண்டபோது,' என்று இசைக் கடிகாரம் ஒன்பது மணியை அடித்துப் பாடத் துவங்கியது. அந்தக் கடிகாரத்தை அவர்கள் தங்கள் தாயாரின் கடைசியாக வந்த பிறந்த நாளுக்கு அவளுக்குப் பரிசாக அளித்திருந்தார்கள். தாயார் குசினியிலிருந்து ஆவி பறக்கும் தேநீருடன் வந்தார். அவள் கண்கள் சிவந்திருந்தன.

மாடிக்குப் போ. நாங்கள் அவளை மேலே அழைத்து வருகிறோம்,' என்றார் கணவன்.

'காமென், வா நாங்கள் மாடிக்குப் போவோம்.'

தந்தையும் சகோதரனும் அவளைத் தூக்கி நிறுத்தினார்கள். அவளை அழைத்துப் போவதற்கு அவள் எதுவித எதிர்ப்பும் காட்டவில்லை. மெதுவாக மாடிப்படிகளில் ஏறத் துவங்கினாள். அவள் மனம் அவளிடமிருந்தும் அக்கணத்திலிருந்தும் எங்கோ போய் விட்டிருந்தது. அவள் கண்கள் வேறொரு இடத்தில் வேறொரு காலத்தில் நிலையாக ஊன்றி இருந்தது. ஆவி போன்ற தோற்றத்தில் பாறைகளுக்கிடையில் அவளின் கண்கள் அலைந்து திரிந்தன. அவர்களால் மேல்மாடிக்குச் செல்ல முடியவில்லை. அப்போது வீதிக்குச் செல்லும் கதவில் பெரிதாகச் தட்டப்படும் சத்தம் அவர்களை நிறுத்தியது. சகோதரன் கீழ்மாடிக்கு ஓடினான். மருத்துவராக இருக்கும் என்ற நினைப்பில். அவன் கதவைத் திறந்தபோது பொலிஸ்காரர்கள் கதவைத் தள்ளிக்கொண்டு
உள்ளே நுழைந்தார்கள்.



mahalingam.k@thaiveedu.com



உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
EFILE
Canada
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca
HOMELIFE / FUTURE
REALTY INC., BROKERAGE
Independantly Owned And Operated


HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam
Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090
kathirhomes@gmail.com


With best compliments from
ஞானம்ஸ் ஸ்ருடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
Family Portraits
Children Portraits
Business Portraits
Passport & Citizenship Photos
Classic Weddings
Arangetram
Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON
ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272


- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin Hair Lotion Lotion Capilar
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS
REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
TD Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.


வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace
CO
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280




Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor ®
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor ®
416.937.8090




SABONA




Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673.9863
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com




Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுவந்து பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
Free Home Evaluation with No Obligation
416-816-0141




Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE




LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough




Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC.,


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
* வாங்க * விற்க * வாடகைக்கு...
Residential | Commercial
* BUY * SELL * LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property
with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law
RAMAN HOME COMFORT INC
HEATING
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
Real Estate Law
416.261.1544
AEREN Thiyagarajah
DILEEP Thangavel
647-888 3500
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
$8475⁰⁰
416-888-9492
ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
HomeLife Today Realty Ltd.
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545
RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225
Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
PYRAMIDGROUP
Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE
Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120
Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011
Suba Aynkharan
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage
2468 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8
Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER
Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
1-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
Bus:416-270-1111 | Fax:416-270-7000
BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
HomeLife Today Realty Ltd., Brokerage
NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
iNFORCE LIFe Financial Services Inc.
416-909-0400
416-321-6000
QUALITY ADVICE YOU CAN TRUST
Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
416 505 8532
DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
RE/MAX
LATHAN VARATHARAJAH